சக்கையன், உடம்பில் வலு வில்லாதவன், one wanting in physical strength or validity; 2. மிகு சையோகத்தால் விந்து சுருங்கி இளைத்தவன், one who is weakened by lack of secretion of semen or virile power through excess of sexual intercourse.

சக்கையாய்ப் பிழிதல், சத்து முழுவதும் அறும் படிப் பிழிதல், to squeeze out the essence from a thing so completely as to leave only the refuse.

சக் கோலி, ஓர் பூண்டு, a plant (unknown)?

சக்ஷு, பார்வை சக்தி, faculty of seeing.

சக்ஷுசியம், கண்ணுக் கினிய, agreeable to the eyes; 2 கண் மை, collyrium for the eyes, extracted from Amomum antorhiza; 3. தாழை, a fragrant plant—Pandanus odaratissimus.

சக்ஷு பீதம், கண் வலி, pain of the eye.

சக்ஷு ரோகம், கண் வியாதி, disease of the eye.

சக்தி பூசை, see சத்தி பூசை.

சக்தி போற்றல், சுக்கில சக்தி அகாலமாக விடாமைக் காப்பாற்றல், conservation of energy through preservation of semen in the system.

சக்தி மாற்றம், ஒன்றின் சக்தியை பிறிதொன்றாக மாற்றல், converting energy from one form into another.

சங்க, கக்கம், the space below the arm-pit between the hip and the bend of arm; 2. அக்குள், arm-pit.

சங்கங் காட்டி ஞமலி, சுவர வண்டு, a kind of golden-coloured beetle supposed to live under the tree, four-spined monetia.

சங்கங் குப்பி, பீநாறிச் சங்கங் குப்பி. இதற்கு பீநாறிச் சங்கு அல்லது பீச் சங்கு என்றும், பீச்சு விளாத்தி என்றும் பெயர். இலைகள் சிறிது, வழவழப்பு, பளபளப்பு, முட்டை வடிவம், மூன்று புஷ்பம், கடற் கரை ஓரங்களில் மிகுதியாய் விளையும். வேலி களுக்கும் வைத்து பயிராக்குவதுண்டு. வருஷ மெல்லாம் பூக்கும். வேர், இலைகள் இவைகளின் சாறு கசக்கும். மேக நோய், மேகக் கிரந்தி இவைகளுக்குத் தனிச் சாறாகவும் அல்லது விளக்கெண்ணெயோடு சேர்த்தும் கொடுக்க சொறி, சிரங்கு, கீல்வாயு இவைகள் குணமாகும், இது சிவதையைப் போன்ற குணமுண்டு. இதன் இலையை அரையாய்ப் பக்கட்டிக்கு வைத்துக் கட்ட குணமாகும், இதன் வேரை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி வாத நோய்க்கும் பூசலாம். சூரணித்து உஷ்ணம், இருமல் இவைகளுக்கும் கொடுக்கலாம். மேலும் பொதுவாக, இதனால் கரக் கடுவன், பிர மேகம், கருப்பத்தி லேயே வுண்டான கருங் கிரந்தி, வெண்மேகத் தலைச் சொறி, விரணம், பாம்பு கடி விஷம், இரத்தக் கிருமி, வறட் டிருமல், விரணக் குஷ்டம் இவைகள் போம். Smooth volkameria—Cleodendron inerme alias C. buxifolium. Its leaves are small, smooth, shining, oval, three-flowered, common along the sea-coast, often cultivated for hedges; flowering nearly all the year, juice of root and leaves bitter. It is prescribed as alterative in scrofulous and venereal affections; when given either in pure or in conjunction with castor oil, it is found useful in itches, skin eruptions, rheumatic affections etc. The medicinal properties closely resemble those of Indian jalap; leaves are applied externally to bubos; root boiled in oil, forms also an external application in rheumatism. Powdered root is a remedy for heat and cough. Moreover, this is found useful in general, in cases of black venereal ulcers affecting children in the womb, snake-bite poisoning, germs of vitiated blood in the veins, dry cough, ulcerated leprosy etc.

சங்கங் கோலகம், வண்ணாரப் படை, dhoby's itch.

சங்கசம், புறா முட்டை யளவாய் சங்கில் பிறந்த முத்து, oyster-pearl of the size of a pigeon egg.

சங்க கந்தம், சீமை செவ் வந்தி, chamomile flower—Anthemis nobilis.

சங்கந் சாறு, சங்கிலைச் சாறு, juice of leaves of four-spinned monetia—Azema tetracantha.

சங்கஞ் செடி, முட் சங்கஞ் செடி, இதுவே சங்கிலைச் செடி. இதற்கு அநேகக் கிளைகளிருக்கும். நான்கு முட்களுண்டு. முட்கள் 1-2 அங்குலம், கூராக விருக்கும். இலை அண்ட வடிவு, காய் பட்டாணியைப் போல் உருண்டையாயிருக்கும், தின்பதற்குதவும், இலைகள் உடம்பிற்கு சூடுண்டாக்கும், பிரசவித்த பெண்களுக்குதவும், அவர்களுக்கு சீதளம் வாங்காதபடி இவ் விலையோடு சம பாகம் வேப் பிலையும், செங்கல் மாவும், பெருங் காயமும் சேர்த்துக் கொறி கடை காயமாகக் கொடுப்பதுண்டு. இது பிரசவ பலவீனத்தை போக்குவதுடன், சீதளத்தையும் தடுக்கும். இதன் இலையை கீரையாகப் பிட்டு உணவில் சேர்த்து வாத ரோகத்துக்குக் கொடுக்கலாம். இதன் சாறு குழந்தைகட்குக் கொடுக்க கபத்தை வெளிப்படுத்தி இருமலை தணிக்கும்; வேருக்கும் இலையைப் போன்ற குண முண்டு. இது நீரைப் போக்கும். ஆகவே, இதை மற்ற கடைச் சரக்குகளோடு சேர்த்து பாகம் செய்து பாண்டு விற்குக் கொடுக்க குணமாகும்.

இதன் வேர், இலை, பட்டை இவைகளுடன் சம பாகம் வசம்பு, இஞ்சி, ஓமம், சோற்றுப் புப்பும் சேர்த்து கஷாய மிட்டுக் கொடுக்க கிராணிக் கழிச்சல் போம். வேர்ப் பட்டைச் சாற்றுடன் இரு பங்கு வெள்ளாட்டுப் பால் சேர்த்து பாண்டு ரோகத்துக்கு இரு வேளை கொடுக்க நீரைப் போக்கும். இதன் வேர்ப் பட்டையை கபம், கப சுரம், காசம், புழு நோய், சோகை முதலிய நோய்களுக்குக் கொடுக்க குணமாகும். இதன் சமூலக் கஷாயம் உடம்பின் சொறி, குன்மம், பித்தாதிக்கம், விஷ பாகங்களுக்கும் உபயோகப்படும்.

மேலும் இதன் இலைக்கும், வேருக்கும், சோகை, கரப்பான், விரணம், குன்மம், பில்லிக்கம், வாத கோபம், பித்த நோய் இவைகள் குணப்படும். கண் துலக்கமும், மிகப் பசியும், இரத்த விருத்தியும் உண்டாகும். இலையை அரைத்து சிரங்கு, சொறி, புண், வைசூரி, கொப்புளம் இவைகளுக்குப் பூசி வர விரைவில் குணப்படும், mist'etoe berry thorn, four-spined monetia — Azema tetracantha alia: Ionetia barlerioides. It is a shrub with innumerable branches, thorns four-fold; very sharp and about 1-2 inches in length; leaves oval; berry globular, of the size of a pea; when ripe edible. Leaves are medicinally stimulant, and they are prescribed for puerperal women immediately after confinement. It is administered in the following manner—the said leaves with an equal quantity of neem leaves, a little powdered brick and roasted asafoetida are finely ground and given as a bolus of stimulating confection to remove the weakness from delivery and to keep off the cold from the system. The leaves are also mingled with food and given as a remedy for rheumatism, and the juice of leaves to relieve cough. The juice of the leaves are also prescribed for children to bring out the phlegm and to relieve the effect of cough. The root is considered to have the same properties as the leaves as a diuretic and so, it is given in dropsy along with other bazaar drugs.

A decoction of the root, leaves and bark along with an equal quantity of sweet flag (Acorus calamus), ginger, ajwaun seeds, and common salt is recommended as a remedy in chronic diarrhoea. Juice obtained from the root-bark with double the quantity of goat's milk twice a day is a good remedy as a diuretic in dropsy.

The root bark is also employed with advantage in phelgm, phlegmatic fever asthma, diseases of worm, anemia, etc. A decoction of the entire plant forms an excellent remedy for skin eruptions, dyspepsia, bilious complaints, poisonous affections etc.

Moreover, the leaves and the root form an efficacious remedy in cases of anemia, carpaung, wounds and ulcers, dyspepsia, arthritis, rheumatic inflammation, bilious disorders etc. They also serve to clear the vision, and to improve hunger. The pulverised leaves are applied to sores and itches and also to wounds and boils arising from small-pox to effect a speedy cure.

சங்கஞ் செடிப் பால், இச் செடியின் வேரை மெல்லிய துண்டுகளாகச் சீவுகிற [illegible] வரும் பாலானது [illegible], வீக்கம் [illegible]. இதை மருந்துகளுக்கு அனுபானமாகவும் கொடுப்பதுண்டு, the milk of this plant which is obtained by cutting the root into thin pieces, is used in cases of swelling and fever. It also serves as a vehicle in medicine.

சங்கத்து செடியிற் குடி புக்கி, நாகர வண்டு, see சங்கன் காட்டி ஞமரி.

சங்கடம், பெண்களின் யோனித் துவாரம், the narrow canal in females leading inwards to the womb—Vagina; 2. நெருக்கமான வழி, a narrow passage; 3. மனச் சங்கடம், mental worry.

சங் கடாட்சம், துன்ப மிகுதியால் கண் மூடுகை, closing the eyes through worry.

சங்கடி, கேழ்வரகுக் களி, balls made of the boiled ragi flour.

சங்கடை, மரணப் பொழுது, the moment or point of death; 2. மரண வேதனை, pangs or agony of death.

சங் கடைப்பன், மாட்டுக்கு வரும் ஓர் வகை அடைப்பன் நோய், a kind of anthrax amongst cattle.

சங்கட்டம், see சங்கடம்; 2. மரண வதனை, throes of death; 3. நோய், sickness; 4. உடம்பு நோய், bodily pain.

சங்கதம், முல்லைப் பூ, ovate-leaved jasmine—Jasminum angustifolium.

சங்க தோஷம், தாய் தந்தையர் புணர்ச்சிக்குப் பிறகு குழந்தைகளை குளியாமற் தொடுவதால் ஏற்பட்ட தோஷம், a morbid affection in children due to parents handling them, immediately after sexual intercourse without having a bath; 2. see also சங்கம தோஷம்.

சங்கத் திராவகம், அன்ன பேதி, பாறை உப்பு, படி காரம், வெடி உப்பு ஆகிய இவைகளை முறைப்படிச் சேர்த்து வாலையி லிட்டிறக்கி வடித்த திராவகம், an acid obtained by distilling a mixture of iron sulphate, rock salt, alum, nitre in proper proportions with the aid of a still, and then filtered; 2. சங்குப்புத் திராவகம், an acid prepared from the slaked conch.

சங்கத் தூதுவளை, வெள்ளைப் பூ உடைய ஓர் வகைத் தூதுவளை. இது காய சித்தி மூலிகை களில் ஒன்று, a kind of three-lobed night shade with white flowers—Solanum trilobatum. It is one of the rejuvenating drugs.

NOTE.—Though a list of rejuvenating drugs has been given under காய சித்தி, it is not to be considered a complete list as names of several others (*unidentified*) are yet to be traced and included.

சங்கத் தாள் ரசம், ஆயுர்வேதப்படி, பாதரசம், அபிரேக்கு பற்பம், சுவர்ண பற்பம், இவைகளை சம விடை எடுத்து, இவைகளுக்கு சம பாகம் வைக்கிராந்த பற்பம் சேர்த்து, பிறகு இவைகளுக்கு ஐந்து பாகங்கள் அதிகமாய், சங்கு பற்பத்தைச் சேர்த்து அரைத்து நான்கு குன்றி மணி யிடை தேனில் சாப்பிட ஐந்து விதவிக்கல்கள் போம், according to Ayurveda, calcined mercury, calcined mica and calcined gold oxides are taken in equal weight and mixed together, to which is added a quantity of Vykrantham (an inferior diamond) oxide equal in weight of the above mixture; and again to this, is added calcined conch oxide, the quantity of which should be five times that of the whole mixture mentioned above. All these are ground together into powder and 4 grains of this product, when taken in honey, is said to cure five kinds of hiccough.

சங்க நகை, நத்தை, snail.

சங்க நரம், நரம்பு, nerve; vein.

சங்க நாபி, ஓர் கடைச் சரக்கு, a bazaar drug; 2. வெண் நாபி, white aconite.

சங்க நிதி, வட்டக் கிலு கிலுப்பை, rattle nail dye—Crotalaria verrucosa.

சங்க நிறக் காந்தை, வெண் காந்தை, white-flowered sweet basil — Ocimum basilicum. See காந்தை.

NOTE.—Some are of opinion that it is quite different from வெள் காந்தை.

சங்கந் தாளி, சாதி பத்திரி, mace or pulp of nutmeg—Myristica fragrans.

சங்க பாஷாணம், ஓர் வகைப் பிறவி பாஷாணம், a kind of native arsenic.

சங்க பீடம், நாணல், reed; 2. நாணற் புல், coarse grass—Saccharum spontaneum.

சங்க புந்தி, கடுகு ரோகிணி, a purgative drug—Helliborus niger.

சங்க புட்பம், இலவங்கப் பட்டை, Cinnamon bark; 2. குறுமல், an aromatic substance —Cassia genus.

சங்க புட்பி, தாமரைத் தண்டு, lotus-stalk; 2. வெண் மலருடைய ஓர் கொடி, a creeper with white-flowers, See காக்கணங் கொடி.

சங்க புட்பிகம், see சங்கம் குப்பி.

சங்க போஷ்டம், புணர்ச்சி, sexual intercourse.

சங்கம திராவிடம், உயிர்ப் பிராணிகளின் அவயவங்களினின்று உண்டாகும் சரக்குகள், அவையாவன — தேன், பால், நெய், கொழுப்பு, மலம், மூத்திரம் முதலியன, fluids or substances such as, honey, milk, ghee, fat, feces, urine etc., secreted from certain organs of human beings including animals, and discharged by them.

NOTE.—This not only refers to the materials or substances elaborated by the process of excretion; but also includes those that are not discharged from the body, but is given off into the blood and lymph by way of secretion thus playing an important part in metabolism.

சங்கம ரோகம், பெண்களோடு புணரும் காலத்திலாவது அல்லது நோய் கொண்டவர்களை புணர்ந்த பின்னாவது ஏற்படும் உடம்பு வலி, நடுக்கம், மயக்கம், சன்னி முதலிய குற்றங்கள், morbid affections such as bodily pain, tremor, giddiness, shock, delirium etc., experienced during sexual congress with sickly women or immediately after it, as a result of reflex action; 2. மிகு சையோகத்தினால் ஏற்படும் தோஷ நோய். இதனால் கை கால் குளிர்ந்து, உடம்பு நடுக்கம், மார் பெரிச்சல், பிரமை முதலியவைகள் காணும், morbid affection due to abnormal intercourse. It is marked by chillness of the limbs, tremor, burning sensation in the chest, delirium, etc.

சங்கமம், புணர்ச்சி, பெண் கலவி, copulation.

சங்கம விஷம், பாம்பு, தேள், சிலந்தி, நாய் முதலிய பிராணிகளின் கடி விஷம், animal poisons such as those caused by bites of snake, scorpion, spider, dog etc.

சங்க முத்திரை, சித்தாடையில் ஒருவகையான ஆசனத்தில் இருக்கும் போது விரல்களைப் பிடித்து அமைப்பதற்கு மோர் ஆசன முறை, (*In Agama Philosophy*) a posture in meditation in which fingers are placed in a particular form.

NOTE.—When a man is seated in Yoga practice, Muthrai is considered to be a sign of the fingers to concentrate upon. There are different kind of such 'Muthirai' intended for facilitating concentration viz. —மூல முத்திரை, கேசரி முத்திரை, சின் முத்திரை, சாம்பவி முத்திரை and so on. A man who attempts to practice Muthrai should be a contortionist. By means of this process, psychic powers are attained. See also சக்கர முத்திரை.

சங்க மூதி, see சங்கதம்.

சங்க மூலி, see சங்கங்குப்பி.

சங்கம், வெள்ளை பாஷாணம், white arsenic; 2. புணர்ச்சி, copulation; sexual intercourse; 3. நெற்றி, forehead; 4. தாளம்ப பாஷாணம், a mineral poison; 5. கீழ்க் கால், the leg; that portion of the leg before the knees; 6. சங்கு, conch; chank; 7. சங்க பாஷாணம், a variety of native white arsenic; 8. நெற்றி யெலும்பு, frontal bone; 9. see சங்கஞ் செடி; 10. எழுத்தாணிப் பச்சிலை, style plant—Launea pinnatifida; 11. அழகு, beauty; 12. அக்குள், arm-pit; 13. வாத தோஷத்தால் கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் வேதனை, rheumatic troubles in pregnant women.

சங்கம் பட்டை, bark of சங்கஞ் செடி, which see.

சங்கம் வாங்கல், கூட்டிக் கொடுத்தல், to procure lewd women for the gratification of others.

சங்கம் வாங்கி, கூட்டிக் கொடுப்போன், a procurer; a pander; a bawd.

சங்கம் வாருதல், கூட்டிக் கொடுத்தல், pimping. See சங்கம் வாங்கல்.

சங்கம் வேர், சங்கஞ் செடியின் வேர், root of the four-spined monetia.

சங்கம் வேர்ப் பட்டை, இது கோழை, சுவாசம், கபச் சுரம், வாதக் கடுப்பு, சிலேத்தும சோகை, பங்க விசர்ப்பி, உட் சுரம், வாத கோபம், கிருமி ரோகம் ஆகிய இவைகளைப் போக்கும், the bark of the root of four-spined monetia—Cleodendron inerme. It is prescribed for phlegm, asthma, phlegmatic fever, rheumatic inflammation, phlegmatic anemia, syphilitic tumour, internal fever, worm disease etc.

சங்கர கிரகணி, see சங்கரக் கிராணி.

சங்கரக் கழிச்சல், ஓர் வகை சேரியாக் கழிச்சல். இதனால் வயிற்றுப் பொருமல், சுரம், நெஞ்சில் கபாதிக்கம், முதலிய குணங்களைக் காட்டும், a form of diarrhoea arising from indigestion; and it is marked by rumbling noise in the stomach, fever, excess of phlegm in the chest, etc.—Sympathetic diarrhoea.

சங்கரக் கிராணி, see சங்கரக் கழிச்சல்.

சங்கர சாதி, கலப்பு சாதி, mixed variety; 2. உயர்ந்த குலத்தாரும் இழிந்த சாதியரும் கூடுதலினால் பிறந்தது, the result of mixed birth of men and women of higher and lower castes.

சங்கர சாதிக் கடுக்காய், கருப்பு, சிகப்பு, வரி, பால் என்னும் நான்கு பேதங்களும் கலந்த கடுக்காய்கள், galnuts consisting of a mixture of the four varieties, viz:—black, red, striped and the white.

சங்கரத் திராவகம், ஆயுள் வேதப்படி, அயக் கந்தகம், படிகாரம், பாறையுப்பு வகைக்கு 16 தோலா, இத்துடன், வெடியுப்பு, 28 தோலாவும் சேர்த்து வாலையிலிட்டு இறக்கப்படும் ஓர் திராவகம். இதை உபயோகிக்கு முன், நாக்கில் வெண்ணெய்த் தடவி பல்லிற் படாமல், குடிக்க வேண்டும், (*In Ayur Veda*), an acid prepared by taking up sulphate of iron, alum and rock-salt of 16 tolas each, and then mixing up this with 28 tolas of nitre and then distilling the whole mixture. The tongue before use, should be anointed with clarified butter; and then the medicine is taken internally without touching the teeth.

சங்கர புட்பம், தின் பூ, see சங்கங்குப்பி.

சங்கர பைரவம், உருத்திர சன்னிபாத சுரத்திற்குக் கொடுக்கும் ஓர் வித பைரவ ரசம். இது ஓர் ஆயுள் வேத மருந்து, a kind of 'Byravarasa' prescribed for a kind of typhoid fever (Ruthragam). This is an Ayurvedic preparation.

சங்கரம், பலசாதிக் கலப்பு. (உ-ம்) கலவங்கீரை, a mixture of several varieties, as of greens; 2. நஞ்சு, poison.

சங்கர ரோகம், ஓர் காது நோய், a disease of the ear; 2. ஓர்வித கண்ணோய், a kind of eye disease.

சங்கர வல்லி, ஓர் வகைக் கொடி, a kind of creeper?

சங்கர வாதம், செவிபடு வாதம், deafness.

சங்கரன் பெண்டிர், கௌரி பாஷாணம், a prepared yellow oxide of arsenic.

சங்கரன் விந்து, இரசம், mercury.

சங்க ராசனம், இரண்டு கால்களையும் மடக்கி, பாதங்களையும் நெருக்கி, முகப்பின்மேல் நிற்கும் ஓர் ஆசனம், a posture in yoga practice in which the man rests on his knees with folded legs while feet remain close together.

NOTE.—Asana is that posture of the body intended for Yoga practise. Physically it helps to control the different muscles of the body so as to keep the nervous system unclogged for the free exercise of expiration and inspiration. Moreover, it keeps the body free from all impurities.

For further particulars see under ஆசனம் in Vol. 1.

சங்கரா மீன், ஜாவா மீன் என்னும் ஓர் கடல் மீன், a sea-fish known as Java fish—Gaurami.

சங்கரா வாசம், கலப்பு வாசனை யுள்ள ஓர்வகை கற்பூரம், a kind of camphor with several kinds of perfumes mixed up; camphor smelling of variegated perfumes.

சங்கரிங்கி, கடுகு ரோகிணி, see சங்க புங்கி.

சங்கரி கரணம், சாதிக் கலப்பு, 2. mixture of different castes; 2. சுபாவ ஒழுக்குக்கு தவறுதலாக வேறு சாதி பெண்ணோடு செய்யும் புணர்ச்சி, unnatural intercourse with a woman of a different caste.

சங்க ரேகை, உள்ளங் கையில் அதிர்ஷ்டத்தைக் குறிக்கும் சங்கு வடிவமான ரேகை (*In Palmistry*), a conch-mark on the palm indicating one's luck.

சங்க ரோகணி, கடுகு ரோகிணி, see சகுலாதி.

சங்க ரோகம், வாத சிலேட்டுமங்களினால், இரண்டு தாடைகளிலும், சிவந்து, வீங்கி பழுத்து திடைபடாது மூன்று நாளைக்குள் மரணத்தை யுண்டு பண்ணும் மோர் நோய், a phlegmatic disease in which the tonsils are inflamed; glands swollen with redness of the parts and the characteristic exudation makes its appearance, resulting in a fatal termination within three days. probably Diphtheria.

சங்கலம், மாமிசம், meat; flesh; 2 கலப்பு வம், mixture.

சங்கலிதம், கலப்புச் சரக்கு, mingled ingredients.

சங்கலீ கரணம், இயற்கைக்கு விரோதமான அல்லது முறை யற்ற மிருகப் புணர்ச்சி, ஆசனப் புணர்ச்சி, முதலிய அக்கிரமப் புணர்ச்சிகள், unnatural intercourses such as, bestiality, sodomy etc See சங்கரீ கரணம்.

சங்கலேகை, see சங்க ரேகை.

சங்கலவ கோஷ்டம், நர்வாசனை கோஷ்டம், Arabian costus—Costus speciosus.

சங்க வாத வஸ்தி ரோகம், வாயுவானது கீழ் வயிற்று முகத்தை அடைந்து நீரை உள்ளில் சேர்த்துக் கட்டிப் பதித்தலால் ஏற்படும் நோய், suppression of urine due to Vayu prevailing upon the downmost portion of the abdomen i.e., about the genital region, and obstructing the urethra.

சங்க விஷம், வெள்ளை பாஷாணம், இது ஓர் வைப்புச் சரக்கு. பூர்வத்தில் தாளகத்தைப் புடமிட்டு எரித்த வைப்புச் சரக்கு. பிறவிச் சரக்கோ நமது நாட்டில் (இந்தியாவில்) கிடையாது. ஆகவே, பர்மா, பாரசீகம், சீனம் இவ்விடங்களிலிருந்து இறக்குமதியானது. இது ஆயுள் வேதத்தில் உபயோகப்பட்டதாகத் தெரியவில்லை, white arsenic. It was prepared artificially in ancient days by roasting orpiment. Natural white arsenic is not met with in India, as it was imported into our country from Burmah, Persian gulf and China. It does not appear to have been in use in Ayurveda; 2. சர்ப்பசாதி விஷம், கீடகம், கீரிப்பிள்ளை, தேள், சிலந்திப் பூச்சி, நாய், நரி முதலியவற்றின் விஷங்கள், animal poisons, as those of snake, worm, mungoose, scorpion, spider, dog, jackal, etc.

சங்க கோஷ்டம், புணர்ச்சி, கலவி, sexual intercourse

சங்களவு, குழந்தைகளுக்குப் புகட்டும் பாலடை யளவு, as much as is contained in a milk-ladle for feeding infants.

சங்கற்பம், மனோ நிச்சயம், mental resolve or determination in mind as opposed to விகற்பம், diversity: volition; 2. கருத்து, intention; 3 கொள்கை, doctrine; 4. விபமம், fanciful delusion; wide-extending mind; 5. மனோ கற்பனை, (*In Vedanta Philosophy*) delusion of mind.

சங்கற்பிதம், முன்னதாக ஏற்படுத்தப்பட்டது, pre-determined; pre-arranged.

சங்கற்பித்தல், திண்ணமிடுதல், determining.

சங்கனுட் மரம், see கீழ்க்காய் நெல்லி.

சங்கனிபல, see சங்கிலை.

சங்கன், ஓர் சிறு வௌவால் மீன்; இது ரோஜாப் பூ நிறம்; சிறியது, a small sea-fish known as bat-fish of pink colour and small in size—Cirrhitichthys aurues.

சங்கன் குப்பி, see சங்கங் குப்பி.

சங்கன்னம், நரம்பு, nerve; 2. நாளம், vein; 3. நரம்பு நார், tendon.

சங்காடகம், கொக்கோகத்திற் சொல்லியுள்ள 64 நிலைகளில் ஒன்று, one of the 64 postures in the embrace of or sexual intercourse with women, described in the Erotic science of the sage named Kokkoga Muni.

சங்காத மணல், கரு மணல், black sand.

சங்காத மணற் குன்றம், black sand heap.

சங்காத மரணம், அசம்பாவிதத்தால் அநேகர் திடீரென உயிர் துறத்தல், an accident or disaster in which several persons die suddenly and simultaneously.

சங்காரம், சமூலம், plant as a whole; 2. ஓர் தொண்டை நோய், a throat disease.

சங்கா தோஷம், பேய் பிடிக்கையால் ஏற்பட்ட குற்றங்கள், evil effects brought about by demoniac possession.

சங்குரம், கரும்புத் தோகையின் சருகு, the dried leaves of sugar-cane stalk; 2. வயலில் முளைக்கும் ஆனைப் புல், large and thick weeds growing in fields — Typha elephantina; 3. பதர், immature grain.

சங்கமரி காரத் துப்பு, அமுரி உப்பு, uric salt; 2 சார உப்பு, acrid salt.

சங்கமி முத்திரை, சிவ பூசையில் உட்காரும் போது பெரு விரலை உயர்த்தி நீட்டியும், மற்ற விரல்களை மடக்கியும் செய்யும் ஓர் பூசை விதி, (*In Agama Philosophy*) a posture or position assumed in the worship of Shiva, in which the thumb is raised and kept erect, while the other fingers remain folded.

சங்காரம், அடக்கல், suppression, as of passions and appetites.

சங்கார ருத்திர மாத்திரை, பாம்பு கடி முதலிய பெரு விஷத்திற்குக் கொடுக்கும் மாத்திரை, a pill prescribed chiefly for snake-bite and other virulent poisons.

சங்காரி, குதிரை வாலி, horse-tail plant—Convolvulus tridentatus.

சங்காளி, மாசிப் பத்திரி, santonin wood—Artimesia indica.

சங்காலப் பச்சை, செம்புக் களிம்பு, sub-acetate of copper—Verdigris.

சங்கா வர்த்தம், சங்கினுடைய உட் பக்கத்துச் சுழியைப் போன்ற விரணம், an ulcer resembling the inner spiral of a conch ; an ulcer of a spiral form.

சங்காவியம், பீதி யடைந் திருத்தல், to remain panic - stricken ; 2. அச்சங் கொண்ட நிலைமை, the state of mind when inspired by terror without any apparent cause ; 2. அச்சத்தால் பெண்ணை வசப் படுத்தல், the enticement of a woman by inducing fear.

சங்கா வேகம், see சங்காவியம்.

சங்காளர், வெளிப்படையே காமங் கொண்டவர், persons openly devoted to lewdness or women given to indiscriminate lewdness.

சங்கான் பெண்டிர், கௌரி பாஷாணம், a prepared yellow oxide of arsenic. See சங்கான் பெண்டிர்.

சங்கி, சிறு பூனைக் காலி, whitish passion-flower —Passiflora foetida ; 2. see சங்கஞ் செடி.

சங்கிக் கடுக்காய், யுனானி மருந்தில் வழங்கும் கடுக்காய், a species of gall-nut used in Unani medicine.

சங்கி சீயம், உகா மரம், tooth-brush tree — Salvadora persica.

சங்கிதன், தீர மில்லாதவன், a timid person.

சங்கிதா மூலம், சிச்சிலிக் கிழங்கு, orange root —Hedysarum spicatum alias Kompferie galanga.

சங்கிதை, உச்சரிப்பு, invocation ; 2. சம்ஹிதை அதாவது வேதத்தின் ஓர் பகுதி, Samhita i.e., a portion of Vedic literature. See சம்ஹிதை.

சங்கித்தல், மனந் தடுமாறல், wavering or agitation of mind.

சங்கி பருதி, கடுகு ரோகிணி, black hellebore —Helleborus niger.

சங்கி பீடம், நாணற் கொடி, reed — Saccharum spontaneum.

சங்கிரகக் கிராணி, வயிறு பொருமல், சோறு செரியாது, அபானத்தில் சூடாகி, சுரம், வாந்தி, மயக்கம் கண்டு, இரண்டு கண்ணும் சுழலும் ஓர் வகைக் கழிச்சல், a form of diarrhoea characterised by the following symptoms viz :—rumbling noise in the stomach, indigestion, purging, burning pain at the anus, fever, vomitting, giddiness, whirling of the eyes etc. — Lienteric diarrhoea. See சங்கிரகக் கழிச்சல்.

சங்கிரகக் கூர்மை, சிந்து லவணம். இது சுதேச நாட்டு வைத்தியத்திற் சொல்லி யுள்ள 25 வகை உப்புகளி லொன்று, Sindh salt. It is one of the 25 kinds of salt contemplated in Indian Medicine.

சங்கிர மித்தல், நோய் தொத்துதல், to be infected with disease by approach or contact whether directly or indirectly

சங்கிராகி, ஓமை அதாவது மா மரம், mango tree—Mangifera indica.

சங்கிராகி யம்சம், நாவல் மரம், jamoon tree —Eugenia jambolina.

சங்கிராணி, வயிறூதி, சீழ், சீதம், செம் பேதி ஆம். மற்றும் பல விதமாகக் கழிந்து, அபானம் எரிந்து, வலியை யுண்டாக்கும் ஓர் வகை சீத பேதி, an acute form of dysentery accompanied by distension of abdomen, mucous discharge, passing of stool in varied forms, irritation of the anus attended with pain etc.

சங்கிரியம், நெய், ghee ; clarified butter.

சங்கிருதகம், சருள்ளி அதாவது வெங்காயம், onion - Allium cepa.

சங்கிலி, தொடை, thigh.

சங்கிலி கரணம், see சங்கலி கரணம்.

சங்கிலித் ததுமம், தான்றிக் காய், fruit of devil tree—Terminalia bellerica.

சங்கிலிப் பிரண்டை, ஓர் வகைக் கணுப் பிரண்டை, a kind of adamantine creeper, the links of which resemble a chain—Vitex negundu.

சங்கிலி விரியன், ஓர்வகை விரியன் பாம்பு, a variety of Russell's viper with links resembling a chain—Chain viper.

சங்கிலை, சங்கஞ் செடியின் இலை, leaf of four-spined monetia — Azima tetracantha alias Monetia barlerioides ; 2. பீச் சங்கிலை, smooth Volkameria — Cleodendron inerme.

சங்கிலைச் சாறு, சங்கஞ் செடியின் இலைச்சாறு, juice of the leaves of the shrub called four-spined monetia.

சங்கிற் கூர்மை, பீடா லவணம், இதுவே வளையலுப்பு, a white medicinal salt extracted from fuller's earth; glass gall—Fel vitri ; 2. சிந்து லவணம், Sindh salt.

**சங்கினி,** வழலை, fuller's earth; 2. ஐந்து மாதத்திய கருப் பிண்டம், a foetus of five months; 3. நாபி, navel; 4. குய்யத்தைப் பற்றி நிற்கும் நாடி, an artery of the genitals; 5. தச நாடியிலொன்று. இது சுழி முனையின் கீழ்நின்று தோன்றி, இருதய பாகம் வழியாய்க் குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவாகப் பற்றி முடியும் ஓர் வகை நாடி, one of the ten nerves or tubular vessels contemplated in Tamil Philosophy. It is said to rise from the cerebral region just between the eye-brows and passing through the region of the heart, terminate in the region between the anus and the genital (*genita libus et ano*); 6. சிலேட்டுமக் கூறு, nature of one of the three humors of the system viz-phlegm; 7. கொக்கோகத்திற் சொல்லிய பெண்களின் நால் வகைச் சாதிகளில் ஒன்று; one of the four classe of women divided according to lust in the Erotic science of Kokkoga Muni; 8. அதமசாதிப் பெண், a term commonly used for a very wicked woman; 9. சீச்ச மிளாத்தி, see சங்கங் குப்பி.

**சங்கினி சாதிப் பெண்,** மூன்றாம் சாதிப் பெண், (*In Erotic Science*), the third of the four classes of women. See சங்கினி.

**சங்கினிப்படப் புகட்டல்,** பாலாடையி லிட்டு குழந்தைகளுக்குப் பால் உள்ளுக்குக் கொடுத்தல், to administer, as milk, through milk-ladle for feeding children.

**சங்கினி நாடி,** தச நாடியி லொன்று, one of the ten tubular vessels of the body. See சங்கினி.

**சங்கினி நாத நீர்,** மூன்றாம் சாதிப் பெண்களின் நாத நீர், the fluid discharge from lust, of the third of the four classes of women classified according to the Erotic science; 2. see ஐங்கோல வேய் நீர்.

NOTE.—Tamil Siddhar's Science asserts a semen-like discharge in women called Nadam (நாதம்), while Modern science refutes this. This happens to be a great problem for Research.

**சங்கினிக் குணம்,** see சங்கினிக் குணம்.

**சங்கின் காட்டுச்சுள் ளுமரி,** see சங்கஞ் செடி யிற் குடி புச்சி.

**சங்கின் குடிபோன்,** சாசா வண்டு. See சங்கஞ் செடியிற் குடி புச்சி.

**சங்கின் பிள்ளை,** முத்து, pearl born of or produced from oyster.

**சங்கீகம்,** செங்கிழங்கு மிறுக்கு, orange-root — Hedychium coronarium.

**சங்கீத சோமம்,** முடி மயிர், lock of hair.

**சங்கீதல்,** சங்களவு கொடுத்தல், to administer to children as much as a conch-ladle could contain.

**சங்கீரண கீடம்,** ஓர் வகைப் புழு, a kind of worm; 2. பலவித புழுக்கள், variegated worms.

**சங்கீரணச் சிலந்தி,** நெருப்பால் சுட்டது போல் எரிவையும், திரி தோஷத்தையும் உண்டு பண்ணும் ஓர் வகைச் சிலந்திப் பூச்சி, a kind of spider, the bite of which causes burning sensation and derangement of the three humours in the system.

**சங்கீரண போசனம்,** கலப் பன்னம், a mixture of different varieties of food; 2 பலவித கறிகளோடு கூடிய சாப்பாடு, a dinner combined with several dishes of curries.

**சங்கீரணம்,** கலப்பு, mixture; compound; 2 நானாவிதம், miscellaneous kinds, see சங்கரம்; 3. மைதுனம், coition; 4. கோழி, fowl; 5 சங்கஞ் செடி, which see.

**சங்கீரதம்,** புணர்ச்சி, combination; 2. கலவி, sexual intercourse.

**சங்கீர்தம்,** see சங்கீரதம்.

**சங்கீலகம்,** பிரசவத்தின் போது சிசு வெளிப்படும் காலத்தில் கை பாதம் அல்லது சிரசு இவைகளிலொன் றேனி அவ்விடத்தைத் தடுப்பது, (*In Midwifery*), obstruction to free delivery due to presentation of arm and leg or even head at the first instance.

**சங்கீனி,** உப்பு மண், see சங்கினி.

**சங்கீன்ற பிள்ளை,** முத்து, pearl, born of oysters. See சங்கின் பிள்ளை.

**சங்கு,** சிப்பி, oyster; 2. மரப் பட்டை, bark of a tree; 3. கணைக் கால், shin-bone; the thick fleshy portion below the knee—Calf; 4. கூடுதல், copulation; 5. கருங் கோகிணி, black hellibore — Helliborous niger; 6. நீர்ச் சங்கஞ் செடி, a variety of monetia plant which grows near tanks; 7. see சங்க சேகை; 8. மிடறு, throat; 9. கவெருமு சங்கம், same as No. 19; 10. சிறு நாகப் பூ, ironwood of Ceylon—Mesua ferrea; 11. சவ்வாது பூனை, Zibeth-cat; 12. see சங்க பாஷாணம்; 13. நெற்றி

பொட்டெலும்பு, frontal bone; 14. கோழி, fowl; 15. பாலாடை, conch ladle used for feeding children; 16. முன்னை வேர்ப் பட்டை, the root-bark of Munnai — Premna integrifolia; 17. see சங்கஞ் செடி; 18. பொருத்து, joint; 19. முட் சங்கு அல்லது முள் சங்கஞ் செடி, thorny monetia — Monetia barlerioides.

There are innumerable varieties of chanks or conches and the following are the chief viz:—

1. சலஞ் சலம், (ஓர் சங்கு), a conch-shell of super-eminent qualities —Voluta pyrum.
2. முட் சங்கு, prickly chank; one with thorn-like points.
3. பட்டை அல்லது சிறு சங்கு, short chank.
4. முத் சங்கு, chank containing or impregnated with pearls.
5. தாழஞ் சங்கு, one with a wide mouth.
6. வலம்புரி சங்கு, one with the spiral opening to the right; chank shell of happy convolutions.
7. இடம்புரிச் சங்கு, ordinary chank with an opening to the left.
8. பாலாடைச் சங்கு, small conch used for giving milk to children.
9. உயர்ச் சங்கு, same as No. 2.
10. சீர் வாழ்ச்சங்கு, conch-shell—Turbinella rapa.
11. முள்ளுச் சங்கு, same as No. 2.
12. பாற் சங்கு, white chank.
13. வெள் சங்கு, white dead shell.
14. பச்சை சங்கு, same as No. 15.
15. ஊது சங்கு, conch used for blowing in temples.
16. திருச்சின்ன சங்கு, the conch worn by Vishnu.
17. சித்த சங்கு, sacred conch shell—Mazza rapa.
18. வரிச் சங்கு, striped conch.
19. பாஞ்ச சன்னியம் ஓர் சித சங்கு, another variety?
20. பெருவளிச் சங்கு, same as No. 15.
21. கடற் சங்கு, a large convolute shell regarded with religious veneration—Turbinella pyrum.
22. கண்டகச் சங்கு, a thorny chank in the sacred Gandhaka river near Benares.
23. கோரைச் சங்கு, same as No. 2.

NOTE.—The sacred chank, conch or sankha (*Turbinella rapa*) is procured by divers in the Gulf of Mannar opposite to Jaffna. No. 6 mentioned above is the right-handed chank much prized by the Hindus to be used at their temples; and being exceedingly rare, often fetches a very high price. The conch is found more useful in Ayurveda than in Siddha system.

**சங்கு கடைதல்,** மரணப் பொழுதில் தொண்டையில் ஏற்படும் கரகர வென்ற சத்தம், rattling in the throat, as of dying persons.

**சங்கு காயம்,** சங்கைப் போன்ற காதுடைய ஒட்டகம் அல்லது ஒட்டை, camel, title from its ear resembling a conch; 2. கழுதை, ass.

**சங்கு காசம்,** ஓர் வகைக் கண்ணோய், a disease of the eye; 2. வெள் படலம், cataract.

**சங்கு கீரி,** புளி நறளை, fox-grape — Vitis setosa, see சங்கு கொடி.

**சங்கு கீரை,** சங்கஞ் செடி இலை, see சங்கீரை.

**சங்கு குமை,** ஆமை, tortoise; turtle — Testudo graeca.

**சங்குக் கல்,** ஓர் வெள் கல், sankhstone.

**சங்கு சதை,** சங்கினுள் இருக்கும் சதைப் பற்று, the fleshy portion inside the chank; 2. சிப்பிச் சதை, oyster flesh.

**சங்கு சன்னி,** உடல் வெதும்பி, நாக்கு வறண்டு, வயிறு பொருமி, வாந்தி, விக்கல், காது அடைப்பு, இவைகளை உண்டாக்கும் முதலிய குணங்களுடன், 14 நாள் வரைக்கும் நீடித்திருக்கும் ஓர் வகை சுர சன்னி, a kind of delirium from enteric fever extending to a period of fourteen days. It is characterised by aching of the limbs, parched tongue, rumbling of the stomach, vomiting, hiccough, dullness of hearing, restlessness due to frequent and sudden rise from the bed etc.

**சங்கு சாரம்,** சங்கைச் சுட்டு நீறாக்கும் உப்பு, an essence of salt extracted by burning and reducing chank into ashes.

**சங்கு சீர சிகிச்சை,** வேர்வை பிரச்சினைத் பிரகு முதுகெலும் சீரது, அறிவிப் பந்நலரு

அத்திப்பழம் முருங்கை விதை இவைகளை அரைத்து எண்ணெயில் கலந்து பேறு விட்டவுடன் யோனி சுருங்கும்படிச் செய்தல், an application of ointment for the contraction of the vaginal orifice immediately after delivery. It is prepared by grinding fig fruit and moringa seed and mixing them with oil.

சங்கு சிதர், சுருங்குதல், (உடம்) பேறு விட்ட சவுக்கு பின் யோனி சுருங்குதல், shrinking i.e. contraction of the vaginal orifice.

சங்கு சுட்ட நீறு, சங்கு சுண்ணாம்பு, lime obtained by or derived from slaking conch-shell; slaked shell-lime.

சங்கு சுண்ணம், சங்கு சுண்ணாம்பு, chank lime or chunam. See சங்கு சுட்ட நீறு; 2. முப்புச் சுண்ணம், (*In Alchemy*), a calcium compound prepared from the mystic three salts; 3. சங்கை பொடிபொடியாக்கி எலுமிச்சம்பழச் சாற்றினால் அரைத்து (1 சாமம்) உலர்த்தி வில்லை செய்து 20 விராட்டியில் புடமிட சுண்ணமாகும். இதனால் பாண்டு, சோபை, நீர்க்கட்டு, நீர்க் கோவை தீரும், (*In Ayurveda*), calcined conch. It is prepared by process of calcination after crushing and powdering conch shell and grinding it with the juice of lime and lastly subjecting the product to fire with the aid of 20 cow-dung cakes. It is prescribed for dropsy, jaundice, strangury and other urinary complaints.

சங்கு சுவை, ஆமை, tortoise; turtle.

சங்கு செம்பு, சங்கிலிருந்து எடுக்கும் செம்பு, copper extracted from the chank.

சங்கு சுடர், கொத்தான், air-creeper — Cassytha filiformis.

சங்குத்தட்டைப் புல், சதுரமான புல், square-stalked grass—Saccharum spontaneum.

சங்கு தலை, சங்கைப் போன்ற தலை, Conch-head.

சங்கு தலை ஓடு, சுத்த வெண்மையான தலை ஓடு, pure white skull.

சங்குத் திராவகம், ஆயுர்வேதப்படி சங்கிலிருந்து செய்யும் திராவகம், an acid prepared from chank accordidg to the process of Ayur Veda, and given for dyspepsia; 2. சங்கு பாஷாணத்திலிருந்து தயாரிக்கும் திராவகம். (*In Siddha Medicine*), an acid prepared from arsenic compound.

சங்கு திருகி, தக்கை திருகி, cork-screw.

சங்கு நண்டு, பெரிய சங்கிற்குள் வசிக்கும் நண்டு, a crab living in the hollow of a big chank.

சங்கு நீர், சுத்த சலம்; பனிநீர், dew-water; 2. பனிக் குடத்து நீர், amniotic fluid—Liquor amni.

சங்கு நிதி, வட்டத் திருப்பு, see சங்க நிதி.

சங்கு நீர், சுத்த சலம், pure water contained in a conch; 2. see அம்பட நீர்; 3. பெண் மூத்திரம், urine of a female.

சங்கு நீறு, see சங்கு சுண்ணம்.

சங்குநீதி, நரிவித்த கிலுகிலுப்பை, rattle-wort —Crotalaria genus.

சங்கு பட்டி, ஒர் கடைச் சரக்கு, a bazaar drug (unknown)?

சங்கு பாசம், சங்கு போகினி, see சங்க புஷ்பி.

சங்கு பாஷாணம், ஓர் வகை வெள்ளைப் பிறவி பாஷாணம், a kind of native white arsenic; a mineral poison.

சங்கு பாலாடை, பாஷாணம், poison; 2. குழந்தைகட்கு பாலூட்டும் சங்கு, a small ladle-like conch used for feeding milk to children.

சங்கு புகட்டல், குழந்தைக்குப் பால் புகட்டல், feeding children with milk in a chank.

சங்கு புட்பம், கருவா, cinnamomum (genus) see சங்க புட்பம்; 2. மல்லிகை வகை, jasminum (genus); 3. காக்கணக்கொடி, mussell-shell creeper — Clitorea ternatea; 4. தகரை, cassia—Cassia tora.

சங்கு புட்பி, சங்குப் பூ, conch flower—Canscora decussata; 2. விஷ்ணு கிராந்தி, Vishnu plant—Evolvulus hirsuta.

சங்குப்பி, பேய்ச்சங்கு, see சங்கங் குப்பி.

சங்கு உப்பு, சங்கு சுட்ட உப்பு, salt obtained from slaked conch; 2. வெள்ளை உப்பு, white salt.

சங்குப் பூனை மரம், சவ்வாது. Zibeth; a perfume from the anal gland of a cat; 2. புனுகு, civet.

சங்கு மரம், see சங்கம் பூனை மரம்.

சங்கு மரம், வேப்பமரம், margosa tree—Azadirachta indica.

**சங்கு மாத்திரை**, சங்கை பற்ப மாக்கி, மற்ற சரக்குகளோடு சேர்த்து திரட்டிய மாத்திரை. இது கண்ணோய்க் குதவும், (*In Ayur Veda*), a medicinal pill prepared from calcined chank, mixed with other drugs, and used for diseases of the eyes.

**சங்கு மாருதம்**, வேம்பு, see சங்கு மரு.

**சங்கு முத்து**, சங்கி லின்று எடுக்கும் முத்து. oyster-pearl.

**சங்கு முடக்கி**, வெண் கீரைத் தண்டு, a white species of spinach—Amaranthus blitum.

**சங்கு மூலம்**, சங்கஞ் செடி வேர், see சங்கம் வேர்.

**சங்கு மேகம்**, வெண் கருச் சத்து மிகுதியால் மூத்திரத்தின வெண் ணிறம் மாறாத மேகம், albuminuria in which the turbidity does not disappear at all owing to excessive albumin in the urine—Albuminuria. See சல மேகம்.

**சங் குருவை**, ஆமை, tortoise; turtle; 2. see சங்கு குலை.

**சங்கு லிகம்**, இருப்பை அதாவது இலுப்பை மரம், honey-tree—Bassia longifolia.

**சங்கு வங்கணம்**, நற் சீரகம், cummin seed—Cuminum cyminum.

**சங்கு வடுகம்**, சகல குன்ம, குன்மம், அதிசாரம் முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் ஆயுர் வேத மருந்து, an Ayurvedic medicine given for all kinds of gout, dyspepsia, diarrhoea, etc.; 2. கள்ளி, எருக்கு, நாயுருவி இவைகளி னின்று உப்பெடுத்து திரிபலையும் கூட்டி, சங்கு பற்பத்தையும் சேர்த்துத் தயாரித்து அஜீரணம், பித்த சிலேட்டுமம் முதலியவற் றிற்குக் கொடுக்கும் ஆயுர் வேத மருந்து, an Ayurvedic preparation consisting of salts derived from milk-spurge, madar and Indian burr, which are mixed with Tripala (i e. gall-nut, Tandri fruit and gooseberry) and calcined conch. It is prescribed for indigestion, bilious and phlegmatic disorders.

**சங்கு வாதம்**, வெட்டை சம்பந்தமான ஓர்வகை வாதம், a kind of rheumatism associated with gonorrhoea—Gonorrheal rheumatism.

**சங்கு வெள்ளை**, see சங்கு சுண்ணம்; 2. சங்கு பற்பம், calcined chank; 3. தூய வெள்ளை, pure or bright whiteness; 4. சங்கு பாஷாணம், which see.

**சங் கூமச்சி**, ஊமச்சிச் சிப்பி, boat-shell—Chank cymbium.

**சங் கேரி**, புளியாரை, Indian sorrel—Oxalis carniculata.

**சங் கேசுரம்**, மருளூமத்தை, head-ache plant—Xanthium strumarium.

**சங்கேசுர ரசம்**, கெந்தி, நாக பஸ்பம், ரச பஸ்பம், வெண்காரம், பலகறை, நீலத் துத்தம் இவையெல்லாம் சேர்த் தரைத்து, ஆயுர் வேத முறைப்படி புடமிட் டெடுத்து சய ரோகத் திற்காகக் கொடுக்கு மருந்து, a medicine prepared by mixing sulphur, calcined zinc and mercury, borax, cowries and blue vitriol in due proportions and grinding them all together. The product is then calcined according to Ayurvedic method. It is prescribed for consumption.

**சங்கேத மொழி**, பரி பாஷை வார்த்தை, technical term; code word.

**சங்கேத மொழிப் பிரயோகம்**, சாஸ்திரார்த்தம், use of term or technical expression; technicality.

**சங்கே மாயி**, ஓர் யுனானி கடைச் சரக்கு, a bazaar drug useful in Unani system.

**சங்கை**, சுக்கு, dried ginger—Zingiber officinalis; 2. வறட் சுண்டி; ஆடு தின்னாப் பாலை worm-killer—Aristolochia bracteata; 3. அளவு, measure; 4. கணைக் கால், shin-bone; that portion of the leg between the knee and the ankle; 5. அச்சம், fear; 6. காற்றுச் சங்கை, a suspicion that one is possessed by a devil; the supposed evil influence of a devil.

**சங்கை மூலி**, பெரு மருந்து, Indian birthwort—Aristolochia Indica.

**சங்கை விஷம்**, பாம்பின் விஷ பயத்தா லுண்டாகும் நோய், a morbid affection of mind through fear of poison from snake-bites.

**சங் கோசகம்**, மரணத்தை யுண்டாக்கும் ஓர் விஷக் கிழங்கு, a poisonous root causing death.

**சங் கோச பிசுனம்**, குங்குமம், English saffron—Crocus sativus.

**சங் கோசம்**, மஞ்சள், turmeric—Curcuma longa; 2. குங்குமம், English saffron;

3. அடக்கம், modesty; 4. கூச்சம், bashfulness; 5. கண் கூச்சம், intolerance to light—Photobia; 6. ஓர் மீன், a kind of fish; 7. குங்குமப் பூ, English saffron flower—Crocus sativus.

சங்கோசன காரி, தசை நார்களையும், நரம்பு களையும், சுருக்கச் செய்து, நீர் வடிதல், இரத்தப் பெருக்கு, அதிசாரம் முதலிய போக்குகளை நிறுத்தச் செய்யும் மருந்து அல்லது துவர்ப்பு வஸ்து, remedies which contract the muscular fibres and nerves, and also arrest fluxes, hemorrhages, diarrhoeas etc.—Astringents.

சங்கோல பத்திரி, தூது வளை, three - lobed night-shade—Solanum trilobatum.

சங்கோலம், தயிர், curd.

சசகம், முயல், hare; 2. முயற் சாதி ஆண், (*In Erotic Science*) one of the 4 classes of men i.e. of the species of hare.

சச காரம், காட்டு மா, jungle mango—Spondias mangifera.

சச சிருங்கம், முயற் கொம்பு, hare's horn, a term figuratively used for indicating an impossibility or sometimes rarity.

சச பத்திரம், விஷ பாலை, poison milk plant.

சசபாம், நாணல் புல் அல்லது நாணற் புல், buffalo reed—Saccharum spontaneum.

சச மதம், கஸ்தூரி, musk.

சசம பரி, ஆமணக்கு, see சசம்பரி.

சசம், முயல், rabbit; hare; 2 வெள்ளை போளம், white myrrh; woman's bole; 3. ஆண் சாதி நான்கினில் ஒன்று, one of the four classes of men described in the Erotic science.

சசம்பரி, ஆமணக்கு, castor plant—Ricinus communis; 2. வெள் ளாம்பல், white Indian water-lily—Nymphaea lotus.

சசம் பிரியம், வெள் ளாம்பல், see சசம்பரி; 2. முத்து, pearl.

சசம் புரி, ஆமணக்கு, see சசம்பரி.

சசலம், ஈரம், dampness.

சச வாதம், நெருப்பைக் கண்டவுடன் காணும் ஓர் முயல் வாதம், a kind of fits appearing on the mere sight of fire.

சச விஷாணம், முயற் கொம்பு அதாவது இல்லாதன வற்றிற்கு இம் மொழியை வழங்கிச் சொல்வது. இது இன்மையைக் காட்டும், hare's horn—a term used symbolically to indicate a thing not in existence. It has a negative significance showing absurdity.

NOTE.—Such a kind of symbolical use applies equally to குதிரைக் கொம்பு, also indicating rarity or absurdity.

சசன், மூவகை ஆண் சாதிகளி லொன்று அதாவது முயற் சாதி, one of the three classes of men i.e., one of hare-like nature.

சசாரணிகம், நன்னாரி, Indian sarsaparilla—Hemidesmus indicus alias Periploca indica.

சசாதனம், கழுகு, vulture; 2 பருந்து, heron; kite.

சசாடம், சிறு நன்னாரி, small-leaved sarsaparilla; swallow-wort—Hemidesmus indicus (angustifolia).

சசி, இந்துப்பு, rock-salt; 2. கருப் பூரம், camphor—Cinnamomum camphora; 3. பச்சைக் கற்பூரம், crude camphor; 4. கடல், sea; 5. சந்திரன், moon; 6. மழை, rain.

சசி கலை, சந்திர கலை, phase of the moon.

சசி காந்தம், சந்திர காந்த மணி, moon-stone. It is a translucent variety of felspar; 2. செவ் வாம்பல், red Indian water-lily—Nymphaea rubra.

சசி தாதிகம், வெண் சந்தனம், white sandal-wood—Santanum album.

சசிப் பிரியம், see சசம் பிரியம்.

சசிய கஞ்சா, சடைக் கஞ்சா, see சசியம்.

சசியம், தானிய விளைவு, grain produce; 2. சடைக் கஞ்சா, a superior variety of Bengal hemp—Cannabis; 3. மரா மரம், Ceylon ebony—Diospyros ebenum; 4. நிலப் பனைக் கிழங்கு, ground palm—Curculigo orchioides; 5. இந்துப்பு, rock-salt.

சசியா, ஆச்சா அல்லது மரா மரம், see சசியம்.

சசியா திதம், மாசி பத்திரி, santonin wood—Artemesia indica.

சசியாரி, முயற் செவிக் கள்ளி, a kind of spurge, the leaves of which resemble the ear of a hare, probably referring to leaf-spurge (இலைக் கள்ளி)—Euphorbia neriifolia.

சசி யுப்பு, இந்துப்பு, rock-salt; Sindh salt.

சகந்தரம், ஓர் கடைச் சரக்கு, a bazaar drug?

**சகுபம்,** அசோகு, Asoka tree — Polyalthia longifolia; 2. காகோளி, wing-leaved Asoka—Saraca indica; 3. நெட்டி லிங்கம், Indian mast tree—Polyalthia longifolia.

**சகுபாகிதம்,** மூக் கூட்டு நெய், நோய் தீர்ந்த வுடன் தலைமுழுகக் கொடுப்பது, a mixture of three oils viz.—cow's ghee, gingelly oil and castor oil. It is prescribed for patients to have an oil-bath immediately after cure.

**சகோப நேத்திர பாகம்,** கண் தின வெடுத்து, குத்தல் கண்டு, பீளை சேர்ந்து, சீழும் நீரும் வடிந்து விழியில் எரிச்சலையுண்டாக்கும் ஓர் கண்ணோய், an eye disease attended with symptoms of itching sensation, pricking pain, suppuration of the eyes, deposit of mucous matters, slimy discharge, lacrimation and inflammation with burning sensation.

**சக்சடம்,** தாமரை, lotus flower — Nelumbium speciosum.

**சக்சம்,** பிணைக்கு, whirling nut—Gyrocarpus jacquini; 2. உண்மை, truth.

**சக்சனம்,** நாவல், common jamoon—Eugenia jambolina.

**சச்சிக் காரம்,** சோடா வுப்பு, impure carbonate of soda obtained by burning plants—Barilla; 2 உமரி யுப்பு. இது நரி யுமரி அல்லது உப்புக் கீரையை கொளுத்துவதினா லுண்டாகும், impure carbonate of sodium derived from burning the plant known as common Indian salt-wort — Suaeda nudiflora — Soda carbonus; 3. சோடாமாவு, bicarbonate of soda.

**சச்சிதானந்த முலைப் பால்,** உப்பு சரிக்கும் முலைப் பால், saltish breast milk.

**சச்சிதானந்தம்,** கல்லுப்பு, insoluble rock-salt found underneath the sea.

**சச்சிதானந்த வெளி,** see சச்சிதானந்தம்; 2. மூளை, brain; 3. அண்ட வெளி, the space above the brain and below the skull; 4. சிசுவின் மண்டை வெளி, the vacant space in an infant's cranium—Fontanelle.

**சச்சினி,** ஆறுவது மாதம், the sixth month.

**சச்சு,** இழிந்த புகையிலை, inferior tobacco; 2. சுக்கு, dried ginger—Zingiber officinalis; 3. see சச் சுண்டி; 4. பறவை மூக்கு, bird's beak; 5. கொஞ்சம், little.

**சச் சுண்டி,** நீர்ச் சுண்டி, sensitive plant floating on water—Neptunia oleracia.

**சச்சு முயல் வலி,** உடம்பில் கெட்ட வாயுக்கள் சேர்வதினால் உண்டாகும் முயல் வலி. இவ் வலி முயல், நாய் இவைகளுக்கு வருவது சகசம். ஆகவே இப் பெயர், a kind of spasm due to undue predominence of morbid bodily fluids or humours in the system. Such kinds of fits or convulsions are very common among rabits or dogs and hence the name.

**சச்சு வாயு,** கெட்ட வாயு, contaminated air; 2. அசுத்த வாயு, impure air or gas; 3. கரி யமில வாயு, carbonic acid gas.

**சஞ்சயஞ்சம்,** கோஷ்டம், Arabian costus — Costus speciosus.

**சஞ்சம்,** அரக்கு, sealing wax.

**சஞ் சமனம்,** திரிதோஷ கோளாறுகளை சமனப் படுத்தி அதனாலுண்டான கோபங்களை சாந்தப் படுத்தி உடம்பினின்று கழிவு ஏற்படாமல் செய்யும் மருந்து, medicine rectifying the deranged humours in the system and calm their excitement without promoting the excretions.

**சஞ்சயம்,** உதிராதி கரணம்; congestion; 2. திரட்சி; collection; multitude; 3 பூர்வ கரும மூட்டை, (*In Philosophy*) the outstanding *Karma* of previous births at one's credit.

**சஞ்சரம்;** உடல், body.

**சஞ்சரி,** தேனீ, honey-bee.

**சஞ்சரிலக,** இலந்தைக் கனி, common jujube —Zizyphus jujuba.

**சஞ்சரி நேர்வாளம்,** ஓர்வகை நேர்வாளம், a kind of croton seed.

**சஞ்சரீகம்,** கரு வண்டு, black beetle; a large black bee.

**சஞ்சல சீவனன்,** புட்ப ராகம், topaz.

**சஞ்சலம்,** காற்று, wind; 2. see சங்கர பாஷாணம்; 3. நடுக்கம், tremor; 4. துன்பம், grief; 5. வியாதி, disease; 6. மனோ சஞ்சலம், agitation or fickleness of mind; 7. மனக் கவலை, uneasiness of mind; mental worry; 8 துக்கம், sorrow.

**சஞ்சலை,** திப்பிலி, long-pepper—Piper longum; 2. மின்னல், lightning.

சஞ்சலிக் கீரை, ஓர் வகைக் கீரை, a kind of greens.

சஞ்சா, ஆற்று மருந்து, healing balm.

சஞ்சாங்கம், பெரு முத்தக் காசு, koray root—Cyperus rotundus.

சஞ்சார சமாதி, பசி தாகத்தை சாந்தி செய்து கொண்டு நடக்கையிலும், இருக்கையிலும் கேசரியில் மனதை நாட்டி அனுசரிக்கு மோர் நிலைமை, a state or condition in which one after appeasing his hunger and thirst, concentrates his mind even while walking and sitting during his wakeful life.

சஞ்சார பிரேதம், ஒருவர் காணுகபடி சீவிக்கும் உயிர்ப் பிணம், one who lives in obscurity—Civiliter mortuus; 2. நடைப் பிணம், living corpse—a burden to world.

சஞ்சாரம், தொத்து, infectious; 2. புணர்ச்சி, cohabitation.

சஞ்சார வியாதி, எங்கும் பரவும் நோய், all spreading disease such as epidemics; contagious disease; 2. தொத்து நோய், infectious disease.

சஞ்சாரன், உயிர், life; 2. திரிந்து வாழ்பவன், one leading a wandering life.

சஞ்சாரி, பூனைக் காஞ்சொறி, cowhage plant—Tragia involucrata (cannabina); வனவாசி, one who roams about in the forest; 3. see சஞ்சாரன்.

சஞ்சா வரம், தகரை, cassia or ringworm plant—Cassia tora.

சஞ்சா ளிகம், வண்டு, beetle.

சஞ்சிகை, இலந்தை, see சஞ்சரிகை.

சஞ்சிதம், கட்டுப் பட்ட வினை, (*In Philosophy*) accumulated *Karma* or actions of previous birth; 2. மூட்டை, bundle.

சஞ்சிதிகை, இலந்தைக் கனி, jujube fruit.

சஞ்சி மூலி, சஞ்சீவி மருந்து, elixir. See சஞ்சீவி மூலி.

சஞ்சி ரீகம், see சஞ்சாளிகம்.

சஞ்சீனி, புளிச் சாலை, a species of sour-sorrel plant—Oxalis genus.

சஞ்சீவ காணி, புளிய மரம், tamarind tree—Tamarindus indica; 2. புளி, tamarind—Tamarindus indica, 3. புளியம் பட்டை, tamarind bark; 4. மூர்ச்சை தீர்ந்து உயிர் தரு மருந்து, a medicine by which one recovers from swoon; a medicine efficacious in restoring suspended animation; 5. ஆற்று மருந்து, warm medicine which increases the circulation of blood—Cordial; 6. காய கற்ப மருந்து, rejuvenating drug; 7. சீவனி, a medicine for long life; 8. நோய் தீர்க்கு மருந்து, a panacea for all diseases.

சஞ்சீவ கரணியம், பாலை, ironwood—Mimusops hexandra.

சஞ்சீவ காசிகம், முசுமுப் புல், maritime grass—Pommeruella cornucopia.

சஞ்சீவகி, புளிய மரம், tamarind tree—Tamarindus indicus.

சஞ்சீவனம், உயிர்ப் பிச்சை, animation; revival of life; 2. மா மரம், mango tree—Mangifera indica; 3. பாலி லுள்ள சருக்கரை, sugar of milk—Lactose.

சஞ்சீவனி, உயிர் தரு மருந்து, a restorative; any medicine bringing to life or promoting long life. See சஞ்சீவ கரணி; 2. பூநாகம், earth-worm.

சஞ்சீவனை, see சஞ்சீவனி.

சஞ்சீவன், மா மரம், mango tree—Mangifera indica.

சஞ்சீவி, see சஞ்சீவனி; 2. கருங் குன்றி, black jeweller's bead; 3. இந்திர கோபப் பூச்சி, lady's fly or scarlet moth—Mutella occidentalis; 4. புளி, tamarind; 5. மலைப் பூண்டு, mountain herb; 6. பூ நாகம், earth-worm, 7. see ஆடு தின்னுப் பாளை; 8. முலைப் பால், woman's breast milk; 9. சீந்தில், moon-creeper — Menispermum cordifolium; 10. உயிரைக் காப்பாற்றி நீண்ட ஆயுளையும் கொடுத்து, உலோகங்களைப் பொன்னாகச் செய்யு மருந்து, the philosopher's stone supposed to have the power of protecting and prolonging one's life; and it is also said to be capable of transmuting inferior metals into gold; 11. மூர்ச்சை தீர்த்து உயிர் தரு மருந்து, a restorative or revivifying medicament restoring from swooning or suspended animation, death etc., and ensuring long life—Elixir; 12. சதை பொட்டிப் பூடு, a plant uniting the cut portions or ends of flesh, See சதை பொட்டி.

சஞ்சீவிக் கண்டம், கரு நாகம், black cobra.

சஞ்சீவிக் கருவணை, see காட்டுக் கருணை.

சஞ்சீவிக் குளிகை, சஞ்சீவி மாத்திரை, a restorative pill; remedy for restoring health.

சஞ்சீவி சூரணம், சிச்சி சமூலம், ஓரிதழ் தாமரை, சிறு காஞ்சொறி, இம் மூன்றின் சமூலத்தைக் கொண்டு, அத்துடன் கடைச் சரக்குகளையும் சேர்த்து செய்யும் சூரணம். இதனால் வறட் டிருமல், கபம், தாகம், தலைச் சுழற்சி, இவைகள் போம். a medicinal powder composed of three drugs viz.—ulcer plant, one-petal lotus and nettle plant with other bazaar drugs. It is prescribed for dry cough, phlegm, thirst and giddiness; 2. சீந்திற் சூரணம். இது வெட்டைச் சூட்டிக்காக கொடுப்பது; powdered moon-creeper given for venereal heat.

சஞ்சீவிப் பருவதம், கன்னியா குமரி யருகே யுள்ள மருத்துமா மலை. இதில் உயிர் தரு மூலி முதலிய அநேக அபூர்வ மூலிகைகள் உள்ள தெனக் கருதப்படும், a mountain of herbs situated near Cape Comorin called Maruthumamalai. It is said to contain elixir and other rare, efficacious and all-cure drugs.

சஞ்சீவி மூலிகை, உயிர் தரு பச்சை மருந்து மூலிகை, a green herb capable of reviving conscience and restoring life; a restorative drug.

சஞ்சீவிமேதி, முடக் கற்றான், palsy curer — Cardiospermum halicacabum.

சஞ்சீவி லேகியம், உரோம ரிஷி நாலிற் சொல்லிய அமுர்தாதி லேகியம், an electuary prescribed in Roma Rishy's work for prolonging life and to live to a great age.

சஞ்சீவினி, see சஞ்சீவனி; 2. மலைப்பூடு, hill plant, mountain drug; 3. மூர்ச்சை தீர்க்கு மருந்து, medicine or drug restoring consciousness; 4. பலத்தைக் கொடுத்து உயிர்ப்பிக்கு மருந்து, remedies which impart strength and give tone to the system — Corroborants; tonic; 5. சீவனி, a medicine for long life; 6. உயிர்ப்பிக்கு மந்திரம் mantram for reviving the dead.

சஞ்சீவினி குடிகம், திரிகடுகம், திரிபலை, சேங்கொட்டை ஆகிய இவைகளை ஆதியாகக் கொண்டு தயாரித்த பாம்பு கடி, சன்னி பாதம் இவைகளுக்குக் கொடுக்கும் ஆயுள் வேத மாத்திரை, an Ayurvedic pill prepared from Trikadugu viz;—dried ginger, long pepper and black pepper, Tripala (consisting of gall-nut, tandri fruit and gooseberry), dhoby-nut etc. as chief ingredients and prescribed for snake-bites, typhoid fever etc.

சஞ்சீவினி ரசம், சன்னிகளுக்காக கொடுக்கும் ஓர் ஆயுர் வேத மருந்து, an Ayurvedic medicine prescribed for delirium from fever, chiefly typhoid.

சஞ்சு, ஆமணக்கு, castor plant — Ricinus communis. 2. பறவை மூக்கு, bird's beak or bill of a bird.

சஞ்சுகரி, காஞ்சொறி, climbing nettle—Tragia involucrata.

சஞ்சு விருதம், பறவை, bird.

சஞ்சோதனம், வாத பித்த சிலேட்டும மாதிகளும் உடம்பில் அதிகமாகத் தங்காமற் படிக்கும், அப்படி சேர்ந்தாலும் கழிவு மூலியமாய் வெளிப்படுத்து மருந்து, medicine preventing the accumulation of the deranged humours or discharging them even if retained, by excretions.

சடகந்தம், வசம்பு, sweet flag—Accorus calamus.

சடகம், ஊர்க் குருவி, domestic sparrow; 2. தேன், honey; 3. சாராயம், arrack; liquor; 4. வட்டில், cup, 5. ஆனை மீக்குவம், Leathery Murdah — Terminalia tomentosa (coriacea), 6. தான்றி, Belleric myrobalan—Terminalia belerica.

சடகாசம், சுவாச பாணம், அல்லது சுவாசாசயத்தின் வெடிப்பு, rupture or ulcer of the respiratory organs; 2. நுரை யீரல் வெடிப்பு. fissure of the lungs.

சடகை, ஊர்க் குருவி பேடு, hen-sparrow.

சடக்கன், மஞ்சளும், கறுப்பு நிறமும், வெள்ளை வரிகளுமுடைய மீன், buller fly fish of yellow and black colour with white stripes; 2. வண்ணாத்தி மீன் என்னும் ஓர் கடல் மீன்; a sea-fish known as dhoby's fish — Heniochus macrolepidotus; 3. கந்த பாஷாணம். a poisonous compound of sulphur.

சடக்கினம், புண் ஆற்றல், healing o... a sore; 2. ஓர் பூடு, a plant—Coryza lac...ra.

**சடக் குறிப்பு**, உடம்பைப் பற்றிய குறிப்பான விஷயங்கள், note-worthy features of the human body.

**சடக் கேதனம்**, முள்ளங்கி, Indian radish; garden radish—Raphanus sativus.

**சடக் கோதனம்,**
**சடங்கோதன,** } வசம்பு, see சட கந்தம்.

**சடங்கயம்**, வெள்ளை முத்துச் சோளம், white maize.

**சடங்கன்**, கந்தக பாஷாணம். இது 32 பிறவி பாஷாணங்களில் ஒன்று, (*In Siddha Medicine*) one of the 32 kinds of native arsenic; any poisonous compound of sulphur.

**சடங் காதல்**, பெண் குதுவாதல், gir's attainment of puberty.

**சடங்கு**, கிரியை, a religious ceremony; the second degree in the worship of Shiva; 2. சாந்தி கலியாணம், consummation; nuptial ceremony.

**சடங்கு சுற்றல்**, குதுவான பெண்ணுக்கு செய்யும் கிரியை, a ceremony performed for a matured girl.

**சடசம்**, ஓர் வகை இருமல், a kind of cough.

**சடசீதம்**, உடம்பு சீதளம், a sense of cold chilly sensation.

**சடசீவி**, தூல தேகி, corporeal being; one with material body.

**சடச்சி**, பொன் விமிலை, see சடச்சி; 2. செவ்வறளி, red oleander — Nerium odorum. See செடச்சி.

**சடச்சி யங்கம்**, கருப்புக் கொள்ளு, black horse-gram—Cassia absus.

**சடதத்துவ நூல்**, உடம்பின் தத்துவத்தைக் குறித்த நூல், physiology; 2. சடப்பொருவின் தத்துவத்தைக் குறித்த நூல், natural philosophy.

**சடதன்**, பேதன், an idiot.

**சடதை**, மடமை, modesty; 2. அறியாத்தனம், idiocy; void of understanding; 3. பேதைமை, ignorance; 4. பேதைப் பெண், a simple woman; simpleton.

**சடத் தன்மை**, சடத்துவம், physical properties; phenomena of nature.

**சடத்துக்குள் திகிரிபோக்கி**, அசமதாகம் அதாவது ஓமம். சோம்பலைப் போக்குவதால் இதற்கு இப் பெயர், sison ammi—Carum copticum. It is so called because of its removal of indolence. It is a stimulant.

**சடத்து செயநீர்**, உடம்பினின்றுண்டாகும் மூத்திரம் அல்லது வியர்வை, urine or sweat excreted from the system.

**சடத்துவ சாஸ்திரம்**, சடத் தன்மையைக் குறிக்கும் நூல், science which treats of the laws of nature and especially of the forces and general properties of matter—Physics.

**சடத்துவம்**, சடத் தன்மை, inertness of matter; bodily appetite.

**சட நிறம்**, மாமிசச் சிலை, a kind of black stone capable of dissolving the flesh. See மாமிச பேதி.

**சட பதார்த்தம்**, அசித்துப் பொருள், lifeless thing; 2. சடப் பொருள், material thing; matter; 3. அசேதனப் பொருள், inorganic substance; matter as distinguished from spirit.

**சடடம்**, அறுகு, cynoden grass; 2. புல், grass.

**சட பாதம்**, இரத்த வொழுக்கு, oozing or issue of blood.

**சடப் பால்**, உடம்பின் பால் அதாவது முலைப் பால், woman's breast milk.

**சடப் பிணி**, உடம்பின் வியாதி, disease of the body; bodily ailment.

**சடப் பொருள்**, அசித்து, matter as opposed to spirit.

NOTE.—(*In Agama Philosophy*) this matter includes the three inherent principles or passions attached to the Soul and their effects on the human body.

**சட மிறுகி**, உடம்பை இறுகச் செய்யும் ஓர் மூலிகை, அதாவது சதக மரம், an unknown plant which is said to invigorate the system?

**சட முல்லாசம்**, தண்ணீர் விட்டான் கிழங்கு, water root—Asparagus racemosus.

**சட முள்ள**, தூல, corporeal.

**சடம்**, உணர்வில்லா வஸ்து, lifeless thing or matter; 2. அசேதனப் பொருள், matter as opposed to spirit; 3. குங்குமம், red saffron powder; 4. மாமிச வுடம்பு, physical body; 5. மரத்தின் மூலம், root of the tree; 6. வயிறு, stomach; 7. சோம்பல்,

idleness ; 8. பொய், illusion ; 9. கற்பழிந்த பெண், a violated or seduced girl ; 10. உடல், body ; 11. பிறக்கும் போது ஆன்மாவில் மோதி பகுத் தறிவைக் கொடுக்கும் வாயு, the vital air lending the power of discretion when coming in contact with the soul.

ச(ஞ)டம், கற்பழிந்த பெண், a violated girl

சடம்பு, சணல், hemp ; 2. காட்டுப் பூடு, forest plant.

சடம் விழல், இறத்தல், to die.

சடம் வெளுப்பு, இரத்தக் குறைவினுல் உடம்பு வெளிறல், paleness due to deficiency of blood in the system—Anemia.

சட யோனி, சிதைந்த கருப்பை, a violated womb ; a womb in which abortion has taken place ; aborted womb.

சட ரசாயனம், சடப் பொருளைப்பற்றிய வேதிக நூல், inorganic chemistry as opposed to சேதன ரசாயனம், organic chemistry.

சடர சுவாலை, மூலாக்கினி, gastric fire. See சட ராக்கினி.

சடரம், வயிறு, stomach ; 2. அடி வயிறு, abdomen ; 3. இருதயத்தின் அடிப் புறத்து அறைகள், ventricles of the heart ; the two lower chambers of the heart.

சடர வாதனை, கருப்ப வேதனை, labour pain ; pangs of labour.

சட ராக்கினி, உண்ட உணவை எரித்து சீரணமாய் மாற்றுவதற்காக குடல்களில் அடங்கியிருக்கும் நெருப்புச் சக்தி. இதுதான் தேக வலிமைக்கும், ஆயுளுக்கும் காரணம். இது தொழிலின் பேதத்தினுல் நான்குவித காரணப் பெயர்களை அடைகிறது. அவையாவன, the heat generated in the stomach by the action of the peculiar digestive fluid, which forms the chief solvent in the digestive process of the food taken —Gastric fire. It is the mainstay of life and as such, lends strength and life to the system. It is divided into four classes according to its functions in emanating different degrees of heat for purposes of digestion viz :—

1. தீக்ஷ்ணாக்கினி, (lit, fire-like flame) ; figuratively used for strong digestive capacity so as to produce voracious appetite.

2. சமாக்கினி, medium warmth indicating moderate capacity for digestion ; appetite not so severe as No. 1

3. மந்தாக்கினி, (lit) fire or warmth with slow or dull heat ; referring to dull appetite due to deficiency in digestive power.

4. விஷமாக்கினி, (lit) poisonous fire indicating the irregular condition of digestion with, or sometimes without appetite. See உதராக்கினி.

சடராக்கினி, (சடர + அக்கினி) அதாவது வயிற்றின் நெருப்பு. இதற்கு சடரச் சுவாலை யென்றும் உதராக்கினி யென்றும் பெயர். இது உண்ட உணவை உதர கோசத்தில் உதவியைக் கொண்டு இரசாயன மாற்றமடையது. ஆகவே, வயிற்றினுள் ஏற்படும் இரசாயன மாற்றத்திற்கு இத் தீயின் சக்தியே காரணமாகக் கருதப்படும், (stomach + fire), the fire which is said to arise in the stomach, sets up the gastric fluid to reduce the food to chyme. So, this fire is supposed to be the agent for the biochemical process taking place in the stomach by the action of the gastric juice.

NOTE.—When the food passes into the stomach, the contractions of that organ roll it about and mix it thoroughly with the gastric juice which is thrown out from the glands of the stomach. The heat caused by the continual rolling about with gastric juice reduces the food to the consistence of a pea-soup called chyme.

சடராக்கினித் திராவகம், அன்னாசயத்தில் சீரண சக்தியை யுண்டு பண்ணு மோர் திராவகம். இது உதர கோளங்களி லிருந்து வெளிப் படும். இத் திராவகத்தில் இரசாயனப் பொருள்களும், திராவகச் சத்தும் அடங்கி யுள்ளது, the peculiar digestive fluid secreted by the glands of the stomach—the chief solvent fluid in the digestive process. It contains chemical properties as also muriatic acid—Gastric juice.

சடராக்கினி வர்த்தனகாரி, தீபன வர்த்தனகாரி—அதாவது அக்கினிப் பசியை யுண்டாக்கு மருந்துகள், medicine or medical agents which stimulate and strengthen the powers of the stomach giving rise to voracious hunger—Stomachica.

**சட ராக்கினி பேதி,** செரிக்கும் சக்தியை வீக்ஷணா ருபமாய் சோதித்தல், the bio-chemical process of analysing the digestive food.

NOTE.—This is an artificial digestion shown by experiment.

**சட ரோகம்,** (சடர + ரோகம்) stomach + disease) disease of the stomach; gastric disorders or disturbances.

**சடக்குறி,** (சடம் + குறி), உடம்பைப் பற்றிய ருபிக்கை, physical evidence.

**சடலக் கூறு,** உடம்பின் கூறு, nature or disposition of the body; 2. உடம்பின் பகுதி, part or division of the body.

**சடலத் தத்துவம்,** உடம்பின் கருவிகளின் இயற்கைப் பற்றிய நூல், that science relating to the constituent principles in the bodily and mental organs, faculties, matter etc.—Hindu physiology.

**சடல நீர்,** மூத்திரம், urine; 2. வியர்வை, perspiration; 3. விந்து, semen.

**சடல வேலி,** முட் கொன்றை, thorny or prickly cassia—Caesalpinia scadens.

**சடல புடலம்,** திரண்டு பருத் திருப்பது, that which is developed to a big and bulky size.

**சடல முதல்,** உடம்பு பருத்தல், to grow fat or become corpulent.

**சடலம்,** உடம்பு, body; 2. பருத்த வுடம்பு, stout body, see சடம்.

**சடலம் விழல்,** உடம்பை விழுத்தல் அதாவது இறத்தல், losing the body i e., to die.

**சடலை,** see சடல புடலம்.

**சட வேதசாஸ்,** உடம்பை சுத்தி செய்கை, physical treatment.

**சட வறிவு,** சட பதார்த்தங்களைப் பற்றிய நூல், science which treats of the doctrine of matter—Physics.

**சட வத்து,** see சட வஸ்து.

**சட வஸ்து,** உயி ரில்லாத வஸ்து, inorganic substance as opposed to ஜீவிய வஸ்து, organic substance; 2. அசேதனப் பொருள், matter as opposed to சேதனம், spirit.

**சட வமுரி,** see சட வுப்பு; 2. மனிதர் உடம்பி லிருந்து கழியும் மூத்திரம், urine discharged from the human body.

**சட விரிப்பம்,** இரத்தம், blood.

**சட விரணம்,** காயத்தா லேற் பட்ட புண், a sore produced by an injury.

**சட வுப்பு,** உடம்பி லுண்டாகும் உப்பு, salt formed in the system; 2. உடம்பி லிருக்கும் உப்பு, salt contained in the system; 3. அமுரி அல்லது மூத்திர வுப்பு, uric salt; 4. see சமாதி யுப்பு.

**சட ஊறு,** உடலூறு, physical injury; injury sustained by the body.

**சட வேர்,** மல்லிகை, jasmine — Jasminum sambac.

**சடாகம்,** அரு நெல்லி, star goose-berry.—Phyllanthus distichus.

**சடா கிருஷ்ணு,** see சடா மஞ்சில்.

**சடாக் கரம்,** (சட + அக்கரம்) சடாட்சரம். (ச, ர, வ, ண, ப, வ,) the six mystic letters (SA, RA, VA, NA, BA, VA), attributed to the worship of God Subramaniya.

**சடாக் கரி,** தண்ணீர், water.

**சடாக்கினி,** உடம்புச் சூடு, animal heat.

**சடாங்கம்,** உடம்பி லுள்ள ஆறு அங்கங்கள் அதாவது ஆதாரம், the six mystic chakras or psychic centres of the human body. See சக்கரம்.

**சடா கம்சுதம்,** தெரியா மூலிகை, an unknown plant?

NOTE.—It is often confused with சடாகம்; but according to some writers, it is found to be a synonym of புளிச்ச கீரை, and this remains to be verified.

**சடாட் சரம்,** ஆறு மந்திர வெழுத்துகள், the six Mantric letters. See சடாக்கரம்.

**சடா தரிகம்,** கோரைப் புல், cyperus grass known as koray; 2. முத்தக் காசு, koray root—Cyperus rotundus.

**சடா தரம்,** அருநெல்லி, see சடாகம்.

**சடா தரன்,** see சடாகம்

**சடாதரி,** சவுரிக் கொடி; virginian silk — Periploca asclepidae; 2. சவுக்கு, whip tree—Casuariana litoralis.

**சடா தலிகம்,** மகிழ மரம், ape-face flower—Mimusops elengi; 2. பெரியதள் வாழை, large plantain tree. See பேயன் வாழை.

சடா நாரம், see சடாதாரம்.

சடாநாரி, கொடியார் கூந்தல்; அம்மையார் கூந்தல், Seetha's thread—Cuscuta reflexa C.f. எலிச் செவி.

சடா பலம், பனை மரம், palmyra tree—Borassus flliformis; 2. கூந்தல் பனை, talipot tree; elephant palm—Caryota urens.

சடா பூதம், சடாமாஞ்சில், Indian spikenard—Valeriana jatamansi.

சடா மாஞசாத்தினி, see சடா பூதம்.

சடா மாஞ்சில், மெத்தம் என்கிற புல்லினம். இது ஒர் கடைச் சரக்கு. சடை யுள்ளது, சற்று மஞ்சள் சாயலான கறுப்பு நிறம்; காரமான வாசனை யுள்ளது; சூடும், வரட்சியும் தரும். இச் செடி, இமாலயப் பிரதேசங்களிலும், சிக்கிம், நேபாளம், காஷ்மீரம், பூட்டான் ஆகிய இவ்விடங்களிலும் விசேஷமாய்ப் பயிராகும். இது எங்கும் கிடைக்க கூடிய கடைச் சரக்கு. இதற்கு சடா சுருளி, சடாமாசி, பெருங் கோரை, பெருங் கோரைக் கிழங்கு என்னும் பலபெயர். இது அங்குலகனமாயும், விரற் பருமனுயும், உட் புறம் நார் நாராயும், வசனையாயும், கைப்பாகவு மிருக்கும். புதிய சரக்கோ மிக்கக் காரமுடையது, நாட்பட விருந்தால் உளுத்துப் போம். சத்தும் போய்விடும். வலீரியன் என்கிற சீமை வேர்ச் சரக்குக் குள்ள குணங்கள் இதற்கு முண்டாதலால், ஐரோப்பாவில் ஆங்கிலேயர் சில சமயங்களில் அதற்குப் பதிலாக இதை உபயோகிப்பார்கள். ஆகவே, இதற்கு சீமை சடாமாஞ்சில் என்றும் ஒரு பெயருண்டு.

இதற்கு பல விருத்தி, கருகருப்பு, வலி போக்கி என்னும் குணங்கள் வாய்ந்தது. மயிர் வளர்தற்காக இதன் உலர்ந்த வேரை தயிலத்தில் சேர்த்தும், வாசனை வஸ்துக்களிலுமுபயோகப் படுத்தப்படும். இதை தண்ணீரிற் போட்டு வாலையி லிட்டு தீநீராக இறக்கியும், கஷாயமிட்டும், நரம்பு வியாதிகட்கும், மூர்ச்சைக்கும் கொடுக்க உபயோக மாகும். சூரணமாகச் செய்து சூதக வாயு, மூர்ச்சை, காக்கை வலி, இவை முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். இதன் தைலம் காக்கை வலிக் குபயோக மாகும். பாவனத் திரவமாகச் செய்து மேற்படி வலிக்குங் கொடுக்கலாம். மேலும் வாலையிலிட் டிறக்கிய எண்ணெய் மயிரை வளர்ப்பது மன்றி, அதை கறுப்பு நிறமாக்கும்.

சாதாரணமாக சடா மாஞ்சிலால் குட்டம், சிலந்தி விஷம், பழைய சுரம், உட் சூடு, வாயு பேதி, இரத்த பித்தம், கண்ணோய், காசம் இவைகளுக்கு உப யோகிக்கினும் இது விசேஷமாக மந்தாக்கினி, குடைச்சல், இருதயத் துடிப்பு, மேல் சுவாசம், முதலிய வைகளுக்கு இதர சரக்குகளுடன் கூட்டி, உபயோகிப்ப துண்டு. It is a bazaar drug called hair grass, valerian or Indian spikenard — Valerian jatamansi alias Nardostachys jatamansi alias Cyperus stoloniferus. This belongs to the genus of grass (graminaceae order) and has fibres matted like hair. It is yellowish dark; pungent smell, tends to lend heat and dryness to the body. The plant is found in abundance in the Himalayan regions, Sikkim, Nepaul, Cashmere, Bhutan etc. It is also procurable in all bazaars. It has several names as jatamansil, Fragrant cyperus, Himalayan valerian, Sparrow arsenic etc.

The drug consists of a portion of rhizome about the thickness of a finger; the central woody coloumn contains fibrous bundles with fragrant smell; tastes bitterish and aromatic. Fresh root has a very strong odour, but tends to decay if kept unused for a long time. The properties of this drug almost resemble those of valerian root and so, it is substituted for British valerian spikenard. The dried root is a tonic, stimulant, and anti-spasmodic; in combination with certain oils, a fragrant and cooling liniment for the head is prepared from it; it is also used in perfumes. A decoction of this root or distilled liquid is given for nervous complaints and swooning. Powdered drug is prescribed in cases of menstrual disorders, swoon, epilepsy, convulsive affections etc. Medicated oil and tincture are chiefly used for epilepsy. It yields on distillation an essential oil which has the power of promoting the growth and blackness of the hair.

Though this root is generally prescribed by mixing with other ingredients, and used in cases of leprosy, septic poison from ulcers, chronic fever, internal heat, flatulent diarrhoea, blood pressure, ophthalmia etc, it is particularly used with other drugs for dull appetite,

rheumatic boring pain; palpitation of the heart, hard breathing etc.

NOTE.—This should not be confused with the common valerian root of Europe—Valeriana officinalis, which resembles very closely with the former in chemical constitution. In the Susruta (ancient Hindu treatise on Medicine), it enters into a nostrum highly recommended in the treatment of epilepsy.

It also seems highly probable that the Nardus indicus of the ancients was different from the Jatamausi of the Sanskrit authors.

சடா முடி, see சடை முடி.

சடா முத்திரை, see சபா முத்திரை.

சடாய்த்தல், தோலின் அதாவது சருமத்தில் மருந்திடல், to apply or administer medicine to the skin.

சடாய்த் திருத்தல், கொழுத் திருத்தல், being fatty or corpulent.

சடாப்பு, கொழுத்த தன்மை, corpulency; fatness.

சடாலம், ஆல மரம், banyan tree — Ficus bengalensis; 2. தேன் கூடு, honey-comb.

சடாலு, செண்பகப் பூ, champak flower — Michelia champaka

சடாவேரி, see சதா வேரி.

சடுதி, சுக்கோலம், husk of cardomon seed.

சடுதி மரணம், திடீரென வுண்டாகும் சாவு, sudden death.

சடுதியம், குமிஞ்சான், Indian Ipecacuanha —Tylophora asthmatica.

சடுதி வீக்கம், திடீரென வுண்டாகும் அழற்சி அல்லது வீக்கம், an inflammation or swelling that comes on suddenly—Anceme.

சடுதிவு, see சடுதி.

சடு பஞ்சு, மாதுளை, pomegranate—Punica granatum.

சடுனை, வெண் நிலாவாரை, white senna; sulphur-flowered senna—Cassia glauca.

சடில மாஞ்சில் see சடா மாஞ்சில்.

சடிலம், see சடில மாஞ்சில்.

சடிலாசிடம், மூக் கொத்திப் பூடு, see கூந்தல் குதம்பை.

சடிலை, see சடா மாஞ்சி.

சடினம், வசம்பு, sweet flag—Acorus calamus; 2. நெட்டிவேர், root of sola pith; —Aeschynomene; 3. சடை மரம், sensitive pea tree—Aeschynomene indica.

சடு, அழுகல், to cry; 2. வயிறு, stomach 3. ஆறு, six.

சடுதி, see சடுதி.

சடுதி சாவு, திடீரென்று இறத்தல், sudden death.

சடுதி பேதி, சீக்கிரத்தில் பேதியாகக் கூடிய மருந்து, brisk purgative; 2. வாந்தி பேதி, cholera, occuring all on a sudden.

சடுதி மரணம், திடீரென்று இறத்தல், sudden death. See சடுதி மரணம்.

சடு ரசம், அறு சுவை, the six kinds of tastes.

சடுலம், மச்சம், mole on the skin; 2. அசைவு, movement; 3. நடுக்கம், trembling.

சடுவித வாதம் அறுவகை வாதம், the six kinds of rheumatic or nervous affections.

சடை, see சடாமாஞ்சில்; 2. வேர், root 3. வெட்டி வேர், khus khus root — Andropogon muricatus; 3. நெட்டி மரம், bastard sensitive plant; cork-tree—Aeschynomene aspera; 4. அடைப்பு stopper of a bottle; cork; 5. அடர்ந்த மயிர், thick or bushy hair; 6. விழுது, aerial root; 7, கற்றை, thick bundle; 8. சடைப் பயறு, which see; 9. இலா மிச்சை, aromatic grass — Andropogon muricatus; 10. see சடைச்சி.

சடைக் கஞ்சா, முறுகு கஞ்சா, இது ஓர் உயர்ந்த கஞ்சா. இதை யோகிகள் சிவ யோகத்தில் அமரும்போது மனதை ஒருவழிப் படுத்துவதற்காகவும், உடம்பை குளிர்ச்சிப் படுத்துவதற்காகவும் உபயோகப் படுத்துவார்கள், a superior quality of Bengal hemp. It is used by Siddhars and Yogees while sitting in yoga practice for concentrating the mind and also for cooling the system.

சடைக் கணவாய், கணவாய் என்ற ஓர் வகைக் கடல் மீன், a species of cuttle fish—Octapis vulgaris.

சடைக் கந்தம், வசம்பு, see சடினம்; 2. கந்தகம், sulphur.

சடைக் கரப்பான், ஓர் வகைக் கரப்பான், a crowded skin eruption — Strophulous confertus.

சடைக் காந்தாரி, மூக்கரைச் சாரணை, see காட்டுச் சாரணை.

சடைக் கிரந்தி, உடம்பில் பலவிடங்களில் குருக்கள் கூட்டமாக ஏற்பட்டு புண்ணாகி உடம்புத் தோல் தடித்துக் காணும் கிரந்தி, a form of psoriasis with confluent lesions, thickening the skin in several parts of the body.

சடைக் குட்டம், யானைக் குட்டம் அல்லது பெரு வியாதி. இதற்கு வடமொழியில் ஏக சரும குட்டம் எனப் பெயர், a kind of leprosy with thickening of the skin. See ஏகசரும குட்டம்.

சடைக் குலம், வெள்ளைக் குந்திரிக்கம், white dammer—Valeria indica.

சடைக் குறண்டி, சுமாலிக் குறண்டி, a species of coranday—Lepidagathis genus.

சடைக்கை, இலைக் கள்ளி, leaf-spurge—Euphorbia neiriifolia.

சடைக் கொடி, கெட்டி, pith plant.

சடைக் கோங்கு, மஞ்சட் கோங்கு, a kind of yellow cotton tree. See கோங்கு.

சடைச் சம்பா, கற்றை கற்றையாகக் காய்க்கும் ஓர் சிகப்பு சம்பா நெல், a kind of red chamba paddy with thick-set or dense ears or spikes.

சடைச்சி, கீரிப் பூடு, mungoose plant — Ophiorrhiza mungos; 2. கெட்டி, pith; 3. நீர்ப் பாசி, an acquatic plant—Ceratophyllum demersum; 4. புளியாரை, indian yellow wood-sorrel—Oxalis corniculata; 5. பொன் னிமிளை, gold pyrites; bismuth pyrites; 6. கருநொச்சி, black justicia—Justicia genus; 7. பொன் ஊமத்தை, Indian thorn-apple — Datura fastuosa; 8. சடைச்சிப் பூடு, sola pith plant; 9. செஞ் சடைச்சி; சிகப்பு கெட்டி, red pith—Grewia pilosa; 10, கப்புச் சடைச்சி, which see; 11. வாய்க்காற் சடைச்சி அல்லது கெட்டி, a pith found grown on the sides of canals — Aeschynomene palurosa; 12. கருமத்தை, black datura; 13. பேய்த் தும்பை, bitter leucas — Phlomis zeylanica; 14. சடைச்சிப் பூடு, matted hair plant; common Indian linden—Grewia tiliaefolia; 15. ஆத்தி, Bauhinia racemosa; 16. ஆற்றுச் சடைச்சிப் பூடு. இதுவே ஆற்று கெட்டி எனப்படும். இது ஆறு அல்லது நீரோடைகளில் விசேஷமாய் பயிராகும். வைத்தியத்திற்கு உதவா விட்டாலும், அலங்கார வேலைகளுக்கு மிக்க உபயோகமாகும். மேலும், கெட்டிக்குள் உஷ்ணம் பாயாது. ஆகவே, இதை ஐரோப்பியர்கள் டொப்பி அல்லது தலைப் பாகைகளுக்குள் அமைக்கப்படும், river pith—Aeschynomene aspera. It is largely grown near the shores of rivers and streams. Although, it is of no use in Medicine, it will be found extensively used for ornamental purposes. It is a bad conductor of heat and so, is much used for making pith-hats and pith-turbans.

சடைச் சிகா, மீன் கொல்லி, fish-killer—Anamirta cocculus; 2. மீனஞ்சு, rattle-wort—Crotalaria paniculata.

சடைச் சிகி, நீர்ச் சுண்டி, floating sensitive plant—Neptunia oberacea.

சடைச் சிகிரி, மிளகாய், chilli — Capsicum fruitescens.

சடைச்சி நெய், ஆறு, வாய்க்கால் முதலிய விடங்களில் நீரின்மேல் மிதக்கும் நீர்ப் பாசியினின் றெடுக்கும் எண்ணெய்ச் சத்து, an essence of oil extracted from green weeds or moss floating in rivers, canals etc.

சடைச்சி வேர், ஓர் பூடு, a plant – Achyranthes corymbosa; 2. see சடைச்சி.

சடைச் சண்டி, see சடச்சி.

சடைச் செந்நெல், see சடைச் சம்பா.

சடைத் தும்பை, முடித் தும்பை, a kind of leucas plant with thick set of flowers.

சடைத் தேங்காய் நார் மிகுந்த தேங்காய், coconut with thick fibres.

சடை நவ்வல், கசி நவ்வல் அல்லது சிறுநாவல், ruddy black plum—Eugenia rubicunda.

சடை நாங்கில், பெரு நாங்கில், large-leaved ironwood—Mesua (genus).

சடை நாய், உடலில் மயிர் அடர்ந் துள்ள நாய், a bushy dog.

சடைப் பயறு, மிகுதியாகக் காய்க்கும் பாசிப் பயறு, green gram with thick ears of corn — Phaseolus trinerveous alias P. farinosus. It is so called from its close cluster of pods.

சடைப் பருத்தி, செம்மண் பூமியில் பயிராகும் அடுக்குப் பருத்தி, a kind of superior dense cotton grown in red soil.

சடைப் பாசி, தடிப்பான ஓர் வகை நீர்ப் பாசி a kind of thick moss. See பாசி.

சடைப் புகையிலை, இலை மிகுதியாக விடும் புகையிலைப் பூடு, tobacco plant with thick set of leaves.

சடைப் புல், அடர்ப் புல், hairy grass, basket grass or squirrel ginger — Eragrostis bifaria ; 2. ஒட்டுப் புல், sticky grass.

சடைப் பூச்சி, மயிர்ப் பூச்சி, a kind of thick hairy cater pillar. See கம்பளிப் பூச்சி.

சடைப் பூண்டு, see சடைச்சி.

சடைப் பூம்பாதிரி, பூ மிகுதியாக விடும் பாதிரி மரம், trumpet flower tree with dense flowers — Stereospermum chelonoides.

சடைப் பூரான், மயிர்ப் பூரான், a hairy centipede.

சடை மாஞ்சம், மிளகு சாரணைக் கொடி, a creeper of Trianthema (genus).

சடை மாஞ்சில், see சடா மாஞ்சில்.

சடை முடி, சரக்கொன்றை, common cassia Indian laburnam—Cassia fistula.

சடை முடிக் கொத்து, see சடை முடி.

சடைமுடியோன் பழத்துள் வாசி, ஐவிரலி, bryony creeper—Bryonia laciniosa.

சடை யரசன், வாலைக் கெந்தி, stick sulphur; 2. குழாய் கெந்தி, roll sulphur.

சடையன், திரி திரியாக சிக்கலான மயிருள்ளவன், one who wears an entangled plait of hair.

சடையன் மூலி, நார் அல்லது மயிர் அடர்ந்த பூண்டு, any plant grown with thick set of fibres or hairs.

சடையா மாஞ்சி, see சடா மாஞ்சில்.

சடை யாறுதல், இளைப் பாறுதல், taking rest from fatigue : recreation.

சடை யிடல், புட்டிக்கு முச்சிட்டு அடைத்தல், to cork the bottle; to stop with a cork.

சடை யெருமை, மயிர் அடர்ந்த எருமை, a species of buffalo with thick hairs.

சடை யொட்டிப்புல் see சடைப் புல்.

சடை வளர்த்தல், பின்னலான மயிர் வளர்த்தல், to nourish an entangled plait of hair.

சடை வன்னி, உருத்திராட்ச மரம், Siva's bead tree — Eleocarpus tuberculatus; 2 ஓர் கற்ப மூலி, an unknown rejuvenating drug; 3. see சடைச்சி

சட்டை வாங்கி, தக்கை வாங்கி அதாவது புட்டியி லடைத்திருக்கும் தக்கையை வெளி வாங்கும் கருவி, a screw to draw out corks from bottles—Cork-screw.

சடை விழுதல், மயிர் சடையாகத் திரிந்து போதல், matted hair, forming into a net-work owing to shaggy growth.

சடைவு, மனதளர்ச்சி, depression of mind.

சடோபரம், புண் ஆற்றல், healing of sores; 2. அகரு, aloe wood—Agallocha.

சடோதரம், சீதபேதி, dysentery or flux; 2. செரியாத பண்டங்களினால் ஏற்பட்ட குடற் கோளாறு, disorder of bowels due to indigestive substances.

சட்குணம், அறு குணம், the six attributes or qualities of God.

சட் கோணம், அறு கோணம், hexagon.

சட்சமம், வரகு millet.

சட்சரணம், வண்டு, beetle.

சட்சு, கண், eye; 2. பார்வை faculty of seeing.

சட்சுகி, இடு கொள், four-leaved cassia — Cassia absus.

சட்சுசியம், ஆடுட்டுச் செடி, worm-killer plant —Aristolochia bracteata; 2. see ஒதிய மரம், Indian ash tree—Odina wodier; 3. see அலரி; 4. கண்ணுக் குகந்த, agreeable to the eyes; 5 கண்ணுக் கிடும் கலிக்கம், a collyrium extracted from a plant—Amomum antorhiza; 6. தாழை, screw-pine; 7. கீழ்ப் பூலா, water-poola— Phyllanthus multiflorus.

சட்ச தீட்சை, பார்வையினால் பரிசுத்தம் செய்தல், the first step in the process of initiation by gracious look, spiritual illumination.

சட்சு பீடை, கண் வலி, pain of the eyes.

சட்சு ரோகம், கண் ரோகம், diseases of the eyes.

சட்சுவை, அறுசுவை, the six kinds of tastes.

சட்டை வேர், வெள்ளைக் கரும்பு, white sugar cane.

சட் டகப்பை, தட்டை யகப்பை, flat ladle.

சட் டகம், உடம்பு, body; 2. வடிவு, shape or figure; 3. சவம், corpse; 4. படுக்கை, bed,

சட்டகன், பெருந் தூக்க முடையவன், one who indulges in excessive sleep — Hyper-somnambulist.

சட்டந் தட்டுதல், புனுகு வழித்தல், to extract civet from the anal pouch of civet-cat.

சட்ட முனி, see சட்டை முனி.

சட்டம், புனுகுச் சட்டம், the anal glands of a civit-cat; 2. ஓர் வகை மாணிக்கம், a superior kind of ruby; 3. உடம்பு, body; 4. வாய் மூலம், formula.

சட்டவட்டக் குள்ளன், உடற் குறை யில்லாத குள்ளன், a well-formed dwarf; a dwarf free from bodily defects.

சட்ட வட்டம், சுத்தம், tidiness, neatness.

சட்டால், மாவிலங்கு, sacred lingam tree—Crataeva religiosa; 2. வில்வம், Indian bael tree—Aegle marmelos.

சட்டி, மட் பாண்டம், earthen vessel spheroidal in shape; 2. ஆறு, six; 3. அறுபது, sixty; 4. எட்டு படி யளவு, (தேவை) eight measures; 5. தாமரை, lotus flower; 6. கருப்பு சட்டி, black earthen ware or pot.

சட்டி, மண் கலம், மண்ணின் குண தகைக் கருதி இது அடியிற் கண்டபடி பலவகைப் படும், mud utensils which differ as mentioned below, according to the materials used for their manufacture:—

1. களிமண் சட்டி, pot made of red porous clay.
2. பசலை மண்சட்டி, one made of common coarse mud (S. India).
3. கருப்புச் சட்டி, black earthen ware of Bangalore, made of fine dense clay containing both manganese and iron.
4. வெண் சட்டி, one made of decayed white granite (resembling cornish stone of England or the grawen of Germany).
5. பீங்கான் சட்டி, one made of Kaolin or the porcelain earth of China.
6. செம்பு சட்டி, copper pan of the shape of a pot.
7. போகிணிச் சட்டி, pan made of brass resembling a mud vessel in shape.

NOTE.—In ancient days, finer varieties of clay were used for making pots which were employed for preparing and storing medicines such as oils, acids, ointments, etc. Fire-clays and fuller's earth were also used for making pots or other vessels intended for melting purposes. Even glazed pottery had a high reputation for strength and durability in medical use.

The ancient earthenwares manufactured under several designs such as, காசிக்குப்பி, மூசை, புடமிடுஞ் சட்டி, தைலப் பாண்டி, கமலி மூசை, குகை etc. were employed in Indian Medicine for various purposes.

It is also highly probable that all these clays are in a way allied to Fullers-earth, the medical virtue of which is unambiguously pointed out in Tamil Siddha Medicine.

சட்டிகம், முட வாட்டிக் காய், an unknown tree?

சட்டிகா, தாமரை பூ, lotus flower.

சட்டிகி, பாய்க் கோரை, Koray grass used for making mats. See கோரை.

சட்டிக் கருணை, காறுக் கருணை, elephant-foot yam without acrid taste — Typhonium orixense.

சட்டிக் கல்பம், கொள், horse gram.

சட்டி சாட்டரணை, see சதுர சாட்டரணை.

சட்டி சுரண்டி, பற்றை வழிக்கும் கருவி, an instrument for scraping the remnants adhering to the bottom or to the sides of a pot; 2. பெண், referring to woman, used contemptuously.

சட்டித் தலை, பெரிய தலை, pot head; jolt head.

சட்டித் தலையன், பெரிய தலை யுள்ளவன், one with a large head; jolt-head person.

சட்டித்தலை யுள்ளான், தலைபருத்த உள்ளான், a variety of snipe with a large head.

சட்டித்தல், கொல்லல், killing.

சட்டித் தோசை, சட்டியில் வார்த்த தோசை, round rice-cake baked in an earthen pot.

சட்டி பானை, வீட்டில் புழங்கும் மட் பாண்டம், common earthen vessels and pots intended for domestic use.

சட்டிப் புல், அடர்ந்த புல், bushy grass.

சட்டி யப்பம், அரிசி மாவினாற் செய்த பணியாரம், cake made of rice flour.

சட்டியாதி சூரணம், திருநன் வேதப்படி, சுக்கு, மிளகு, கடுக்காய்ப் பிஞ்சு, கிச்சிலிக் கிழங்கு, யவட்சாரம், சதுர சாரம், மோடி, வில்வ

பழம், இவைகளைச் சூரணித்து எலுமிச்சை ரசத்தில் இந்தப் பிட்டுச் கலக்கி, சூரணத் துடன் சாப்பிட விசேட்பேடிச் கிராணி போம், (*In Ayurveda*), a medicinal powder prepared with the following drugs viz;—dried ginger, black pepper, young gall-nut, orange root, impure carbonate of potash, *sathi* salt, long pepper and beel fruit: and then the product is mixed in a solution of lime juice and Sindh salt. It is prescribed for chronic diarrhoea.

**சட்டியாதி கங்காயன குடிநீர்**, குன்மத்திற்காக தயாரித்த ஓர் ஆயுள் வேத மருந்து, an Ayur Vedic preparation for dyspepsia.

**சட்டி பொட்டி**, பெருவாய் மீன், a sea-fish—Engralis mystax.

**சட்டிரச வர்க்கம்**, அறுசுவையுண்டி, the six palatable tastes comprised in a meal; a meal prepared of stuffs with 6 kinds of tastes.

**சட்டிரவம்**, நாத வேளை, see சட்டை.

**சட்டி வட்டு**, கப்பல் வள்ளிக் கிழங்கு, alligator yam—Ipomaea digitata.

**சட்டினி**, சட்டிணி (Hindi) அதாவது நாவகைத் துவையல், a condiment paste used as a relish in food.

**சட்டு சந்தம்**, வசம்பு, sweet flag.

**சட்டேகம்**, see சடேகம்.

**சட்டுவம்**, அகப்பை, ladle; 2. கரண்டி, metal spoon.

**சட்டு வருக்கம்**, அறு சுவை, the six flavours used in food; six tastes.

**சட்டை**, நாதவேளை, five-leaved cleome—Cleome pentaphylla; 2 பாம்பு சட்டை, slough or the cast off skin of a snake especially cobra, 3. உடம்பின் மேற்றோல், epidermis or scarf-skin of the body; 4 மானிட வுடம்பு, human body; 5. பத்து மணங்கு நிறை, weight of ten maunds; 6. சிறகு, wing of a bird.

**சட்டை கக்கல்**, see சட்டை கழற்றல்.

**சட்டை கக்கி**, see கரு நொச்சி; 2, see மலைக் கன் விருட்சம்; 3. உடம்பின் மேற்றோல் உரியச்செய்யும் மருந்து அல்லது மூலி, any drug or medicine capable of exfoliating the skin; 4. நச்சுப் புல், poisonous grass.

**சட்டை கழலல்**, மேற்றோல் உரிதல், to come off as a slough from the living part of the skin.

**சட்டை கழற்றல்**, சித்தர்களும், முனிவர்களும் இளமையதாகத் தோற்றும்படி காய கற்பம் சாப்பிட்டு உடம்பில் சுருங்கிய மேற்றோ லுரியச் செய்தல், casting off the scarf-skin so as to appear young, by taking drugs intended for rejuvenation. This is done by Yogis and Siddhars; 2. பாம்புச் சட்டை யுரிதல், to cast off the skin or sloughing, as a snake.

**சட்டை கழற்றி**, see சட்டை கக்கி; 2. மருத மரம், murdah tree—Terminalia alata.

**சட்டை தள்ளல்**, மேற் றோல் உதிரச் செய்யும் ஓர் நோய், a disease marked by exfoliation of the epidermis or outer-skin—Ichthyosis serpentina. See சட்டை கழலல்.

**சட்டை நாதன்**, see சட்டை முனி.

**சட்டை நொச்சி**, கரு நீல நொச்சி, black-blue notchi; willow-leaved justicia—Justicia gendarussa.

NOTE.—There is another superior variety which is really *black*, but it is very rare. It is a rejuvenating drug.

**சட்டை போக்கல்**, see சட்டை கழற்றல்.

**சட்டை முனி**, ஓர் ஆதிகாலத்து சித்தர் இவர் அகஸ்தியர் மாணாக்கர். இவர் வாதம், வைத்தியம், யோகம், ஞான மார்க்கமாக அனேக நூற்களை பாடி யுள்ளார். இவர் கம்பளிச் சட்டை தரித் திருந்த காரணத்தால் இவருக்கு கம்பளிச் சட்டை நாதரெனப் பெயர். கைலாச சட்டை நாதர் அல்லது கைலாச நாயனார் எனவும் பெயர்களுண்டு. இவர் சீர்காழியில் சமாதியானவர், a very ancient Siddha of the Agastiyar's school of thought. He is the disciple of Agastiya Muni. He is the author of various works on Alchemy, Medicine, Yoga and Philosophy. He is known by several names as mentioned above. He attained Samadhi in Shiyali (Tanjore Dist).

**சட்டை யுரித்தல்**, see சட்டை கழட்டல்.

**சட்னி**, ஊறுகாய் அல்லது துவையலைப் போன்ற கண்டாக்கி, a chutney like pastry prepared as an adjunct to food. See சட்டினி.

**சட்பதம்**, ஆறு கால், six-legged; 2. வண்டு, beetle.

**சட்பலம்**, ஆறு வகை கடைச் சரக்கு, the six kinds of bazaar drugs.

சட்பதாதி, சண்பகம், champak flower—Michelia champaka ; 2. மா மரம், mango tree —Mangifera indica.

சட்பம், இளம் புல், tender grass ; 2. see சட்பராசி ; 3. மயிர், hair ; 4. பசும் புல், green grass ; 5. அறுகு, sacred grass—Agrostis linearis.

சட்ப ராசி, அறுகம் புல், bermuda grass — Cynodon dactylon ; 2. நாணல், reed. See சர்ப்ப ராசி.

சட்பித்து தயிலம், ஆயுர் வேத முறைப்படி, தலை நோய் முதலிய சிரோ ரோகங்களுக்கு தயாரித்து மூக்கில் ஆறு துளி யிடும் ஓர் தைலம், an Ayur Vedic preparation of medicated oil, 6 drops of which are administered into the nostrils in case of cerebral complaints.

சட்ரச நிகண்டு, வடமொழி நூலி னின்று மொழிப் பெயர்த்த ஷட்ரச நிகண்டு என்னும் நூல். இதை தமிழ் நூலில் நளபாகத்திற்கு ஒப்பனையாகச் சொல்லப் பொருந்தும். இதில் அறு சுவையில் இன் னின்ன பதார்த்தம் இன் னின்ன சுவை யுள்ளது என்பவைதயும் கூறும், a vocabulary translated into Tamil from Sanskrit. It is similar to the science of cookery compiled by Nala. It treats about the classification of different substances according to six different tastes.

சட்ரசம், அறு சுவையோடு கூடிய உணவு, food consisting of six different tastes.

சட்னி, சுண்டாங்கி, relish ; 2. துவையல், half-pickle. See சட்னி.

சணகம், கடலை, Bengal gram ; 2. கறுப்புக் கடலை, a black variety of Bengal gram ; 3. புளியாரை, Indian sorrel—Oxalis corniculata.

சணகி, மூங்கில், bamboo—Bambusa arundinacea.

சண கெந்தம், செருந்தி,

சணச்சிச் சுரம், புளியாரை, see சணகம்.

சணஞர், see சணல் நார்.

சணத்திலே கல்லுப்பு கட்டி, கருஞ் சோங்கி, an unidentified plant so called from its virtue of consolidating common salt in a moment ?

சணத்திலே லோக வேதிச்சி, கரு வெரசி, see சட்டை நீக்கி. It is so called because of its usefulness in Alchemy for transmutation of inferior metals into gold. See சண பேதி.

சணத்தில் சித்தி, சோழித்தலை செந்தி, red sulphur.

சண புட்பம், கெபத்திகை, an unknown plant ?

சண புட்பிகை, கிலு கிலுப்பை, rattle-wort—Crotalaria laburnifolia.

சண பேதி, சணப் பொழுதில் உலோகங்களை பேதித்து பொன்னாக்கு மருந்து, medicine capable of transmuting metals into gold in a moment.

சணப்ப நார், சணல் நார், Indian hemp fibres —Crotolaria juncea.

சணப்பு, சணல், hemp ; flax. See சணம்பு ; 2. புஞ் சணல், the soft luxuriant plant of Indian hemp.

சணப்புக் குந்தம், மருள், bowstring-hemp — Sansiviera roxburghiana.

சணப்பை, see சணல்.

சணப் பொழுது, நொடிப் பொழுது, moment's time ; in an instant.

சணமம், புளியாரை, see சணகம்.

சணமாலி, இலவு, silk cotton — Bombax malabaricum.

சணம், கடலை, Bengal gram ; 2. see சணல் ; 3. தருப்பைப் புல், sacrificial grass ; 4. சணப் பொழுது, a point of time.

சணம்பு, சணல், hemp, flax — Crotolaria juncea.

சணம் பூசிதம், முட் சுண்டை, prickly shoonday—Solanum giganteum.

சணல், வக்கு நார். இது ஒரு சிறிய செடி, 4-8 அடி உயரம், செங் குத்து, கிளை களுண்டு, முசு முசுப்பா யிருக்கும் ; இலைகள் ஒடுக்கமா யுள்ளது, பூ மஞ்சள் நிறம், வருஷ மெல்லாம் பூக்கும், மணற் பாங்கான நிலத்தில் வளரும். காயில் அநேக விதைக ளுண்டு. இதன் விதை இரத்தத்தை சுத்தி செய்யும், மயக்கத்தை யுண்டு பண்ணும், வாத நோய்களுக்குதவும், பெண்களுக் குண்டான இளங் கருப்பத்தைக் கரைக்கும், இலையை அரைத்து கட்டிகளுக்கு வைத்துக் கட்ட உடையும் கஷாய மிட்டுக் கொடுக்க சரும நோய், கரப்பான் இவைகள் போம். மேலும், பெண்களுக்கு இக் கஷாயத்தைக் கொடுக்க மாத விடாய் சீக்கிரம் வெளிப்படும். இதன் நாரை முலையில் வைத்துக் கட்ட பால் சுரப்பு வற்றும், Indian hemp. It is known as Madras hemp—Crotalaria juncea alias

Erotolaria juncea. It is a small plant 4–8 ft. high, erect and branched; clothed with hairs; leaves narrow; flowers yellow; flowering all round the year; generally grown on sandy oils; legumes many-seeded. Seeds used in medicine to purify the blood; narcotic and it is used in rheumatism. It will abort the just developed embryo in females; an application of the pulverised leaves will open abscesses; decoction of the leaves is a cure for s' diseases and carpsung (eruptions) in children; and when it is given to women, it will bring out the suppressed menses. The fibres of the root will suppress or arrest the secretion of milk when applied to woman's breasts. See சணப்பு சணல்

NOTE.— The fibre of this plant is very possibly known in India from the most ancient time. A very extensive series of vernacular names will point out particularly to this plant viz.—Sanah, shanambu, shanappu, shanappam etc. They are mentioned even in the laws of Manu. Although it is found wild in some other parts, it is indigenous to India. The fibre forms an important trade in commerce

சணல் நார், புளிச்சற் கீரை அல்லது காசினிக் கீரையி லிருந்து எடுக்கும் ஓர் வகை நார், fibres taken out from sour greens or chicori plant; 2. சணப்பு நார், fibres of Madras hemp.

சணற் சேதிகம், see முத்திருக்கும் செடி.

சணற்ப நார், see சணல் நார்.

சணற்ப, புஞ் சணப்பு, the luxuriant plant of Indian hemp.

சணுய்த்தல், காம மிக்க கொள்ளல், to be inflamed with lust; to grow lewd.

சனுவை, கையாந் தகரை, eclipse plant — Eclipta prostata.

சனைத்தல், கொழுத்தல், to become stout; growing fatty.

சண்டகம், see சண்டகன்.

சண்டகன், see இலிங்க பாஷாணம்; 2. பேடி, impotent man; eunach.

சண்டகி, பெரு முத்தக் காசு, a big variety of koray-root—Cyperus pertanui.

சண்டத்துவம், புருஷத்துவம் அதாவது ஆண் தன்மை யில்லாமை, impotency.

சண்டபானு ரசம், சீத சுரத்துக்கு கொடுக்கும் ஆயுள் வேத மருந்து, an Ayurvedic medicine prescribed for fever from chillness or cold.

சண்டப் பை, கருப் பை, womb; uterus.

சண்டப்பை நாத கருப்பம், ஒரு பிண்டம் கருப் பாசயத்திலும், மற்றொன்று நாதா சயத்திலும் உண்டாகும் கருப்பம், pregnancy with one fetus in the uterus and another in the ovary—Utero-ovarian pregnancy.

சண்டப்பை யுதர கருப்பம், ஒரு பிண்டம் கருப் பையிலும் மற்றொன்று அடி வயிற்றிலும் காணும் கருப்பம், pregnancy with one fetus, in the uterus and another in the abdominal cavity—Utero-abdominal pregnancy.

சண்ட மற்கடி, பூனைக் காஞ்சொறி, climbing nettle mercury — Tragia involucrata (cannabina).

சண்ட மாருதக் குழம்பு, வாத சுரம், பாண்டு, தலை வலி முதலிய ரோகங்களுக்கும், பிளவை, புண் புரை, விரணம் முதலியவை களுக்கும் போகர் நூலிற் சொல்லியபடி தயாரித்த ஓர் வகை மருந்துக் குழம்பு, a semi-solid all-healing mixture prepared in accordance with the recipe mentioned in Bogar's work. It is prescribed for diseases such as, rheumatic fever, dropsy, headache etc, and is also used for carbuncle, sores, ulcers, cancers, wound etc. in proper vehicles or mediums.

சண்ட மாருதக்கன், வேங்கைப் புலி, man-eater.

சண்ட மாருத சிந்தூரம், அகத்தியர் நூலிற் சொல்லியுள்ள ஓர் வகை செந்தூரம், a preparation of calcined red oxide contemplated in Agastya's works.

சண்ட மாருத சூரணம், பெண்கள் பிள்ளை பெறுவதற்காக பிரசவ வலி காணுவதற்கு முன்னம் கொடுக்கு மருந்து. இதனால் பிள்ளை கஷ்ட மில்லாமல் சுகமாய்ப் பெறுவார். அன்றியும், இதனால் நெஞ் சடைப்பு, வீக்கம், விரை வாதம், குன்மம், சுவாசம், சன்னி, வாயு இவைகளும் தீரும், a medicinal powder prescribed chiefly for pregnant women just before the commencement of labour which will be rendered easy afterwards and end in safe delivery. Moreover, it is also given in cases of angina pectoris, swelling, hernia, dyspepsia, asthma, apoplexy, delirium, flatulency etc

சண்ட மாருதம், பெருங் காற்று, tempest; 2. பெருங் காற்றைப் போல் நோய்களை வேரறக் களையும் மருந்து, any medicine capable of rooting out diseases from the system just as tempest does with trees.

சண்டமாருத விருட்சம், see, துரிய மரம்.

சண்டம், கருப்பம், womb; 2. கொடுமை, severity; 3. எருது, bull; 4. சாதிலிங்கம், vermilion; 5. பேடு, impotency; 6. வலிமை, strength; 7. அலித் தன்மை, hermaphroditism; 8. பூனைக்காலி, cowitch — Mucana pruriens; 9 வெள் அறுகு, white doob grass — Eniscostema littorale; 10. ஓர் வாசனை, a perfume; 11. காமி, a passinate woman.

சண்ட யோனி, மாதவிடாய் இல்லாமலும் மார்பு வளராமலும் இரண்டும் ஒட்டி யுலர்ந்தும், யோனித் துவாரம் சொர சொரப்பாயு முள்ள பெண்குறி. இவ்வித குற்றங்கள் கருப்ப காலப் புணர்ச்சியால் பிறக்கும். இவள் புருஷனை எப்போதும் விரும்பாள், the genital of a woman characterised by suppression of menses, shrinking of breasts without development and roughness of the vaginal canal, which is felt at the time of coition. These defects are due to having intercourse during the period of pregnency, and as a result of which, she will never have a desire for sexual intercourse subsequently.

சண்ட ரசம், ஓர் வகை இரச பற்பம், a compound of mercury oxide.

சண்ட வேகம், மிகு விரைவு, excessive speed as in the beating of pulse.

சண்டன், கடுங் கோபி, ill-tempered person; 2. அலி, male hermaphrodite; 3. புளிய மரம், tamarind tree; 4. பேடி, impotent man or eunach.

சண்டா, அலரி, oleander—Neriam odorum.

சண்டாதகம், அவுரி, see சண்டாதம்.

சண்டாதம், அவுரி, indigo plant—Indigofera tinctoria.

சண்டாளக் கரு, கழுதைக் கொழுப்பு, ass'es fat.

சண்டாளம், பேய், demon.

சண்டாள ரோகம், குட்டம், leprosy.

சண்டாள விஷத்தி, கசப்புப் பசளை, bitter spinach.

சண்டி, see, சண்டிக் கீரை;—2. இலைக் கச கெட்ட மரம், lettuce tree—Pisonia alba; 3. அலிப் பெண், female hermaphrodite; 4. நாண மில்லான், shameless fellow; 5. மழுக்கினி, one who has become hard or incorrigible by being beaten too frequently.

சண்டிக் காய்ச்சல், விடா சுரம், a chronic fever; persistent fever.

சண்டிக் கார், ஓர் சிவப்பு அரிசி நெல், a kind of paddy yielding red rice.

சண்டிக் கீரை, சமைக் கீரை விசம். இது ஓர் மரத்தின் இலை. இது வாதம், வாதப் பிடிப்பு, சூலை, இடுப்பு வலி முதலிய நோய்களுக்கு உபயோகப் படும். ஆகவே, இதை கீரையாகச் சமைத்துச் சாப்பிடுவ துண்டு, lettuce — the leaves of a tree. It is used in cases of rheumatic complaints, gout, lumbago etc; and so leaves are cooked and used in food as greens.

சண்டிச் சுண்ணம், காரமில்லாத சுண்ணாம்பு, lime devoid of its caustic property.

சண்டித் தனம், மழுக்கற் றனம், becoming hard and obdurate by being beaten too frequently.

சண்டிப் புண், ஆறாத புண், a chronic sore.

சண்டிப் புழு, உடம்பை விட்டகலாத புழு, a persistent parasite which cannot be got rid of, from the body; 2. ஓர் வயிற்றுப் புழு, a worm in the stomach or intestines.

சண்டி மரம், see கல் தேக்கு.

சண்டு, பதர், chaff; 2. புகை பிடிக்கும் அபினி சேர்ந்த உண்டை, a preparation from opium named *Chandu* used by gunjah smokers.

சண்ணடக்ரச் சூரன், கோழி, fowl; 2. சேவல், cock.

சண்ணக் கடா, கொழுத்த கடா, a fat sheep.

சண்ணத் துருக்கவேம்பு, செவ்வத்தை, globular-flowered neem—Cipadessa fruticosa. See சன்னத் துருக்க வேம்பு.

சண்ணம், ஆண் குறி, penis.

சண்ணல், புணர்தல், to copulate; 2. மிதமிஞ்சி யுண்ணல், to eat like a glutton; eating to excess; 3. தாக்குதல், to attack as disease.

சண்ணித்தல், பூசுதல், smearing.

சண்ணுதல், see சண்ணல்.

சண்பக நாவல், வாசனை யுள்ள நாவல் பழம், a fragrant jamboon fruit — Eugenia jambosa.

சண்பகப் பாலை, ஓர் வகைப் பாலை, Ceylon laurel—Litsaea zeylanica.

சண்பக மொக்கு, மலராத சண்பகப் பூ, champak bud—Michelia champaka.

சண்பகம், சம்பங்கி பூ மரம். இதற்கு வண்டுறங்கா மரமென்றும் பெயர். மரம் 30-40 அடி உயரம், அநேக இதழுண்டு; இலைகள் மாறி மாறி யிருக்கும்; பூக்கள் சிறிய காம்புகள் உடையன; அநேக விதைகளுண்டு; பெரிய பூக்கள், மஞ்சள் நிறம், வாசனையா யிருக்கும். இம் மரம் பெரியது, நிழலை தரக் கூடியது. கோவிலில் வைத்து பயிராக்கப் படும்; பூ விஷ்ணு பூசைக்குதவும். இப் பூ மிக வாசனை யுள்ளதால், தேனீ இதனருகே அண்டாது; பூ தலையில் முடித்துக் கொள்ளலாம். வேர்ப் பட்டை கசப்பு, சசப்பு, புளிப்பு. இதை பொடி செய்து சூதகப் போக்குண்டாக்க கொடுப்பதுண்டு. பூக்களை எண்ணெயிட்டு மூக்கி லிருந்து வரும் கெட்ட வாசனை யுள்ள சளிக்காகவும், வாத வலி, தலை சுற்று, கண்ணோய், சூலை இவைகளுக்காகவும் உபயோகப் படுத்துவதுண்டு. இதன் சமூலம் உத்தேபன மருந்தாகக் கொள்ளலாம். பழம் தின்னலாம். பட்டையி லிருந்து சம்பங்கி எண்ணெய் தயாரிப்பதுண்டு; விதைகள் புழுக்களை கொல்லும். பூவின் ஊறல் கஷாயம் சுறுசுறுப்பையும், பூரண சக்தியையும் கொடுக்கும். அன்றியும், குன்மம், ஒக்காளம், சுரம், பிரமேகம், சக்கிலம், கண்ணோய் முதலியவைகளுக்கும் கொடுக்கலாம். விதையின் எண்ணெயை வயிற்றிற்குப் பூச உப்பிசத்தைப் போக்கும். இதன் காய்ந்த வேரும், வேர்ப் பட்டையையும், அரைத்து தயிரில் குழப்பி கட்டிகளுக்குப் பற்று போடலாம். வேரானது உஷ்ணம், சுரம், கண்ணோய் இவைகளை நீக்கி பசியை யுண்டாக்கும். இலைச் சாற்றை உட் கொள்ள உடம்பி லுள்ள புழுக்களைக் கொல்லும். தேனுடன் கலந்து வயிற்று வலிக்குக் கொடுக்கக் குணமுண்டாகும். இதன் கொழுந் திலையை இடித்து தண்ணீரி லூற வைத்து கண்ணிற்குள் விட பார்வை யுண்டாகும். இப் பட்டையின் கஷாயம் சுர வேகத்திற்குக் கொடுக்கலாம். ஆகவே, கொய்னாவிற்குப் பதிலாக இதை உபயோகப் படுத்துவதுண்டு. இம் மரத்தில் அநேக விதங்களுண்டு, அவையாவன, golden-flowered champak, Indian magnolia. It is also known as Sampangy or Beetles foe—Michelia champaca alias M. rheedii. It is a tall evergreen tree 30-40 ft. high; petals numerous; leaves alternate; flowers on short peduncles; seeds several; flowers large; yellow, lemon-coloured and fragrant. It is a large shady tree; common and cultivated in temples. Flowers offered in temples especially to Vishnu; its aromatic scent is so strong that bees never light or sit upon it. Bark of the root, bitter, red and very acid; when pulverised, it is an emmenagogue; flowers beaten up with oil, applied to fetid discharges from the nostrils; also applied in acute rheumatism, vertigo, ophthalmia and gout; all parts are powerfully stimulant; fruit edible; flowers used to ornament and perfume the hair; bark yields sampangy oil; and the seeds destroy vermin.

An infusion of the flowers is advocated as a stimulant, tonic and carminative; and is also used in cases of dyspepsia, nausea, urinary disorders, seminal waste, ophthalmia and fevers. The oil of the seeds rubbed over the abdomen relieves flatulence. The dried root and root bark mixed with curdled milk makes a useful application to abscess. The root itself is used for internal heat, fever, ophthalmia and for appetite. The juice of the leaves acts as vermifuge. It is given with honey to relieve colic. Tender leaves contused and macerated in water and instilled into the eyes are said to relieve the vision; decoction of the bark is administered in cases of paroxysm following a fever; and hence, it can be safely used as a subtitute for cinchona. The several varieties of this tree are viz:—

1. நீலகிரி சண்பகம், Nilgiri champak—Michelia nilagirica.
2. நாற்றச் சண்பகம், fetid champak—Mappia foetida (tomentosa).
3. காட்டுச் சண்பகம், white champak—Michelia genus.
4. சிறு சண்பகம், a tree with small flowers of the species of No. 1.
5. நாக சண்பகம், another variety of champak.

For other varieties see under சம்பங்கி.

Note.—The bitter aromatic bark of this tree approximates in properties to that of Magnolia glauca of North America. It is also employed in the treatment of low intermittent fevers.

Further trials with this bark therefore appear desirable. The flower should not be confounded with—Artabotrys odoratissima (மனோரஞ்சிதம்), which is quite a different one. It is also considered as a curative in cases of haemoptysis, and is also said to have both cooling and heat-making potency and to subdue the deranged Kapham (phlegm). There is also another tree of the same name champauk—Mappia tomentosa, of the species of அரலி known as—Mappia foetida.

சண்பகம், கொடிச் சண்பகம், creeper champak — Pergularia genus; 2. சிறு சண்பகம், small champak—Canangium odoratum.

சண்பசாதிப் பிரண்டை, முப்பிரண்டை, a species of adamantine creeper having three corners or faces—Vitex genus.

சண்பங் கோரை, see சம்பங் கோரை.

சண்பு, see சம்பங் கோரை

சண்முகக் கொடியோன், கோழி, fowl; 2. சேவல், cock.

சண்முக சாலம், அகஸ்தியர் செய்த நூற்களிலொன்று, one of the several treatises compiled by sage Agastiya; a book on Magic.

சண்முகத் திராவகம், கொங்கணவர் வாத காவியத்திற் சொல்லியுள்ள ஓர்வகைத் திராவகம். இது மூலிகைச் சுட்ட சாம்பலைக் கரைத்து தெளிவிறுத்து, அத்துடன் சீனம், வெடியுப்பு முதலிய கடைச் சரக்கு உப்புகளையும் சேர்த்து வாலையிலிட்டுக் காய்ச்சி வடித்த திராவகம். இதனால் சாரம், வீரம், ரசம் முதலிய ஓடும் சரக்குகளெல்லாம் கட்டும், an acid preparation contemplated in Konganava works on Alchemy. It is obtained by distilling a solution of salts filtered from a mixture of ashes, combined with the salt sold in the bazaars such as, alum, nitre etc. It is useful for binding or consolidating volatile substances such as, sal ammoniac, corrosive sublimate, mercury etc., which evaporate when heated.

சண்முக ரசம், சகல குலை நோய்களுக்கும் கொடுக்கப் படும் ஓர் ஆயுர்வேத மருந்து, an Ayurvedic medicine given for all kinds of gout, acute rheumatism and colic.

சண்முகி முத்திரை, சிவ பூசையில், பெருவிரல்களால் காதுகளையும், நடு விரல்களால் கண்களையும், அணி விரல்களால் மூக்குத் துவாரங்களையும் மறைப்பது அல்லது அடைப்பது, a kind of symbolical expression of fingers in the worship of Shiva. It is performed by blocking the ears with the thumb, the eyes with the middle finger, and the nostrils with the two ring fingers.

சதகண்டம், பொன், gold.

சதகம், தான்றி மரம், devil's abode—Terminalia bellerica; 2. சாதிக்காய், nutmeg—Myristica fragrans; 3. குதிரைச் செவி, horse-ear plant; 4. நூறு, hundred; 5. கூழை மிக்குவம், Cathery mardah—Terminalia tomentosa (coriacea).

சதகரம், சாதிக்காய் see சதகம்.

சத காசம், நுரையீரல் கோளாறடைந்து இரும்பும்போது இரத்தம் வெளி வருவதுடன் மார்புவலி, கொதிக்கும் வலி முதலிய குணங்களைக் காட்டும் ஓர்வகைக் காச நோய், a kind of asthma affecting the lungs. It is marked by bloody discharge followed by soring pain in the chest; 2. இரத்தம் கக்கும் இருமல், cough attended with vomiting of blood—Hemoptysis.

சதகுப்பி, இதன் இலையே சோயிக் கீரை எனப்படும். இதற்கு சதகுப்பை என்றும் பெயர். இது 2-4 அடி உயரம், இலைக் கொழுந்து நூலைப்போல் மிருதுவாக விருக்கும், அடித் தண்டு வெண்மையான உரோமங்கள் உள்ளது; மடல் வட்டம், சாய்கீனம், அடர்த்தி, இதற்குள் இரண்டு விதைகளுண்டு; பூக்கள் மஞ்சள் நிறம். இக் கீரை கறிகளில் உபயோகப் படும்; விதைகளை கறி மசாலையில் சேர்ப்பார்கள். இவ் விதைகளை நசுக்கி தண்ணீரில் கொதிக்க வைத்து, வாதம் பிடிப்பு முதலிய மூட்டு வியாதிகளுக்கும், வீக்கத்திற்கும் உபயோகப் படுத்தப்படும்; வெந்நீரிலிட்டு எல்லா வயதினர்க்கும் கொடுக்கலாம். அதைப் பெண்களுக்கு அதிக அவசியம், ஏனெனில், வயிற்றுப் பொருமல், அசீரணம், வயிற்று வலி, முதலியவைகளுக்குக் கொடுக்க குணமாகும். இதை வாலையி லிட்டு நீர் இறக்கி, தலைவலி, விக்கல், வயிற்று வலி, சல தோஷம், கர்ப்பிணிகளுக்குச் சுரம் இவைகளுக்குக் கொடுக்கலாம். வாலையி லிட்டு இறக்கிய விதையில

வல்லோய் மேற்கண்ட ரோகங்களுக்கும் உப யோகப்படும். இலைகளுக்கு எண்ணெய்ப் தடவி வதக்கிக் கட்ட, கட்டிகள் உடையும், இதன் விதைகளைத் தண்ணீரில் கொதிக்க வைத்து மூட்டு வீக்கங்களுக்கு ஒத்தடம் கொடுக்க உபயோகப்படும். அச்சப்பாலுடன் இதன் விதைகளை அரைத்து அதிசாரத்திற்கு கொடுக்கலாம், bishop's weed; common dill—Anethum graveolens alias A. sowa. 3-4 ft. leaflets filiform, stem curved with white pubescence, petals roundish: fruits long, compressed containing two seeds; flowers yellow. It is useful in cookery. Seeds form a chief ingredient in curry-powder. When bruised and boiled in water, the seeds are applied externally in cases of rheumatism and swelling; a decoction of seeds is useful for children and men of all ages. It is highly useful to women in confinement especially in cases of rumbling of the stomach, indigestion, colic etc.; the distilled dill-water (Aqua anethi) of this seed is much valued in cases of headache, hiccough, abdominal pain, cold, earache, rectal inflammation etc. Essence of oil (oleum anethi) from the seeds is prescribed by Veidyans for the above mentioned complaints. Leaves are used externally for abscesses to hasten suppuration by applying them warm and moistened with oil. The seeds boiled in water prove to be useful for fomenting in cases of affections of the joints; when ground and mixed with the sap or juice of the fig-tree, it proves a useful remedy in diarrhoea.

**சதகுப்பி சக்களத்தி**, காட்டுச் சதகுப்பை. இது ஓர் கடைச் சரக்கு, a wild plant akin to common dill—Anethum graveolens. It is a bazaar drug.

**சதகுப்புகம்**, முருங்கை, Indian horse radish—Moringa pterygosperma.

**சதகும்பம்**, பொன்மலை, mountain from which gold is dug out.

**சதகுபா**, see சதகுப்பை.

**சதக் காசிதம்**, முல்லைப் பூ, smooth jasmine—Jasminum trichotomum.

**சதக் குமரா**, ஓர் வகைக் காரைச் செடி, a kind of webera—Canthium genus.

**சதக் கிரதம்**, மின்னல், lightning.

**சதக் கிராணி**, ஓர் வகைக் கழிச்சல், a kind of diarrhoea.

**சதக்கிலு**, அரக்கு, sealing wax; shellac.

**சதக்கினி ரோகம்**, கண்டத்தினுள்ளே சதை வளர்ந்து பல முள்ளுகளைப் போல் எழும்பி, இரும்புத் தண்டைப் போல் வீங்கிக் கடினமடைந்து, தொண்டையை அடைத்து சுரம், வலி, இவைகளை யுண்டாக்கும் ஓர் கண்ட ரோகம். இது திரிதோஷத்தினால் பிறக்கும். இதில் அநேக விதங்களுண்டு. எல்லாம் அசாத்தியமாக முடியும், a disease of the throat in which the inner muscles become hard by the obstruction of the jagged membrane, edged like an iron weapon beset with fleshy excrescences, which are formed along the inner lining of the throat pipe. It is due to the derangement of the three humours of the body—Diphtheria. There are different varieties which will all be found incurable and sometimes fatal.

**சதக்கேசம்**, நீரடி முத்து, hydrogogue nut—Hydnocarpus inebrians.

**சதங்கம்**, குளிர்ச்சியைத் தரும் அறுவகை சரக்குகள், அவையாவன—வெட்டிவேர், கோரைக் கிழங்கு, பற்பாடகம், பேராமுட்டி, சந்தனம், சுக்கு, the six cooling drugs viz.—cuscus root, common sedge-grass root, sparrow leg, fragrant sticky mallow, sandalwood and dry ginger.

**சதங்கை**, சிறுமணி, small beads; 2. சதுரக்கள்ளி, square spurge—Euphorbia antiquorum.

**சதங்கைக் கொதி**, உலையில் நீர் புனலென்று சப்தத்தோடு கொதித்தல், the agitation caused in boiling by sending up bubbles with a violent motion—Ebullition.

**சதங்கைப் பூரம்**, see சதங்கைப் பூரான்.

**சதங்கைப் பூரான்**, ஓர் வகைப் பூரான், a kind of centipede with several links.

**சத சஞ்சீவி**, நீண்டகாலம் உயிரோடிருப்பவன், long-lived person; one living for one hundred years or more—Centenarian. See சஞ்சீவி.

**சத சதத்தல்**, சொத சொதத்தல், becoming muddy and moist.

**சதசதப்பு**, ஈரம், dampness, as of soil or mire.

சத் சத்து, உள்ளதும் இல்லாததும், that which is real and unreal; 2. ஆத்துமா, the soul; 3. உயிர், life.

சதச பகந்திரம், ஆசன வாயிற் காணும் பவுத்திரத்தை சரிவர சிகிச்சை செய்யாததினால், மறுபடியும் கிளைத்துக் குதறி, கிருமிகளுண்டாகி ஆசனவாயைச் சுற்றிலும் அரித்திடும், a kind of fistula *in ano* which, if not properly treated or neglected, will develope ulcers and the worms which are bred, burrow the anal orifice.

சத சல்லியம், பல விதத்திலும் ஏற்பட்ட தொல்லை, worry or trouble from various sources.

சத சிருங்கம், நூற்றுக் கணக்கான அடையாளங்கள், hundreds of innumerable symptoms.

சத சுக்கிலம், கரு விழியிலாவது பார்வையிலாவது காயம் படுவதா லேற்படும் கண்ணோய். a disease of the eyes due to an injury to the iris or to the lens.

சத சுலோகம், பதார்த்த குணங்களைப் பற்றிய நூறு பாட்டுகளடங்கிய ஓர் ஆயுள்வேதநூல், an Ayurvedic materia medica written in 100 stanzas, treating of plants and drugs.

சத சுலோகி பண்டிதன், பதார்த்த குணத்தில் தேர்ச்சி யடைந்த வைத்தியன், one who is well-versed in Materia Medica; 2. வைத்தியத்தில் நிபுணன், a skilful or an expert physician.

சதச் சதம், தச்சன் குருவி, wood-pecker; 2. வெண்ணாரை, white cormorant.

சதஞ் சீவி, நூறாண்டு வரை சீவிப்பவன், a person living for 100 years; 2. நெடுங்காலம் உயிர் வாழ்வோன், long-lived person.

சதத சுரம், பகலில் ஒருதரம், இரவில் ஒரு தரம் வரும் சுரம். இதனால் அதிக உணவு கொள்ளும், fever occurring once in the day and once in the night; and in such cases, one is inclined to take more food; 2. எப்பொழுதும் சுரம் காய்தல், Kala-azar or tuberculosis in which there is always a rise of temperature. See சந்தத சுரம்.

சததம், சந்ததம் அல்லது எப்பொழுதும், always.

சத தளம், தாமரை, see சத பத்திரம்.

சத தாரை, இடி, thunder.

சதத்துவம், சுபாவம், nature; 2. சுபாவப் பழக்கம், second nature.

சத் பதம், நூறு கால்களை யுடைய செந்து, any creature or insect with 100 legs; 2. பூரான், centepede.

சதபதி, சாணிப் பூரான், centepede which originates in the dung of animals; 2. நாட்டு மரவட்டை, wood-louse.

சத பதுமம், see சததளம்.

சத பத்திரம், தாமரை, lotus flower; so called from its containing 100 petals; 2. கிளி, parrot; 3. மயில், pea-cock; 4. தச்சன் குருவி, see சதச் சதம்; 5. வெண்ணாரை, see சதச் சதம்; 6. வறட் சுண்டி, see சதபத்திரி.

சத பத்திரா, ஆடு தின்னாப்பாளை, see சத பத்திரி.

சத பத்திரி, தாமரை; see சத பத்திரம்; 2. ஆடு தின்னாப்பாளை, ulcer plant — Aristolochia bracteata; 3. நரிப் பயறு, fox-gram; jackal-gram—Rothia trifoliata; 4. கஸ்தூரி ரோஜா, musk rose flowers — Rosa moschata; 5. புழுக் கொல்லி, worm-killer, same as No. 2.

சதபரு, வெள்ளை நீர் முள்ளி, white-flowered water-thistle—Hygrophila spinosa.

சதபருவ தூதா, கருப் பருகு, see சத பருவம்.

சத பருவம், நீர்முள்ளி, blue-flowered water-thistle, see சதபரு; 2. கருப் பருகு, dark panic grass—Cynodon genus.

சத பர்வம், பல கணுக்களை யுடைய கரும்பு, a sugarcane with several knots or joints.

சத புட்பம், see சத குப்பை; 2. எருக்கு, madar plant—Calotropis gigantea; 3. பிற புண்டரீகம் அதாவது அல்லித் தாமரை, white Indian water-lily—Nymphae lotus; 4. சதாப்பிலை, which see.

சத புட்பி, சதகுப்பி, dill plant—Peucedanum Sowa; 2. அக்சருகி, toon-tree—Cedrela toona.

சத பேதி, வாத முறையில் நூற்றுக் கொண்டு பேதித்தல், (*In Alchemy*) transmutation of metals effected in the proportion of 100 : 1.

சதபேதி காணல், நூற்றுக் கொண்டு சேர்க்க வாதம் காணல், seeing, that transmutation of metals is effected after experimenting with the proportion of 100 : 1.

சதபேதி திட்டம், நூற்றுக்கொண்டு கணக்குள்ள மதிப்பு, calcination based on the estimated proportion of 100 : 1.

சதபோனக பகந்தர விரணம், ஓர் வகை விரண நோய். இது சாதாரணமாய் ஆசனத் தண்டை காணும். இதனால் அனேக பகந்தரக் கட்டிகள் பழுத் துடைந்து, புற்றைப் போல் சிறு சிறு துவாரங்க ளுள்ள விரணங்கள் ஏற்பட்டு, அவைகளினின்று கெட்ட நாற்றத்தோடு சீழ், இரத்தம் வடிந்து சலம் ஒழுகும், a kind of anal fistula. The term is generally applied to sinuses burrowing under the skin with several openings, but here, chiefly to fistula in ano. It is attended usually with discharge of pus and blood with fetid smell due to the oozing of watery or serous fluids constantly.

சத போனகம், ஆண் குறியில் ஏற்படும் ஒரு கிரந்தி நோய். இதனால் குறி முழுவதிலும் சிறு சிறு துவாரங்கள் ஏற்பட்டு இரத்தம் வடிந்து மூத்திரம் வெளிப் படும் போது அதிக எரிச்சலை யுண்டாக்கும், a kind of syphilis or chancre marked by small perforating ulcers on the penis with bloody discharge and giving rise to extreme burning sensation while urining.

சதப் பிராசம், அலரி, oleander — Nerium odorum.

சதமுகக் குருவி, ஓர் வகைக் குருவி, a mystic sparrow?

சத மூலம், see சத மூலி.

சத மூலி, தண்ணீர் விட்டான் கிழங்கு, water root—Asparagus racemosus.

சதம், இடி thunder; 2, இலை, leaf; 3. நூறு, hundred; 4. திலக மரம், அல்லது தயில மரம், sandal wood tree; 5. ஓர் நாணயம், a coin; 100 cents; 6. இறகு, feather; 7. நித்தியமானது, that which is eternal or permanent.

சதம்பவாசி, கற்பூரி பாஷாணம், a kind of native arsenic; a mineral poison.

சதரி, நாட்டு அதிமதுரம், Indian or country liquorice—Abrus precatorius (root of).

சத ரோகம், see சத போனகம்.

சத ரோணிதம், கந்தகம், sulphur.

சதர்ச்சி, சதுரக் கள்ளி, square spurge — Euphorbium antiquorum.

சதவல், சதுப்பு நிலம், damp soil; 2. குப்பை, rubbish; dirt.

சத விசர்ப்பி, ஆயுத முதலியவற்றால் காய மடைந்தவர்களுக்கு, இரத்தம் கெட்டு நடிக்கும் போது, எண்ணிறந்த கருநிற செந்நிற கொப்புளங்களை யுண்டாக்கும் ஓர் விசர்ப்ப நோய், innumeral red and blue septic vesicles on the skin due to the contamination of blood with putrefied matter, arising from wounds caused by weapons.

சத வீரியம், வெள்ளறுகு, bermuda grass—Exacum physsopifolium.

சத வீரு, ஓர் மல்லிகை, Arabian jasmine—Jasminum sambuc.

சத வீருகம், முந்திரிப் பருப்பு, cashew-nut — Anacardium occidentale.

சத ஊசிக் காந்தம், பத்து அல்லது அனேக ஊசிகளைப் பிடிக்கும் காந்தம், a magnet having the power of attracting ten or several needles.

NOTE.—*(In Siddha Medicine)* The several gradations in the Magnet are differentiated or otherwise distinguished by the prefix viz.—சதஊசி, ஏழூசி, மூஊசி, etc. which is only an indication to show the attracting power of the Magnet to the number of needles hanging one below the other.

சத வேதிரம், புளிவஞ்சி, a sour plant?

சத வேலி, see சதாவேரி.

சதனம், இலை, leaf; 2. இறகு, feather; 3. நீர், water; 4. வீடு, house.

சதனயம், வெள்ளை மொச்சை, white bean.

சதன ரோகம், குழந்தைகட்கு ஆசனத்தி லுண்டாகு மோர் வித விரணநோய். இது வயிற்றில் புளித்த மலம் சேருவதாலும், அதிசார ரோகத்தாலும் பிறக்கும். அப்பொழுது குதஸ்தானத்தில் மொத்தையைப் போல் சிவந்த விரணத்தை எழுப்பி, நமைச்சலையும், வலியையு முண்டாக்கும், sores or ulcers in the anus or rectum, in children. It is due to accumulation and retention of old stools in the intestines or to diarrhoea; and it is marked by inflammation of the part, local itching and pain —Prurigo.

சதா, எப்பொழுதும், always; constantly.

சதா அவம், சோம்பு, anise seed—Anisum.

சதா கதி, ஓயா நடை, constant walk; un ceasing movement; 2. காற்று, wind in perpetual motion; 3. நிர்வாணம், nakedness; annihilation.

சதா காசம், மாங்கிஷபேதி, a mineral capable of curing overgrowth of flesh in the system or ordinarily dissolving flesh.

சதா காலம், எப்பொழுதும், always; at all times; 2. சந்ததம், eternity; endless past or future time.

சதா குறை, குக்கில், Indian gum or resin —Vateria indica.

சதாக்கினி, எரிச்சலை யுண்டாக்கும் கொடுக்குள்ள தேள், scorpion with a fiery sting.

சதா சர்வ காலம், சந்ததம், eternity; 2. எப்பொழுதும், always.

சதா சிவத்தி, சீனக் காரம், alum— Alumen.

சதா சிவம், சவர்க் காரம், fuller's earth; 2. ஆகாயம்; sky; 3. மூளை, brain; the cerebral region.

சதாசிவன் பெண்டீர், கந்தகம், sulphur; 2. கௌரி; see சங்கரன் பெண்டிர்.

சதா சிவன் மிடறு, துரிசு, blue vitriol; copper sulphate or acetate.

சதாசிவன் மூலி, கஞ்சா, gunjah plant.

சதா சிவன் வாசம், பொன் மலை, mountain containing gold ore, 2. கைலாச மலை, Mount Kailas.

சதா சைவம், ஒருக் கொம்பு, an unidentified plant?

சதாச்சி, சதுரக் கள்ளி அல்லது நான்முகக் கள்ளி, square-spurge—Euphorbia antiquorum.

சதாநபம், எருக்கு, madar plant — Caltropis gigantea.

சதா பச்சை, எப்பொழுதும் பச்சையாகவே காணப்படும் பூடு, an ever green plant.

சதா படம், எருக்கு, see, சதாநபம்.

சதா படலம், எருக்கு, madar plant —Caltropis gigantea.

சதாபதி, மர வட்டை, a kind of millipedes; wood louse, see ஆயிரங் காலி.

சதா பத்திரம், தாளிச பத்திரி, East Indian plum—Flacourtia cataphracta.

சதா பத்திரி, see சத பத்திரி.

சதா பரி, தங்கம், refined gold; pure gold.

சதா பரிகம், எருக்கு, see சதாபடலம்.

சதா பரி மாற்று, see சதாபரி.

சதா பருவா, நீர்முள்ளி see சத பருவம்.

சதா பல சித்தி, வேம்பு, neem or margosa tree—Azadirachta indica.

சதா பலம், அத்திமரம், fig tree—Ficus glomerata; 2. எலுமிச்சை, a lemon or lemon tree — Citrus-medica-acida, so called from its yielding fruit constantly; 3. வில்வ மரம், bael tree — Aegle marmelos; 4. தென்னை மரம், cocoanut tree.

சதா பலை, இதுவே சதாப்பிலை. இவ் விலையினால் பால் மாந்த சுரம், கணைப் பேதி, கப வமனம், பிரசவ வேதனை இவைகள் போம். பசி தீபனம் உண்டாம், the leaves of rue plant which are useful in cases of fever arising from milk indigestion, vomitting or ejecting phlegm in children and pangs of child-birth during delivery. It also promotes hunger. See சதாப் பிலை.

சதா பாத நடை, அதிக கால் நடை, அதாவது எப்பொழுதும் நடந்து கொண்டே யிருத்தல். இதனால் தேகக் காந்தி, சுக்கில தேக புஷ்டி, பலம் முதலியன மத்திபமாம். அன்றியும், சுக்கில வீனம், கிழத் தன்மை யுண்டாம். Constant or excessive walking which tend to lessen the bodily lustre, strength and bulk. It usually causes not only premature old age, but also tends to lessen the secretion of semen.

சதா புசம், வண்டு, beetle; 2. ஓர் வண்டினம், a kind of beetle—Scarab; 3. சதா ஒலியிடும் வண்டு, humming beetle.

சதா புடம், எருக்கு, madar plant—Caltropis gigantea.

சதா புட்பி, முல்லை, smooth jasmine — Jasminum trichotonum; 2. எருக்கு. இது வெள்ளை, சிகப்பு, என இரண்டிற்கும் பொருந்தும், madar plant — a term referring to both the varieties red and white.

சதா புட்பிலி நாபம், செம்மரம், red wood tree. See சதா புட்பினி.

சதா புட்பினி, செம் மரம், Indian red-wood tree—Soymida febrifuga.

சதா புயம், வண்டு, beetle.

சதா பூடம், எருக்கு, see சதா புடம்.

சதாப்பன், எருக்கு, see சதா புட்பம்.

சதாப் பிலை, இதற்கு அருதா அல்லது அருவதா, செதாபலை, சதாப்பு என்றும் பெயர். இது ஐரோப்பாவிலும், தென் அமெரிக்காவிலும், நமது நாட்டில் அனேக வீடுகளிலும், தோட்டம், கொல்லைகளிலும், தொட்டி

யிலும் வைத்து பயிரிடப் படும். இதன் இலை பச்சை, சாம்பல் நிறம்; இதற்கு எண்ணெய்ப் பசை யுண்டு; வாசனையும், சிறு கசப்பு முள்ளது; கசப்பும், குமட்டலும் வாய்ந்தது. உடம்பிற்கு உஷ்ணமும், கிருமிகளை அழிக்கவும் செய்யும் தன்மையது. அதிக அளவில் விஷத் தன்மையது. இலையை இடித்து சாராயத்திற் கலந்து சருமத்தில் கட்ட, தோல் சிவந்து பாரிச வாயுவை ஒருவிதமாய் குணப் படுத்தும். கர்ப்பிணிகளின் கருப் பையை வெளிப் படுத்து மென சிலர் அபிப்பிராயம். இது இருமலால் வருந்தும் நோயாளியிருக்கு மிடத்தில் தூபம் போட வுதவும். அன்றியும், சூதகக் கட்டு, சீதபேதி, காக்கை வலி, வயிற்று வலி, முதலியன குணமாகும். குழந்தைகளுக்குக் குளிய லாட்டும் போது உடம்பில் பூசவ தண்டு; இசிவுக்குக் கொடுக்கவும் உதவும். மேலும், சில இலையுடன் மிளகு சேர்த்து அரைத்து முலைப் பாலில் கலக்கிக் குழந்தைகளுக்குக் கொடுக்க கோழையை அகற்றும். இது தங்கத்தை பற்ப மாக்கும், இச் செடியில் தோன்றும் புழுவை நல்லெண்ணெயி விட்டு ஓமம் சேர்த்து வெயிலில் இட்டு மூக்கில் சில துளிவிட பீனிசம் போம், herb grace or Rue—Ruta graveolens. It is a small shrubby plant cultivated in Europe and S. America; and in our country in gardens and backyards, as a pot-herb. Its leaf is green, ash-coloured, has a peculiar strong odour, acrimonious and bitter in taste, nauseous. The leaves are medicinally stimulant, carminative, stomachic, antispasmodic and emanagogue; poisonous in large doses; leaves powdered and mixed with spirit and applied to the skin cause inflammation; but it is a cure in cases of paralysis; it is also used in abortion. They are used for fumigating rooms of asthmatic patients; moreover, it is a cure for suppression of menses, dysentry, epilepsy, stomach ache, etc.; they are applied externally when giving a bath to a child; juice mixed with bazaar drugs is prescribed for children's fits. The leaves ground with pepper and mixed in women's breast milk, is given to children to bring out phlegm. The plant is used for calcining gold. The worm found in this plant mixed with ajowan is soaked in gingelly oil and used as nose drops for nasal catarrh after exposing the oil to sun-shine.

Note.—The essential oil distilled from this herb is used as a stimulant to the uterine and nervous system; and is also given in hysteria and amennorrhoea. The drug ordinarily is a stimulant and antispasmodic in large doses; it acts as a narcotic poisoning. Externally it acts as a rubefacient. It is an abortifacient to pregnant women.

The tincture of fresh leaves can be used with advantage in the initial stage of paralysis. In most parts of India, Rutea angustifolia—a closely allied species is cultivated in gardens in India; and it is held in high esteem in the same way as Ruta graveolens esteemed in Europe.

சதாப்பு, (in Hindi) ஓர் பூண்டு, a plant—Trifolium indicum; 2. சதாப்பிலை, rue leaves—Ruta graveolens.

சதாப்பு யிலை, see, சதாப் பிலை.

சதாப் பூ, see சடைப் பூம்பாதிரி.

சதா மலகி, தாளிச பத்திரி, see சதா பத்திரம்.

சதா மூர்க்கம், புழுக் கொல்லி, herb of repentence—Ruta graveolens.

சதா மூர்க்கியம், பேய்க் கொம்மட்டி, bitter cucumber—Citrullus colocynthus.

சதா மூலம், ஓர் வகை தண்ணீர் விட்டான் கிழங்கு, a kind of water-root — Asparagus racemosus.

சதாமூலி, முலாம் பழம், melon fruit.

சதா மூலிகம், see சதாமூலி.

சதாயுசு, நூறு வயது, age of 100 years.

சதாயு சோன், நூறு வய துடையோன், one aged 100 years — Centenarian; 2. கிழவன், an old man; 3. வயது முதிர்ந்தவன், an elderly person.

சதாரு குட்டம், ஓர்வகைக் குட்டநோய். இதில் சிவப்பும் கறுப்புமாக அநேக கொப்புளங்கள் எழும்பி, உடம்பு முழுவதும் பரவி, காடி கட்டி இரணங்களாக மாறும். அதில் எரிச்சல், வலியுடன் கிருமிக ளுண்டாகி மிக்க தொந்தரவு கொடுக்கும். இது சிலேட்டும வாதத்தா லுண்டாகும், a kind of leprosy. It is characterised by red and dark eruptions which afterwards assume the form of chronic ulcers, (*phagedenic*) followed by developement of microbes (bacillus leprae) with burning sensation and pain. It is said to be caused by the concerted action of the two humours - phlegm and wind in the system.

சதா ருஷ்ய குட்டம், see சந்தாரு குட்டம்.

சதாரை, சதுரமான ஓர் வகை ஆரைக் கீரை, a water plant called sweet green — Marsilea quadrifolia. It is so called from its 4 sides.

சதாவரி, பாம்பு கொல்லி, plant curing snake-bites; 2. தண்ணீர் விட்டான் கிழங்கு, see சதாவேரி.

சதாவரி மண்டூரம், மண்டூர பற்பத்துடன் தண்ணீர்விட்டான் கிழங்கு ரசத்தோடு,பால் பசு நெய் இவைகளைக் கலந்து, ஆயுர் வேத முறைப்படி சமைத்து, வாதபித்த பரிணாம சூலைக்குக் கொடுக்கும் ஓர் மருந்து, an Ayurvedic medicine prepared by mixing up calcined ironstone with the juice of water-root, milk, cow's ghee in due proportions. It is prescribed for colic and gout arising from deranged humours viz. wind and bile, in the system.

சதாவளி, வெள்ளைக் காக்கணம்,white-flowered mussell-shell creeper—Clitoria ternatea (*albiflora*); 2. see சதாவாதம்.

சதா வாதம், நீராத வாதம், chronic rupture.

சதா வாந்தி, குழந்தைகளுக்கு ஓயாது அல்லது அடிக்கடி உண்டாகும் வாந்தி, incessant or frequent vomitting in infants or children.

சதா வியர்வை, பித்தாதிக்கத்தினால் உடம்பில் எப்பொழுதும் வியர்த்தல், the constant perspiration due to excess of bile in the system.

சதா வுட்காருகை, எப்பொழுதும் உட்கார்ந்திருக்கும் பழக்கம். இதனால் மூலம் அல்லது மூலக் கடுப்பு, அதிதூலம், கண் ரோகம், அக்கினிமந்தம், இவைகளுண்டாம், sedantary habit promoting irritation of rectum, piles, corpulency, eye-complaints, dull appetite etc.

சதாவுதல், அழுகல், rotting ; decaying.

சதா வெழுச்சி, வெள்ளை முதலிய மேக நோயினால், ஆண் குறி அடிக்கடி எழும்பி வலியையுண்டாக்கு மோர் நிலைமை. இது பெண்மேல் மோகம் அல்லது நினைவு கொள்ளாமலே ஏற்படும், persistent painful erection of the penis unattended by sexual desire or concuspiscence—Priapism.

Note.—This should not be confounded with Satyriasis—a term referring to erection due to lasciviousness or lust occuring in males. Such a condition occuring in females, is known as Nymphomania.

சதா வேதி, சுக்கான் கீரை, a kind of sour sorrel—Rumex vesicarius.

சதா வேதை, Ceylon lead-wort—Plumbago Zeylanica.

சதா வேரி, வட தேசத்தில் விளையும் ஓர் வகைத் தண்ணீர் விட்டான் கிழங்கு, a kind of water-root grown in Northern India—Asparagus racemosus.

Note.—It should not be confused with Asparagus sarmentosis, a similar variety with the same properties, obtained in Southern India known as in Tamil தண்ணீர் விட்டான் கிழங்கு.

சதாவேரிக் கியாழம், (ஆயுர் வேதப்படி) தண்ணீர் விட்டான் கிழங்கு, காச தர்ப்பை,நெருஞ்சில், நிலப் பூசணி, கரும்பு, பேயாவாரை இவைகளைச் சேர்த்து போடும் கஷாயம். இதனால் மூத்திரக் கிரிச்சரம் குணமாகும், (*In Ayur Veda*), a decoction prepared with water-root, sacrificial grass, small caltrope, ground pump-kin, sugar-cane, bitter Cassia as chief ingredients. It is prescribed for stricture of urine.

சதாவேரிக் கிருதம், தண்ணீர் விட்டான் கிழங்கை ஆதியாகக் கொண்டு, மற்ற மூலிகைச் சாறுகளுடனும், கடைச் சரக்கு சூரணத்துடனும், நெய்யுடன் கலந்து பக்குவப்படுத்திய ஆயுர் வேத மருந்து. இது மூத்திர நோய்களுக்குக் கொடுக்கப் படும், an Ayur Vedic medicinal ghee prepared with water-root as a chief ingredient along with juices of other plants combined with the powdered bazaar drugs and boiled in ghee. It is given for urinary complaints.

சதாவேரிக் கிழங்கு, நிலப் பனைக் கிழங்கு, root of ground palm—Curculigo orchioides; *C.f.* சதா மூலம்.

சதாவேரிச் சூரணம், தொற் கம்மலுக்காக கொள்ளும் தண்ணீர் விட்டான் கிழங்குச் சூரணம், a medicinal powder made of water-root and prescribed for sore-throat.

சதானகம், இடுகாடு, burial ground; 2. சுடுகாடு, cremation ground.

சதானபம், see சதாதபம்.

சதானம், பருத்தி, cotton-tree—Gossypium herbaceum.

சதி, சோறு, boiled rice; 2. உடன் கட்டை ஏறல், self-immolation of a widow;

ascending a funeral pyre; 3. கற்புடையாட்டி, chaste woman.

சதி கொலை, பதி கொலை, deliberate murder.

சதி செய்தல், தீங் கிழைக்க சூழ்ச்சி செய்தல், surprisingly lying in wait; designing or plaining to do harm to a life.

சதிச் சாரம், சோற் றுப்பு, common salt.

சதி நாகம், மூங்கி லரிசி, bamboo sago—Bambusa arundinacea (Seed of).

சதிரக் கள்ளி, see சதுரக் கள்ளி.

சதிரம், ஓர் கக்கரி, a kind of cucumber; 2. உடம்பு, body.

சதிரவம், see சதிரம்.

சதிரா கூலி, ஆவாரை, tanner's cassia—Cassia auriculata.

சதிராசா, பாரப்பை அல்லது பரம்பை மரம், suma tree—Prosopis spicigera.

சதிரி, செம்பை, sesbane—Sesbania aegyptiaca.

சதிரேகம், கார்போக வரிசி, psoralea seed—Psoralea corlifolia.

சதிலகா, ஆவாரை, see சதிரா கூலி.

சதீலகி, மூங்கில் see, சதீலம்.

சதீலம், காற்று, wind; 2. மூங்கில், bamboo.

சதீலிகி, முள்ளுக் கத்திரி, prickly brinjal—Solanum xanthocarpum.

சதீனகம், பயறு, pulse; 2. மொச்சை, Indian bean—Dolichos genus; 3. see சதிரா கூலி.

சதீனம், see சதீனகம்.

சதுக மரம், இது உடம்பை இறுகச் செய்து பலத்தை யுண்டாக்கும் ஓர் காய சித்தி மூலிகை, an unknown tree which is said to invigorate the system. It is a rejuvenating drug.

சதுகம், பெருங் காயம், asafoetida; 2. மண்டை வெலும்பின் அடி பாகம், the bottom portion of the skull; the bone forming the base of the skull—Sphenoid bone; 3 கடுக்காய், gall-nut—Terminalia chebula.

சதுக வெலும்பு, கபாலத்தி னடியில் முள்ளுக விருந்து, கபாலத்தி னுள்ள எல்லா எலும்புகளுடனும் பொருந்தி அவைகள் உறுதிப்பட இணையுறும் எலும்பு. இது இறக்கை விரிந்த வௌவாலைப் போ லிருக்கும், a bone forming the base of the skull and resembling a wedge (bat-wing shaped)—Sphenoid bone. It locks together most of the other bones in the skull and keep them firm. See சதுகம்.

சதுகளளி, திருகு கள்ளியின் புல்லுருவி, a parasite grown on twisted spurge—Euphorbia tirucalli.

சதுகாசி, see சதுக மரம்.

சது காயம், பெருங் காயம், asafoetida.

சது காரம், see சதுக மரம்.

சதுக்கினி, இசங்கு, four-spined monetia—Azema tetracantha.

சதுங்கம், பறவை, a bird.

சதுச்சகம், சந்தனம், அகரு, கஸ்தூரி மஞ்சள், கஸ்தூரி இவைகள் சேர்ந்த குழம்பு, an unguent of four ingredients viz.—sandal, agallochum, musk turmeric and musk.

சதுட்டம், வால் மிளகு, tail-pepper—Piper cubeba.

சதுட் பாதம், நாற்கா லுள்ளது, quadrupeds; four-legged animal; 2. நாய், dog.

சது தாரம், சுவாதிட்டானம், one of the six mystic centres of the human body in the genital region. See சக்கரம்.

சதுப்பு நிலம், சேற்று நிலம், marshy land; swampy soil; 2. புல் வெளி, grassy plot or tract—Moor.

சதுமணி நோய், மச்சையைப் போக்கும் ஓர் எலும்பு ரோகம், a disease of the bone depriving the marrow See மச்சை.

சதும்பை, பேய் மருட்டி, devil frightener—Anisomeles malabarica.

சதுரகக் கள்ளி, see சதுரக் கள்ளி

சதுர கிரி, இது கொல்லி மலையின் தொடர்ச்சி, சேலத்தி லிருந்து மதுரை ஜில்லா வரையுள்ளது. இதில் சித்தர்கள் வசிப்பதாகச் சொல்லப் படும். அனேக அபூர்வ மூலிகைகளும் உண்டு, it is a mountain or hill range extending from Salem to Madura, which is said to be frequented by Siddhars and to be the seat of many rare drugs.

சதுரக் கள்ளி, சதுர்முக வேதி யென்னும் ஓர் வகைக் கள்ளி. அடிமரம் கணுக்கள் வாய்ந்தது, நேராகவும் நான்கு மூலைகளாகவு முள்ளது. இம் மூலைகளில் முள்ளுகள் வாய்ந்த

புடைய புண்டு. காம்புகளில் மூன்று பூக்க ளிருக்கும். பூக்கள் பச்சை நிறங் கலந்த மஞ்சள், அடிமரத்தி லிருந்து உறைப்புள்ள பால் வடியும். இது காடுகளிலும் மைதான முதலிய வெளிகளிலும் முளைக்கும். கொல்லி மலையில் விசேஷம்.

பொதுவாகவே, இதற்கு கரப்பான், சுமைச்சல், காணுக்கடி, விஷ ரோய், வாத குன்மம் இவைகளை பேதி மூலியமாய் நீக்கும் குண முண்டு. இதன் வேர்ப் பட்டைக்கு விரேசன குண முண்டு கிளைகளில் வடியும் பாலை நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து வாதப் பிடிப்பு, பல்வலி, சூலைநோய். முதலியவை நோய்களுக்கு மேற்பூச்சு மருந்தாக உபயோகப் படும். இதன் வேருடன் பெருங்காயம் சேர்த்து வயிற்றுக் கிருமியினால் வருந்தும் குழந்தைகளுக்கு வயிற்றின் மேல் பூசலாம். இதன் பாலுடன் எண்ணெய் கலந்து மலக் கட்டுக்காக உள்ளுக்குக் கொடுக்க பேதி யாகும். அன்றியும், இப் பாலினால், குட்டம், காணுக்கடி, சூலை, வாதப் பிரமேகம், வாதாதிக்கம், கிருமி விரணம், இவைகள் போம். இதற்கு உறைப்பும். மயக்கம், பேதி, வாந்தியையும், உண்டாக்குந் தன்மை யுடையதால் மிக்க சாக்கிரதையோடு உபயோகப் படுத்த வேண்டும். அடிமரத்தின் பட்டையைக் கஷாயமிட்டு சூலை நோய்க்குக் கொடுக்கப் படும். அன்றியும், நரம்புநோய், பாண்டு, பாரிச வாய்வு, செவிடு, கண்குருடு, முதலிய நோய்களுக்கும் உபயோகப் படும். பாலும் இதின் பிசினும் எண்ணெயிற் கலந்து கண்டமாலை, கிரந்தி, நீரா விரணம், முதலிய நோய்களுக்கு மேற் பூசலாம். சூலைக் கட்டு, வாத வீக்கம், யானைக் கால், கீல் வீக்கம், இவைகளுக்குக் கள்ளிப் பாலை மேலே தடவி, வேரின் மண்ணை எடுத்து அதன்மேல் தூவ வுண்டு. இதன் பட்டை நரம்பு சிலந்திக்கு வைத்துக் கட்டலாம். உறைந்தபாலை உள்ளுக்குக் கொடுக்க மேகரோகங்கள் நீங்கும்; இதன் விதை பாஷாணத்தைக் கட்டுவதாகக் கருதப்படும், square spurge; ancient spurge—*Euphorbia antiquorum*. Its stem jointed, erect, four-angled; *angles furnished with protuberances* of two short spines; peduncles usually with three flowers; flowers greenish yellow. *It is very common in forests and* tract of waste land especially in the mountain or hill ranges of 'Kollimalai' extending from Salem (Eastern ghauts).

Generally, it has the *virtue of curing* by purgation, carpaung (skin eruptions) in children, irritation, venomous bites of small creatures, phlegmatic diseases, *dyspeptic trouble from indigestion etc.*

The milk of this plant is useful in cases of leprosy, small venomous bites, *all kinds of rheumatic complaints*, wounds infested with worms, etc.

The bark of the root is a purgative; *juice from the branches* used in rheumatism and in toothache; when diluted with gingelly oil and boiled, it is an *external application. Plaster, prepared from* roots and mixed with asafoetida, is applied externally to the stomachs of children suffering from *worms. When diluted* with oil, it is given in obstinate constipation. The juice has acrid, narcotic, drastic and emetic properties, and so, it must be used with great care and caution. *Decoction of stem-bark is* given for gout, and it is also prescribed in nervous affections, dropsy, palsy, deafness and total blindness. The *gum resin* boiled in oil, forms an effective external application in scrofulous and other deep-rooted or chronic ulcers. The fresh milky juice is applied externally and *the mud surrounding the root* is sprinkled over the coating to effect a cure in cases of rheumatic affections, Cochin leg, arthritis etc. The bark is a *useful* application in cases of guniea-worm. The inspissated juice is also prescribed for venereal diseases. The seed is efficacious in consolidating chemical poison as is *generally* supposed.

NOTE.—*This should not confounded with* திருகு கள்ளி twisted spurge (Euphorbia tirucalli) *which is quite* a *different* variety although, by some writers, the same *botanical name* (E. antiquorum which is four-cornered) is given to both the kinds. *It is not a triangular* spurge, but evidently it is quadrangular in form. The *term 'Sadhur' itself* denotes *four* sides. All the preparations from this plant *should be* made with great care and caution. Siddhars speak very highly of the *milk of this plant*. The milk plant is also applied to rat, dog and cat bites.

NOTE.—2. The fresh milk juice, of this plant when mixed with cantharides, forms a plaster which is chiefly used in gout. The stem is warmed and *applied* as an external covering to whitlows just like lime *fruit, to favour* the discharge of pus and other matter.

**சதுரக் கள்ளிப் புல்லுருவி**, இதற்கே பனி கொண்ட பாலி, நீல மாஞ் சோதி யென்றும் பெயர்: இது சரக்கெல்லாம் கட்டிக் கொல் லும். சூதம் மணி போலாகும். இதைத் தானாய் இடித்து சீனி, மிளகு சேர்த்து, வாழைப் பழத்தில் வைத்து சாப்பிட கபம், இருமல், சயம் தீரும், a parasite on the plant—square spurge. It is known by several names as mentioned above. It consolidates all volatile substances and kill them. Mercury will be turned into a bead. The leaves powdered and mixed with China pepper and taken in a plantain frnit, is said to cure phlegm cough and consumption.

**சதுரங்க புடம்**, see கஜ புடம்.

**சது ரங்குலம்**, கொன்றை, common cassia—Cathartocarpus fistula alias Cassia fistula.

**சதுரங் குளம்**, கொன்றை, a kind of cassia—Cathortocarpus fistula.

**சது ரசம்**, ஏலம், இலவங்கம், நாகப் பூ, இல வங்கப் பட்டை இது நான்கும் சேர்ந்தது; இது கோவை குணப் படுத்தும் ஓர் சிறந்த மருந்து, a composite of the four essential drugs viz, cardomon, cloves, Ceylon iron wood and cinnamon. It is a preparation having great curative power.

**சதுர சாதம்**, see சதுரசம்; 2. சதுரசம் சேர்ந்த அன்னம், food cooked with four ingredients *C.f.* திரி சாதம்.

**சதுர சுக்கிலம்**, வெள்ளை யாமணக்கு, Moghul castor oil plant—Jatropha curcas.

**சதுரச் சாகன்**, தாமரை, lotus flower.

**சதுரச் சாரம்**, சுடா தோடை, தூதுவளை, கண்டங் கத்திரி; திரிசங்கு, ஆகிய இந்த நான்கு மூலிகை களின் சாறு, a composite of juices or essences of four drugs viz. Malabar winter cherry, three-lobed night shade, prickly night shade, and four-spined monetia; 2. உமரிச் சாரம், நவச் சாரம், சத்திச் சாரம், சங்கு சாரம், ஆகிய இந் நான்கு வகை உப்பும் சேர்ந்த கூட்டு, a mixture of four different kinds of salts viz: salt wort soda, (2) sal-ammoniac (3) a synthetic salt known as *Sathi* salt, (a salt manufactured from a mixture of nitre sal ammoniac, fullers earth and common salt) (4) chank salt.

**சதுரத் தியாயம்**, see சதுர்ப் பாடம்.

**சதுரப் பிரண்டை**, நான் முகப் பிரண்டை. இதற்கே பொதுவாக பிரண்டை யென்றும் பெயர், square-stalked vine or adamant creeper—Vitex negundu.

**சதுரப் புளி**, தமரத்தை, square tamarind—Averrhoa carambola; Quadrangular tamarindus indica.

**சதுர யாங் கள்ளி**, see சதுரக் கள்ளி.

**சதுரம்**, see சதுரக் கள்ளி; 2. நான்கு மூலையு ள்ளது, square or quadrangle; 3. விவே கம், wisdom; 4. நான்கு மூலை யுள்ள ஓர் மீன், a square fish—Cyprinus robita.

**சதுர வேதி**, see சதுரக் கள்ளி.

**சது ராங்கம்**, see சதுச்சகம்.

**சது ராமிலம்**, இலந்தை, புளியாரை, நெல்லி, மாதுளை ஆகிய நான்கு திரவியங்கள், the four drugs consisting of Ilandai, sour-sorrel, Indian gooseberry and promegranate.

**சதுர்**, நான்கு, four; 2. வட்டம், round; 3. பாலை, milk-creeper—Dregea volubilis; 4. முன்னை, Indian head ache tree—Premna integrifolia.

**சதுர் காளி**, see சதுர் கூவி.

**சதுர்க் கதி**, ஆமை, tortoise; turtle.

**சதுர்க் கரணம்**, see அந்தக் கரணம்; 2. ஓர் காம லீலை, see சதுர்ப் பாதம்.

**சதுர்க் கலவை**, நான்கு சரக்குகள் சேர்ந்த கலப்பு, a composite of four substances or drugs—Quarternary compound.

**சதுர்க் காலம்**, வருஷத்திய நான்கு காலப் பருவம், the four seasons of the year.

**சதுர்க் கூவி**, ஆவிரை, tanner's cassia—Cassia auriculata.

**சதுர்ச் சாதகம்**, see சரசாதம்,

**சதுர்ச் சாதம்**, see சதுர சாதம்.

**சதுர்த்தகம்**, ஒவ்வொரு தடவையும் முறைப்படி நான்காவது நாள் வரும் சுரம், அதாவது நான்கா முறைக் காய்ச்சல். இது எலும்பை யும் இதனுட் பசையையுந் தாக்குவதால் இந் நோய் மிக்க அபாயகரமானது. அனேகமாக மரணத்தை யுண்டாக்கக் கூடியது, a kind of fever appearing or recurring once in four days—Quartan fever. It affects the bones and is infiltrated into the marrow. It is of a very dangerous type, often ending in death.

சதுர்த் தசம், பதினான்கு, (4 + 10) or fourteen.

சதுர்த் தச வேகம், உடம்பி லுள்ள பசி, தாகம், மல, சலம், முதலிய பதினான்கு வேகம், the fourteen impetuosities or natural urgings of the human system such as, hunger, thirst, feces, urine etc.

சதுர்த்தயம், வேம்பாடம் பட்டை அல்லது சுருள் பட்டை, red-creeper — Ventilago madraspatana.

சதுர்த் தளம், ஆரைக் கீரை. See சதாரை.

சதுர்த்தி, போர மல்லி, long-tubed Arabian jasmine—Jasminum sambac(heyneana).

சதுர்த்திக சுரம், சதுர்த்தகம், which see.

சதுர்த்திகை, காற் பலம், ¼ palam weight.

சதுர் பத்திரகம், சுக்கு, நாபி, கோரைக் கிழங்கு, சிந்தில் ஆகிய நான்கு சரக்குகள். துவர்ப்புச் சக்தியால் இவை சீரண சக்தியை வளர்க்கச் செய்யும், the four drugs viz:—dry ginger, aconite, sedge grass root, moon-creeper, which act as astringents and increase the digestive fire.

சதுர்ப் பரணி, புளி யாரை, sour - sorrel—Oxalis pusilla.

சதுர்ப் பலம், நான்கு பல மிடை, weight of four palams.

சதுர்ப்பாக மாக்கல், நான்கு பாகமாகப் பிரித்தல், to divide into four parts ; 2. நாலில் ஒன்றாய்க் காய்ச்சல், (உ-ம்) கஷாயம், to boil down to a fourth quantity (4 : 1) as decoction.

சதுர்ப் பாகம், நான்கு பாகம், four parts ; 2. நாலி லொன்று, one-fourth.

சதுர்ப் பாடம், நான்கு பிரிவுள்ள வைத்திய நூலைப் பற்றிச் சொல்லும் நூல், a treatise dealing with the four parts of Medical science.

சதுர்ப் பாதம், ஓர்வித காம லீலை அதாவது பசுகரணம், (*In Sexology*) a kind of sexual intercourse of men like animals called 'Pasukaranam'; 2. நாற்கால் பிராணி, a quadruped.

சதுர்ப் புடம், சதுர்ப் புடம் ; நான்கு புடம், calcination of medicine effected four times ; 2. சதுரமான குழியில் போடும் புடம், calcination performed in a quadrangular pit.

சதுர்ப் பேதி, see சதுர் வேதி.

சதுர் மண்டலம், சூரிய மண்டலம், sun's orbit.

சதுர் மித்திரம், நான்கு வகை மித்திரம், அவை யாவன :—சாரம், வெண்ணெய், இந்துப்பு, மெழுகு, the four kinds of allied drugs or substances viz :—sal ammoniac, butter, rock-salt and wax.

சதுர்முக பற்பம், காரீயம், தாம்பிரம், நாகம், வங்கம் ஆகிய இந் நான்கு உலோகங்களைக் கொண்டு, இராம தேவர் முறைப்படி செய்து முடித்த பற்பம், a calcined oxide prepared from a mixture of black lead, copper, zinc and lead according to the process of Rama Devar.

சதுர் முக வேதி, செப்பு சதுரக் கள்ளி, a red variety of square-spurge. It is so called from its use in Alchemy.

சதுர் மூலி, பருத்தி, herbaceous cotton.

சதுர் வாய், நான்கு முகம், four-faced.

சதுர் வாய்ப் பொருமல், வயிற்றுப் பொருமல், rumbling noise of the stomach.

சதுர் வேதி, வாத முறையில் நான்கி லொன்றிடப் பழுத்தல், (*In Alchemy*) transmutation effected by a proportion of 4 : 1.

NOTE.— In transmutation of inferior metals into gold, the proportion varies according to the ingrediants and processes described in the works of several Siddhars each following his own way.

சதுவல், சதுப்பு நிலம், swampy soil.

சதுவற் பயன், சதுப்பு நிலத்தில், விளையும் தாழை ; a kind of pine growing in swampy soil ; swamp pine—Pinus palustris ; 2. மடல், swamp pine apple—Pandamus.

சதனி, வெளவால், bat.

சதுலை, see இரண்டு ; 2. see கச்சோலம் ; 3. வெளவால், bat.

சதூஷணம், உஷ்ண முள்ள நான்கு வித வாசனைத் திரவியங்கள் :—மிளகு, திப்பிலி, இஞ்சி, திப்பிலிமூலம், the four hot spices viz., black pepper and long pepper, ginger and root of long pepper.

சதா தலம், ஆரைக் கீரை, a kind of four-leaved marseila—Marseila quadrifolia.

சதேக முக்தர், இம்மையிலேயே அதாவது இப் பிறப்பிலேயே இறக்காததற்கு முன்னம் ஆத்ம ஞானத்தை யடைந்து உலக பாசத்தினின்று விலகியவர்கள், that type of a

person who has attained liberation of Soul, having been restored from the influence of worldly Maya or bondage.

NOTE.— Such types of men of liberated or or emancipated souls (சீவன் முக்தர்கள்) of two classes viz —A class who are really lost to the world and centered in the bliss of awakening existence. They are mostly indifferent to all concerns of life and hidden in the mood of thought of *Atman*. The other class of men are those actuated by a universal sympathy and they have a natural bent of mind to be helpful to others and so they have no selfish desire, but always endowed with a cosmic sense to do good to others. They live for others and love others for, in them they find the identity of Being

In this way they go on working and moving freely untill the occasion arises when they enter the Deep and forsake the flesh and the acquired personality. (Sircar) *C.f.* விதேக முக்தர்.

*சதேக முத்தி*, *சீவன்முத்தி*, emancipation of the soul; 2. *இறக்கு முன்னதாகவே, பிறவிக்குக் காரணமான பாசத்தினின்று விலகல்*, (*In Agama Philosophy*), that state of the soul which is freed from the illusive power, thus ensuring the prevention of future birth before the death of the body.

*சதேகரு*, *இலவங்கப் பட்டை*, cinnamon — Cinnamomum Zeylanicum.

*சதேகை*, *இம் மையிலேயே சீவன் முத்தி நிலையில் நிற்றல்*, the state or condition preparatory to emancipation of the soul in the present birth itself.

*சதை*, *தசை*, flesh; *பாலை மரம்*, iron-wood-tree—Mimusops hexandus; 3. *முன்னை*, see *சதுர்*; 4. *பழச்சதை*, the fleshy portion of a fruit; 5. *சதைப் பற்று*, any fleshy portion.

*சதை குலுக்கம்*, *உடம்பின் சதை நடுக்கம்*, violent agitation of muscles; trembling or tremor of the body.

*சதைக் கரண்டி*, *சதையை அரிக்கும் பூடு*, a plant that corrodes the skin; 2. *சதையை அரிக்கும் புழு*, a worm or bascillae corroding the skin; 3. *விரண வைத்தியத்தில் அழுகிய அல்லது கெட்ட சதையை கரண்டி யெடுக்க உபயோகிக்கும் கருவி*, (*In Anatomy*), a spoon-like instrument used for scraping the rotten or morbid flesh in a cavity—Scoop.

*சதைக் கல் லடைப்பு*, *கல் லடைப்பு நோய்*, stone in the urethra, stranguary; 2. *சதை யடைப்பு*, the contracted state of a tube or duct in the body, as in urinary passage— Stricture.

*சதைக் கழலை*, *மாமிச மொத்தை*, a swelling or enlargement caused by morbid growth of a tissue—Tumour; 2. *மாமிச நிற முள்ள கட்டியை இமையில் உண்டாக்கு மோர் கண்ணோய்*, a disease of the eye marked by a fleshy growth or tumour occuring on the eye of the eyelid—Stye, see *கண் கட்டி* 3. *தசையி லுண்டான கழலைக் கட்டி*, muscular tumour—Myoma; 4. *பொய்க் கருப்பம்*, an imaginary tumour produced by a peculiar action in the abdomen simulating pregnancy; Muscular tumour — Phantom tumour; 5. *விதையி லுண்டாகும் கழலை*, a fleshy tumour of the testicle —Sarcocele; 6. *சதைப் பற்றுள்ள ஈனக் கழலை*, a tumour of malignant character—Sarcoma.

*சதைக் கழித்தல்*, *உடம்பி லுள்ள அதி மாமிசத்தை கத்தியால் வெட்டி யெடுத்தல்*, chopping or pulling off the morbid flesh from the body; 2. *தன் மாமிசத்தை நீக்குதல்*, (*In Surgery*) to remove or get rid of the overgrowth of flesh; to pull off the flesh; 3. *உடம்பின் ஒரு பாகத்து சதையை மற்றொரு பாகத்திற்கு வைத்து ஒட்டுவதற்காக் கத்தி கொண்டு அறுத்தெடுத்தல்*, removing the flesh of one one part of the body for purposes of grafting; 4. *எலும்பில் ஒட்டியுள்ள சதையை நீக்குதல்*, removal of the flesh sticking to the bones.

*சதைக் கழிப்பு*, see *சதைக் கழித்தல்*.

*சதைக் கன்றுதல்*, *சதையில் இரத்தங் கட்டுவதால் கன்றிப் போகுதல்*, contusion of the skin as by blow.

*சதைக் குந்தம்*, *கரு விழியைப் பற்றும் சதை வளர்த்தி. இதனால் கண் பார்வை முழுவதுங் கெடும்*, a disease of the pupil of the eye marked by a morbid or an over growth of flesh; a muscular protrusion in the cornea of the eye in which the complete blindness of the vision is distinct—Amaurosis.

*சதைக் குமிழம்*, *பெண்களின் அல்குலில் உள்ள 1. சனி சவ்வில் மேடிட்ட அநேக சிகப்பு சொப்*

புளக்களை எழுப்பு மோர் வகை மேக நோய், a kind of venereal disease in women in which will be formed many small red boils on the surface of the mucous membrane of the vagina.

சதைக் குமிளம், வெள் விழியில் கறுத்த கொப்புளத்தை எழுப்பு மோர் கண்ணோய், a disease of the eye characterised by the appearance of a black boil on the white or the sclerotic portion of the eye.

சதைக் குவை, கடைக் கண்ணில் கருப்பு குன்றி மணியைப் போல் சதையை வளர்ப்பித்து அன்புறத்து மோர் கண்ணோய், a disease developing black or dark tubercle on the corner of the eye; 2. சதை வளர்ந்த ஓர் வெள் விழி ரோகம், a disease of the white of the eye marked by a morbid growth of flesh.

சதைக்குள் தோஷம், உடம்பின் சருமத்தைப் பற்றிய தோஷம், a constitutional disposition or diathesis relating to skin diseases; morbid affections of the skin.

சதைக் கெந்தம், வெண் கடுகு, white mustard —Brassica alba; 2. செம்பு, copper; 3. வசம்பு, sweet flag—Acorus calamus.

சதைக் கேடு, சதை சீர் கெடல், muscular atrophy.

சதைக் கொட்டுவான், அட்டை, leech; 2. தேள், scorpion.

சதைக் கொழுப்பு, உடம்பில் சதையை யடுத்த கொழுப்பு அல்லது நிணம், the fat surrounding or sticking to the muscles or the flesh; 2. உடம்புச் சதை கொழுத்த பாகம், the fatty muscular portion of the body; 3 கொழுத் திருக்கை, corpulency.

சதைச் சுவர், விதானம், உடம்பின் இரண்டு அறைகளையும் சுவரைப்போல் பிரித்தலா லிப் பெயர், diaphragm, which is so called of its separating the chest from the abdomen like a wall.

சதைதல், see சதைத்தல்

சதைத்தல், துணித்தல், to cut into pieces; 2. நெரித்தல், to crush; 3. சதை பற்றுதல், growing in flesh; to put on flesh; 4. புஷ்டியாதல், body growing in bulk.

சதைத் திப்பி, சத்து நீங்கிய சதை, dead muscle—Myosin.

சதைத் திராம், மாக்கிஷச் சிலை, a kind of mineral stone capable of dissolving flesh.

சதை நார், தசை நார், muscular fibre.

சதை நிறம், மாக்கிஷ பேதி, a mineral stone resembling the colour of the flesh.

சதை நீர், சதையின் திப்பி நீங்கிய திரவம், a muscle plasma deprived of its myosin—Muscle serum.

சதை பருத்த புண், சதைவளர்ந்த புண், morbid growth of flesh in a sore.

சதை பிடித்தல், இளைத்த உடம்பில் மறுபடி தசை யுண்டாதல், a renewal of the loss of flesh after recovery; to put on flesh.

சதை பிடுங்கல், தசையைக் கருவி கொண்டு கிழித்தல், tearing the flesh with an instrument.

சதை புஷ்டி, சதையோடு கூடிய கொழுப்பு, fat clinging or adhering closely to the flesh; 2. சதைப் பருமன், corpulence or fleshiness of the body; bodily bulk.

சதை புரளல், சுளுக் கேறல், to be sprained; to overstrain as the muscles.

சதைப் படர்த்தி, இமைக் குட்புறத்தில் வெள் விழி பாகத்தில் மிருதுவான தசையை தடிக்கச் செய்யுமோர் கண்ணோய், an eye-disease in which the mucous membrane which covers the conjuctiva and turns back over the inner surface of the eyelids is thickened; the thickened state of the conjuctiva—Pterygium.

சதைப் படலம், கருவிழியின் மேற் தோலில் சிவந்த சதையை வளர்ப்பித்தும், குத்தலையும் நோவையும் உண்டாக்கு மோர் கண்ணோய், vascularity of the cornea in which its membrane-like covering presents the appearance of a dense pellicle. It is marked by pin-prick pain—Pannus; 2. கண்ணில் விழும் ஓர் வகைப் பூ. இது இமைக்குள் பொடிச் சதையை வளர்ப்பித்து கண் பார்வையை மறைக்கும், a tract in the eye causing opacity of the cornea arising from the granulation of the eyelids—Granular conjuctivities; 3. வெள் விழி பாகத்தில் இமைக்குள்ளாக சதை படர்ந்து அதனால் இரப்பை சுருங்கி, அவலட்சணமாகக் காணப்படும், the thickened conjunctive of the lids attended by atrophy and deformity of the eye-lids — Trachoma.

சதைப் பதுமம், இமைக்குள் தனதன வெள்ள தாமரையைப் போன்ற தன் மாமிசத்தை வளர்ப்பிக்கும் கண்ணோய், a disease of the eye attended with the formation of rounded skin tubercles containing semi-fluid matter on the inner surface of the eyelids—Mulluscum conjunctivitis.

சதைப் பற்று, வெள் விழியில் இரத்தத்தினால் சிவந்த சதையை வளர்ப்பிக்குமோர் கண்ணோய், red thickened membrane of the sclerotic coat of the eye due to in flammation; 2. சதை பாகம், the fleshy portion; muscle; 3. பழத்தி னுட் சதை, the pulpy portion inside a fruit.

சதைப் பிடித்தல், வலி நீங்க அல்லது சொஸ்த முண்டாக்க உடம்பின் சதையை கையால் அழுத்திப் பிடித்து அமுக்குதல், the process of pressing and rubbing the parts of a person's body to bring relief or to effect to cure—Massage.

சதைப் பிடுங்கல், சதையைக் கிழித்து வாங்கல், tearing or lacerating the flesh.

சதைப் புஷ்டி, தடிப்பு, seeing the body full in flesh; stoutness of the body.

சதைப் புரட்சி, sprain, a violent strain of muscles.

சதைப் புரளல், சளுக் கேறுதல், to get sprained due to an excessive exertion.

சதைப் புற்று, வெள்விழி யழற்சி, inflammation of the cornea of the eye; see சதைப் பற்று; 2. சதையில் காணும் புற்று ரோகம், a malignant growth or tumour in the body—Cancer; 3. வெள் விழியில் சிவந்த சதையை வளர்ப்பிக்கு மோர் கண்ணோய், reddish growth on the sclerotic coat of the eye.

சதைப் பொருத்தி, see சதை யொட்டி.

சதை மலடு, பெண்களுக்கு கருப் பையில் சதை வளர்ந்து, அதினுடம்பு புண் போல் நொந்து, மயக்கத்தை யுண்டாக்கு மோர் நோய் (திருமூ. 600). a disease of the womb arising from the thickened state of peritoneal coat. It is marked by pain and giddiness.

சதை முள்ளிகா, see சதை முள்ளிப் பூடு.

சதை முள்ளிப் பூடு, யானை நெருஞ்சில், crow-thorn—Pedalium murex.

சதை மூடி சவ்வு, சருமத்தின் வெளி பாகத்தில் கவர்ந் திருக்கும் தோல் உறை, the outer covering of the skin—Scarf-skin; 2. மேற் தோல், the epidermis.

சதை மூர்க்கம், காம விச்சை, lustiness; lasciviousness; 2. see சதைக் கொழுப்பு.

சதை யடைப்பன், மாட்டுக்குவரும் அடைப்பன் நோய், a kind of anthrax in cattle.

சதை யடைப்பு, பிரமேகத்தினால் நீர்த்தாரை யில் ஏற்படும் தடிப்பு, stricture of the urethra.

சதை யண்டம், see சதையண்டரோகம்.

சதை யண்டரோகம், பீடுக்கின் தோல் பருத்தல், elephantiasis of the scrotum.

சதை யழுகா மருந்து, சதை கெடாது தடுக்கு மருந்து, substances which resist or correct putrefaction in the flesh of the system—Antiseptics.

சதையழி புண், தசை யழுகிய நாற்றப் புண், a gangrenous sore—Carious ulcer.

சதை யழுகல், தசை யழிதல், disintegration or decay of flesh—Sarcolysis.

சதை யழுகி, சதையை அழுகச் செய்வது, that which causes putrefaction—Septic.

சதை யழுகி விஷம், சதை அழுகியதா லேற்பட்ட விஷம், septic poison.

சதை யிழுப்பு, தசை யிழுத்தபடி வலித்தல், twitching of the muscles; 2. குறக்கு வலி, cramp.

சதை யுருக்கி, சதையை மெலியச் செய்வது that which causes to lose flesh gradually; 2. சதை யுருக்கி நோய், wasting disease.

சதை யெழுச்சி, கொப்புளம், boil; blister.

சதை யொட்டி, ஓர் நீர்ப்பூடு, an acquatic plant; 2. துணுக்குண்ட சதையை அதாவது வெட்டு காயத்தைப் பொருத்த வைக்குமோர் மூலிகை. இதுவே கோடக சாலை, drug capable of uniting the cut ends of the flesh; flesh-joiner—Justicia procumbem. See தசை யொட்டி யிலை.

சதை வலி, உடம்பின் சதை பாகத்தி லேற்படும் வாதப் பிடிப்பு, muscular rhematism attended with pain—Myalgia; 2. குரக்கு வலி, pain due to contraction of the muscles—Cramp.

**சதை வளர்ச்சி,** கண்விழியில் பொருக்கு சதை வளர்தல், granulation of the eye; 2. தொண்டை, மூக்கு, குதம் முதலிய இடங்களில் சதை தடித்தல், fleshy growth or thickening of the walls in the throat, nose, anus etc—Polypus; 3. உடம்பின் உறுப்பில் தசை மிகுதியாக வளர்தல், morbid growth of flesh in any organ of the body—Hypertrophy; 4. தொண்டையில் காணும் சதை வளர்ச்சி, abnormal growth of flesh inside the throat; adenoid· 5. தொண்டைக் கழலை, goitre.

**சதை வளர்ச்சி நாசத் தைலம்,** செங்காருவி சமூலம் சுட்ட சாம்பல், எள்ளுச்செடி சுட்ட சாம்பல், வலம்புரி சங்கு சுட்ட சாம்பல், சம எடை எடுத்து தண்ணீரில் கரைத்து, மூன்று நாள் ஊற வைத்து அடிக்கடி கலக்கி, கடைசியாக தெளிந்ததை வடிகட்டி வேறு பாண்டத்தில் விட்டு குழம்பாய்க் காய்ச்சி வெயிலில் வைக்க காய்ந்து உப்பாகும். பிறகு நல்லெண்ணெய் விட்டு அரைத்தெடுத்த தைலம். இதைச் சதை வளர்ந்த இரணத்தில் பூச வளர் ஆறும். சத்திரத்தால் அறுக்க வேண்டிய அவசியமில்லை, an ointment prepared as follows — the burnt ashes of the three ingredients viz.:—red Indian Burr plant, gingelly seed plant, and the blowing chank are to be taken in equal weights and dissolved in sufficient quantity of water; and the solution so obtained is kept on for three days, of course, stirring often with a stick. Then the clear solution on the top should be filtered and transferred to the other pot, and boiled down to a thick consistent which is exposed to the Sun till it is completely dried. Sediment of salt will then be found deposited at the bottom, to which gingelly oil is added and ground into a paste. When this ointment is applied to the wound, the morbid growth of flesh will be found completely reduced, and the wound itself healed up completely without the necessity for operation.

**சதை வளர்த்தி,** தொண்டை இருபுறம் சதை வளர்ந்திருத்தல், the tonsil growth; 2. புண் சதை வளர்தல், growth of tissue in a wound or sore—Proud flesh.

**சதை வளர்ப்பு,** see சதைப் படர்த்தி.

**சதை விழல்,** உடம்பு சதை பருத்தல், fleshiness of the body.

**சதைவு காயம்,** நசுக்குதலினால் ஏற்படும் காயம், lesion occasioned by a violent bruise on the body or by a blunt instrument—Contusion.

**சதை வைத்தவள்,** உடம்பு தடிப்பினால் மலடியானவள், a woman in whom sterility is due to corpulency.

**சதோக நாதர்,** நவ நாத சித்தர்களுள் ஒருவர், one of the nine of the original Siddhar's school of thought.

**சதோ கரு,** see சதோகுரு.

**சதோ குரு,** இலவங்கப் பட்டை, cinnamon bark.

**சதோஷ்ண மானி,** நாடி அளவைபறந்த உடல் உஷ்ணத்தைக் காட்டும் கருவி, a centigrade thermometer for ascertainig temperature.

**சத் தாபா,** பிரமி, diabetes plant—Herpestis monniera alias Bramia indica.

**சத்த கன்னி,** சிவ சக்தியின் பேதங்களான ஏழு கன்னிகைகள்—அபிராமி, மகேஸ்வரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி. சில ரோகங்களுக்கு இவர்கள் காரணமாகக் கருதப்படும், the seven Deities or Supreme divinities, called also Sakthis (personified energies) as shown above. Some diseases are attributed to the influences of the said deities.

Note.—Some writers differ in names in this classification and give out as follows:—பிராமணி, நாராயணி, மகேஸ்வரி, கௌமாரி, வாராகி, உருத்திராணி, இந்திராணி.

**சத்த குணம்,** சத்தம், sound.

**சத்தக் கருவி,** see சத்த நாசகம்.

**சத்தக் கேடு,** செவிடு, deafness; wanting in the sense of hearing.

**சத்த சாதாரணை,** see சத்தி சாரணை.

**சத்த சாரணை,** see சத்தி சாரணை.

**சத்தகா,** மகிழம் பூ, ape-face flower—Mimusops elengi.

**சத்த சாட்டரணை,** see சத்தி சாட்டரணை.

**சத்த சிப்பி,** இளிஞ்சில், mollusc; bi-valve shell.

**சத்த சோது பலம்,** தூணி யாக்ஷேம், an unidentified plant?

**சத்த தாது,** உடம்பினுள் அமையப்பெற்ற ஏழு வகை தாதுக்கள் அவையாவன:—இரசம், இரத்தம், சதை அல்லது இறைச்சி, எலும்பு, தோல், மூளை, சுக்கிலம், the seven

constituent parts of the human body viz:—serum, blood, flesh, bone, skin, brain or marrow and semen.

சத்த தாணம், வெடி யுப்பு, nitre—Potasium nitrate.

சத்த தாரசம், உடம்பில் வயிறு, நெஞ்சு முதலிய அவயங்களி லிட்டு ஒலியை கண்டு பிடிக்கும் சலாகை, an instrument by which cavities as stomach, chest etc, are sounded —Stethoscope.

சத்த நாராசம், அட்டை, leech.

சத்த நிலை, பனங்கள், palmyra toddy.

சத்த பரணி, ஏழிலம் பாலை, seven-leaved poon—Alstonia scholaris.

சத்தபரி பூரணம், யகாரம், the mystic letter 'ya' referring to cerebral region.

சத்த பரியாயம், பெரு வேம்பு, large neem or mountain neem—Melia composita.

சத்த பரியாய வாசகம், see கழுதைமான் புள்ளி.

சத்த பரியா வாசம், காஞ்சிரை, nux vomica.

சத்த பர்ணி, see சத்த பருணி.

சத்த பேதி, வாத முறையில் ஏழுக் கொன்றிட பழுத்தல், (*In Alchemy*), transmutation of metals effected in the proportion of 7 : 1.

சத்த போடம், செய்யான், a venomous centipede.

சத்த போதம், பூதணம், which see.

சத்தப் பிரதி, சத்த வுணர்ச்சி, perception of sound; 2. கேள்வி யுணர்ச்சி, sense of hearing.

சத்தப் பிரமம், ஒலிக் குறி நூல், science of modulating sounds or voice on Divine principles.

சத்தப் பேதி, கொறுக்காய்ப் புளி, Malabar tamarind—Garcinia gambogia.

சத்த மாதர், see சத்த கன்னி.

சத்த மருந்து, ஏழு வித மருந்துகள், the seven kinds of medicines.

சத்த மார்க்கம், கமுகு, areca-nut tree—Acacia catechu.

சத்தமி, சித்தினி சாதிப் பெண், (*In Erotic Science*), one of the four classes of women divided according to lust.

சத்தமி ரசம், இரசம், mercury; 2. கொங்கணவன் வாத காவியத்தில் சொல்லி யுள்ள ஏழு வகை செய ரசம், the seven kinds of mercurial preparation quoted in Konganava's work on Alchemy.

சத்தமுர்தம், தென்னங் கள், cocoanut toddy.

சத்தம், இரசம், mercury; 2. ஏழு, seven; 3. ஒலி, sound; 4. நித்தியம் அல்லது எங்கும் பரவியது, (*In Philosophy*) eternal or universal; all pervading; 5. வர்ண கெந்தி, stick or roll sulphur; 6. குரல், voice; 7. சத்த நூல், science of sound; 8. see சப்தம்.

சத்தரி, ஊசிக் காந்தம், magnet.

சத்தலா, பம்பந் திரய், a plant of the Mollugo genus.

சத்த லோகம், ஏழு வகை உலோகங்கள் — பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், தரா, பித்தளை, the seven metals—gold, silver, copper, iron, spelter (mixed copper and zinc) and brass.

சத்தலோக வேதி, சிறியாணங்கை, ஏழு உலோகங்களை பேதிப்பதா லிதற்கிப் பெயர், snake root — Polygala glabra. It is so called from its virtue of transmuting the seven metals.

சத்த வத்தை, see சத்தா வத்தை.

சத்த வருக்கம், ஏழுவகை கடைச் சரக்குகள், the seven kinds of medicinal drugs viz:—

1. நெல்லி, Indian goose berry—Phyllanthus emblica.
2. வெட்டிவேர், cus cus root — Vetiveria odorata.
3. இலாமிச்சை அல்லது குரு வேர், a fragrant root—Andropogon muricatus.
4. சடா மாஞ்சி, Indian spikenard — Valerian jatamansi alias Cyperus stoloniferus.
5. இலவங்கப் பத்திரி, the leaves of Laurus cassia or இலவங்கம், clove—Eugenia caryophyllata.
6. ஏலம், cardamon—Elleteria cardamomum.
7. திராட்சை, grapes—Vitis vinifera.

சத்தவுத கிருதம், விரணங்களுக்கு மேலுக்குத் தடவும் ஓர் மருந்து நெய், a medicated oil used for wounds as an external application.

சத்த வேக மணி, ஓர் வகை இரச மணி, a kind of consolidated mercurial pill.

**சத்த வேதி**, see சத்த பேதி.

**சத்தறி**, நவகண்ட மூதண்டம், the oldest of the seven worlds.

**சத்தன்**, தவளைக் கல், a red mineral stone mixed with iron ; 2. பல முடையவன், strong man ; robust man.

**சத்தாங்க செவிடு**, முழுச் செவிடு, complete deafness ; stone-deafness.

**சத்தாங்கம்**, முழுவதும், completely.

**சத்தா சாட்டரணை**, see சத்தி சாட்டரணை.

**சத்தாண்டு மூலி**, சித்தர்கள் பசியா திருக்கவேண்டி ஏழு வருடத்திற் கொருமுறை சாப்பிடு மூலி, an unknown rare drug supposed to be taken by Siddhars once in seven years to avoid hunger.

**சத்தாதி மாஜூன்**, பலத்தைக் கொடுக்கும் ஓர் யுனானி மருந்து, a Unani medicinal preparation for promoting strength.

**சத்தாய் நிற்றல்**, சத்து போல உடம்பில் தங்குதல், to remain as a vital power in the system.

**சத் தாவத்தை**, சீவான்மாவுக்கு ஏற்படக் கூடிய ஏழுவித உபாதிகள், அவையாவன :—the seven states of the soul — from ignorance and delusion ending with the knowledge of Brahmam and consequent felicity, viz :—

1. அஞ்ஞானம், ignorance.
2. ஆவரணம், the power of illusion.
3. விட்சேபம், celestial latitude.
4. பரோட்ச ஞானம், consciousness possessed by the soul of its approximation towards absorption.
5. அபரோட்ச ஞானம் அதாவது பிரம்ம சைதன்ய தரிசனம், consciousness or knowledge of identity with the deity.
6. சோக நிவர்த்தி, freedom from drowsiness or lethargy.
7. ஆனந்தம், ecstasy ; rapture.

**சத்தா வாசி**, பூசபத்திரி, an unknown drug ?

**சத்தான குச்சம்**, தர்ப்பை, sacrificial grass.

**சத்தான பேதி**, நல்லபேதி மருந்து, a cathartic.

**சத்தான்**, வாண கெந்தி, see சுரைக் கெந்தி ; 2. see சத்தன்.

**சத்தி**, கக்கல், disgorgement ; vomiting ; 2. இந்துப்பு, rock-salt ; 3. கந்தகம், sulphur ; 4. சவர்க் காரம், fuller's earth ; 5. வல்லமை, strength ; 6. நிமிளை, bismuth ; 7. நெல்லிக் காய் கந்தகம், myrobalan gandhac (occurring in crystalline pieces) ; 8. see சத்தி சாரணை ; 9. குமட்டிக் கொடி, creeper of குமட்டி, which see ; 10. see சத்தி சாரம் ; 11. சரோணிதம், menstrul blood ; 12. நீர் முள்ளி, water-thistle ; 13. பேய்ப் புடல், wild snake-gourd ; 14. பொன் னிமிளை, gold-pyrites ; 15. வேம்பு, margosa tree ; 16. மாமிஷப் பொரியல், fried meat ; 17. பேய்க் கொள், wild bitter horse-gram 18. கற்பூரம், camphor ; 19. இறைச்சி, the female energy or active power of the deity ; 20. வழலை, (*In Alchemy*), the mystic three salts ; 21. அகிர்க் கொடி, a creeper ; 22. குன்மம், dyspepsia ; 23. வெள்ளைச் சாறு வேளை, a white-flowered cleome ; 24. மூங்கில், bamboo ; 25. சித்திர மூலம், Ceylon leadwort ; 26. தழு தாழை, palsy curer—Cleodendron phlomoides ; 27. மூன்று, three ; 28. வாந்தி, vomiting ; 29. தீ, நெருப்பு, fire ; 30. வாலை அல்லது இளம் பெண் சத்தி, a goddess as a young girl ; 31. தாமரை மணி, lotus carp ; 32. மரா மரம், Indian dammer — Shorea robusta ; 33. உடல், body ; 34. கக்குதல், ejecting ; 35. தேவதையின் சக்தி, the active power of a deity ; 36. பலம், strength of the body ; 37. சக்தி, power.

**சத்தி**, சிவத்தி னின்று பிரிந்த சக்தி. இச் சக்தியை, பெண் குறியை நோக்கியும், மானத பூசையினாலும் வழி படுவது. இச் சக்தி அடியிற் கண்டபடி பல வகைகளாகக் கொள்ளப் படும், (*In Agama Philosophy*), the female energy which is the counterpart of Siva, is worshipped either in the real sense of meditation or symbolically. It is classified in different ways as shown under :—

I. மூவகை சக்தி, (*In Philosophy*) the three powers of the female energy viz :—

1. இச்சா சக்தி அல்லது உயிர்க் கருணை சம், the power of affection and benevolence to souls.
2. ஞான சக்தி, கருமங்களை யறிந் தூட்டல், the power of giving knowledge of the actions which cause men to enjoy or suffer the fruit of those actions.

8. கிரியா சத்தி, உலகங்க ளாக்கல், the power of creation or evolution of the Universe.

II. சிவ தத்துவமாகிய ஐந்து வகை சக்தி, (*In Agama Philosophy*), the five faculties of Siva represented as female energies viz :—

1. சிற் சத்தி, உயிர்க்கொளியாய நிற்றல், the power of imparting spiritual knowledge for illuminating the soul.

2. இச்சா சத்தி, பஞ்ச பூதமாக நிற்றல், the power by which the five elements are represented.

3. ஞான சத்தி, ஐம்பொறி யுணர்ச்சியாக நிற்றல், the power of God existing as the five senses.

4. பரா சத்தி, தச வாயுக்களாக நிற்றல், the power representing the ten vital airs.

5. கிரியா சத்தி, வினைத் துணையாக நிற்றல், the power of performing things in the operative energy. It is by this power the creation or evolution of the Universe is effected.

MOTE. — Besides, there are many other female energies or active power of Deities in all the operations of creating, preserving, destroying etc, as, விந்து பர சக்தி, திரோதான சக்தி, சிவ சக்தி, விந்து சக்தி முதலியன.

சத்தி அரோசிக நாசனி, கொம்மட்டி மாதுளை. இது குன்மத்தைப் போக்குவதா லிப் பெயர், melon lime—Citrus medica-medica. It is so called from its virtue of curing dyspeptic complaints.

சத்திகம், குதிரை, horse.

சத்திகா, கொம்மட்டி, water-melon ; 2. நவாச் சாரம், sal ammoniac.

சத்தி காட்சி, வலம்புரிக் கொடி, twisted-horn —Helicteres isora alias Isoria corylifolia ; 2. சத்தி தரிசனம், sight of Sakthi.

சத்தி குரு நாக்கிலை, காச் சிலை அதாவது கஞ்சா விலை, gunjah leaf.

சத்தி குரு நாதன், கஞ்சா, Indian hemp — Cannabis sativa.

சத்தி குறைவு, பலவீனம், weakness ; 2. சத்தி குறைவு, want of energy.

சத்தி குன்மம், வாந்தி அல்லது கக்கலோடு கூடிய குன்ம நோய்; இதனால் தீனிப் பையின் தொழில் கெடுதி யுடைந்து, உணவு கீழ்க் கிறங்காமல், மேல் நோக்கி வாந்தி யுண்டாகும், dyspepsia or indigestion attended with vomitting—Acid dyspepsia. It is caused by the derangement of the stomach as a result of which the undigested food is forced up instead of having a descending tendency ; 2. வாயு அதிகரித்து, வயிறு பொருமி, அன்னம் செல்லாது, வாந்தி, நெஞ் செரிவு, புளி யேப்பம், உடல் வெளுப்பு, இளைப்பு, ஊன் வற்றல் முதலிய குணங்களை யுண்டாக்கு மோர் வகைக் குன்ம நோய், a kind of dyspepsia characterised by rumbling noise in the stomach from excess of Wind, loss of appetite, vomiting, burning sensation in the chest, sour belch, paleness of the body, emaciation etc.—Pyrosis.

சத்தி கோணம், சத்தியின் கோணம், அதாவது நாற்பத்து முக்கோணம். இதற்கு ஸ்ரீ சக்கரம் என்னும் பெயர், the diagram consisting of 40 magic triangles. It is known as 'Sree Chakram'.

NOTE.—This diagram expresses the mind's domination over the Universal Energy (Sakthi). It may be roughly compared to the Pentagram described in the Ceremonial Magic of the Kabalistic school or to the Double Triangle of Solomon forming the six-pointed Star called the Solomon Seal.

சத்திக் காய்ச்சல், வாந்தியோடு கூடிய சுரம், fever accompanied by vomiting.

சத்திக் கூர்மைக் கல், படிகக் கல், red crystal or Cashmere stone.

சத்திக் கூறுண கல், see சத்திக் கூர்மைக் கல்.

சத்திக் கூறு, சத்தியின் பகுதி, attribute of the power of *Sakthi*.

சத்திக் கூற்றேன், நவாச் சாரம், sal ammoniac—Chloride of ammonia.

சத்திக் கொடி, கொம்மட்டிக் கொடி, creeper of water-melon ; 2. சத்தி சாரணை, which see.

சத்தி சடா மூலி, சிற் றாமணக்கு, small-seeded castor plant—Ricinus communis.

சத்தி சலம், நாத நீர், ovarian fluid.

சத்தி சாட்டரணை, see சத்தி சாரணை.

சத்தி சாரவணை, மூக்கிரட்டை, இதனால் காரியம் பற்ப மாகும், spreading hog-weed — Boe-

rhaavia repens alias B. procumbens. With this, black lead can be calcined; 2, வெள்ளைச் சாரணை, trianthema—Trianthema decandra. See சாரணை.

சத்தி சாரவணை வேர், நீரழிவை போக்கு மருந்து சரக்குகளில் இது ஒன்று, the root of the spreading hogweed which forms one of the ingredients in a medicine used for diabetes.

சத்தி சாரம், வெடி யுப்பு, சாரம், பூ நீர், கறி யுப்பு, இவைகளை நீரிற் கரைத்து காய்ச்சி எடுத்த வுப்பு, (மச்ச. முனி 800), a prepared acid salt derived by filtering a boiled solution of a mixture consisting of nitre, sal ammoniac, fuller's earth and common salt; 2. எரிச்சலையும் விரு விருப்பையும் தரக் கூடிய காந்தாரி என்னும் ஓர் உப்பு, a kind of salt of burning nature and acrid taste. It is opposed to சிவ சாரம், which is an alkali salt; 3. எவட் சாரம், நவாச் சாரம், கறி யுப்பு, இவைகள் சேர்ந்த வுப்பு, a salt containing the ingredients of salt-petre, sal ammoniac and common salt.

சத்தி சாலம், அகஸ்தியர் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல், a medical treatise compiled by Sage Agastiya.

சத்தி சூலை, அசீரணத்தாற் காணும் வயிற்று நோய், colic due to dyspepsia.

சத்தி செய்தல், வாந்தி பண்ணல், vomiting.

சத்தி தத்துவம், சிவ தத்துவம் ஐந்தினில் ஒன்று; one of the five faculties of Siva.

சத்தி தரு மூலி, சிற் றாமணக்கு. See சத்தி சடா மூலி.

சத்தி திராவகம், see மெழுக்கு திராவ

சத்தி தீட்சை, மாந்திரீக நூலிற் சொல்லிய பதினொரு மந்திரங்கள். இது உடம்பை வலிவடையச் செய்யும் ஓர் கிரியை. இது பிராணாயாமத்திற்கு முன்பதாக செய்யின் உடம்பின் நாடிகள் வலு வடையும், (*In Mantric Philosophy*), the eleven mystic mantras chanted as per rules laid down in the Mantric science of Agastiya. They are uttered for invigorating the system. This process also strengthens the nerves, and the tissues, when adopted before commencing the scientific breathing exercise known as Pranayama. *Cf.* சிவ தீட்சை.

சத்தித்தல், see சத்தி செய்தல்.

சத்தி நாகம், நீர் முள்ளி, water-thistle.

சத்தி நாகிதம், முட் சங்கு, see சங்கஞ் செடி.

சத்தி நாசனி, கொம்மட்டி மாதளை, melon-lime—Citrus medica-medica.

சத்தி நாதம், சமுத்திரத்தி னடியில் உறைந்து கிடக்கும் கல் லுப்பு, insoluble sea-salt found deposited on the rock at the bottom of the sea; 2. மாத விடாய், menstrual blood; 3. நாரி சுக்கிலம், the fluid discharged by women from lust; 4. பொன் னிமிளை, gold pyrites or bismuth of golden colour; 5. பொன் னிறம், golden or yellow colour; 6. ஏமாப் பிரகம், yellow talcum or yellow-coloured mica; 7. கந்தகம், sulphur. See Note under சங்கின் நாத நீர்.

சத்தி நாத வுப்பு, கல் லுப்பு, sea-salt.

சத்தி நிபாதம், ஆன்மாவில் தெய்வத்தின் அருள் கலந்த லாகிய ஓர் நிலை, (*In the Agama Philosophy*), a degree of spiritual progress in which the Divine grace is settled in the soul which attained elevation by mortification of Self; that stage in which the soul is developed or ripened for union with the deity; 2. மனதை யடக்கி தெய்வத்தை வழி படல், worshipping God with concentration of mind.

சத்தி நிபாதன், திருவருள் பதியப் பெற்றவன், one who has attained God's grace.

சத்தி நீர், see ஐங்கோல செயநீர்.

சத்தி பண்ணல், see சத்தி செய்தல்; 2. உணவைக் கக்கல், to disgorge the food.

சத்தி பருணி, ஏழிலைப் பாலை, seven-leaved poon—Alstonia scholaris.

சத்தி பாசம், சிறு தும்பை, small leucas.

சத்தி பீசம், ஐயும், கிலியும், சவ்வும், ரீயும், ஸ்ரீயும், ஆக ஐந்து, (*In Mantric Science*) the five mystic letters mentioned above.

சத்தி பூசா விதி, சத்தியை பூசிக்க வேண்டிய முறை. இதற் குரித்தான விஷயங்களை கொங்கணவன் கடைக் காண்டத்தில் சொல்லி யுள்ள நாற்பத்து முக்கோண சக்கரத்தின் பூசை விதிகள். இதில் பெண்ணை நிர்வாணமாகச் செய்து நிறுத்தி, அவள் குறியின் மேல் இச் சக்கரத்தை அறை மூடியாகக் கட்டி, அவளை சத்தி தேவியாக நினைத்து, அவளுக்கு பூ மாலை கந்த களபங்கள் சாத்தி, ஒரே மனதாய் தியானித்து வணங்க, அனேக சித்திகள் கைகூடும். இதை ஸ்ரீ சக்கரமெனக் கூறுவர். சித்தர்கள் இதை பூசித்து அஷ்ட

சித்திகளை பெற்றதாகவும் கூறப்படும். ஆனால் இலிங்க பூசையிலோ, இச் சக்தி பூசையும் அடங்கி யுள்ளது, ஏனெனில், இலிங்கத்தின் பிட ரூபமாக வுள்ளதுதான் சக்தி பீடம். இதற்குதான் ஆவுடையார் என்று பெயர். ஆகவே, மேல் பாகத்தில் நீண்ட சிவலிங்க ரூபமும், அடிபாகத்தில் வட்டமான சத்திரூப பீடமும் அடங்கியுள்ளது. ஒவ்வொரு கோவிலின் மூலஸ்தானத்தில் அமைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு சித்தர்களும் இப் பூசா விதிகளைப் பற்றி, தங்கள் தங்கள் நூற்களில் கூறி யுள்ளார். சுந்தரானந்தர் பூசா விதி, கருவூரார் பூசா விதி, அகஸ்தியர் பூசா விதி முதலிய நூற்களைப் பார்வையிட இனிது விளங்கும்; the rules and principles adopted in the worship of the Goddess Sakthi. The philosophical and psychological conceptions as regards this worship is well described in the secret work known as 'Kadaikkandam' compiled by Siddha Konganava. The mysterious diagram called 'Narpathu Mukkonam' consisting of 40 magic triangles, is tied round the waist of a naked woman who is then adorned with flowers and perfumes, and regarded as the Goddess herself. It is said that Siddhars attained the eight miraculous powers by the worship of this diagram. This worship also includes the Linga worship i.e., the worship of the visible representation of God Shiva called Shiva lingam (image of erect phallus) for the reason that the latter consists of two stones—the one shaped cylinderical and vertical is called 'Lingam' (இலிங்கம்), while the other into a circular and horizontal form called 'Avudaiyar' (ஆவுடையார்), the one being fixed over the other to represent the two sex organs. This idol is established in the *sanctum sanctorum* of every Shiva temple. Every Siddha had dealt with this kind of worship in his work elaborately. A cursory glance of the works of Siddhars viz:-Sundarananthar, Karurar, Agastyar and others will give an idea of the importance of this worship of sex-organs. See சத்தி கோணம்.

NOTE.—There seemed to be a general tendency for the sexual organs to be considered sacred at a remote period in culture. Siddhars of S. India assert that the visible representation of God Shiva, signifies the Universal Life and that of the Goddess Sakthi—the Universal Energy; and that the combination of the said two symbols represent the Unity.

It is for this worship largest temples, greater in number, were erected than to any other Hindu Deity. Even in Africa, and the Pacific, phallus is still an object of worship amongst the primitive races. Moreover, the Archeological Survey shows that the idol of Shiva was found in the deep excavations in the United States of America, thereby showing the worship observed amongst the primitive American Indians of ancient times.

**சத்தி பூசை**, வாம பூசை. இதில் மேலே சொல்லியபடி பெண்ணை நிர்வாணமாகச் செய்து குறியின் மேல் நாட்டம் வைத்து, பத்தியாய் தேவியை நினைத்து பூசா விதிப்படி தியானித்தல். இதற்கும் விவரம் கொங்கணவன் கடைக் காண்டத்தைப் பார்க்கவும். இப் பூசையை சித்தர்கள் செய்து அனேக சித்திகளை அடைந்ததாக சொல்லப் படினும், தற்காலத்தில் மேற்கண்ட விதிகளை அனுசரிக்காமல் சாதாரணமாகச் செய்யப்படும் பூசை. இதில் இலாகிரி வஸ்து இறைச்சி முதலியவைகளை வைத்தும், பிராணிகளை பலி யிட்டும், பூசை செய்யப் படும். வங்காளம் முதலிய சில ஊர்களில் வாம பூசையை மிகுதியாகக் கொண்டாடுகிறார்கள், secret rites or ceremonies in the worship of a naked woman by regarding her for the time being as the Great Sakthi (Universal energy). The subject here concentrates his attention on the genital exercising great self-control and forgetting all about the lust, and performs his worship as per rules laid down in the last chapter of Konganava's works. Siddhars used to accomplish this great up-hill task; and it is said that they had attained great success in their miraculous powers. But in the present day, the Spiritual importance attached to it, is lost; and the worship is effected ordinarily in a material form with the aid of intoxicating liquors and meat essences, mixed with all kind of mal-practices, as animal sacrifices etc. Bengal and some other parts of India attach more importance to this kind of worship. See சத்தி கோணம்.

NOTE.—This is analogous to a kind of worship or orgy that was in vogue in Ancient Greece. It used to be done with animal sacrifice in honour of Dionysus or Bacchus, although it was not followed

in the spiritual sense. Even this sacrifice is performed in a most obscene manner in honour of the Goddess Kali, and many do not seem to realise the truth involved in it. No doubt it may appear a vulgar custom, but it is spoken of as the highest form of worship in the path of *yoga* for the attainment of Spiritual power.

So, it is evident that the power of energy of a Diety is personified as a female and outwardly considered as His wife; and therefore, we see that Parvati is known as *shacty* of Shiva; Lakshmi of Vishnu, and Saraswathi of Brahma. A vast variety of inferior female deities of malevolent character and formidable aspect also receive the worship of the multitude.

It is needless to say that the Shakty or Feminine energy system has pervaded all atheistic forms. The Grecian rites were the secret rites of this system, but connected with human sacrifices. The names of the feminine energy amongst the Greeks corresponding with the different *shactics* of the Hindus, were Juno, Venus, Ceres, Hecate, Proserpine and Artemis. The worship in the great temple at Ephesus in Greece was of this character.

In the *Sankhya Philosophy*, பிரகிருதி or மூலப் பிரகிருதி is defined to be a female entity of eternal existence and independant orgin, distinct from the Supreme spirit.

In the *Vedanta Philosophy*, all created things are held to be illusory and the Shacty or active will of the deity is designated as Maya or Illusion.

In the *Tantric Philosophy*, the adoration took its most material form in which the female energy is worshipped through what is styled as the material organ (யோனி) which is regarded as a symbol of self existent and productive nature. The adherents of this Tantric ritual are known as Siddhars or worshippers of the female energy; and their doctrinal theory is the extinction of desire and mortification of passions.

In Bengal they form into a seperate class unlike S. India. There are two divisions of worshippers viz.—the right-hand and the left-hand worhippers.

**சத்திப்பு**, வாந்தி, vomiting.

**சத்திப் பெண்**, வாலை, the Universal energy operating on all human actions.

**சத்தி மண்டலம்**, சந்திர மண்டலம், moon's orbit.

**சத்தி மயம்**, வாலை ரூபம், the existence of the Universal power in every thing; all-pervading energy.

**சத்தி மாந்தம்**, வாந்தியோடு கூடிய மாந்த நோய், indigestion in children followed by frequent vomiting.

**சத்தி மான்**, ஆண்மை படைத்தவன், one endowed with manly power.

**சத்தி முப்பு**, வாத முறையில் உபயோகிக்கும் ஓர் வகை முப்பு, a kind of mystic 'three salts used in Alchemy. It is opposed to சிவ முப்பு, which see.

**சத்தி மூலம்**, சத்தி சாரணைவேர், the root of spreading hogweed.

**சத்தி மூலி**, இம் மூலியை அரைத்து பாலில் தாக்க இரத்தமாம்; ரசத்தில் மத்தித்திட இறுகும்; இறுகியதை காடைப் புடம்போட கட்டும். கெந்திக்கு கூ பாலின் இரத்தத்தை சுருக்கிட உருகியாடும், an unknown drug capable of converting milk into blood; mixed with mercury, renders it a solid; when calcined, it consolidates; the milk which is converted into blood as mentioned above, melts mercury when heated with it.

**சத்திய சுராங்குசம்**, நாக பஸ்பம், வங்க பஸ்பம், சேர்ந்த ஆயுர்வேத மருந்து. சுர தோஷங்களுக்குக் கொடுப்பது, an Ayur Vedic preparation consisting of calcined zinc and lead, prescribed for complaints of fever.

**சத்திய ஞானம்**, மெய் யுணர்வு, true wisdom; erudition.

**சத்தியடி யுவர்ப் பிண்டம்**, வெடியுப்பு, nitre.

**சத்திய நாதர்**, நவநாத சித்தர்களுள் ஒருவர், one of the nine of the original Siddha school of thought.

**சத்திய நிருவாணம்**, பௌத்த மார்க்கத்தில் பிறவி நீக்கலாகிய ஓர் தீட்சை அதாவது பிறவி யறுத்தல், (*In Buddha Philosophy*), to get one-self freed from birth. This a kind of spiritual instruction given by a Guru by which the disciple is said to attain Mukthi or Salvation.

**சத்தியம்**, குறிஞ்சா which see; 2. மெய், truth.

**சத்தி யருணி**, ஏழிலைப் பாலை, seven-leaved poon—Alstonia scholaris.

**சத்தி யாக்கினி**, அகத்திய முனி, sage Agastya.

**சத்தி யிருமல்**, குன்மத்தினு லேற்பட்ட இருமல், cough as a result of dyspepsia—Dyspeptic cough.

**சத்தி யுட கூறு**, இருள் மரம், serpent champak—Mesua ferrea.

**சத்தி யுடன் கூடி நின்றோன்**, நவச்சாரம், sal-ammoniac.

**சத்தி யுண்டாக்கல்**, மருந்து கொடுத்து உடம்பில் பலம் உண்டாகும்படிச் செய்தல், to impart strength to the system bv way of treatment as with tonic etc.

**சத்தி யுப்பு**, கதம்பைப் புல்லை எரித்ததினுலாகிய சாம்ப லுப்பு, a salt obtained by burning the bearded grass (Andropogon) into ashes; 2. மூன்று மாதத்திய பிண்டத்தினின்று தயாரித்த ஓர் பிண்ட முப்பு. இதை உவருப்பு, இரவி யுப்பு, இந்துப்பு என்று பரிபாஷையாக உரோம ரிஷி 200ல் பாடியுள்ளது, a mystic salt prepared from the foetus of three months by a secret process. It is known by different hidden names as codified in the treatise of Roma Rishi 200 ; 3. பூநீறு, fuller's earth ; 4. முப்பு, the mystic three salts used in Alchemy.

**சத்தி யெண்ணெய்**, குன்மத்தில் வாந்திக்காகக் கொடுக்கும் எண்ணெய், a medicinal oil given for vomiting in dyspeptic complaints.

**சத்தி யோகத் தாதி**, புளி நறளைக் கிழங்கு, fox-grape—Vitex carnosa alias Cissus carnosa.

**சத்தியோ சாத விரணம்**, பக்குடன் கூடி யிருக்கு விரணம், a scab wound.

**சத்தியோ நிர்வாண தீட்சை**, see சத்திய நிருவாணம்.

**சத்தியோ விரணம்**, அசம்பவத்தினுல் அல்லது காயங்களினு லுண்டாகும் ஓர் புண், an extended or elongated wound or sore which is traumatic or accidental in its character.

**சத்திர கத்தரி**, சத்திர சிகிச்சையி லுபயோகிக்கும் கத்திரி, scissors used in operation.

**சத்திரகம்**, தும்பை, leucas flower.

**சத்திர கருமம்**, கத்தி கொண் டறுக்கும் சிகிச்சை, surgical operation.

**சத்திர கோசம்**, கத்தி கொண் டறுக்கும் நோய், instrument case ; surgical case ; a disease requiring operation.

**சத்திரக் கத்தி**, தமிழ் வைத்தியப்படி இரண வைத்தியத்திற் குபயோகிக்கும் 26 கருவிகளில் ஒன்று, surgeon's knife which is one of the twenty-six instruments used in surgery according to Tamil Medical science—Scalpel.

**சத்திரக் கருவி**, தமிழ் வைத்தியத்தின்படி உடம்பின் பாகத்தை அறுத்து சிகிச்சை செய்வதற்கான 26 ஆயுதங்கள், அவையாவன:—(*In the Siddha System of Medicine*) the twenty-six instruments used in Surgery according to Tamil system of medicine and they are viz:—

1. சத்திரக் கத்தி a lancet; surgeon's knife.
2. குறும்பி, ear-scraper for removing or clearing dirt or cerumen.
3. கருமூக்கு வாய், a kind of pincers.
4. கடுமுள் வாங்கி, a probe for drawing out or removing hard thorns from the skin.
5. மூக்குச் சலாகை, a probe for use on the nasal ducts.
6. பொட்டு, a plug used in surgery for blocking the vaginal orifice —Tampon.
7. மட்டக் கோணூசி, a flattened and grooved needle.
8. வட்டகை, an instrument for hollowing out — Scoop.
9. செப்புக் குழைச் சலாகை, a probe made of copper with a tube inside.
10. பஞ்ச முக செப்புச் சலாகை, a probe consisting of five faces made of copper.
11. களச்சிக் கோல், a cauterising rod used in surgery —Cautery.
12. தெண்டுச் சலாகை, a kind of blunt probe, i. e., a probe with a blunt end.
13. நயனக் கத்தி. இது கண் படலம், விழி பிதுக்கம் இவைகளை அறுக்க உபயோகப் படும், a delicate instrument or knife used in operations for cataract and for excising staphyloma of the cornea.
14. வட்ட மயிர்க் கத்தி, a kind of pare or clipper for removing the hair.
15. சூட்டுக் கோல், red hot iron or hot needle for scaring the skin of children; cautery needle.

16. சுடுப்புளிச் சோல், a cautery rod for scorching the morbid flesh.

17. படலஞ்சி, a needle for removing cataract—Cataract needle.

NOTE.—Pricking of cataract by a needle—this treatment is resorted to only when cataract is more chronic as it is one of the most delicate operations. Though the needle is pointed enough to penetrate, yet it should not be too fine. The needle should not be entered timidly, for, a man of even moderate experience will be sometimes mistaken.

Opthalmology was one of the most highly developed branches in Tamil Siddha Medicine because of the prevalence of eye affections in ancient India. Diseases as many as ninety-six were recorded in Agastya's work on Opthalmology called Nayana Vithi (அகஸ்தியர் நயன விதி)

18. கைப் படை, பிடியிடாக் கைவாள், a hand saw with a handle for cutting bones—Crown saw.

19. கைவிடாப் படை, கையை விட்டு நழுவாக் கருவி, an instrument for holding anything difficult to be held by the hand—Forceps.

20. கல் குருவி, மூத்திரக் கற்களை உடைக்கும் மூலிகை, a drug for crushing or removing the stone in the bladder—Gravel plant; 2. மேற் கண்ட கற்களை உடைக்கும் ஒரு கருவி, an instrument used for the same purpose—Lithotrite.

NOTE.—The names of the remaining six instruments are not to be traced. Even the descriptions and uses of the instruments mentioned above are not clearly mentioned in Tamil; and so, it is afraid that the translations given here may not be so very accurate.

NOTE.—Although Surgery seemed to be rather poor in the Tamil system, it is said that Therayar removed a portion of the skull and treated with success. Operation appeared to have been common among many primitive peoples in connection with ritual medicine, even when there has been no head wound; and this used to be done just to avoid as an early measure inflammation or other subsequent complications.

II. ஆயுர் வேதப் படியும், சத்திரக் கருவிகள் பொதுவாக இருபத் தாறுகவே சொல்லப் படும். இவைகள் சுத்தமான எஃகினால் உருக்கி வார்த்து, கருக்குள்ளதாகவும் பிடிகள் அமைக் கப்பெற்றன வாயும், செய்யப் பட்டவை. மேலும், எந் தெந்த ஆயுதங்கள் எந் தெந்த நோய்களுக்கு உபயோகிக்க வேண்டியிருக்கிறதோ, அதற்குத் தகுந்தபடி அமைத்து, கையாள்வதற்குத் தக்கவாறு பிடி நழுவாமற் படிக்கு செய்யப் பட்டவை யென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இக் கருவிகள் அடியிற் கண்டபடி விவரிக்கப் பட்டுள்ளன. (In Ayur Veda), the surgical instruments also consists of 26 kinds in general. It is said that they are made of pure steel, melted and cast in moulds with handles for some of them, so as to be consistent with the purpose for which they are intended. The handle is provided with, so as not to lose the grip in the course of operation. They are enumerated as mentioned under viz:—

1. மண்டலாகாரம்—இது சிறிய வாளைப் போல் முனையில் வளைந் துள்ளது. இது கண்ணோய் களுக்கு உபயோகிக்கப் படும், it is a knife resembling a small saw bent at the end, employed in cases of eye diseases.

2-3. விருத்தி பத்திரம்—நீண்ட முனையுடன் ஒன்று முனையில் வளைந்தும், மற்றொன்று வளை வில்லாமலும் ஆக இரு வித கத்திகள். இவைகளில் ஒன்று விரணங்களை அறுத்து, கிழித்து, வெட்டுதற்கு அமைந்தவாறும், மற்றொன்று ஆழமான விரணத்திற்காக வளைந்த முனையை பின் பக்கமாக உபயோகிப் பதற்காகவும் தகுந்த படி அமைக்கப் பட்டது, it is a knife consisting of two kinds—one is a straight one and the other bent at the end; the former is used for tearing, incising, and cutting; and the latter for deep-seated wounds so that the bent end may penetrate deeply.

4-5. ஏஷணி—இது நாகப் பூச்சி முகம் போன்ற சலாகை. இது மேற் கண்ட படி முனையில் வளைந்தும், வளையாததுமான இருவகைத்து. ஒன்று ஊசி போல் கூராகவும், மற்றொன்று முனை மழுங்கியும், அடியில் துவாரமுமுள்ளது. இவை விரணங்களில் புரையோடும் வழியைத் துழாவிக் கண்டு

பிடிக்க உதவும்படியானவை, a probe resembling the face of an earth worm. As mentioned above in No. 2-3, this also consists of two kinds—one straight and the other bent at the end ; the former is pointed like a needle, while the latter is blunt with a hole at the end. They are used for exploring the depth of wounds and their sinuses.

6. அங்குலி சத்திரம் — பெருவிரலில் மாட்டிக் கொண்டு, தொண்டைக்குள் நுழைத்து விரணங்களை அறுக்கவும், பிளந்து சிகிச்சை செய்வதற்குப் பொருந்தும் படியாகவும், அமைக்கப் பெற்று, கத்தரிப் பிடி போன்றதாயும், இரு தாள்களுமுள்ள ஓர் கருவி, an instrument with handles and blades like scissors, made so as to be adaptable for thrusting it into the throat for incising and cutting the wounds therein.

7. உத்பல பத்திரம் — செய்தமலரின் இதழைப் போன்றதும், சிறிது நீண்ட முகமுடைய கத்தி. இது விரணங்களை அறுப்பதற்குபயோகப் படும், a lancet of a short length with a blade like the petal of a water-lily, used ordinarily for cutting wounds.

8. அர்த்த தாரை — குறுகிய முகமுள்ள கூர்மையான கத்தி. இதை விரணங்களைப் பிளப்பதற்காக உபயோகப் படுத்தப் படும், a surgical knife with a narrow face and pointed end used for splitting.

9. சாரி முகம்—மிக்க நீண்டும், பறவையின் அலகு போன்ற முனையையுமுடைய ஓர் விதக் கத்தி. இது இரத்தப் போக்கை யுண்டாக்க உபயோகப் படும், a long knife with a sharp end like a bird's beak, used for promoting bleeding or hemorrhage.

10. திரி கூர்ச்சகம்—மேற் கண்டபடி நீளமானவும், முனையை மூன்று முகமாகத் தட்டியும் அமைத்த கத்தி. இது இரத்தப் பெருக் குண்டாகச் செய்யும், a long knife like the one mentioned above in No. 9. with three flattened ends, used for promoting bleeding.

NOTE.—(*In Surgery*). It is expedient to cause blood to flow from a wound abundantly ; for thus will the wound and the adjacent parts be less attacked with inflammation.

11. படிசம் — தூண்டில் முள்ளைப் போல் வளைந்தும், அடிப் பக்கம் பிடியுள்ளதாயும் அமைத்த ஓர் சத்திரக் கருவி. இது தொண்டைக்குள் சதை வளர்ச்சி அல்லது வீங்கிய மேகப் புண்களையும், அதன் பாகங்களையும் பிடித்துக் கொண்டு சிகிச்சை செய்வதற்குபயோகமானது, an angle-like thin rod with a bent end and a handle at the other end used for holding fast the morbid growth or other syphilitic ulcers and the adjoining swollen parts for purposes of operation in the throat, a kind of forceps.

12. குடார அல்லது குச பத்திரம்—தர்ப்பையைப் போல் நீண்டும், முனையில் கூருள்ளதும், நடுவில் சிறிது அகலமாயுமுள்ள ஓர் கருவி. இது வாயினின்று இரத்த ஒழுக்கை யுண்டாக்க உபயோகப் படுத்தப் படும், a long knife with a pointed end and little broader at the middle, resembling the blade of sacrificial grass, used to increase bleeding from the mouth.

13. அந்தர் முக சத்திரம்—கத்தரியைப் போல் உட்புறமாக கருக்கு வாய்ந்த கத்தரி. இது சதை பாகம் அல்லது தோலை கத்தரிக்க உதவும், a scissors-like instrument sharpened on the inner-side used for cutting the fleshy portion or the skin.

14. அர்த்த முகம்.—இது மேற்கண்ட 13ல் கண்ட விதமாகவே அமைக்கப் பட்டு, முனையில் பிறை வட்டமாகத் தெட்டிய கத்தரி. இது சதையை மேற்கண்டபடி கத்தரிக்க உதவும், scissors made like the one mentioned above in No. 13, but with crescent-like ends on the two blades, used for the same purpose of cutting.

15. விரீஹி முகம்—நெல் முனையைப் போலவும், முனையில் 1½ அங்குலம் தட்டி கூர்மைப் படுத்திய கத்தி. இது இரத்தக் குழாயையும், வயிற்றையும் பிளப்பதற் குபயோகப் படும், a knife sharp like the paddy end and flattened to a length of 1½ inches, used for opening blood-vessels and the stomach.

16. சர்ப்ப முகம் — பாம்பின் முகத்தை யொத்த முனையும், ½ அங்குலம் கருக்கு வாய்ந்ததாயு முள்ள கத்தி. இது மூக்கினுள்ளும், காதினுள்ளும் மூல முளைகளைக் களைவதற்கு முபயோகப் படும், a surgical knife with an end resembling the face of a snake, and flattened sharp to a length of half an inch. It is inserted into the nose or ears for removing the polypus.

17. வேதச பத்திரம் — வஞ்சி இலையைப் போன்ற முனையையும், கூர்மையு முள்ள ஓர் கத்தி. இது குத்துவதற் குதவும், a lancet with sharpened end resembling the blade of a Vanji leaf. It is used for punc. turing wounds.

18. குடாரி — பசுவின் பல்லைப்போன்ற உருவமும், அரை அங்குலம் கூர்மையு முள்ள, ஓர் சிறு கைக் கோடரி. இது ஒரு தண்டத்தில் இணைக்கப் பட்டுள்ளது. இது எலும்புகளின் மேலுள்ள நாடி ரத்தக் குழாயைக் கீறி மறைந்துள்ள வெளி வஸ்துவை நீக்க உபயோகிக்கப் படும், a small axe-like instrument, oblong in shape like the teeth of a cow, with a sharp edge about half an inch in length. It is fixed to a rod and is used for cutting the veins over the surface of bones to trase out the foreign matter lying concealed.

19. சூசி முக சலாகை—இரண்டு செம்புக் கம்பிகளின் முனைகளை மருதோன்றி மொக்கைப் போல் தட்டி அமைக்கப் பெற்ற சலாகை. இது லிங்கநாசம் என்னும் கண்ணோயில் கண்ணுக்குள் பிரயோகித்துக் கீறிட வுதவும், two-faced probe flattened at the ends of two copper rods and fixed with a knob like the bud of henna-flower. It is used in cases of amaurosis or total blindness in which the lens is affected.

20. சிர பத்திரம்—சிறிய கை வாள். இது 10 அங்குல நீளமும், 2 அங்குல அகலமும், மிக்கக் கூர்மையான பற்களும் கைப்பிடியு முள்ளது. இது சிரசு எலும்புகளை அறுக்க உதவும், a small hand-saw about 10 inches long and 2 inches broad with sharp ends and a strong handle. It is used for sawing bones of the head.

NOTE.—If this is a crown-saw for removing the bone chiefly from the skull, care should be taken to use it as sparing as possible unless the treatment may seem beneficial to the lesion. This trephine treatment is considered rather dangerous, and should therefore be avoided as much as possible.

21. கத்தரி—சாதாரணமான கத்தரியைப் போன்றது, ஆனால் மிக்க கூர்மை யுள்ளது. இது தசை நார், நரம்புக் கயறு, மயிர் இவைகளைக் கத்தரிக்க வுதவும், scissors like the ordinary one, but very sharp. It is used for cutting muscular fibres, ligaments, hairs etc.

22. நக சத்திரம்— இதுவே தட்டையான 9 அங்குல நீளமான நகம் வாங்கி. இதில் ஒரு முனை வளைவாகவும், மற்றொன்று மிக்கக் கூர்மையாகவு முள்ளது. இது முள் எடுத்தல், சதை கீறல்; சொரிதல், முதலிய வற்றிற் குபயோகப் படும், nail-cutter 9 inche long, made of iron. It is long and flat, with one end shaped like a curve, and the other simply flat. It is used for removing thorns by probing, scraping, etc.

23. தந்த லேகம்—பற்களின் பின் புறம் படிந்துள்ள காரைகளை சுரண்டுவதற்காக உபயோகிக்கும் நாற் சதுர முள்ள கருவி. இதனால் பல் சுத்த மாகும், a tooth scraper of quadrangular shape used for removing the concretions accumulated behind the teeth ; and so, it serves for cleaning the teeth.

24, கஜம்—எட்டு முட்களை வட்ட முனையில் அமைக்கப் பெற்று, நாசியினுள் புகட்டி மத்தைப் போல் கடைந்து, கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்த வுபயோகிக்குங் கருவி, a nose probe fixed at one end with 8 thorn-like processes on a round base. It is used for introducing into the nostrils and churning or agitating the wall for bringing out the contaminated blood.

25. ஊசிகள் — சருமத்தைத் தைப்பதற்காக உபயோகிக்கும், மூன்றுவித திடமான எஃகு ஊசிகள். சமயத்திற்கு தகுந்தபடி இவைகளை உபயோகப் படுத்தப் படும், strong, durable steel needles used for stiching the cut ends of the skin. It consists of 3 kinds used according to circumstances.

26. ஆரா — நான்கு பட்டைகள் திரந்து. சதைக்குள் அரை அங்குலம் பாயக் கூடிய அரம். இது காதி னுள்ளே புறப்பட்ட விரணத்தைக் கொந்தி யெடுக்க உபயோகப் படும், a four-faced probe resembling a small iron file, used for probing into the wound of the ear.

NOTE.—1. It can be seen that some of the twenty instruments already described in the Siddha system are in a way similar to those of Ayur Veda mentioned above, but with slight variations according to some diseases peculiar to the South India, and of late, to the advancement of Medical Science.

NOTE.—2. In Ayurveda, the instrumental part of surgery is of eight kinds viz:—(1) Chedanam—excision; (2) Laikhanam—drawing lines, applicable to scarification and inoculation; (3) Vyadhanam—puncturing; (4) Yaishanam — probing; (5) Ahauryam—extraction of solid bodies; (6) Visrauvanam — extraction of fluids; (7) Sevanam—sewing; (8) Yantram, including a great variety of instruments such as—tongs (sandamsham), needles (soochy), teeth instruments (danta shankoo), saws (kara patram), tubular instruments (naudy), lancets (mandalakaram), knives (Artha dhauram or cootauricam).

Again of bandages there are fourteen kinds, of rods and sounds, and instruments for eradicating nasal palypi or naocram, a great variety. Actual cautery with heated metals is very commonly employed by Veidyans, who also use a cautery prepared with hot seeds, combustible substances or inflamed boiling liquids of a gelatinous or mucous consistence. No operations in surgery of any nicety are now ventured on, but dislocated joints are replaced and fractured limbs set by a class of men who also apply leeches (attay). The Veidyans being Sudras are not permitted to peruse the sacred Ayurvedam. Particular god superintend the different parts or functions of the body, and to them prayers are offered before operations are performed or medicines exhibited.—(A. R. Glossary.)

III. மேனாட்டு ஆங்கில வைத்தியத்திலோ, எண்ணிறந்த சத்திரக் கருவிகள் ஏற்பட்டுள்ளன. ஆயினும், நாட்டு வைத்தியத்தில் உபயோகித்து வந்த கருவிகளுக்கு சமமாக தற்காலத்தில் சாதாரணமாய் கையாளப் பட்டு வரும் சில கருவிகளை மாத்திரம் அடியிற் குறிக்கப் பட்டுள்ளன, அவையாவன, in the Allopathic science of the West will be found innumerable instruments in use in Surgery, but only some of the important and common ones resembling those that were in use in Indian Surgery of ancient times, are mentioned here for information of the readers viz:—

1. இரண்டு பக்கமும் பிடி வைத்து உடம்பில் ஒரு அங்கத்தை கவ்வும்படியாகவும், இழுக்கும் படி யாகவும் அமைத்த குறடு, an instrument with blades and handles for grasping and pulling any organ of the body—Forceps.

2. பல் பிடுங்கும் குறடு, forceps for extracting teeth—Dental forceps.

3 இரணங்களைக் கழுவி சுத்தி செய்ய கத்தரி போன்ற பிடியுள்ள குறடு, forceps with scissor-like handles for grasping lints in dressing wounds—Dressing forceps.

4. எலும்புகளை அறுக்க வுதவும் குறடு, forceps used for cutting bones—Bone-forceps.

5. பிண்டத்தை வெளிப்படுத்தும் பிரசவக் குறடு, forceps for making traction on the fetus in cases of difficult labour — Obstetric forceps.

6. தொண்டையுள் அடைத்துக் கொண்டதை எடுக்கும் நீண்ட குறடு, a

long forceps used for removing foreign bodies obstructing the throat—-Throat forceps.

7. பூச கருவி, au instrument for making local application — Applicator.

8. திரிகோண படலக் கத்தி, a knife with triangular - shaped blade used in operations for cataract —Cataract knife.

9. சுடும் கத்தி, cautery knife.

10. பிரயோகக் கத்தி, long-bladed knife.

11. சூட்டுக் கோல், red-hot iron used as a cauterising agent— Actual cautery.

12. காந்த சூட்டுக் கோல், electric cautery for charring the tissues.

13. நீராவிச் சிகிச்சை, treatment by direct application of superheated steam.

14. குழல் கத்தரி, probe-pointed scissors for slitting canal lengthwise.

15. விழி நுட்பக் கத்தரி, délicate scissors for operations on the eye-balls.

16. சலாகை, a probe for exploring a wound.

17. கத்தரி சலாகை, scissors - probe.

18. கம்பிச் சலாகை, wire probe used for wounds surrounding the tongue.

19. கருக்குழி சலாகை, a probe for uterine exploration—Uterine probe.

20. படல ஊசி, a needle used for removing a cataract–Cataract needle.

21. நாடிப் பிடியூசி, a needle with a handle for ligating blood vessels.

22. குத்தூசி, needle for puncturing or injecting—Hypodermic needle.

23. தைக்கு மூசி, sewing needle.

24. தட்டை யூசி, a flattened and grooved needle.

25. சோதனை யூசி, exploring needle.

26. பிரசவ கத்தரி, a short and strong bladed scissors with external cutting edges used in difficult labour for cutting fetel head to facilitate delivery.

NOTE.— The ancient writtings on the subject of surgery as well as many surgical instruments will be found in Tamil Siddha Medicine by Agastiya, so far as I was able to gather. It is to be noted that in ancient times all healing as opposed to medicaments was done by the operation of the hand. Among the ancient surgical instruments, will be found bleeding cups, forceps, dilaters, knives, scissors, probe etc., which occupied a prominent place.

சத்திரக் கில், அவரை, country bean—Dolichos albus.

சத்திரக் குறடு, சத்திர சிகிச்சையில் உபயோகிக்கும் குறடு, surgical pincers.

சத்திர சலாகை, விரணங்களை சோதிக்கும் இரும்புச் சலாகை, an iron or steel probe used for exploring wounds.

சத்திர சாதி, சாதி பத்திரி, mace or pulp of nutmeg—Myristica fragrans.

சத்திர சாமம், இலந்தை, Indian almond — Zizyphus jujubi ; 2. நடு இராத்திரி, mid-night.

சத்திர சிகிச்சை, நமது நாட்டு வைத்தியத்தின் படி சிகிச்சை கிரமம் மூன்று வகைப்படும்.— 1. தேவ சிகிச்சை, 2. மானிட சிகிச்சை, 3. இராட்சஸ சிகிச்சை. முதலாவது தேவ சிகிச்சை. இது மணி மந்திர ஔஷதங்களால் தீர்க்கப் படுவது; இரண்டாவது சாதாரண முறைப்படி மருந்துகளைக் கொண்டும் நோய்களைக் குணப்படுத்துவது; மூன்றாவது, இராட்சஸ சிகிச்சையோ கத்தி, கருவிகளைக் கொண்டு அறுத்தும், மருந்திட்டும், தீர்ப்பது. ஆக இத்தகைய மூன்று வித வைத்தியங்களில், ஆயுள் வேதத்தில் 2, 3. ஆகிய மானிட சிகிச்சையும், இராட்சச சிகிச்சையும் சேர்ந்துள்ளன; சித்த வைத்தியத்தில் 1, 2. ஆகிய தேவ சிகிச்சை, மானிட சிகிச்சையும் சேர்ந்தது. ஏனெனில் இவ்வைத்தியம், வாத, வைத்தியம், யோகம், ஞானம், ஆக நான்கையும் அனுசரித்து கூறியுள்ளது. ஆகவே, 3-வது இராட்சஸ சிகிச்சைக்கு அதிக தேவை யில்லை. நோய்களை மருந்து மாந்திரீகம், முதலிய வற்றினாலே தீர்த்து விடக் கூடும். மேலும் சித்த வைத்தியத்தில் சத்திர வைத்தியத்தைப் பற்றிய நூற்களோ மிகவும் சிறிது. மேனாட்டு வைத்தியத்திலோ, மூன்றாவதாகிய சத்திர சிகிச்சையே முக்கியமாய் கையாளப் பட்டு வருகிறது.

ஏனெனில் வைத்திய பாகம் மிகவும் சிறிதே. ஆகவே, இவ் விதம் வைத்தியத்தில் தீராத நோய்களை ஆயுர் வேதத்திலும் சித்த வைத்திய முறையிலும், எளிதில் தீர்த்து குணப்படுத்துவதை, நாம் கண் கூடாகப் பார்க்கிறோம், (*In Indian Medicine*), the treatment consists of three kinds viz:—(1) Spiritual or divine treatment; (2) Medical treatment relating to the physical needs of man or to the bodily wants, comforts etc.; (3) Treatment by operation with surgical instruments and with medical appliances. Ayurveda consists of treatments in Nos 2 & 3; whereas, Siddha system comprises Nos. 1 & 2 for the reason of its being based on Alchemy, Medicine, Yoga and Philosophy which are considered as the four corner stones of Medical practice. So, there was no necessity for the third kind of treatment; and the works relating to this surgical treatment are exceedingly very few. It is known in our common experience that diseases which could not be cured by operation by Allopathic treatment, are easily treated by Ayurvedic and Siddha systems.

NOTE—Surgical treatment is purely based on observation and experiment; whereas the other two, are on spiritual knowledge and the prescriptions of the ancient Sages and Siddhars; and therefore the former is subjected to many theories which may in course of time explode one after the other as Surgery and the surgical instruments are advancing by new discoveries and improvements. In the indigenous Medical practice, this is not so, as according to the ancients, the truth and principles involved are always the same and could not be changed; and so the physician who is directed to the path of rightousness, justice and truth, has simply to follow the works of the ancients without any suggestion or supposition on their part unlike the Modern Allopathic treatment which is based on material knowledge and culture.

சத்திர சிட்கா, சத்திர வைத்தியத்தில் இலகுவான சிகிச்சை, அதாவது கட்டு கட்டல்; பத்தை கட்டல், சுத்தி செய்தல் முதலிய வற்றைக் கூறும் நூல், that branch of Surgery which is connected with less operations such as, bandaging, application of splints and dressings—Minor surgery.

சத்திர சேதனம், கத்தியா லறுக்கை, operation with knife; 2. கத்தியால் துண்டித்தல், amputation with knife or saw.

சத்திரசோ புட்பம், குழலா தொண்டை, caper shurb—Caparis aphylla.

சத்திரட் சதை, கத்தி கொண் டறுத்தல், operating with a knife.

சத்திரண்டம், அரக்கு, lac; shellac.

சத்திரத் தானம், உடம்பில் சாதாரணமாக விரணம், கட்டி, கழலை, முதலியவைகளுண்டாகி, கத்தி கொண்டு அறுக்க வேண்டி வரும் முக்கியமான பாகங்கள்—தோல், இறைச்சி, நாடி நாளம், சில், எலும்பு, முக பாகம், தலை, கழுத்து, வயிறு, மர்ம ஸ்தானம். இவற்றைப் பற்றிய விரணங்கள் ஒன்றுக் கொன்று கொடியதாகவே காணப்படும். அன்றியும், திரிதோஷ துற் குணங்களும் பொருந்தியதாகவும் இருக்கும்.

மேலும் தொடை, யோனி, குதம், ஆண் குறி, உதடு, முதுகு, உள் வாய், தாடை, கண், கடைக் கண், பல், நாக்கு, பெரு நரம்பு சிறு நரம்பு, வயிறு, கை, இவ்விடங்களிற் காணும் விரணங்கள் சத்திர சிகிச்சைக்கு மிக்க கஷ்ட சாத்தியமாகும்,—the operation centres or regions in the different parts of the body in general, irrespective of the organ itself are — skin, flesh, or muscles, artery, veins, joints, bones, facial parts (head, nose, ear, eyes.), neck, and the genitals.

Moreover, the wounds or other injuries occuring on the thighs, the genitals of males and females, anal region, back, mouth interior as throat, teeth, tongue, etc., arteries, and veins, stomach, ear, the sides, arm-pit, womb, breasts etc., are considered difficult for operation and cure.

சத்திர பேட்சம், பேயத்தி, devil's fig—Ficus hispida.

சத்திரப் படை, பொதுவாக சத்திரக் கருவிகள், surgical instruments in general.

சத்திரப் பிரயோகம், கத்தியை உடம்பிற் செலுத்தல், inserting knife into the body; 2. இரண வைத்தியம், operative surgery.

சத்திர மிடல், see சத்திரம் வைத்தல்.

சத்திர மேயோதி, ஆற்று மருந்து, any drug or composition useful in the cure of wounds; medicines used for healing operated wounds and sores—Vulnerary.

**சத்திரம்**, இரண வைத்தியம், surgery; 2. சத்திரக் கத்தி, surgical knife or lancet; 3. இரும்பு, iron; 4. தும்பை, leucas flower; 5. கவிழ் தும்பை, stooping leucas flower —Borago indica; 6. கைவிடாப் படை, forceps; 7. கைவேல், lancet.

**சஸ்திரம்**, see சத்திரம்.

**சத்திரம் செய்தல்**, see சத்திரம் வைத்தல்.

**சத்திரம் செய்வோன்**, உடம்பில் கத்தியிட்டறுப்போன், the person who performs some curative operation upon the human body; 2. இரண வைத்தியன், a surgeon; 3. இரணங்களைக் கீறும் பரியாரி அல்லது அம்பட்டன், a barber who was formerly authorised to practise surgery — Barber surgeon.

**சத்திரம் பண்ணல்**, கத்தியா லறுத்தல், to make an incision; 2. கத்தி அல்லது வேறு கருவியால் அறுத்தல், to cut with a knife or other instrument.

**சத்திரம் பண்ணி யாற்றல்**, விரணத்தை அறுத்து குணப் படுத்தல், to heal up a wound by operation.

**சத்திரம் வைத்தல்**, கருவியா லறுத்து மருந்திடல், to perform operation and apply medicine; 2. விரணம் செய்தல், to scarify.

**சத்திரய நாயி**, see சத்திரிய நாயி.

**சத்திர வாள்**, அறுக்கும் கை வாள், a small hand-saw used in surgery.

**சத்திர விதி**, சித்த நூற்படி சத்திரம் செய்வதற்காக வேண்டிய 26 ஆயுத விவரங்களையும், அவைகளின் இலட்சணங்களையும் கூறும் நூல், (*In Siddha Medicine*), that branch of science which treats about the description, uses, etc. of the 26 instruments and their employment in operation—Surgery; 2. விரணம், புண், கட்டி, இவைகளை அறுப்பதில் அனுசரிக்க வேண்டிய முறைகளைப் பற்றிய விதி, rules of surgery regarding the mode of operating wounds, abscess etc., and the principles involved in each case.

**சத்திர வியாதி**, கத்தி அல்லது வேறு கருவி கொண்டு சிகிச்சை செய்யக்கூடிய நோய்கள், diseases requiring operation with knife or other instruments—Surgical diseases.

**சத்திர விதி விலக்கு**, இரணங்களை அறுக்கக் கூடாத திதிகள் இத் திதிகளாகிய அடியிற் கண்ட நாட்களில் பிரதிதினமும், அமுதம் உடம்பில் வெவ்வேறு இடங்களுக்கு மாறி நிலைத்தலால், அவ் வமுதம் தங்குமிடத்தில் கட்டிகள், காயங்கள் ஏற்பட்டு கத்திகொண்டு அறுத்தாலும், அல்லது அட்டை, பாம்புகள் இவ் விடங்களில் கடித்தாலும், கொப்புளங் கண்டாலும், அடி அல்லது குத்துப் பட்டாலும் மரணம் ஏற்படுவது நிச்சயம். ஆகையால் அமாவாசியை அடுத்த பதினைந்து நாட்களில் கீழ்கண்ட தினங்களில் காட்டியுள்ள படி அவ்வவ் விடங்களில் சத்திரம் செய்யப் படாது விலக்கல் அவசியம். அவையாவன, the following are the days prohibited for operation with knife. On these days it is said that the vital fluid is changing its centre to different parts of the body each day as pointed out below. So, on these days, operation on that part of the body affected with abscess or other injuries, or snake-bites, or appearence of boils, carbuncles etc or other injuries from either accident or traumatic causes, is strictly prohibited, lest such operations indiscriminately done is sure to end in death. So, it is not advisable to take up such cases in contravention to the rules. The fifteen days mentioned below are those following the new moon day in the serial order viz:—

1. பிரதமை—பெரு விரல், the big toes.
2. துதிகை— உள்ளங் கால், sole of the feet.
3. திரிதிகை— முழங் கால், the knees.
4. சதுர்த்தி — பெருந் தொடை, the two thighs.
5. பஞ்சமி—குயயம், (குசம்), the genitals including anus.
6. சஷ்டி— நாபி, navel region.
7. சப்தமி— முலைகள், the breasts.
8. அஷ்டமி— கால் கைகள், the limbs arms and legs
9. நவமி— கழுத்து, the region of the neck.
10. தசமி— அதரம் அல்லது உதடு, the lips.
11. ஏகாதசி— நாக்கு, the tongue.
12 துவாதசி— நெற்றி, the fore head.
13. திரியோதசி—புருவம், the eye brows.
14. சதுர்த்தசி—பிடரி, the nape.

15. பூரணம்— தலை உச்சி, the crown of the head.

NOTE.—In the Erotic Science of Kokkoga-muni, it is said that woman have ambrosial fluid, (அமுதம்) as it is termed, which changes everyday similarly as described above, to the different organs of parts of the body such as thighs, the genitals, the navel, the breasts, tongue, forehead, nape or neck etc. The husband is expected to be familiar with this art, and gently press the women on that part of the organ ascribed to that particular day (one of the fifteen days after new moon). This is done simply to excite the passion of a woman for the reason that such ambrosial fluid situations forms the chief centre of sexual passion and so, the woman who is kissed or impressed with nail-marks, or sucked with lips etc. used to grow voluptuous and yield herself to coitus or sexual intercourse, if only its technique is properly understood and employed as laid down in the said science of the ancients. No doubt it sets up a current of nervous stimulation which is directed into the sexual sphere. It is marvellous to find that the ancients were masters in this branch of Sexual Science.

சத்திர வித்தை, இரண வைத்தியக் கல்வி, அதாவது புண், புரை, கட்டி, முதலியவைகளை அறுக்கும் விதம், வழி, முறை இவைகளின் இரகசியங்களைக் கூறும் நூல், the science of surgical appliances ; i.e., the operative branch of medical practice dealing with the ways and means of cutting ulcers, wounds, abscesses, etc. — Surgical anatomy.

சத்திர ஊசி, சத்திர சிகிச்சையில் உபயோகிக்கும் ஊசி, the needle used in surgery.

சத்திப வேரி, see சாத்தா வாரி.

சத்திர வைத்தியம், அறுத்து மருந்திடும் சிகிச்சை, the art of operation and insertion or application of medicine ; 2. பொதுவாக எல்லாவித சத்திர சிகிச்சை, that branch of science which deals in general with surgical cases of all kinds--General surgery.

சத்திர வைத்தியம் செய்தல், கத்தியா லறுத்து புண்ணுக்கு மருந்திட் டாற்றல், to operate and then apply curative medicine or other healing appliances.

சந்நி பாத வரோசகம், ஓர் வகை ஓக்காளம். இதனால் வயிறு கெட்டு, வெறும் வாய், வாயில் விட்ட பண்டம் அல்லது வாயிலூறும் நீர் இவைகளை ஓக்காளிப்பது. இது வயிற்றுக் கோளாறினால் ஏற்படும், a form of nausea or tendency of vomiting either empty mouth or of the substance taken into the mouth or of the saliva secreted from the mouth. It is due to some disorders of the stomach.

சந்நி பாத விஷ பாகம், சன்னி பாத சுரத்திற் காணும் ஓர் விஷநோய். இதனால் சேறுபோற் பேதி, குத்தல், விரணத்துடன் இரத்தங் கசிதல், சுவாச சுரம், மயக்கம், முக வீக்கம், அதி வியர்வை, அசதி, பிதற்றல், முதலிய குணங்களை யுண்டாக்கும். இது சாதாரணமாய் இரத்தக் கேட்டினா லேற்படும், blood poisoning resulting from typhoid fever. It is characterised by discharge of semi-solid stools, pin-prick pain, oozing of blood from the ulcerated or inflamed parts, remittent fever, giddiness, swelling of the face, profuse perspiration, fatigue, delirious talks, etc. It is due to the poisonous matter entering the system through the circulation of blood.

NOTE.—According to modern scienc, it is a morbid condition due to the presence of some micro-organisms and their associated poisons, arising from septic infection.—Septicemia.

சந்நி பாதா சிர்க்கர ரோகம், பெண்களுக்கு உடம்பில் சுரமும், மூர்ச்சையும் உண்டாகி மல மூத்திராதிகள் நாற்றத்துடனும் வெளிப்படும் ஓர் வகை சன்னி பாத சுரம், a kind of typhoid fever affecting females. It is marked by fever, swoon, fetid discharge of feces, urine etc.

சந்நி பாதோஷ்டம், சந்நி பாத சுரத்திற் காணும் உதடு வெடிப்பு. இதில் இரத்தம் கசியும், typhoid fever followed by fissure or cracks of the lips attended with bleeding.

சந்நி யாந்தம், குழந்தைகளுக்கு காணும் ஓர் வகை மாந்த நோய். இது அதிகரிப்பதனால் சன்னி பாத குறிகளைக் காட்டும், a severe type of indigestion or gastric disturbances in children, which if developed, may lead to the symptoms of typhoid.

சந்நியம், தேகம், body; 2. மர மஞ்சள், tree turmeric. —Coscinum fenestratum.

சந்நியாச வாதம், சன்னிக் குறிகளோடு கூடிய வாத நோய், gout attended with symptoms of apoplexy; 2. சீதள பண்டங்களை சாப்பிடுவதாலும், சீதளமான விடத்தில் வசிப்பதாலும் பிறந்து, உடம்பு முழுவதிலும் வலி யுண்டாகி, அசைவற்றுக் கிடக்கச் செய்வதுடன் சில சமயம் நடுக்கத்தையும் உண்டு பண்ணு மோர் வாத நோய், a kind rheumatism arising from taking substances developing cold, or by dwelling in

chilly places. It is marked by pain all over the body, and great prostration sometimes attended with trembling.

சந்நியாச யோகம், முற்றுந் துறந்த பின் செய்யும் யோகம். இத்தகைய வைராக்கியத்தினால் தான் சீவான்மா பரமான்மா வோடு கலத்தற்கு ஏது வாகும். Yoga practised after complete renunciation. It is this sort of self-determination that will enable a Yogi to unite the individual soul with the Universal soul.

NOTE.— The life of renunciation offers the best oppurtunity of pursuing the uninterrupted search after Truth. It is only by giving up this world that the other comes. Never yet was there a great soul who had not to reject sense of pleasures and enjoyments to acquire greatness. So, renunciation implies the sacrifice of the lower-self with a view to manifest the higher—the Knowledge of Unity.

சந்நியாசி ரோகம், திரிதோஷ கோளாறினால் மூர்ச்சை யற்று பிணம் போற் கிடந்து கொஞ்ச நாளைக்குள் மரணத்தை யடையச் செய்யும் ஓர் நோய், a nervous prostration due to the derangements of the three humours; and it is marked by unconsciousness with great nervous prostration or suspended animation, finally ending in death. See also சன்னியாசிரோகம்.

சந்நியை, தோழி, a female companion.

சந்நிருத்த குதம், ஆசன வாய்ச் சுருக்கம், contraction of the orifice of the anus.

சபகம், மூங்கில், bamboo — Bambusa arundinacea.

சபடம், அறுகு, cynodon grass — Cynodon dactylon.

சபதம், இந்துப்பு, sea-salt; rock-salt; 2. மூங்கில், bamboo — Bambusa arundinacea.

சபதன், செம்பரத்தம் பூ, Chinese rose mallow — Hibiscus Rosa-sinensis.

சபதா கிதம், ஆட்டப்பன் கொடி, goat's foot creeper — Ipomaea bilobus.

சபத்திரகம், பெருங் கம்பிப் பூடு, large cape jasmine — Gardenia latifolia.

சபம், ஆலம் விழுது, long aerial roots hanging down the branches of the banyan tree; 2. பிணம், corpse; 3. மூங்கில், bamboo; 4. குதிரைக் குளம்புச் செடி, arrowhead plant — Saggiteria obtusifolia.

சபர சிந்தாமணி, மலையாளத்து மலை வாசிகள் சபிக்கும் மாரண மந்திரத்தைக் கூறும் ஓர் கர்நாடக மந்திர நூல். இதன்படி சுடு காட்டில் நிர்வாணமாய் தெற்கு முகமாய் நின்று கொண்டு மாரண மந்திரத்தை தேய் பிறையில் 15 நாள் சபிக்கப் படும், a Carnatic treatise on black art or sorcery practised by the mountaineers of Malabar. According to this, the supreme spell is recited or chanted by standing naked facing the South in a cemetry. This is a process of causing death through Black Magic and is generally done in the wane of the moon and continued for a fortnight.

சபரம், கெண்டை மீன், carp-fish — Cyprinus 2. வெளிச்சிக் கெண்டை, silvery carp — Barbus chola.

சபரி, துள்ளு கெண்டை மீன், leaping carp; flying carp, so called from its jumping in the air — Barbus parrah alias Puntias purrah.

சபல பத்திரகம், அரச மரம், peepul tree — Ficus religiosa.

சபல புத்தி, அடிக்கடி மாறும் புத்தி, fickle-mindedness.

சபல மனம், அடிக்கடி புத்தி மாறுத லுடைய மனம், wavering or changeable mind.

சபலம், இரசம், mercury; 2. மின்னல், lightning; 3. மெலிவு, weakness; 4. பாக்கு, areca-nut — Acacia catechu; 5. நிலையற்ற தன்மை, unstability; unsteadiness.

சபல வெலி, see சபள வெலி.

சபலன், நிட மனதற்றவன், man not firm in mind or purpose; 2. மனதை அடக்க இயலாதவன், one who is unable to control his mind.

சபலா, திப்பிலி, long-pepper — Piper longum.

சபலாதிகம், see சபலா.

சபலி, மாலை வெளிச்சம், evening twilight.

சபலை, see சபலா; 2. நாக்கு, tongue; 3. நிட மன தற்றவள், fickle-minded woman.

சபலோத்தமா, புளி முந்திரிகை, sour grapes — Vitis vinifera; 2. புளிப்பு முந்திரிப் பழம், sour cashew apple — Anacardium occidentale.

சபவலம், கழற்சிக்காய், bonduc nut — Caesalpinia bonducella.

சபள வெலி, ஓர் வகை எலி, இது பல நிறங்களுடையது, கடித்தால் திரி தோஷத்தை யுண்டாக்கி அத்துடன் வாந்தி, மிகு மூர்ச்சை, அதி தாகம் முதலிய குணங்களை யுண்டாக்கும், a species of rat with varied colours; its bite causes derangement of the three humours in the human system. It is followed of course by vomiting, swoon, intense thirst etc.

சபா, see சபா குசுமம்.

சபா குசுமம், செம்பரத்தம் பூ, Chinese rose mallow—Hibiscus Rosa-sinensis.

சபா குயமம், see சபா குசுமம்.

சபா பதங்கம், பெருங்காயம், asafoetida — Ferula asafoetida.

சபா புட்பா, see சபா குசுமம்.

சபா முத்திரை, இரண்டு கைகளையும் இணைத்து விரல்களால் நீரை விடுவது. இதற்கு மானத தீர்த்த மௌனப் படும், அதாவது மனதினால் நினைத்து விடும் தீர்த்தம், (*In Agama Philosophy*), to let water flow out through the fingers by uniting the two palms. As the water is consecrated and offered to a deity, it is known as 'Maunada Theertham', i.e., the sacred water let flow after meditation.

சபாலு, குறிஞ்சா, Indian ipecacuanha — Tylophora asthmatica.

சபாலுகம், வில்வம், bael tree—Aegie marmelos alias Craetaava marmelos.

சபாவல, மின்னல், lightning.

சபா விசாரணை, பிரேத விசாரணை, inquest after post-mortem examination. See சவ விசாரணை.

சபானுக்கிரக சக்தி, சபையோருக்கு அநுக்கிரகம் அல்லது கிருபை செய்யும் சக்தி, the power of blessing an assembly as that bestowed upon sage Viswamitra. See பிரம விசுவாமித்திரம்.

சபின காசிதம், சிற் றரத்தை, lesser galangal—Alpinia galangal (minor).

சபினம், வசம்பு, sweet flag — Acorus calamus.

சபீனம், see சபினம்.

சபு, (English) சவுக்காரம், soap.

சபு பிளாஸ்திரி, சவுக்காரச் சீலை, soap plaster.

சபுஸ்ரீற்று, சவுக்காரக் கல், soap stone — Saponite; 2. மாக்கல், stealite.

சபூக வஸ்னிகம், தீ முறிப் பூடு, a plant counteracting the effects of fire.

சரேடம், உள்ளங் கை, palm of the hand.

சபை, சிவ யோகம், Yoga contemplated in the Saiva system; 2. ஆறாதார நிலைமேற்கொண்ட யோகம், that kind of Yoga in which the six psychic centres are contemplated, 3. திருச் சபை, the sacred hall at Chidambaram wherein Shiva is said to manifest Himself.

சபைக் கோழை, சபையைக் கண்டால் ஏற்படும் பயம், dread of assemblies—Agoraphobia.

சபை மருட்டி, சபை மருளும்படி செய்பவன், one who is capable of causing or inspiring sudden fright or terror in the minds of an assembly.

சபோடா, ஓர் தின்பழம், amood—Pyrus communis.

சப்ஜா, குசும்பா விதை, spogel seed; இதுவே இசப்கோல் விதை, which see; 2. திருநீற்றுப் பச்சை, holy ashes leaf — Ocimum basilicum; 3. செந்துருக்கம் விதை, seed of red saffron tree.

சப்தகம், ஏழு கொண்டது, a collection of seven; 2. ஏழு தானம், கொடுக்கப் படும் ஓர் பிரேத சடங்கு, a religious ceremony performed on the 12th day after death in which 7 things are given as charity.

சப்தக் கிருதி, ஏழு வகைத் தத்துவங்கள், the seven principles of metaphysics including the five organs of action (பஞ்ச கன்மேந்திரியங்கள்).

NOTE.—The Shaivas postulate 96 Tatwas; whereas Saankyas reckon only twenty-five Tatwas or metaphysical entities. See தத்துவம்.

சப்த சடை, ஏழிலைப் பாலை, seven-leaved poon—Alstonia scholaris.

சப்த சந்தானம், see சந்தானம்.

சப்த சன்மம், see சப்த சாதி.

சப்த சாதி, ஏழு வகைப் பிறப்பு, the seven kinds of births. See ஏழு பிறப்பு.

சப்த தாது, உடம்பின் எழு வகை தாதுக்கள், the seven constituent parts of the body viz:—

1. இரச தாது, serum.
2. இரத்த தாது, blood.
3. மாமிச தாது, muscle or flesh.
4. மேதோ தாது, skin.
5. அஸ்தி தாது, bone.
6. மச்ச தாது, marrow.
7. சுக்கில தாது, semen.

சப்த பாணி, எழிலம் பாலை, seven leaved plant—Alstonia scholaris; 2. எழிலை, leaves appearing in whorls of seven; 3. காட்டலரி, wild gannair—Astonia venenata.

சப்த மண்டலம், ஆகாயத்தி லுள்ள எழு வகை வட்டங்கள், அவையாவன, வாயு, மேகம், சந்திரன், சூரியன், நட்சத்திரம், அக்கினி, துருவம், the seven regions or spheres in the sky forming the seats of Air, Cloud, Moon, Sun, Stars and Fire (Spirit or Soul).

சப்த மருத்து, எழு வித வாயுக்கள், the seven kinds of air (Vayu). See சப்த வாயு.

சப்த மாம்சம், இராசி வர்க்கங்களின் எழு பிரிவுகள், (*In Astrology*), the division of the sign of a zodiac into seven equal parts.

சப்தம், எழு சேர்ந்த தொகுதி, a collection of seven; 2. எழு கொண்டது, seven fold.

சப்த ரிஷி, இப்போதைய மன்வந்திர காலத்திற் தோன்றியஎழு ரிஷிகள், அவர்களாவன:—அத்திரி, பரத்துவாசர், கசியபன், அல்லது காசிபன், கௌதமன், சமதக்கினி, வசிஷ்டன், விசுவாமித்திரன், the seven sages as mentioned above are the primeval personages, presiding under different forms over the present manwantaram.

NOTE.—The names of these manwantrams differ with different series. But the seven vedic sages otherwise known as Brahma Rishis (பிரம்ம ரிஷிகள்) or mind born sons of Brahma are: Marecchy, Atry, Angrian, Pulastian, Poelagan, Cratoo, Vasishtan.

சப்த ரிஷி வாக்கியம், தற்கால மன்வந்திரப்படி பிரமாவால் சிருஷ்டிக்கப் பட்ட அத்திரி, பரத்துவாஜன், காசிபன், கௌதமன், சமதக்கினி, வசிஷ்டன், விசுவாமித்திரன் ஆகிய எழு ரிஷிகளால் தமிழில் செய்யுள் ருபமாக தொகுக்கப்பட்ட ஓர் சோதிட நூல். இதில் பல்லாயிரக் கணக்கான ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அவரவர்களின் சுருக்கமான சாதக விவரங்கள் தனிப்பட்ட முறைமையில் எழுதப் பட்டுள்ளது. அன்றியும், இச் சாதகத்தில் பூர்வ ஜென்ம கருமச் செயல்களைப் பற்றியும், இனி அடையும் ஜென்மத்தின் பலா பலனும் சுருக்கமாக கூறப்பட் டிருப்பினும், இப் பிறப்பின் வாழ்க்கையில் நடக்க வேண்டிய இலாப நஷ்டங்கள், சுக துக்கங்கள் முதலான விஷயங்களை கேழ்ப்பவர்கள் ஆச்சரியப் படும்படி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது என்பதற்கு சிறிதேனும் ஐயமில்லை. மேலும், இந் நூலை எடுத்து சொல்பவரின் குற்றத்தினு லன்றி வேறுவித குற்றம் இராது என்பது திண்ணம். ஏனெனில் மகான்கள் வாக்கு எப்பொழுதும் பொய்க்கவே பொய்க்காது, an Astrological work compiled in Tamil verses by the seven Rishis viz:—Athiri, Bharadwaja, Kasiyaba, Goutama, Jamadagni, Vashishta and Viswamitra, created by God Brahma according to the present Manwantram.

This is an individual horoscope containing the life, readings of millions of persons living at the present age, written for the good of humanity. It enumerates the events in life of every individual according to the constellation of stars at the birth of each man. Though an outline is only given of his Karma actions in the previous birth and the fruitions of his future birth, the details of his career in life in the present have been dealt with exhaustively in no ambiguous terms and anyone will be astonished to note the great precision and accuracy of the events narrated therein. No can venture to pass any criticism; and if at all any mistake or palpable error is said to arise, it must be only through the fault of the reader by his diction or interpretation if not by his ignorance. It can safely be said that the sayings of great sages will never fail.

NOTE.—Manwantram is a cycle or period of 30,6,72,000 years intended for world's deluge or destruction. In each Manwantram seven Rishis along with Deities, Kings with their descendants are created and they all perish. These Rishis are the seven Vedic sages or patriarchs known as Brahma Rishis or mind-born sons of Brahma the Creator. The names of the

Rishis of the *present* Manwantram are those given above. They preside over the world for the welfare of mankind and they are the authors of the Astrological work known as 'Saptha Rishi Vakkyam'. It is the predictive branch of Astrology in which the lives history of several thousands of people of the present age i.e., seventh Manwantharam had been compiled and kept wound like a clock. So the life that is led by the present generation is the slow, but sure unwinding of the predestined careers indicated in the said work.

In some cases, the systematic terse and the methodical manner in which the lives have been described seems a marvel defying attempts at elucidation. Every list of events in life seem to be most truthful and veracious. No doubt the authors of this great and voluminous work had recorded several centuries ago the future of the individuals of the present generation, as perceived by them through Yogic intuition and spiritual enlightenment. Any layman will simply be astonished to see the accuracy and great precision with which the Rishis have chronicled events in life.

Now, according to the Bible of the Christian world, the past Manwantrams agree in number with the seven successive periods or Yomia of creation recorded in the first chapter of Genesis, in the seventh of which periods, the world now is.

Moreover, there are also similar Astrological works known as Nady (நாடி நூல்) written also in Tamil verses predicting the life-events in an individual's horoscope; and they are known as Kumara Nadi, Nandi Nadi, Bujandar Nandi and so on. These were also compiled for millions of people of the present generation, on the same line and principle as that mentioned in 'Saptha Rishi Vakkyam'. They all aim at greater precision, accuracy and elucidation for the reason that they are combined with Palmistry as well. We see that the Readers of this Nadi—the predictive branch of Astrology (written in cadjan leaves) are scattered far and wide in Tamil Districts of S. India, especially Tanjore, Tinnevelly and Madura. See under நாடி நூல்.

So much has to be written about this work, because of the reason that there is no Science at the present day parallel to this, as it excels all other Sciences of the world, Ancient as well as Modern being based on Spiritualism.

சப்த லோகம், பஞ்ச லோகமும் அத்துடன் வெங்கலம், தரா, இவை இரண்டும் சேர்ந்து ஆக ஏழு வகை உலோகங்கள், seven metals which constitute the ordinary five metals viz:—gold, silver, copper, iron, and lead together with two mixed metals, (alloys of copper and tin making bell-metal வெங்கலம்) and tarah (a compound of copper and zinc making pinchbeck, தம்பாக்கு).

சப்த வர்க்கம், ஏழு வகைச் சரக்குகள், அவையாவன, the seven kinds of drugs viz:—

1. நெல்லிக்காய், Indian goose-berry—Phyllanthus emblica.
2. வெட்டி வேர், cuscus root—Andrapogon aromaticus.
3. குரு வேர், a fragrant root of the species of No. 2.
4. கோரைக் கிழங்கு, valerian root—Cyperus stoloniferus.
5. ஏலம், cardamom.
6. இலவங்கப் பத்திரி, cinnamon leaf.
7. திராட்சை, grapes.

சப்தவளை, பிரமிய வழுக்கை, which see.

சப்தாவஸ்தை, ஆன்மாவுக்குரிய ஏழு வித உபாதை நிலை, the seven stages of the soul in its progress from ignorance to pure knowledge; 2. ஆகம நூலின்படி எதிர்கால வுணர்ச்சி, (*In Agama Philosophy*), it is one of the seven intellectual faculties of knowing the future events from the present conditions or circumstances. See சத்தாவத்தை.

சப்த வாதம், நரம்பு வியாதி, a kind of nervous disease.

சப்த வாயு, ஏழு மண்டலங்களி லுள்ள ஏழு வாயுக்கள்:—ஆவகம், பிரவகம், சம்வகம், உதவகம், விவகம், பரிவகம், பராவகம், the seven kinds of air in the seven regions of the sky as mentioned above

சப்த விம்சதி குக்குலு, குஷ்டம், கிருச்சிரம், குட்டம், பிரமேகம், ஆனைக் கால், முதலிய நோய்களை நிவர்த்திக்கக் கொடுக்கு மோர் ஆயுர் வேத மருந்து, an Ayur Vedic preparation prescribed for arthritis, stricture of urine, leprosy, venereal disease, elephantiasis etc.

சப்பங்கம், see சப்பங்கி; 2. தட்டையான அல்லது ஒட்டிய அங்கம், a flat or emaciated or hollow organ of the body.

சப்பங்கி, வத்தங்கி, brazil wood—Caesalpinia sappan, see சப்பாங்கு; 2. ஜப்பான்,

Japan; 3. மந்தன், dull person; 4. வீர மற்றவன், a timid man.

சப்பட்டை, சிறகு, wing, feather; 2, தோள் பட்டை, scapula or shoulder blade; 3. சப்பை மூக்கு, flat nose; 4. சப்பை, flatness; 5. உள்ளீ டின்மை, hollowness: absence of succulent portion inside of anything.

சப்பட்டைக் கள்ளி, முக்கோணக் கள்ளி, the triangular spurge.

சப்பட்டை முகம், சப்பை முகம், flat face.

சப்பணங்கால், உட்காருவதற்காக வேண்டி ஒன்றின்மே லொன்று குறுக்காக போடும் கால்கள், legs folded in cross ways while sitting.

சப்பணம், see சம்மணம்.

சப்பரக் கத்திரி, பந்தற் கத்தரிக் காய், chupper brinjal—Lycopersicum esculentum.

சப்பரத் தவரை, ஓர் அவரை, chupper bean —Cyomopsis psoralioides.

சப்பல், சப்புதல், to draw into the mouth; 2. கை சப்புதல், to suck the finger as children do; 3. எச்சில், refuse of food.

சப்பத்தி, தட்டை முத்து, flat pearl.

சப்ப ளாத்தி, பருத்த வுடம்பை யுடையவன், a stout and flabby person.

சப்பளி, கன்னம் குழி விழல், cheeks becoming hollow; sinking into depression as of the cheeks; dimpled.

சப்பளித்தல், தட்டை யாக்குதல், to flatten.

சப்பளித் திருத்தல், காலை மடக்கி உட்காருதல், sitting cross-legged.

சப்பளிந்த முகம், தட்டை முகம், flat face.

சப்பன், see சப்பாங்கு.

சப்பாங்கம், see சப்பாங்கு.

சப்பாங்கு, வத்தங்கி, இது ஓர் முள் வாய்ந்த மரம். இதை நமது நாட்டு மத்திய தேசம், தென் னிந்தியாவில் கிழக்கு, மேற்கு தேசங் களிலும் காணலாம். இம் மரம் மிகவும் வலி வுள்ளதும், கடினமும் மிக்க கனமுமுள் ளது. இது சாய மேற்றுவதற் குதவும். ஆகவே, வங்காளத்தில் சிகப்பு சாயம் துணிகளுக்கு ஏற்றுவதற்காக மிக்க உப யோகப் படும். இதற்கு துவர்ப்புக் குணம் வாய்ந்ததால், இதை கஷாய ரூபமாக கழிச் சல், சீதபேதி, சரும வியாதி இவைகளுக்கும் பிகுதியாக உபயோகப் படுத்துவ துண்டு. இதை சூதகச் சிக்கலுக்குச் சிறந்த ஔஷத மாகக் கொள்ளப் படும், sappan wood—Caesalpinia sappan. It is a thorny tree unusually found in Central India and in the South—Eastern and Western Ghauts including Madras. The wood is solid, hard and heavy. It is used as a red dye-stuff for cotton cloth. Medicinally it is a powerful astringent and so, is used as an infusion or decoction for diarrhoea, dysentery and skin diseases especially lichen. The decoction of the wood is considered a powerful emmenagogue.

NOTE.—The wood contains tannic and gallic ac. s. It is cultivated more for the sake of red dye. It is also called brazilwood because of the similar dye also found therein. The tree is 40 ft. and the flowers are yellow.

சப்பாணி, முடவன், cripple; 2. நொண்டி, lame person; 3. கை கொட்டல், clapping of hands.

சப்பாணி கொட்டுதல், கால் மடித்து கை கொட்டுதல், clapping hands while sitting with legs folded.

சப்பாணி மாடன், ஓர் நொண்டிப் பேய், a lame demon.

சப்பாதிரம், அமலகப் பூடு அதாவது நெல்லி, Indian gooseberry — Phyllanthus emblica.

சப்பாத்தன், see சப்பாத்திப் பூ.

சப்பாத்தி, see சப்பாத்துச் செடி அல்லது கள்ளி; 2. கோதுமை ரொட்டி. இதை அடையாகத் தட்டி கடாயிலாவது நேரே நெருப்பிலாவது போட்டு எடுப்பது. இது வட இந்தியாவில் வழங்கும் பெயர், a name in Northern India referring to a thin flat unleavened cake of bread made of coarse wheaten meal baked upon a griddle or toasted over open fire; 3. see சப்பாத்துக் கள்ளி.

சப்பாத்திக் கள், சப்பாத்திச் செடியி னின்று தயாரிக்கும் ஒர்வகை பேதி மருந்து, a kind of purgative extracted from prickly pear. See சப்பாத்துக் கள்ளு.

சப்பாத்திக் கள்ளி, see சப்பாத்துக் கள்ளி.

சப்பாத்திச் செடி, see சப்பாத்துச் செடி.

சப்பாத்திப் புழு, கிருமிக்குப் புழு இதை மருந் துகளுக்கு சாய மேற்ற உதவும், see கிரு

கிருமிஞ்சிப் புழு, cochineal insect — Coccus cacti. It is useful for imparting red colour to liquid medicines.

சப்பாத்திப் பூ, see சப்பாத்துப் பூ; 2. செம்பரத்தம் பூ, changeable rose — Hibiscus mutabilis.

சப்பாத்துக் கள்ளி, சப்பாத்து முள் செடி. இதில் மற்றொரு விதமும் உண்டு. இது தென்னமெரிக்காவி லிருந்து கொண்டு வந்து இத் தேசத்தில் பயிராக்கப் பட்டதெனக் கருதப் படும். இதன் பூ பெரியது, மஞ்சள் நிறம்; அடித் தண்டு சதைப் பற்றுள்ளது, உறுதியா யிருக்கும், வளர வளர கெட்டிப் படும். இலைகள் விடும், இதன் பழம் 2—3 அங்குல நீளம். பச்சை மஞ்சள் அல்லது சிவப்பு நிறம்; கனத்த இலையின் மீது செங்குத்தாய்க் காய்த்து நிற்கும். இதற்குள்ளிருக்கும் சதைப்பற்று உஷ்ணத்தைப் போக்கி, ஆயாசத்தைத் தீர்க்கும் குணமுண்டு. ஒன்றும் முளைக்காத தரிசு நிலங்களில் இது முளைக்குமே தவிர, செழிப்பு நிலங்களில் நன்றாய் வளராது. இது அதி சீக்கிரம் பரவுவதால் முழுதும் அறவே நீக்குவதற்கு மிகப் பிரயாசை யாகும். ஆகவே நெருப்பிட்டு கொளுத்தி தான் அழிக்க முடியும். இதன் சாம்பலி லிருந்து காரவுப்பு தயாரிக்கலாம். கிருமிஞ்சிப் புழு இதில் வளரும், இந்தப் புதரில் அனேக பாம்பு முதலிய பிராணிகள் தங்குவதற் கிடமாகும். இதன் நார், பழம் தவிர வேறு ஒன்றுக்கும் சிறந்த குணங்கள் இருப்பதாக தெரியவில்லை, hedge prickly pear — Opuntia dillenii, and another variety of this plant is O. monocantha. It is a plant of S. America said to be naturalised here; bears large bright, yellow flowers; stem when young fleshy, but in age becomes hard and branched. Fruits 2—3 inches, green, yellow or red in colour; stand erect on the margins of the thick fleshy leaf-like joints of the stem; contain a somewhat refrigerant and highly refreshing pulp. In its growth, the plant has a distinct preference for waste soils that will grow nothing else, but it does not flourish freely on rich well cultivated lands. From the rapidity of its growth, it is very troublesome to actually eradicate the plant; and it must therefore be destroyed by fire. Potash may be prepared from its ashes. The cochineal insect thrives on this From its unrestrained growth, it serves as an impenetrable hedge-plant harbouring snakes and other dangerous reptiles. Beyond the fibre and fruit obtained from it, it serves no other purpose.

சப்பாத்துக் கன்று, சப்பாத்துச் செடியினின்று இறக்கும் கன்று, prickly-pear toddy — a purgative; 2. சப்பாத்துக் கள்ளியினின் றிறக்கிய பேதி மருந்து, the product of prickly-pear — Opuntia dillenii. It is a purgative (Cacteae). See சப்பாத்திக் கள்.

சப்பாத்துக் கற்றாழை, see இலைக் கற்றாழை.

சப்பாத்துச் செடி, ஓர்வித செம்பரத்தம் பூச் செடி. இதன் பூவை செருப்புகளுக்கு கருப்பு நிறம் கொடுக்கப் பூசுவதால் இச் செடிக்கிப் பெயர் வாய்ந்தது போலும், Chinese shoe plant — Hibiscus rosa-sinensis. It is also known as shoe flower, and is so called from flowers being used for blackening shoes. C.f. செம்பரத்தை; 2. see சப்பாத்துக் கள்ளி; 3. நாகதாளி.

சப்பாத்துப் புழு, கிருமிஞ்சிப் புழு, cochineal insect. Literally, it means prickly-pear worm because it feeds on leaves of that plant.

சப்பாத்துப் பூ, see சப்பாத்துச் செடி.

சப்பாத்து முள், see சப்பாத்துக் கள்ளி.

சப்பாய்ப் போதல், சப்பென் றிருத்தல், to become stale or tasteless.

சப்பி, பதர், chaff; 2. சப்புகிறவன், one who sucks; sucker.

சப்பிக் கொடுத்தல், குழந்தைகளுக்கு உறிஞ்சிக் கொடுத்தல், to sip and then give to children as milk, essence etc.

சப்பிரம், தேன், honey.

சப்பிரான், மஞ்சிட்டி பூடு, a plant - madder of Bengal—Bixa orellana.

சப்பி விடுதல், மெலி வுறும்படி சப்பி தாதல், to become reduced by emaciation; 2. சாரத்தைப் போக்கல், to draw out the essence; 3. வாடச் செய்தல், to reduce as swelling.

சப்பு, வாயினாற் பருகல், to suck; 2. மெல்லல், to chew as betel; 3. உருசி யற்றத் தன்மை, tastelessness; 4. சவர்க்காரம், soap.

சப்புக் கொட்டல், உருசி பார்க்க நாவை ஒலி யெழும்படி தட்டல், to strike the tongue while sucking to find taste.

சப்பு சப்பெனல், உண்ணும் போது நாவால் சப்பு கொட்டல், creating sound with the tongue while eating.

சப்புதல், நாக்கினால் பருகுதல், to suck with the tongue; 2. உறிஞ்சுதல், to sip; 3 சுருங்குதல், to be reduced; to emaciate.

சப்பு மருந்து, நாவால் பருகு மருந்து. இது தேன் முதலிய அநுபானங்களைக் கொண்டு குழப்பிய மருந்து, a medicine to be taken in by licking. It is generally a mixture of honey with some thick substance or consistent—Linctus.

சப்பெனல், see சப்பென் றிருத்தல்; 2. உருசி யின்மையைக் காட்டும் குறிப்பு, a term indicating insipidity.

சப்பென் றிருத்தல், உருசி யில்லா திருத்தல், to be tasteless.

சப்பை, இடுப் பண்டை பொருந்தியுள்ள தொடையெலும்பு, the neck of the thigh bone entering into the socket of the hip bone or acetabulum—Hip-joint; 2. தட்டை, flat; 3. சப்பை யெலும்பு, flat bone; 4. வல்லமை யற்றவன், a weak person; 5. உருசி யற்றது, that which is insipid; 6. தோள் சந்து, shoulder blade; 7. இடுப்புச் சந்து, haunch; 8. தொடைச் சந்து, groin.

சப்பைக் கட்டு, இடுப்பு, தோள் இவற்றின் சந்துகளில் ஏற்படும் மூட்டு நழுவலை சீர் திருத்தி கட்டும் கட்டு, a bandage applied to the joints of the hip or the shoulder blade to keep it in position in cases of dislocation.

சப்பைக்-கட்டுதல், இடுப்பு, தோள் இவற்றின் மூட்டின் நழுவலை சரிப்படுத்திக் கட்டுதல், bandaging after setting right the dislocation of the hip or shoulder blade.

சப்பைக் கன்னம், தட்டைக் கன்னம், flat cheek; 2. ஒட்டிய கன்னம், dimpled cheek.

சப்பைக் காய், தட்டையான மாங்காய், flat mango.

சப்பைக் கால், சப்பைப் பாதம், flat foot—Tarsoptosis; 2. வளைந்த கால், short deformed leg; bandy-leg.

சப்பைக் கோலா, ஓர் தட்டைக் கோலா மீன், half-beak sea-fish — Hemirhamphus georgii; 2. ஓர் கடல்-மீன், a sea fish — Flat pike.

சப்பைத் தலைக் குரங்கு, அதிக சப்பட்டையா யிருக்கும் குரங்கு, rogue monkey—Macacus silcatus.

சப்பைத் திருக்கை, ஓர் குள்ளத் தட்டைத் திருக்கை, a stunted flat thorn-back fish—Myliobatis niuhofi.

சப்பை நழுவல், இடுப்பு மூட்டு நழுவல், dislocation of the hip-joint.

சப்பை நோய், இடுப்புச் சந்தில் ஏற்படும் வலி, pain in the hip-joint; 2. கால் நடைகளுக்கு வரு மோர் நோய், a disease of the cattle—Black quarter; 3. சப்பை வலி, see சப்பை நோவு.

சப்பை நோவு, சப்பை வலி, pain in the hip-joint.

சப்பைப் பிடிப்பு, இடுப்புப் பிடிப்பு, rheumatism of the hips; 2. சந்துப் பிடிப்பு, hip-gout.

சப்பை மீன், தட்டையான ஓர் கடல் மீன், a flat sea-fish; flat fish; 2. see சப்பைக் கோலா; 3. see சப்பைத் திருக்கை.

சப்பை மூக்கு, தட்டை மூக்கு, flat-nose.

சப்பை மூஞ்சி, தட்டை முகம், flat-face; Mongolian face.

சப்பை யிறால், நல்லிறால் மீன், a kind of sea-lobster fish—Squash or squat lobster.

சப்பை யெலும்பு, இடுப்புச் சந்தெலும்பு, hip bone; 2. தோள் சந்தெலும்பு, shoulder blade.

சப்பை வாயன், தட்டையான உதடுள்ளவன், one with flat lips.

சப்பை வாய், உதடு சுருங்கி உள்ளடங்கிய வாய், sunken mouth with shortened lips.

சப்பை விக்கம், கால் நடைகளுக் கேற்படும் நோய், anthrax.

சமங்கனி, பக்குவமான பெண், a matured girl.

சமங்கோலம், பாம்பு, snake.

சமங்காலிகம், மஞ்சிட்டி, a plant, madder of Bengal—Rica oreilena.

சமங்கி, வெட்டுக் காயப் பூண்டு அல்லது ஆடுதின்னாப் பாளை, worm-killer—Aristolochia indica; 2. தொட்டால் வாடி, a sensitive plant. See சமங்கை.

சமங்கை, see சமங்கி; 2. தொட்டால் வாடி, prostrate sensitive plant—Mimosa tripentra alias M. pudica.

சமக்கம், மருந்து செடி, an unknown rejuvenating plant.

சமபிங்கார சூரணம், ஏலம், சர்ப்பசண்பகம், திரிகடுகு, சர்க்கரை, முதலியன யாவுஞ் சமன் சேர்த்து அரைத்த தூள். இது வாயு அஜீரணத்திற்குக் கொடுப்பது, a medicinal powder prepared from equal quantities of cardamon; serpent champak, dry ginger, black pepper, long pepper and sugar. It is prescribed for flatulence and indigestion.

சமஸ்காரம், சுத்தி செய்யுங் கிரியை, purificatory rites; 2. ஞாபக சக்தி, faculty of memory; 3. (In Philosophy), மறு பிறப்புக்கேதுவான ஓர் மனோ தத்துவம், faculty and disposition of mind or intellect influencing transmigration.

சமட்டல், காலால் மிதித்து நசுக்குதல், to squash by pressing with the foot.

சமட்டி, எல்லாம், all, entireness; 2. மறைந்து உள்ளடங்கிய நிலை, (In Philosophy), a condition by remaining in an undeveloped embryo state.

சமணம், புழுக் கொல்லி, see சமண்டி ஆம்லந் துரிஞ்சுப் பட்டை, worm-killer; 2. ஊமத்தை, datura plant—Datura fastuosa.

சமனி, இலவ மரம், silk cotton tree—Eriodendron anfractuosum. see சமலி.

சமண்டிலம், see சவண்டிலம்.

சமதனம், மருக்காரை, common emetic nut; poison fruit—Randia dumetorum alias R. floribunda; 2. முள்ளம் பன்றி, porcupine.

சமதாரம், அப்பிரகத்து சத்து வகையில் ஒன்றான அப்பிரக பாஷாணம், a poisonous compound of mica—one of 64 kinds of native poison.

சமத்தி, முருக்க மரம், common coral tree—Erythrina indica.

சமஸ்தி, see சமத்தி.

சமத்தாளி, கீழ்க்காய் நெல்லி, feather-foil—Phyllanthus polyphyllus alias P. niruri.

சமத்தியலு, பெருங் கருணை அல்லது சேனைக் கிழங்கு, elephant yam—Arum campanulatum alias Ol... sp.

சமத்து, திறமை, skill; ability; 2. ஓர் வகை பூநீர்ச் சாதி, a variety of fullers earth; 3. வல்லமை, strength.

சமந்தத் தக்கம், இலைக் கள்ளி, leaf spurge—Euphorbia neriifolia.

சமநிலை, சம நிலைமை, equilibrium; 2. வாத பித்த சிலேட்டுமத்தின் சமமான நிலை (In Medicine) the normal condition of the three fundamental principles of the humours in the human body i.e., wind bile and phlegm; 3. மனதின் செம்மை, (In Philosophy), balanced state of mind; 4. சம நிலை, the state of equilibrium; medium.

சமநிலைப் படுத்தல், திரி தோஷங்களையும் முறையே அவைகளின் இயற்கையான நிலையில் நிறுத்தல்; to regulate the derangement of the three humours in the system and maintain them in a healthy state; 2. திரிதோஷத்தை சேர்வை நடத்த அளவறிந்து சம நிலைமை உண்டாக்கல், to restore equilibrium by harmonious blending in proper proportion, said of three humours when deranged. See திரிதோஷ சமநிலை.

சமஞ்சி, வாத மடக்கி, wind-killer — Cleodendron phlomoides.

சமபக்ஷம், அதிக கெட்டியாக கட்டாமலும் அதிக தளர்ச்சியாக கட்டாமலும், மத்திம வகைக் கட்டு, புண்கள் இரணங்களுக்குக் கட்டுங் கட்டு, the keeping of a due mean between two extremes viz:—too tight or too loose in the application of bandages to any abscess or wound.

NOTE.— It is particularly necessary to bear in mind that bandage should be applied so as not to cause dangerous constriction or to obstruct free circulation of blood to the part affected.

சமபாகம், ஒரே அளவு, equal quantity or proportion of each ingredient.

சமபோகம், ஆண், பெண் இருவருக்கும் ஒத்த போகம், sexual pleasure experienced equally by both men and woman.

சமமுலை, பெண்முலை, அதிக பெருத்து சிறுத்தில்லாத பெண் முலை, woman's breast of a medium size—Contours in demo rellevo.

சமலவணம், காய்ச்சக் கண்ணாடியின் மேலெழும்பு உப்பு, glass gall—Fel vitri.

சமம், பூழ்தி, salt collected in the soil of fuller's earth; 2. see அக்கம் சேர; 3. சரி, mean, equal.

சமவதி, நேர் வாளம், croton seed — Croton tigilium.

சமய சஞ்சீவி, அப்போதைக் குதவு மருந்து, a medicine that just suits for the occasion; a timely medicine.

சமய சிகிச்சை, காலத்திற் குரிய அல்லது சமயமறிந்து ஏற்றவாறு செய்யும் வைத்தியம், timely treatment. C.f. சமன சிகிச்சை.

சமரச நிலை, சமநிலை, normal condition; reconcilatory state.

சமரச பாகம், வெள்ளை பாஷாணம், native white arsenic—Arsenious acid.

சமரசம், see. இலிங்க பாஷாணம்; 2. மஞ்சிருந்தி, see இரத்த சாலி; 3. ஆடு தின்னாப்பாளை, worm-killer—Aristolochia indica: 4. வேளைப் பூடு, five-leaved cleome—Cleome phentaphylla; 5. சேமரம், an unidentified plant: 6. ஓரிதழ்த் தாமரை, one-petal lotus — Ionidium suffruticosum; 7. நீர் முள்ளி, water thistle—Hygrophyla spinosa: 8. நல்லரிசி, rice of a good quality; 9. கருமை வெள்ளை, an unidentified tree; 10. பேய்ப் புடல், wild snake gourd — Trichosanthus laciniosa; 11. பாம்பு களஞ்சி, snake root—Hedysarum gyrans; 12. பூதகம், கடுக்காய், Indian gallnut —Terminalia chebula

சமரசவாசனி, பாதிரி, trumpet flower — Stereospermum chelenoides,

சமரதி, ஒர் வகைக் கலவி, a mode of sexual enjoyment: a posture in sexual intercourse.

சமரி, கவரி மான், Himalayan yak: 2 முள்ளம் பன்றி, porcupine.

சமரி, பாம்பு, snake.

சமரிகம், மலையத்தி, mountain fig; downy climbing cluster fig—Ficus macrocarpa; 2. மலையகத்தி, bitter sesban.

சமரு காசிரி, பேரீச்சம் பழம், Arabian date fruit—Phoenix dactylifera.

சமருடத் தினை, வரகு, millet — Panicum maliaceum

சமருபகம், தாதுக்களில் ஒரே கன்னாடியுரு, a similarity of the crystaline form in minerals—Isomorphism.

சமர், முட்பன்றி, porcupine. See சமரம்.

சமர்த்தி, ருதுவான பெண், matured girl.

சமர்த்து, பலம், strength: power; 2 வீரம், virility.

சமலம், அழுக்கு, dirt, filth; 2. மும்மலம் the three inherent evil passions of human beings; 3, உடம்பழுக்கு, filth of the body; 4. அசுத்தம், filshiness.

சமலன், உலக பந்த முடையவன், one tied to worldly bondage.

சமலாவஸ்தை, பந்தத்தால் ஆன்மாவடையும் நிலை condition of the soul subjected to bondage.

சமலை, அழுக்கு படிந்தவள், filthy woman; 2. அழுக்கு, filth, dirt.

சமவாசம், இருவரும் சேர்தல், cohabitation: 2. சகவாசம், living together.

சமவுட்டிணம், சாமானிய சூடு, normal temperature.

சமவெப்பம், அதிகச் சூடு, குளிர்ச்சி, இளஞ்சூடு என்னும் மூவகையினும் சேராத அவ்வகை மூன்றையும் சமமாகக் கலந்த சூடு, moderate heat which is neither too hot, nor too cold or lukewarm but the normal heat from the mixed proportions of all the three kinds mentioned above; moderate temperature.

சம வேரி, சேர்வாரம், see சமயசி.

சமழ்த்தல், வருந்தல், to suffer; to be in grief; 2. நாணுதல், becoming shy; 3. அடக்கங் காட்டுதல், showing modesty.

சமழ்ப்பு, நாணம், modesty; 2. வெட்கம், shyness.

சமன காரி, உக்கிரமான அல்லது கொடிய நோய்களைத் தணித்து உடம்பு குளிரும்படி செய்யுமருந்து, a medicine which allays irritability and irritation and assuages pain by cooling the system—Sedatives. See under தணிப்பான்.

சமன சிகிச்சை, வாத பித்த சிலேட்டுமம் கொண்டு நடைக்க நேரும் முதலானதை, அப்போதைக் கப்போதே ஒழுக்கு படுத்தி நோய்க்கு தகுந்த வேண்டும் மருந்து செய்யும் பரிகாரம் அதனை சமனப்படுத்தலை, a temporary relief or treatment accorded by softening or toning down or otherwise extenuating by favourable administrations, the derangements or morbid conditions of the three humours in the system then and there and subsequently restoringto a healthycondition —Palliative treatment

NOTE.— It should be construed that this kind of treatment is one that merely extenuates without denying an evil and its etymology suggests the attempt to entirely conceal it; and so, no radical cure can be effected or expected through this.

சமனத் துவயம், ஓர் மூலிகை, an unknown drug?

சமனப் படுத்தல், வலியின் கொடுமையை சாந்தப் படுத்தல், to make soft or mild so as to render less painful in severity.

சமனப் பாவை, பங்கம் பாளை அல்லது ஆடுதின்னாப் பாளை, worm-killer — Aristolochia indica.

சமனப் பிரகோப சுரம், விடாச் சுரம், continued fever—Febris continua; 2. தின சுரம், hectic or protracted fever recurring daily.

சமனப பூடு, செங் குன்றி, red bead vine — Abrus precatorius (typica).

சமனம், see சமனப் பாளை; 2. see சமனப் பூடு; 3. ஊமத்தை, datura plant; 4. வசம்பு, sweet flag—Acorus calamus; 5. தணியச் செய்தல், soothing; allaying.

சமனுக, சரிபாதியாக, in two halves; in equal quantities.

சமனுதம், உவர் மண், fuller's earth.

சமனி, இலவ மரம், silk cotton tree—Bombax malabaricum; 2. கொட்டைக் கரந்தை, Indian globe thistle — Sphaeranthus indicus; 3. சாந்தப் படுத்து மருந்து, soothing medicine.

சம னிடித்தல், சேரும் சரக்குகளை சம னிறை யளவு போட்டு உலக்கையா லிடித்தல், to pound together the ingredients taken equal in weight.

சமனித்தல், சாந்தப் படுத்தல், extenuating; ameliorating.

சமனிய கரணி, இரணத் தழும்பை மாற்று மருந்து, a medicamsnt for healing ulcers, wounds or other injuries.

சமனிறை, ஒரே நிறை யளவு, a quantity equal in weight.

சமனை, பந்தத்தோடு கூடியிருந்து ஆன்மா அடையும் உத்தம பதவி, the highest stage which the soul attains in bondage; 2 see உன் மனி.

சமன், ஒரே யளவு, equal quantity or parts —Partes aequales.

சமன் கூட்டல், சம னிறை அல்லது சம வளவாகப் போட்டு ஒன்றாய்க் கலத்தல், to mix in equal weights or quantities.

சமாகம், (*Hind*), see சர்க்கரை கொம்மட்டி.

சமாக்கினி, குறைந்த உதராக்கினி, want of the chief solvent fluid in the digestive process; 2. மதநிமப் பசி, moderate appetite.

சமாக்கினி விருத்தி, பசி விருத்தி. இது கறியுப்பினு லாகும், improvement of dull appetite. This can be remedied by common salt which is a digestent.

சமாசம், இலிங்க பாஷாணம், a mineral poison composed of red sulphuret of mercury.

சமா சீரயம், பால், milk.

சமாதான கரணி, உடைப்பினை மருந்து அதாவது காயத்தினால் நெகிழ்ந்த உறுப்புகளைக் கூட்டு மருந்து, healing drug or medicine applied for uniting the fractured limbs, a medicine that restores distorted or otherwise disfigured limbs. *C.f.* சந்தான கரணி.

சமாதானம், அறுவகை சமாதிகளில் ஒன்று இதில் உள்ளமானது கடவுளைப் பிரியமாய் சிந்திக்கும்படி இனிய தன்மையாகச் செயப் புரியும் ஓர் மனோநிலை. அதாவது உபாதி நீக்கி உள்ளொளி கருதல், முற்றத் துறந்திருத்தல், சுக துக்கங்களைப் பொருட் படுத்தாமை, (*In Philosophy*), one of the six kinds of Samadhi. It chiefly consists in preparing the mind to meditate upon the Divine in a pleasing manner i.e., to concentrate upon the Astral light (the inner splendour) to renounce completely and to be free from all attachments pleasures and sorrows.

சமாதி, அஷ்டாங்க யோகத் தொன்று, the eigth or the last stage in the practice of Yoga—a state of Spiritual ecstasy; 2 மனதைப் ஒருமைப் படுத்தல், (lit) collecting the mind; or bringing into united action (as thoughts or energies); 3. நிருவிகற்ப நிலை, abstract meditation; silent contemplative worship; 4. சிவ பக்தனுக்கு நேரும் சாவு, death, a term commonly applied to a Saiva devotee; 5 காய்ச்சிய தை

லம் முதலியவற்றைப் பூமிக்குள் புதைத்து வைத்தல், burying of anything underground as spirits, medicated oils etc.; 6. பிரேதக் குழி, a pit for burial; 7. குட்டரோகியை உயிருடன் புதைத்தல், the voluntary burial sought for by a leper while alive; 8. சமாதி தெரிசனை. இதில் கடவுள் அல்லது ஆத்மத்தின் தன்மை உணருதல், the knowledge of the sublimest description as of deity or the soul, acquired by super-natnral illumination, without the help of physical or mental organs; 9. ஆன்மாவை பிரமத்தி லடங்கச் செய்வதற் காக யோகிகள் புரியும் நிலை, that state sought for, by a living Yogi to attain union with the Universal soul or Divine spirit; a state of holding Communion with Thee.

சமாதி, நினைவற்ற ஆத்மத் தியானம் அதாவது இந்திரிய முதலிய தத்துவச் சேட்டைகட்கு ஏதுவாய் யாக்கையுள் நின்று அவற்றோடு கூடினு மவற்றிற் பற்றின்றி யிருக்கும் ஆன்மா வாகிய தன்னைத் தான் காண்டல். இது ஆறுவித மாகக் கொள்ளப் படும், abstract meditation. Although soul joins in relation to the constituent principles of bodily and mental organs, faculties etc, yet it remains so dissociated from the body that the latter remains insensible, with the result that the transcendental Divinity is experienced in the soul. It consists of six kinds as mentioned below:—

1. நிருவிகற்ப சமாதி—வேறுபா டில்லாத சமாதி, silent contemplation accomplished without distinction.
2. சவிகற்ப சமாதி — விகற்பத் தோடு கூடிய சமாதி, the one performed with distinction,
3. ஆருட சமாதி—முற்றுந் துறந்த பின் செய்யும் சமாதி, one fulfilled after renunciation.
4. சஞ்சார சமாதி — ஓரிடத்திலும் நிலையில்லாமற் புரியும் சமாதி, the one carried out without any fixed place i.e., wherever desired.
5. வியவகார சமாதி — உலக வியவகாரத்தி லிருந்தபடியே செய்யும் சமாதி, the one done when involved in worldy affairs.
6. சகஜ சமாதி — சுக துக்கங்களை பொருட் படுத்தாமல் சாதாரணமாக இஷ்டப்படிச் செய்யும் சமாதி, the one executed without caring for pleasures and sorrows of life in a routine way as desired.

NOTE—1. In plain language it is nothing but a state of trance in which the mind is fully self-conscious, though the body is insensitive, and from which the mind returns to the body with the experience it has had in the super-physical state, remembering them when again immersed in the physical brain.

So any ordinary person whose consciousness is functioning in the mental plane and who can so withdraw from all that he knows as body, as to leave it insensible, while his mind is fully self-conscious, can practice Samadhi. This is the eighth or the last stage in the practice of Yoga.

NOTE—2. Nirvikalpa Samadhi (நிர்விகற்ப சமாதி), is that stage where the individual consciousness gets fused and lost in the transcendental; and all the relative consciousness of *me* and *mine* is completely obliterated and the transcendental Divinity is experienced within the soul. During this period, one will have absolutely no consciousness of the body nor of its physical needs. To qualify oneself for this, he must have renounced completely all his desires and attachment for the wordly enjoyments.

This should not be confused with that Samadhi entered into by a Jivan Mutka (ஜீவன் முக்தன்) (one with liberated soul) who begins it on the Atmic plane (instead of mental) to which an ordinary man cannot dream to rise.

சமாதிக நீர், சித்தர்கள் இரகசியமாய்த் தயாரிக்கும் ஜங்கார செயநீர், a pungent liquid extracted from a foetus by a secret process known only to Siddhars.

சமாதிகம், ஊமத்தை, datura — Datura fastuosa; 2. ஜங்கார நீர், see சமாதிக நீர்.

சமாதிக் கல், மணிக் குடல், small intestines with their appendages.

சமாதிக் குழி, பிரேதக் குழி, a pit for the burial of the dead especially for an ascetic or other devoted Saivites.

சமாதிச் சுண்ணம், முப்புச் சுண்ணம், the mystic quintessence salt composed of three ingredients. Literally, it means the three calcium compounds.

சமாதி நிலை, தன்னையும் சுற்றிலு முள்ளவற்றையும் மறந்திருக்கும் ஓர் உயர்ந்த நிலைமை, a superior spiritual and transcendental stage at which one forgets himself and all his surroundings.

சமாதி பண்ணுதல், சமாதி யிருத்தல், to enter into Samadhi i.e., the state of supreme unitary consciousness; 2. மனம் ஒருமைப்பட யோகாப் பியாசம் செய்தல், to sit at Yoga practice for the seeking of union by intellect; 3. புதைத்தல், to bury.

சமாதி புகுதல், தன்னை மறந்து யோக நிலையில் இருக்க வேண்டி சமாதி யறை யுட் புகுதல், to enter into a Samadhi cellar or vault built for the purpose of attaining trance while in silent contemplation.

சமாதி பெறுதல், யோகாப்பி யாசத்தில் சமாதி யடைய வேண்டி குருவி னிடம் பெறும் தீட்சை, initiation obtained from a spiritual guru for purposes of attaining Samadhi in Yoga practice.

NOTE.— When the mind of the disciple is sufficiently fertilised by faith, the Teacher plants the seed of Spirituality in his mind. This instruction is called Upadesh (உபதேசம்) or Theetchai (தீட்சை). To get the blessings of a Spiritual Teacher or Guru is the most important requisite in the carrier of a disciple.

சமாதி பேதம், அறு வகை சமாதி, the six kinds of Samadhis. See சமாதி; 2. பொதுவாக இரு விதம், commonly it is divided into two varieties as mentioned above :—

1. சம்பிக சாதனம்—சுபாவத்தை வெல்லப் பழகுதல், practising to get all powers of controlling nature.
2. அசம்பிக சாதனம் — மேலான வுணர்ச்சி பெறல், training oneself to attain perfect super-consciousness.

சமாதிப் போக்கு, சமாதி நிலையில் ஒருவனைக் கொண்டு போகும் துறை அல்லது பல வழிகள். நினைவையும், உணர்ச்சியையும் அறவே ஒழித்தலினால்தான் சமாதி கைகூடும். ஆகவே, சமாதி யென்பது ஒருமையுணர்ச்சியே ஒழிய வேறல்ல. இந் நிலைமையில் சாதாரணமாக காயம் நெடுநாள் நீடித்திராது. ஏனெனில் ஆரம்ப முதல் உணர்ச்சி யற்று இருப்பதால் ஒன்றும் உட்கொள்ள முடியாது. வாயின் வழியாய் பால் புகட்டினும் வழிந்து வெளிதான் ஒழுகும். ஆகவே, இருபத்தோர் நாட்கள் கழிந்தபின் மரணத்தை யடைவது வாகும். அப்படி மரண முண்டாகாமல் சமாதி நிலைக்க வேண்டு மெனில் முன்னதாக காயத்தை சித்தியாக்க வேண்டும்.

சமாதி நிலைத்துவிட்ட பின் தான் செய்த பூர்வ கர்மம் ஒழியும். நானென்பது அறவே நீங்கும், பிரமஞ்ஞானம் உதய மாகும். அப்போது தான் தனக்கு இனி இறப்பு, பிறப்பென்பது இல்லை யென உணர்வான், the several ways which the stage of Samadhi leads one into. It is only by the restraint of impressions or thoughts that Samadhi comes in, and so, it is only a concentration of mind. At this stage, the body generally does not last long as man remains unconscious throughout, he cannot eat anything and even if milk is poured into his mouth, it trickles down outside and so, he dies after twenty-one days. To prevent such an occurrence of death and to attain Samadhi, one ought to have rejuvenated the system.

Moreover, after attainment of Samadhi his karma drops away, ego is blotted out and supreme wisdom (பிரமஞ்ஞானம்) is realised. The man will then realise that he has neither birth nor death.

சமாதி மான், தியான நிட்டை செய்வோன், one who enters into silent contemplation; 2. யோகத்தில் தேர்ச்சி யடைந்தவன், an adept in Yoga practice.

சமாதி மூலி, கருங் குன்றி, black jeweller's bead—Abrus genus.

சமாதி யடைதல், தன்னை மறந்து யோகம் செய்தல், Yoga practised to attain a super-physical state in which consciousness is functioning in the mental plane.

சமாதியில் வைத்தல், யோகிகள் உட்கார்ந்தபடி நிட்டையிலிருக்கு முறையாய் பிணத்தை குழியில் வைத்தல், to bury the dead by keeping it in a pit in a Yogic sitting posture.

சமாதி யுப்பு, உடம்பி னுப்பு, salt taken or extracted from the human body; 2. உடம்பு கெடாதபடிக்கு நீடித்திருக்க சமாதிக் குழியில் நிரப்பும் உப்பு, salt filled to a portion in the grave-pit just to prevent putrefaction; 3. சவக் குழியினின்று சில காலஞ் சென்று எடுக்கும் உப்பு, salt dug out from a pit some years after the burial of a corpse; 4. பிணத்தி லிருந்து

சிலநாள் கழிந்த பின் எடுக்கும் பூர்த்த உப்பு, a medicinal salt found deposited on the corpse interred and this is scraped out or gathered up after some time.

சமாதி யெரு, வயித்திய வுப்பு, a quintessence salt used in medicine, perhaps referring to சமாதி யுப்பு.

சமாதி விட் டகலல், உணர்ச்சி திரும்பிய பின் பல நினைவுகள் ஏற்படுவதினால் சமாதி நிலையி லின்று வெளிப் படுதல், to get out from the state of Samadhi; being disturbed by all kinds of thoughts after the return of consciousness.

சமாதி விட்டுக் கடைதல், see சமாதி விட் டகலல்; 2. சில காலம் பொருத்து கிட்டையி லின்று வெளி வரல், to come away from Samadhi after the restoration of physical consciousness, which may prevail sometime after.

சமாதி வைத்தல், பிரேத மடக்கல் அதாவது பிணத்தைப் புதைத்தல், to bury the dead; 2. எதையாவது சிலகாலம் புதைத்து வைத்தல், to keep anything buried for some time

சமாது, ஊமத்தை, datura — Datura fastuosa; 2. see கருமத்தை; 3. see சமாதிக் குழி.

சமாசி, சடைக் குறண்டி, a kind of thorny shrub—Lepidagathis scariosa.

சமாலுகம், பெருங் குறிஞ்சா, see சடம்.

சமாலு காரிகம், வெள்ளைப் பூலா, white honey plant—Securinega leucopyrus.

சமாலுகிகம், see சமாலுகம்.

சமா லேபனம், சாணத்தால் மெழுகுதல், cleaning with cow-dung.

சமா லோங்கம், கருவல்லி மரம், an unidentified tree?

சமால் கொட்டை, நேர்வாள விதை, croton seed—Croton tiglium.

சமான கரணி, see சமனிய கரணி.

சமானதா, முள் முருக்கு, devil coral tree—Erythrina ovalifolia.

சமான வாயு, நாபிக்குக் கீழாக விருக்கும் உறுப்புகளின் வேலைகளை காரண கர்த்தாவாக நின்று சரிவர நடத்திக் கொண்டு வரும் ஓர் வாயு. இது தச வாயுக்களில் ஒன்று. இது கர்ப்பக் குழியின் சந்திடை நிற்கும்; உடம்பிற்கு நடுவே சமாக்கினி யண்டை இருந்து கொண்டு, உண்ட புனலை யிரசப் பகுதியும், இரத்தமாக மாற்றியும் வைக்கும். அன்றியும் கொட்டாவி, விக்கல், வியர்வை முதலியவைகளுக்கு இதுவே காரணமாகும், one of the ten vital airs operating on the internal organs below the navel region and as such, it take its seat in the digestive organs of the abdominal cavity and helps chiefly assimilation, transformation into blood and other changes in the chief constituents of the body, thus spreading out energy throughout the sytem. It is also supposed to be responsible for yawning, hiccough perspiration etc.

NOTE—It courses in or governs the stomach and in the region of intestines (பக்குவாசயம்). Its function consists in digesting the chyme brought down into the intestines in unison with digestive ferment (அக்கினி) and especially in disintegrating its essence from its refuse or excreted matter.

A deranged or aggravated condition of this Vayu causes dysentery, dyspepsia and other impaired indigestion etc. It is the same as the energy of the epigastric plexus

சமானன், see சமான வாயு.

சமி, வாழை மரம், plantain tree — Musa paradisiaca; 2. வன்னி மரம், Arjuna penance tree—Prosopis spicigera; Acacia suma; 3. தணக்கு; potter's tree—Gyrocarpus jacquini; 4. சீரணி, to digest.

சமிக்கத் தக்க, சீரணமாகக் கூடிய, digestible.

சமிக்கும் சக்தி, சீரிக்கும் சக்தி, digestive faculty.

சமிக்கை, உணவு சீர ணிக்கை, digestion of food; 2. கண் சிமிட்டு, winking of the eyes.

சமி சக்திவல், வன்னி, see சமி.

சமித்ருணை, தொட்டாற் சுருங்கி, see சமனம்; 2. தொட்டாற் சுருங்கி, a sensitive plant—Mimosa pudica.

சமிதம், நெருப்பு, fire,

சமிதா, வன்னி மரம், suma tree. See சமி.

சமிதி, | நாகம் புல், an unknown
சமிதி நாகம், | fragrant grass?

சமித்தல், சீரணித்தல், to digest; 2. பதனழிதல், becoming decomposed or putrified; 3. வலி பொருத்தல், bearing pain.

சமித்திகா, கஞ்சா, Indian hemp — Cannabis sativus.

சமித்திர சுத்தி, ஆரல் மீன், see சமுத்திர சுத்தி.

சமித்து, கஞ்சா, see சமித்திகா; 2. கள்ளி விறகு, fuel of spurge; spurgewood; 3. குடம் நீர், pot water; 4. நவ விறகு, sacrificial fuel of nine trees or plants.

சமித்துப் போதல், சீரணித்துப் போதல், to be digested away as food.

சமிந்தனம், விறகு, fuel.

சமி பத்திரா, வறட் கண்டி. அல்லது ஆடு தின்னாப் பாளை, see சபரம்.

சமிப் பாகம், கொன்றை, Cassia genus; 2. வேல மரம், acacia genus.

சமிப் பாடு, சீரணமாகுங் காலம், the period of digestion of food; 2. சீரணிக்கை, the process of digestion.

சமிப்பு, சீரணிப்பு, digestion.

சமியாகம், see சமிப்பாகம்.

சமியாக் குணம், சீரணிக்காத தன்மை, incapability of or difficulty in digesting food.

சமியாதது, சீரணிக் காதது, that which is not digested.

சமியா திருத்தல், சீரணிக்கா திருத்தல், the state of remaining undigested; 2. செரியாத் தன்மை, the condition of indigestion.

சமியாமை, அசீரணம், indigestion.

சமிரகம், உப்பறுகு, a species of Bermuda grass found grown in saline soils.

சமிரம், சிறு வன்னி, a small species of suma tree—Prosopis spicigera.

சமிலாகி, see சமிலாகிகம்.

சமிலாகிகம், திப்பிலி, long-pepper — Piper longum.

சமிலாதி, திப்பிலி வேர், root of long-pepper. See சமிலாகிகம்.

சமி வாசி, திப்பிலி, see சமிலாகிகம்.

சமி விருட்சம், வெள்ளை கருக்காலி, egg-fruited ebony—Dyospyros oocarpa.

சமீப திருட்டி, ஓர் கண்ணோய். இதனால் அருகி லிருக்கும் வஸ்துக்கள் மாத்திரம் கண்ணுக்கு விளங்கப் புலப்படும், an affection of the eye in which only near objects are seen distinctly; near sightedness or short-sight—Myopia.

NOTE.—It is explained as a defective eyesight due to too great refractive power of the eye, so that the rays coming from an object beyond a certain distance are focused in front of the retina.

சமீப திருட்டியாளன், அருகி லிருக்கும் வஸ்துவைப் பார்க்கக் கூடிய பார்வை யுடையவன், one who can see only objects near at hand—Myope.

சமீர் கசகேசரி ரசம், புதிய அபின், எட்டிக் கொட்டை, புதிய மிளகு இவைகளை சமஎடையாகச் சூரணித்து, அதில் குன்றி யளவு தாம்பூலத்தில் கலந்து போட உரவும் ஆயுர் வேத சூரணம். கஞ்ச வாதம் முதல சகல வாதம் வீக்கம், நடுக்கம், பேதி, அபஸ்மாரம் முதலியன போம், an Ayur Vedic powder consisting of the following ingredients viz:—fresh opium, nux vomica, black pepper, in equal weights. It is used in cases of affection of the sciatic nerve, tremor, diarrhoea, epilepsy etc. by mixing it while chewing betel nut.

சமீரணம், கடாரங்காய் மரம், citron tree — Citron aurantium (bigaradia); 2. கொடிப் பாசி, moss creeper—Hydrilla verticillata

சமீரணன், காற்று, wind.

சமீர பன்னக ரசம், ஆயுர் வேதப்படி, அபி ரேக்கு பற்பம், கெந்தி, வசநாபி, திரிகடுகு, பாத ரசம், வெண் காரம் இவைகளைச் சம விடையாக எடுத்து கரிசாலை சாற்றி லரைத்து குன்றி யிடை கற்கண்டோடு சாப்பிட பற்பல வாத ரோகம் அப்பொழுதே குணப் படும், an Ayur Vedic medicinal pill prepared by taking calcined mica, sulphur, aconite, dry ginger, black pepper, long pepper, mercury and borax, in equal weights and grinding them with the juice of eclipse plant. It is said that a grain of this pill taken along with sugar-candy is a speedy cure in all cases of rheumatic complaints.

சமீரம், see சமீரணன்.

சமீலகம், மஞ்சட் கடுக்காய், fully-riped yellow gall-nut.

சமுகவளை, நை வேளை, vailay plant — Cleome pentaphylla.

சமுக்கா, தூரதிருஷ்டிக் கண்ணாடி, telescope; 2. காந்தப் பெட்டி என்னும் திசை யறி கருவி, an instrument box with a suspended magnetic needle always point-

ing to the north by which the other cardinal points may be determined.

சமுக்காத் குழல், தூரதிருஷ்டிக் கண்ணாடி குழல், a tube in which the lens is fixed for viewing distinct objects.

சமுசார பந்தம், இல்லற வாழ்க்கையில் கட்டுப் படல், bondage of married life.

சமுசாரம், உலகப் பற்று, attachment towards worldly pleasures; 2. மனைவி, wife; 3. உலக வாழ்க்கை, mundane state; 4. இம்மைக் குரிய அல்லது லௌகிக நிலைமை, secular condition; 5. இல்லற வாழ்க்கை, domestic life.

சமுசார யோகி, வயிற்றுப் பிழைப்புக்காக வேண்டி, வாத முறையில் ஈடுபட்டு தானும் ஜீவனம் பண்ணி, வேறு பரதேசிகளுக்கும் அன்னமிட்டு, மற்ற வேளை முழுவதும் தேவியுட பூசையே வகுத்தவன், one who indulges in Alchemy not only for the purpose of his own livlihood but also for maintaining the other Sadhus, and then spending the rest of his days in the worship of Sakthy—the Universal energy.

NOTE — In Europe during the sixteenth century there were such kind of men called Rosycrucians — a sect supposed to have been founded by a monk called Rosen Kruez who was the leading exponent in Alchemy and Medicine. It is also said that they were the followers of Paracelsus who combined Medicine with Philosophy, Asronomy, Alchemy and especially Virtue, the most important of all that is difficult to understand, particularly the ways of Providence.

In Tamil Siddha Medicine, it will be found that Siddhars also maintained that all medicines rested upon four pillars viz.— வாதம், வைத்தியம், யோகம், ஞானம், just in the same way as mentioned above. So, it gives room one to surmise if Paracelsus could have borrowed his ideas from the teachings of Siddhars several centuries old.

சமுசார வாழ்க்கை, இல்லற வாழ்க்கை, married life.

சமுசாரி, இல்வாழ் பெண், woman in married life; 2, கற்புடையவள், chaste woman; 3 மலத்திற் சிக்குண்டவன் அதாவது கர்மபந்த முடையவன், (*In Moral Philosophy*), one subjected to actions of Karma being involved in the suffering in the present birth for the actions done in the previous birth.

சமுசோதனம், வாந்தியாலும், பேதியாலும், உடம்பைச் சுத்தி செய்யு மருந்து முறை, mediation which purifies the system by simply vomiting and taking purgative.

சமுச் சரணம், பிள்ளைப் பிறப்பு, child-birth.

சமுதாய குணம், பொதுக் குணம், common quality; quality common to all: 2. பௌதிகக் குணம், chemical quality.

சமுதாய சோபை, உடம்பின் அங்கங்கள் தனித்தனியாக கருதாது ஒருங்கு கூடுதலால் தோன்றும் அழகு, beauty not considered in respect of each organ individually, but in due proportion of the several parts of a body or structure to each other thereby producing a pleasing whole—Symmetrical beauty.

சமுதை, கள்ளி விறகு, see சமித்து.

சமுத் திட்டம், ஆனைத் திப்பிலி, elephant pepper—Scindapsus officinalis.

சமுத்திர கந்தகம், சாதிக் காய், nutmeg — Myristica fragrans.

சமுத்திர கபம், கடல் நுரை, sea-forth engendered by submarine fire.

சமுத்திர குக்குலு, சீமை குக்குலு, African googal—Balsmodendron kataf.

சமுத்திர கோசம்,
சமுத்திர கோட்டம்,
சமுத்திர கோபம், } கடல் நுரை, see சமுத்திர கபம்.

சமுத்திரக் கடப்பு, வெண் கடம்பு; கோந்தள மரம்; சமுத்திராப் பழம். இது ஓர் மரம். பட்டை சிகப்பு; இலைகள் இரு பக்கமும் வழு வழுப்பு; பூ பெரியது; வெள்ளை யோடு கலந்த சிகப்பு நிறம் வாய்ந்தது; காய் முட்டைப் பருமன்; வித்து ஒன்று; வைகாசியில் பூக்கும். வேர் கொய்னாவைப் போ லிருக்கும். சிறு கசப்பு, மலத்தை இளக்கும், குளிர்ச்சி. இக் காயைப் பொடித்து ஆக்கிராணப் பொடியாக உபயோகப் படுத்தலாம், sea-side Indian oak or white Indian oak —Barringtonia racemosa alias Eugenia racemosa. Tree with reddish bark; leaves smooth on both sides; flowers large, and white with a rosy tinge; fruit about the size of an egg, and one seeded; flowering in May. Root resembles chincona root, slightly bitter, aperient and cooling. Fruit powdered and used medicinally like snuff.

**சமுத்திரக் கல்லுப்பு,** கடலி னுள் பாறைகளில் உறைந் திருக்கும் கல் லுப்பு. இதை வெட்டி யெடுக்கப் படும். இதற்குப் பாறை யுப்பு என்றும் பெயர், rock salt found adhering to the surface of rocks at the bottom of the sea from where it is dug out.

**சமுத்திரக் காக்காய்,** கடல் காக்கை, sea-crow; fish snatcher — Laridae; or Xema Brunnicephala.

**சமுத்திரக் காக்கை,** கடல் நாரை, sea-swallow of the tern family. See சமுத்திரக் குக்குலு.

**சமுத்திரக் காற்று,** கடற் காற்று, sea-breeze.

**சமுத்திரக் குக்கில்,** சீந்து குக்கில். இது சிவப்பு நிறம் கொடுக்கும், foreign googal — Balsmodendron kataf alias Amyris kataf. It gives a gum-resin more reddish than myrrh.

**[ச]முத்திர சித்தி,** ஆரால் மீன், lamprey fish—Rynchobdella aculeata.

**சமுத்திர சுண்டி,** ஆரல், see சமுத்திர சித்தி; 2. கிளிஞ்சில், bi-valve shell; elephent creeper.

**சமுத்திர சுத்தி,** ஆரல் மீன். இதனால் அரோசிகம், நீரிழிவு, உதர வாயு போம், sea-lamprey. It is said to cure nausea, diabetes and flatulency. See சமுத்திர சித்தி; 3. சமுத்திரப் பச்சை, Argyreia speciosa.

**சமுத்திர சோகி,** வட்டத் திருப்பி, Indian pareira—Cissampelos pareira; 2. சமுத்திராப் பழத்தின் விதை, seeds of Andaman Indian oak.

**சமுத்திர சோஷி,** see சமுத்திர சோகி.

**சமுத்திர சோஷி விதை,** வட்டத் திருப்பி விதை. இது கோழை, அரோசிகம், உதிர வாதம், அதிமூத்திரம் போம். உதர வாயுவைக் கண்டித்து வயிற்று வலியைப் போக்கும், சில சமயம் பெண்ணின்-கருப்பத்தையும் வெளியாக்கும். ஆகவே, வைத்தியர்கள் நோக்க மறிந்து உபயோகப் படுத்துதல் சாலச் சிறந்தது, the seed of Indian pareira — Barringtonia racemosa. It cures phlegm, nausea, nodose rheumatism and menstrual disorders as amennorrhoea, diabetes inspidus, flatulency, stomach ache etc. At times it may bring on abortion in females; and so, physicians should be discretional and careful while using it.

**சமுத்திரச் செடி,** சமுத்திராப் பழம். மரம் 30–50 அடி உயரம்; இலைகள் 15–7 அங்குலம்; தென் னிந்திய தோட்டங்களில் பயிராகும். பழம் 2–3 அங்குலப் பருமன். இலை பெரிது, மலர்ந்த பூக்களில் சிகப்பு காம்புகள், Indian bottle brush tree—Barringtonia speciosa alias Convolvulus speciosus, Tree 30–50 ft; leaves 15 by 7 inches; found in gardens of S. India; fruit by 2" by 3", large foliage, heads of blossoms with flowers of red filaments. Seeds mixed with bait inebriate fish.

**சமுத்திர தாமரம்,** மஞ்சள் அகில், yellow agilwood. See அகில்.

**சமுத்திர தோயம்,** முடக் கொத்தான், palsy curer — Cordiospermum halicacabum alias C. canescens,

**சமுத்திரத் தானம்,** கடல் முழுக்கு, sea-bath.

**சமுத்திரத் திரயம்,** see சமுத்திரா திரயம்.

**சமுத்திர நவநீகம்,** see சமுத்திர நவ நீதம்.

**சமுத்திர நவநீதம்,** ஒரு காலத்தில் கடலினின்று கடைந் தெடுத்த வெண்ணெய் யாகிய அமிர்தம், nectar or ambrosia supposed to have been derived once upon a time from the churning of the sea.

**சமுத்திர நாதம்,** முப்பு, (*In Alchemy*), quint-essence salt or the mystic three salts.

**சமுத்திர நீருப்பு,** கட லுப்பு, manufactured sea-salt, so called from its being derived from the sea-water by evaporation; 2. கறி யுப்பு, common salt used for curries or in culinary.

**சமுத்திர நீர்,** கடல் நீர். இதனால் கவிசை, பெருவியாதி, உடம்புக் குடைச்சல், இரத்த குன்மம், வாத குன்மம், சுரம், உதர வாதம், நீராமைக் கட்டி, பெரு வயிறு, பீலிக நோய் இவைகள் போம், sea-water. It is said to cure ascites, leprosy, bodily pain, uterine tumour, dyspepsia, fever, spleenic abscess, dropsy and other abdominal troubles.

**சமுத்திர நீலக் கல்,** நீலப் பவளம், acorus.

**சமுத்திரந்தம்,** see சமுத் திராந்தம்.

**சமுத்திர பேனம்,** கடல் நுரை, supposed to be the solidified form of sea-froth,

சமுத்திரப் பச்சை, சமுத்திரப் பாலை அல்லது கடற் பாலை, sea-green — Argyreia speciosa, see சமுத்திராப் பச்சை; 2. ஓர் வாசனைப் பூடு, a fragrant plant; 3. தமாலம் அல்லது மலைப் பச்சை, hill green—Garcinia Xanthochymus.

சமுத்திரப் பழம், ஓர் கடல் மீன், a sea-fish.

சமுத்திரப் பாலாலி, கடம்பு மரம், cadamba tree. See சமுத்திரக் கடம்பு.

சமுத்திரப் பாலை, see சமுத்திரப் பச்சை, or சமுத்திர சோஷி.

சமுத்திரப் புல்லாணி, கடற் பாலை, see சமுத்திரப் பழம்.

சமுத்திரப் பொட்டாகு, ஓர் மூலிகை, an unknown plant?

சமுத்திர மட்டப் பாறை, ஓர் வகை கடல் மீன், a kind of sea-fish; mackeral—Caranix.

சமுத்திரம், கடல், sea, ocean; 2. see சமுத்திரக் கடம்பு; 3. முடக் கழுத்தான், palsy curer. See சமுத்திர சோஷம்.

சமுத்திரம் புக்கல், கடல் புக்கல் அதாவது சோய் குணப் படல், seeking refuge into the sea, said of disappearance of a disease with no prospect of revival.

சமுத்திரயம், கடலிலுண்டான பொருள், that which is borne by sea as chank, pearl, salt etc.; sea-borne articles.

சமுத்திரயானம், கடல் யாத்திரை, sea-voyage.

சமுத்திர யோகம், see கடற் பாலை.

சமுத்திர லவணம், கடலுப்பு, sea-salt.

சமுத்திர வண்ணக் கல், see கருடப் பச்சை, 2. பச்சை படிகக் கல். இதற்கு ஆறுபட்டை யுள்ளது, Beryl—Aqua marina. It is a mineral composed of silicate of Aluminia and glucina, crystalising in the hexagonal system, see படிகப் பச்சை; 3. ஓர் வகைக் கருங் கல், a kind of granite stone.

சமுத்திர வண்ணச் சிலை, see சமுத்திர வண்ணக் கல்,: 2. கோமேதகம், cinnoman stone—Sardonyx.

சமுத்திர வர்ணக் கல், see சமுத்திர வண்ணச் சிலை.

சமுத்திர வுப்பு, கல் லுப்பு, sea-salt (borne of the sea) as distinguished from கறி யுப்பு, common salt (sun-dried sea-salt) also obtained from the sea-water; 2. பாறை யுப்பு, rock salt. See சமுத்திரக் கல் லுப்பு.

சமுத்திர ஊதியம், கடல் நுரை, sea-froth.

சமுத்திரா, see சமுத்திராப் பழம்; 2. see குட்டி விளா; 3. முடக் கொத்தான், see சமுத்திர சோஷம்; 4. சமுத்திராப் பழம், see சமுத்திரக் கடம்பு; 5. கடம்பு, cudamba tree—Barringtonia racemosa.

சமுத்திராச் செடி, see சமுத்திரப் பச்சை.

சமுத்திரா தேவி புத்திரி, சோனைப் பூ, an unknown plant?

சமுத்திராத் தாழை, see கடற் றாழை.

சமுத்திராத் திரயம், கடல் நுரை, sea-froth.

சமுத்திராங்கம் பருத்திச் செடி, see சமுத்திராங்கம்.

சமுத்திராங்கம், சாதிக்காய், nutmeg—Myristica fragrans; 2. சிறு காஞ்சொறி, small climbing nettle — Tragia involucrata (cannabina); 3. பருத்திச் செடி, cotton plant — Gossypium herbaceum alias G. typium.

சமுத்திரா பகிரி, கடற் குருவி, அதாவது கல் லுப்பு, insoluble salt dug out at the bottom of the sea.

சமுத்திராப் பச்சை, இதற்கு கடற் பாலை யென்னும் பெயர். இது அனேக இடங்களிற் பயிராகும். பூ பெரிது. ரோஜாப் பூ வர்ணம். கட்டிகள் பழுத் துடைவதற்கும், வீக்கங்களை கரைப்பதற்கும் இதன் இலைகள் உபயோகமாகும். இவ்விலையின் உட்பக்கம் வெண்ணிறம், இது தான் கட்டிகளை பழுக்கச் செய்வது. விதைக்கு பல முண்டாக்குங் குண முண்டு. இது சில் வாயு, காம்பைப் பற்றிய வாத ரோகம் இவைகளுக் குபயோகமாகும். இதன் வேரை காடியிற் கலந்து உடம்பிற் றேய்க்க பருத்த தேகம் இளைக்கும், sea-greens. Ocean dryer — Argyrcia speciosa alias Convolvolus nervosus. It is cultivated in many parts of India; large climber with big flowers red like rose; leaves used for abscess and for reducing swelling. The under or white side of the leaf is a maturant; whereas the upper-side of the leaf is used as a discutient. Seeds are used as a tonic and as such used for rheumatism and gout; the root is medicinally an alterative; mixed with vinegar, it is rubbed over the body to reduce obesity.

**சமுத்திராப் பழம்.** இப் பழம் கிழக்கு தீவுகளி லிருந்து கொண்டு வரப் படுகிறது. இது பெரிய எலுமிச்சம் பழம் போன்ற அளவின தாயும், நான்கு பிளவு ரேகை யுள்ள தாயும், கசப்பாயு மிருக்கும். இது அதிசார பேதி, சூதகக் கட்டு, இருமல், தலைவலி, சுரம் முத லிய நோய்களைப் போக்கும். இச் செடியின் பட்டையை கொய்னயிற்கு பதிலாக கஷாய மாக உபயோகிக்கலாம். இப் பழத்தின் தூளை மூக்கிலிட்டுக் கொண்டு வர, ஒற்றைத் தலைவலி, நீர் பீனிசம், குண மாகும். இதன் விதையை பொடி பண்ணி சிறிதளவில் குழந்தைகட்கு கொடுக்க வாந்தி மூலமாய் கோழையை வெளிப்படுத்தும்; பழத்தின் தூளைத் தொண்டைப் புண்ணை யும் சரும நோயையும் குணப் படுத்தும். Samutra fruit—Barringtonia racemosa alias Eugenia racemosa. It is imported from the Eastern Archipelgo and is about the size of a big lime fruit having four grooves and bitter in taste. It is used in cases of diahorrhoea, suppression of menses, cough, head ache, and fever. The bark of this plant is reputed to possess properties similar to those of Cinchona and so, it is used as decoction. The fruit as a powder is used like snuff to clean the nostrils in cases of head-ache, cold and catarrh of the nose. The powdered seeds given in small doses to children, acts as an expectorant and emetic. The powder is also said to cure lesion of the throat and cutaneous affections.

NOTE. — The seeds mixed with baits are used to inebriate fish just like those of Cocculus indicus. The tree when in flowers has a most beautiful appearance from its long racemes of rose-coloured flowers. It is also commonly to be met with along the banks of the back waters in Travancore. They are considered by the Native physicians valuble on account of their aperiant, deobstruent and cooling properties.

**சமுத்திராப் பழம்**, see சமுத்திரச் செடி; 2. சமுத்திரப்பழம்; 3. சமுத்திரக் கடம்பு, Barringtonia racemosa. Andaman Indian oak.

**சமுத்திராப் பழ விதை**, see சமுத்திர சோகி விதை.

**சமுத்திராப் புளியங்**, கிலுகு, match-box bean — Entada scandens.

**சமுத்திராப் புல்லு**, ஓர் பூடு, a plant — Thyme.

**சமுத்திர நாகத்தம்**, ஒரு நாகப் பூ, Ceylon iron-wood—Mesua ferrea (typica).

**சமுத்திரசோகம்**, see சமுத்திர சோகை.

**சமுப்பலை**, நாய் வேளை, five-leaved cleome —Cleome pentaphylla alias Cleome felina.

**சமும்பு பச்சைப்**, பால் பாசி, rosy-milk-weed —Cystelma esculentum.

**சமுலம்**, see சமுப்பலம்.

**சமுன்**, சமுட்டை, Ceylon oak — Berrya ammonilla.

**சமுற்பவம்**, பிறப்பு, birth.

**சமுனை**, தேக்கு, teak-wood — Tectona grandis.

**சமுனைம்**, ஈரம், moisture.

**சமூலச் சாம்பல்**, பூண்டு முழுமையாயும் கொளுத்தி யெடுத்த சாம்பல், ashes derived from burning plants as a whole as potash etc.

**சமூலத்தில் காய் பிஞ்சு**, விருத்தி, mardah or winged myrobalam—Terminalia tomentosa (typica).

**சமூலத்தில் நாய் வேளை**, வெள்ளை நீர் முள்ளி, water-thistle with white flowers —Hygrophila spinosa (alba).

**சமூலத்துவம்**, கீப் புல், black honey shrub —Phyllanthus multiflorus.

**சமூலம்**, வேரொடு முழுப் பூடு அல்லது செடி, the whole plant including the root.

**சமேதம்**, கூடி யிருத்தல், living as companion; keeping company with another.

**சமேதன்**, கூடி வாழ்ந்து இருப்பவன், one in union by marriage; husband.

**சமை கடை**, பல்லீறு, gum of the teeth.

**சமைதல்**, நிரூதல், to mature as a girl; 2. புழுக்கமா யிருத்தல், to be sultry; 3. பொருந்த மாதல், becoming apt.

**சமைத்த கந்தகம்**, பக்குவம் படுத்திய கந்தகம், synthetic or prepared sulphur; 2. நிருதசப் பாஷாணம், a phosphorus compound with sulphur; 3. கந்தக கலப்பு, any compound of sulphur; 4. பதங்கித்த கந்தகம், sublimed sulphur.

சமைத்த கறி, பொரித்த கறி, cooked or fried curry.

சமைத்தல், உணவை பக்குவப் படுத்தல், to cook as food ; 2. கொல்லல், to kill ; 3. புதிதாக உண்டாக்கல், to create afresh ; 4. செய்தல், making.

சமைத்திடு கெந்தகம், நீ முருகல் பாஷாணம், see சமைத்த கந்தகம்.

சமைந்த கன்னி, ருதுவான பெண், a matu red girl.

சமைந்தவள், see சமைந்த கன்னி.

சமையல், பாகப் படுத்தல், cooking ; சமைத்த உணவு, cooked food.

சமையாமை, பெண் ருதுவாகாமை, immaturity of a girl.

சம், மிகுதி, excess ; 2. பிறப்பு, birth ; 3. தாமரைப் பூச் சாறு, juice of lotus flower ; 4. அன்பு, love ; affection.

சம் சுருக்கம், புணர்ச்சி, copulation ; 2. காமத்தாலாகிய நட்பு, friendship or association induced by love.

சம்சா, கரண்டி, spoon.

சம்சமனம், medicine or measure which neutralises the Dosha's in the system.

சம் சோதனம், பேதி வாந்தியால் உடம்பைச் சுத்தமாக்கல், a medication which purifies the system by purgative and vomiting.

சம்ஞை, சைகை, gesture.

சம்பகம், see சண்பகம், 2. காந்தக் கல், load-stone ; 3. காட்டுச் சண்பகம், white champak—Michelia nilagirica.

சம்பங்கி, see சண்பகம் ; 2. கொடி சம்பங்கி, Indian cowslip creeper — Perugularia minor ; 3. வாசனைத் திரவியம், perfumery; 4. see சாலங்க பாஷாணம்.

சம்பங்கிக் கொடி, சீதா மனோகரம், prim rose creeper—Pergularia odoratissima.

சம்பங்கி சேதனம், சம்பங்கிப் பூ, champak flower—Michelia champaca.

சம்பங்கிப் புல், புற் சம்பங்கி, a fragrant champak grass.

சம்பங்கிப் பூ, சண்பகப் பூ, champak flower. The different varities of champak are :-

1. மர சம்பங்கி, tree champak — Michelia champaca.
2. நில சம்பங்கி, ground champak — —Polyanthus tuberosa.
3. அலச் சம்பங்கி, Indian magdolina —Plumeria acutifolia.
4. காட்டு சம்பங்கி, wild champak — Michelia nilgriaca
5. திரு சம்பங்கி, cananga flower tree Canangium odaratum.
6. கொடிச் சம்பங்கி, creeper champak —Pergularia minor.
7. நாக சம்பங்கி, white champak— —Tecoma undulata.

சம்பங்கி யெண்ணெய், சம்பங்கிப் பூ கலந்த ஓர் வாசனை தைலம், any medicated oil in which champak flower forms the chief ingrediant, 2 வாசனைக்காக சம்பங்கிப் பூவை ஊறப் போட்ட எண்ணெய், any oil in which champak flower is soaked for purposes of fragrence.

சம்பங் குடலை, சம்பங் கோழி, which see.

சம்பங் குலிகம், விஷ மூங்கில், Asiatic poison bulb—Crinum asiaticum.

சம்பங் கூடு, see சம்பங் குடலை,

சம்பங் கோரை, யானைக் கோரைப் புல், elephant sedge grass — Typha Elephantina ; 2. கோரை, sedge grass — Cyperus rotumdus.

சம்பங் கோழி, ஓர் வகை காட்டுக் கோழி. இது சம்பங் கோரையின் விதையை தின்பதால் இப் பெயர்; grey jungle fowl — Gallus sonne raltii. It is so called becauss of its feeding on the seeds of sedge grass.

சம்படம், சீலை, cloth, lint ; 2. சோம்பல், laziness, sluggishness of the system.

சம்பண மேதி, எருமை நாக்கிக் கள்ளி, buffalo-tongued spurge—Euphorbia genus.

சம்ப தேலம், எலுமிச்சை யெண்ணெய், lime oil ; lemon oil.

சம்பத்தி, நேர் வாளம், croton seed—Croton tigilium.

சம்பந்தத் தசை நார், சதை, தோல், கொழுப்பு, நாடி, எலும்பு இவைகளை ஒன்று பட இணைக்கும் மட்டமான நார் வஸ்து, a delicate stringy substance which usually binds and packs skin, muscle, fat, blood-vessels and bones all together so as to allow freedom of motion— Connective tissue.

சம்பந்தம், புணர்ச்சி, sexual connection; 2. உறவு, relationship; 3. விவாகம், marriage; 4. தொடர்பு, adaptation. See சம்மந்தம்; 5. இணக்கம், union i.e., the adaptation of parts in relation to each other viz:—

1. ஆன்ம சம்பந்தம், relation to spirit, — Spiritualism.

2. தேக சம்பந்தம், relation to body— Physicism.

3. விஷய சம்பந்தம், relation to body— Materialism.

4. காரண சம்பந்தம், relation to cause — Causationism.

சம்பந்தி, துவையல் வகை, a kind of condiment used as a relish in food.

சம்பம், எலுமிச்சை இலை, lime-leaf; 2. தண்ணீர், water; 3. பெரு நெலுமிச்சை, lemon; 4. மர வயிரம், the solid portion in the heart of a tree—Core; 5. நாக மரம், jambu tree — Eugenia jambolina; 6. சாலாங்க பாஷாணம், a mineral poison.

சம்பம் புல், see சம்பங் கோரை; 2. பாழ் நிலங்களில் விளையும் ஓர் வகைப் புல், grass growing on waste lands—Heath.

சம்பர நாரை, ஓர் சிவப்பு நாரை, a red crane.

சம்பரம், சிவப்பு மெல்லிய மான், a species of red and slender deer — Samber stag; 2. கடம்பை, the jerrow of Himalayas — Rusa aristotelis; 3. சரபம் என்னும் எட்டுக் கால் பறவை, a bird of ancient times supposed to be endowed with eight legs; 4. குளிர்ந்த நீர், cold water; 5. மருத மரம், murdah tree—Terminalia alata.

சம்பரி, நேர் வாளம், croton plant — Croton tigilium; 2. எலிச் செவி, rat's ear plant —Evolvulus emarginatus.

சம்பரித் தணக்கு, செந் தணக்கு, catamaran wood tree—Givotia rottleriformis.

சம்பர்க்கம், புணர்ச்சி, copulation; 2. கலப்பு, mixture.

சம்பலச் சீரம், எருக்கம் பால், milk of madar plant—Calotropis gigantea.

சம்பலம், எலுமிச்சை, lime fruit — Citrus medica; 2. எருக்கு, madar plant — Caltropis gigantea. See சம்பழம்.

சம்பல் வேர், கஸ்தூரி வாசனை யுள்ள வேர், sambal root or musk root; 2. ஓர் புல் வேர், the root of a grass.

சம்பவம், பிறப்பு, birth; 2. நிகழ்ச்சி, occurrence; 3. ஒன்றின் காரணம், causation; 4. தற்இருமை, (In Philosophy), the necessary existence of one thing in or with another, as one in a lot; 5. எலுமிச்சை, see சம்பலம்; 6. சம்பவிக்கும் காரணம், cause of occurrence.

சம்பவாதிகம், எழு முள்ளுக் கொடி, axil-spined mulberry — Plecospermum spinosum.

சம்பழ நீர், எலுமிச்சம் பழச் சாறு, lime-juice; 2. நடு மூலம், (பரி பாஷை), (lit) water or fluid secreted in the middle of the body, probably referring to urine or semen or woman's menstrual blood.

சம்பழம், எலுமிச்சம் பழம், lime fruit — Citrus aurantium (Bergamia); 2. புளிப்பு எலுமிச்சம் பழம், sour lime fruit.

சம்பளம், see சம் பழம்; 2. செம் மறிக் கடா, ram; 3. பொறாமை, malice; envy.

சம்பன சாரம், ஏழிலைப் பாலை, seven-leaved milky plant—Alstonia scholaris.

சம்பன்ன கரணி, இரணத்தைத் தீர்க்கு மருந்து a medicine capable of healing up wounds and injuries. See இரண சஞ்சீவி.

சம்பன்னன், நிறை அறிவுடையோன், one attained perfection in knowledge; 2, பாக்கியம் பெற்றவன், an accomplished man rich in everything or complete in requirements.

சம்பா, தஞ்சையில் விளையும் ஓர் உயர்தர சம்பா நெல், a species of superior paddy grown in Tanjore District, see நெல்; 2. சம்பா அரிசி, rice derived from Chamba paddy.

சம்பாகம், நன்குச் சமைத்தது, that which is cooked properly; wholesome preparation of victuals for the table.

சம்பாதின் கனி, எலுமிச்சம் பழம், lime fruit.

சம்பா நெல், நெல்லின் ஓர் வகை, a kind of paddy. Chamba See நெல்.

சம்பார இட்டலி, உளுந்த மாவுடன் காரம் சேர்த்துச் செய்த இட்டலி; காஞ்சிபுரம் இட்டலி, a baked rice cake prepared with chillies and other condiments mixed with black gram flour.

சம்பாரக் கூட்டல், கறிக்கு மசாலை சேர்த்தல், mixing up condiments and other curry-stuffs.

சம்பாரத் தோசை, மிளகு, இஞ்சி, கறிவேப்பிலை முதலிய சம்பாரங்கள் சேர்ந்த தோசை, leaf-like thin rice cakes mixed with condiments such as pepper, ginger, curry leaf etc.

சம்பாரப் புல், சுக்கு நாறிப் புல், ginger grass; 2. ஓர் வாசனைப் புல், any fragrant grass as kuskus etc.; 3. கற்பூரப் புல், lemon grass—Andropogon aromaticus.

சம்பாரப் பொடி, கறிப் பொடி, curry-powder.

சம்பாரமிடுதல், மருந்துச் சாமான்களைக் கலத்தல், to mix up ingredients in medicine; 2. கறி மசாலை சேர்த்தல், to form or prepare condiments or curry powder.

சம்பாரம், கூட்டு வகை, ingredients; 2. சாமான், substance; 3. கலப்பு, mixture; 4. கூட்டு வகை அல்லது மசாலை, curry-stuffs; 5. நீர் மோர், a mixture of water and butter-milk; whey.

சம்பார வல்லி, ஓர் வகை திராட்சை, Indian grape vine—Vitis indica; 2. காட்டுத் திராட்சை, Indian wild grape vine—Vitis rugosa alias Vitis latifolia; 3. see கற்பூர வள்ளி.

சம்பாலம், ஆட்டுக் கடா, he-goat.

சம்பால், ஓர் வகைப் பச்சடி, a kind of seasoning or relish taken along with food.

சம்பா அரிசி, சம்பா நெல்லின் அரிசி, rice from chamba paddy.

சம்பாவனை, மேன்மைய சிந்தனை, serious contemplation.

சம்பா வாருதி, வாலுளுவை, spindle tree—Celastrus paniculata.

சம்பிக பாகம், கொன்றை, common cassia—Cassia fistula.

சம்பிகோ, எலுமிச்சை, lime—Citrus medica-acida.

சம்பிரக் காய், எலுமிச்சங் காய், lime fruit.

சம்பிரக் குழம்பு, எலுமிச்சை ரசத்தைக் கொண்டு தயாரித்த ஓர் மருந்து, a medicine prepared with lime-juice as a chief ingredient.

சம்பிரதம், இந்திர சாலம், a magical performance through hypnotism; jugglery; 2. சித்து, miracle. See சாலம்.

சம்பிரதாயம், தொன்று தொட்ட வழக்கம், a long-established custom or usage; 2. குரு பாரம்பரியம், (*In Philosophy*). traditional communication of religious doctrines *from* teacher to teacher.

சம்பிரத்தின் கனி, see சம்பீரம்.

சம்பிரத் தீட்சண கெந்தம், கஞ்சாங் கோரை, white basil—Ocimum album.

சம்பிரமம், பறங்கிப் பாஷாணம், a mineral poison—*Mercurius sublimatus*; 2. கலியாணம், marriage; 3. உடல் அசைத்தல், moving the body.

சம்பிராகன், பதினெண் வகை பிரமேக நோய்களி லொன்று, one of the eighteen kinds of venereal diseases.

சம்பிரி, சேர்வாரம், see சம்பரி; 2. சேரான், *dhoby nut*—Semicarpus anacardium.

சம்பிரோ வத்தி, see சம்பீரம்.

சம்பினத் தாதி, வாயு விளங்கம், wind-killer—Embelia ribes.

சம்பீரத் தைலம், எலுமிச்சம் பழச் சாற்றை முன்னிட்டுத் தயாரித்த மருந்துக் கூட்டெண்ணெய், a medicated oil in which lime juice forms the essential portion.

சம்பீர நவநீதாஞ்சனம், எலுமிச்சஞ் சாற்றுடன் மருந்து கூட்டி வெண்ணெயைப் போல் செய்து கண்ணுக்கிடு மோர் மைக் கூட்டு, a collyrium for the eyes prepared like an ointment in which lime-juice forms the chief essence along with other ingredients.

சம்பீரம், எலுமிச்சை, lime—Citrus medica acida; 2. கிச்சிலி, jambiri orange—Citrus *aurantium* nobilis (jambira).

சம்பீர ராம், பறங்கிப் பாஷாணம், see சம்பிரமம்.

சம்பீர லவணம், எலுமிச்சை யுப்பு, lime-salt.

சம்பு, எலுமிச்சை, lime tree; 2. நாவல் மரம், jambu tree—Eugenia jambolina; 3. சம்பங் கோரை, sedge grass; 4. see குன்றுப் பாசி; 5. சீர்பந்த பாஷாணம், a kind of native arsenic; a mineral poison; 6. நரி, jackal; 7. சடைப் பூண்டு, see சடைச்சி; 8. see சம்பு நாவல்; 9. யானைப் புல், elephant grass—Typha Elephantina; 10. கருநெல்லி, black-berry; 11. வன்னி மரம், Arjuna's penance tree

—Prosopis spicegera ; 12. தக்கைப் புல், pith-grass—Typha angustifolia.

சம்புகம், நரி, fox ; 2 குள்ள நரி, jackal ; 3. சங்கை போ லிருக்கும் சிறிய பலகறை, a small cowry resembling the chank.

சம்புகா, நத்தை யோடு, shell of a snail.

சம்புகாதி மாத்திரை, சங்கைப் போன்ற சிறிய பலகறையில் பஸ்பம் செய்து அத்துடன் உப்பு வகைகள் சேர்த்துத் திரட்டிய ஆயுள் வேத மாத்திரை. இது பரிணாம சூலைக்குக் கொடுக்க நிவர்த்தி யாகும், an Ayurvedic pill prepared by mixing up several salts with the calcined powder prepared from a small cowry resembling the chank. It is prescribed for gastralgia.

சம்புகா வர்த்த பகந்தர விரணம், ஓர் விரண ரோகம். அது திரிதோஷத்தினால் பிறந்து, ஆசன வாயிலில் நத்தை யோட்டுச் சுழியைப் போல், துவாரங்களை யுண்டாக்கும். அப்போது நடக்கும்போது விரணம் அறுபடுவது போல் வலியை யுண்டாக்கும், a form of fistulous tract with sinuses developed in the shape of curls like those of snail-shell, by the side of the rectum. This is marked by cutting pain rendering the patient unable to walk.

சம்புக் கோவை, see சம்பங் கோரை.

சம்பு சம்பல், சதகுப்பை, dill-seed — Anethum graveolens.

சம்பு சயனம், ஆல மரம், banyan tree ; 2. திருவாத்தி, holy mountain ebony — Bauhinia tomentosa ; 3. பாம்பு, snake.

சம்புடகம், சிமிழ், a small metallic box for holding or preserving medicines ; 2. காம லீலையி லொன்று, one of the 64 postures in embracing a woman during sexual congress. See சம்புடம்.

சம்புடம், செப்பு, a small mud vessel for preparing medicine as in calcination ; 2 மருதோன்றி, henna plant—Lawsonia alba ; 3. தமிழ் கொக்கோக நூலின்படி 64 லீலைகளில் ஒன்று. இது அடியிற் கண்டபடி இரு வகைத்து, according to Tamil Kokkogam, this is one of the 64 postures contemplated in sexual intercourse. It consists of two classes as mentioned below viz :—(1) உத்தான சம்புடம் and (2) பாற் சம்புடம்—

1. உத்தான சம்புடம். இதில் மல்லாந்து படுத்த பெண்ணின் சம்போக காலத்திற் குறி புகுந்தவுடன் இருவரும் கால்களை நீட்டிப் படுத்துக் கொண்டு இரு தொடைகளையும் நெருக்கிப் பிடித்தலாகிய ஓர் லீலை, it is a posture in which the woman is lying on her back with her thighs and vaginal orifice tightly closed up after penetration, both of them stretching their legs in the bed. The thighs should be closed together only *after* penetration.

2. பாற் சம்புடம். இதில் ஒருக்களித்துப் படுத்த பெண், மேற்கண்டபடி புரியும் லீலை, a posture in which the woman is lying on her *side* and continue the above position during intercourse after penetration.

NOTE—According to the Tamil Erotic Science of Kokkoga Muni, this posture taken up during coitus consists in the woman who is middle-aged, keeping her thighs closely, and then seperating them little by little according to the requirements This is applicable only to an *aged* woman of the class " Loose-fit Union."

சம்புதம், பிறப்பு, birth ; coming to life.

சம்பு நாவை, see சம்பு நாவல்.

சம்பு நாவல், சிறு நாவல், small jaumoon—Eugenia arnottiana ; 2. see சம்பு மலைக்கா மரம் ; 3. நீர் நாவல், water-jaumoon — Eugenia munronii.

சம்பு நாவல், காட்டில் வளரும் பெரு நாவல் மரம். இதுவே பன்னீர் பழ மரம். சம உயரம், பழம் பெரிது. இம் மரத்தை எங்கும் பார்க்கலாம். இலைகள் 1½—2 அங்குல அகலம்; நீளம் பலவாறு. பூக்கள் பெரிது. பழம் சிறிய ஆப்பிள் பழத்தைப் போ லிருக்கும். பன்னீர் வாசனையா யிருக்கும். இது அவ்வளவு ருசியா யிராது, இதை ஊறுகாய் போடலாம். சிறிய பழத்திற்கும் இதற்கும் குணத்தில் வித்தியாச முண்டு. இதன் கொட்டையை எடுத்துவிட்டுப் பின்பு இப் பழத்தினின்று பன்னீர் காய்ச்சலாம். இதன் பட்டை துவர்ப் பானதினால் கஷாய ரூபமாக கிராணிக் கழிச்சல், சீதபேதி இவைகளுக்கும், கொப்புளிக்க நீராக தொண்டைப் புண்ணுக்கும், குழகுழத்த பல்லீறு நோய்க்கும் உபயோகிக்கலாம். இதன் கொட்டையைத் தூள் செய்து நீரிழிவுக்கு கொடுக்கலாம். இலையின் கொழுந்துச் சாற்றுடன் ஏலம், கரு

வாப் பட்டை இலைகளைச் சேர்த்து வெள்ளாட்டுப் பாலில் வைத்து குழந்தைகளின் கழிச்சலுக்குக் கொடுக்கலாம். இப் பழத்தைக் கொண்டு ஷர்பத் அல்லது காடி யிறக்கி, வயிற்றுக் கோளாறுகளுக்கும், வாயுவைக் கண்டிக்கவும் உபயோகப் படுத்தலாம். அன்றியும், இது துவர்ப் பாகவின் மண்ணீரல் வீக்கத்திற்கும், நாட்பட்ட கழிச்சலுக்கும் கொடுக்கலாம், large-fruited jaumoon or East Indian rose - apple — Eugenia jambos. The tree is of moderate size bearing large fruit. It is grown all over India, leaves 1½-2" broad, but variable in length; berries 1-2 in diametre; large flowers. Fruit is of the size of a small apple and with a fine delicate rose-water perfume, hardly eatable being of a poor flavour and taste, made into preserves, differs from the smaller jaumoon fruit in quality. Rose-water can be distilled from the fruit, taking the seed out first. The bark is an astringent and as such, is used in decoction in cases of chronic diarrhoea and dysentery, and as a gargle in sore throat and spongy gums. The seed or stone of the fruit is used for diabetes. The juice of the tender leaves mixed with cardamons and cinnamon is given in goat's milk for diarrhoea in children. The syrup or vinegar prepared from the ripe fruit is a stomachic and carminative. It is also useful in the enlargement of the spleen and chronic diarrhoea being an astringent.

NOTE—This should not be confounded with கொட்டை நாவல், black plum — Eugenia jambolina.

சம்பு நீர், கடல் நீர், sea-water.

சம்புப் புல், see சம்பங் கோரை

சம்புப் பூகி, வரிக் கடுக்காய், yellow-striped gall-nut.

சம்புப் பொற்சரம், சரக் கொன்றை, common cassia—Cassia fistula

சம்பு மலாக்கா, மரம், சம்பு நாவல். இது ஓர் செடி. 6-8 அடி உயரம், சிறிய இலைகள்; இலைகள் 9-12" by 3½"; இரு பக்கமும் பளபளப்பா யிருக்கும்; பூக்கள் பெரிது, அழகா யிருக்கும். காய்கள் சிறிய ஆப்பில் பழத்தைப் போலிருக்கும். தின்பதற்கு அவ்வளவு ருசியா யிராது, Malay rose-apple; Malacca jaumoon—Eugenia malaccensis.

A small shrub 6-8 ft. high; leaves 9-12" by 3½" inches; glossy on both surfaces; flowers large and handsome. Fruits are of the size and form of a small apple, perfectly smooth, translucent, white with a bluish of crimson, not worth eating.

சம்புராகம், கொன்றை, cassia—Cassia fistula.

சம்பு ரோதம், முள் வெள்ளரி, foreign cucumber—Cucumis sativus.

சம் புல்லம், மலர்ந்த பூவை யுடைய மரம், any tree with blossomed flowers.

சம்பு வக்கு, கொன்றை, see சம்புராகம்

சம்பு வன்னி, பரம்பை மரம், Arjuna's penance tree—Prosopis spicigera.

சம்புவாசி, கணக்கன் விருட்சம், an unidentified tree ?

சம்பு விபூடம், ஆண் குறியின்தோலின் மேலுண்டாகும் தடித்த விரணங்கள், raised patches of wounds on the surface of the penis.

சம்பூ, நாவல் மரம், common jaumoon tree—Eugenia jambolina.

சம்பூக சீரிஷ வாதம், நரித்தலை வாதம். மிக்க சீதள காலத்தில் சிலேட்டும வஸ்துக்கள், பிண்ணாக்கு, வாயு வுள்ள வற்றல் முதலிய பண்டங்களைப் புசிப்பதாலும், அன்றியும், அதிக நடை, பகல் நித்திரை, மிகுமைதுனம் முதலியவைகளாலும் ஏற்பட்டு,பிறகு வாதக் கோளாறினால் அவ்விடத்து நிரவப்பசை சேர்க்குவிந்து முழங்காலின் பொருத்தில் தங்கும். அதனால் முழங்கால் நரித் தலையைப் போல் வீங்கி, தடிப்பு, திமிர், வலி, குத்தல், மலச்சிக்கல் முதலிய குணங்களைக் காட்டும், a disease of the knee arising from dietetic errors, such as taking phlegmatic substances, oil-cake and other fried things causing fistulence; and it is also due to extraneous circumstances as, excessive walk, or indulging in day sleep or excess of sexual intercourse. Pathologically, it is due to deranged Vayu (humour) in which the excited synovial fluid becomes settled in joints. It is marked by inflammatory overgrowth of the articular cartilages resembling the head of a jackal attended with numbness, and at times with acute pain, constipation etc.—Synovitis of the knee-joint. See நரித்தலை வாதம்.

சம்பூகச் செடி, ஓர் கருப்புப் பூச் செடி, elder bush or elder berry—Sambucus nigra.

சம்பூகத் தைலம், நத்தைக் கறியும், கடுகு எண்ணெயும் சேர்த்து இறக்கும் ஓர் வகைத் தைலம். இதை காதில் எழும்பும் புண்களுக்குபயோகிப்பது, a medicated oil prepared from snail flesh and mustard oil. It is used as ear-drops in the affection of the ear.

சம்பூக பற்பம், ஆயுர் வேத முறைப்படி தயாரித்து பக்கத்தி சூலைக்குக் கொடுக்கு மோருத்திர சங்குபற்பம், an Ayurvedic medicine prepared by calcining the small species of chank. It is prescribed for acute colic of the abdomen.

சம்பூகப் பூ நீர், சம்பூகப் பூவி னின்று வாலைவிட்டுத் தயாரிக்கும் நீர். இது மற்ற மருந்துகளோடு அனுபானமாகச் சேர்க்கப் படும். இது சுறு சுறுப்பை உண்டாக்கும், distilled water obtained from fresh elder flowers—Aqua sambuci. It is used as a vehicle for other medicines especially in lotions. It is a mild stimulent.

சம்பூகம், சங்கு, conch ; 2. நத்தை, snail ; 3. நரி, fox ; 4. நாவல், jaumoon ; 5. கிளிஞ்சில் bivalve-shell. See சம்புகம்.

சம்பூகை, கிளிஞ்சில், bi-valve-shell ; mollusc.

சம்பூதம், see சம்பு நாவல் ; 2. போதுமான அளவு, sufficient quantity.

சம்பூரண பருவம், யௌவனத்திற்கும் கிழத்தனத்திற்கும் இடையே யுள்ள பருவம், that period of middle age intervening youth and oldage—Middle-aged.

சம்பூரணம், மேலும் பெறுது, கடைசியாகப் பெறும் பெண் குழந்தைக் கிடும் பெயர், the name given to the last female child, wishing to have no more.

சம்பேதனம், கரையச் செய்யும் கர்த்தா, a dissolving agent as gastric juice—Katalysis.

சம்பை, see சம்பங் கோரை ; 2. மின்னல், lightning ; 3. மீன் பொது, fish in common.

சம்பைச் சரக்கு, எளிதில் அழியும் சரக்கு, easily perishable article ; 2. மட்டச் சரக்கு, drug of inferior quality.

சம்போக கஷ்டம், கலவி அல்லது புணர்ச்சி காலத்தில், ஆண் பெண் இருவருக்கும் ஏற்படக் கூடிய கஷ்டங்கள், அவையாவன, the sexual and other difficulties which may be experienced by both man and woman during sexual intercourse viz :—

1. சோபன கல்யாண இராத்திரி முதல் சம்போகமாதலால், புருஷனுக்கு தன் பெண்சாதியின் கூச்சம், வெட்கம் முதலியவைகளை நீக்கி, மார்பைத் திறக்கவும், இடுப்பு சேலையை களைந்து நிர்வாண மாக்கச் செய்வதற்கு, இது முதல் தடவையாதலால் மிக்கச் சிரமம் ஏற்படும். அன்றியும், முதல் தடவை புணர்ச்சி செய்யப் புகுவதால், இருவர்களுக்கும் இயற்கையாகவே வலியும், தொந்திரவும் ஏற்படும், in the intercourse on the nuptial night, it is a great problem for the husband to fight over the shyness and the delicacy for exposing the wife's breasts, and the removal of her garments to appear naked for the first time. This night may be a trial for both, as the first coitus will naturally be painful to both of them.

2. சம்போக காலத்தில் சாதாரணமாக பெண்களுக்கு பிணக்கு அல்லது ஊடல் என்னும் காமப் போர் இயற்கையாகவே ஏற்பட்டதை, பிடிவாதமாகக் கொள்வார்களாதலால், புருஷர்கள் அதைத் தப்பாக நினைக்காமல், சாந்தமாகவே யிருந்து அதைத் தணிக்க வேண்டும், a woman sometimes makes very effective use of a certain holding back which we used to call 'Pinakku' or love quarrel. So, the man has to contend against this in a peaceful way, and should not misunderstand.

3. பெண்களின் கன்னி முதிரை முதற் சம்போக காலத்தில் கிழிவு ஏற்படுமாதால், யோனி மார்க்கம் புண்ணாகவே யிருக்கும். ஆகவே, சிலநாள் வரை சம்போகத்திற்கு மிக்கக் கஷ்டமாகத் தான் இருக்கும், when the hymen is ruptured during the first sexual intercourse, the vagina may be sore and so inter-

couse will naturally be difficult for a few days.

4. புருஷர்கள் விடாதபடி தொடர்ச்சியாய் நின்றபடி சம்போகம் செய்வதால், முதுகிலுள்ள வீணாத் தண்டுக் கயறு சேருகிறது, அதனால் பாரிச வாயு ஏற்பட்டு கைகால்களை விழச் செய்யும். அதுவுமன்றி, இடுப்பு வலியும், அடக்க முடியாத மூத்திர வொழுக்கு முதலான கஷ்டங்களும் சம்பவிக்கும், man by persistently assuming an erect posture may be affected with congestion of the spinal cord and paralysis of the extremities, pain in the lumbar region, inocntinence of urine etc.

5. சில பெண்களுக்கு ஆரம்பத்திலிருந்தே பெண் குறி பின்புறம் உள்ளடங்கி இருக்கும் பட்சத்தில் சம்போகத்திற்கு கஷ்டமேற்படும். அதற்காக பெண்களின் பின்புறம் அதாவது முதுகுப் பக்கமிருந்து சம்போகிப்பது எப்பொழுதுமே நன்மையெனக் கருதப்படும், the backward location of the vulva, according to the early development in them, presents difficulties in intercourse, and in such cases, rear entry is always credited.

6. ஆண், பெண்களின் சனனேந்திரியங்கள் ரூபத்தில் மாறுபட்டும், இருக்க வேண்டிய நிலை குலைந்தும் இருப்பதாலும், தங்களுடைய வாழ்க்கையில் தேக வளர்ச்சிக்கு மாறுபட்ட அங்கத்திலும், குறிப் பொருத்தங்களிலும், அநேக சந்தர்ப்பங்களில் முரண்பாடு ஏற்பட்டு, இவ்வாறு காரணத்தினால் சம்போகத்தில் கஷ்டங்கள் ஏற்படக் கூடும், malformation, malposition of sex organs, physiological disparities etc. in several stages of life of both man and woman, may also lead to difficulties in sexual intercourse-

NOTE.—[illegible]mmation is the first intercou[illegible] makes the coup as husband and w[illegible]o doubt, it is a trial for both the [illegible]specially to a woman who may [illegible]e greatly with intimacies outsi[illegible]ual act such as, love-play whic[illegible]a new thing amongst the Hindu[illegible]

This love-play originates even on the *third* day of the Hindu marriage itself



openly in the midst of relatives and friends, so that the pair may continue this on the wedding night without any shyness, hesitation or mental reservation—which is the root cause of all the future troubles.

So, love-play or petting is of greatest importance on the wedding night. A shy bride should be slowly initiated into the intimacies of wedded life, as a brusque and rushing attitude may have harmful effects.

சம்போக காலம், காம நூலின்படி பெண்கள் மாத விலக்கான நான்காம் நாள் முதல் 12 நாள் வரை புணர்ச்சிக்குரிய காலம். மற்ற 14 நாட்களில் கருப்பம் தரிக்காவிட்டாலும், பெண் விரும்பினாலன்றி புருஷன் வலிய புணரலாகாது. அன்றியும், அமாவாசை, பௌர்ணமி நாட்களை விலக்க வேண்டும். ஆகவே, இவ்விதி விலக்குகளை அனுசரிக்க வேண்டியது அவசியம், the period according to Sexual science, prescribed for sexual intercourse is between 4th and 12th day after menses. Although the remaining 14 days are not intended for conception, the man cannot have recourse to sexual intercourse unless desired by the woman. Moreover, new and full moon days, are generally restricted for such intercourse. It is essential that the rules should be strictly adhered to.

NOTE.—According to Tamil Sexual Science, 'Kokkogam', the days selected for conception is from the 9th—16th day after menses. During the remaining period of 17th—30th day, sexual intercourse is not allowed unless the woman shows her inclination for it, and she is in a receptive mood, because the female generally when in heat, appears to have an almost unlimited capacity for sexual intercourse; and it is only then, the man's sexual craving is very easily satisfied, and both the parties will have equal satisfaction.

The best time for intercourse is when interference or any disturbance, and inconvenience to body and mind, will not occur. The time for sexual relations should be chosen in a way that the temporary excitement or after exhaustion resulting from it, may not interfere with the daily avocation in life. It is a great mistake to think that, so long as the genital organs are capable of action at any time, it is no matter or little importance and consequence what time or place is chosen and under what circumstance. Some medical authorities suggest the evening time; but Hindu Science enjoin

the early morning 3-4 A. M. for the reason that great vigour will be fresh after a sound sleep and before the day starts. Moreover, power of erection will be more strong only in the early morning.

சம்போகக் கிரமம், புணர்ச்சி காலத்தில் தன் இஷ்டப்படி நடவாமல், ஒழுங்கான முறைமையில் நல்வழியிற் செல்ல வேண்டிய மார்க்கங்கள். அவையாவன, a man should not behave as he pleases in sexual intercourse, but should follow the rules of normal sexual life viz :—

1. சம்போகத்தில் எவ் விஷயமும் இயற்கையான தன்மையதாக இருக்க வேண்டுமே யொழிய, சுரு சுருப்பை உண்டாக்கும்படியான செயற்கைத் தொழிலே கூடாது, in coitus, every thing should be natural, but not stimulus.

2. புணர்ச்சிக்கு முன்னதாகவே இரு பேருக்கும் காம இச்சையை மூட்டு வதற்கு ஏதுவான காமக்கேளிக்கை, சம்பாஷணை முதலியவை முக்கியமா யிருக்க வேண்டும், coitus should include with it, the love-play, chatting, and other preliminaries which are essential for promotion of sexual desire.

3. சம்போகத்தை பெரிய சங்கதியாகக் கருதாமல்படிக்கு, சகஜமான விஷயமாயும், உடம்பை பற்றிய அவசியமான தொழிலாயும் இருபேரும் நினைக்க வேண்டும், sexual intercourse should be looked upon by the parties as a normal and necessary biological act without seriousness.

4. புருஷனுக்கும், பெண்சாதிக்கும், பெரும்பாலும் மனப் பான்மை ஒருமைப் பட்டதாகவே இருக்க வேண்டும். சம்போகத்திற்கு எந்த விஷயம் முறைமைப்படி அவசியமான தென்பதும், எது அளவுக்கு மிஞ்சிய தென்பதும், இருவரும் தங்களுக்குள்ளே நிர்மாணித்துக் கொள்ள வேண்டும், complete understanding between the husband and wife is necessary. What is necessary and normal and what is excess should be decided by the parties themselves.

சம்போகக் கிரமம்

5. சம்போகத்தில் பல தடவைகளிலும், கைகொண்ட கொள்கைகளை, எப்பொழுதுமே எந்த சமயத்திலும் எல்லா பெண்களிடத்திலும் உபயோகப் படுத்தப் படாது. ஆகவே, சில வேளையிலும், சில சந்தர்ப்பங்களிலும், சிலரிடத்தில் மாத்திரமே உபயோகிக்கலாம். இது விஷயத்தில் தெரிந்தபடி சரிவர நடந்துகொள்வதற்கு காமச் செயல்களின் அறிவும் அநுபோகமும் வேண்டும், various methods employed very often in coitus cannot be used at all times, in all circumstances and on all women, but should only be done at the proper time, in proper place and on proper person; and it is for this that sexual knowledge and experience is considered necessary.

6. சம்போகம் பூர்த்தியாகவும், சகஜமாக வும் இருக்கவேண்டிய தென்றால், முதலாக குறி எழுச்சி என்கிற ஆண்மை வேண்டும். ஆகவே, இவ் வித ஆண்மையையும், வலிமையை யும் காட்டுவதற்கு புருஷன் எவ்வள விற்கு உயர வேண்டுமோ அவ்வள வும் செய்யவேண்டும், the first requisite for complete and normal copulation is the full and strong erection of the penis; and so, man is expected to rise to the highest stature in manhood.

7. சம்போகத்தை பூர்த்தி யடையும்படி செய்யாமல் அரைகுறையாய் விடு தால், பெண்களுக்கு இடையூறான அசந்தர்ப்பங்கள் ஏற்பட்டு அதனால் பலவித நரம்புக் கோளாறுகள் உண் டாகும், incomplete sexual inter course will bring about a detrimental effect upon the women who will be afflicted with all kinds of nervous disorders.

8. மாதவிடாய் காலத்தில், சம்போகம் செய்வது முறைமையல்ல. ஏனெ னில் பெண்கள் மர்மஸ்தானங்களில் இரத்தமயமாய் இருக்குமாதலால் பெரும்பாடு ஏற்படும், intercourse should not be resorted to during menstruation for, it may at times, bring on acute hemor-

rhagic metritis, the general apparatus being already overfilled with blood.

9. சம்போகத்திற்கு பெண் சம்மதப்பட்டவளாய் இருக்க வேண்டும். ஆகவே, எந்த வகையிலும் அவளை பலவந்தப் படுத்தப் படாது, woman should be a consenting party to intercourse, but not be compelled under any circumstance.

10. புணர்ச்சி எப்பொழுதுமே மிருகத் தன்மையதாக இருக்கப் படாது. ஏனெனில், அது சந்தானத்திற்கு, அதாவது குழந்தை பெற வேண்டுமென்பதற்கு மாத்திரமே யல்ல, தங்கள் இருபேருக்குள் அமைந்த தேக சூடும், காந்த சக்தியும் ஒருவரை விட்டொருவருக்குள் பாய்ந்து மாறுத லடைய வேண்டுமென்பதற்குத்தான். ஆகவே, மேற்கண்ட சூடும், காந்த சக்தியும் அப்படி மாறுதலால் தேக முழுமையும் பரவுவதற் கேதுவாகி, இரு வருக்குள் அவரவர்களுக்கு வேண்டியதை நிரந்தரமாய் சமப் படுத்துவதற் குண்டான வழி விரைவாக ஏற்படுகிறது, intercourse should never be of animal nature. It is intended not only for progeny, but also for magnetic interchange which quickens the process of the thermal and electric forces of the whole system, thus one side giving the other what it can well spare, and what the other side needs.

11. ஒரு மனிதனுக்கு எவ்வளவு தூரம் அசௌகரியங்கள், தொந்திரவு, கஷ்டங்களு மில்லா திருக்கிறதோ, அவ்வளவிற்கும் அதிகமாய் சம்போகிக்கலாம். இந்துக்களுடைய சாஸ்திரங்களில், ஒரு வாரம் அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு முறைதான் சமயத்திற்கு தக்கவாறு வரையறுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, கால அளவை ஒருவாறு நிரந்தரப் படுத்திக் கொள்ள வேண்டுமே ஒழிய, அடிக்கடி யென்ற முறைமையை விருத்தி செய்யக் கூடாது, a man can indulge in intercourse into excess in the absence of a feeling or a sense of discomfort or suffering and strain. Hindu science restricts this to once a week or once a month as the case may be. It is always better to space out the acts of Intercourse rather than to multiply that frequency.



12. இருபேரும் ஒற்றுமை யில்லாத சோடியாகவும், தேகப் பொருத்த மில்லாமலும், ஒருவரிடம் காம விகாரம் மேலிட்டதாயும், மற்றொருவரிடம் தாழ்ந்த தாயும் காணப்பட்டால் விவாகம் என்பதே கூடாது. ஆகவே, பொருத்த விஷயத்திற்கு சோதிட பரிசீலனை முக்கிய மானதென் றுணர வேண்டும், two persons of unequal combination or rather constitution as over-sexed and under-sexed, should not be matched together in married life; and so, Astrological consultation is more essential for match-making.

13. சம்போகத்தில் முறைப் பிசகு மாறுபாடான தொழிலில் ஈடுபடக் கூடாது, one should not resort to perverted ways in sexual intercourse.

14. சம்போகத்தில் சாதாரணமாக ஆண் மேலாகவும், பெண் கீழாகவும் இருப்பது சகஜம். இதற்கு மாறாக இருப்பது இயற்கைக்கு விரோதம். ஆயினும், சில சந்தர்ப்பங்களில் ஆண் பலவீனப் பட்டாலும், பெண்ணின் காமவிகாரம் மேலிட்டாலும், பிள்ளை யில்லாது மலடியா யிருக்க விரும்பினாலும், வேறு சில காரணங்களை முன்னிட்டும் இவ்விதமாக இருக்கலாம், the normal position for intercourse is that man should get on the top of woman, but the reverse position is not natural; and is advisable only at times in a few cases such as, man's weakness, over-sexed women, women desiring to be sterile or to avoid conception.

சம்போகக் குருடு, பெண்களுடன் அதிகமாகப் புணருவதால் ஏற்படும் கண் குருடு அல்லது மட்டுப் பார்வை, blindness or dullness of vision due to sexual excess—Post-marital amblyopia or Burus amaurosis.

சம்போகக் குறைவு, புணர்ச்சிக் குண்டான ஆண் தன்மைக் குறைவு, lack of manliness or erectile power essential for sexual intercourse.

சம்போகக் குற்றம், see சம்போகப் பிழை.

சம்போகக் கேடு, புணர்ச்சியால் சேரும்படும் ஆபத்து, கஷ்டம், துன்பம், கேடு முதலியன, இது அடியிற்கண்டபடி பல காரணங்களால் ஏற்படும். அவையாவன, calamity, loss, affliction, vices, evils etc., arising from sexual intercourse. Several are the causes as mentioned below :—

1. ஒரு கிழவன் சம்போக விஷயத்தில் வாலிபம் கொண்டாடப் பிரியப் படுவாருயின், அவன் தனக்குத் தானே மரணத்தைத் தேடி கொள்வதற் கேதுவாகிறுன், அல்லது துயரத் திற்குட்படுவோன், an old man who tries to lead the sex-life of a young man, signs his own death-warrant or must naturally come to grief.

2. பூரணமான சம்போகம் ஏற்படாவிடில் பலவிதமான கோளாறுகளும், நோயும், இரு பேரும் அடைந்தாலும், அதில் பெண் முக்கியமாய் அடைவதற்கு ஏதுவாகும். ஏனெனில், அவள் நரம்பு நோயால் பிடிக்கப் பட்டு தேறுவது கஷ்டமாகும், incomplete sexual intercourse is sure to bring on, all kinds of imaginable ailments to both, and especially to women who will turn out to be a nervous wreck.

3. சில சமயம் மனிதனுடைய பேடித் தனத்திற்கும், பெண்ணி னுடைய காமவுணர்ச்சி யற்ற தன்மைக்கும் சம்போகமே காரண மாகிறது, sexual intercourse sometimes leads to impotency in man and frigidity in a woman.

4. தேகம், மனது அல்லது பரவச சம்பந்தமாய் ஏற்பட்ட அதிகக் களைப்பு, இடைவிடாத மனோ சிந்தனை முதலிய வற்றால் ஆண் தன்மை குறைவுபடும். அச் சமயம் சம்போகத்தில் இறங்கப் படாது, extreme fatigue whether physical, mental or emotional and intense mental concentration will tend to lessen the potence and so intercourse should not be attempted.

NOTE—Moreover, the sexual contact should not be too frequent so as to draw off one's life's forces too much and hence, seperate beds are preferable so as to prevent one of them from sapping the life of the other as too often occurs. It should not be forgotten here that, during the sexual intercourse or even in embrace, there is a thorough interchange of electricities.

சம்போக சக்தி, புணர்ச்சிக் குண்டான ஆண் தன்மை அல்லது தேக வலிவு, potency or bodily strength required for sexual intercourse; 2. ஆண்மை, manliness.

சம்போக சம்பந்தம், நேராகக் கூடுவதிலுண் டேற்படும் உறவு, relationship from direct sexual connection; copulation.

சம்போகச் சின்னம், புணர்ச்சிக் குண்டான குறிகள் அல்லது அடையாளங்கள், அவையாவன—மகளிர் விளையாட்டு, நகக் குறி, அதரபானம், முத்தமிடல், கிள்ளுதல் முதலியன, signs or symptoms relating to a sexual preliminaries such as—love-play, embrace, pressing the breasts, nail-marks, sucking the lips, kissing, pinching etc.

சம்போகத் தடை, பெண்களுடன் புணர வேண்டிய காலங்களில் அதற் கிடையூறாக ஏற்படும் பல இடைஞ்சல்கள், அவையாவன, the various obstacles to sexual intercourse with women viz :—

1. சோதிடத் தற்படி சில நாட்கள் அதாவது அமாவாசை, பௌர்ணமி, ருதுகாலம், மாதவிடாய் பிற்பாதி நாட்கள் சம்போகத்திற்குக் கூடாதென தடுக்கப்பட் டிருக்கிறது, *Astrological causes*—some Hindu scriptures prohibit man from entering into coitus on certain dates such as — new moon, full moon, periods of menstruation, the latter part of the menstrual cycle etc.

2. தேக அமைப்புக் குற்றங்கள்—இறுகி ஒட்டி அடைப்பட்ட யோனித் துவாரம், குறுகிய யோனித் தாரை, குறுகின இடுப்பு, முரடான கன்னித் திரை; யோனியின் அமைப்பு (முன், பின்) கோணல், ஒவ்வாத குறி பொருத்தம், குறித் தளர்ச்சி, ஆண் நபும்சகம் அல்லது பேடித்தனம்,

பெண்ணின் காம உணர்ச்சியின்மை, துரிதக் ஸ்கலிதம் முதலியவைகளால் சம்போகம் தடைப் படும், *Anatomical hindrances* such as — adhesion of the labia, closed vulva, narrow vagina and pelvis, rigid hymen, position of the vulva (*backward and forward*), disparity in size and breadth of the sex organs, impotency of man, frigidity of woman, premature ejaculation etc.

3. தேகத்தை யடுத்த காரணங்கள் — தேகநோய் அல்லது தேக அசௌகரியம், மனிதனின் காமவீனம், பெண்ணின் தடித்த உடம்பு, நெடு நாட் சம்போகத்தினால் வெறுப்பு, நரம்புத் தளர்ச்சி அல்லது பல வீனம், பெண் காமச்செயலுக் கிணங்காமை, புணர்ச்சியினா லுண்டாகும் வலி, மர்மஸ்தானத்தில் கொழுப்பேறல், ஆண் நிருத்த மணி, அதாவது சுருக்கத்தினால் ஆண் குறித் தோல் மேலுக் கேறாமை, துரிதக் ஸ்கலிதம், யோனி நாதாசய அழற்சி, கருப்பை இடம்விட்டு நழுவுதல், மலச் சிக்கல், பெண்ணின் சுமரி மேற்றோல், அல்லது யோனி விதழ் ஒட்டிக் கொள்ளுதல், யோனித் தாரை கூச்சத்தினால் சுருக்க மடைதல் முதலிய காரணங்களினால் சம்போகம் தடைபடும், *Physical causes* such as — sickness or other physical ailments, sexual weakness in man, obesity especially in woman, sexual indifference owing to monotony, nervous debility, want of response in woman, painful penetration or pain during coitus or dispareunia, heavy deposit of fat in her external genitals, phymosis in man, quick emission, inflammation of the vulva and ovaries, displacement of the uterus, severe constipation, adherent prepuce of the clitoris, adhesion of the labia minor, spasms of the vaginal muscles etc.

4. மனோ நிலைமையை அடுத்த காரணங்கள் — ஆணிற்கு விந்து விழும் போது வலி எப்படி உண்டாகுமோ அவ்விதமாகவே, சில பெண்களுக்கும் மூத்திரத் தாரை யானது யோனித் தாரைக்குள் சம்பந்தப் படுவதாலேற்படும் வலியினாலும், ஹிஸ்டீரியா சன்னி கோளாறினாலும் தடையுண்டாகும், *Psychic causes* as — Dispareunia due to the situation of the urethral opening inside the vagina just like painful ejaculation in the male, hysteria in women etc.

5. பிறப்பை யடுத்த காரணங்கள் — சில ஆண் பெண் இருவருக்கும் குழந்தைக் குறியைப் போலவே பெரு காமம் சுருங்கி சிறிதாகவே காணப் படும். இது பெண்களுக்கு சகசமாய் ஏற்பட்டது. இதனால் சம்போகத்தில் மிக்க வலி ஏற்படும், *Congenital causes* as — sexual infantalism which is more common in women than in men. In the case of a woman, the coitus is very painful.

6. மாந்திரீகம், பில்லி, சூனியம் இவைகளினாலும் பெண்கள் கற்பு நிலைமை புருஷர்களின் பிரமசாரிக் கொள்கையினாலும், சம்போகம் தடை படும், *Occult causes* such as — Magic or Mantrams, sorcery, witchcraft etc., by which sexual intercourse will be interrupted as also, chastity in the female and celibacy in the male.

7. பலவித காரணங்கள் — பூர்ண கர்ப்பம், ருதுகத்தை யடுத்த பிற்காலம், குழந்தை முலை யூட்டும் காலம் முதலியவை. அன்றியும், கருக் கொண்ட சிலநாள் வரையில் சம்போகத்தி லீடு படுவதால் கருவுக்கு அழிவு ஏற்படும். ஆகவே, சில வாரங்கள் வரை அதைத் தடுக்க வேண்டி வரும், *Miscellaneous causes* such as — Full-termed pregnancy, the latter part of the menstrual cycle and the lactation period. Moreover, intercourse should be stopped for some weeks after conception has taken place for, it may destroy the new being.

8. வேறுவகை காரணங்கள் — ஆணுக்கும் பெண்ணுக்கும் சிறும் போழ்தில் ஏற்பட்ட சன்னி அல்லது அபஸ்மா

றுவும், பிற்காலத்தில் தோன்றும் நரம்புக் கோளாறு, கை முட்டி மைதுனம், அடுத் தடுத்து ஏற்படும் கருப்பம், கருச் சிதைவு. ருதுகக் கோளாறு, வயது முதிர்ச்சி அல்லது கிழத்தனம், முகத் தோற்றம் சுருக்கத்தினுல் அழகு குறைதல், குறிகள் தளர்ச்சி, தேகத்தை யடுத்த நோய்கள், பிரமேகம். வெள்ளை, வெட்டை, பறங்கி நோய் கள் முதலியவைகளால் ஏற்படும் தடை, *Other causes* such as — inhibition brought on by shock experienced in early years of life, masturbation;. repeated pregnancy at short intervals, abortion, menstrual disorders, advanced age and change of features, relaxation of sex organs, congenital or constitutional diseases, venereal diseases as gonorrhoea, syphilis etc.

சம்போகத் திருப்தி, கலவியின் இன்பத்தினுல் ஏற்படும் மனத் திருப்தி. இதை அடைவதற்கும் அடையா திருப்பதற்கும் அனேக காரணங்க ளுண்டு. அவையாவன, sexual satisfaction. Several are the causes for deriving and not deriving it, viz :—

1. ஒரு பெண்ணுடன் முதலாக சரசம் புரிந்து, பிறகு அவள் விரகதாபம் மேலெழும்பினு லொழிய அவளுக்கு சையோகத்தில் முழுவதும் திருப்தி உண்டாகாது, No woman will be completely satisfied in sexual *intercourse unless she is wooed* before hand and until she reaches the climax.

2. ஒரு பெண் விரகதாப மடைவதற்கு முன், ஆண் விரகதாபம் மேலிட்டால், சம்போகத்தில் ஒருவருக்காவது அல்லது இருபேருக்கும் திருப்தியே உண்டாகாது, If a man reaches the climax before the woman reaches it, the coitus effected will never give satisfaction to either of them or both.

3. சம்போகத்தில் இருவரின் உள்ளன் போடு கூடிய நேசம் இல்லாவிடில் இருவருக்கும் பூரணத் திருப்தி உண்டாகாது. ஆகவே, அவ்வித கலவி சகஜத் தொழிலாய் முடிந்து விடும், Intercourse devoid of love is incapable of bringing on profound satisfaction to both of them and so, it will turn out to be a routine work.

4. சம்போக காலத்தில் பெண்கள் தங்கள் காம விச்சையை மேலிட முயற்சி செய்து, கலவியில் இணக்கங் காட்டினுல் தான், அவளுக்கு விரகதாபம் சீக்கிரம் மேலிட்டுப் பூரணத் திருப்தி யை யுண்டாக்கும், women should *try to be more passionate and* assume a receptive mood when engaged in intercourse, and it is only then, she will reach the climax earlier so as to get greater satisfaction.

5. சம்போக மென்பது இருவருக்கும் மனத் திருப்தியை உண்டாக்க வேண்டிய தெனினும், முக்கியமாக பெண் களுக்கு உண்டாக வேண்டியது அவசியம். சாதாரணமாக, அனேகம் பெண்கள் சம்போகத்தில் திருப்தி யடையாமல் காம நுகர்ச்சி யற்று வாழ்ந்து வருகின்றனர். ஏனெனில் பெண்களின் விரகதாபம் மேலெ ழும்பு முன், புருஷர்கள் சம் போகத்தை முடித்து விடுவதே முக்கிய காரணமாகக் கருதப் படும், the intercourse should be to the mental satisfaction of both and especially to women, because the majority of wives are sexually unsatisfied and live a life sexual starvation, for the reason that intercourse is finished before they are sexually aroused.

6. பொதுவாகவே, சையோக சம்பந்தத் தில் அடியிற் கண்டபடி சொற்ப கஷ்டங்கள் அதாவது கன்னி முத் திரைக் கிழிவு, இரத்த வொழுக்கு, குறி பொவ்வாத காரணத்தினு லுண்டாகும் வலி அங்கப் பொருத்த மின்மை முதலிய சம்பவங்கள் ஏற்படுவது சகசம். இவைகளைத் தகுந்தபடி திருத்தி நிவர்த்தி செய்த பிறகுதான் புணர்ச்சியில் பூரணத் திருப்தியும் இன்பமும் உண் டாகும், Perfect satisfaction will be derived only after tiding over some minor difficulties and obstacles such as, rupture of hymen hemorrhage, pain due to dis-

parity and maladjustments, laceration etc.

7. இருவரும் திருப்தி யடையும்படியாக ஒவ்வொருவரும் தங்களுக் குண்டான அல்லது வேறு விதமாக ஏற்பட்ட குற்றம் குறைகளை ஒளிக்காமலும், வெளிப் படையாகவும் யாதொரு கூச்ச மில்லாமலும், வெட்கப் படாமலும் மனதைவிட்டு எடுத்துச் சொல்லி, அதற்குத் தக்கவாறு இன்னது தான் செய்வதென்று தங்களுக்குள் கலந்து ஆலோசிக்க வேண்டிய தென்பது அவசியம், for purposes of satisfaction to both, it is essential that they both freely exchange without reservation their defects and difficulties or other extraneous techniques, and try to mend them then and there without feeling shy and shame or any delicacy whatsoever.

சம்போகத் தூர்த்தன், காமாதிகத்தினால் புணர்ச்சியில் மாறானத் தொழிலில் ஈடுபட்டவன், sexual pervert in intercourse through abnormalities; 2. விபசாரன், a debauchee.

சம்போகத் தூர்த்தை, புணர்ச்சியில் அக்கிரமச் செயலில் ஈடுபட்டவள், a female sexual pervert in intercourse: 2. விபசாரி, a prostitute.

சம்போக பேதம், புணர்ச்சியி லேற்படும் வித்தியாசங்கள், differences or changes arising from sexual intercourse.

சம்போகப் பிழை, பெண்களுடன் புணர்ச்சி செய்வதற் குறித்தான விதி விலக்குகளை சரிவர அறியாததினால் ஏற்படும் குற்றங்கள் அவையாவன, faults and flaws arising from ignorance or neglect of duty by contravening the rules relating to sexual intercourse viz :—

1. பொதுவாக ஆண் பிள்ளை கலவியில் பெண்ணை திருப்தி செய்ய முயற்சி செய்வதில்லை. ஆகவே, பூர்த்தி யடையாத சம்போகத்தினால் பெண்ணானவள் நரம்பு வியாதியின் மேலீட்டினால் துன்புறுகிறாள் என்பதை உணர வேண்டும், generally man does not try to please a woman during sexual intercourse, and he should know that incomplete indulgence will make her a nervous wreck.

2. மனிதன் இயற்கை விதிக்கு மாறாக தனக்கு தோன்றிய வுள்ளக் கருத்தின்படி போக்குள்ளவனாய், தனது ஜனன வுறுப்புகளை தாறுமாறாக உபயோகப் படுத்துகிறான், man disobeys the laws of Nature being guided by his own instincts by misusing his organisms.

3. ஜனன வுறுப்புகளை கோயில்களில் ஸ்தாபித்து வணங்குவது தெரிந்திருந்தும், அது விஷயத்தை மதித்து பாராட்டுவதற்கு பதிலாக அசங்கியமாகவும், அறுவறுப் பாகவும் எண்ணுகிறான். அது கூடாது, man should not regard the genital organs as low, vulgar and degrading instead of looking upon them with some regard as great significance is attached to the sex-organs which are even worshipped in temples.

4. சம்போக விஷயத்தில் அளவு கடவாமல் மிதமா யிருக்கப் பழகுவது மிக்க அரிதா யிருக்கிறது. ஆகவே, ஒருவன் தனக்கு இயற்கையில் ஏற்பட்டச் சக்தியை மேன்மை யான்படி உபயோகிக்காமல், இழி வடையும்படிக் காரியங்களைச் செய்துவிட்டு, பிறகு அது விஷயமாக விசனப் படுவதில் பிரயோசன மில்லை, sexual economy is seldom practised, and there will be no use for regretting when once he abused his powers given to him by Nature for a nobler purpose.

5. அனேகமாய் புருஷர்களுக்கும், பெண்களுக்கும், ஜனனேந்திரிய அமைப்பைப் பற்றியும், அதன் சம்பந்தமாய் உடம்பில் ஏற்பட்ட சம்போக விஷயத்திற் குரிய தேவையான அம்சங்களைப் பற்றியும் தெரியவே தெரியாது, average men and women are not aware of the structure of the sexual organs or the sexual needs of the body.

6. பெண்களின் மாத ருதுக் காலத்திலும், பூரண கர்ப்பமா யிருக்கும் சமயத்திலும் இணக்கமில்லாத மனோநிலைமையிலும் சம்போகம் அறவே கூடா தென்பதைத் தெரிந்திருக்க வேண்டும், it should be known that intercourse during menstrual

period or in advanced pregnancy or when the woman is not in a receptive mood, is greatly restricted.

7. சம்போகத்தில் பெண்களுக்கு கருத் தரிக்காதபடி விந்து கழல்வதை தடுத்தலும் அல்லது அடக்குதலும், குறியை வெளிக் கிழுத்தலும் கூடவே கூடாது, suppression of seminal discharge or coitus interruptus i.e., the withdrawal of the organs at the time of ejaculation with a view to prevent conception of women is not at all advisable.

8. சம்போக விஷயம் அனேகமாய் தேக சௌக்கியக் கூறையும், அபி விருத்தியையும் பொருத்தது. ஆகவே, எவ்விஷயத்திலும் மிதமான அளவாகவே யிருக்க வேண்டும். அளவுக்கு மிஞ்சி சாப்பிடல், குடித்தல், சம்போகித்தல் ஆகிய இவைகளை அறவே ஒழிக்க வேண்டும், sexuality depends upon the idiosyncrasis and promotion of the general health of the body; and so, temperate life is essential. Excess in anything like eating, drinking, cohabiting etc. should be avoided.

9. ஒருவன் தான் வெள்ளை, வெட்டை நோய், பறங்கி நோய் முதலான மேக நோய்களில் ஈடு பட்டிருந்தால் அவை பூராவும் குணப் படாமல், ஒன்றும் அறியாத இளம் பெண்களை சம்போகிக்கவும் அல்லது விவாகம் செய்யவும் கூடாது, man should not marry or have intercourse with a young and innocent woman, when he has not properly cured of the sexual defects in him as gonorrhoea or syphilis.

10. தன் மனைவியானவளை எவ் விதத்திலும் ஒரு கட்டு முட்டைப் போலவும் அல்லது அடிமையாகவும் கருதி தன் மனோவிஷ்டத்திற்கு கட்டு பட்டவள் என்பதாக எண்ணி நடக்கப்படாது, he should not look upon his wife in any way as a chattel or slave or use her to suit his fancy.

11. சம்போக விஷயங்களில் பிடித்த சம்பந்தத்தை சாதாரணமாக காட்டப் பட்ட பழக்க வழக்கமாகக் கருதி ஒரே மாதிரியாக இருக்கப் படாது, the habit of continued relations in the sexual intercourse should never be allowed to degenerate into a routine affair in stereotyped episodes.

12. சம்போகத்தில் மன வொருமை ஏற்படா விட்டால், சாதாரணமாக ஆணுக்கு சபும்சகமும் அதாவது பேடித் தன்மையும், பெண்ணுக்கு மகிழ்ச்சியற்று இருத்தல் அதாவது உணர்ச்சியற்ற தன்மையும் உண்டாகும், want of co-operation in sexual intercourse usually brings about sexual depression culminating in impotency in the male and frigidity in the female.

சம்போகம், புணர்ச்சி, sexual intercourse; 2. இருவரும் அநுபவிக்கும் இன்பம், the sexual pleasures enjoyed by both; 3. சமபோகம், sensual enjoyments shared equally.

NOTE.—It is the term literally applied to the union of the two sexes by the introduction of the male reproductive element into the body of the woman. It is a function, the performance of which strengthens the bond of relationship between a man and a woman, because of the voluptuous pleasures derived by the friction of the two vibrating mucous membranes, leading to highest excitement.

சம்போக வகை, புணர்ச்சிக் குண்டான அறுபத்து நான்கு வகை கிலைகள், the 64 kinds of postures contemplated in the Erotic science; 2. இயற்கைக்கு விரோதமான புணர்ச்சிகள், அவையாவன, several unnatural intercourses viz:—

1: ஆணோடு ஆண் செய்யும் ஆசனப் புணர்ச்சி, copulation between males by the anal—Sodomy.

2. பெண்ணோடு பெண் செய்யும் கலவி, mutual friction of the genitals between women—Tribadism.

3 புருஷன், மிருகங்களுடன் புணர்தல், man having sexual connection with animals—Bestiality.

4. பெண், மிருகத்தோடு புணர்தல், a woman having intercourse with an animal (trained).

**சம்போக வன்மை**, see சம்போக சக்தி.

**சம்போக விகற்பம்**, see சம்போக பேதம்.

**சம்போக விச்சை**, புணர்ச்சியில் ஏற்பட்ட விருப்பம், sexual desire for copulation.

**சம்போக விதி**, சம்போக காலத்தில் இரு திறத்தாரும் அநுசரிக்க வேண்டிய விதிகள், அவையாவன, rules to be obeyed by both the partners during sexual intercourse viz:—

1. ஒருவர் தன்மீது உள்ளன்பும், பாசமும் எவ்வளவு அதிகமாகக் காட்டுகிறார்களோ, அவ்வளவிற்கு தானும் மற்றொருவரிடத்தில் அதே மாதிரி காட்ட வேண்டுமென்பது காம நுகர்ச்சியில் ஏற்பட்ட முக்கியமான அம்சம் அல்லது உரிமைப் பங்காகும். ஆகவே, இவ்வித உரிமைப் பங்கு இருவரிடமும் ஏற்படாவிட்டால் நேசத்திலாவது, சம்போகத்திலாவது இருவருக்கும் கலவியில் யாதொரு இன்பமில்லாமலே போய்விடும், the cardinal law of both love and communal bliss requires that the more tender and affection of either, the more cordially should it be reciprocated by the other; and so, without reciprocity neither can be happy either in love or sexual enjoyment.
2. பெண்கள் கருப்பிணியாயிருக்கும் பொழுது சம்போகம் என்பது மிதமாயும், அபூர்வமாயும் இருக்க வேண்டுமென்பதும் தவிர, கருப்பத்திற்கு யாதொரு இடையூறும் ஏற்படாதபடி புருஷர்கள் மெதுவாக லீலை புரிய வேண்டும், after pregnancy, intercourse should be scarce and very moderate without exerting pressure on the womb.
3. சம்போகத்தில இருவருக்குள் குதிப் பொருத்தம், மிதமான புணர்ச்சி, அன்பு பாராட்டு, பூரண கலவித் தொழில் வியற்றல், துரிதமும் தாமதமுமில்லாது ஒரே காலத்தில் ஏற்படும் ஆனந்தக் களிப்பு முதலிய இத் தன்மையைதான காமக் கிரியைகள் முக்கியமானவை என்றுணர வேண்டும், it should be known that in sexual intercourse, sexual adjustment, proper mating, moderation in sexual indulgence, mutual love, perfection in sexual act, simultaneous orgasm without hastening or lingering, and such other elementary factors are essential.
4. பின்னர் எவ்விதமாக நேரினும், சம்போக காலத்தில் மாத்திரம் முறைப்படி, உடற் குறை அல்லது தேக அசௌகரியங்களைக் கருதாமல் ஒருவரை ஒருவர் சந்தோஷிக்க முயற்சி செய்ய வேண்டும், whatever may be the consequences, both the partners on principles, should try to please each other in the matter of intercourse and sexual gratification, irrespective of their bodily defects or other ailments.
5. எந்தப் பெண்களையும் அவர்கள் மனோசாந்தம் அல்லது தேக சௌக்கியமில்லாத காலத்தில், அவர்களிடம் சம்போகத்தை விரும்பி நெருங்கப்படாது, never approach a woman sexually when she is not in a proper mood or in a sound state of health.
6. சம்போக காலத்தில் இரு பேருக்கும் மனோசுத்தமும், தேக சுத்தமும் வாய்ந்திருக்க வேண்டும். மேலும், உடம்பில் துர்நாற்றம் வீசுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது, Both should keep their mind and body always clean and never give room for any offensive body odours.
7. சம்போகத்தில் காம லிச்சை கொண்டு பெண்ணை கூடியவரை பாராட்டுவதில் யாதொரு மனக் களங்கமின்றி பூரணமாய் நேசிக்க வேண்டியது மல்லாமல் முதலாக, அவளின் காம நுகர்ச்சியை கவனித்து இன்பமுறச் செய்ய வேண்டும். ஏனெனில், இல்லற வாழ்க்கை நிலைத்திருக்க இதுவே முக்கியமான ஆதாரம், man should not only be frank in his caressing a woman in every possible way, but also love her heartily; and should never fail to attend first, to her sexual gratification — a solid foundation to a lasting marriage.

8. பெண்ணின் விரகதாபத்திற்கு, தான் இணங்கி விட்டதாக புருஷன் பாவனை காட்டி, அவளை நம்புமாறு செய்து, அதனால் சொற்ப சிற்றின்பத்திற்காக வேண்டி அவளின் வாழ்வை கெடுப்பதற்கான ஈனத் தொழிலில் இறங்கக் கூடாது; a male should not descend to the baseness of yielding to passion so far as to try to mislead a woman and blast her whole life just for the sake of a few moments of pleasure.

9. புருஷன் தன் வரைக்கும் சம்போகத் திருப்தியையும், சிற்றின்ப சந்தோஷத்தையும் கவனித்துக் கொண்டு, தன் மனைவியின் காம நுகர்ச்சியின் நிலைமையை கொஞ்சமேனும் கவனிக்காமல் இருக்கப்படாது. ஏனெனில், இதுவே குடும்பத்தில் ஏற்படும் அனேக விதமான சண்டைச் சச்சரவு, மனஸ்தாபம், மற்றுமுள்ள விவாக சம்பந்தக் கோளாறுகளுக்கு முக்கியமான காரணமாகும், a man should not be so selfish as to look for nothing, but to his own instinctive satisfaction and egoistic gratification; and never care a bit about the sexual condition of his wife—the real reason for so many matrimonial reverses and too many latent conflicts in homes.

10. வயதிற்குத் தக்கபடி ஆண்மையும், காம விச்சையும் குறைவு படும். ஆகவே, இது விஷயத்தைப் பற்றி விசனம் அல்லது ஏக்கமென்பதே கூடாது. மேலும், தாது விருத்தி யடைந்து பழய வாலிப நிலைமைக்கு திரும்பி அடைவதற்காக வேண்டி, இலேகியம் கொள்ளல், தைலம் பூசல், பலத்திற்காக பஸ்ப செந்தூரங்கள் சாப்பிடல், ஊசிப் போட்டுக் கொள்ளல் முதலான காரியங்களில் ஈடுபடக் கூடாது, age usually lessens potency and sex desire; and so, one should not regret or much worried about it, and try to put back the clock by stimulants aphrodisiacs, ointments, calcined powders, tonics or injections of any kind.



11. பெண் தன் அவயவங்களை திறந்து காட்டுவதற்கு, நாணம் கூச்சப் படக் கூடாது; புருஷனும் பெண்ணின் உடம்பிற் குரிய தேவைகளை கவனிக்க வேண்டும், woman should set aside her shyness and delicacy to expose her parts, and man should pay first attention to woman's biological needs.

12. புருஷர்கள் 21 வயதிற்கும், பெண்களுக்கு 16 வயதிற்கும் முன்பதாக சம்போகத்தில் ஈடுபட விடக் கூடாது, intercourse should not be allowed before 21 years in males and 16 years in girls.

13. பெற்றோர்கள் அல்லது வயதில் மூத்தோர்கள் இளைஞர்களை தகுந்தபடி கவனித்து, அவர்கள் சம்போகத்தில் மிதமிஞ்சி போவதற்கும், மற்ற கெட்டச் செயல்களைச் செய்வதற்கும் விடாதபடி தங்கள் பார்வையில் வைத்திருக்க வேண்டும், parents or elders should have an effective control or supervision over their youngsters and guard against sexual excesses and other vices.

14. தேகம் படும்போதெல்லாம் இருவருக்கும் காம விச்சை ஏற்படும். இதை தடுப்பதற்காக வேண்டி சம்போக வேளை தவிர, மற்ற காலங்களில் இருவருக்கும் தனித் தனி படுக்கை இருக்க வேண்டும், they should have seperate beds except at the time of intercourse so as to prevent the tendency to excitement to contact.

சம்போக விவரணம், புணர்ச்சியைப் பற்றியும், தொழிலியற்றும் விவரங்களையும், காமநுகர்ச்சியின் இன்பங்களையு மாத்திரம் விளக்கமாகக் கூறும் நூல், that branch of sexual science dealing particularly about sexual intercourse, the process of the effecting it successfully and the sensual pleasures and enjoyments derived from it—Physiology of coitus.

NOTE.—What really takes place in coitus is—the erected penis penetrates the vaginal orifice between the labia majora and minora, seperates the opposed vaginal walls entirely, filling the vagina with

secretion. Simultaneously, the organ presses in the bulbs of the vestibule which flank and narrow the orifice of the vagina; rubbing against the clitoris, causing thus great sensation. This excitation is greatly increased by the friction of the penis against the labia minora, the process of which adhere to the clitoris. Thus, a feeling of pleasure arises, which flows through the entire body of woman. The further, the penis penetrates into the vagina, the greater is the feeling of pleasure in women.

சம்போக வின்பம், புணர்ச்சியி லுண்டாகும் ஆனந்தம், sexual pleasures experienced in sexual intercourse.

NOTE.—A balanced pursuit of sexual pleasure is certain to ensure a life of happiness. Many a failure in married life is due to physical or sentimental disparity and ignorance; and no one knows exactly the difference that exists in the passion of men and women; but this can be remedied through astrological consultations to a certain extent or through a careful study of sexual science.

சம்போக வெறி, ஆணிடத்தில் உண்டாகும் அதிக காம விகாரம், an insane desire in man for sexual intercourse — Satyriasis; 2. பெண்ணிடத்தி லேற்படும் காம வைத்தியம், an abnormal desire in the female for sexual intercourse—Nymphaemania.

சம்போக வெறுப்பு, புணர்ச்சியில் அரு வருப்பு அல்லது விருப்ப மில்லாமை. இதற்கு பல வித காரணங்க ளுண்டு, aversion or indifference shown in the matter of sexual intercourse. The causes attributed to this are many viz:—

1. அடிக்கடி செய்யும் புணர்ச்சியால் ஏற்பட்ட அருவருப்பு, களைப்பிளைப்பு, தேக அசௌக்கியம், ஆண்குறியை செறிய உட்புகுத்தலின் கஷ்டம், சையோக இன்பத்தை யுணராத் தன்மையுள்ள பெண், கைமுட்டி மைதுனம் முதலிய காரணங்களால் ஏற்படும் மனோ வெறுப்பு, sexual indifference due to monotony, fatigue, indisposition, difficulty of intromission, woman's frigidity, masturbation etc.

2. தேகத்தை பற்றிய அசாத்திய நிலைமைகள் அவையாவன, பேடித்தனம், குறி எழுச்சியின்மை, மனோ விவகார அதிதங்கள், அதாவது மூளையைத் தாக்கக் கூடிய சதா நினைவுகள், உதாரணமாக—சர்வாதிகாரி, நியாயாதிபதி, வழக்குரைப் போர், கணக்கில் வல்ல நிபுணர்கள் ஆகிய இவர்களுக்குப் புணர்ச்சியி லேற்படும் வெறுப்பு. அன்றியும், சரியாக அமைக்கப் படாத சம்போகக் கருவிகள், முக அவலட்சணம், தடித்த உடம்பு, யோனித் தளர்ச்சி, தொங்கு முலை, முதலிய குற்றங்களினால் புருஷர்களுக் குண்டான மனோ விருப்ப மற்றத் தன்மை, physical impossibilities such as impotency, want of erectile power, too much of mental work as in the case of statesmen, judges, vakils, mathematicians and others; sexual deformities, ugliness, obesity, relaxation of vagina, and hanging breasts in women.

3. ஒருவருக் கொருவர் வயதின் வித்தியாசம், இருவரிடம் அமைந்த இயற்கையான ஆண்மை அல்லது வலிவுக் குறைவின் வித்தியாசம், disparity in age, lowered sex potency in either of them.

4. மேனியழகு குறைந்து மாறுபடுதலினால் ஒருவர் மற்றவரிடத்தில் அன்பு கொள்ளாமை அல்லது ஒருவரை யொருவர் விரும்பாமை, changed features of beauty of one not appealing to the mind of the other or even when one may not like the other.

5. இயற்கைக்கு விரோதமாக நடக்கும் தேசங்களில், மனோ வெறுப்பிற்கு எவ்விதமான காரணங்களும் சொல்லிவிட முடியாது, in countries where people override Nature, no reasons can be assigned for this sort of sexual aversion.

6. குடி போதை, பழக்கம், விபசாரத் தொழில், குற்றம் கண்டு பிடிக்கும் குணம் முதலிய கெட்ட பழக்கச் செய்கைகளினால் மனதில் அருவருப்புதோன்றி இச்சை ஏற்படாமலிருப்பதும் மற்ற காரணங்களில் ஒன்று, drunkenness; promiscuous intercourse, fault-finding tendency etc. may be among other causes.

சம்போகித்தல், புணர்தல், to have sexual intercourse.

சம்போகி யடிக்கடி, சேவல், cock, so called from its frequent copulation.

சம்போர், கெட்ட பூதம், a mischievous spirit.

சம்மட்டி, ஓர் மூலிகை, a herb, see குத்துக் கால் சம்மட்டி ; 2. கொல்லன் சம்மட்டி, blacksmith hammer.

சம்மணம், சப்பணங் கால் போடல், sitting with legs crossed.

சம்மிதை, ஏதாவதொரு வித்தையைப் பற்றிக் கூறும் நூல், சாரங்கதர சம்மிதை, a treatise on any branch of knowledge or science, for example Sarangadara Sammitah, an Ayurvedic science ; 2. சரக சம்மிதை, a medical treatise by Charaka.

சம்மிய ஞானம், பேரறிவு, supreme wisdom.

சம்மியாகம், கொன்றை, cassia — Cassia fistula.

சம்மேளனம், கண்ணாடி, glass ; 2. கூட்டம், கூடல், meeting ; assembly.

சம் மோகம், மயக்கம், delusion ; 2. பேராசை, greediness ; 3. see சம்போகம்.

சம் மோகனம்; வசீகரம், fascination ; infatuation.

சம் மோகினி, மூர்ச்சை யன்றி உணர்வற்றிருக்கச் செய்யு மோர் மூலிகை. இது இக்காலத்திய ஐரோப்பிய பண்டிதர்கள் உபயோகிக்கும் குலோரபாரத்தைப் (Chloroform) போன்றதொரு மருந்து. ஆயினும், குலோரப் பாரத்தைப்போல் அவ்வளவு அபாயகரமானதல்ல. எனவே, இது மிகவும் சிறந்தது, வேண்டிய போது சஞ்சீவினிப் பிரயோகத்தால் மயக்கத்தை நீக்கி பிரக்ஞை வரும்படி செய்யலாம். ஆதலால், சஞ்சீவினியை கையிருப்பில் இல்லாமல் இம் மருந்தை உபயோகிக்கவே கூடாது, a drug used in olden days as an anesthetic for artificially producing or inducing a state of insensibility to feeling or acute pains without swoon. It serves the purpose of the chloroform used at the present day by European doctors. It is to be considered better than chloroform for, it can be applied with less danger to life. A reviving drug is all that is necessary for restoring the consciousness and so, without it, application of an anesthetic cannot be considered advisable.

சம்யக்ஞானம், பேரறிவு, mature wisdom, see சம்மியக் ஞானம்.

சம்யாஞ்சிகம், see கடலழிஞ்சல்.

சம்யோகம், வாத பித்த சிலேட்டுமமாகிய இம் மூன்றும், வாதபித்தம், வாத கபம், பித்த கபம் என இரண்டிரண்டாக விகாரமடைதல், the permutation of the three humours in the human system by reduplication as wind and bile, wind and phlegm and bile and phlegm ; 2, புணர்ச்சி, see சம்போகம்.

சம் ரட்சணம், see சவரட்சணை.

சம் ரட்சணை, பாது காப்பு, protection.

சம் ரட்சித்தல், காப்பாற்றல், protecting.

சம்வகம், ஓர் வாயு, see சப்த மருத்து.

சம்வச்சர லவணம், ஒரு வருஷகதிய வுப்பு, a salt kept or preserved for a duration of one year.

சம் வன்னம், வசீகரித்தல், to gain love.

சம் வாரம், உதட்டுச் சுருக்கம், compression of lips.

சம் வித்து, அறிவு, intellect ; 2. ஞானம், wisdom.

சம்வியூடம், ஆண் குறியின் மீது குறுக்காகத் தடித்த விரணத்தை யுண்டாக்கி துன்புறுத்துமோர் நோய், a form of ulceration of the glans penis attended with pain.

சம்விவுருதாசிய வாதம், ஓர் வாதநோய். இது மச்ச மாமிசம், மந்த ரச வஸ்து, அகால போசனம், அதிக வுப்புச் சேர்க்கை, சதா நித்திரை ; வெகு நடை, முதலியவை களாற் பிறந்து, நரம்புகளில் அனுசரித்து கபத்தோடு கூடி துன் புறுத்தும். இதனால் மூடிய வாயைத் திறக்க முடியாமலும், அவ் வாயில் மறத்தலும், தடித்தலும், வலியும், உண்டாகும், a disease of the nerves due to the concerted action of the humours wind and phlegm arising from improper diet and irregular habits in life such as, eating excess of meat and fish, indigestible food, untimely meals, excess of salt, constant sleep, excess of walking etc. It is marked by a spasmodic affection of the muscles of the jaw and other painful symptoms from the rigidity of the muscles and swelling about the mouth.

சம் விவுர்தம், see சம் விவுருதாசிய வாதம்.

சய கபக்கோழை, சய ரோகத்தில் இருமலினால் வரும் கபமும் கோழையும், phlegm, and

expectoration arising from cough due to consumption.

சயகம், பூ வரும்பு, flower-bud.

சயகரி தாகநாசி, வெள் அறுகு, white doob grass—Enicostema littorale.

சயகா, see ஆம்பல்கொடி.

சயகாசம், சயகாச ரோகம், a consumptive cough. See சய காச ரோகம்.

சயகாச ரோகம், நுரையீரலுக்கு ஏற்படும் சய ரோகம். இது பல வீனர்களுக்கும், வயது சென்றவர், பிள்ளைகள், இவர்களுக்கும் கண்டால் தோரது, a tubercular disease of the lungs. — Pulmonary consumption or Phthisis. It is incurable in cases of weak and debilitated persons, old people and children.

சய காமாலை, சயத்தோடு கூடிய சோகை நோய். இதில் முகம் வீங்கி, கண்களின் இரப்பை வெளுத்து, மூச்சு முட்டி, உள்ளம் துடித்து, நா வரண்டு, தாது கெட்டு, அன்னம் செல்லாது உடம்பு வெளுப் பேறும், (யூகி. 1200), a kind of anemia or an idiopathic blood disease producing phthisis. It is characterised by swelling of the face, paleness of eye-lids, hard-breathing, palpitation of the heart, parched tongue, loss of vitality, loss of appetite, general paleness of the body due to deficiency of blood in the system etc.

சய குலாந்தகன், சயத்திற்காகக் கொடுக்கப்படும் தாளக செந்தூரம் அதாவது, தாளகத்தை முதலாக சுத்தி முறைப்படி கல்யாண பூசணி நீரிலும், பிறகு செங்கீரைச் சாற்றிலும் ஊறவைத்து; பிறகு இரண்டாவதாக, இதற்கு பூரம், மனோசிலை சமனாய்ச் சேர்த்து எருக்கம் பாலில் அரைத்துப் புடமிட்டு சாம்பலாக்கி; மூன்றாவதாக, அவ் விடைக்கு சமனாக பவழம், கல்நார் சேர்த்து மேற்படி பாலில் அரைத்து புடமிட்டு எடுத்து; நான்காவதாக, கண்ட இடைக்கு தங்கம், இலிங்கம் கெந்தி 2:1:1 முறைப்படி கூட்டி; ஐந்தாவதாக, காந்தம் 1 பலம் சேர்த்து முருக்கம் பூச் சாற்றி லரைத்து 5 புடம் போட்டு எடுக்க தளுக் கற்ற செந்தூரமாகும். அனுபானம், திரிகடுகு, தேன் கொண்டு 10 நாள் சாப்பிட்டு வெள்ளாட்டுப் பால் குடிக்கவும், (அகஸ்தியர். பின். 80), calcined red oxide of orpiment prescribed for consumption. This calcined powder is subjected to five processes before its completion. Firstly, the process of cleansing and purification of orpiment with the aid of juices extracted from the ash-pumpkin and coxcomb greens in which it is kept soaked for sometime; secondly, to this purified orpiment is also added arsenicum rubrum or realgar and sub-chloride of mercury in equal weights, and after grinding them well with the milk of madar plant, the bolus thus obtained is subjected then to calcination; thirdly, to this calcined powder so arrived at, are again added coral and asbestos which, after being ground well, is again subjected to calcination; fourthly, to this weight of calcined powder so obtained, is again added gold, red sulphuret of mercury or cinnabar and sulphur in weights in the proportion of 2 : 1 : 1 respectively; and fifthly, to the mixture mentioned, is again added 1 palam of magnet; and the whole mixture is ground well with the juice of moringa flower, and the product so obtained is lastly subjected to calcination by a repeated process of 5 times, when an opaque powder without transparency will be arrived at. It should be administered to patients along with honey mixed with the powder of three myrobalans, for ten days and the diet prescribed is goat's milk.

சய சிந்தாமணி நெய், சயரோகத்திற்குக் கொடுக்கும் ஓர் ஆயுள் வேத மருந்து நெய், (*In Ayur Veda*), a medicinal ghee prescribed for consumption or tuberculosis.

சய சிலேட்டும ரோகம், சயத்தோடு கூடிய சிலேட்டும நோய். இதனால், அவயவச் சூம்பல், சுரம், கண்டத்தில் கபம், நெய்யைப் போல் சளி, மூர்ச்சை, தாகம், மஞ்சள் மூத்திரம் ஆகிய விக்குணங்களுண்டாகும்; phthisis or consumption combined with excited phlegm. It is characterised by atrophy of the organs of the body, fever, phlegm in the chest, mucous secretion in the form of ghee, swoon, thirst, high-coloured urine, etc.

NOTE.— Phthisis or consumption is almost an incurable disease. When it is due to the excited condition of the three

humours. and especially in this case, to excited Vatha, the result is the gradual decay, waste of blood, flesh, adeps, bones, and marrow including semen, for want proper nourishments.

If in the patient, in spite of adequate treatment, diarrhoea supervenes or if swelling appears in the testicles or the abdomen, the case is undoubtedly a fatal one.

சய குதனி, see கோடா குரி.

சய செந்தூரம், சய, ரோகத்திற்காக கொடுக்கும் செந்தூர மருந்து, calcined metallic compound prescribed for consumption.

சய செம்பு, கெடுதலான செம்பு, impure copper.

சயதகங் கொள்ளல், சயரோகத்தாற் பிடிக்கப் படல், to be attacked of tuberculosis; 2. சய ரோகம் உண்டாதல், formation of tubercles in the tissues of the lungs—Tuberculisation.

சயதகம், சய ரோகம், consumption. See சய ரோகம்.

சயதுவகம், உடம்பில் பல அங்கங்களில் காணப்படும் குருக்கள், small masses of morbid matter developed in different parts of the body—Tubercles.

சயதம், உடம்பில் இரத்தம் கெட்டு தோற்றும் கண்டமாலை, சயரோகம் முதலியன, an idiopathic blood disease producing tubercle, struma or scrofula; phthisis etc. — Tubercular diseases; 2. ஆசன வெலும்பின் ஓர் பகுதி. அது தாழ்வாயும், ஒடுங்கியும், நாம் உட்காரத் தகுந்ததுமா யுள்ளது, that portion of the hip bone, which is narrow, forming the lowest part on which we sit — Tuberosity of Ischium.

சயதரு, பாதிரி, trumpet flower — Stereospermum chelonoides.

சய நீர், சுவர்க்காரமும் சுண்ணாம்பும் கலந்ததை பனியில் வைத் தெடுத்த காரநீர், a pungent liquid obtained by exposing a mixture of slaked lime and sal-ammoniac. See சயநீர்.

சயந்தகம், புன்னை, Alexandrian laurel — Calophyllum inophyllum.

சயந்தமம், சாதி லிங்கம், vermilion — Bisulpheret of mercury.

சயந்த மாலை, ஓர் சோதிட நூல், a kind of Astrology.

சயந்தன், சந்திரன், moon.

சயந்தி, see கருஞ் செம்பை; 2. வாத மடக்கி, wind-killer — Cleodendron phlomoides; 3. கன்டி, sensitive plant — Mimosa genus; 4. சிற்றகத்தி, common sesban; 5. see நந்தியாவட்டை; 6. இருவாட்சி, see சயந்திசம்; 7. ஓர் அகத்தி, a kind of sesbane — Sesbania aculeata.

சயந்திசம், இருவாட்சி, a kind of jasmine—Jasminum sambuc (flower monorae plant).

சயந்தை, கடி நாரி, Cochlospermum gossypium.

சய பாளம், நேர்வாளம், croton seed—Croton tigilium.

சய பித்தம், சய நோய், consumption; 2. வாத மடக்கி, see சயந்தி.

சயமிரு விளையுங் கல், வெள்ளைச் சுக்கான் கல், white limestone as opposed to கருஞ் சுக்கான், which see.

சய மிருகாங்க ரசம், இரசம், பொன், தாம்பிரம், பஸ்பங்களுடன் கெந்தி, இவைகளைச் சேர்த்து ஆட்டுப் பாலில் அரைத்து புடமிட்டு, ஆயுள் வேதப்படி தயாரித்த சய ரோகத்திற்காக கொடுக்கும் மருந்து, an Ayurvedic medicine prepared by grinding calcined powders of mercury, gold, and copper together with sulphur in goat's milk and subjecting the product again to calcination. It is prescribed for consumption.

சய மிருதா, கடுக்காய், gall-nut.

சய மிருமல், சயத்தினு லேற்பட்ட இருமல், consumptive cough.

சய மீளை, கபயோடு கூடிய சய ரோகம், consumption attended with phlegm.

சய முகத்தி, பூவா மரம், a tree bearing no visible flowers.

சயம், க்ஷயம், pulmonary tuberculosis; phthisis or consumption. See சயரோகம்; 2. கை, hand; 3. ஆம்பல், white Indian water-lily; 4. சூரியன், the Sun; 5. நாட்டுச் சர்க்கரை, brown coarse sugar; 6. படுக்கை, human bed; 7. சாரம், essence; 8. காசம், asthma.

சயம் கொட்டை, சேரான் கொட்டை, dhoby's nut—Semecarpus anacardium.

சயரிதம், தழுதாழை, wind-killer—Oleodendron phlomoides.

சயரோக சிரரோக விரணசி, see குங்குமப் பூ.

சயரோக நிதானம், ஆயுர் வேதப்படி இந்நோயின் வகைகளையும், பல விதமான காரணங்கள், குணம், குறி முதலானவைகளையும் அடியிற் கண்டபடி குறிப்பின் கீழ் கூறப்பட்டுள்ளது, according to Ayur Veda, the several varieties of this disease—consumption together with the various symptoms and signs as described in the note, are mentioned below:—

The varieties are:—

1. வாதச் சயம், } consumption arising from
2. பித்தச் சயம், } the derange-
3. சிலேட்டும சயம், } ments of any of the 3 humours.
4. திரிதோஷச் சயம், consumption due to the combined action of the 3 humours.
5. பிரம சயம், } consumption gra-
6. இராச சயம், } ded according
7. வைசிய சயம், } to the severity
8. சூத்திர சயம் } of the disease.
9. வாத சிலேட்டும சயம், } consump-
10. பித்த சிலேட்டும சயம், } tion arising from the combined derangement of Vadha and Bile or any 2 of the 3 humours.
11. விகார சயம், consumption involving abnormal changes with difficulty in diagnosis.
12. தொத்த சயம், infectious consumption such as hereditary, congenital and *directly* contagious.

NOTE 1. — *Causes of consumption*:— suppressing the urging of stools and urine, excessive fasting or virtuality, irregular or untimely meals and other irregular practices leading to a waste of ingredients of the body.

2. *General Symptoms*:—Owing to the above mentioned causes, the three humours in the system are excited; and they obstruct the juice-bearing ducts in communication with the blood-vessels, with the result that there is a gradual decay or waste of blood, flesh, bones, marrow, semen, etc. for want of proper nourishment.

3. *Incubatory symptoms*:— Difficult breathing, bodily pain, cough, secretion of phlegm, dryness of the palate, the tongue, mouth and throat, vomiting, inflamation of the mucous membranes of the nose (schneiderian membrane) with loss of sense of smell, pale eyes, eager desire for food and sexual intercourse, threatening and alarming day dreams.

4. *Developed symptoms*: — disgust for food, general debility, blood vomiting, and purging, cough, hoarseness of throat, side pain, headache, fever, catarrh of the nose. It is difficult for cure especially when there is a general waste and the body is much emaciated.

5. *Fatal symptoms*:— losing weight, diarrhoea, swelling of the testicles or the genitals and the abdomen, hard breathing, seminal discharge, paleness of the body due to bloodlessness, and ulceration of the lungs.

6. *Treatment*—It is exceedingly difficult to cure. It is always essential to keep up the patient's strength without losing weight, and to prevent diarrhoea which, if necessary, mild purgative is advisable. The patient should be placed in the midst of goats and the goat's milk and meat are considered beneficial to the patient.

7. *Restrictions are*:—Exposure to cold tiresome labour, heat of the sun, and sexual indulgence.

8. *Forbidden Diet*:— Fish, curds, pungent food prepared with chillies, a variety of dolichos as (மொச்சைக் கொட்டை), radishes, potatoes, much of asafoetida, onions, garlics, and raw rice food.

சயரோகம், நுரையீரலை நாசப்படுத்தும் ஓர் நோய். இதற்கு பல காரணங்களும், குணம், குறிகளும், சிகிச்சை வகைகளும் உண்டு, அவையாவன—இது பித்த உஷ்ணத்தினாலும், நுரையீரல்கள் சரிவர பக்குவப்படாததினாலும், மார்புகள் குறுகியும், இன்னும் பல சுவாசக் குற்றம் அல்லது குறை, பலவீனம் முதலிய காரணங்களினாலும் உண்டாகும். இதனால் நுரையீரல்கள் வெந்து, அதில் சிறு துவாரங்கள் விழுந்து, அதிலிருந்து தண்ணீர்கள் அநேகமாய் ஏற்பட்டு சாகிறதின்ன ஏதுவாகுமாதலால், இதைக் குணப்படுத்துவது அசாத்திய மாகும்.

2. மேலும், ஊறிச் செல்லும் அன்ன ரசக் குழாய்கள் (Lacteals) அடைபட்டு, அதனால் திரவ ரூபமாயுள்ள அன்னரச தாதுவிற்கு (Chyle) போஷணைக் குறைவு ஏற்பட்டு எல்லாவித கெடுதியு முண்டாகி, "ஓஜஸ்" (Albumen) என்னும் சத்து குறைந்து, உடம்பை வற்றச் செய்வதால், இதற்கு இராஜ நோயென்றும் பெயர், திரிதோஷச்

கோளாறினால் இவ்வித நோய் உண்டாகிற தெனக் கருதப் படும்.

3. அன்றியும், சுத்தமான காற்றில் உலாவ வசதி யில்லாத இடத்தில் வசிப்பதினாலும், வெளிச்சக் குறைவாயும், சனநெருக்கமாயும் அநாசாரங்களோடு கூடிய இடங்களில் குடியிருப்பதாலும், இவ் வியாதி அதிகரிக்கும், ஆகவே, இதற்கு வறட்சியான நல்ல காற்றும், சுத்த சலமும், சிறந்த உணவும் முக்கியமானது.

4. இது இரத்தபாச மென்னும் சம்பந்த மின்றியே ஏற்படும் தொத்து நோய். ஆகவே, இந் நோயாளிகளிடம் வசித்தலாலும், பால், மாமிச மூலமாகவும், கர்ப்ப சம்பந்தத்தாலும் இது ஏற்படலாம்.

இது ஒரு பயங்கரமான வியாதி. உடம்பில் வந்தது தெரியாமலே இருக்கும்; நாளுக்கு நாள் உடம்பின் சக்தியைக் குறைத்து, உணவு தள்ளுபட்டு மரணத்திற் கேதுவாக்கக் கூடியது. இதை ஆரம்பத்திலேயே வசப்படுத்தக் கூடும். பிறகு அசாத்தியமாக முடியும்.

5. ஏற்படும் குறி குணங்களாவன—வாயுக் கோளாறினால் தொண்டைக் கம்மல், மார்பு வலி, கை கால் நமச்சல், பக்கச் சுளுக்கு முதலியன—பித்தத்தினால், மாலையில் சுரம், கண் ணெரிவு, கை களைப்பு, உடம் பெரிச்சல், கழிச்சல், பக்க வலி, இரத்தங் கக்கல், முதலிய அற் குறிகள் காணப்பட்டு—கபத்தினால் நாளா வட்டத்தில் உடம்பு மெலிந்து, சீரண சக்தி குறைந்து, அரோசிகம், இருமல் மேலிட்டு, தொண்டையில் கபம் பேராடும். எச்சிலும் பிசின் போலாகும்.

6. சிகிச்சை விதங்களாவன — இதனால் பிடிக்கப்பட்ட நோயாளிகள் வெள்ளாட்டுக் கிடையில் படுத்துக் கொள்வதாலும் அல்லது அதனருகே வசித்தலாலும், வெள்ளாடு விட்டி யிருந்தாலும், இந் நோய் அண்டா தென்று நமது நாட்டு வைத்தியர்கள் அபிப்பிராயம். வெள்ளாட்டுப் பால் இந் நோய்க்கு நல்ல தென்று கருதப்படும்.

அன்றியும், மூலிகைக் கஷாயங்களைக் கொண்டு வேது பிடித்தலினாலும், ஒற்றடம் கொடுப்பதாலும், சுவாசாசயத்தின் இரணத்தை ஆற்றக் கூடிய மூலிகைகளின் புகைப் பிடிப்பதினாலும், நசிய மிடுவதாலும் இந் நோயை குணப்படுத்துவ துண்டு. மேலும், அசுத்தமான இரத்தத்தை வெளிப்படுத்த உடம்பில் அட்டைகளை விட்டும், தைலம் தேய்த்து முழுகியும், தினப்படி இரண்டு, மூன்று வேளை பல் விளக்குவதாலும், மற்றும் பலவித சிகிச்சையாலும் வசப் படுத்த முடியும். இது ஆயுள் வேதத்தில் பலவாறுக் சொல்லினும், தமிழ் சித்த வைத்தியப்படி எட்டு வகைகளாகச் சொல்லப் படும்.

மேலும், அடியிற் கண்ட செய்யுளின்படி காணப்பட்ட க்ஷயரோகக் குறி குணங்களாவன—கண்கள் குழிவடைந்து, காலையிலும், மாலையிலும் சுரம் காய்ந்து, இருமல் மிகுந்து வெகு நாளைக்கு கிடக்கச் செய்யும் :—

"கண்டமும் நெஞ்சுங் காய்ந்து கண்ணுமுட் குழிவு மீறி
அண்டிடு காலைமாலை யருஞ்சுரந் தோன்றிக் கூறும்,
மிண்டிய விருமல்மிஞ்சி வெகுநாளாய் நிற்குமிந்து
கொண்டிடு க்ஷயரோகத்தான் கூறலாம் மருந்து மேலே"

(வைத்திய விளக்கம்).

Tuberculosis or Consumption which consists in the decay of the lungs. Several are the causes and symptoms attributed to it, viz:—

1. Improper development of the lungs, narrow chest, disorders or defects of the respiratory system, general weakness, excessive heat due to bilious derangements are the pre-disposing conditions for the attack. It is characterised by the decay of the lungs arising from the inflammation and formation of tubercles, in which are discovered a number of bacillae and as such, it is impossible for cure.

2. It is supposed to be due to the obstruction of chyle in the lacteals, and consequently a defect in the assimilation and the albuminary process required for the nutrition of the system. It is so called from the fact of its consuming or drying up the vital principles of the body, and also from the wasting process which is found to accompany all the functional activities of the body during its attack. It is also called 'king's disease' by some authorities; and is said to be produced by the concerted action of the three fundamental humours in the system.

3. Moreover, dwelling in ill-ventilated places or houses shut out from

sun-light, living in overcrowded and insanitary quarters are the aggravating causes for the attack. Therefore, pure dry air, clean water, selected food with a regular life are the essential factors.

4. It is a contagious disease likely to be affected even without blood relation. The sharing of bed or even a bed-room, with consumptive patients, eating of tuberculous meat or drinking of tuberculous milk, and heredity may also be other factors which play important predisposing parts in bringing on the disease.

It is a dangerous and deadly disease finding entrance into the system and gradually weakening it by loss of appetite, and finally brings on fatal termination. It can be easily cured at its initial stage, but impossible after lapse of some time or at a certain stage.

5. *The symptoms are* :—Hoarseness, chest pain, contraction of the sides, etc. occasioned by Vayu; while evening, fever, burning of the eyes, feverishness burning sensation, diarrhoea, pain on the sides, blood-spitting etc. by deranged bile (Pittam); and gradual emaciation, aversion to food, cough, a sense of obstruction in the throat and viscous sputum due to the Kapham (phlegm).

6. *The modes of treatment are* :— Vaidyans i.e., Physicians of this country are of opinion that by dwelling or taking bed in the sheep-fold or its neighbourhood or in houses where goats are reared, the disease can be cured. They consider it as a more preventive than cure.

They also prescribe steam or vapour bath or drug-decoctions, fomentations, fumigation, inhalation through sniffing. Blood-letting by leech-bite, anoinment of medicated oils, frequent cleansing of teeth etc., are amongst other various modes of treatments resorted to by them. Although different are the varieties mentioned in Ayur Veda, it consists only of eight kinds as described in Tamil Siddha Medicine.

In the diagnosis of consumption, the symptoms are described in the Tamil stanza mentioned above viz:—sunken eyes, morning and evening fever, excessive cough and prostration.

NOTE.—The following is the stanza quoted from Agastya's work.

> விளம்பிடுவ் சய ரோகம் வருமு மார்க்கம்
> விளைவாக மூலத்தில் குடி கொண்டு
> தளும்பியே காலத்தில் முட்டிக் காடி
> தாது வெப்பம் கல கலந்து இரத்தம் வற்றி
> உடம்பிலே சிரேறி காமுக் கோளந்தி
> உலர்ந்துவிடு பிணம் காக்கு குறி யறது
> கொம்பிலே எட்டு வகை சயக்கண்டு
> கூறது கொண்டு விடும் இயல்பதாமே.
>
> (அகஸ். பின், 80).

It is explained here that consumption is due to excessive heat in the system due to excited bile, taking an upward course and reacting in the cerebral system, by which the whole system is shattered, as a result of which the circulation is affected exhibiting symptoms such as fever, body pain, catarrh, tastelessness and general emaciation.

சய ரோகாரம், வெந்தயம், fenugreek or Dill-seed—Trigonella fenugraecum.

சயலவம், see சடைச்சி.

சயலாதி, திப்பிலி, long-pepper — Piper longum.

சயவரி, வெள் அருகு, white doob grass — Sarcostema littorale.

சயவலம், கழற்சிக் கொடி, bonduc creeper— Caesalpinia bonducella.

சய வாமரா, மாகோணை, head-ache plant— Xanthium strumarium.

சய விக்கிரம ரசம், சன்னிபாத சுரங்களுக்குக் கொடுக்கும் ஓர்வித பைரவ ரசம். இது ஓர் ஆயுர் வேத மருந்து, an Ayurvedic Medicine prescribed for typhoid fever.

சயனக் கிரகம், பள்ளி அறை, bed-room.

சயனம், நித்திரை, sleep; 2. புணர்ச்சி, copulation; sexual union; 3. படுக்கு மிடம், sleeping place; bed-room; 4. படுக்கை, இது ஐந்து வஸ்துக்களால் ஆக்கப் பட்டது, beds prepared out of five different kinds of stuffs viz:—

1. இலவம் பஞ்சு, silk cotton.
2. செம் பஞ்சு, red cotton.
3. வெண் பஞ்சு, white cotton.
4. அன்னத் தூவி, white soft feather of birds.
5. மயிர், wool.

சயன வேளை, படுக்கை நேரம், bed time.

சயனுதி, சொற்பனம், dream.

சயனித்தல், தூக்கல், sleeping ; 2. புணர்தல், copulating.

சயனிப்பு, நித்திரை, slumber ; 2. புணர்கை, the act or state of having intercourse ; cohabitation.

சயனைக் கட்டல், சாகுங் காலத்தில் தொண்டையில் கபம் அல்லது கோழை கட்டி யிழுத்தல், collection of phlegm in the throat, obstructing free respiration at the approach of death.

சயா, கடுக்காய், gall-nut ; 2. வாத மடக்கி, wind-killer, see சயந்தி ; 3. மஞ்சள் பாவட்டை, Indian mulberry— Morinda citrifolia.

சயாகம், குதிஞ்சா, scammony swallow-wort —Secamony emetica.

சயாளு, நித்திரை செய்யும் சுபாவ முள்ளவன், one having a sleeping tendency ; a drowsy fellow.

சயிக்கா, அரச மரம், peepul tree — Ficus religiosa.

சயிக்காய், see சயிக்கா.

சயிக்காரி, புரச மரம், bastard kino—Butea frondosa

சயிக் கோளகம், கஸ்தூரி யலரி, Indian oleander—Nerium odorum genus.

சயிதகம், எருக்கு, madar plant—Calotropis gigantea.

சயிதூன், சைதூன். இதுவே ஒலிவை யெண்ணெய், olive oil—Olivae oleum.

சயித்தி, அரச மரம், peepul tree — Ficus religiosa. See சயிக்கா.

சயித்தியக் கட்டி, சீதளத்தால் உண் ணாக்கில் ஏற்படும் கட்டி, abscess or enlargement of the tonsils from severe cold—Tonsilitis. See சைத்தியக் கட்டி ; 2. கண்டக் கிரந்தி, throat ulcer causing hoarseness.

சயித்தியங் கொள்ளல், சீதள முடைதல், to be affected with severe cold ; 2. மூர்ச்சை கொள்ளல், to reach cometic state.

சயித்திய சன்னி, சீதளத்தினால் தொண்டையைக் கட்டி, சுரம் ஏற்பட்டு, அதனா லுண்டாகும் சன்னி, a form of delirium occurring in or due to inflammation of tonsils of an acute character, attended with hoarseness of throat and fever—Delirium febrile.

சயித்தியமா யிருத்தல், சீதளத்தால் உடல் வலி, கனகனப்பு முதலிய குணங்களை யடைதல், to be affected with severe cold attended with pain in the limbs, feverishness etc.

சயித்திய முறித்தல், உடம்பினில் தங்கி யுள்ள சீதளத்தைப் போக்குதல், to counteract the affection of cold in the system.

சயித்தியம், குளிர்ச்சி, cold ; 2. சீதளம், chillness ; 3. ஓர் சைத்திய நோய். இது தொண்டைக்குள் சிவந்து வீங்கி யிருக்கும், acute tonsilitis appearing red and swollen from inflammation.

சயிந்தம், இலிங்கம், vermilion ; 2. இந்துப்பு, rock-salt or Sindh salt.

சயிந்த லவணம், பெருங் கட்டிகளாக விருக்கும் இந் துப்பு அல்லது சிந்து தேசத் துப்பு அல்லது சிந்து நாட்டுப்பு, an impure chloride of sodium occurring in large masses in Sindh. See சயிந்தம்.

சயிந்த லவன், வைப்பு முறையாற் செய்த வுப்பு, a prepared salt ; a synthetic salt.

சயிந்தவ குக்குலு, சமுத்திரக் குக்குலு. சமுத்திரத்திற் கப்பால் இருந்து நமது நாட்டிற்கு இறக்குமதி யாவதா லிப் பெயர், foreign googal; African bdellium—Balsmodendron cataf. It is so called from its being imported into India from Barbery in Africa beyond the sea ; 2. சிந்து குக்குலு, Indian bdellium— Balsmodendron roxburghii alias B. mukul ; 3. மை சாட்சி, a gum resin akin to myrrh but distinct from olibanum.

சயிந்தவம், சிந் துப்பு, Sindh salt ; 2 குதிரை, horse ; 3. தலை, head ; 4. சிந்து, Sindh.

சயிந்தவ லவணம், சிந்து தேசக் கல் லுப்பு, rock-salt found in Sindh See சயிந்த லவணம்.

சயிந்தவன், } see சயிந்த லவணம்.
சயிந்தனம், }

சயிரியம், செம் முள்ளி, thorny nail-dye — Barleria prionitis.

சயிரீயகம், see சயிரியம்.

சயி ரேகம், மேக வர்ணப் பூக்கள் உள்ள மருதோன்றி, Western ghauts blue nail-dye —Barleria montana. See மேக வண்ணக்

குறிஞ்சி; 3. கருமருதோன்றி, black nail-dye—Lawsonia spinosa.

சயிலகம், வட்ட வழுக்கை, a tree with slimy secretion; 2. கண்ணாடி யுப்பு, glass-gall—Fel vitri.

சயிலகிரி சோசனம், பே சோசனை. இது பாறைகளி னின்று ஒழுகும் பிசு பிசுப்பான வஸ்து, a kind of resin or bitumen exuding from rocks.

சயிலங்க மாலை, வெட்டி வேர், khus khus root.

சயிலங்கம், இருவேலி, see சயிலங்க மாலை.

சயில நீர், சுத்த கங்கை, pure water; 2, பாறை நீர், rock-water.

சயிலந்தம், சாதிலிங்கம், vermilion.

சயில மலை, see சயிலங்க மாலை; 2. கடப்பை ஜில்லாவி லுள்ள ஸ்ரீசைலம், அதாவது மல்லிகார்ச்சுனம் என்னும் சிவஸ்தலம், a famous hill with a Siva temple in Cuddappah District known as Malligarjunam.

சயிலம், ஸ்ரீசைலம், see சயிலமலை; 2. மலை, mountain in general; 3. see இருவேலி.

சயில் வருக்கு, மலை மூலி, mountain herb.

சயில வுதகத் தைலம், கொங்கண வாத காவியத்திற் சொல்லி யுள்ள உதகம். இது மலைகளின் உச்சிகளில் இருப்பதாகச் சொல்லப் படும். தற்காலத்திய பெயர் இன்னதென்று புலப்பட வில்லை. இது ஒரு வேலை கல்மதம் அல்லது உலோகநீர் இருக்கலாமோ என்பது சந்தேகம், a kind of mineral water supposed to be found on the tops of mountains as described in Konganava's work on Alchemy. The present name is not known. It is even doubtful if it refers to bitumen or to some mineral water. See உதகம்.

சயில வுதகம், see உதகம்.

சயில வெருக்கு, மலை யெருக்கு, madar plant growing on hills or mountains—Caltropis gigantea.

சயிலாதி, பூமி, earth; 2. இரஜத மலை, mountain containing silver ore; mountain with silver mines.

சயிலி, see சயிலி யுப்பு.

சயிலி யுப்பு, கண்ணாடி யுப்பு, see சயிலகம்.

சயி லெண்ணெய், மலையி லுதிக்கும் எண்ணெய், rock oil; petroleum. C.f. சயில வுதகம்.

சயிலேகம், ஓர் வாசனைப் பிசின், a fragrant resin.

சயினி, திப்பிலி; long-pepper—Piper longum

சயினிகம், see சயினி.

சயு, பெரும் பாம்பு, big snake; 2. மலைப் பாம்பு, mountain snake.

சயுடை, see சயினி.

சயுலாதிகம் see கப்புச் சடைச்சி; 2. தக்கை, sola pith plant — Aeschynomene palurosa.

சயுனாதி, see சயினி.

சயோகம், குங்கிலியம், Indian dammer — Shorea robusta.

சயோலங்கம், அணுமூலு துவரை, a kind of gram (unidentified).

சய்யம், சருக்கரை, sugar.

சய்யாளம், சேர் வாளம், croton seed—Croton tiglium.

சரக சம்மிதை, அக்கினி வேசரால் எழுதப் பட்டு சரகர் திருத்திய வடமொழி வைத்திய நூலாகிய ஆயுர் வேதம். இது ஒரு முதன்மையான நூல். வைத்தியத்தில் சுசுருதத்தைவிட இதே மேலானதென்றும் ஆதி நூலென்றும் கொள்ளப் படும். இதை அகஸ்தியர் வைத்திய காவியத்திற்கு ஒப்பாகச் சொல்லப் படும், an Ayurvedic medical treatise compiled by Agnivesa. It is said to be a revised work by Charaka written in Sanskrit. It is an original work and considered much superior to Susruta in the plan of treatment; and is regarded as the oldest book on Medicine possessed by the Hindus. It is roughly compared to Agastya's Kaviyam on Medicine in Tamil. *C.f.* அக்கினி வேசர்.

NOTE.—1. Charaka is supposed to be older than Susruta. Atreya originally taught Ayurveda to 6 of his pupils including Agnivesa who subsequently wrote a treatise on Medicine. The work of Agnivesa was regarded as the best, but is said to be revised by Charaka. It is only Agnivesa's work that is now called by the name of Charaka. There is no clue as to the nativity of Charaka.

As Charaka is the oldest treatise on Medicine, so is Susruta the oldest treatise on Surgery now extant. These two works—Charaka and Susruta mark

the highest phase of development of the Hindu system of Medicine in ancient times.

NOTE—2. It is a work of great antiquity on diseases, remedies, materia medica etc, It is looked upon as the best authority on Ayurveda. The works of Charaka and Susruta, the two great Sanskrit medical authorities, were rendered into Arabic about the 8th century A D. This system was practised by the celebrated Arab physician Ar. Razi in 932 A. D. Arabic medicine in its turn, became the chief authority for European Physicians and the name of Charaka is frequently mentioned in Latin translations of Arabic writers. But the ancient medical science ascribed to the gods and known to be the collective title of Ayurveda, is considered a myth. As regards the rendering of Ayur Veda into Arabic and subsequent absorption of it in the Unani system, a brief account is necessary and it will be dealt with later on when coming to the field of Unani system.

NOTE—3. This should not be confused with the Siddha system of Tamil Medicine in Southern India which is quite independant of Sanskrit Ayur Veda.

It is only after the appearance of Ayur Veda in the South and that too, very recently, that the comprehensive character and superior merit of the Siddha Medicine led, in course of time, to the extinction of the manuscripts of authors who preceded them. Still, it maintained its ground because of its Divine origin, and its voluminous writings in verses; and stood beyond the criticism of man; and even now, no one dared not add to or amend what these ancient Siddhars had recorded not only of Medicine, but also of its Allied sciences such as Philosophy, Botany, Alchemy, Astrology (Nadi) etc. although there has been a marked gradual decline.

சரகதுவா யுலர்த்தல், சருகைப் போல முற்றும் உலர வைத்தல், to dry in the sun completely like a dried leaf; 2. சருகைப் போலாகும்படி காய வைத்தல், to dry in the sun so as to make it appear a dried leaf.

சரக மாதவம், முட் கிளுவை, Indian balm of Gilead—Balsmodendron berryi.

சரகம், சரகர் என்பவரால் எழுதப்பட்ட ஓர் பழய வடமொழி வைத்திய நூல், an Ayurvedic old medical treatise written by Charaka in Sanskrit, See சரக சம்மிதை; 2. கருப்பு வெளவால் மீன், black pomfret—Stromatues niger; 3. தேனீ, honey bee; 4 வண்டு, beetle.

சரகர், சரக சம்மிதை எழுதிய ஆதி காலத்து வைத்தியர். ஆத்திரேயரிட மிருந்து வாங்கி அக்கினிவேசரால் எழுதப்பட்ட ஆயுள் வேதமாகிய ஆதி நூலை இவர் விளக்கமாக எழுதியவர், a medical writer in Vedic times and the author of Charaka Samhita—one of the standard Hindu Medical works. He gathered materials from the original work of Ayur Veda compiled by Agnivesa who, in turn, got from Atreya. See சரக சம்மிதை.

NOTE.—Charaka, in particular, is regarded as a Rishi. Whoever was the real author of Charaka's works, whether, he be himself or Agnivesa, the compilation possesses such merits that there is no doubt, it will maintain its position as long as the Hindu system of Medicine will maintain its ground. Charaka is considered the foremost in Chikitsa treatment (Medicine).

In diseases in which Surgical aid is necessary, Charaka himself refer the reader to Surgeons.

சரகாடி, see சர்வ காடி.

சரகாண்ட பாஷாணம், சித்தர் நூல் முறைப் படி, முப்பத்திரண்டு பிறவி பாஷாணத்தில் ஒன்று. இது சத்துருக்களைக் கொல்ல அம்பு முனையில் தடவ வுதவும், one of the 32 kinds of native poisons contemplated in Tamil Siddha's Medicine. It is a poison supposed to be used at the tip of arrows for killing enemies. See இந்திர பாஷாணம்.

சரகாண்டம், see சரகாண்ட பாஷாணம்; 2. சரம், (*In Astronomy*). ascensional difference.

சரகாதி, பெரு மருந்து, great medicine or Indian birth-wort—Aristolochia indica.

சரகு, see சருகு.

சரகுண்ணி, ஓர் வகை உண்ணி. இது கடித் தால் வீக்கத்தை யுண்டாக்கும், காடுகளில் உலாவும். a tick frequenting woody places and causing swelling when it sticks to the body—Wood-tick. See சருகுண்ணி.

சரகூறிய நீர், இலைச் சருகுகள் ஊறிய குளம், அல்லது குட்டைச் சலம், water of the pit or pond in which the dried leaves remain soaked.

சரக் கண்ட மாலை, கழுத்தைச் சுற்றி சரம் போல் வரும் ஓர் விரண நோய். இது கருணைக் கிழங்கு முளையைப் போல் வழி யடைந்து, சார்ந்து, வீங்கி, வெடித்து சரம் தொடுத்தாற் போல் புற்றுக் கண்களி லிருந்து இரத்தம், சீழும் வடிந்து அழுகு நாற்றம் வீசும், (பூகி. முனி, 800), tubercular glands of the neck. It is so called from its appearance like a string around the neck — Scrofula. It is a constitutional disease often showing itself by glandular tumours (which can be felt as little kernels or sprouts of yam) in the neck, which suppurate and turn into ulcers followed by fetid discharge of blood and pus from the sinuses; 2. ஓர்வகை மூல நோய். இது மேற்கண்டபடியே முளை தோன்றி ஆசன வழியை யடைத்து சீழ் இரத்தம் கெட்ட நாற்றத்துடன் வெளிப் படும், a kind of piles in the rectum exhibiting the symptoms of scrofula such as, fetid discharge of blood and pus, swelling etc.

சரக்காடி, சரக்குகளை கையாள்பவன், one who deals with drugs.

சரக் காறு, ஆறு வகைச் சரக்குகள், the six kinds of drugs viz :—

(A) வங்காளத் தாறு—வங்காள தேசத்திய ஆறு சரக்குகள், அவையாவன—the six kinds of drugs imported from Bengal viz :—

1. இலிங்கம், cinnabar.
2. பச்சை கருப்பூரம், crude camphor.
3. குங்குமப் பூ, European saffron.
4. படிகாரம், alum.
5. சாரம், sal ammoniac.
6. சுக்கு, dried ginger.

(B) மலையாளத் தாறு—மலையாள தேசத்திய ஆறு சரக்குகள், அவையாவன—the six kinds of drugs imported from Malayalam viz :—

1. கொச்சி வீரம், Cochin corrosive sublimate.
2. மிளகு, black pepper.
3. திப்பிலி, long pepper.
4. ஏலம், cardamon.
5. கிராம்பு, clove.
6. சிற் றரத்தை, lesser galangal.

(C) கீழ்க்கரை யாறு—கிழக்கு சமுத்திரக் கரையில் விளையும் ஆறு சரக்குகள், அவை யாவன—the six kinds of drugs from the East Coast viz :—

1. கல் லுப்பு, insoluble sea-salt.
2. இந் துப்பு, Sindh salt.
3. பொட்டி லுப்பு, nitre.
4. அப்பளா காரம், sub-carbonate of soda.
5. பல கறை, cowry.
6. கடல் நுரை, sea-froth.

(D) வடமேற்கு ஆறு—வடமேற்கு சமுத்திரக் கரையில் விளையும் ஆறு சரக்குகள், அவையாவன—the six kinds of drugs imported from the North-West Coast countries viz :—

1. கோதளங் காய், fruit of common Indian oak.
2. கடுக்காய், gallnut.
3. சீயக்காய், soap-pod.
4. பொன்னாங் காய, soap-nut.
5. தேற்றான் கொட்டை, water clearing nut.
6. வலம்புரிக் காய், Indian screw tree (right).

(E) உள்ளூர் ஆறு—நமது நாட்டின் ஆறு வகைச் சரக்குகள், அவையாவன—the six kinds of indigenous drugs viz :—

1. சவுரிப் பழம், shavari fruit.
2. துதளம் பழம், fruit of prickly shoonday.
3. பிரண்டைப் பழம், cissus fruit.
4. கண்டங் கத்திரிப் பழம், fruit of prickly brinjal.
5. சோவைப் பழம், red bitter-melon fruit.
6. இந்திர கோபப் பூச்சி, lady's fly.

NOTE.—The above mentioned five groups of drugs consisting in all thirty drugs form the ingredients of a medicine for the ear so as to be relieved from delirium.

சரக்கு, விளைந்த பொருள், product; 2. வியாபாரச் சாமான், mercantile goods; 3. சாராயம், arrack; 4. இலவங்கப் பட்டை, cinnamon bark; 5. பாஷாணச் சரக்கு, chemical poisons; 6. மேக ரோகம், venereal disease; 7. வியாபார விளை பொருள், commercial products.

சரக்கு, வைத்தியம், வாதம், மாந்திரீகம், உணவு முதலியவைகளில் உபயோகிக்கும் மருந்துப் பொருள்கள் அல்லது வஸ்துக்கள். இது அடியிற் கண்டபடி அநேக வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன, drugs classified according to their uses in Medicine, Alchemy, Magic and in Food as mentioned below :—

I. வைத்திய முறைக் குதவும் சரக்குகள், drugs useful in Medicine.

1. மருந்துச் சரக்கு—தயாரித்த மருந்துகள்—பற்பம், செந்தூரம், தைலம், லேகியம், சூரணம் முதலியவை, medicinal drugs — prepared medicine such as— oxides, red-oxides and other chemicals, medicated oils, electuaries, powders etc.

2. இரசாயனச் சரக்கு—சுண்ணம், குரு மருந்து, செயநீர், கற்பம் முதலியன, chemical compounds such as — carbonates, quintessences, pungent liquids, rejuvenating drugs ete.

3. மூலிகைச் சரக்கு — கொடி வேலி, எருக்கு, கள்ளி, வாத மடக்கி, முடக்கொத்தான் முதலியன, herbaceous-green drugs as—lead-wort, madar, spurge, wind-killer, palsy curer etc.

4. கடைச் சரக்கு—மருந்துக் கடைகளில் விற்கும் 64 மருந்துச் சரக்கு வகைகள், the 64 medicinal drugs sold in bazaars or chemist's or druggist's shops viz :—

(a) உலர்ந்த மூலிகை சரக்குகள்—சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றி, நெல்லி, அரத்தை, பற்பாடகம், கர்க்கடக சிங்கி, கருஞ் சீரகம், அதிவிடயம், வசம்பு முதலியன, dried herbs as — dry ginger, pepper, long pepper, gallnut, devil's abode gooseberry, galangal, fever plant, crab's horn, black cumin-seed, atees, sweet flag etc.

(b) பாஷாணச் சரக்குகள்—தமிழ் வைத்தியத்தின்படி இரசம், கந்தகம், பாஷாணம், தாளகம், மனோசிலை, அப்பிரகம், ரசகற்பூரம், வீரம், முதலிய அறுபத்து நான்கு வகைகள், poisonous drugs — the 64 chemical compounds such as mercury, sulphur, arsenic, orpiment, red orpiment, mica or talc, bichloride of mercury, corrosive sublimate etc. contemplated in Tamil Medical science.

(c) தாதுச் சரக்கு—உலோக வகைகள் :- பொன், வெள்ளி, செம்பு, ஈயம், நாகம், இரும்பு முதலியன, minerals :—metals as gold, silver, copper, lead, zinc, iron etc.

(d) அசற் சரக்குகள் — செய் வகை யல்லாது இயற்கையாகவே கிடைக்கக் கூடிய சரக்குகள் : — கல் மதம், புனுகு, சவ்வாது, கஸ்தூரி, குங்குமப் பூ, மான் கொம்பு, புலி நகம், முதலியன, natural substances as distinguished from artificial compounds — bitumen, civet, zibbet, musk, European saffron, stag's horn, tiger's claws etc.

NOTE.—It was pointed out on many occasions that the Tamil Siddha system is peculiar when compared to other systems of Medicine, because of the fact that other Allied sciences such as Philosophy, Alchemy, Botany ete, are included in it. So, the classifications become multifurious and they all fall under two main classes viz :—(1) Natural or Native and Artificial or prepared. Even in minerals and poisons, there will be found two classes viz:—Mineral compounds and chemical compounds; Mineral poisons and chemical poisons. In the Tamil Siddha Medicine, when describing the 64 kinds of poison, the same classification is followed i.e. 32 kinds of Native poisons (பிறவி பாஷாணம்) and 32 kinds of prepared poisons (வைப்புப் பாஷாணம்).

II. வாதமுறைக் குதவும் சரக்குகள், drug or medicine useful in Alchemy.

1. ஆடுஞ் சரக்கு—சூடு காட்ட அல்லது நெருப்பிலிட புகைந்து ஓடும் சரக்கு, minerals which pass off as fumes or vapour on being exposed to heat or fire as—இரசம், mercury; கந்தகம், sulphur; பாஷாணம், arsenic etc.

2. ஆடாச் சரக்கு—நெருப்பிலிட ஓடாது உருகி நிற்கும் சரக்கு, metals which does not disappear or evaporate on being heated but melt and

then remain as solid when cooled as பொன், gold; இரும்பு, iron; வெள்ளி, silver; செம்பு, copper etc.

3. ஆடி போடுஞ் சரக்கு—நெருப்பி லிட சில நேர மிருந்து பிறகு மறையும் சரக்கு, mineral compounds which remain for sometime and then disappear by exposure to heat or fire as—தாளகம், orpiment; இலிங்கம், cinnabar; வீரம், corrosive sublimate etc.

3 A. கந்தகம் முதலியன போல் நெருப்புக்கு உருகி யோடுஞ் சரக்குகள், substances such as — sulphur etc, which melt and then disappear.

4. உப்புச் சரக்கு அல்லது ஆண் சரக்கு அல்லது விந்துச் சரக்கு — காரச் சரக்கு, alkalies or salts or alkaline or salifiable base called Masculine drug used in chemical preparation of medicine as—மூத்திரம், urine; வெடி யுப்பு, nitre; கல் லுப்பு, sea salt; சூடன், camphor; கடல் நுரை, sea-froth; சூதம், mercury; இரும்பு, iron; அப்பிரகம், mica; கெவுரி, yellow arsenic; வெண்ணெய், butter; தங்கம், gold; நாகம், zinc etc.

5. புளிச் சரக்கு அல்லது பெண் சரக்கு அல்லது நாதச் சரக்கு, any acid substance which readily combines with alkaline base as—படிகாரம், alum; துரிசு, blue vitriol; காடி, vinegar; கல் மதம், bitumen; புளியாரை, sour-sorrel; மாங்காய், mango; பனங் கள்ளு, palmyra toddy; கிமிளை, bismuth; வீரம், corrosive sublimate; சுரோணிதம், menstrual blood etc.

6. சத்துருச் சரக்கு — இனமாய்ச் சேராத விரோதச் சரக்குகள், drugs or medicine which do not favourably combine with each other, but act contrarily. The following is an example of the inimical drugs for துரிசு, blue vitriol viz:—தொட்டி, yellow arsenic; சூடன், camphor; அப்பிரகம், mica; வெள்ளை பாஷாணம், white arsenic; கல் லுப்பு, sea-salt; மிருதாரசிங்கி, oxide of lead; காந்தம், magnet; இந் துப்பு, rock-salt; நாகம், zinc; வங்கம், lead; சவர்க் காரம், fuller's earth etc. See சத்துருச் சரக்கு.

7. மித்துருச் சரக்கு—இனமாய்ச் சேரக் கூடிய சரக்கு (உ-ம்) மேற்கண்ட துரிசுக்கே மித்துருச் சரக்குகளாவன, the friendly drugs which combine with particular substances favourably. Now taking the same blue vitriol mentioned above in (No. 6). the following are the friendly drugs viz:—அரிதாரம், orpiment; சாரம், sal ammoniac; வெண் காரம், borax; வீரம், corrosive sublimate; கெந்தி, sulphur; சூதம், mercury; பூரம், bichloride of mercury; கெவுரி, yellow arsenic; கிமிளை, bismuth; இலிங்கம், cinnabar; மனோ சிலை, red orpiment.

NOTE.—A similar classification of friendly and inimical drugs will be found given for each drug in Bogar's vocabulary (in Tamil).

8. பஞ்ச பூதச் சரக்கு, drugs classified according to five elements:—

(A) பாஷாண பஞ்ச பூதம், poisons classified according to five elements:—

1. பிருதிவி (earth)—கெந்தி, sulphur.
2. அப்பு (water) — வீரம், corrosive sublimate.
3. தேயு (fire)—கெவுரி, yellow arsenic.
4. வாயு (air)—துருசு, blue vitriol.
5. ஆகாசம் (sky)—இலிங்கம், cinnabar.

(B) காரசார பஞ்ச பூதம், alkalies and salts classified according to five elements viz:—

1. பிருதிவி (earth)—வெடி யுப்பு, nitre.
2. அப்பு (water)—கல் லுப்பு, sea-salt.
3. தேயு (fire) — வளைய லுப்பு, glass-gall.
4. வாயு (air)—சீனம், alum
5. ஆகாசம் (sky) — பூ நீறு, an efflorescent salt found in fuller's earth soil.

சரக்கு

(C) உலோகப் பஞ்ச பூதம், metals classified according to elements viz :—

1. பிருதிவி (earth)—தங்கம், gold.
2. அப்பு (water)—இரும்பு, iron.
3. தேயு (fire)—செம்பு, copper.
4. வாயு (air)—காரீயம், black lead.
5. ஆகாசம் (sky)—நாகம், zinc.

9. கட்டுச் சரக்கு—நெருப்பிற்கும், சூட்டிற்கும் ஓடாதபடி கட்ட வேண்டிய சரக்கு, அவையாவன, drugs or substances capable of being consolidated without evaporating or disappearing before heat or fire as noted in classification II—1 & 3 viz :— இரசம், mercury; உப்பு, common salt; கந்தகம், sulphur; வீரம், corrosive sublimate; இலிங்கம், cinnabar; நாகம், zinc; பூரம், bichloride of mercury; தாளகம், orpiment or sulphuret of arsenic; மனோசிலை, red arsenic, etc.

NOEE.—The drugs or substances which cannot withstand the heat or fire itself, can be easily consolidated by Alchemical process laid down in Siddhars works on Alchemy, if they are only carefully studied, properly interpreted and made use of. Such processes are peculiar only to the Tamil Siddhars Medical Science as they are *unknown* to any other system of Medicine in vogue at the present day.

10. பதங்கச் சரக்கு—உருகியோடி போகுஞ் சரக்கு அதாவது முதலில் நெருப்புக்கு உருகி, பிறகு ஆவியாய் மாறி பதங்கிக்கும் சரக்குகள், அவையாவன, sublimated minerals — drugs which first melt in a crucible or melting pot, are gradually sublimated when they are found deposited on the top lid as இரசம், mercury; கந்தகம், sulphur; தாளகம், orpiment; இலிங்கம், cinnabar etc.

11. கட்டுஞ் சரக்கு — ஓடுஞ் சரக்குகளை நெருப்புக்கு ஓடாதபடி கட்டுவதற்கு உபயோகிக்கும் சரக்குகள், ஆகவே, தமிழ் வாத நூற்படி உபயோகிக்கும்படி சொல்லியுள்ள மூலிகைச் சரக்குகள், காரசாரச் சரக்குகள் இவைகளை விவரமாக இவ் வகராதியின் முதல் பாகத்தில் கட்டுஞ் சரக்குச் சீழ் பார்க்கவும், consolidating drug —.drugs that are usefully employed for purposes of consolidating such of those which cannot stand the heat or fire. According to the Tamil Siddhar's Science on Alchemy,.the names of the vegetable drugs and those of the alkalies, acids, salts etc. used for the purpose of consolidating the said substances are mentioned in detail under கட்டுஞ் சரக்கு in Vol. I of this Dictionery.

NOTE.—These substances consolidated on the principle of Alchemy are both useful in Alchemy as well as in Medicine, because of their extraordinary virtues in transmuting base metals into gold and also curing all kinds of chronic, complicated and incurable diseases such as, leprosy, tuberculosis, consumption, diabetes, cancer, asthma etc.

Although, the secret method of consolidation is very difficult and it has to be learnt only through a Spiritual Guru (teacher), an attempt however, has been made here to mention all those drugs for the information of readers with the hope that some research scholars would direct their activities in this direction at some future date.

III. நானாவித சரக்கு வகைகள், miscellaneous classification of drugs :—

1. பாஷாணச் சரக்கு — (a) வைப்புப் பாஷாணம், synthetic or artificial poisons as, — 32 kinds of chemical poison; (b) பிறவிப் பாஷாணம், native or mineral as, —32 kinds of mineral poisons.
2. வாசனைச் சரக்கு, perfumes.
3. புகைச் சரக்கு, fumigants.
4. காரச் சரக்கு, alkalies.
5. சாரச் சரக்கு, acids.
6. காடிச் சரக்கு, vinegar or other fermented liquids as, tinctures.
7. கலப்புச் சரக்கு, adulterated as opposed to pure (சுத்தச் சரக்கு).
8. போலிச் சரக்கு, substitutes.
9. நாட்டுச் சரக்கு, indigenous drugs.
10. சீமைச் சரக்கு, foreign drugs.

11. பல சரக்கு, mixed drugs.

12. சம்பாரச் சரக்கு, curry stuffs and spices.

*சரக்குகளைச் சுண்ணமாக்கி*, இலவண பாஷாணம், a prepared poison.

*சரக்குக் கட்டல்*, இரசம் முதலியவைகளை நெருப்புற் கோடாதபடி கட்டுதல், to consolidate as Mercury etc, which can readily pass off into fumes or vapour on the action of fire.

*சரக்குக் கட்டு*, வீரம், பூரம், இலிங்கம், இரசம், கந்தகம் முதலிய ஓடும் சரக்குகளை நெருப்பிற் கோடாதபடி கட்டுதல். இவ்விதமாகக் கட்டி மருந்துகளில் பாகப்படுத்தினால் வாய் பிடிக்காது (சரக்குகளும் சுத்தியாகும்), மருந்தும் சிறந்த குணத்தைப் பயக்கும். தமிழ் வைத்தியர்களுக்கு சுத்தி முறையும் வைத்திய கட்டு முறையும் தெரிவது அவசியம், the process of binding or consolidating drugs which cannot stand before the fire as corrosive sublimate, bichloride of mercury, cinnabar, mercury, sulphur etc. By doing so, not only the medicine itself is purified and the potency of it highly increased, bnt also the injurious effects such as, mercurial pytialism can be easily prevented.

*சரக்குக் கட்டு விவரம்*, மருந்துச் சரக்குகளைக் கட்ட முயலும் போது அடியிற் கண்டபடி கவனிக்க வேண்டிய விஷயங்கள், அவை யாவன, the important points to be observed or attended to, while consolidating the under mentioned drugs viz :—

1. துரிசு — குரு வானால் பசுமை வேணும். இளகக் கூடாது, if copper sulphate (or acelate) is calcined, fertility and richness of colour (gold) are required ; it should not be soft.

2. சாரம்—உருகும்போது மயிர் போலே புகைந் தோடி மறுக வேணும், Sal ammoniac — when melting, it should throw fumes which should itself solidify.

3. வெண்காரம் — உருகும் போது பொங்கி நின்றடங்க வேண்டும், Borax —on melting should first boil in agitation and then settle down and sink to the bottom.

4. வெடியுப்பு — கட்டேயானால் கல்லு போல் இறுகுமட்டும் பார்க்க வேண்டும், Nitre — to consolidate this, one should try until it is found hard like a stone.

5. கல்லுப்பை — இறுகு மட்டும் கட்ட வேண்டும். வெடித்ததையும், கருத்ததையும் எறிய வேண்டும். கரியி விட்டு உருகும்போது கரி கொடுத்தால் அதற்கு குண மொன்றில்லை, Sea-salt —- to make it a firm solid, one has to be persistent till it is formed into a compact mass to reach perfect consolidation ; and the particles which had burst or charred should be thrown off as useless.

6. சீனம் — பொங்கப்படாது, குமிழ் விட்டு பொன்போல் ஆட வேண்டும், Alum—it should not agitate or rise on being heated, but on the other hand it should glow like gold in the melting pot.

7. சூடன்—எறியக் கூடாது, அல்லது உருகக் கூடாது, camphor — it should not burn or melt away.

*சரக்குக்குக் காலன்*. சவுட்டுப்பு, salt extracted from fuller's earth ; 2. உப்பு மணி, salt bead ; bead derived from consolidated salt ; 3. முப்பு, the mystic three salts.

*சரக்குக்கு மித்துரு*, வெண்காரம். borax.

*சரக்குக் குரு*, துரிசு, copper sulphate.

*சரக்கு சத்துரு*, மருந்துச் சரக்கின் குணத்தைக் கெடுக்கும் வஸ்துக்கள், inimical drugs which go to retard or neutralise the effects of the original drug and destroy the virtue naturally possessed by it.

*சரக்கு சுத்தி*, சித்தநூலிற் கண்ட 64 சரக்குகளில், மூலிகைச் சரக்கில் சில வற்றையும் உலோகம், தாதுப் பொருள் முதலியவைகளையும் வைத்திய முறைப்படி சுத்தி செய்தல், அப்படி செய்யாவிடில் பெருத்த பொல்லாங்கு அல்லது மரணத்தை யுண்டாக்கும், cleaning or otherwise purifying drugs, herbacious and minerals according to the process laid down in Tamil Medical science, and if this is not done, other serious consequences and even death may ensue.

NOTE.—சில நூற்களில் பொதுவாக சரக்கை யெல்லாம் குமரிச் சாற்றில் தோலா யந்திரம் கட்டி அவித்து, பிறகு மருந்துகளில் சேர்க்கும்படி சொல்லி யுள்ளன. பாங்கான சுத்தியால் சில ஓடும் சரக்குகள் சுத்திக்குக் கூட ஓடாது, in some of the medical treatises, the process is dealt with in a general way by stating that the drug to be purified should be placed in the Dola Machine and then baked in the steam before adding it to the ingredients of the medicine under preparation. See சுத்தி முறை.

சரக்குச் சுண்ணம், சவ்வீரம், corrosive sublimate or Mercuric chloride.

சரக்குப் பண்ணல், பச்சை மூலிகைகளை வெயிலிற் காய வைத்தல், drying the green herbs in the sun.

சரக்குப் பிடித்தல், மேக நோயால் பீடிக்கப் படல், to contract venereal disease (*a slang term*); 2. சரக்கு உடம்பிற்கு ஒத்துக் கொள்ளல், agreeableness of a drug to the body.

சரக்குப் போக்கு பிணியுற்ற அல்லது பிணியுறாத காலத்தில் மருந்துகள் உடம்பி லியற்றும் தொழில்களைப் பற்றிய விவரம் the study about the action of drugs in the system both in health and disease—Pharmacology; Pharmaco-dynamics.

சரக்கு மடக்கல், மருந்துச் சரக்குகளின் வேகத்தை அடக்கல், to restrain the high potency or power of drugs; 2. மருந்துகளின் விஷத்தை மாற்றல், to subdue or alter the noxious charactor of drugs; 3 மருந்தின் தன்மையைக் குறைதல், to lessen the effects or nature of medicine.

சரக்கு மித்துரு, சேர்க்கும் படியான சரக்கு, முன் சரக்கின் குணத்தை கெடுக்காதபடி இருக்கும் சரக்கு, friendly drugs which combine with the original drug without affecting its natural virtue or property.

NOTE.—It is to be remembered that according to Siddhar's science, every drug has its friendly or inimical virtue; and so, care should be taken to adhere to this principle when drugs are mixed up as ingredients in medicine.

Bogar's medical vocabulary (நிகண்டு) deals exhaustively about them. So, it is very essential for physicians to know this classification before preparing medicine for patients

சரக்கு முடிக்கும் காலம், சித்த வைத்தியத்தில் மருந்துச் சரக்குகள் இன்னின்னதை இன்னின்ன காலங்களில் தான் செய்து முடிக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்ட மாதங்கள். அப்படி செய்யத் தவறினால் மருந்துக்கு சிறந்த குணம் ஏற்படாது, in Siddha System of Medicine, it is restricted that certain kind of medicine or other preparations should be effected or performed in particular months, according to the seasons of the year. If this rule is not followed, it is said that the preparations will not be so very effective. The following are the months prescribed against each kind of such preparations;—

1. தை—மாசிக்குள் — குரு அதாவது பற்பம், சுண்ண வகைகள் செய்து முடிக்க வேண்டும், January — February —quintessence oxides, and carbonates requiring calcination.
2. பங்குனி—சித்திரை — செயநீர் வாங்கும் காலம், March—April — extraction of pungent liquids.
3. வைகாசி—ஆனி—சாரணை ஆடலாம், May and June — animating (mercury pills etc.) i.e. life-giving process.
4. ஆடி—ஆவணி — திராவகம் வாங்கலாம், July—August — preparation of acid by distillation.
5. புரட்டாசி — ஐப்பசி — செந்தூரம் முடிக்கலாம், September—October—calcined red oxides (Oxidum rubrum).
6. கார்த்திகை— மார்கழி — உருக்கினத்தைப் பார்க்கலாம், November — December — melting, smelting processes.

NOTE.—It is also said that if the rules are not strictly adhered to, the result or the preparation may not be so very effective and satisfactory; but sometimes, it may even end in thorough failure although the preparation of the ingredients are quite satisfactory. So, the seasons of the year for a particular preparation is most essential.

சரக்கு முடித்தல், மருந்து அல்லது மருந்து வகை முறைப்படி தயாரித்து முடித்தல், completing the preparation of medicine or other ingredients — Pharmaceutical preparations (completion of).

சரக்கு வரிசை, மருந்துகள் செய்யும் போது அனுசரிக்க வேண்டியக் கிரமம், the regularity or conformity to the prescribed rules or established order at the several stages of preparing a medicine or its ingredients.

சரக்கு விதி, மூலிகை, மருந்து இவைகளைப் பற்றியும், செய்முறை, உபயோகம், கொடுக்கும் விதம், கலக்கு முறை, முதலியவைகளைப் பற்றிய விதிகளைக் கூறும் நூல், a book purely dealing with the rules of pharmacology, pharmaceutical preparations, and pharmacy — Pharmacopoel directions.

சரக்கு வைப்பு, சரக்குக் கூட்டும் வகையும், சுத்திகளை விவரமாய்ச் சொல்லி அவைகளைச் செய்யும் விதங்களையும் உபயோகிக்கும் முறையையும் கூறும் நூல், that branch of science not only describing the drugs in common, but also giving directions as regards their preparation together with their uses and manner of application--Pharmacopoeia ; 2. சத்துரு மித்துரு சரக்குகளை நன்கு தெரிந்து பிறகு மருந்துகளைச் சேர்த்து சாப்பிடும் வண்ணமாகத் தயாரிக்கு முறை. இது அடியிற் கண்ட செய்யுளா லினிது விளங்கும் :—

"சரக்குகள் சுத்தி செய்யும் தன்மைகள் எலாமறிந்தும்
சரக்குக ளொன்றோடொன்று சார்ந்து மாறுதலை யோர்ந்தும்
சரக்கின் சத்துருவினோடு, சாற்றுமித் துருவை யோர்ந்தும்
உரைக்கும் ஐம்பூதந் தன்னாலாகிய வுடம்பின் நோய்க்கு."
(வைத்திய விளக்கம்).

the art of preparing and combining drugs, after studying all about the classification so as to render the medicine fit for administration. It is clearly given out in the above Tamil stanza ; 3. மச்ச முனி, சட்டை முனி, அகஸ்தியர் முதலியோர், மருந்து வைப்பு முறைகளைப் பற்றிச் சொல்லும் ஓர் வைத்திய நூல், a medical treatise on the process of preparing medicine i e., pharmaceutical preparations written by Machamuni, Sattamuni, Agastyar and others seperately.

சரக்கோடி, see சரக் கொன்றை.

சரக் கொன்றை, இதுவே கொன்றை. இம் மரம், இந்தியா, பர்மாவிலும், மற்றும் பல விடங்களிலும் காணலாம். இதன் காய்கள் முருங்கைக் காய்களைப் போல் 2 அடி நீண்டும், திரண்டும் இருக்கும். உள் அறைகளுண்டு, இதற்குள் இருக்கும் பசையுள்ள வஸ்துவிற்கு தான் புளி என்று பெயர். இதன் இலையை அரைத்து சருமத்திற் காணும் படையில் தேய்க்க குணமுண்டாகும். இதன் கொழுந்தை துவையல் செய்து சாப்பிட மலபந்தம் போம். பூவைக் கஷாயமிட்டு கிரிநீவு, பெரு வியாதி, வயிற்றுக் கோளாறு, பிரமேகம், சலமேகம், இவைகளுக்குக் கொடுக்கலாம். இதன் வேரை கஷாயமிட்டுக் கொடுக்க சுரம், சூலை, அரோசிகம் முதலியவைகள் போம். பட்டையும் இலையையும் அரைத்து எண்ணெயிற் குழைத்து சிரங்குகளுக்கு பூசலாம். இதன் இலைச்சாறு உடம்பிற தேய்க்க சோகையின் வீக்கம் போம். இதன் வேர்ப்-பட்டையைச் கடிாய மிட்டுக் கொடுக்க சுரம், இருதய ரோகங்கள் போம், wreath cassia or common cassia : Indian laburnum—Cassia fistula. Grown in India, Burma and in several parts ; legumes resemble drumstick nearly 2 ft in length with numerous cells. The mucilaginous pulp surrounding the seeds is known as tamarind as it resembles its pulp. Leaves ground in water are used for ringworm and other cutaneous affections, tender shoots when used as a seasoning prove a laxative ; decoction prepared from flowers is given in stomach affections, diabetes, leprosy etc ; roots are a febrifuge and also used in colic, nausea ; bark and leaves rubbed up and mixed with oil are applied to pustules, itches etc. The juice of the leaves applied externally, removes swelling in cases of anemia ; the root-bark decoction is given for fever and heart affections. See also கொன்றை.

சரக்கொன்றைத் தூரு, கொன்றை மரத்தின் வேர், root of cassia.

சரக் கொன்றைப் புளி, கொன்றைக் காய்க்குள் ளிருக்கும் பசை யுள்ள சதைப் பற்று. இது கருப்பு நிறம், வாசனை யுள்ளது, தைப்பு ருசி, சூடு, மலத்தை இளக்கி பேதியாக்கும் குண முண்டு. இதை ஒரு வாறு பக்குவம் செய்து குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகளுக்கும் மலச் சிக்கலைப் போக்க

கொடுப்ப துண்டு. ஆயினும், ஒரிது வயிற்றுப் பொருமலையும், வலியையும் உண்டு பண்ணும். சாதாரணமாக புளியோடு கலந்து பயோகிக்க பித்த சாந்தி யாகும். நீரிழிவுக்கும் கொடுக்கலாம். இதை குல்கந்து பாலுடன் கலந்து யுனானி வைத்தியர்கள் விரேசனத்திற்காகக் கொடுப்பார்கள். இது இரத்தக் கொதிப்பைத் தணிக்கும். நரம்புகளைச் சுத்தி செய்யும். சீமை 'நிலாவரை யோடு சாப்பிட கபமும்; தாராயிலை, ரசம், காசினிக்கீரை, இவைகளோடு சாப்பிட வண்டலும் போம். அன்றியும், ஈரல் வாட்சி, காமாலை, உஷ்ண சுரம் போம். தகுந்த அனுபானத்துடன் மேலே பற்று போட கீல்வாயு, கணு வாதம், வீக்கம், உஷ்ணக் கட்டி இவைகள் போம். கொத்தமல்லிக் கீரை இரசத்தில் வாய் கொப்புளிக்க தொண்டை வீக்கம் போம். வாதுமை எண்ணெயில் கலந்து சாப்பிட குடல் கட்டு போம், a mucilaginous pulp surrounding the seeds of the pod. It is dark, fragrant, bitter, and is a laxative. It is medicinally prepared and prescribed for children and pregnant woman for constipation, although it tends to give a little pain and rumbling noise in the stomach. It is mixed with tamarind and given for biliousness and diabetes. Unani doctors mix it with gulkhand (a mixture of honey and rose) and milk and use it as a purgative. It is a useful remedy for cooling the heated blood, and cleaning the blood-vessels. Mixed with senna, it removes phlegm and taken with Tara leaf, pepper water and Indian endive, it cleanses the bowels. It is an excellent remedy in atrophy of the liver, jaundice, and fever. Treated with appropriate vehicle, it forms a useful remedy in gout, rheumatism, swelling, heat-boil etc. Mixed with the decoction or infusion of coriander leaves, it proves a beneficial gargle in swelling or inflammation of the throat; taken with almond oil it removes constipation or other obstruction of bowels.

NOTE.—The well-known brown pendulous pods are about 1—1½ ft. in length. The pulp is a mild and agreeable laxative. It is employed in the essence of coffee. It is best used combined with other drugs. It is also used with senna. The pulp is useful in diabetes; and for house-hold use, it is given mixed with tamarind.

In the colic of children due to flatulency, it is usually applied round the navel to effect motions. The leaves and bark ground in cocoanut oil as a paste form an external application in cases of ringworm, pustules and chilblains. The pulp is also best used combined with other purgative as a confection or electuary. The pulp of the fruit, the root-bark and powdered seeds and leaves, possess purgative properties. The powder on the surface of the fruit mixed with Crocus Sativus (குங்குமப் பூ) and sugar is used in parturition. See கொன்றைப் புளி.

சரக் கொன்னை, கொன்றை, common cassia. See சரக் கொன்றை.

சரங்கம், சரங்க பாஷாணம், a kind of arsenic; 2. பறவை, bird.

சரச காரி, வண்டு கொல்லி அல்லது தேவ தாரு, Himalayan deodar; worm-killer—Cedrus libani (deodara).

சரச காலினி, தேக்கு, teak wood—Tectona grandis.

சரச கேளிக்கை, மகளிர் விளையாட்டு, love-play.

சரசக் களிப்பு, காம விளையாட்டில் ஏற்படும் சந்தோஷம் அல்லது உள்ளக் களிப்பு, the inner feeling of happiness through love-play, especially of women.

சரசக் காரி, போக முடையவள், a passionate woman.

சரச சல்லாபம், காம மூட்டும் சம்பாஷணை, amarous conversation.

சரச சுமுகம், கஞ்சாங் கோரை, white basil—Ocimum album.

சரசச் சங்கு, முட் சங்கு, horny conch.

சரசச் சேட்டை, காமச் சேட்டை, wanton sport.

சரசத் தழுவு, காமத்தால் கட்டி யணைதல், love-embrace through passion.

சரசபம், கடுகு, mustard.

சரச பிகா, கடுகு, see சரசபம்.

சரசபிகா ரோகம், ஓர் மேக நோய். இது லிலேடமத்திலுல் ஆண் குறியின் உள்ளிலாவது வெளிப் புறத்தி லாவது கடுகைப் போல் அநேக கொப்புளங்களை உண்டாக்கும். இது இரத்தக் கேட்டினாலும், கபக் கோளாறினாலும் ஏற்படும். அன்றியும், ஜூகைத் கிலேயி

றும் இவ்விரணம் ஏற்படக் கூடும், a kind of syphilis. It is a disease consisting of pimples or tiny herpetic eruptions of the shape and size of mustard seeds found to crop up on the surface of the male organ of generation or inside on the glans penis on account of the deranged blood and kapham (humour). It may also be the result of injudicious applications of *sukam* plasters on the part.

NOTE.—Sookai is an irritating water-insect or leech applied for elongating or swelling the male organ to satisfy one's lust towards intercourse. See சுகுக் கட்டி.

சரச பிகை, see சரசபிகா ரோகம்; 2. சுகுக் கட்டி.

சரசப் பேச்சு, காமத்தை மூட்டும் பேச்சு, amorous talk.

சரச மாகிகம், வஞ்சிக் கொடி, water-rattan—Calamus rotang.

சரச மாடல் காமச் சேஷ்டை, wanton sport; amorous gestures; love-play.

சரசம், வெண்ணெய், butter; 2 பெருங் கம்பிப் பூ, cape jasmine — Gardenia latifolia; 3. தேக்கு, teakwood tree - Tectona grandis; 4. காமச்சேஷ்டை, wanton sport.

சரசம் பண்ணுதல், பெண்ணைக் காதலித்து மோக மூட்டல், to court solicitously; wooing.

சர சரத்தல், முற முறப்பா யிருத்தல், being rough, not smooth as body.

சர சரப்பு, see சர சரத்தல்.

சரச லீலை, சரத விளையாட்டு, love-play

சரச வார்த்தை, காம விஷயங்களில் பரிகாச வார்த்தை, amarous love-talk; love-jokes.

சரச வித்தை, இன்பச் சேட்டைப் பயிற்சி, training or knowledge in the art of love-play.

சரச விநோதம், காம விளையாட்டால் பொழுதைக் கழித்தல், love-play or sport as a pastime.

சரச விளையாட்டு, see சரச லீலை.

சரச வுல்லாசம், காம விச்சையால் ஏற்படும் மனக் களிப்பு, internal joy through sexual desire especially of women.

சரச வேர்; நன்னாரி வேர், sarsaparilla.

சர சாஸ்திரம், see சர நூல்.

சர சாலிங்கனம், காம விகாரத்தால் இரு கையாலும் கட்டித் தழுவல், sexual embrace; pressing to the bosom with both hands through sexual passion.

சரசி; சரத விளையாட்டில் இச்சை யுள்ளவள், a woman desirous of love-play; 2. இனிய குணவதி, woman of amiable qualities and pleasant temper.

சரசிஜம், தாமரை, lotus—Nelumbium speciosum.

சர சித்தல், see சரசம் பண்ணுதல்.

சரசிரு, குறிஞ்சா, see சரச்சிகா.

சரசீருகம், தாமரை, see சரசிஜம்.

சரசு, கஞ்சா செடியின் பிசின், the resin or gum of ganjah plant—Cannabis sativa; 2. குளம், tank.

சரசுராதி, பெரு மருந்து, Indian birthwort—Aristolochia indica.

சரசுவதி, மனோசிலை, red arsenic; red orpiment; 2. வல்லாரை, Indian penny-wort—Hydrocotyle asiatica; 3. குணவதி, an amiable excellent woman.

சரசுவதிக் கிருதம், see சரசுவதி நெய்.

சரசுவதி நெய், வல்லாரை நெய். இது ஞாபக சக்தியைக் கொடுக்கும், a medicated ghee prepared from Indian pennywort. It improves memory.

சரசுவதி மூர்த்தி, பூரான், centepede.

சரசுவதி வாக்கு, கற் றறியாது வரும் கல்வித் தேர்ச்சி அல்லது வல்லபம். இது ஒரு தெய்வக் கடாட்சம், erudition without learning—a spiritual gift.

சர சோதி, நாணல், reed—Saccharum spontaneum; 2. வா லுளுவை யரிசி, seeds of spindle tree—Celastrus paniculata.

சர சோதிடம், see சர நூல்.

சர சோதி தாமுக வாக்கி, மனோசிலை, cinnabar.

சரச்சிகா, குறிஞ்சா, scammony swallow-wort—Secamone emetica.

சரச்சிரா, கிலு கிலுப்பை, rattle-wort — Crotalaria laburnifolia.

சரச் சிறு, see சரச்சிகா.

சரஸ்வதி, வா லுளுவை யரிசி, spindle tree—Celastrus paniculata.

சரஸ்வதி பீடம், நாக்கு, the tongue.

சரஸ்வதி யிலை, பெருமிலை, Saraswaty's leaf —Cleodendron infortunatum; 2. வெள்ளைக் கல்கணி, saraswati leaf — Cleodendron viscosum alias Volkemeria infortunata.

சரடம், see ஓந்தி; 2. பச்சோந்தி, chameleon; 3. குசும்பா, false saffron — Carthamus tinctorius; 4. பல்லி, lizard.

சரட்டடைப்பன், மாடுகளுக்குக் காணும் ஓர் அடைப்பன் நோய், a kind of anthrax in cattle.

சரட்டை, கொட்டை, cocoanut shell; 2. ஓர் மீன், a fish—Malacanthus.

சரஷபம், கடுகு, mustard—Brassica juncea.

சரஷபிகை, see சரஷபம்.

சரணக் கிரந்தி, கணுக் கால் சதை, that portion of the muscle between the knee and the ankle; 2. கணுக் கால், ankle.

சரணம், அரச மரம், peepul tree—Ficus religiosa; 2. கால், leg; 3. பாதம், foot; 4. பெருங் காயம், asafoetida; 5. மயில், peacock; 6. மயிற் றோகை, pea-cock's tail.

சரண வாதம், பல வீனத்தால் குரக்கை இழுத்து கிடக்கசெய்யும்ஓர் வாதப் பிடிப்பு, a nervous affection resulting in cramps in the legs and nervous prostration. See குறண்டல் வாதம்.

சரணு கசம், மூக் கொட்டை, spreading hog-weed—Boerhaavia repens.

சரணுயுதம், கோழி, the gallinaceous fowl; 2. சேவல், cock.

சரணிகம், வெள்ளை காக்கணம், white mussel shell creeper — Clitorea ternatea (albiflora).

சரண், கால், leg; 2. அமமையார் கூந்தல, Sita's thread—Periploca asclepidae.

சரண்டம், பல்லி, lizard; 2. பறவைப் பொது, birds in general.

சாத்திகம், நாணல், reed; 2. நாணல் தட்டை reed tube.

சாத் தொட்டி, நீர் தொட்டி, water-tub.

சாத் துத், ஐப்பசி, கார்த்திகை மாதங்களாகிய —மழை அல்லது குளிர்காலம், the months of September and October — the rainy or cold season of the year.

சர நாசகம், } அனிச்சை, snake jasmine—
சர நாசிசம், } Rhinacanthus communis,

சர நாடி, முன்னங் காலில் ஓடும் ஓர் நாடி, an artery of the lower leg — Femoral artery.

சர நூல், சரம் பார்க்கும் அதாவது மூக்கு நாடியின் போக்கை கவனித்து நடக்க இருப்பதை கூறும் சாஸ்திரம், a science which predicts events by one's vital breath from either nostril or both; 2. மூக்கில் ஓடும் சுவாசம் பற்றிய நூல், the science of breath.

சரந்தம், எருது, bull.

சர பத்திரம், பலா விதை, cleome — Cleome fruiticosa.

சரபத்து, சர்பத்து, syrup.

சரபந்தம், மிளகு, pepper—Piper nigrum.

சரபம், எண்கால்களை கொல்லுதலை செல்லப் படும் எண் காற் பறவை a fabulous monstrous bird with eight legs supposed to have lived in the mythical period in the snowy mountains as Himalayas. It is regarded as the foe of the lion. See எண் புள்; 2. ஒட்டகம், camel; 3. குறும் பாடு, woolly sheep; 4. வரை யாடு, mountain sheep; 5. எண் கால் மான், a deer with eight legs; 6. தத்துக் கிளி, locust.

சரபாரி, கரு வேல், black acacia — Acacia arabica.

சரபாரி கந்தச் சுபத்திரம், வெள் வேல், white babool—Acacia leucophloea.

சரபி, கப்பொட்டி, which see.

சர பிண்டி, தழுதாழை, downy glory tree——Cleodendron phlomoides.

சரபிநாளி, சண்பகம், champauk flower — Michelia champaca.

சர புங்கு, கொள்ளுக்காய் வேளை, wild indigo —Tephrosia purpurea; 2. கொடிப் புங்கு, hog-creeper—Derris scandens.

சரபுங்க கல்கம், கொள்ளுக்காய் வேளை வேரை கல்கம் செய்து மோரில் கலந்து பிலிகோ தரத்திற்கு கொடுக்கும் ஆயுர்வேத மருந்து, an Ayurvedic medicine prepared by grinding the root of Zanzibar indigo and mixing it with butter-milk. It is given for the enlargement of the spleen.

சரபேசுர இரசம், சன்னிபாத சுரத்திற்குக் கொடுக்கும் ஓர் ஆயுர்வேத மருந்து, an Ayurvedic medicine prescribed for typhoid fever.

சரபேந்திர வைத்தியம், சரபேந்திரரால் செய்யப் பட்ட ஓர் வைத்திய நூல், a medical work compiled by Sarabendra, a Maharatta king of Tanjore.

சரப்பம், மயிர், hair.

சரப் புல், தண்ணீரில் முளைக்கும் புல், water grass.

சர மண். சக்கை மண், dhoby's earth.

சர மண்டலம், பாஷாண வகைகளைக் கொண்டு செய்யும் சுண்ணம், a compound of calcium carbonate prepared from arsenic.

சர மண்டலி, ஓர்வகைத் தேள், a kind of scorpion.

சரம திசை, இறக்கும் தருவாய், moments of death.

சரமரம், மரவட்டை, wood louse.

சரமாங்கம், see சடைச்சி.

சரமா ரங்கம், see கப்புச் சடைச்சி.

சரமாரி, இடைவிடாது பெய்யு மழை, continuous or constant rain.

சரமாரி உப்பு, வழலை யுப்பு, a quintessence salt used in Alchemy.

சரமாருதம், பேரரத்தை, greater galangal — Alpinia galanga (major).

சரமுத்து வாசி போன், குதிரைப் பல் பாஷாணம், red orpiment or realgar — Arsenicum rubrum.

சரமுல்லை. பற்கள், teeth; 2. கோர்த்த முல்லை, stringed jasmine.

சரமுறு வாசிபோன், see சரமுத்து வாசி போன்.

சரமை, பெண்ணாய், bitch; female dog.

சர யோடல், மூச் சோடல், movements of breath; 2 மூக்கினுள் இடகலை பிங்கலை மூச்சு வாயு ஓடுதல், the passing of subtle vital airs—Idakala and Pingala through the nostrils.

சரம், கொறுக்கை, European bamboo reed; 2. நாணல், pen-grass—Saccharum sara; 3. சுவாச நடை, the movements of breath in connection with the art of foretelling; 4. சுவாசம், breath; respiration; 5. சீரகம், cumin seed; 6. திப்பிலி, long-pepper; 7. நீர், water; 8. நோவு, pain; 9. பாலேடு, milk cream; 10. உடம்பி னரம்பு, nerves of the body; 11. தேக்கு, teak wood; 12. வெண்ணெய், butter; 13. மூவகை நாடியில் ஒன்று, (In Yoga Philosophy), one of the three subtle air vessels in the system; 14 கொறுக்கச்சி, bamboo reed; 15. மூச்சு ஓடல், the passing of breath; 16. அசைவு, motion or movement; 17. இருவகைத் தோற்றத்தி லொன்று as in சராசரம், one of the two classes of beings produced—animate and inanimate.

சரம்பரம், see சரகாண்ட பாஷாணம்.

சரம் பார்த்தல், சுவாச நடை பார்த்தல், examining the vital breath.

சரம் பார்ப்போன், மூச்சு நடையைக் கொண்டு கால நிகழ்ச்சியைக் கூறுபவன், one who predicts events by studying the vital breath. Hence the proverb "சரம் பார்ப் போன் பரம் பார்ப்பான்".

சரயு, காற்று, wind.

சரலகம், நீர், தண்ணீர், water.

சரலங்கம், காளிசபத்திரி, East Indian plum —Flacourtia cataphracta.

சரலம், அறுகு, sacred grass; 2. see சரளதேவதாரம்.

சரவணப்பாற் கொடி, கருங் குறிஞ்சா, black kurinjah—Cynanchum ipecacuanha.

சரவணம், கொறுக்கை, a kind of reed; 2. தாமரை, lotus flower; 3. நாணல் வேர், root of reeds—Saccharum spontaneum; 4. நாணற் பூ, reed flower.

சரவழகி, } குதிரைப் பல் பாஷாணம், red orpiment or realgar.
சரவாசி, }

சரவாச்சப், கல் உப்பு, insoluble sea-salt.

சரவாட்சம், கறி யுப்பு, common salt; culinary salt.

சரலி, கோணத்தண்டை யுள்ள ஓர் பிறைவெலும்பு, an indentation in the form of a crescent (moon) near the superior border of scapula or shoulder blade—Semilunar notch or bone.

சர வீணை, கருவண்டு, black beetle.

சரவுலை, இரட்டைத் துருத்தியிட்டு உலோகங்களை ஊதி யுருக்கும் ஓர்வகை உலைக் களம், an oven or fire-place where double bellowes or other contrivances for melting metals are used; 2. கொல்லன் உலைக் களம், black smith's forge.

சரவுலைத் துருத்தி, இரட்டைத் துருத்தி, double bellowes.

சரவுலையி லூதல், இரட்டைத் துருத்தியிட்டூதும் உலையில் வைத்தூதல், to melt in a furnace in which double bellowes are employed; 2. உலோகங்களை சுண்ணம், பற்பம், செந்தூரங்கள் செய்வதற்காக வேண்டி அதிக சூடு கொள்ளும்படி கொல்லனுலையில் வைத்து ஊதுதல். (இது புடத்திற்குமேற் பட்ட தீ), in order to get higher temperature for melting metals for purposes of getting metallic carbonates, oxides and red oxides, blacksmith's forge is used. This heat is higher than the one applied ordinarily for calcination.

சரவெலும்பு, முன்னங் காலின் வெளிப் பக்கத்து எலும்பு, the outer and lesser bone of the lower leg; (*In Anatomy*) the small, slender bone of the leg which swells out at both ends, by which it is firmly attached to the outer side of the tibia or main bone of the leg—Fibula.

சரஞுகரம், கருங் கொடி, common delight of the wood—Hiptage madablota.

சரளங்காய், தாளிச பத்திரி, East Indian plum—Flacourtia cataphracta.

சரளதூப திரவியம், சரள மரத்தின் பிசினைக் கொண்டு உபயோகிக்கும் தூபம், an incense prepared from the gum of the tree—English deodar.

சரள தேவதாரம், see சரள தேவாரு.

சரள தேவதாரி, see சரள தேவதாரம்.

சரள தேவதாரு, சீமை தேவதாரி மரம். இம் மரத்திற்கு 'சரள்' என்று இந்தி பாஷையில் சொல்வது. இது இமயமலைச் சாரில்தான் கிடைக்கக் கூடியது. தென் னிந்தியாவில் வளர்வதாகத் தெரியவில்லை. இது வட மேற்கு இந்திய எல்லையிலிருந்து ஆப்கானிஸ்தான்—காஷ்மீரம் வரைக்கும் விளையும். தேவதாருவைப் போல் இதினின்று ஓர் வகை எண்ணெய்ப் பிசின் எடுப்ப துண்டு. இது வியாபாரத்தில் மிகுதியாக உபயோகப் படும். இம் மரத்தின் பட்டையி லிருந்து எடுக்கும பிசின் மிகுதள வானதால், மரத்தி னுள்ளே துளைத்து அபரிமிதமாக எடுப்பார்கள். இது நாட்டு வைத்தியத்திற்கு மிக்க உபயோகமானது. இதை வாலையி லிட்டு கற்பூரத தைலம் சுத்தமானதாக வடிக்கப் படும். மேலும், இதி னின்று ஓர் விதமான பஞ்செடுப்ப துண்டு. இது இரண வைத்தியத்திற்கு உபயோகப் படும். சாதாரணமாக, இப் பிசின் உடம்பின் சுருசுருப்பிற்கும், வியர்வை வாங்கவும், உடம் பெரிச்சலைத் தணிக்கவும், களைப்பைப் போக்கவும் உதவும். இதை சிலந் திப் புண், கட்டி இவைகளுக்கு மேற் பூச்சு மருந்தாகவும் உபயோகிப்ப துண்டு. மேலும், ஒட்டுச் சீலையிலும் (Plaster), தைலத்திலும் இது சேரும். இதைத் தந்தி மேகத்திற்கு உள்ளுக்கும் கொடுப்ப துண்டு. நாட்டு வைத்தியர்கள் இதை மருந்தில் சேர்த்து பல் வலி, நடுக்கல் வாதம், கப சுரம் முதலிய நோய்களுக்கும் கொடுப்பார்கள். இதி னின்று எண்ணெய்ச் சத்து (tar) தயாரித்து நீராத இரைப்பு, க்ஷயம், முதலிய சிலேட்டும ரோகங்களுக்கு உள்ளுக்கும், சரும நோய்களுக்கு மேற் பூச்சு மருந்தாகவும் உபயோகிப் பார்கள், English deodar; long-leaved pine—Pinus longlifolia alias Cedrus deodara. In Hindi, it is known as saval. This tree is very common in the Himalayan region; and it does not appear to be a native of S. India. It covers great areas in the N. W. India from Afghanistan to Kashmere. Like the deodar and several other Indian pines, it is the source of an Oleo-Resin which is an important commercial product. As the quantity of resin collected from the bark is very small, an incision is made into the wood and collected in large quantity. The resin is useful in Hindu medicine. A very pure turpentine may be distilled from the oleo-resin; and also a small qnantity is obtained from the chips of the wood. The wood is used for the manufacture of wood-wool now used largely. It is employed as a stimulant, diaphoretic, for cooling the burning sensation of the body, in fainting, and as an external application to ulcerations, abscesses and the like, and as a basis for plasters and as an ingredient in ointments. Internally, it is used for gleet. Hindu Physicians use this in cases of tooth ache, shaking palsy, and phlegmatic fever. It is purified like

Shorea resin and prescribed in cases of bronchitis, consumption and other and phlegmatic diseases. The tar is a favourite application in cutaneous (skin) affections.

NOTE.—Dr. Hugh Cleghorn furnishes some interesting remarks in the manufacture of tar from this tree. He speaks of the product being superior and equal to Swedish tar, but the productive cost is far less than the other prepared in Europe.

சரளத் திரவியம் } see சரள ஜாபத் திரவியம்.
சரளத் திருவம், }

சரள மரப் பிசின், see சரளத் திருவம்.

சரள மரம், இராட்சச மரம், Potato plum of Mysore—Scolopia creneta.

சரளம், see சரள தேவதாரு: 2. சிவதை, Indian jalap—Ipomaea turpethum: 3 see சரளஜாபத் திரவம்.

சரள ரசம், கற்பூரத் தைலக் காரம். இது வாலை யினின்று இறக்கப் படும், spirits of turpentine—Oleum terbinthinae. It is made by distilling turpentine in a common still, when the oil will be collected in the receiver.

சரளருவம், சரளஜாபத் திரவியம். இது ஓர் மரப் பிசின், the gum of a tree called English deodar—Pinus longifolia.

சரளாசம், கருங் கொடி வேலி, black-flowered lead wort—Plumbago genus.

சரளி, கோழை, phlegm.

சரளிக் கட்டு, கோழைக் கட்டு, collection of phlegm in the chest.

சரளிக் கூடு see சரளிக் கட்டு,

சரளு, see சரளக்காய்; 2. கோடலி மரம், potato plum—Scolopia crenata. இதுவே இராட்சச மரம்.

சரவை, தேவதாரு, deodar — Erythroxylon monogynum; 2. கப்பிக் கல், gravel; 3. சிறு மணற் கல், sand stone; 4. பொடிக் கல், pebble.

சரவைக் காடு, தேவதாரு அடர்ந்த காடு, deodar forest.

சரவைத் தேவதாரு, பொற் றேவ தாரு, see சரள தேவதாரு.

சரற் காலம், மழை காலம், the rainy season.

சரன கோடரம், கருஞ் செம் பகத்தி, black sesbane—Sesbania genus.

சரன மலர், இலவு, silk cotton tree—Bombax malabaricum.

சரா, விருத் தாப்பியம், old age.

சராகம், வண்டு, beetle.

சராகை, வட்டில், plate; dish; 2. குடிக்கும் பாத்திரம், drinking vessel; a metal cup.

சராசந் தாங்கி, இள வழுக்கை, tender cocoanut; 2. மூன்று மாதததிய கருப் பிண்டம், three month's foetus; 3. நீர் சுழல் வண்டு, whirling beetle in water.

சராசரப் பாஷாணம், அடிபல பாஷாணம், a kind of native arsenic.

சராசனம், அரச மரம், peepul tree — Ficus religiosa; 2. வேல், babool — Acacia genus.

சராடி, ஓர் பறவை, a kind of bird?

சராடிகம், கருஞ் சிந்தில், a black variety of moon creeper—Menispermum genus.

சராதுரம், தற் பலம், weakness.

சராப் பியாசம், சரம் பார்க்கப் பழகுதல், practising the art of examining the breath.

சராயிக வுண்டை, கருப்ப வாயுவின் சம்பந்த மாய் வயிற்றி னின்று கழுத்து வரையிலும் ஏதோ வுருண்டையாக ஓர் திரட்சி எழும்பு வதுபோற் காணப்பட்டு கடைசியாக தொண் டைக் குழியில் தங்கி நிற்பதாகத் தோன்று ஓர் உணர்ச்சி, a sensation attendant on hysteria, as if a globus or ball ascending to the stomach, then up the chest to the neck and then becoming fixed in the throat—Globus hystericus

சராயிகை, பெண்களுக்குக் காணும் நரம்பைப் பற்றிய கோளாறு. இது கருப்ப வாயுவின் சம்பந்தமாய் ஏற்பட்டு வலி அல்லது இழுப்பு கண்டு, அதி வழிந்து சிறிது மூர்ச்சையும் காணும், a nervous disorder in women. It is due to the affection of the womb characterised by convulsive paroxysms or fits and impairment of the controlling power of the will with partial loss of consciousness—Hysteria.

சராயு, கருப் பாசயம், womb — Uterus; 2. கருப்பப் பை, sac of the embryo; 3. நஞ்சுக் கொடி, placenta with umbilical cord;

சராயு கண்டம், கருப்பைக் கழுத்து, neck of the womb; the cervical portion of the womb.

சரா யுசம், பிற் பிறவி, after-birth; 2. கருப் பை யழுக்கு, uterine discharge which takes place after child-birth — Lochia See கருப்ப வழுக்கு.

சராயு கருவகனம், கருப்பிணி காலம் அதாவது கருதரித்தது முதல் பின்னே பெறும் வரை யுள்ள காலம். இது சாதாரணமாய் 40 வாரங்களாம், the period of pregnancy, commencing with conception and terminating with delivery. Its ordinary duration is forty weeks — Utero-gestation.. See கருப்ப கால பரிமாணம்.

சராயுக வகனம், see சராயு கருவகனம்.

சராயு குறை மீளல், பெண்கள் பிரசவித்த பிறகு கருப்பை சரிவர சுருங்காததால் ஏற் படும் கோளாறு. இது அடிக்கடி ஏற்படும் கருச் சிதைவினாலுண்டாகும், defective contraction of the uterus (womb) after child-birth arising from frequent abortion—Uterine sub-involution.

சராயு கேதம், பிரசவித்த சில நாளைக்குப் பின் உண்டாகும் கருப்பை வலி, pain in the womb occurring sometime after delivery —Hysteralgia.

சராயுசம், கருப் பையில் பிறப்பன, viviparous animals; taking birth in the womb; 2. சிருட்டி வகை நாலில் ஒன்று, one of the 4 classes of creation among creatures.

சராயு சிறுகல், கருப்பப் பையின் சுருக்கம், involution of the womb.

சராயு திரசலை, கருப்பையி னின்று இரத்தம் நாற்றத்துடன் வெளிப் படுதல், abnormal hemorrhage from the womb with a bad smell; 2. பெரும் பாடு, excessive uterine hemorrhage—Metrorhagia. See இரத்த சிராவம்.

சராயு இமை, கருப் பை உப்பிசம், inflation of the womb—Physometra.

சராயுத் தாபம், சூல் கொள்ளாத கருப் பையில் உண்டாகும் அழற்சி, inflammation of the womb in an unimpregnated women—Metritis.

சராயு பகிர் சூல், புறச் சூல் அதாவது கருப் பையில் உண்டாகாமல் வெளிப் பக்கத் துருப்பில் ஏற்படும் கருப்பம், a case of pregnancy in which the foetus is found to contain in some organ exterior to the womb—Extra - uterine pregnancy (*Partus extra uterum gestatus*)

சராயுப் பெருக்கு, see சராயு திரசலை.

சராயு முகம், கருப் பையின் வாய், mouth of the womb—Os uterus.

சரா யுபம், கருப்பைத் தாபிதம், inflammation of the womb—Hysteritis.

சரா யுலதை, பக்கத்தும் வட்டமான நார், round ligament.

சரா யுலம், வயிற்றையும், கருப்பப் பையையும் அறுத்து குழந்தையை வெளிப் படுத்தல், (*In Midwifery*), incision into the abdomen and womb to extract the foetus—The Cæsarian section—Hysterotomy.

சராயுலி, பிரசவிக்க முடியாத பெண், a woman who cannot deliver.

சரா யுவதி மீளல், கருப்பை அதிகமாகச் சுருங் குதல், super involution of the womb.

சராயுவாதி, பகிர்ச் சராயு, see சராயு பகிர் சூல்.

சராயு விரக்கம், கருப்பை தன்னிடத்தை விட்டு கழுகல், the descent of the womb below its natural level into the pelvic cavity —Prolapsus uteri.

சராயு வுட்சிசு விளைதல், பிறக்கும் பொழுது அல்லது பிறப்பதற்கு சிறிது முன்னம் கருப் பையி லுள் குழந்தை கத்துதல், the crying of a child at or just before birth —Vagitus uterimus.

சராயு வுட் தாபிதம், கருப்பையின் சளிசவ்வுக் கேற்படும் அழற்சி. இதனால் கசிவுண்டாகும், catarrhal inflammation of the mucous membrane lining the walls of the womb —Endo-metritis.

சராயுவுள், கருப் பையின் உட் பக்கம், inside or within the womb—Intra-uterine.

சராயுவுள் வயது, கருப் பையில் தங்கி நிற்கும் காலம், the age or period within the womb—Uterine age.

சராயுவுள் ளழுகல், கருப் பையினுள் சந்த யழுகல், putrefaction in the womb—Uterine putrefaction.

சரா யுதகம், கருப் பையில் ஏற்படும் பாண்டு, a collection of watery fluid or dropsy of the womb—Hydro-metra.

சராய் பீனசம், see சிராய் பீனசம்.

சராவ சம்புடம், கருப்பையின் உள் வளைவு, the inner cavity of the womb.

சராய மானசம், சராமூடம் அதாவது மூப்பி னுண்டாகும் மூடத்தனம், senile dementia.

சராவம், சலாகை, a long and thin probe; 2. இரண வைத்திய சலாகை, probe used in surgery for purposes exploration: 3. அகல், bowl; 4. ஓர் மட் பாண்டம், an earthen vessel or pot.

சராவிகை, மடக்குக் கட்டி, an abscess raised at the margin and depressed in its centre.

சரானம், நேர் வழி, direct route; straight path.

சராளித்தல், பேதி யாதல், purging.

சரி, சமன், equal; 2. பசு, cow; 3. நழுகல், displacement; gliding from its place.

சரி காணுதல், see சரிப் பார்த்தல்,

சரி கூட்டல், சம பாகம் சேர்த்தல், to add er mix in equal quantities.

சரிகை மலை, பித்தளை மலை, mountain containing brass ore.

சரிகை வெள்ளி, களிம்பற்ற சுத்த வெள்ளி, silver free from impurities; refined silver; 2. சரிகையைக் கொளுத்தி உருக்கி யெடுத்த சுத்த வெள்ளி, pure silver obtained by burning silver lace.

சரிக் கட்டுதல், கொல்லுதல், killing.

சரிக்குச் சரி, சம பாகம், equal quantity; 2. பழிக்குப் பழி, revenge.

சரிங்கம், மொச்சைக் காய், country bean or green beans—Dolichos (genus).

சரி சமம், சமானம், exact equal quantity.

சரிசம், அசோகு, asoka tree — Saraca indica.

சரி சயம், சிறு நன்னாரி, small-leaved sarsaparilla; swallow-wort — Hemidesmus indicus (angustifolia).

சரி சாமம், நடு இராத்திரி, midnight.

சரிணம், காட்டுத் துளசி, wild basil — Ocimum adscendens.

சரிதல், நழுவுதல், to slide down; 2. சாதல், to die.

சரித்தல், மலங் கழித்தல், to go to stool; to evacuate bowels; 2. சீரணித்தல், to digest.

சரித்திரி, see சரித்திரை.

சரித்திமெர, புளிய மரம், tamarind tree—Tamarindus indicus.

சரித் துவை, புல்லுருவி, a parasitic plant —Loranthus (genus).

சரிந்த வயிறு, தொங்கும் வயிறு, pendulous abdomen; 2. கருப்பைப் பிதுக்கம், anteroversion of the uterus — Venter propendens.

சரி பங்கு, அரை வாசி, half and half.

சர்ப்பம், பாம்பு இது ஓர் விஷப் பிராணி. இதில் நாகம் முதலிய சில வகைப் பாம்பு கடித்தால் பிராணனுக்கு அபாயத்தை விளைவிக்கும், மரணத்தையு முண்டு பண்ணும். இது வருஷத்தில் பலமுறை சட்டை கழட்டும். சில பாம்புகளின் சதை, தோல், வைத்தியத்தில் உபயோகப் படும். வெண்குஷ்டத்துக்கு மலைப் பாம்பின் காய்ந்த இறைச்சி குட்டத்திற் குதவும். பாம்பின் சட்டையை பொடித்து அதை புங்கெண்ணெயிற் குழைத்து காக்கை வலிக்கு மேலே பூச உதவும். இதையே முறை சுரத்திற்கு உடம்பில் வைத்துக் கட்டு கட்ட உதவும். வசிக்கு மிடத்தைக் கருதி சாதாரணமாக பாம்புகள் நான்கு வகைகளாகக் கொள்ளப் படும். அவையாவன:—மரப் பாம்பு, தண்ணீர் பாம்பு, தரைப் பாம்பு, குழிப் பாம்பு. அன்றியும், இதன் விஷத்தைக் கருதி, பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர பாம்புகளென நான்கு வகைகளாகவும் பிரிக்கப் பட்டுள்ளன, Snake—a venomous reptile. Some of these snakes as cobra etc. are so very poisonous as to endanger human life and at times even cause death. It casts off its epidermis or outer skin in a single piece several times every year. The flesh and skin of certain snakes is held to possess medicinal virtues. The dried flesh of a rock-snake is considered useful for leprosy. The snake-slough, when reduced to powder and mixed with Pungam (Pungam) oil is a remedy as an external application in epilepsy. The same is used as a ligature or bandage in intermittent fevers. Popularly, they are arranged under four heads according to their abode viz:—Tree-snake, water-snake, ground-snake and burrowing snake. It is also divided into four castes according to the degree of poison as, Brahmin, Kshatreya, Vaisya and Sudra.

NOTE.—They are also divided into four groups viz:—1. Ground Colobrides or Coronellia group, 2. True Colubrides or Colubrina group, 3. Bush Colubrides or Dryadina group, 4. Fresh water Colubrides or Natricina group.

The snake family proper comprises the greater part of the non-venomous snakes namely—all those which do not present any striking character either in their general habit, in the shields of the head, in the dentition or in any other part of their organisation.

சர்ப்ப ராசி, நாணல், reed—Saccharum spontaneum; 2. பிச்ச விளாத்தி, see சக்கக் குப்பி.

சர்ப்ப ராசியம், see சர்ப்ப ராசி.

சர்ப்ப ராட்சி, பீனாரிச்சங்கு, see கக்கரட்டான்; 3. பாம்புக் கூட்டம் serpent's kingdom.

சர்ப்ப நாட்சியம், உருத்திராட்சம், olive linden—Eleocarpus tuberculatus.

சர்ப்ப வகை, பாம்பு வகை, the different kinds of serpent viz :—

1. ஆண் பாம்பு, male serpent.
2. பெண் பாம்பு, female serpent.
3. அலிப் பாம்பு, hermaphrodite snake.
4. மலட்டுப் பாம்பு, sterile snake.
5. பாலிய பாம்பு, young snake.
6. விருத்தப் பாம்பு, old snake.
7. கருப்பப் பாம்பு, pregnant snake.
8. ஒரு சூல் பாம்பு, sterile snake after giving birth only once.
9. கோ ... கண் ... பாம்பு, snake stricking against the eye.
10. வழிப் பாம்பு, snake biting passers by.
11. வழலைப் பாம்பு, snake causing saliva in persons bitten by it—Lycodontidae.
12. மயக்குப் பாம்பு, snake whose bite causing giddiness.
13. முறுக்குப் பாம்பு, snake whirling round. See under பாம்பு.

சர்ப்ப விஷம், பாம்பின் பல் விஷம். இது மிக்க புளிப்பும், உஷ்ணமும் உள்ளதால் இதைத் தடுக்க குளிர்ச்சியான வஸ்துக்களையே உபயோகிக்க வேண்டும், snake-poison The poison of serpent is very acid and hot and so, for preventing its effects everything cooling should be employed.

சர்ப்ப வேர், கீரி புரண்டான் வேர், mongoose snake root. It is so called because the mongoose has recourse to the plant when bitten by cobra.

சர்ப்பாங்கச் கல், see சுருப்பரக்கக் கல்.

சர்ப்பாராதி, கருடன், brahminy kite ; 2. கீரி, mungoose ; 3. மயில், pea-cock.

சர்ப்பாரி, கீரி. see சர்ப்பாராதி.

சர்ப்பி, நெய், ghee.

சர்ப்பி மேகம், மூத்திரம் நெய்யைப் போற் காணப்படும் ஓர் நீர் வியாதி, a urinary disease in which the urine looks like a stream of clarified butter.

சர்ம குட்டம், உடம்பின் தோல் மஞ்சள் அல்லது செப்பு நிறமாய் மீன் செதிள் போலச் சொரசொரப்பாய்த் தடித்து, மரத்து, வியர்வை காணும் ஓர் வகைக் குட்டம், a form of leprosy characterised by patches of red or yellow coloured skin with roughness like fish scales, loss of sensation, and perspiration. See சருமகுட்டம்.

சர்ம சோபை, தோலின் வீக்கம், swelling of the skin.

சர்மதல குட்டம், see சருமதல குட்டம்.

சர்மத் திமிர், தோலுக்கு ஏற்படும் திமிர், loss of sensation or numbness of the skin.

சர்மம், தோல், skin, see சருமம்.

சர்ம ரோகம், see சரும ரோகம்.

சர்ம வெடிப்பு, தோலின் பிளவு, a cleft or fissure of the skin.

சர்வ காடி, மிகப் புளிப்புள்ள காரமான காடி, vinegar strongly sour and acrid to taste.

சர்வ சக்தி, முழு வல்லமை, full power ; whole energy ; universal energy.

சர்வ சக்தி ... அமுத ... சுரப்பி, pineal gland. See அமுத ...

சர்வசடம், ஓர் பூடு, Cama indica ?

சர்வ சாரம், ஓர் முக ரோகம், see சர்வ சார முக ரோகம்.

சர்வ சாரகம், வேம்பு, neem tree — Azadirachta indica ; 2. நிம்ப ... வேங்கை, kino tree — Pterocarpus marsupium ; 3. see சர்வ சாரகம்.

சர்வ ... ... விக்கல், ஓயாமல் அடிக்கடி ... ஓர் வகை விக்கல், hiccough occurring constantly and at frequent intervals.

NOTE.—These convulsive inspirations often occur in paroxysms succeeding each other at intervals of a few seconds. They will also be found during the fatal end in other diseases.

சர்வசார முக ரோகம், வாயின் சகலத்தையும் ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ..., a disease invading the entire cavity of the mouth; and it is due to

deranged Vayu. The whole mouth is covered with small boils marked by piercing pain. So, the patient feels his mouth being pierced with 1000 needles. The boils may be yellow or red with intense burning sensation.

சர்வசார மூலிகை, முழு சாரமும் அமைந்த ஒன்பது மருந்துப் பூண்டுகள்: அவையாவன, the nine drugs containing the entire or full essence viz :—

1. கற்றாழை, aloe—Aloe vera (officinalis).
2. பெருங் கரந்தை, big karandai — Randia dumetorum.
3. சிறு சின்னி, Indian shrubby copper leaf—Acalypha fruticosa.
4. வல்லாரை, Indian pennywort—Hydrocotyle asiatica.
5. விஷ்ணு கரந்தை Vishnu plant — Evolvulus hirsutus.
6. சிவனார் வேம்பு shiva's neem — Indigofera asphalathoides.
7. ஆரை, pseudoferns — Marsilea qudrifolia.
8. பற்படாகம், fever plant—Mollugo cerviana.
9. வெள்ளறுகு white grass—Enicostema littorale.

சர்வ க்ஷாரம், வெங்காரம், see சர்வக்ஷாரகம்; 2. அனேக பூண்டுகளின் சாம்பற் கலவை, a mixture of the ashes of several plants : 3. சவுக்காரம், universal alkali.

சர்வசித்தி ரசம், மூத்திர ரோகங்களைப் போக்கும் ஓர் ஆயுள்வேத மருந்து, a preparation in Ayurveda prescribed for urinary diseases.

சர்வ செயநீர், வேகாத உப்பு செயநீர். இது மண்டை யோட்டைச் சுட்டு சாம்பலாக்கி அதிலிருந்து வாத முறைப்படி தயாரிக்கப் படும், (In Siddha Medicine), a strong pungent liquid prepared according to alchemical process from salts derived by burning the human skull.

சர்வாணி, கண்களின் வெள் விழி ஓரமாய் அல்லது கரு விழி ஓரமாய் சீழ் வடியும், இரு பட்டைகள் உண்டாகிப் புழுத்து ஒழுகும் கண் நோய், an eye disease in which ulcers are developed on the edge of the white or the Black portion of the eye with usual discharges

சர்வதரிசி, ஞான விளக்கத்தினால் வஸ்துக்களை உள்ளபடியே காணக் கூடிய ஞானி. அக்காட்சி அவன் முறைக்கும் உலக வழக்க பழக்கத்திற்கும் பொருத்த முடையதாகும். a sage who is able to look at things from all aspects in their true nature by reason of his being possessed with wisdom and knowledge, which harmonises with the Shastras and with the manner and custom of the people.

சர்வதா, எப்பொழுதும், always ; at all times.

சர்வதா மூலி, மருதாணி, fragrant nail-dye —Lawsonia alba alias L. inermis.

சர்வதோ பத்திரம், பெருந் துயில், see சருவ பத்திரம்.

சர்வத்தியாகம், முற்றுந் துறத்தல், complete renunciation

சர்வத் திராவகம், எல்லா வித மருந்துகள் தயாரிக்கும் பொழுது உபயோகிக்கும் திராவகம். a universal acid used in all the preparations of medicines; 2. எல்லா வித வஸ்துக்களையும் கரையச் செய்யும் ஓர் செயநீர், (In Siddha Medicine), a fluid that dissolves any substance or in which any solution is effected — Universal solvent.

சர்வ நேத்திர விழி யுந்தல், கண் முழுவதும் சதையைப் படரச் செய்யு மோர் வரு விழி நோய், a disease of the coronea spreading growth of flesh affecting the whole eye.

சர்வபூத பிரகாசனி, எல்லா பிராணிகளையும் ஆட்டுவிக்கும் சகுண சக்தி. Sakti, in her saguna aspect, by whose power all creatures are displayed.

சர்வம், எல்லாம், all ; 2. முழுதும், complete.

சர்வ ரசம், see சருவ ரசம்.

சர்வாண முலாம், சாம்பிராணி, துரிசு, பால் துத்தம், கருங் குங்கிலியம், வெள்ளைக் குங்கிலியம் இவைகளைப் பொடித்து நல்லெண்ணெய் விட்டரைத்து, பிறகு தண்ணீரால் கழுவி வெள்ளைத் துணியில் தடவி ரணங்களுக்குப் போடுவதாம். a healing plaster applied to all kinds of wounds and injuries It is made by powdering and then grinding frankincense, blue vitriol, black and white dammer in gingelly oil and then washing the product in water and steeping it on a white cloth.

சர்வரோக நிவாரணி, எல்லா நோய்களையும் குணப்படுத்து மருந்து, any drug capable of curing all diseases — All-healing drug ; 2. சுக்கு, dry ginger.

சர்வரோ கௌஷதம், எல்லா நோய்களுக்கும் கொடுக்கு மருந்து, a remedy of high repute or universal remedy given for all diseases—Panacea.

சர்வர்ச்சம், கறி யுப்பு, kitchen salt ; common salt.

சர்வ லோத்திரம், காகேர்ளி, caper-shrub—Capparis aphylla.

சர்வ விசர்ப்பி, திரிதோஷ விசர்ப்பி. இது உடம்பு முழுதும் பரவும் ஓர் வகை அக்கி நோய், a kind of herpes spreading over all parts of the body due to the derangement of the three humours in the system.

சர்வ விஷத் தரசி, ருதந்தி. இது எல்லா வித விஷத்திற்கும் கொடுப்பது, Indian weeping tree. It is useful as an antidote for all kinds of poisons. See அழுகண்ணி.

சர்வ வேதிகம், வேங்கை, see சர்வ சாதகம்.

சர்வாக்கியம், முக வுறுப்பு ரோகங்களைப் பற்றி கூறும் நூல், that branch of medical science treating about the facial organs as nose, eye, ear etc., 2. ஸர்வாங்க ரோகங்களை விவரமாய் தெரிவிக்கும் ஆயுர் வேத நூல், an Ayurvedic treatise describing all about the diseases of internal organs in detail.

சர்வாங்க சலன வாதம், இது கீல்களைத் தளரச் செய்வதுடன் நரம்புகளில் வியாபித்து நடுக்கலை யுண்டாக்கும், a kind of palsy not only tending to loosen the joints, but also spreading through the nerves and causing tremor—Shaking palsy.

சர்வாங்க சீதளம், உடம்பு முழுமையும் சில்லிடல், chillness of the entire body.

சர்வாங்க சுந்தரம், சுரம், வாயு, காசம், இருமல், பசி யின்மை முதலிய நோய்களுக்கு கொடுக்கும் ஆயுர்வேத மருந்து. அதாவது இரசம் கந்தகம், வச்சநாபி, நேர்வாளம், சுக்கு, திப்பிலி, மிளகு, திரிபலை, பொரித்த வெண்காரம் இவைகளை சம இடையாகக் கொண்டு தண்ணீரில் அரைத்து உருட்டிய மாத்திரைகள், a pill made up of several ingredients composed of mercury, sulphur, aconitum, croton seeds, dry ginger, piper longum, black pepper, the three myrobalans and fried borax taken in equal quantities and ground together with water. This is said to cure fevers caused by excited wind (humour), asthma, cough and loss of appetite.

சர்வாங்க சுந்தர ரசம், புண்டரீக குட்டத்திற்குக் கொடுக்கும் ஓர் ஆயுர் வேத மருந்து, an Ayur Vedic medicine prescribed for a kind of leprosy attended with red patches like lotus petals.

சர்வாங்கப் பிடிப்பு, உடம்பி லுள்ள எல்லா மூட்டுகளையும் அல்லது உறுப்புகளையும் தாக்கும் ஓர் வாத நோய், a kind of rheumatism affecting all the joints or other organs of the body

சர்வாங்கம், முழு உடம்பு, the entire body body as a whole.

சர்வாங்க ரோகம், உடம்பு முழுவதையும் அநுசரிக்கும் நோய், any disease affecting the entire body; 2. உடம்பி லுள்ள எல்லா வுறுப்புகளுக்கும் ஏற்படும் நோய்கள், the various diseases affecting all the organs of the body.

சர்வாங்க வலி, உடம்பு முழுதும் ஏற்படும் வலி, pain affecting the whole body.

சர்வாங்க வாதம், ஓர் வாத நோய். இது உணவு, நித்திரை, மல சலம் முதலிய கோளாறுகளினாலும், அதிபாரம், அதி சையோகம் முதலிய வேறு பல காரணங்களினாலும் பிறந்து, உடம்பு முழுவதும் பரவி, வலி யுண்டாக்கி, உள்ளில் கீல்களைத் தளரச் செய்து, எலும்புகளில் அலை யடிப்பது போல் அடிகதுக் கொள்ளச் செய்யும். இதனால் ஏப்பம், மிகு வாந்தி, வயிற்று நோவு, பேதி, பிரமை, மூர்ச்சை, இளைப்பு, ஆயாசம், அசதி முதலிய குணங்களுண்டாகும். (*In Humoural Pathology*), a type of gout resulting in the looseness of joints followed by crepitant or crackling noise probably due to grating made by the joints. It affects the whole system and is said to originate from several causes as dietetic errors with a tendency to constipation, sleeplessness, suppression of natural urgings as urine, feces etc, and from various other causes such as, carrying unbearable weights, excess of sexual indulgence etc. It is marked by belching, vomiting, colic, purging, perplexity, swoon, hard breathing, fatigue, weakness etc. It is opposed to ஏகாங்க வாதம், which see.

சர்வாங்க வாயு, உடம்பு முழுவதும் தசையில் பரவும் ஓர்வித வாயு. இதனால் வலி, குத்தல், இளைப்பு, முதலிய குணங்களை யுண்டாக்கும், *(In Humoural Pathology)* a form of muscular rheumatism marked by pain in the muscular structures, fatigue etc. due to the deranged Vayu spreading over all parts of the body.

சர்வாங்கி, செங்கத் தாரி, false pea-cock foot's tree—Niebuhria linearis.

சர்வாசியம், see சம் விருதாகிய வாதம்.

சர்வாதி சாரம், எல்லா விதமான அதிசார பேதிகள், all kinds of diarrhoea.

சர்வாவு ஷதம், see சர்வரோக ஔஷதம்.

சர்வேசுர ரசம், வாத ரத்த நோய்க்குக் கொடுக்கும் ஓர் ஆயுர் வேத மருந்து. இதையே பிரசவத்திற்குப் பின் ஏற்படும் பிரகுதி குட்டத்திற்கும் கொடுக்கலாம், an Ayur Vedic medicine prescribed for diseases in which Vatha and blood are deranged. It is also prescribed for a kind of leprosy following the delivery.

சல கட்டு, see கட்டுக்கொடி ; 2. மூத்திரக் கட்டு, suppression of urine ; 3. *(In Humoural Pathology)*, கண் முதலிய உறுப்புகளில் மேக நீர் சேர்தல், accumulation morbid fluid in the organs as, eyes etc.

சல கண்டகம், நீர் முள்ளி, water thistle — Hygrophila spinosa ; 2, முதலை, crocodile.

சல கண்டகி, see சல கண்டகம் ; 2. நீர்ச் சேம்பு, prickly sesban — Sesbania aculeata.

சல கண்டம், மிகு வியர்வை, excess of perspiration—Hyperephidrosis.

சல கந்தி, ஓர் செம் மண், a coarse red ochre ; 2. see சகஸ்திர பேதி.

சலிகம், சங்கு, conch, chank ; 2. நீராட்டல், bathing ; 3. மலங் கழித்தல், answering the calls of nature.

சலக ரங்கம், தாமரை, lotus flower.

சல கர்த்தபம், ஓர் வீக்கக் கரப்பான். இதனால் உடம்பில் வீக்கங்கண்டு அக்கினி கரப்பானைப் போல் பரவி எரிச்சல், சுரம் முதலிய குணங்களைக் காட்டும், a kind of swelling extending like erysipelas and marked by burning sensation and fever—Cutaneous erysipelas.

சலகன், விதை யடித்த பன்றி, a gelded hog.

சல காகி, சிவதை, Indian jalap—Ipomaea turpethum.

சல காக்கை, நீர் காக்கை, water-crow — Cormorant.

சல காங்கம், சங்கு, conch ; 2. தாமரை, lotus flower ; 3. தேங்காய், cocoanut.

சல காசயம், தொழு கண்ணி, snake root — Hedysarum gyrans.

சல காமி, நீர் மேல் நடக்கும் குதிரை, a fabled horse supposed to walk on the surface of water.

சல்கி, அதிங்கம் அதாவது நாட்டு அதிமதுரம், Indian liquorice—Abrus precatorius.

சல கிரகணி, தண்ணீராக மலம் போகும் ஓர் வகைக் கழிச்சல், a chronic diarrhoea marked by watery discharge ; 2. பொடுதலை, creeping vervain — Lippia nodiflora.

சல கிராகம், முதலை, crocodile.

சலகு, விதை யடித்தல், depriving the testicles — Castration ; 2. முத்துச் சிப்பி, pearl-oyster.

சல குந்தலம், தண்ணீர் விட்டான், water-root—Asparagus racemosus.

சலகு பிடித்தல், விதை யடித்தல், see சலகு.

சல கும்பம், வெள் விழியில் வரும் ஓர் நோய். இதனால் நீர் கோர்த்து, இமை வீங்கி, கடுத்து, பீளை கட்டும், a disease of the sclerotic coat (white of the eye). It is marked by accumulation of morbid fluid, swelling of the eyelids, irritation and muco-purulent discharge.

சலசை, தானிய அளவு, grain measure ; 2. திலக விருட்சம், false red sandal — Adenanthera pavonia.

சலக் கடுப்பு, நீர்க் கடுப்பு, difficulty in discharging urine—Dysuria.

சலக் கட்டு, நீர்க் கட்டு. இது ஓர் மேக நோய், a venereal disease causing total suppression of urine—Ischuria.

சலக் கதிப்பு, மூத்திரம் மிகுதியாகப் போதல், too much discharge of urine — Hydruria.

சலக் கருவி, தண்ணீரின் கதிப்பை சோதிக்கும் கருவி, instrument for finding the density of fluids—Hydrometer.

சலக்க மலம், மலசலங் கழிக்கு மிடம், latrine.

சலக்க மாடுதல், நீராடல், bathing.

சலக்கம், நீராட்டுகை, bath ; 2. வஞ்சி மரம், Ceylon oak—Schleicheru trijuga.

சலக் கழிச்சல், குடற் கோளாறினால் தண்ணீராக பேதியாதல், watery fecal discharge or watery motion from looseness of bowels— Watery diarrhoea ; 2. அதிக மூத்திரம் போதல், abundant excretion of urine—Diuresis ; 3 ஓர் வகை நீரிழிவு, excess of water in the urine—Diabetes discharge of urine.

சலக் கழிவு, உடம்பி னின்று நீர்நீர் கழிதல், discharge of morbid or waste fluids from the system ; 2. மூத்திரக் கழிவு, discharge of urine.

சலக் கனல், கடல் நுரை, sea-froth engendered by submarine fire.

சலக் காரன், குழித் தாமரை, rootless nelumbo—Pistia stratiotes.

சலக் கால், யானைக் கால், elephantiasis of the leg.

சலக் கிரகணி தீபனம், பொடுதலை, creeping vervain—Verbina nodiflora.

சலக் கிராணி, தண்ணீராக பேதி யாகும் ஓர் வகைக் கழிச்சல், a chronic diarrhoea attended with watery motion ; 2. மூத்திரம் சாதாரணமாய் போவதை விட அதிகமாகப் போதல், a variety of chronic diuresis in which a larger quantity of urine than natural is excreted. See சலக் கழிச்சல்.

சலக் கிரீடை, புருஷர் பெண்களோடு தண்ணீரில் நிர்வாணமாக நின்று புரியும் காம விளையாட்டு. தண்ணீருக்குள் புணர்ச்சி செய்வதென்றால் நின்றபடிதான் முடியும். படுத்தபடி செய்வதென்றால் தலைபாகம் தண்ணீருக்கு மேல் தான் இருக்கவேண்டும். ஆனால் இருவரும் மூச்சு அடக்குவ தென்றால் இது தேவை யில்லை, a love-play indulged by a man with a woman nakedly. It also may involve coital posture in which they both have to take a standing posture which alone is possible and practicable ; and if otherwise, their position of lying or sitting should be such, so as to keep their head over the surface level of water, unless they both can suppress their breath for some time as may be required.

சலக் கிளுவம், ஓர் நோய், an unknown disease ?

சலக்கு, நவச்சாரம், sal ammoniac.

சலக் குடர், see சலக் குடல்.

சலக் குடல், மூத்திரப் பை, the urinary bladder.

சலக் குண்டி, மூத்திர குண்டிக் காய், either of the two glands in the lumbar region that secrete the urine—Kidney ; 2. தன்னால் அடக்க முடியாது மூத்திரம் பெய்பவன், one who discharge urine involuntarily ; 3. தன்னை அறியாது மூத்திரம் பெய்தல். இது குழந்தைகள் படுக்கையில் நேரிடும் சுபாவம், unconscious escape of urine—Uroclepsia. This is very common especially in children as it occurs at night and during sleep. It is known as—Nocturnal enuresia.

சலக் குரு, see சலக்கு.

சலக் குருவுக் கதிரிதியாகேனன், நவாச் சாரம், sal ammoniac.

சலக் குழலழற்சி, மூத்திரக் குழாய்க்குக் காணும் வேக்காடு, inflammation of the ureter—Ureteritis.

சலக் குழல், உடம்பினுள் குண்டிக்காயிலிருந்து ஊத்தாம் பின்னை அதாவது மூத்திரப் பைக்கு செல்லும் குழாய். இதன் மூலியமாய்தான் மூத்திரம் பைக்குட் செல்லும், the muscular tube which conveys the urine from the kidney to the bladder—Ureter.

சலக் குழல் கிரிச்சனம், மூத்திர நாளத்திற் கேற்படும் நெருக்கம், stricture of the ureter—Ureterostenoma.

சலக் குழல் சிலேட்டுமம், மூத்திரக் குழாயில் காணப்படும் சளி, the presence of mucous in the ureter—Ureterophlegma.

சலக் குழல் வாதம், மூத்திரக் குழல் நாளத்திலேற்படும் ஓர் வாத வலி, pain in the ureter from neuralgia—Ureteralgia.

சலக் குழல் வாயு, மூத்திர நாளத்தில் ஏற்படும் ஓர்வித வாயு. இதனால் அப்பாகம் உணர்ச்சியற்று போம், a kind of paralysis of the ureter attended with loss of sensation—Ureterolysis.

சலக் கூர்மம், நீராமைக் கட்டி. இது, குறிஞ்சில மக்களுக்கு வயிற்றினுள் ஆமையின் உருவத்தைப் போன்ற கட்டி வளர்ந்து பக்கத்தி

லேனும், இடது பக்கத்திலேனும் ஏற்பட்டு ஒருவேளை அசைந்தும்,அசையாமலும் இருக்கும் ஓர் வீக்கம் அல்லது கட்டி. இதனால் தொடைகளுக்கு பல வீனத்தையும், உடம்பிற்கு வெளுப்பையும் உண்டாக்கும். இது சிலேட்டுமாதிக்கமான சீதள பண்டங்களைச் சாப்பிடுவதாலும், நீங்காத நிழலையுடைத்தாய், விளக்கெண்ணெயைப் போல் தடித்திருக்கும் சுனைத் தண்ணீர் குடிப்பதினாலும், சிலேட்டும மாதது வயிற்றிற் சேர்ந்து, வாயுவினால் மண்ணீரல் தடித்து இறுகிக் காணும், enlargement of the spleen of the shape of a turtle, felt with or without movements generally on the left side or even on the right of persons, living in hilly tracts. It is marked by weakness of the lower limbs and anemic condition of the whole body. It is said to be caused in various ways as, by eating phlegmatic substances and drinking unwholesome hill water (remaining unexposed to sun's rays and thick like castor oil), thus taking its crigin in one living in hilly malarious tracts. The condition is attributed mainly to the concerted action of aggravated Phlegm and Vayu (humours) in the system by which the spleen is enlarged and hardened; 2. பெண்களுக்கு நாதாசயத்தில் எழும்பும் ஓர் வகைக் கட்டி. இதற்கு கொண்டைக் கட்டி அல்லது வல்லைக் கட்டி என்றும் பெயர், a tumour or swelling occuring in the ovarian gland of the female — Ovarian tumour.

சலக கூாமை, அமுரி யுப்பு, urinary salt; 2. நவாசாரம், sal ammoniac.

சலக் கொதிப்பு, நீர்ச் சுருக்கு. இது அதிக உஷ்ணத்தினால் நேரும், burning pain or scalding sensation while discharging urine due to excessive heat of the body —Ardor urinae; 2. தண்ணீரின் கொதிப்பு, excessive heat of water; boiling of water

சலக் கோர்வை, நீர்க் கோர்வை, attack of cold; 2. விஷ நீர்க் கோர்வை, absorption of morbid fluid in the system as in dropsy etc; 3. மூத்திரக் கட்டு, suppression or retention of urine in the bladder—Dysuria; 4. மூக்கின் சல வொழுக்கு, catarrh of the nose.

சலக் கோர்வை, உடம்பில் பல விடங்களிலும், பல உறுப்புகளிலும் நீர் திரண்டு நிற்றல். இவற்றில் சில வியாதிகளாகவே மாறும். அப்பொழுது அதனதற் குண்டான குணங்களையே காட்டும், அவையாவன, collection of morbid fluids in the several parts or organs in the body. In some cases, such collections may themselves turn out subsequently to be a disease with its respective characteristics and names viz:—

1. இரத்தத்தில் நீர் மிகுதி, excess of water in the blood—Hydremia,
2. அடி வயறு நீர் திரட்சி, collection of fluid in the abdominal muscles — Ascites or dropsy.
3. பீசம் அதாவது பீசிகில் ஏற்படும் ஊதம், collection of fluid in the scrotum—Hydrocele.
4. கபாலத்தில் நீர்க் கொள்ளல், water in the brain—Hydrocephalus.
5. பித்தப்பை நீர் மிகுதி, accumulation of fluid in the gall-bladder—Hydrocholectysis.
6. மார்பின் நீர்க் கோர்வை, water in the chest—Hydrothorax.
7. இருதய தாமரையில் இரத்த நீர் தங்கல், accumulation of a serous fluid in the pericardium—Hydropericardium.
8. கருக் குழியில் நீர் கொள்ளல், collection of watery fluid in the uterus—Hydrometra,
9. கண்ணில் நீர் சேர்க்கை, dropsy of the eye—Hydrophthalmos.
10. சதை அல்லது தோல் பாகத்தில் நீர்க் கோர்வை, a watery or dropsical condition of the tissues (muscular or cataneous) — Hydroplasma.
11. குண்டிக் காயில் மூத்திரக் கோர்வை, collection of urine in the kidneys—Hydronephrosis.
12. நுரை யீரலில் நீர் சேரல், presence of fluid in the pleural cavity—Hydrothorax.
13. காதில் நீர் கொள்ளல், droysy of the ear—Hydrotympanum.
14. நாதாசயப் பாண்டு, dropsy of the ovum—Ovarian dropsy.

சலக் கோவை; see சலக் கோர்வை; 2. ஓர் கோவை, a kind of cuper shrub.

சலக் கோளாறு, மூத்திர முறை பிறழ்வு, a disordered state of the urine.

சலங் கதித்தல், மூத்திரம் மிகுதியாதல், increase of urine; abnormal discharge of urine.

சலங் கல்லுமா, காட்டுக் கோங்கு அல்லது அத்தர் வாரி, prussic acid tree—Pygeum wightianum.

சலங் கழித்தல், மூத்திரம் பெய்தல், urining; 2. புண்ணினின்று சீழ், இரத்தம் வெளிப் படுத்தல், to remove the pus and blood from a sore.

சலங்கைக் கோதி, கடுமையான கொதி, ebullition; 2. தளபுள வென்று கொதித்தல், the agitation of any liquid in boiling.

சலங்கைச் செடி, ஓர் செடி (கிலு கிலுப்பை), a plant, so called of its sound probably referring to rattle-wort.

சலங்கைப் பூரான், ஓர் பெரும் பூரான், a large species of centipede.

சலங்கை யொலியுற வறுத்தல், சலங்காய்ந்து சத்த முண்டாகும்படி நெருப்பின் முன்பாக வறுத்தல், frying anything in the fire to get rid of the moisture until a crackling sound is produced.

சலங் கொள்ளல், நீர்க் கொள்ளுதல், to be attacked with cold; 2 சீழ் கொள்ளல், to form pus or suppurate as in ulcers, abscesses etc; 3. உடம்பில் கெட்ட நீர் சேரல், see சலக் கோர்வை.

சலங் கோர்த்தல், நீர் கொள்ளல், catching cold; 2. சீழ் பிடித்தல், supputation.

சலங் கோவை, பாண்டு, dropsy; 2. உடம்பில் சலம் கோர்த்ததினால் காணும் வீக்கம், swelling through absorption of fluid in the system.

சலச சங்கதி, மந்தாரை, variegated mountain ebony—Bauhinia variegata.

சல சந்தவம், நீர் வாழ் பிராணி, water-animals; 2. நீர் வாழ்வன, that which moves or lives in water.

சல சந்தி, see சகல்திர பேதி; 2. எலும்புப் பொருத்து, joint of the bone.

சல சந்து, நீர் வாழ்ப் பிராணி, creature that live in water; 2. மீன், fish.

சலச பத்திரம், தாமரை யிலை, lotus leaf.

சலச பூரிதம், வரிக் கடுக்காய், striped galnut—Chebulic myrobalan.

சலசப் பூ, தாமரைப் பூ, lotus flower.

சலசப் பூரிதம், வரிக் கடுக்காய, see சலச பூரிதம்.

சலசம், தாமரை, lotus flower; 2. முத்து, pearl; 3. பாசி, green moss; 4. நீரிற் தோன்றிய முத்து, pearl found under water.

சல சம்பு நாதம், நீர்க் கடம்பு, water cadamba.

சல சயம், இலாமிச்சை வேர், a fragrant grass.

சல சரக்குழி, நீர்த் தாமரை, common lotus grown in water as distinguished from other varieties; 2. குழித் தாமரை, see சலக்காரன்.

சல சரம், மீன், fish in common, so called from its moving in water; 2. முதலை, crocodile under water.

சலசரி, நாகத்தினால் கிண்ணி போல் செய்து கொண்டு, பிறகு அயத்தினால் தாம்பாளம் செய்து நடுவில் கிண்ணி வாய் பொருந்தும் படி சுற்றிலும் வரி கிழித்து, காற்று புகாத வண்ணம் சித்த வைத்தியத்தில் சொல்லிய முறைப்படி செய்து மருந்து முடிக்கும் விதமாக அமைக்கப் பெற்ற ஓர்வித யந்திரம். (அக. வல்லா. 600) (சட்ட. நிகண்), an apparatus consisting of a zinc bowl and a round iron plate or dish with a deep circular line carved on it, so as to make the lid of the bowl, exactly fit in the groove as to render it air-tight, when kept inverted at the centre of the plate. This is a method deviced for preparing some medicine according to the Tamil Siddha System.

சலசரி மெழுகு, திருமூலர் திரு மந்திரத்தில் சொல்லி யுள்ள ஓர்வித மெழுகு. அது கெந்தகம், காரீயம் இவைகளை மூசையிலிட்டு உருக்கி, பிறகு மற்ற சரக்குகளோடு சேர்த்துப் பொடித்து, ஆலம் பாலில் போட்டு காற்று புகாதபடி மேற்கண்ட முறையாக எரித்து தயாரித்த மெழுகு, a cerate or thick ointment contemplated in the treatise of Thirumoolar Thirumandiram. It is composed of sulphur and black-lead melted in a crucible and then powdered with other ingredients; and the product so obtained is subsequently mixed in

banyan tree milk and then burnt in a closed vessel by a special process described above under சலசரி, which see.

சலசரி யந்திரம், see சலசரி.

சல சர்ப்பிணி, நீர் அட்டை, water-leech.

சலசல வென வேர்த்தல், உடம்பில் நீர் வழி யும்படி வியர்த்தல், to perspire profusely.

சல சற்பிணி, see சல சர்ப்பிணி.

சல சனம், } தாமரை, lotus flower.
சல சன்மம், }

சல சாதி, நீர் வாழ் பிராணிகள், aquatic creatures.

சலசாமிருத ரசம், சிலா சத்து பற்பம், வங்க பற்பம், சீந்தில் சருக்கரை ஆகிய இவைகளை ஆவாரை விதைச் சாறு, வெள்ளை பூசனிச் சாறு, பால் கீரைச் சாறு இவைகளால் மும் மூன்று தடவை பாவனை செய்து, மேகக் கிருச்சிரத்திற்காக கற் கண்டுடன் சாப்பிடும் ஓர் ஆயுள் வேத மருந்து, an Ayurvedic Medicine prescribed for stricture of urine from venereal causes. It is prepared by grinding calcined silajat, lead, moon-creeper salt, with juices of the plants viz,—seed of tanner's cassia, ash pumpkin and milk-greens three times respectively, and then rolled into pills.

சல சிகிச்சை, தண்ணீரைக் கொண்டு நோய் களைக் குணப் படுத்தல். இது மாந்திரீகத் தாலும், வைத்தியத்தாலும் செய்யலாம், the use of water in treating diseases i.e., water cure. It may be done either by giving medicinal or magical treatment. Hydrotherapy or Hydropathy. See சல மாந்திர வைத்தியம்.

சல சிராவம், பித்தக் கோளாறினால் வெள் விழிக்கும், இமைக்கும் சந்திக்கும் நடுவே சிவந்த நீர் ஒழுக்கை யுண்டாக்கும் ஓர் கண்ணோய். இதனால் கண் சிவத்தல், வீக்கம் முதலிய குணங்களை யுண்டாக்கும். இது அசாத்தியம், a form of conjunctivitis in which a secretion of thin, reddish watery fluid appears at the joining of the eyelids with the white of the eye. It is marked by inflammation, and swelling of the eye. It is due to the deranged action of bile (humour) and is considered incurable—Purulent conjunctivitis.

சல சிலேட்டுமம், ஒருவகை சிலேட்டும நோய். இதனால் அதிதாகமுண்டு தடிப்பாய் ... நீரிறங்கல்; அழற்சி, குரற் கம்மல், கோழை விழல் முதலிய குணங்க ளுண்டாகும், a phlegmatic disease characterised by intense thirst, frequent discharge of thick urine, inflammation and soreness of throat, expectoration etc.

சலசீட மறு, மூளையில் மண்டை நீர்க் கோர்வை யால் ஏற்படும் புள்ளி, a meningeal streak or cerebral spot — Tache meningeale alias Tache meningitique.

சலசீடம், கபால நீர்க் கோர்வை, an accumulation of fluid within the cavity of the cranium; water in the head—Hydrocephalus.

சலசீடவ, தலை நீர்க் கோர்வை சம்பந்தமான, pertaining to the water in the head — Hydrocephaloid.

சல சீழ்க் கோர்வை, see சலச் சீழ்க்கோர்வை.

சல சூகரம், கடற் பன்றி, sea-hog; 2. முதலை, crocodile.

சலசூ கன்னி, தாமரைக் கிழங்கு, root of the lotus flower.

சல சூசி, நீரட்டை, water-leech.

சல சூட்சம், பாத ரசம், mercury.

சல சூத்திரம், நீ ரிறைக்குங் கருவி, water-pump: 2. தண்ணீர் கொண்டு போகும் யந்திரம், a machinery or contrivance to convey water—Hydraulics.

சல செந்து, நீர் வாழ் செந்து அல்லது பிராணி, water creature or animal; 2. மீன், fish.

சல சேகம், தண்ணீரைக் கொண்டு நோய்களை குணப்படுத்தும் ஓர் சிகிச்சை, treatment of diseases with application of water. See சல சிகிச்சை.

சல சோதனைக் கருவி, தண்ணீர் இருக்கு மிடத்தை சோதிக்கும் ஓர் சூத்திரக் கருவி, an instrument for detecting the presence of water—Hydroscope.

சலச் வன், புட்ப ராகம், topez.

சலச் சீழ்க் கோர்வை, மூத்திர தாரைக் கானத்தில் மூத்திரமும் சீழும் சேர்ந்திருத்தல், a collection of urine and pus in the ureter—Uropyoureter.

சலச்சுழ லுள்ளோன், சுழல் வண்டு, beetle found whirling in water.

சலஞ் சலம், இது ஓர் வகை உயர்ந்த வலம் புரிச் சங்கு. இது சாதாரணமாய் 1000 வலம் புரிச் சங்குகளின் இடையேயுள்ளது. இதன் சிறப்பைப் பற்றி தமிழ் நூற்களாகிய சிந்தாமணி முதலியவைகளில் சொல்லி யிருப்பினும் ஒருவரும் கண்டாரில்லை. இதற்கு லட்ச ரூபாயும் மதிப் பிடலாம், an abnormal Valamburi chunk of super-eminent quality said to be found surrounded by 1000 ordinary Valamburi chunks (chunks with their spiral openings to the right). Although its peculiarity is dealt with in Chintamani and various other Tamil treatises, no one ever seemed to have witnessed or identified it. It is said to possess exceptional value; and is sometimes valued even to a lakh of rupees.

சலஞ் சாதித்தல், சாதனை செய்தல், to make a determined practice; 2. விடா முயற்சி, persistent practice.

சலஞ் சியல், ஓர் மூத்திர ரோகம், a variety of urinary disease—Polyuria.

சலணி, வால் மிளகு, tail pepper—Piper cubeba; 2. திப்பிலி, long pepper — Piper longum.

சலத சங்கதி, மாந்தாசம், cloud; 2. தண்ணீர் சம்பந்தம், relating to water.

சலதம், தண்ணீரிலுள்ள இரண்டு பூதியங்களில் ஒன்று, one of the two elements in water, i.e. hydrogen.

சல தலம், அரச மரம், peepul tree— Ficus religiosa.

சல் தவம், அரக் காம்பல், red Indian water lily—Nymphae rubra.

சல தவளம், தண்ணீரைப் போன்ற வெண்ணிறம், white like water.

சல தாகமம், மழைக் காலம், rainy weather.

சல தாரை, மூத்திரத் துவாரம், the urinary passage—Urethra; 2. சாக்கடை, drain.

சல்தாரை ஒடுக்கம், மூத்திர தாரை குறுகிப் போதல், narrowing or stricture of the urethra.

சலதாரைத் தாபம், see சலதாரை யழற்சி.

சலதாரை நோய், see சலதாரை ரோகம்

சலதாரைப் புண், மூத்திர நாளத்தில் திரிதோஷத் கோளாறினு லுண்டாகு விரணப் புண், an ulcer in the urinary apparatus due to the derangement of the three humours; ulceration of the urinary passages—Urelcosis.

சலதாரைப் போக்கு, மூத்திர தாரையில் ஏற்படும் சீழ் ஒழுக்கு, a purulent discharge from the urethra — Urethroblenorrhea, 2. மூத்திர தாரையி லுண்டாகும் இரத்த வொழுக்கு, oozing of blood from the urethra — Urethrostenosis; 3. மூத்திர தாரையின் அதீத வொழுக்கு, an abnormal discharge from the urethra—Urethrorrhea.

சல்தாரை யழற்சி, மூத்திர தாரையி லுண்டாகும் வேக்காடு, inflammation of urethra —Urethritis.

சலதி, கடல், sea.

சல திப்பிலி, நீர்த் திப்பிலி, a species of long pepper—Commelyna salicifolia.

சலதோஷ சுரம், நீர் கொள்ளுவதினு லுண்டாகும் சுரம், fever as a result of an attack of cold.

சல தோஷம், நீர்க்கொள்ளல், an ailment or indisposition occasioned by cold: 2. சளிப்பு, nasal catarrh; 3. நீர்க் குற்றம், defects of water.

சல தோத்திரன், பதினெட்டு வகை மேக நோய்களி லொன்று, one of the 18 kinds of venereal diseases.

சலத் தம்பம், நீர் மேல் கிடத்தல், நடத்தல் அல்லது மிதத்தல். இது நீரி னியல்பை தடுத்தலா லுண்டாகும் வித்தை, stopping, walking or floating on water. This is an art of counter-acting the yielding nature of water. This can only be accomplished through Yoga practice or by merely suspending breath; 2. நீர் மேல் நடத்தல், the art of walking on the surface of water.

சலத் தம்ப வாதம், நீர்த் தாரையும், மலத் துவாரமும் தாக்கப்பட்டு, மல சலம் வெளி வரும் போது தடுத்து வருத்தத்தை யுண்டாக்கு மோர் வாத நோய். இதனால் வெடித்த புண்ணிற் காணும் வலியைப் போல் மல மூத்திரம் கழியும்போ துண்டாகும், a nervous affection in which the urethra and the rectum are chiefly affected. It is attended with extreme pain like that experienced in fissure, especially when

answering or responding to the calls of nature; 2. நீர் கடுப்பு, painful discharge of urine—Dysury.

சலத் தம்ப வாயு, வாயுக் கோளாறினால் மூத்திராதி தடைபட்டு வேதனை யுண்டாக்கு மோர் நோய், a kind of flatulence marked by suppression of feces and urine followed by extreme pain due to the derangement of Vayu (humour) in the system.

சலத் தம்பனம், see சலத் தம்பம்.

சலத் தம்போதரம், (சலம்+தம்பம்+உதரம்), அடிவயிற்றில் நீர் கட்டுவதனால் உண்டாகும் ஓர் பாண்டு, a collection of watery or serous fluid into the abdominal cavity of the body—Abdominal dropsy.

சலத் தாரா நீரில் வாழும் தாரா, water-duck.

சலத் திராசம், சலபய ரோகம், dread of water which is a characteristic symptom of canine madness — Hydrophobia. See சலத் துவேச ரோகம்.

சலத்துப் பிருதிவி, கற்பூர சிலா சத்து, ammonia iron alum.

சலத் துவாரம், சல வாயில், the mouth of urinary canal—Orificium urethrae.

சலத் துவேஷ ரோகம், பேய் நாய் கடியினால் சன்னி ஏற்பட்டுத் தண்ணீரைக் கண்டால் மனங் கலங்கி வெறுப் புண்டாகி, நாய் போற் குலைத்து தொண்டை யடைத்து மரணத்தை யுண்டாக்கும் ஓர் விஷ நோய், a disease caused by the introduction of poison into the system, following the bite of a mad dog. The patient barks like a dog and during the incubation period and dies being exhausted or suffocated from spasm of the throat.

NOTE—It is usually a rabies in man. It is a specific infectious disease communicated to man by a bite of an infected animal especially dogs and wolves. It is believed to be due to some micro-organism which is as yet undiscovered. One of the characteristics of the disease is an aversion to or inability to swallow liquids because of the choking and spasmodic catching of breath with increased tetanic spasms especially of the muscles of respiration and deglutition.

The disease begins after an incubation period of from one to six months with its characteristic symptoms — malaise, depression of spirits and swelling of the lymphatics in the region of the affected wound, fever, mental derangement, vomiting, profuse secretion of a sticky saliva albuminaria etc. The disease, in the course of 2–5 days, is generally fatal.

சல நகுலம், நீர் வாழ் கீரிப் பிள்ளை, an aquatic animal resembling the weasel—Otter.

சல நிதி, கடல், sea, ocean; 2. see கடல் படுதிரவியம்; 3. முத்து, pearl; 4. மாகடற் பிறந்த கோதை, Lutchumy as born out of the ocean.

சல நீலி, வெலம்பாசி. இது தண்ணீரின் அடியில் முளைக்கும். இது குளிர்ச்சி யானதால் தலையில் தேய்த்து முழுகுவ துண்டு, a kind of moss or a species of lichen found grown at the bottom of running waters. It possesses cooling powers and so, it is rubbed on the head before taking bath —Chara corallina.

சல நோய், மூத்திர சம்பந்தமான வியாதிகள், uriuary diseases.

சலந்தி, ஓர் செருந்தி, pear-tree — Ochna gamblei.

சலந் திரட்டி, கொற்றான், air-creeper—Casythu filiformis; 2. பெருங் கட்டுக் கொடி, a creeper which congeals water — Cocculus villosus.

சல பத்திரம், அரச மரம், peepul tree—Ficus religiosa.

சல பந்தகம், நீர் நிலை, stagnant pool of water; 2. தண்ணீர் இருப்பதைக் கண்டு பிடிக்கும் கருவி, an instrument for detecting the presence of water — Hydroscope; 3. வாய்க் கால், channel; 4. கழி, back-water.

சலபு..., விட்டில் பறவை, locust; 2. திப்பிலி, long-pepper.

சலபய ரோகம், பேய் நாய்க் கடியா லேற்படும் நோய். See சலத் துவேச ரோகம்.

சல பரீட்சை, தண்ணீர் சோதனை, hydrostatic test; 2. மூத்திர சோதனை, urine test.

சல பாஷாணி, கட்டுக் கொடி, coagulating creeper—Cocculus villosus.

சல பாதை, மூத்திர வேதனை, urine trouble; scalding sensation while urining; a crisis in the free discharge of urine.

சல பாராவதம், நீர்ப் புறா, water-dove.

சல பானம், தண்ணீர் குடித்தல், drinking of water.

சல பித்தம், see சல பித்தீதம்; 2. மூத்திரத்தில் கலந்த பித்தம், presence of bile in the urine; 3. நீர் கலந்த பித்தம், watery bile.

சல பித்தீதம், நெருப்பு, fire.

சல பிப்பிலி, நீர்த் திப்பிலி, see சல திப்பிலி.

சல பீசம், பீடுக்கில் நீர் சேருதல். இதை தமிழில் ஓத மெனச் சொல்வர், a circumscribed collection of fluid in the scrotum—Hydrocele.

சல பீஜம், see சல பீசம்.

சல பீனசம், மூக் கொழுக்கு, catarrh of the nose; coryza.

சல புட்ப பலாவர், வெளித் தாமரை, lotus growing outside water; 2. ஆகாச தாமரை, sky lotus—Plantago aquatica.

சல புட்பம், நீரில் முளைக்கும் பூ—தாமரை அல்லி முதலியன, flowers grown on water as lotus, water-lily, nymphae lotus etc; 2. மீன், fish; 3. இலுப்பை, honey tree—Bassia longifolia; 4. வெளித் தாமரை, lotus genus. See சல புட்ப பலாவர.

சல பேதி, நீர்ப் பேதி, watery motion; 2. தண்ணீரை பேதிக்கக் கூடியது அதாவது கட்டுக் கொடி, coagulating creeper—Cocculus villosus.

சலபேதி கட்டல், தண்ணீராய் போகும் பேதியை மருந்தினால் தடுத்தல், to prescribe medicine for arresting watery diarrhoea.

சலபேதிக் கிழங்கு, பேதிக் கிழங்கு, purgative root—Ipomaea purga.

சலபேதி மருந்து, நீராக பேதியாகும் மருந்து, a drastic purgative with watery motion—Hydrogogue.

சலபௌதிகப் பிரிவினை, மூத்திரத்தை பௌதிகப்படி சோதித்து பிரித்தல், a chemical analysis of urine—Urinalysis.

சலப் பஞ்சு, புண்களின் நீர் ஒழுக்கை வாங்கிக் கொள்ளும் ஓர்வித கடற் பஞ்சு, elastic fibrous sea substances used for absorbing discharged fluids from wounds.

சலப் பரீட்சை, மூத்திரப் பரீட்சை, examination of urine; urine test; 2, தண்ணீர் சோதனை, see சல பரீட்சை.

சலப் பறவை, நீர்ப் பறவை, water-bird in common.

சலப் பாய்ச்சல், see சலக் கோர்வை.

சலப் பிசாசு, அடிக்கடி குளிக்கச் செய்யும்படி தூண்டும் பேய், a demon causing or inducing one to bathe very frequently.

சலப் பிரமியம், see சலப் பிரமேகம்.

சலப் பிரமேகம், அரையாப்புக் கட்டி கண்டு, இதனால், உடம்பு முழுவதும் நொந்து தண்டு பெருத்து, கிம்பி, வெண்ணிறமாய் அல்லது இளநீர் போல் நீரிறக்கும், அன்றியும், வாய் கசந்து, வாந்தி யொடு மயக்கமும், சீதம் விழல், அடிவயிற்றில் பிடுக்கலு முண்டாகும், urinary trouble attended with a venereal bubo. It is marked by pain all over the body, swelling of the penis, white or bluish-coloured urine, bitterness of taste, vomiting, giddiness and abdominal pain followed by mucous discharge in the motion—Gonorrhoea.

சலப் பிரியம், மீன், fish; 2. பன்றி, hog; 3. ஓர் பறவை, a bird; 4. தண்ணீரைக் கண்டாற் பிரிய முள்ளது, that which is attracted by water; 5. பழக்கத்தினால் தண்ணீரைக் கண்டால் குடிக்கவும், குளிக்கவும், நீந்தவும் ஏற்படும் அதிகப் பிரியம், an insane desire through habit in men and women to drink, bathe or swim on seeing the water.

சலப் பிலாவனம், நீர் பெருக்கு, excess of water.

சலப் பிளவை, நீரிழிவினால் ஏற்படும் பிளவை, carbuncle arising from diabetes.

சலப் பீனசம், மூக்கின் நீரொழுக்கு, catarrh of the nose; coryza. See சல பீனசம்.

சலப் புண், பனி வெடிப்பைப் போன்ற சேற்றுப் புண், water-bite resembling frost bite.

சலப் புளிப்பு, மூத்திரப் புளிப்பு, urine acid.

சலப் பூடு, நீர்ப் பூடு, any aquatic plant.

சலப் பை, சலக் குடர், urinary bladder; 2. சலக் குரு, any little sac with water—Vesicle; 3. கொப்புளம், blister; boil; 4. தண்ணீர்ப் பை, water-bottle or sac.

சலப் பைக் கல், மூத்திரப் பையில் கிடக்கும் கல், stone in the bladder—Vesical calculus.

சலப் பைக் குரிய, மூத்திரப் பைக் குரிய, pertaining to the bladder—Vesical.

சலப் பைத்தியம, சலபய வெறி, a morbid and unnatural dread of water—Hydrophobia; 2. நீரில் முழுகி தற்கொலை புரியவாம்.

என்ற எண்ணம் முழிக்கும் ஓர் பைத்தியம், insanity marked by a tendency to commit suicide by drowning—Hydromania.

NOTE.—It is a disease produced by the bite of a mad animal, especially of a mad or rabid dog or wolf. One of the characteristics of this disease is an aversion to or inability to swallow liquids due to choking and spasmodic catching of the breath.

It is the effect of the poison imparted to man by direct injection due to the bite of the infected animal mentioned above.

சலப்பை யழற்சி, மூத்திரப் பைக்கு ஏற்படும் தாபிதம், inflammation of the urinary bladder.

சலப் போக்கு, மிகுதியாக அல்லது அடிக்கடி சிறுநீர் போகுதல், excessive or frequent discharge of urine as in diabetes—Urorrhagia; 2. உடம்பி னின்று நீர் வெளிப் படல், escape of water from the system; 3. நீர்ப் போக்கு, passing of water; outlet of water; water-course.

NOTE.—This may refer to either the habitual discharge of an excessive quantity of urine with or without sugar; and in the case of former, it is known as Diabetes mellitus and in the latter, Diabetes insipidus, which is a chronic disease marked by intense thirst. This complaint comes on very insidiously and is prevalent among well-to-do persons prone to take rich meals.

சல மகோதரம், வயிற்றில் துர்நீர் சேரும், ஓர் வகை மகோதரம். இதனால் உடம்பு முழுவதும் நீர்க் கோர்த்து, மஞ்சள் நிற மடைந்து, முதுகும், வயிறும், வீங்கி இலிங்கம் தளர்ந்து, தாதுக்கள் பல வீனப் பட்டு, தேக வழலை, ஆண் குறிச் சோர்வு, சித்தக் கலக்கம் முதலிய குணங்க ளுண்டா கும், (பூசி. 800), an enlargement of the abdomen from dropsy. It is attended with morbid accumulation of watery or serous fluid into the serous cavities of the body, especially in the abdominal cavity. It is characterised by yellow colour of the skin, swelling of the back and the belly, want of erection of the penis, relaxation of the genitals, and loss of vitality, and agitation of mind—Ascites.

NOTE—It is due to the local inflammation by the disease of the heart, kidney or liver. It is marked by fluctuant, painless, swelling of the abdomen, which gives a dull sound on percussion. The fluid in ascites is clear and yellow in colour. It coagulates on standing.

This should not be confounded with swelling of the abdomen just before the death in which case there is a flow of *serum* into the peritoneal cavity.

சல மஞ்சரி, கெந்தி, வெங்காரம், காந்தம், முதலியவைகளைக் கொண்டு தயாரித்து, பாண்டு கவிசை முதலிய சல ரோகங்களுக்கும், உடம்பில் பல விடங்களில் துர்நீர் சேரும் நோய்களுக்கும் கொடுக்கு மருந்து, a medicine prepared with sulphur, borax, magnet etc.: and prescribed in cases of dropsy, ascites, and other diseases of morbid accumulation of serus fluid into the various cavities of the body.

சல மஞ்சள், மஞ்சள் நிற மூத்திரம், high-coloured yellow urine.

சல மடைப்பு, மூத்திரத் தாரை சுருக்கத்தினால் ஏற்படும் அடைப்பு, obstruction to urine due to spasmodic stricture of the urethra or channel through which the urine passes.

NOTE.—This obstruction to urining may be caused in different ways:—

(1) by the urinary calculus (stone or gravel) lodged in the bladder blocking the passage of urethra.

(2) by the abnormal narrowing of the urethra due to contraction from various causes.

(3) by the structural changes in or about the urethra.

(4) by neoplasmic growth or muscular spasm.

(5) by a permanent peculiar organic structure of the urethra.

(6) by a sediment deposited in the urine.

சல மண்டலி, புலிமுகச் சிலந்தி. இது மேலெல் லாம் மொசு மொசுப்பான மயிரையுடைய ஓர் விஷப்பூச்சி. இது உடம்பில் பட்டால் மிக்க வியர்க்கும். இது கடித்தால் பிழைப்பது கஷ்டம். உடம்பு பனிக் கட்டியைப் போல் குளிர்ந்து, விஷம் ஏற ஏற பலமும் தாதுவும் குறைந்து மரணத்தை யுண்டுபண்ணும். எம் மருந்தும் பூரணமாக குண படுத்துவ தென் பது சந்தேகம். வாழைச் சாறு 2 3. மணிக் கொரு தடவை கொடுத்து வர, ஒரு வேளை நிருமெனச் சிலர் அபிப்பிராயம், a kind of hairy spider the bite of which is considered to be very poisonous causing profuse perspiration—Tarantula

spider (Poecilotherio formosa). The bite always ends fatally, after causing extreme chillness of the body and exhaustion, as the virus spreads through the system. No medicine can effect a possible cure. It is supposed that the juice of the plantain stem, given every 2-3 hours internally may bring on some relief.

சல மந்தகம், தலையில் நீர்க் கொள்ளல், accumulation of fluid within the cavity of the cranium; water in the head—Hydrocephalus.

சல மந்த பேதி, மாந்த நோயினால் குழந்தைகளுக்குத் தண்ணீராக கழிச்சல் உண்டாகும் ஓர் நோய், a form of watery diarrhoea in children due to indigestion.

சல மந்திர வைத்தியம், தண்ணீருக்கு மந்திர சக்தி கொடுத்து அதையே மருந்தாக உள்ளுக்குக் கொடுத்தும் அல்லது மேற் பூசியும் குணப் படுத்தும் ஓர்வித சிகிச்சை, treatment of diseases by administering internally the magic water or by external application—Hydropathy.

NOTE.—It is commonly known as water-cure. Particularly, it is a system of treatment which is said to cure all diseases by the use of such water, if it is only satisfactorily done. This can only be done by psychiatrists. This, no doubt includes Hydropathy although it is a mode of treating diseases by the copious and frequent use of merely pure water both internally and externally.

சலமரம், see கல் துப்பு.

சலமர்ச்சனை, முடி மயிர், tuft of hair on the crown of head.

சல மலங் கழித்தல், இரண்டுக்குப் போதல், to go to stool.

சல மலம், கடற் பஞ்சு, sponge; 2. மல மூத்திரம், urine and feces; 3. கடற் பாசி, sea-moss.

சல மறிப்பு, மூத்திரம் தடைபட்டு வெளி வராதிருத்தல், partial or complete suppression of urine from some obstruction—Urodialysis.

சல மாந்தம், see சல மந்த பேதி.

சல மார்ச்சாரம், நீர்ப் பூனை, water-cat; otter—Lutra.

சல மானசம், நீர் மனிதன், சமுத்திரத்தில் வாழும் ஓர் மிருக சாதி, an animal found in the sea—Helicore dugong.

சல மிஞ்சி, மூத்திரத்தில் அதிகமாக நீர் கலந்தன்ளது. இது ஓர் குண்டிக்காய் ரோகம், a disease of the kidneys in which the urine is found to contain excessive amount of water—Hydruria; 2. நீர்த் தன்மையை அதிகமாக வுடையது, anything contained more of fluidity; 3. அதிகமாக நீர் உடையது, containing more of water—Hydrous.

சல மிறங்கல், மூத்திரம் கீழ் நோக்கல், descent of urine.

சல மீறுதல், மூத்திரம் அடக்க முடியாமை, inability to retain the urine—Uracratia.

சல மூத்திரம், மூத்திரத்தில் அதிக நீர் சம்பந்தமான ஓர் வகை நீரழிவு, a diabetes with excess of water in the urine—Hydruric diabetes.

சல மூர்த்திகை, ஆலாங் கட்டி, hail-stone.

சல மூலம், மூல நோயி னின்று குதவாயிலின் வழியாக சதா நீர் ஒழுகப் பெற்ற ஓர் வகை மூலம், a form of piles attended with constant discharge through the anal orifice.

சல மேகம், மூத்திரம் தெளிந்தும், வெளுத்தும், மிகுந்தும், சிறுகச் சிறுக இறங்கும் ஓர் வகை மேக நோய், a venereal disease in which urine is sometimes clear or of a milky appearance or found in excess or flowing out by drops—Albuminaria; 2. நீர் கொண்ட மேகம், an appearance in the sky known to presage rain—Water-gall.

சலமை, குளிர்மை, coldness; 2. சன்னி, apoplexy.

சல மொட்டிக் கொட்டை, நீரடி முத்து, hydrogogue nut—Hydnocarpus venenata.

சலம், நீர், water; 2. புண்ணின் நீர், fluid discharge from a sore or ulcer; 3. மூத்திரம், urine; 4. விலாமிச்சு, a fragrant grass; 5. வெட்டி வேர், cuscus root; 6. சீழ், pus; 7. அசைவு, motion; 8. முட்பன்றி முள், porcupine's quills; 9. நடுக்கம், trembling; 10. குளிர், coldness; 11. தணியாக் கோபம், unabatable anger; 12. இயங்கு திணை, moveable.

சலம் கூட்டல், தண்ணீர் சேர்த்தல், to add water; to dilute.

சலம் சொட்டல், தண்ணீர் துளி துளியாய் விழல், water or any fluid falling in drops; 2. மூத்திரம் சொட்டுதல், dribbling of urine.

சலம் பாய்தல், உடம்பி லேதாவதோ ருறுப் பில் நீர் தங்குதல், collection of morbid fluid in any organ of the body; 2. இமை யைப் பற்றிய ஓர் நோய், a disease of the eye-lid. See நீர்ப் பாய்ச்சல்; 3. மூக்கி னின்று நீர் வடிதல், an increased flow of mucous from the nose—Catarrh; coryza.

சலம் பாய்ந்த தலை, தலையில் அர்நீர் சேர்ந்து பருத்து, நெற்றிப் பக்கம் முன் பிதுங்கி, மூளை வற்றி, பலயீனப்பட்டு, சில சமயம் வலிப்புக்காணும் ஓர் நோய், a disease marked by enlargement of the head, with prominence of the forehead, atrophy of the brain, mental weakness with convulsion at times. It is due to abnormal increase in the accumulation of cerebral fluid from the ventricles—Hydrocephalus. See சல மந்தகம்.

சலம் பிடித்தல், சீழ் கொள்ளல், formation of pus; suppuration.

சலம் பிதுக்கல், கட்டியி னின்று சீழ் ரத்தம் வெளிப் படுத்தல், to squeeze out pus from a boil, abscess etc.

சலம் பிரிதல், மூத்திரம் பிரிதல், urine released from the suppression, as in cholera.

சலம் புரி, சங்கு, conch.

சலம் பூராத் துணி, தண்ணீருக்கு நனையாத துணி, any cloth rendered water-proof.

சலம் பெய்தல், மூத்திரம் பெய்தல், to make water; urining; 2. தண்ணீர் கொட்டல், to pour water; 3. தண்ணீர் கூட்டல், to add water.

சலம் பெருகல், மூத்திரம் அதிகமாகுதல், more secretion of urine; 2. பிடுக்கில் அதிகமாக நீர் சேருதல், collection of more fluid in the scrotum.

சலம் பெருகு மேகம், மூத்திரம் அதிகமாகப் போகும் மேக நோய் அதாவது நீரிழிவு, a disease characterised by an excessive and morbid discharge of urine — Diabetes insipidus.

சலம் பெருக்கல், தண்ணீரை அதிகப்படுத்தல், to weaken by an admixture of water; to dilute.

சலம் போகாமை, நீர்க் கட்டு, suppression of urine.

சலம் போக்குதல், மூத்திரக் கட்டை விடுவித் தல், relieving one from the suppression of urine.

சலம் விடல், see சலம் பெய்தல்; 2. நோயா ளிக்கு நீராட்டல், to give a bath to a convalescent.

சலம் வைத்தல், சீழ் கொள்ளல், to suppurate.

சல யந்திரம், மருந்தை ஒரு பாத்திரத்தில் வைத்து கொதிக்கும் வெந்நீரின் மேல் வைத்து சூடேற்றி பக்குவப்படுத்து மோர் வகை குதநிரம், a contrivance which serve to regulate the process of imparting heat to a vessel containing medicine by exposing it to steam or placing just above the boiling water.

சல யபத்தினி, செம்பை, bastard sensitive plant—Sesbania aegyptiaca alias Coronilla sesban.

சல ரசம், உப்பு, common salt; 2. தண்ணீ ரின் சத்து, essence of water.

சல ராகம், வெண் சிவப்பு, light red colour.

சல ராசன், தங்கத்தை தண்ணீராகச் செய் யும் ஓர் கூட்டு மருந்து, a mixture capable of dissolving gold — Universal solvent, (*In English Medicine*). It literally means kingly water (Aqua regia) referring to a mixture of nitric and hydrochloric acids.

சல ராசி, கடல், ocean; sea.

சல ருகம், தாமரை, lotus — Nelumbium speciosum.

சல ரூபம், தண்ணீர் மயம், thin as a liquid; watery; 2. தண்ணீரைப் போன்றது, that which is watery; liquiform.

சலருப வுளமாந்தை, ஓர்வகை உள் மாந்தை, இதனால் நெஞ்சுவலி, விலாவலி, அடிவயிறு வீக்கம், இருமல், மலச்சிக்கல் முதலிய குணங்களைக் காட்டும், a kind of internal abscess attended with pain in the chest, and on the sides, swelling of the abdomen, cough, constipation etc.

சல ரோக சஞ்சீவி நெய், தமிழ் வைத்தியத்திற் கூறும் மருந்து நெய். இதனால் ருதுவாகாப் பெண், ருதுவாகும், கருப்ப முண்டாகும், கபம், மூலம், நீரிழிவு போம், (*In Siddha Medicine*), a preparation of medicated ghee prescribed for absence of maturity in females, conception, and also in cases of phlegm, piles and diabetes.

சல ரோக பண்டிதன், மூத்திர ரோகத்தில் பயிற்சி யுள்ளவன், a physician who is a specialist in urinary diseases — Urologist.

சல ரோகம், மூத்திர வியாதி, urinary disease; 2. நீ ரிழிவு, diabetes; 3. ஓர் கண்ணோய், an eye disease; 4. பாண்டு, dropsy

சல ரோகம் போக்கி, நீரிழிவைக் குணப்படுத்து மருந்து, a cure against diabetes. See ஆவாரைக் கிழங்கு.

சல ரோக வீக்கம், மூத்திர நோயினால் ஏற்பட்ட வீக்கம், swelling in urinary disease—Renal edema.

சல லியம், முட் பன்றி, porcupine.

சல வகத்தி, சீமை யகத்தி, ringworm shrub—Cassia alata.

சல வகம், இலவம் பிசின், gum of silk cotton tree—Bombax malabarica; 2. மூத்திரப் பை, urinary bladder.

சலவகு, see சல வகம்.

சல வடைப்பு, சிறு நீ ரடைப்பு, suppression of urine—Anuria; 2. மூத்திரக் கிரிச்சரம், stricture of urine; 3. மூத்திரப் பையில் உண்டாகும் கல்லினால் ஏற்படும் மூத்திர அடைப்பு, obstruction in the urethra due to stone in the bladder.

சல வண்டல், நீர் வண்டல் sediment of water; 2. மூத்திரப் பையில் தங்கும் வண்டல், sediment of the urine deposited in the bladder—Uropsammus.

சலவப் பிரமேகம், வாத பித்த சிலேட்டுமப் பிரகோபம் அடைவதினால் ஏற்படும் மூத்திர நோய்கள், urinary diseases from venereal causes due to the excited condition of the three humours in the system.

சல வர்த்தன காரி, இரத்தத்தி லுள்ள நீரை அதிகப் படுத்து மருந்து, drugs or medicines that increase or promote the fluidity of blood; 2. மூத்திர வர்த்தன காரி, a medicine that promotes the secretion of urine—Diuretics.

சல வழுக்கை, நீர் வழுக்கை, an aquatic plant. See பிரமி வழுக்கை.

சலவன், சலவன் பன்றி, a burrow-pig; 2. ஆண் அல்லது பெண் பன்றி, boar or sow; 3. விதை யடித்த பன்றி, gelded boar.

சல வாகாரம், குளிர் தாமரை, sky lotus—Plantago aquatica.

சல வாகி, மூத்திர தாரை, urinary passage—Urethra.

சல வாசயம், சலக் குடர், urinary bladder—Vesica urinaria.

சல வாண்டம், கொப்புளம், boil, so called from its resemblance to a bubble

சல வாதாரம், see சல வாகாரம்.

சல வாதி, see சல வாதை.

சல வாதை, சிறு நீர் விடுதல், passing urine; 2. மூத்திரம் பெய்தற் குரிய கஷ்டம், difficulty in passing urine—Dysuria.

சல வாயசம், நீர்க் காக்கை, water crow.

சல வாயு, தண்ணீரி லிருக்கும் ஓர் வாயு, the gaseous elementary substance that exist in water—Hydrogen; 2. சதுப்பான நிலங்களில் உலாவும் நெருப்புக் கல் ஆவி, a combustible gas that flirts about in marshy places—Methane or Marsh gas.

சல வாயு, நீராவியைப் போன்ற இவ் வாயுவானது காலம், இடம், பொருள், முதலியவற்றின் சம்பந்தத்திற்கு தக்கவாறு பல வகையிலும் திரிபடையும். சமுத்திர தீரங்களிலும், பெரிய மடு, ஆறு, ஏரிகள் முதலியவைகளின் அருகிலும் இந்த வாயு உண்டாகிப் பெருகி, ஆகாயத்தில் உள்ள காற்றில் கலந்து விடும். ஆகவே, மழைக்கு முன்னதாக வீசும் குளிர்ந்த காற்றுதான் இவ் வாயு, the element hydrogen gas resembling steam. It is found combined in several ways according to its relation with the time, place, substances, etc. It is found free in nature near the sea-shores, big ponds, rivers, lakes etc. where it rises and mixes with the atmospheric air. The cold air or breeze experienced just before the setting in of the rain is found to contain this hydrogen gas in a free state.

NOTE.—It is also present rarely in all organic compounds, and in many volcanic, as well as ordinary gases. It is also said to occur free in salt-beds, in some meteorites, in the sun's chromosphere, in nebulae and in certain stars.

சல வாழை, மீன், fish so called from its resemblance to a plantain fruit.

சலவிட்ட கோவல், விதை யடித்த சேவல், capon; a young castrated cock.

சல விந்து, நீர்த் துளி, water-drop; 2. நீர்த்த விந்து, watery semen.

சல வியம், செஞ் சந்தனம், red sandal—Pterocarpus santalinus.

சல வியாதி, மூத்திர சம்பந்தமான நோய், urinary disease.

சல வியாளம், நீர்ப் பாம்பு, water-snake.

சல விரேசனம், நீர் அதிகமாகப் போதல், excessive discharge of urine.

சல விரேசினி, தண்ணீர் தண்ணீராய் பேதியாகும்படி செய்யு மருந்து, a drastic purgative producing watery motion; 2. சலக் கழிச்சல், அதாவது மூத்திரத்தை அதிகப் படுத்து மருந்து, a medicine which augment the urinary discharge—Diuretic.

சல வீக்கம், மூத்திர வீக்கம், swelling containing urine—Uroncus.

சல வீழ்ச்சி, அருவி, water-fall.

சலவு, see சலவுகம்.

சலவுகம், ஆண் குறி, the genital organ of a male; 2. இலிங்கம், the penis.

சல வுப்பு, கல் லுப்பு, insoluble sea-salt; 2. சோற் றுப்பு, common salt; 3. முடியண்டப்பட்ட டுப்பு, a salt prepared from the three months foetus by a secret process; 3. மூத்திர வுப்பு, uric salt.

சல வுறுப்பு, மூத்திர வுறுப்புகள், urinary organs; 2. மூத்திரப் பை, urinary bladder.

சல வுற்பத்தி, கற் பாஷாணம், a mineral poison found or formed at the bed of rocks.

சல வுஞ்சை, கரு வாகை, black sirissa—Albizzia odoratissimus.

சல வேடம், பரங்கி பாஷாணம், a medicinal mineral generally referring to mercurious sublimate or corrosive sublimate.

சலவை, வெண்மை யாக்கல், to make white; the process of whitening; 2. பற்ப மாக்கல்; to calcine into a white powder; 3. சீதளம், cold; 4. விதை யெடுத்தல், castration.

சலவை கெந்தி, சுத்தி செய்த கந்தகம், purified sulphur.

சலவைக் கல் பள பளப்பாகச் செய்யக் கூடிய கல். இதைத் தொட சில்லெனக் காட்டும் இதில் வெள்ளை கருப்பு என இரு வகைத்து. any stone which when polished is felt cold to the touch; and it is generally applied to marble consisting mainly of two varieties viz.—black and white stone i.e. horn blende and marble stone; 2. சூரியக் காந்தக் கல், jasper.

NOTE.—Literally, it means cold stone. The term is also applied to horn blende, because it is a silicate usually of limestone, magnesia, iron etc.

சலவை சோப், சவர்க்காரக் கட்டி, washing soap; 2. உவர் மண் காரம், washing soda.

சலவைச் சூரணம், உழ மண் சத்து, bleeching powder—Calx chlorata.

சல வைத்தியம், நோய் சிகிச்சையில் தண்ணீர் உபயோகம், the use of water in treating diseases—Hydrotherapeutics; 2. தண்ணீரை மந்திரித்து கொடுத்து நோயைக் குணப் படுத்து மோர் சிகிச்சை. இதனால் எல்லா நோயும் குணப் படுமென கருதப் படும், water-cure through Mantric treatment, by application of water. It is a system of treatment which professes to cure all diseases by the use of water—Hydropathy.

சலவை மண், சுத்த மண், purified earth; pure alkaline earth; 2. வெள்ளை மண், white clay; 3. உழ மண், fuller's earth with which clothes are washed.

சலவை யாக்கல், வெண்மையாகச் செய்தல், the process of whitening as in blue vitriol; 2. சுத்தம் செய்தல், (உ-ம்) சரக்கையெல்லாம் சலவை யாக்கல், (கொங்க. வாத காவியம்), purifying or cleansing of drugs.

சல வொழுக்கு, மூத்திர வொழுக்கு, incontinence of urine; 2. கெட்ட நீர் ஒழுகுகை, putrid discharge; discharge of morbid fluid.

சலன சக்தி, அசைவை யுண்டாக்கும் சக்தி, motor power i.e. power capable of producing or imparting motion.

சலன நரம்பு, அசைவுக்குக் காரணமான நரம்புகள், nerve responsibile for producing motion—Motor nerve; 2. கால் நரம்பு, nerves of the leg; 3. சலன நரம் பிழை, nerve fibre or motor fibre; 4. இரத்தக் குழாய்களை சுருங்கவும், விரியவும் செய்யும் நரம்பு, the nerve concerned in controlling the caliber of blood-vessels whether as a vasadilator or vasoconstrictor—Vasomoter nerves.

சலனம், அசைவு, motion; 2. காற்று, wind; 3. கால், leg; 4. சஞ்சலம், mental agitation; 5. மானத பூசை, mental worship; 6. வாயு, wind (humour).

சலனன், அசைதலை யுடையது, that which produces motion; 2. காற்று, wind; 3. மனது, mind.

சலனி, திப்பிலி, long-pepper—Piper longum.

சலன், கால், leg; 2. பாதம், foot.

சலாகம், நீர் அட்டை, water-leech ; 2. கல்லுப்பு, crystallised sea-salt.

சலா காரம், சல வாயு, hydrogen gas.

சலாகு, ஊசிக் காந்தம், magnet or load-stone attracting needles ; 2. இரும்பு சலாகு, an iron probe ; 2. சத்திரம் செய்வதில் உபயோகிக்கும் இரும்புக் கருவி அதாவது இரண வைத்தியக் கருவி, surgeon's probe used in operation ; 4. இரும்புக் கம்பி, iron rod ; 5. முட்பன்றி முள், porcupine quill.

சலாகை, தொட்டி பாஷாணம்; a kind of native arsenic ; 2. ஊசிக் காந்தம், magnet attracting needle.

சலாகை, பத்து அங்குல நீளமாகவும், இடையே மெல்லியதாகவும், முனைகள் கூர்மை யின்றி மழுங்கிய தாகவும், அஞ்சன மிடுவதற் குபயோக முள்ளதுமான இரும்பு, செம்பு முதலிய உலோகத்தாற் செய்த நீண்ட தடித்த கருவி. இதை விரணங்களின் ஆழத்தைக் கண்டுபிடிக்க வைத்தியத்தில் உபயோகப் படுத்தப் படும். இது அடியிற்கண்டபடி பல வகைப் படும், a surgeon's probe with which the depth and extent of wounds are traced. It is an instrument made of iron or copper and is about 10" long, slender at the middle and blunt at the two ends. It can also be used for applying collyrium to the eyes. It consists of different kinds as mentioned below :—

1. தூண்டில் முள் சலாகை, fish-hook probe.
2. கரண்டிச் சலாகை, spoon shaped probe.
3. ஆணிச் சலாகை, nail-shaped probe.
4. அங்குசச் சலாகை, goad probe.
5. அஞ்சனச் சலாகை, இட்டுங் கருவி, collyrium probe.
6. கருப்பச் சலாகை, foetus or traction hook.
7. பிறைச் சலாகை, half.moon probe—Urethral bougie.
8. முனை மழுங்கிய சலாகை, a probe with a blunt end—Blunt probe.
9. கயிறு சேர்த்த சலாகை, one with a tape near one end—Eyed probe.
10. கத்திரி சலாகை, a probe with a long pair of scissors — Scissors probe.
11. கம்பிச் சலாகை, a probe of steel wire—Wire probe.
12. கருப்ப சோதனைச் சலாகை, a probe of uterine exploration.

சலாகைச் சோதவை, புண்களில் இருப்புச் சலாகையிட்டு சோதித்தல், examination of a wound with a probe.

சலாகை யிடல், இரும்புச் சலாகை யிட்டு புண் புரை இவைகளை சோதித்தல், applying a probe for examining or exploring a wound, ulcer or cavity.

சலாகை யிட்டுப் பார்த்தல், see சலாகையிடல்.

சலாக்கு, மருந்து, இலேகியம் கிளறும் போதும் அல்லது தைலம் காய்ச்சும்போதும் உபயோகிக்கும் ஓர் வகைத் துடுப்பு, an arrow-like stirring rod used in the preparation of medicine, electuaries and medicated oils.

சலாங்கம், ஓர் நாரை, a species of crane.

சலாங்கு, பொய்யாப் புள், a species of water-bird—Gallinite.

சலா சத்து, சிலா சத்து, bitumen.

சலாசம், உப்பு. இதுவே சல ரசம், salt probably a misnomer for the other word.

சலா சயம், மூத்திரப் பை, (*In Physiology*), a membraneous sac serving as a reservoir for the urine—Urinary bladder.

சலா சலம், பசு, cow.

சலாடு, காய் கறிகள், vegetables.

சலாதங்கன், வாத ரோகி, a rheumatic patient.

சலாதிக்கம், மூத்திரம் அதிகப் போக்கு, abnormal discharge of urine.

சலாத்துதல், குலுக்குதல், to shake as liquid in a bottle.

சலா லோகை, நீரட்டை, water-leech.

சலாற்பு தோஷ்டம், (சல + அற்பு தோஷ்டம்) உதட்டில் சிறு கொப்புளங்களை எழுப்பி அப்புண்ணி னின்று நீர் கசிய அல்லது ஒழுகச் செய்யு மோர் நோய், a disease of the lip marked by small pustules followed by a serous discharge.

சலிகத் திப்பிலி, நறுக்குத் திப்பிலி, the stalk of long-pepper plant.

சலி கந்தம், குங்கிலியம், Indian dammer resin—Shorea robusta.

சலிகம், சறுக்குத் திப்பிலி, see சலிகத் திப்பிலி.

சலிகா, வறட் கண்டி அல்லது ஆடுதின்னாப் பாளை, worm-killer—Aristolochia indica.

சலி குன்மம், சரீரமெலிவுடன் உடம்பை இளைக்கச் செய்யும் ஓர் வகை குன்மம், a kind of dyspepsia followed by emaciation.

சலிகை, நீரட்டை, water-leech.

சலிக் குழை, வச்சிரக் கல், diamond.

சலிணி, see சலனி.

சலிதம், வெறுப்பு, hatred ; 2. இளைப்பு, emaciation.

சலித்தல், சோர்தல், to become tired or exhausted; 2. வெறுத்தல், to hate; 3. இளைத்தல், to emaciate; 4. சல்லடை கொண்டு பிரித்தல், to operate on by a sieve; sifting.

சலி திப்பிலி, } நீர்த் திப்பிலி, water long-pepper.
சலி பிப்பிலி, }

சலிப்பு, see சலுப்பு ; 2. சோர்வு, weariness; 3. வெறுப்பு, digust ; 4. இளைப்பு, emaciation.

சலிலகம், (சலில + அகம்) நீரில் வாசம் அதாவது தாமரை, lit. means water + residence i.e., lotus flower.

சலில சாஸ்திரம், நீரனைவைப் பற்றிய நூல், the science treating of fluids in motion under physical laws—Hydraulics.

சலிலத்துவம், உருக்குகை, fusion; act of melting ; 2. திரவமாக்குதல், to liquify.

சலிலம், நீர், water; 2. திரவம், fluid.

சலினி, திப்பிலி, long-pepper — Piper longum.

சலு, இறைக்கை நீர், handful of water.

சலுகை, அட்டை, leech.

சலுப்பு, சலதோஷம், indisposition occasioned by cold—Catarrh. It is a wrong term for சலிப்பு.

சலூகை, see சலுகை.

சலேசரம், நீர்ப் பறவை, water bird ; 2. மீன், fish.

சலே யந்திரா, கண்டில் வெண்ணெய், an unidentified tree ?

சலேதகம், செங் கழு நீர், red Indian water-lily—Nympae oderata.

சலைத்த மேகம், மழைத் தண்ணீர், rain water as from condensed clouds.

சலை யந்திரம், இரத்தவோட்ட யந்திரம் அதாவது இருதயம், (*In Physiology*); a contrivance serving to produce motion i.e., organ of blood's motion—Heart.

சலோகசம், } see சலிகை.
சலோகை, }

சலோசம், குங்கிலியம்; see சலிகந்தம்.

சலோதிதம், வயல் கெட்டி அல்லது நீர் கெட்டி, river cork or solah pith plant —Aeschynomene aspera.

சலோதயம், பிரசவத்திற்கு முன் பனிக்குடத்து நீர் உடைதல், water-break i.e. discharge of liquor amni, a fluid contained in the womb in which the foetus floats— First presentation.

சலோதர சன்னி பாதம், பாண்டு ரோகத்தோடு கூடிய சன்னிபாத சுரம், typhoid fever as a result of abdominal dropsy.

சலோதரம், (சல + உதரம்) வயிற்றில் குடலுக்கு வெளியிலுள்ள நீர் சேர்ந்து காணும் ஓர் நோய். இதனால் வயிறு பருத்து, மினு மினுப் புண்டாகி நடக்கும்போது வலியுடன் மேலெழும்புவதும் இறங்குவதுமாயிருக்கும். இந் நோய் பேதிக்குக் கொண்ட வுடன் குளிர்ந்த நீர் குடிப்பதாலும் உண்டாகலாம். dropsy of the belly or abdomen, so named from the presence of the water in the water-bearing ducts which are vitiated. The stomach then appears bright and enlarged, sinking and rising when moving attended with pain. If one suddenly drinks cold water immediately after purgative the same results may follow. *C.f.* சல மகோதரம்.

சலோதரரி மணி, பொரித்த வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடல்நுரை, குன்றி வித்து, இந்துப்பு, பெருங்காயம் வகைக்கு 1 பலம், நேர்வாளம் 2 பலம் சேர்த்து செய்த மாத்திரை. இதனால் மாந்தம், உப்பிசம் போம், a medicinal pill prepared by grinding roasted borax, dried ginger, black pepper, long pepper, sea-froth, seeds of jackal jujube, Sind salt and asafcetida of one palam each and 2 palams of croton seed. It is prescribed for indigestion and flatulency.

சலோபம், கூந்தற் பனை, bastard sago palm.

சலோபாதை, (சல + உபாதை) மூத்திரம் பெய்தற்கு கஷ்டப் படல, difficulty in passing urine—Dysuria; 2. மலசல வாதை, a term loosely employed for evacuations by stool, urine and other excrements.

சலோர்க்கம்; } குங்கிலியம், see சலி கந்தம்.
சலோர்ச்சம், }

சலோ வாலம்பனம், நாய், நரி முதலிய வெறி கொண்ட மிருகம், கடிப்பதினால் ஏற்பட்ட பைத்தியம், madness due to the biting of rabid animals such as dog, fox, etc. —Hydrophobia. See சலபய ரோகம்.

சலோற்சம், see சலோர்ச்சம்.

சல்சம், தாமரை, lotus flower.

சல் சலமாதர், வட்டக் கிலு கிலுப்பை, rattle nail-dye — Crotalaria verrucosa alias C. flexuosa.

சல்ய சிகிச்சை, see சல்லிய சிகிச்சை.

சல்யம், see சல்லியம்.

சல்லகண்டம், புறா, dove, pigeon.

சல்லகம், முட் பன்றி, porcupine; 2. நார், fibre.

சல்ல காமிகம், வல்லாரை, Indian pennywort —Hydrocotyle asiatica.

சல்லகி, ஆத்தி மரம், mountain ebony tree—Bauhinia racemosa alias Boswellia serrata: 2. இலவு, silk cotton tree—Bombax malabaricum; 3. இலவங்கம், clove; 4. கருவாப் பட்டை, cinnamon — Cinnamomum zeylanicum; 5 கொசுகு, mosquito; 6. தேள் கொடுக்கி, scorpion sting—Helotropium indicum; 7. வெள்ளைக் குங்கிலியம், white dammer; 8. முள் ளிலவு, red-flowered silk cotton tree; 9. குந்துரு மரம் அல்லது குந்துருக்கம், gum olibanum or Indian copal—Vatera indica; 10. முட் பன்றி, porcupine; 11. தளிர், tender leaf.

சல்லகிகம், see சல்லகிகா.

சல்லகிகா, தேட் கொடுக்கி, see சல்லகி.

சல்லகிதம், விஷ மருதமரம், a variety of murdah tree poisonous in nature—Terminalia genus.

சல்லகு, விளாம் பிசின், gum of wood-apple tree.

சல்லக் கடுப்பு, சீதளத்தால் இசிவுடன் காணும் உடம்பு வலி, pain attended with stiffness in the body due to cold. See சன்னிக் கடுப்பு.

சல்லக் கடுப்பு சுரம், உடம்பு வலியோடு கூடிய சுரம், a kind of fever attended with stiffness and pain in the body.

சல்லடை, தானியம் சலிக்கும் கருவி, இது பெருங்கண் சல்லடை, சிறு கண் சல்லடை யென இருவகைப் படும், a colander used in the kitchen for seporating grain and husks etc. It consists of two kinds viz. strainer and sieve respectively.

சல்லடைக் கண் சவ்வு, சல்லடைக் கண்கள் போன்ற ரந்திரமுள்ள சவ்வு, a membrane with sieve-like cells or apertures—Cribriform membrane.

சல்லடைக் கண்ணறை, சல்லடையின் துவாரக் கண்கள், holes in the sieve; 2. புண்ணின் துளை, sinus or cell in a wound; 3. கண்ணறை, a small cavity in an organic body—Cell. See சாலம்.

சல்லடைச் சலிப்பு, குறுணைகளை பிரிக்க சல்லடையால் சலித்தல், seperating the small particles through the sieve.

சல்லடைத் தளம், மூளையின் மத்தியில் சல்லடையைப் போல் அனேக சாம்பல் நிறமான கண்ணறை யுள்ள ஓர் சிறு உறுப்பு, a greyish white substance in the brain-centre with several perforations—Locus perforatus (anterior).

சல்லடை போன்ற, கண்ணறை யுள்ள, perforated with small apertures or sieve-like holes—Cribriform.

சல்லடைப் பவுத்திரம், ஆசனவாயினுள் அனேக கண்ணறைகள் வாய்ந்த பவுத்திர விரணம். இது தசை இரத்தக் கேடாதியால் உண்டாகும். இது குதத்திற்குள் ஒன்று அல்லது இரண்டு விரற்கடை நீளத்தில் அமைந்துள்ள கொப்புளங்கள். இதன் மூலமாய் வலி குத்தலுடன் சில சமயங்களில் இரத்தம் சீழ், மல மூத்திரம் இவைகள் வெளிப் படும், a kind of anal fistula in which sinus ulcers are extending to about one or two finger's length from the anus to the rectum, due the vitiation of flesh and blood. It is marked by pricking and piercing pain; and is covered with sieve-like holes through which secretions are discharged. Sometimes, the region of the anus cracks and jets of urine and fecal matter are emitted through these holes.

சல்லடைப் பிறைச் சவ்வு, பெண்களின் யோனித் துவாரத் தண்டை யிருக்கும் கன்னி மூத்திரையின் சல்லடைக் கண் போன்ற

துவார முடைய பிறைச் சவ்வு, a hymen in which the opening is filled by a membrane pierced by small perforations; sieve-like maidenhead—Cribiform hymen.

சல்லடைப் பொட்டு, சருமத்தி னின்று தவிட்டைப்போல் உதிரும் ஓர் நோய், a skin disease characterised by branny scales—Pityriasis; 2. தலையில் உதிரும் பொட்டு, scales formed upon the scalp—Dandruff.

சல்லபம், முட் பன்றி, porcupine.

சல்லம், பன்றி முள், quill of a porcupine; 2. நார், fibre.

சல்லரி, நறுக்குதல், to crush; 2. கொத்துதல், to mince; 3. ஓர் பூடு, celery—Apium graveolens; 4, சிறு கண் சல்லடை, sieve with small holes.

சல்லரிதல், துண்டு துண்டாய் வெட்டல், to cut into pieces.

சல் லரித்தல், சிறு கண் ணறைகளாக அரித்தல் (புழுக்கள்), having a number of cavities made by worms—Worm-eaten.

சல்லாத்து, இனிப்புப் பழங்களைத் துணித்து சர்க்கரையி லிட்டுப் பதப்படுத்திய ஓர் சிற்றுணவு, fruit salad.

சல்லாத்துக் கீரை, ஓர் வகை இலைக் கீரை. இதற்கு தமிழல் கச்சு எனவும் பெயர். இது தேக உஷ்ணத்தைப் போக்கி குளிர்ச்சியை தரும். இது அடியிற் கண்டபடி இரு வகைத்து, garden lettuce—Lactuca scariola. It removes the heat and cools the system. It consists of two varieties as mentioned below viz:—

1. காட்டு சல்லாத்துக் கீரை, wild endive—Chicorium endivia.

2. காப்பிரிச் சல்லாத்து, curled endive—Chicorium intybus.

சல்லாத்து விதை, சல்லாத்துக் கீரையின் விதை, seeds of lettuce—Lectuca saliva.

சல்லாபம், சரசப் பேச்சு, amorous talk, as between lovers.

சல்லாப வுப்பு, பூரணுதி. இது கஞ்சாவை மற்ற சரக்குகளோடு சேர்த்து தயாரிப்பது. இது மயக்கம் அல்லது போதையை யுண்டாக்கும் லேகிய பாகம், an electuary of an intoxicating nature prepared of course from ganjah mixed with other ingredients.

சல்லாபன், சரசன், a lover.

சல்லாரி, ஓர் மரம், a tree—Hartwigia; 2. See சல்லரி.

சல்லி, சிறு செப்புக் காசு, a small copper coin; 2. துவாரம். perforation; a small hole; 3. மெலிந்தவன், an emaciated person; 4. அதிமதுரம்; honey creeper—Glycirrhiza glabra; 5. ஓர் மீன், a fish. See சல்லிக் கெண்டை.

சல்லிகா, அரைக் கீரை, amaranth—Amaranthus tristis.

சல்லிகி, see சல்லகி.

சல்லிக் கரண்டி, வடிகட்ட வுபயோகிக்கும் சல்லடை போன்ற கண்ணறை யுள்ள இரும்புக் கரண்டி, a sieve-like iron spoon used for filtration; perforated ladle.

சல்லிக் குடல், see சல்லிக் கொடி; 2. துவார முள்ள குடல், a bowl with perforation.

சல்லிக் கெண்டை, பழுப்பு நிறமான கெண்டை மீன், a yellow species of carp—Barbus carnaticus.

சல்லிக் கொடி, நஞ்சுக் கொடி, the navel-cord of a born child.

சல்லிக் கொடிச் சுண்ணம், குடற் சுண்ணம். இது சித்தர் செய்யும் ஓர் இரகசிய முறை, (*In Siddha Medicine*), a calcium compound prepared with the aid of navel-cord. It is a secret process employed by Siddhars.

சல்லி சல்லியாக வரித்தல், அனேக கண்ணறைகள் உண்டாகும்படி அரிக்குதல், a corrosion marked by several holes.

சல்லித்தல், துண்டாக்கல், to slice; to cut into pieces.

சல்லிப் பிலியம், நீர்த் திப்பிலி, water long-pepper.

சல்லிப் பூடு, வயித்திய முப்பு, a universal solvent used in medicine; all-healing drug.

சல்லிப் பொடி, கெண்டைக் குஞ்சு, small carp-fish.

சல்லி மரப்பாவை, வாலை, a still.

சல்லி மரம், சிறு நறுவிலி மரம், small sebastan—Cordia myxa.

சல்லி மூலம், see சல்லிக் கொடி.

சல்லிய கண்டம், முள்ளம் பன்றி, porcupine.

சல்லிய கதி, பிராணன் எலும்பை யொட்டி இருக்கும் நிலைமை. இதனால் முன்னோர்கள்

அநேக வருஷ காலம் சீவித் திருந்தார்கள். தற்காலத்திய மனிதர்கள் சருமகதி அதா வது சதையை யொட்டி நிற்பதால் நீடித்து சீவித்திருக்க முடியாது, the state of the soul which is centred on the bony apparatus. Men of olden days, had lived up to a long age because their vitality rested on the basis of the bony structure; but at the present day the vitality of men rests on that of the muscular structure.

சல்லிய கரணி, அத்திர சத்திரம் தைத்த புண் அல்லது வேறு காரணத்தா லேற்பட்ட காயம், விரணம் முதலியவைகளை மாற்று மருந்து, a medicament for healing up injuries and wounds caused by weapons as arrows and knives — Traumatic; 2. எருக்கு, madar plant—Caltropis gigantea.

சல்லியக் கரு, சல்லிய வித்தைக் குரிய கரு; சூனிய மருந்து, a magic paint used in the black art, sorcery etc.; 2. பிண்டக் கரு, a medicine having occult virtues. It is prepared from the foetus.

சல்லியக் கலிப்பு, எலும்புகளின் மேற் படிந் துள்ள சவ்வு, the tough fibrous membrane surrounding the bone — Periosteum. See அஸ்திக் கலிப்பு.

சல்லிய சடம், உடம்பின் எலும்புக் கோர்வை; கங்காளம், skeleton of the body.

சல்லியசம், மருக்காரை, common emetic nut Randia dumetorum.

சல்லிய சிகிச்சை, உடம்பினுள் உலோகம், அம்பு, குண்டு, விஷம், முதலிய பொருள் களும், துன்மாமிசம், சீழ், கெட்ட இரத்தம் முதலியவைகள் தங்குவதினால் அவற்றைக் கத்தி, யந்திரம் முதலியவைகளைக் கொண்டு உடம்பி னின்று வெளிப்படுத்து மோர் வித இராட்சச சிகிச்சை, the barbarous or crude method of curing or healing by operation with knife or other instruments in cases of foreign matters such as, arrows, bullets, poisons etc., lodged or entered into the body or of morbid growth of flesh or pus, impure blood etc, remaining in the system; 2. எலும் பைப் பற்றிய சத்திர சிகிச்சை, treatment relating to surgical operation of bones.

சல்லியஞ் செய் பரு, கத்தியா லறுக்கக் கூடிய பக்குவம் வாய்ந்த கட்டி, an abscess which is riped or matured sufficiently to admit an operation.

சல்லிய தந்திரம், போசராஜனால் செய்யப்பட்ட ஓர் ஆயுள் வேத நூல். இதில் உடம்பினிற் தங்கும் அல்லது புகுந்த வஸ்துக்களை வெளிப் படுத்தும் விதமும், கத்தி கொண்டு அறுக்கும் விதிகள், கட்டு கட்டும் முறை முத லியவைகளைப் பற்றியும் கூறும், a book on surgery treating on the methods of removing foreign bodies lodged or entered into the system, the mode of using surgical instruments, and also of applying bandages etc.—Anatomy.

சல்லிய நாடி, எலும்பு மார்க்கத்தி லோடும் நாடி, the blood vessels passing through the bony regions.

சல்லிய நாடி விரணம், எலும்பின் மார்க்கத்தில் பிறந்து, அவ்விடத்து நரம்புகளுக்கு வலியை யுண்டாக்கி, இரத்தம் சீழ் ஒழுகச் செய்யும் விரண நோய், a wound or ulcer formed in the region of bones being attended with pain in the arteries and discharge of pus, blood etc.

சல்லியம், எலும்பு, bone; 2. செஞ் சந்தனம், red sandal—Pterocarpus santalinus; 3. நஞ்சுக் கொடி, navel-cord; 4. உடம்பில் தங்கி நின்று கெடுதியை விளைவிக்கும் வஸ்துக் கள், substances detrimental or proving injurious to health by their retention in the system; 5. முட் பன்றி, porcupine; 6. இரண வைத்தியம், surgery; 6. மாய வித்தை, magic; 7. ஈடு, சூனியம் முதலிய மாந்திரீக வித்தை, introduction of love philter, witchcraft sorcery, etc. described in the Occult science; 8. அகஸ்தியர் செய்த ஓர் மாந்திரீக நூல், a treatise on Magic compiled by the Sage Agastya; 9. அங்க லட்சணத்தைக் கூறும் ஓர் ஆயுள் வேத நூல், an Ayurvedic treatise describing the organs of the body; 10. இரசம், பாஷாணம், வெள்ளி, அயம், காந்தம் முதலியவைகளின் குணங்களையும், இயற் கையா யுள்ள அதன் குற்றங்களையும் கூறு மோர் ஆயுள்வேத நூல், an Ayurvedic science dealing chiefly about the qualities of mercury, arsenic, silver, iron, magnet etc. and their natural defects; 11. பிண்டக் கரு, a secret preparation made with the aid of a foetus and used in magic; 12. சூட்டுக் கோல், an iron rod for branding or cauterising; 13. பூமியிற் புதைந் துள்ள நிதியை காட்டும் வித்தை, the art of finding hidden treasures;

14 குறட்டை, bittergourd—Trichosanthes palmata; 15. சத்திர சிகிச்சை, surgical treatment.

சல்லிய விதி, இரண வைத்திய சாத்திரக் குறித்த விதிகள், principles and rules of surgery.

சல்லிய வித்தை, மாந்திரீக வித்தை, magic; 2 வெகு தந்திரமாக அறுத்து உடம்பைச் சோதித்தல், the secret and skillful art of opening the body for purposes exploration.

சல்லியன், மாந்திரீகன், magician.

சல்லியா தேவி, மாந்திரீக சிகிச்சைக் குதனியான தேவதை, a demone-s invoked for help in the treatment by Magic.

சல்லி யூஞ்சல், வெள்ளை வாகை, white sirrisa — Albizzia procera.

சல்லி யூடகம், வெள்ளியைப் போன்ற கடல் மீன், a silvery sea-fish — Gerres lucidus.

சல்லி வேர், see சல்லிக் கொடி; 2. தண்ணீர் விட்டான் கிழங்கு, water root — Asparagus racemosus; 3. பக்கத்து வேரிலும், ஆணிவேரிலும் கிளைத்து, மயிரிழை போல் வளர்ந்து, பூமியி லுள்ள தண்ணீரையும், மரவுணவு சாரத்தையும், உறிஞ்சி மரத்தை வளர்க்கும் சிறு வேர்கள், (*In Botany*), small fibrous roots branching out from the side-roots and the main-root, and supporting the growth of the tree by absorbing the essences from the surrounding soil.

சல்லி வேர்ச் சுண்ணம், see சல்லிக் கொடிச் சுண்ணம்.

சல்லுங் கருவி, சல்லடை, sieve.

சவகம், கடுகு, mustard; 2. ஓர் சிமை மிளகு, moluccus pepper—Piper officinarum.

சவக்கம், இளைப்பு, fatigue; 2. சோர்வு, exhaustion.

சவக்களித்தல், see சவர்க் களித்தல்; 2. சப்பென் றிருத்தல், to be insipid; 3. அருசியா யிருத்தல், being tasteless.

சவக் காடு, இடு காடு, burial ground; 2. சுடு காடு, cremation ground.

சவக் காமியம், நாய், dog.

சவக் காரம், see சவுக்காரம்.

சவக் காலை, இடுகாடு, burial ground.

சவக்குச் சவக் கெனல், ஈரத்தால் மொறு மொறுப்பு கெட்டு மெதுவாதல், losing friableness due to moisture.

சவக் குழி, பிரேதக் குழி, a pit dug out for burying the corpse.

சவக் கொழுப்பு, பிணத்தை ஈரமான குழியில் புதைத்து வைப்பதினாலேற்பட்ட கொழுப்பு, fat found in a dead body kept buried in a pit of moist earth — Adipocere; 2. பிணத்தை கொளுத்துவதினால் அதி னின்று இறங்கும் தைலம். இது மாந்திரீகத்திற் குதவும், the fatty fluid substance found issuing out of a burning dead body. It is supposed to be useful in magic.

சவங்கல், வலி வற்றவன், weak person.

சவங்குதல், உடல் மெலிதல், becoming reduced; being emaciated; 2. வீக்கம் வற்றுதல், to reduce as swelling; 3. மூர்ச்சையாதல், to faint; being swooned; 4. மனத் தளர்தல், getting dejected in mind.

சவச, பிணத்தின் மாறு பாட்டிக் குரிய, pertaining to the phenomena exhibited by a dead body—Cadaveric.

சவச் சேமம், பிணத்தைப் புதைத்தல், burial of a dead body.

சவடி, காறை யெலும்பு, clavicle or collar bone; 2. ஓர் வகை விஷப் பாம்பு, a kind of venomous snake; 3. see சவடு.

சவடி மரம், வெடங் குறணி அதாவது அலம்பல மரம், walking stick bignonia — Stereospermum xylocarpum.

சவடி யெலும்பு, மூளை யெலும்பு அதாவது மணிக்கட் டெலும்பு, wrist-bone; 2. காறை யெலும்பு, collar-bone.

சவடு, வண்டல், residue; 2. உவட்டு மண், fuller's earth; 3. பூர்த்த வுப்பு அல்லது பூனீறு, efflorescent salt.

சவடு, பூமியில் பூர்த்த மண் அதாவது உப்பு மண். கால் நடைகளாகிய மாடுகளுக்கு காலிலும் வாயிலும் நோய் கண்டால் இம் மண்ணை நாக்கில் தேய்ப்பதினால் குணமாகும், efflorescences or saline material found on the earth. Cattle affected by foot and mouth disease are cured by rubbing this saline earth on the tongue.

NOTE—The efflorescences consist of three groups viz:—

1. the neutral, which contain no car-

bonate of soda but chiefly sodium chloride and sulphate.

2. the alkaline, which contain carbonate of soda, alkaline chlorides and sulphates.

3. the nitrous efflorescences, which contain chiefly alkaline chlorides and nitrate of lime.

சவட்டி ஓரணம், see சவர்க்கி ஞானம்.

சவட்டல், மெல்லல், masticating; chewing; 2. விழுங்கல், swallowing; gulping; 3. கொல்லல், killing; 4. அழித்தல், destroying; 5. வளைத்தல், bending; 6. மிதித்தல், treading; 7. உதப்புதல், rolling with the tongue without chewing.

சவட்டற் பேசி, மேல் தாடையில் உள்ள எலும்பு பாகத்தில் ஒட்டி யுள்ள தசை. the muscle attached to or covering the bony portion of the upper jaw — Masseter muscle.

NOTE —It is the muscle covering the Zygomatic arch and the molar process of the upper maxilla. It is the muscle that keeps the teeth intact and serve the purpose of mastication.

சவட்டு, சமட்டு, to swallow down; 2. அழி, to destroy; 3. மென்னுதல், to chew; 4. வளைத்தல், to bend as a limb.

சவட்டுக் கூர்மை, see சவட்டுப்பு.

சவட்டுதல், see சவட்டல்.

சவட்டு நிலம், உவர்த்தரை, fuller's soil.

சவட்டுப்பு, see சவடு; 2. மண் மேல் பூக்கும் அல்லது பூமியில் வளரும் உப்பு. இது பூமியின் வாகு வளப்பத்திற்குத் தக்கபடி வித்தியாசப் படும். இதில் அனேக விதங்களுண்டு, அவையாவன, the saline substance or efflorescent salt found deposited on the surface of the earth. This differs according to the nature and fertility of the soil. The different kinds are, viz:—

1. வளையலுப்பு, bangle earth or glass gall.
2. சவர்க்கார வுப்பு, carbonate of soda.
3. சோற்றுப்பு, sodium chloride (common salt).
4. உவர் மண் உப்பு, fuller's earth.
5. வெடியுப்பு, nitre etc, obtained by a simple process of lixiviation.
6. காரம், salt impregnated with soda; sodium sulphate; any alkali salt.
7. பேதியுப்பு, magnesium sulphate.

NOTE—1. The saline material in the earth (சவடு) naturally undergoes different chemical changes. The decomposition of rocks through the action of the atmospheric oxygen and carbonic acid gives origin ultimately to soluble sulphates, carbonates and chlorides. These are carried away by the rivers. In the fresh water alluvial plains such salts are accumulated during the lapse of centuries, to an extent sufficient to give rise to the sowdoo efflorescence, the heat of the sun drawing the salts to the surface.

NOTE—2. The above kinds are generally calledby a common name (சவட்டுப்பு) saline salt because they are all salts produced by efflorescence from the surface of the earth. It is a mealy powder or a whitish crust forming minute light crystals from a slow chemical change. It becomes powdery in consequence of losing the water of crystallisation. Sowdoo salt is thus a variable compound. The ingredients and their relative proportions vary in different parts in saline contents. Soils containing a large percentage from 30—50 per cent of carbonate of soda, abound all over the country; and are habitually collected by the people for use as for dhoby's earth for dyeing and for the manufacture of soap and glass bangles; it is purified by a simple process of lixiviation, which consists in seperating soluble from insoluble matter and drawing off the solution. The crude common salt educed from bangle earth in No. 1 is supposed to possess medicinal properties. See also சவடு.

சவட்டுப்புச் சத்து, சவட்டுப்பி லின்று பிரித்தெடுக்கப்பட்ட சத்து, sodium separated from the salt (common) by a chemical change.

சவட்டு மண், உப்பு மண், earth giving educed or lixiviated or washed common salt.

சவட்டு மண்ணுப்பு, நவச்சாரம், sal-ammoniac; 2. சோடா வுப்பு, sodium carbonate —Sodiac carbones.

சவணம், கேள்வி, hearing; 2. காது, the ear.

சவண்டைக் கால், வளைந்த கால், bandy-leg.

சவண்டாம், see சவந்தரம்.

சவண்டலை, திருக் கோணமலை செம் மரம், Trincomallee red-wood—Berrya Ammonilla; 2. சோலை வெண் தேக்கு, looking glass plant—Heritiera papilio.

சவண்டிலை, see சவண்டலை.

சவதி, கட லாத்தி, trumpet tree.—Stereospermum xylocarpum.

சவதிக் கொக்கு, மழை காலத்து தோன்றும் கொக்கு, crane of rainy season — Buphus coromandus.

சவது, தொண்டைக் கம்மல், irritation of throat; sore throat.

சவது ரோகம், ஓர் மூக்கு நோய், a disease of the nose

சவத்தின் விறைப்பு, பிணத்திற் காணும் விறைப்பு, stiffness in a dead body — Cadaveric rigidity.

சவம், பிள்ளை பேறு, child-birth.

சவந்தரம், கஸ்தூரிப் புல், orange grass

சவந்தலை, திருக்கோணமலை மரம், Ceylon red wood or Ceylon ash — Berrya ammonilla. See சவண்டலை.

சவந் தவம்பல், பிணத்திற் காணப் படும் அசைவு. இது பற்றியே பிணத்தைத் தூக்கிச் செல்லும் போதும் அசைவுறாமற் கொண்டு போக வேணு மென்ற விதி. இது ஓர் துர்க்குறி. இதனுல் அநேக சாவுகளுக்கு இடமுண்டாகு மென கருதப் படும், tremor of corpse—a bad omen supposed to indicate innumerable deaths. It is therefore a rule to carry the dead without osillation.

சவந்தி ஊனம், கா குடிப்பை, sage-leaved Indian linden—Gruvia salvifolia.

சவ பங்கம், பிணத்திற்கு நிகழ் விளைவிப்பது. இது சதாரணமாய் சம்போகத்திலும், அல்லது அங்கத்தை நறிப்பதிலும் உண்டாக்கப் படும், violation of a corpse either by sexual intercourse with it — Vampirism or by mutilation for the purpose of exciting or gratifying sexual feelings —Necrosadism.

சவப் பரிசோதனை, பிணத்தை பறுத்து பரிசோதித்தல், an examination of the body made after death—Post-mortem examination.

சவப் பிப்பிலி, நீர்த் திப்பிலி, a kind of aquatic long-pepper.

சவப் புணர்ச்சி, இறந்த உடலோடு சம்பந்தப் படுதல். இது ஒரு விதமான அக்கிரம காமச் சேஷ்டை, sexual intercourse with a dead body—Necrophilism. In some cases, it becomes a form of sexual perversion. See சவ பங்கம்.

சவம், நீர், water; 2. பிசாசம், demon; 3. பிணம், corpse — Cadaver; 4. மூங்கில், bamboo;

சவயசம், அத்திப் பழத்தின் புழுக்களைப் போலுள்ள ஓர் வகைக் கிருமி பேதம், small germs resembling those found in the riped fig.

சவ ரட்சணை, காப் பாற்றுகை, protection.

சவரம், மயிர் கழைதல், shaving; 2. நீர், water; 3. மயிர், hair.

சவராய்ப் போதல், உப்புக் கரித்தல், to become brackish; yielding a saline taste.

சவரி, ஓர் வகைக் கீரை, a kind of greens; 2. பேய்ப் புடல், bitter snake-gourd. See சவரிக் கிழங்கு; 3. இமயமலையி லுள்ள நீண்ட மயிருடைய சவரி மான், a species of deer with long hair inhabiting the Himalayas—Himalayan yak; 4. தென்னை நார், coir fibre; 5. குறட்டை, see சவுரி.

சவரிக் கிழங்கு, குறட்டைக் கிழங்கு, bulbous root of bitter snake gourd—Trichosanthes palmata.

சவரிக் கொடி, கொடியார் கூந்தல், Sita's thread—Cuscuta reflexa.

சவரித் தாதகம், விருச மரம், felted cammon sebesten—Cordia myxa.

சவரி நாயகம், கையாந் தகரை, eclipse plant—Eclipta prostrata.

சவரிப் பழம், see சவுரிப் பழம்.

சவரி மான், see சவரி.

சவரியார் குழம்பு, ஓர் பேதி மருந்து, a purgative.

சவரி லோத்திரம், குறட்டைப் பருப்பு அல்லது அப் பழத்தின் கரும் பச்சை நிறமான சதைப் பற்று. இது கசப்பா யிருக்கும். விறுவிறுப் புள்ளது. காது வலிக் குபயோகப் படும், a dark green pulp of the bitter snake-gourd — Trichosanthes palmata. It smells like savine, having an acrid and bitter taste. It is medicinally applied as a specific in the ear-ache; 2. விளா, wood-apple—Feronia elephantum.

சவரி வீரி, see சவரிக் கிழங்கு.

சவ குற்று, உப்புத் தண்ணீர்க் குட்டை, salt-spring.

சவ ரேசம், வெள்ளை வாகை, white sirissa—Albizzia procera.

சவர், உவர்ப்பு, brackishness; 2. கட்டாந் தரை, barren land; 3. உப் புறள் நிலம், brackish soil.

சவர்க்கம், கல் லுப்பு, crystallised sea-salt; 2. கட லுப்பு, insoluble sea-salt; 3. குங்கி லியம், Indian dammer—Shorea robusta.

சவர்க் களித்தல், உப்புச் சுவைக் கொள்ளல்; உப்புக் கரித்தல், yielding a saline taste.

சவர்க் காரகம், வழலை, fuller's earth. C.f. சவர்க் காரம்.

சவர்க் காரக் குரு, சவர்க்காரச் சுண்ணம். இது பூ நீரைக் கொண்டு செய்து வாதத்திற் குப யோகப் படுத்து மருந்து, (*In Siddha Medicine*), a quintessence salt used in Alchemy. It is prepared with the aid of native sodium carbonate—a calcined compound prepared from fuller's earth. C.f. வழலைக் குரு.

சவர்க் காரச் சுண்ணம், see சவர்க்காரக் குரு.

சவர்க் கார நீர், ஐந்து மாதத்திய தலைப் பிண் டத்தி னின்று உப்புச் சத்தெடுத்து பனி யில் வைத்துத் தயாரிக்கும் ஓர் செயநீர், (*In Siddha Medicine*), a liquid of acrid nature obtained by exposing to night dew the salt extracted from the first born foetus 5 month's old. See ஐங் கோலச் செய நீர்; 2. உழமண் ணீர், water impregnated with soap and forming a frothy moss—Suds.

சவர்க் கார நுரை, சவர்க் காரத்திலுண் டாகும் நுரை, foam or froth made by soap and water—Lather.

சவர்க் கார ரோதி, see சவர்க்கார நுரை.

சவர்க் காரப் போக்கு, வழலையைப் போக்கி காரத்தை யுண்டாக்கல், conversion into soap effected by the combination of an alkaline base with a fatty acid — Saponification; 2. பூவழலையி லிருந்து வாத முறையில் தயாரித்தல், the conversion of fuller's earth so as to make it useful in the preparation of an alchemical compound.

சவர்க் காரம், அழுக்கு எடுக்கும் காரம் soap; washing soda; bleaching powder; 2. பூ வழலை, saline efflorescence found in the soil of fuller's earth; 3. ஓர் மருந்து, a prepared medicine. See சவர்க் காரச் சுண்ணம்.

சவர்க் கார உண்டை, உழ மண் உருண்டை, fuller's earth bolus; 2. சோப்புக் கட்டி, soap cake.

சவர்ச் சலம், கல் லுப்பு, insoluble sea-salt; 2. கருப் புப்பு, black salt.

சவர்ச் சீசா சாரம், see சவர்ச்சி லவணம்.

சவர்ச்சி லவணம், பொட்டி லுப்பு, saltpetre.

சவர்த் தரை, உழமண் ணிலம், soil of fuller's earth; 2 உப்பு நிலம், brackish soil.

சவர் நிலம், see சவர்த் தரை.

சவர்ப் பட்டை, உப்பு கரிக்கும் பட்டை, any bark with a saline taste.

சவர்ப்பலம், சிதேவியார் செங்கழு நீர். இதுவே செய்ச் சேட்டி, ash-coloured fle-bane—Vernonia cinerea.

சவலம், அவுபல பாஷாணம், a kind of native arsenic; 2. சவ்வரிசி, sago fern palm—Cycas circinalis; 3. அரைக்கால் வராகன், ⅛ pagoda.

சவலை, இளைப்பு, emaciation; 2. இளமை, tenderness, 3. பாலன், baby; 4. பல வீனம், weakness; 5, மெலிவு, thinness or leanness; 6. சவ்வரிசி, sago-palm—Cycas circinalis; 7. தாய்ப்பா லின்றி குழந் தை படையும் மெலிவு, weaning of a child from want of mother's milk.

சவலைக் குணம், இளைக்குந் தன்மை, growing weak from weaning; tendency or reducing to leanness; declining condition.

சவலைக் குழந்தை, கர்ப்பிணிகள் பார்வைக் குள் ளகப்பட்ட குழந்தை, a child whose weaning is due to the evil eye of a pregnant woman; 2. தாய் கருப்பிணியாய் இருக்கும் பொழுது பால் கொடுப்பதனால் இளைக்கின்ற குழந்தை, a weak child nourished by the milk from the breast of a pregnant mother; 3. தாய்ப் பா லின்றி இளைத்த குழந்தை, youngling; an emaciated child without mother's milk.

சவலைக் கொட்டு, இளைப்பினால் அடிக்கடி மலம் வெளிப்பட்டு கழிதல், a loose motion in children frequently due to weaning.

சவலை நெஞ்சம், கோழை மனம், weak mind.

சவலை பாய்தல், தாய்ப் பாலில்லாமல் இளைத்துப் போதல், to grow weak or to get emaciated from want of mother's milk, as children. See சவலைப் போதல்.

சவலை புத்தி, சிறு பிள்ளைத் தனம், childishness.

சவலை போதல், தாய்ப் பாலில்லாமல் குழந்தை ஏங்குதல், weakening of a child through want of nutriment following the arrest of secretion of the mother's milk, See சவலைப் போதல்.

NOTE.—The propriety or otherwise of weaning a child must be considered with reference both to the condition of the child and of the mother. If the child is not in good health, suckling should be continued. If the mother is unwell or if pregnancy occurs, the child should be taken away from her.

The fact of a child not thriving so well cannot be easily accepted unless the mother's milk is thin and poor or where it is insufficient to satisfy the child's appetite.

சவலைப் பருவம், ஒரு வயது வாய்ந்த காலம், a period of one year old.

சவலைப் பிள்ளை, see சவலைக் குழந்தை.

சவலைப் பிள்ளை நாடி, ஓர் மெலிவுள்ள குழந்தையின் நாடி நடை, a weak and feeble pulse of a child newly weaned.

சவலைப் போதல், தாயார் கர்ப்பிணியாயிருக்கும் போது குழந்தை பாலில்லாமல் இளைத்துப் போகுதல், weakness of a child newly weaned for want of sufficient milk specially when the mother is pregnant.

சவலை ரோகம், மாதாந்திர முழுக்கான பெண் பார்வைக்குள்ளாகப் பட்ட குழந்தைக்குக் காணும் ஓர் வகை இளைப்பு நோய். சாதாரணமாகவே, பெண் மாதாந்திர முழுக்கு முழுகியவுடன் கருப்பத்தை விரும்பி குழந்தையின் முகத்தில் விழித்து, அன்றிரவில் புருஷனைச் சேர்ந்து கருப்பமானால், மேற்கண்ட குழந்தை நாளுக்கு நாள் உடம்பு இளைத்து பல வினைப்பட்டுத் தோஷந்தாக்கி பொறுக்க முடியாத துன்பத்தை யடையும். மேற்கண்ட கர்ப்பிணிக்கு குழந்தை பிறந்தவுடன், தோஷம் தாக்கிய குழந்தை பிழைத்தாலும் பிழைக்கும் அல்லது இறந்தாலும் இறக்கும் என்பது முன்னோர் துணிபு, emaciation of a child subjected to the anxious look of a woman just released from her menstrual period. When any woman looks upon a child just after her menses anxiously for begetting a child, and is conceived by having intercourse with her husband on the same night, it is popularly believed by the Hindus that the child so looked upon, is thereby affected in health and gets emaciated day by day as the said pregnant woman is progressing in her conception until the day of her delivery, when the child affected thereon may live or die according to the circumstances.

சவ விசாரணை, பிரேத விசாரணை, the judicial enquiry held over the dead body—Inquest.

சவ முடம், மூன்று மந்திர வெழுத்தி லொன்று அதாவது 'சவ்வு', (*In Mantric Science*) one of the three mystic syllables viz: 'Savvu'.

சவாச்சி, சத்தி சாரம், one of the twenty-five kinds of salt.

சவா மரம், புளிய மரம், tamarind tree—Tamarindus indicus.

சவாம், ஓர் வகை மீன், a kind of fish; 2. வெள்ளை பாஷாணம், a kind of white arsenic found in nature; 3. நடுக்கம், shivering; 4. முற்றிய புளியம் பழத்தின் சதை, the pulp of a matured tamarind fruit.

சவாளன், வளைந்த காலுள்ளவன், a bandy or crooked-legged man.

சவளி, பருத்தி இலைச் சாறு, the fresh juice of the leaves of herbaceous cotton tree; 2. வளைந்த கால்களுடைய பெண், a bandy-legged woman.

சவளுதல், வளைதல், bending; 2. துவளுதல், becoming weak and inert.

சவளை, நெருப்புக்கு ஓடாமல் நின்று போதல், (*In Alchemy*), the state of becoming fixed without disappearing before fire, as in the case of mercury, sulphur, etc; 2. வங்க மணல், lead ore; 3. காரீயம், lead.

சவளைச் சுண்ணம், வங்கச் சுண்ணம், a calcium compound of lead prepared as per process laid down in Tamil Siddha Medicine.

சவளை மணி, வங்க மலை, mountain containing lead ore; 2. காரீய மலை, mountain containing ores of lead.

சவளை யாக்கல், நெருப்புக்கு ஓடாதபடி துவளச்செய்தல், making anything facile and soft, so as not to disappear before fire while heating.

சவளை யாதல், நெருப்பிலிட்டு வாட்ட துவளுதல், becoming soft, yielding and facile on being roasted in the fire.

சவளை யிறக்கல், நெருப்பி லிட்டு துவளும் படிச் செய்யு மோர் சித்த வைத்திய முறை, (*In Siddha Medicine*), a process of fixing substances which can readily pass off into vapour, by rendering them facile.

சவறு விழுதல், கரு விழுதல், miscarriage; 2. கருப்பம் நிரம்பாமல் வெளிப் படுதல், premature delivery.

சவற்சலம், கல் லுப்பு, see சவர்ச் சலம்.

சவனம், பிட்டம், buttocks, see சவனம்; 2. பிள்ளைப் பேறு, child-birth.

சவா, see சபா.

சவா சகம், கல் லுப்பு, sea-salt.

சவா சங்கரி, பொதுவாக உப்பு, salt in common; 2. சோற் றுப்பு, culinary salt.

சவாதி, } see சவ்வாது.
சவாது, }

சவாது பூனை, காவிப் பிள்ளை, see சவாது பிள்ளை.

சவாதுப் பிள்ளை, சவாது பூனை, Malabar zibet cat—Viverra zibetha. *C.f.* புனுகு பூனை.

சவா புட்பம், முட் செவ் வந்தி. இதுவே ரோஜாப் பூ, a term referring generally to rose.

சவாரிக் கட்டை, மர வள்ளிக் கிழங்கு, mountain sweet potato — Manihot utilitissima.

சவி, மிளகுக் கொடி, pepper creeper; 2. அழகு, beauty; 3. வல்லமை, strength; 4. சுவை, taste; 5. பிரகாசம், brilliance, 6. செவ்வை, propriety; correctness.

சவிகம், திப்பிலிக் கொடி, creeper of long-pepper; 2. விஷ்ணு காந்தி, Vishnu plant—Sphoeranthes indica; 3. கண்ணாடியைப் போன்ற ஓர் வஸ்து, a substance of the nature of a glass—Enamel.

சவிகற்பக் காட்சி, விகற்பக் காட்சி, (*In Agama logic*) differentiating and discriminating knowledge in respect of a thing in all its aspects.

சவிகற்ப சமாதி, கொங்கணவர் வாத காவியத்தில் சொல்லியுள்ள ஐந்துவகை சமாதிகளுள் ஒன்று, இது ஞேயம், ஞாதுரு என்னும் வேறுபாடு வுணரும் உணர்ச்சியோடு கூடிய யோகநிலை. இதில் அடியிற் கண்ட செய்யுளின்படி சத்தானு விந்தை, திரிசானு விந்தை என இருவகை யுண்டு:—

"ஆச்சப்பா சவிகற்ப சமாதி வேறு அறிந்துநீ
காண் இரண்டு வகையிலே யுண்டு.
பாச்சப்பா சத்தானு விந்தை யொன்று
வரிசையுடன் திரிசானு விந்தை யொன்று"

(*C.f.* சுக்குரவல்லிய சமாதி.)

one of the five kinds of Samadhi (abstract meditation) contemplated in Kongavanava works (3000) on Alchemy. It is a meditation in which the sense of unity is aware of the differentiations between the knower and the known. So, it is the one in which the mind is in a lesser degree. It consists of two kinds viz. Sathanu and Trisanu as mentioned in the above stanza.

சவிகற்ப ஞானம், ஒரு மனிதன் அல்லது பொருள் தன்னை அடைந்த மாத்திரத்தில் அதன் குணகுணம் முதலிய சர்வ தன்மைகளையும் தானே உணரும் அறிவு, a faculty of divining, by mental operation, the qualities and properties of an object coming in contact with him or of persons approaching him—Psychometrical knowledge.

சவிகற்பம், see சவிகற்ப காட்சி; 2. விகற்பம், discrimination; distinction; 3. முப் பேதம் அதாவது சுகத பேதம், சஜாதி பேதம், விஜாதி பேதம் முதலிய பேதங்கள், the three kinds of differences or dissimilarities such as—

1. சுகத பேதம்—சேர்ந்த அல்லது ஒரே சாதியிலுள்ள பேதம். (உ-ம்) ஒரே மரத்தில்—இலை, அரும்பு, பூ, காய், கனி முதலியன, differences in one and the same thing as for instance, in a tree—leaf, bud, flower, fruit and the riped fruit.

2. சஜாதி பேதம் — ஒரே சாதியுள் ஒரு மரத்திற்கும் மறு மரத்திற்கும் உள்ள வித்தியாசம், the difference in the same species as between one tree and another.

3. விசாதி பேதம் — ஒரு சாதிக்கும் மறு சாதிக்கும் உள்ள வேறுபாடு. (உ-ம்) மரத்திற்கும், கல்லுக்கும் வேறுபாடு, the dissimilarity of one species to that of the other, as between a tree and a stone.

சவிகற்பம், விகற்பம், discrimination.

சவிகற்பவம், ஊதா அல்லி, purple lily.

சவிகற்பித்தல், பேதப் படுத்தல், making a difference or change.

சவிகி, see சவிகை.

சவிகை, செவ்வியம், root of black pepper—Piper nigrum; 2. ஆனைத் திப்பிலி, elephant pepper.

சவிசங்கம், ஓர் வாத நோய், a kind of rheumatism; 2. எண்பது வகையுள் ஒன்றாகிய வாயு ரோகம், one of the eighty kinds of flatulency in the human system.

சவிசங்க வாதம், see சவிசங்கம்.

சவியம், see சவிகை.

சவிரண சுக்கிரன், see சவிரண சுக்கிலம்.

சவிரண சுக்கிலம், கரு விழியில் நொண்டது போற் குழியாகக் காணும் ஓர் நோய். இது ஊசியாற் குத்தினது போன்ற வலியும், கண்ணினின்று சூடாக நீர் வடிதலும் ஏற்படும், a punctured-like dip in the region of the black of the eye with painful sensation, as if the part has been pricked with a needle. It is therefore attended with an excruciating pain and hot exudation.

சவிரண மேகம், ஓர்வகை மேக நோய். இதில் மூத்திரமானது சுண்ணாம்பைப் போல் காரமும், நாற்றமுமுள்ளதாய் வேளைக்கு ஒரு படி அளவாக இறங்கும். பெய்த இடத்தில் எறும்பு மொய்க்கும். அன்றியும், ஜனனேந்திரியத்தில் தினவு, விரணம் உண்டாகும், a form of diabetes said to arise from venereal causes. It is characterised by the passing of a very large quantity of pale and light-coloured urine resembling the lime, but without sugar—Diabetic insipidus. The quantity of urine discharged at a time is calculated ordinarily to be about a measure. The urine will attract a large number of ants. Moreover, the genitals are usually inflamed and attended with intense itching.

NOTE.—In men, inflammation of the skin at the end of the penis called 'Balanitis' and in women, frequent intense itching, and sometimes eczema of the private parts, may occur.

சவிலை கொடி, see சவில் கொடி.

சவில் கொடி, ஓர் கொடி, a creeper—Rubia mangith.

சவு, இளைத்தல், to become weak and emaciated.

சவுக்கட்டுக் கோரை, ஓர் வகைக் கோரைப் புல், a kind of sedge grass.

சவுகந்தம், நறு மணம், fragrance; good smell.

சவுகந்தி, வசம்பு, sweet flag — Acorus calamus; 2. ஓர் வகை பாஷாணம், a kind of native poison.

சவுகந்திகம், செங்கழு நீர், red Indian water-lily—Nymphae lotus alias N. odorata.

சவுகந்திரா, கெந்தகம், sulphur.

சவுக்கங் காய், சவுக்கு மரத்தின் காய், the fruit of casuarina tree.

சவுக் களித்தல், புளித்தல், to be sour; 2. புளிப்பா யிருத்தல், being sour.

சவுக்காரக் கட்டி, உவர்ச் சத்தும், எண்ணெய்ச் சத்தும் சேர்ந்த கட்டி, a mass of any alkali and fatty acid—Soap cake.

சவுக்காரக் கல், மாக்கல். இது பாறையா யிருந்து வேற்றுருவான ஒரு கல். இது மிருதுவாயும் வழு வழுப்பாயு மிருக்கும்; நிறம் சிறிது வெள்ளை அல்லது சாம்பல் நிறம், புள்ளி வாய்ந்ததும் அல்லது கொடி படர்ந்தது மானது; சிறிது பளபளப்புள்ளது. இதில் மணல், காந்த சத்து, படிகார சத்து, அயச் சத்துக்கள் பொருந்தி யுள்ளது. இதன் தகடு ரூபமாயுள்ளது தான் அப்பிரகம் எனப்பெயர் பெறும். இது நகரமலையில் கிடைக்கும். அன்றியும், செல்லூர், கர்நூல், சேலம், மைசூர் இவ் விடங்களிலு முள்ளது, soap stone or steatite. It is a metamorphic rock with a soft and greasy feel and is of a yellowish white or grey colour. It is sometimes spotted

or veined with little lustre or transparency. It is composed of silica, magnesia, alumina, and oxide of iron, and is known as, Abreck (mica) in its laminated form. It is found in Nagari hills, as also in Nellore, Kurnool, Salem and Mysore.

சவுக் காரக் குரு, see சவர்க் காரக் குரு.

சவுக் காரச் சீலை, சவுக்காரச் சீலை மருந்து, soap plaster.

சவுக் காரச் சுண்ணம், see சவர்க் காரச் சுண்ணம்.

சவுக்காரத் தைலம், ஆங்கிலேய முறைப்படி, சாராயம், கற்பூரம், சோப்பு, ரோஸ்மரி யெண்ணெய் முதலியவைகளைக் கொண்டு செய்யும் மேற் பூச்சுத் தைலம். இது வாத நோய், வலி முதலியவைகளுக்குத் தடவ உதவும், Soap liniment, a preparation of hard soap treated with rectified spirit, camphor, rosemary oil etc. — Linimentum saponis. It forms an excellent vehicle for enbrocations in rheumatic and other painful affections.

சவுக்காரப் பிளாஸ்திரி, சோப்பு, மஞ்சள் மெழுகு, ஒலிவை யெண்ணெய், ஈயவெள்ளை, காடி, இவைகளைக் காய்ச்சித் தடவிய சீலை மருந்து. இது மூட்டுவலி, சுளுக்கு, வீக்கம் முதலியவைகளுக் குதவும், இதை இரணம், சொறி, சிரங்குக்கும் போடலாம், a plaster prepared with hard soap, yellow wax, olive oil, oxide of lead and vinegar which are boiled until the product has acquired the consistence of a plaster. It is commonly known as, Soap Cerate Plaster—Emplastrum Cerate Saponis. It is chiefly employed as a support in affections of the joints, sprains, swelling etc. It is also applied to injuries, wounds, itches etc.

சவுக்காரப் போக்கு, see சவர்க்காரப் போக்கு.

சவுக் காரம், உவர் மண், fuller's earth. See சவர்க் காரம்; 2. ஆதி யுப்பு; see சவுக்கார வழலை; 3. துருசுச் சுண்ணம், a carbonate prepared from blue vitriol by calcination.

சவுக் காரம், இதுவே நாட்டு சவுக்காரக் கட்டி அல்லது சோப் கட்டி என வழங்கும். இது உலகம் அறிந்த உழமண் காரத் தோடு கொழுப்பும் சேர்ந்த சத்தமான காரவஸ்து. ஆனால் சரியான உழமண் காரமோ கையில் பட்டால் வெந்து போகும். ஆயினும் எண்ணெய்ச் சத்து கலப்பதினால், அதன் வேகம் குறைந்து அழுக்கையகற்றும் குணம் பெறும். நமது ஊரில் சாதாரணமாய் சோப் என்னும் சவுக்காரக் கட்டி என்பது உவர் மண், பூநீறு, பொட்டி லுப்பு, சுண்ணாம்பு இவைகள் சேர்ந்தது. இது துணிகளின் அழுக்கையும், உடம்பின் மேல் படியு மழுக்கையும், எண்ணெய்ப் பிசு பிசுப்பையும் அகற்றுவது மன்றி, புண், சிரங்கு, சொறி முதலிய சரும நோய்களைக் கழுவி சுத்தம் செய்வதற்கும் உபயோகப்படும். இதினின்று தைலம் தயார் செய்து கீல்வாயு, முடக்கு வாதம் முதலிய நோய்களுக்கும் தடவ வுதவும், soft-soap—Sapo mollis. It is a universal alkali and is the product of the action of caustic alkali upon neutral fats. Pure alkali would injure hands; but by its combination with the fatty acids, its action is rendered milder, and consequently used for clearing impurities. The articles employed in making soap in our country are—impure carbonate of soda, pooneer (a light-coloured efflorescent salt), saltpetre and quick lime. It is extensively employed for washing clothes and removing the dirt, and the oily coating on the surface of the body; and it is also used for cleaning sores, itches, and other cutaneous affections. Soap liniment is prepared and used for the affection of joints and other rheumatic complaints.

NOTE.—In Tamil, it is also known as சர்வ சாரம் which means universal alkali. Potash forms soft soap and soda hard soap; but the latter is most employed. Country soap on drying loses 50 per cent in weight. The pooneer— a light-coloured efflorescent salt is one of the ingradients used in making country soaps; and it contains a great proportion of carbonate of soda. Its use in Medicine and Alchemy is a great secret in Tamil Siddha Medical Science. Several are the Siddha publications dealing particularly on this subject which requires a great research. See also பூநீர்.

சாமுண்டிகி, பொன்னாவிரை, see சாமுண்டி.

சாமுதம், கடுக்காய், gallnut — Terminalia chebula: 2. கோரை, sedge-grass.

சாமுத்திர லவணம், கடலுப்பு, sea-salt.

சாமுத்திராதி சூரணம், பரிணாமசூலை நிவர்த்திக்காகக் கொடுக்கும் ஆயுர் வேத மருந்து. இதை மற்ற சூலைகளுக்கும் கொடுக்கலாம், an Ayurvedic medicine prescribed for dyspeptic colic. It may also be given for other kinds of colic.

சாமுத்திரிகம், பொதுவாக மனிதர்களின் பலவித அங்கங்களின் வடிவம், மனிதரின் உயரம், கை கால் நீளம், பாதம், உடம்பின் அமைப்பு முதலியவைகளைப் பற்றியும், அதனதன் சம்பந்தமான விஷயங்களும், காரணங்களுடன் எடுத்துக் கூறும் நூல். உடம்பி லுறுப்புகளின் இலட்சணங்கள் சாதாரணமாய் சோதிடம், நாடி, ரேகை நூல், இலட்சண காவியம், கொக்கோகம், முதலிய நூற்களில் சொல்லியுள்ளன. ஆண் பெண் உடம்பின் லட்சணங்கள் இந் நூற்களில் அடங்கியுள்ளன, a general science which dwells on the shape of different organs or visible members, shape, height of person, lengths of arms and feet, symmetry of the body etc. and draws inference from the whole; the study of expressions depicted on the exterior of the body in relation to the structure, situation and uses—Physignomical anatomy. It includes the interpretations of severed sciences such as Astrology, Nadi, Palmistry, Chiromancy, Erotic science of Kokkogam, referring to the several organs of the body—both of the male and the female.

NOTE.—A science very similar to this was introduced to Europe from Arabia. It is purely Palmistry.

சாமுத்திரிக விலக்கணம், அங்கவிலட்சண நூல். இது சுப்பிரமணியர் அகஸ்தியருக்கு உபதேசித்ததாக சொல்லப்படும், இதில் உள்ள கை இரேகையைப் பற்றி விவரம் கூறும், the science relating to the exterior organs of the body in relation to the structural symptoms, situation, and uses. It is a treatise said to have been offered by God Subramany to Agastya, the Tamil sage. It also dwells

on the marks on the palms (palmistry) in relation to the body.

NOTE.—These should not be confounded with the Nadi, which is an astrology based on Palmistry referring to the marks on the palm of an individual and calculated from the date of one's birth. This Nadi is peculiar work in the Tamil language; and could not be found elsewhere, even in Sanskrit.

சாமுத்திரிகன், அங்க இலட்சணம் சொல்லுவோன், one who is versed in palmistry and physiognomical anatomy together with interpretations of those marks on the body—Chiromancer.

சாமுன், } இறப்பதற்கு முன், before
சாமுன்னம், } death — Ante-mortem. It is opposed to post-mortun.

சாமுஞ்சி, see சாமுகம்.

சாமுத்திரம், கடலுப்பு, sea-salt.

சாமுலி, ஊமத்தை, dhatura — Dhatura stramonium.

சாமேசிகம், சாமையரிசி, see சாமை.

சாமை, இது எங்கும் விளையக் கூடியது மற்ற தானியங்களை விட சீக்கிரத்தில் முளையும். ஏழை சனங்கள் இதை மிகுதியாக உபயோகிப்பார்கள். ஆயினும், இதன் சாதம் உண்ணில் வாதநோய், சயம், சிலேட்டும விருத்தி, வீக்கம் முதலியவும், இதன் கஞ்சியால் முத்தோஷங்களும், விலகுவதன்றி சுக்கிலம் விருத்தியாகும். அன்றியும், பிரமேகம், தாகசுரம் போம், தாது புஷ்டியுண்டாம். இதில் வெப்பு சாமை, காட்டு சாமை என இரண்டு இனங்களுண்டு, Deccan grass; little millet—Panicum miliare alias Panicum frumentaceum. It is grown all over in Southern India; and the quickest growing of all millets. It is known of its special utility to the poorer classes. The food is a wholesome and nourishing grain, and is useful in rheumatic complaints, consumption, excess of phlegm in the system, swelling etc. Conjee prepared from it, is said to remove all the derangements arising from the three humours and contribute towards the secretion of semen in the system. There are two kinds of this species viz:—Red millet — Panicum egyptiacum and white wild millet—Panicum prostratum.

சாமை, see கற்சேம்பு; 2. பெரு நெரிஞ்சில், அல்லது ஆனை நெரிஞ்சில், crown thorn —Pedalium murex.

சாமைக் கஞ்சி, சாமையை மாவாக அரைத்து உணவாகக் கொள்ளும் கஞ்சி, a liquid diet boiled down from the little millet flour and water and used as food.

சாமைக் கிழங்கு, see சேப்பங் கிழங்கு.

சாமைச் சாதம், சாமை அரிசியைக் கொண்டு சமைத்த உணவு, food prepared from shamay (millet) see சாமை.

சாமைப் புல், பூப் புல், shamay millet or grass—Eragrostis plumosa.

சாமை யரிசி, சாமையைக் குத்தி எடுத்த அரிசி சாதம். இதனால் தாகசுரம், பிரமேகம், மகத்வாத நோய், சோபை ரோகம் போம், husked millet (Italian). Its food forms a remedy in cases of fever attended with thirst, urinary disease, rheumatic complaints and anemia.

சாமை யரிசிக் கஞ்சி, சாமையை சமைத்த கஞ்சி. இதனால் வீக்க தோஷம், வாதாதி முத்தோஷம் போம், conjee prepared from the millet rice. It is prescribed in cases of swelling and the derangement of the three humours.

சாம்கலி, பருத்தி, cotton—Bombax malabaricum.

சாம்பகம், நல்ல பாம்புத் தோல், the cast-off skin of a cobra.

சாம்பகி, நெரிஞ்சில், calotrope — Tribulus terrestris.

சாம்ப கிருமி, சுடுகாடு, cremation ground.

சாம்ப சதா சிவன், சிவனார் வேம்பு, shiva's neem—Indigofera asphalathoides.

சாம்ப சிவம், அறுகம்புல், sacred grass.

சாம்ப நீர்ச் சாரம், கட்டையை எரித்து சாம்பலாக்கி, அதை தண்ணீரில் கரைத்து தெளிவிருத்த சாரம், water impregnated with alkaline salt imbibed from the ashes of wood—Lye.

சாம்ப மாலை, நெருஞ்சில், see சாம்பகி.

சாம்பம், ஆனை நெருஞ்சில், big caltrops—Pedalium murex.

சாம்ப ருப்பு, (சாம்பர் + உப்பு) சாம்பலினின்று எடுத்தவுப்பு. இது பொதுப்பட எல்லாவித காரவுப்பையும் குறிக்கும், an alkaline salt prepared or extracted from wood-ash. It is a general term referring to Potash, Soda etc.

சாம்பார், பூண்டு, மரம், சாணி, முதலியவைகளை எரித்ததினா லுண்டான சாம்பற் காரம், an alkaline salt, obtained from the ashes of burnt plants trees, animal dung etc; 2. சாம்பல், ashes; சாம்பரி உப்பு; the best and the purest evaporated salt obtained from Sambhar lake in Rajputana.

சாம்பர் ஏரி, Sambhar lake salt. See சாம்பார்.

சாம்பர் வெளார், see சாம்ப லுப்பு.

சாம்பவச்சி, வெட்சாரம் அல்லது வெடியுப்பு, nitre—Potassium nitrate.

சாம்ப லாக்கல், கொளுத்தி சாம்பலாகச் செய்தல், to incinerate; 2. பற்ப மாக்கல், to calcine.

சாம்பனி, பெருநாவல், jambo tree—Eugenia Jambolina.

சாம்ப லுப்பு, மாவுப்பு, carbonate of potash; 2. சாம்பலுப்பு potash—Salt of tartar; 3. சாம்பலுப்பு, சோடா முதலிய உப்புகள் அடங்கிய அநேக பூண்டுகளை எரித்து, அதிலிருந்து காரசார வுப்புகளை யெடுத்து மருந்து தயாரித்து, வைத்திய சிகிச்சைகளில் குன்மம், நீர்க் கவிசை, மகோதரம், மூத்திரக் கல் ரோகம் முதலான வியாதிகளுக்கு உள்ளுக்கும், வெளிக்கும் உபயோகிப்ப துண்டு. இவ்விதமான உப்புகள் அடங்கிய பூண்டுகள் அடியிற் கண்டவைகள், அவையாவன, the ashes of a number of plants containing more or less potash, soda, etc. Medicines are prepared from these alkaline ashes and employed both externally and internally. Thep are given in cases of dyspepsia, ascites, enlargement of the abdominal viscera, calculus affections etc. A list of these plants is given as mentioned below:—

1. வாழை யிலை யுப்பு, salt of plantain leaf.
2. இராட்சை யுப்பு, cream of tartar—Tartrate of potash.
3. மூங்கி லுப்பு, bamboo salt—used in cases of bilious complaints, consumption, cough etc.
4. மர வுப்பு, wood ash or salt of wormwood—Potassa.
5. கார வுப்பு. alkaline ashes (used for dyeing. See கார சுண்ணம்.
6. நாயுருவி யுப்பு, Indian burr ash. It is used in cases of after-birth.
7. கழற்சி யுப்பு, bonduct-nut ashes used for testicle complaints.
8. எருக்க லுப்பு, madar ashes.
9. இலைக் கள்ளி யுப்பு, leaf milk-edge ashes.
10. திருகு கள்ளி யுப்பு' round milk-hedge ashes.
11. வெட்பாலை யுப்பு, Tellicherry bark ashes.
12. நொச்சிச் சாம்பல், Vitex ashes. See கார சுண்ணம்.

*N.B.*—Although salts used to be obtained from the ashes of plants and used formerly in medicine and for various purposes, still no detail is given about them, as for instance, in Nos. 1, 4, 7 & 12.

NOTE.—The term 'சாம்ப லுப்பு' literally means salt obtained from for the ashes, which usually refer to those derived from the burning of plants. Such ashes generally contain salts such as, Potash, Soda, Caustic potash Caustic soda etc., but, which ash contains which salt, is not definitely known, although the quality and uses of such salts are clearly mentioned.

சாம்ப லுப்புச் சத்து, பூண் டெரித்த சாம்பலி லிருந்தெடுத்த சத்து, a metallic essence extracted from the ashes of plants—Potash.

சாம்ப லுப்பு நீர், சாம்ப லுப்பு கரைந்த நீர், wood-ash; water in which the wood-ash is dissolved—Lixium.

சாம்ப லெருக்கு, எருக்கு, madar plant.

சாம்பல், see சாம்பர்; 2. விபூதி, sacred ashes from cow dung; 3. நாவல், jambo tree—Calyptranthes caryophillifolia; 4. பற்பம் metallic ashes or calcined metallic oxides.

NOTE.—Ashes are obtained by the incineration of wood or by burning many vegetables for purposes of extracting salt from a solution of this.

சாம்பல் கிளுவை, சாம்பல் நிறமான கிளுவை, grey balsam—Balsamodendron berryi.

சாம்பல் தவைக்கு, see சாம்பற் றவைக்கு.

சாம்பல் நாரையனம், a kind of grey heron.

சாம்பல் நிறம், சாம்பல் வர்ணம், ash-colour,

சாம்பல் படை, ஒர்வித சரும நோய், psoriasis: 2. படைச் சொறி, a cutaneous affection marked by exfoliation of the outer skin.

சாம்பல் மாவி, இருநாவல், ruddy black plum —Eugenia rubicunda.

சாம்பல் மொந்தன், சாம்பல் நிறமான மொந்தன் வாழை, ash-coloured stout plantain —Musa paradisiaca (troglodytarum).

சாம்பல் வர்ணச்சி, see சாம்பல் வர்ணி.

சாம்பல் வர்ணி, செருப்படை, a low spreading plant found in rice fields after harvest—Coldenia procumbens.

சாம்பல் வாழை, see சாம்பல் மொந்தன்.

சாம்பவம், see சம்புநாவல்; 2. பொன், gold.

சாம்பவி, பெருநாவல், large-fruited jaumoon —Eugenia jambos; 2. கௌரி பாஷாணம், a prepared native arsenic—Yellow oxide of arsenic; 3. நாவல், jamboo tree; 4. see சாம்பல்.

சாம்பவிச் சக்கரம், ஸ்ரீசக்கரத்தைப் போன்ற ஓர்வகை முக்கோண மந்திரச் சக்கரம், a magic triangle resembling the diagram of 40 triangles. See அக்கினி கண்டம்.

சாம்பவியார் விந்து, கௌரி பாஷாணம், see சாம்பவி.

சாம்பவி வழக்கை, சிரசின் மூளை, brain of the head.

சாம்பவி விந்து, கௌரி பாஷாணம், see சாம்பவி; 2. புணர்ச்சியில் அதிக காமத்தால் பாயும் நாத நீர், the fluid discharged from the vagina due to a woman's excessive passion during sexual intercourse.

சாம்பவி ரசம், சகலசுரங்களுக்கு பார்வதிதேவி யால் சொல்லப் பட்ட ஆயுள் வேத மருந்து, an Ayurvedic preparation announced by Goddess Parvathi. It is prescribed for all kinds of fever.

சாம்பற் கத்தலை, சாம்பல் நிறமான கத்தலை யென்னும் ஓர் கடல் மீன். இது 3 அடி நீளம். சாப்பிட உதவாது, a grey-coloured sea-fish—Sciaena albida alias Corvina albida. It is about 3 ft. long; not esteemed for table.

சாம்பற் கற்றாழை, சாம்பல் நிறமான ரயில் கற்றாழை. இது வீக்கத்திற் குதவும், an ash-coloured aloe found grown near the railway fencing; Rail aloe—Aloe americana.

சாம்பற் காட்டுக் கோழி, gray jungle fool or Indian wood cock—Scolopox indica.

சாம்பற் காரசத்து, மரவுப்பு, இது பூண்டுகளை எரிப்பதினால் கிடைக்கும், a popular name for vegetable alkali in an impure state procured from the ashes of plants—Potash.

சாம்பற் கிட்டம், கண்ணாடி செய்வதற்குபயோகப்படும் சாம்பல், the ash which is used for manufacturing glass—Vitrified ash.

சாம்பற் கிருமி, சாம்பல் நிறமான புழு, gray-coloured worm.

சாம்பற் கிளுவை, ஓர் கிளுவை மரம், gray balsam—Balsmodendron berryi.

சாம்பற் கீரை, சிறு பசலை, creeping purslane; small-leaved spinach.

சாம்பற் சத்து, see சாம்பற் காரசத்து.

சாம்பற் சாரம், see சாம்பரீர்ச் சாரம்.

சாம்பற் சுறா, சாம்பல் நிறமான சுறாமீன், grey shark—Carcharias macloti.

சாம்பற் தணக்கு, ஓர் தணக்கு, white catamaran tree—Givotia rottleriformis

சாம்பற் தானிய சத்து, சாம்பலினும், தானியத்தினும் உண்டாகும் சத்து, potash phosphates found in the ashes and grains.

சாம்பற் பாரை, சாம்பல் நிறமான ஓர் கடல் மீன், a sea-fish, gray pauray—Caranx nigrescens.

சாம்பற் பூசுணி, நீற்றுப் பூசுணி, ash-coloured pumpkin—Cucurbita alba.

சாம்பற் பூத்தல், உடல் சாம்பல் நிறமாதல், turning grey in colour as body.

சாம்ப குரை, சாம்பல் நிறமான நாரை, an ash-coloured crane.

சாம்பாகினி, பசலைக்கீரை, garden spinach, Malabar night shade—Basella Cordifolia.

சாம்பாக்கி, பாஷாணம், poison.

சாம்பாட்டு, கறிப்புடோல், vegetable snake-ground—Trichosanthus anguina; 2. கருப்பூலா, black honey shrub—Phyllanthus multiflorus.

சாம்பாரி, [illegible], see சாம்பாட்டு.

சாம்பான், எருக்கிலை, madar leaf—Coltropis gigantea.

சாம்பியம், இருளாகப்பூ, iron-wood of Ceylon —Mesua ferrea.

சாம்பிரம், பறங்கி பாஷாணம், a kind of prepared arsenic.

சாம் பிராச்சியம், இருவகை சமாதியி லொன்று இதனால், யோகி கோறியபோது உடம்பு அசைவற நின்று, சுவாசமடங்கி நாடிகள் சலனமற்று பிரேதம்போலாகி, மறுபடியும் சாக்கிரத்திற்கு திரும்புதல், one of the two kinds of Samadhi in which a yogi voluntarily reaches a state of insensibility, characterised by the total suspensions of respiration, and pulsation. He remains like a dead body for sometime and then regains or is restored to consciousness—Trance or catalepsy.

சாம்பிராணி, (சாம்—பிராணி) செத்தஜீவன், mortal being ; 2. பிரமிப்பூடு, bramia plant —Gratiola moniera.

சாம்பிராணி, மலாக்கா சாம்பிராணி மரம். இது சீயாம், ஜாவா, சுமத்திரா, போர்னியூ முதலிய கீழ் மகா சமுத்திரத்தின் தீவுகளிலும் விளையும். இது மரத்தின் பட்டையி லிருந்து வடிந்து உலர்ந்து போன ஓர்வகைப் பிசின் போன்ற தைலம். முதலில் வருவது தான் சுத்தமானதும் வாசனையு முள்ளது. இது சாம்பல் வர்ணமாயும், பளபளப்பான கட்டிக் கட்டிகளாக விருக்கும், வாசனையாயும், நாக்கி லிட உருசியாயு மிருக்கும். இது நாள்பட்ட இருமல், காசம், முதலிய சிலேட்டும ரோகங்களுக்கு உபயோகிக்க குணத்தைத் தரும். இதன்புகை இருமல், கெட்டநாற்றம், கொசு முதலிய விஷசெந்துக்களை நீக்கும். இதை ப்பன்றி நெய்யில் கலந்து களிம்பாக உபயோகிக்க, இரணம், வாதவலி, வாய்வு, வீக்கம் முதலியவைகள் தீரும். புகையை முகர, தலை வலி, விழி நோய், சலதோஷம் போம். அன்றியும், தொண்டைப் புகைச்சலை நிறுத்தும். வெட்டு காயங்களுக்குமேல் பூசலாம். மேலும், மூத்திரப்பை யழற்சி, நெஞ்செரிச்சல், நுரையீரல் கோளாறுகளையும் நீக்கும். இதினின்று தைலமும் இறக்கலாம். இது அடியிற்கண்டபடி பலவகையுண்டு, malacca benzoin tree ; Styrax benzoin—Parkia biglandulosa. The tree is also a native of Siam, Java, Sumatra and Borneo, Benzoin is the juice obtained by making incisions into the tree when it will be found deposited on the bark, being hardened to the exposure of air. That which flows first is the purest and the most fragrent. It occurs in dry and hard grey masses, rather shining, brittle, and tastes sweetish. The resin in medicine, is internally a stimulant and expectorant ; and so, it is prescribed for cough, asthma and other phlegmatic diseases. Its smoke is deodorant and antiseptic and drives away mosquitoes and flies ; and is highly useful in whooping cough. In the form of fumigation, it affords great relief in eye diseases, cold. etc. It also allays the throat irritation and is useful for smearing on cut wounds. It is employed in pyrosis, irritable states of the bladder, chronic affection of the lungs etc. Ointment is also prepared from this. Mixed with pigs fat, it is used as an ointment for ulcers, rheumatic affections, swelling etc. It consists of several varieties as mentioned below viz :—

1. மலாக்கா சாம்பிராணி; இதுவே. சாம்பிராணி, Malacca benzoin or common-benzoin—Styrax benzoin.
2. பறங்கிச் சாம்பிராணி, foreign benzoin—same as true olibanum—Boswellia serrata (typica).
3. மடையன் சாம்பிராணி அல்லது மட்டி சாம்பிராணி, gum resin —Hardwickia pinnata.
4. பால் சாம்பிராணி white dammer, a variety of No. 2.
5. மட்டி சாம்பிராணி, Parkia biglandulosa.

சாம்பிராணிக் களிம்பு, பன்றிக் கொழுப்பும் சாம்பிராணியும் சேர்த்துக் கொதிக்கவைத்த பூசுமருந்து, Benzoated lard—Adeps Benzotus. It is an ointment prepared by mixing melted lard, powdered benzoin and allowing them to boil for sometime.

சாம்பிராணி சத்து, சாம்பிராணிப் பூ; அதாவது சாம்பிராணியை வாலையி லிட்டு இறக்கிய சாம்பிராணிப் பதங்கம். இது வெண்ணிறமும் காரமுமானது. மூத்திர ரோகத்தையும், மஞ்சள் காமாலையையும் போக்கும், benzoic acid—Acidum benzoicum ($HC_7H_5O_2$). It is an acid obtained by sublimation from the crude benzoin or by boiling it with an alkali. This is colourless and

pungent, and is found useful in removing phosphatic deposits in the urine, incontinence of urine in children and jaundice.

சாம்பிராணித் தூபம், சாம்பிராணிப்புகை, fragrant smoke or fumes of frankincense.

சாம்பிராணித் தைலம், சாம்பிராணியை நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி வடித்த தைலம். இது தலைவலி, சலதோஷம், இவைகளுக்கு உபயோகப்படும், oil of benzoin obtained by boiling benzoin in gingelly oil. It is applied for headache, cold etc.

சாம்பிராணிப் பதங்கம், சாம்பிராணியை பதங்கித்து சேகரிக்கும் வஸ்து, இப்பதங்கம் ஐரோப்பாவில் தயார்செய்து இவ்விடங்களுக்கு இறக்குமதியாகிறது. இது வெண்மையாயும் சிறு கம்பிகளாயும் இருக்கும். இதற்கும் சாம்பிராணியைப்போல் வாசனையுண்டு. புளிப்பும் காரமுமாய் இருக்கும், சாராயத்தில் கரையும், நெருப்பிலிட புகையும். இது இரைப்பு, இரத்த காசம், உடம்பு வறட்சி, மஞ்சட் காமாலை, கல்லடைப்பு, மூத்திர வியாதி இவைகளுக்கு உபயோகப் படும். இதைத் தண்ணீரோடு கலந்து இரணம், புண் இவைகளை கழுவலாம். இதனின்று பாவனத்திரவம் இறக்குவதுண்டு, benzoic acid obtained from crude benzoin by sublimation or by boiling it with an alkali. It is prepared in Europe and exported to India. It is white and occurs in the form of needles which have an agreeable odour like benzoin; it is sour and pungent; It readily dissolves in rectified spirit and burns in fire. It is employed with advantage in cases of Asthma, Parasitic hemoptysis, dry skin, jaundice, calculous disorders, urinary disorders, etc. Diluted in water, it is used as a lotion for cleaning sores and ulcers. See also சாம்பிராணிச் சத்து.

சாம்பிராணிப் பாவனத் திரவம், சாம்பிராணித் தூள், சாம்பிராணிப் பதங்கம், தொலு, கற்றாழம் பால், சாராயம் முதலியவைகளைக் கொண்டு தயாரித்த திரவ வஸ்து. இதை ஆங்கிலேயர்கள் புண் புரைகளுக்கு உபயோகித்து வந்தார்கள், compound tincture of benzoin—Tinctura Benzoni composita. It is prepared with powered benzoin, storax, balsam of tolu, secotrine aloes, rectified spirit etc. …er the name of *Friars Balsam*, it …s long enjoyed great repute as a stimulant application to wounds, ulcers, etc.

சாம்பிராணிப் புகை, சாம்பிராணியைப் பொடிசெய்து நெருப்பிலிட்ட புகை. இப்புகை கெட்டநாற்றம், கொசு முதலிய விஷசெந்துக்களைப் போக்கும். ஆகவே, இதை நோயாளிகளின் படுக்கை யறையிலும், காபி ஹோட்டல்களிலும், ஆஸ்பத்திரியிலும் மிக்க உபயோகமாகும். சில நோய்களுக்கும் புகை போட இது உபயோகப் படும், benzoin smoke obtained by putting powdered benzoin in the fire. It is an antiseptic and removes bad smell and drives away mosquitoes, and other noxions insects. It is therefcre used in sick rooms, coffee hotels, hospitals etc. It also serves as a fumigatory in some diseases.

சாம்பிராணிப் பூ, see சாம்பிராணி சத்து.

சாம்பிராணி மரம், வெளிக்க மரம். இது ஆப்பிரிக்கா தேசத்தில் மிகுதியாக விளையும். இம்மரத்தை சாலைகளில் வைத்து பயிராக்கக் கூடியது. இம் மரத்திற்கு சவீக்கி அல்லது மாவகம் என்றும் பெயர் வழங்கும். மரம் பெரியது; பட்டை வெண்மை, இறகைப் போன்ற இலைகள்; உருண்டையான பூக்கள் காம்புகளிற் தொங்கும்; பூவின் மொக்குகள் சிகப்பு சகலாத்து உருண்டைகள் போலிருக்கும். இதன் காய்க்குள் சதைப் பற்றிருக்கும், அதை யெடுத்து மிட்டாய் பணியாரத்திற் குபயோகப்படுத்துவ படும். இதன் பட்டை துவர்ப்பா யிருக்கும், Nitta tree—Parkia biglandulosa alias Mimosa pedunculata. The tree is a native of Africa. It is a good avenue tree. Tree large; white bark; feathery foliage; flowers in balls, pendulous from a long stalk; flower buds resemble balls of red velvet. The legumes are filled with a farinaceous pulp, which is made into a sweet meat. The bark is astringent. *Cf.* சாம்பிராணி.

சாம்பிராணி வத்தி, ஊதுவத்தி, incense stick.

சாம்பிராணி யுப்பு, சாம்பிராணி திராவகத்தினின்று எடுத்த உப்பு, any salt of benzoic acid—Benzoate.

சாம்பிராணி வைப்பு, குக்கிலியம், அரக்கு, கருவாப்பட்டை, இவைகளை இடித்து பொடித்து பானையிலிட்டு செப்பில் பிசைந்து அடுப்பில் வைத்து உருகி கண்டும் பதத்தில் இறக்கிப் பார்க்க இறுகி சாம்பிராணி யாகும்,

benzoin is prepared in the following manner — Indian dammer, shellac, are to be powdered and mixed with ghee and properly secured in a pit; and then heated until the whole mixture is melted and hardened. The product found deposited at the bottom is the benzoin.

சாம்பீசி, சேங் கொட்டை, dhoby's nut — Semicarpus anacardium.

சாம்பு, நாவல் மரம், jambo tree — Eugenia jambolina; 2. பொன், gold; 3. சம்பு நாவல், which see.

சாம்புகி, see சாம்பு.

சாம்பு சம்பகம், நாவற் பூ, jamboo flower.

சாம்புதல், வாடல், withering, drooping; 3. உணர்வழிதல், to lose consciousness; 2. கண்ணொளி மழுங்கல், growing dim in the eyes; dullness of vision.

சாம்புலிய வித்து, வெள்ளி, see சாம்பவி.

சாம்புநதம், see சாம்பூநதம்.

சாம்பூநதம், 1000 மாற்றுப் பொன், a refined gold of 24 × 1000/10 or 2400 carats; this is one of the four kinds of gold, characterised according to its quality; 2. பொன் பொது, gold in general; 3. சிறு நாகப் பூ, iron-wood of Ceylon—Mesua ferrea; 4. மேரு மலை, mountain containing gold ore; 5. நால் வகைப் பொன்களில் ஒன்று, one of the four kinds of gold

சாம்பேயம், see சம்பகம்.

சாமெரிக்கன் கற்றாழை, ரயில் கற்றாழை, railway aloe—Aloe Americana.

சாய இலை, see சாய வேர்

சாயக் சாறு, மஞ்சட் கிழங்கு சாறு, juice of the green turmeric root.

சாயக் கிழங்கு, மஞ்சட் கிழங்கு, turmeric; 2. கிழங்கு மஞ்சள், green turmeric; turmeric root.

சாயக் கொட்டை, சேங் கொட்டை, dhoby's nut—Semecarpus anacardium.

சாயசந்தி, அந்தி, evening twilight.

சாயகம், அறுபத்து பாஷாணம், one of the 32 kinds of native arsenic; 2. தாமரை, lotus —Nelumbium Speciosum.

சாயச் சம்பங்கி, கொடிச் சம்பங்கி, champauk creeper—Pergularia minor.

சாயச் செடி, இம்புறவு, Indian madder—Oldenlandia umbellata.

சாயப் பட்டை, வெம்பாடம் பட்டை, the bark of buck thorn climber — Ventilago madraspatana.

சாயப் பாக்கு, தட்டிப் பாக்கு, sliced and polished flat areca nut made ready for use.

சாயப் பாசிதம், நுணா, dyeing mulberry — Morinda citrifolia.

சாயப் புல், நிறட் கோரை, dye-grass.

சாயப் பூச்சி, இந்திர கோபப் பூச்சி, lady's fly; 2. காய்ந்த சிவப்பு சாயப் பூச்சி, a scarlet dye-stuff consisting of the dried bodies of certain insects—Kermes.

சாயப் பூச்சி வற்றல், இந்திர கோபப் பூச்சியைக் காய வைத்து நெய்யி லிட்டு வறுத்த வற்றல், a preparation consisting in frying dried lady's fly in ghee.

சாயப் புலிகம், சிவப்புப் பசளை, red spinach—Spiuacea oleracea.

சாயமரக் கஷாயம், சிவதைவேர்க் கஷாயம், extract or decoction prepared from the root of Indian jalap—Ipomaea turpethum.

சாய மரம், சிவதை, Indian jalap; Indian rhubarb—Ipomaea turpethum; 2 சேவ மரம், wild mangosteen — Sandoricum indicum; 3. நுணா, Indian mulberry—Morinda citrifolia.

சாயமிட்டுப் பார்த்தல், கண்ணுக்கு மையிட்டுப் பார்த்தல், to look closely after applying collyrium to the eyes; 2. கண்ணாடிப் பார்த்தல், crystal gazing; 3. ஓர் சால வித்தை, a magic.

சாயம், அந்திநேரம், evening dusk; 2. கோரை, sedge grass; 3. சாய வேர், chay root; dye root—Oldenlandia umbellata.

சாயம் பிடி, பொன்னுங் காய், Indian soapnut—Sapindas trifoliatus.

சாய வட்டை, சாயங் காலம், evening time.

சாயல், மஞ்சள், Indian saffron; 2. மஞ்சள் பாவட்டை, dyeing mulbery — Morinda citrifolia; 4. இளைப்பு, exhaustion 5. அழகு, beauty.

சாயல் வகை, ஓர் வாகை மரம், a kind of sirissa—Albizzia amara (wightii); 2. உசில மரம், ebony tree—Acacia pinnata.

சாய விராதகம், கடுக்காய், gallnut—Terminalia chebula.

சாய விருட்சம், see சாயா விருட்சம்.

சாய விரை, சாப்பிரா விரை, monkey turmeric—Bixa orellana.

சாய விஎல, சிவைக் கருப் பூரம், Bengal sage—Meriandra bengalensis.

சாய வெளிச்சை, ஓர் ஆற்றுமீன், a river—fish—Chela argentea.

சாய வேர், see சாயம்.

சாய வேர்ச் சக்களத்தி, இம் பூறம் சக்களத்தி, a tree of the genus of chay root—Oldenlandia dichotoma.

சாயனத்தி ஒத்தமன், கார்முகிற் பாஷாணம், a prepared arsenic.

சாயனம், இரசாயனம், alchemistry; 2 கள், toddy.

சாயாகிரகம், நிழல் சாய்ந்த கிரகம், shadowy planet.

சாயா தேவி, சூரியன் மனைவி, the consort of Sooryan (the sun); 2. see சாயாவிருட்சம்.

சாயா தேவி தெரிசனம், தன் நிழலை உற்றுப் பார்த்து, பிறகு ஆகாசத்தை நோக்கி அவ்வுருவத்தின் பிம்பத்தைப் பார்த்தல். இவ்விதமாக தினந்தோறும் தவறாமல் 12 வருஷம் பார்த்தலினால் கடைசியாக சூரியன் மனைவி தெரிசனமாகு மெனக் கொள்ளப் படும், அன்றியும், இவன் வாழ்நாளில் நடக்கும் காரியங்களை குருவாக நின்று அடிக்கடி அறிவிப்பாளெனக் கொள்ளப் படும், seeing the goddess the sun's wife. The legend is that one contemplating by gazing upon his own shadow daily for sometime and then seeing or looking upwards at the sky and seeing his reflection will mediate on the great void. He hss to repeat this process without failing even a day. If this is continued for 12 years, he will see in his vision the female deity who will stand as a Guru, informing him all and about his career in life.

சாயா நீர், கானல் நீர், mirage.

சாயா புருஷ தெரிசனம், தன் நிழலை உற்றுப் பார்ப்பதினால் கடைசியாக புலப்படும் புருஷ தரிசனம், the appearance of a male deity to a man's vision when concentrating on his own shadow. C.f. சாயா தேவி தெரிசனம்.

சாயா ரூபம், உருவெளித் தோற்றம், phantom vision.

சாயா விருட்சம், உதய முதல் சாயுங் காலம் வரையில் தன் நிழல் சாயாத ஓர் வெண்ணிறமான மரம். இதற்கு தன்னிழல் காத்தான், நிழற்காத்த விருட்சம் என்னும் பெயர்களுண்டு. இது மகா மூலிகை 23ல் ஒன்று. இதன் இலை வெளுத்து எட்டி யிலையைப் போன்றது என்றும், காயானது கண் விடா நாய்க் குட்டி போலிருக்கும் என்றும், பட்டையை வெட்ட, வெட்டு வாய் $3\frac{3}{4}$ நாழியில் மூடி விடும், தெரியாது என்றும், பால் வடியும் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இதனால் காயசித்தி யுண்டென்று கருதப் படும், a grey-coloured tree which does not cast shadow being pervious to light. It is an unknown tree supposed to have very rare virtues; and is classified as one of the twenty three all healing drugs. It is said that its leaf resembles that of nux vomica tree, the fruit is like the closed eyes of a pup and the bark which, if cut with a knife, will not have traces of incision on it as it will be closed in a short time. It is considered to be a very useful plant for rejuvenation.

சாயா னகம், ஓந்தி, blood-sucker of the species of lizard.

சாயானம், சாயுங் காலம். evening time.

சாயுங் காலம், மாலைப் பொழுது, evening.

சாயுச்சியம், கன்காம் பதவி, the fourth and the highest state of bliss; 2. ஒன்றுபக் கலத்தல், entire absorption in the deity just like flame in flame, drop in the ocean etc.; 3. துவித பாவனை நீக்கி ஆத்ம விசாரணை செய்து, கடவுளோடு ஒன்றாகக் கூடி அதுதானாய் தானதுவாய் நிற்றல், identifying oneself in the presence of God and after forgetting the theory of Duality, being absorbed in the study of the Soul, and finally merging with Him.

சாயை, உடம்பின் ஒளி, அதாவது தேஜஸ், bright with radiance; lustre; 2. நிழல், shadow; 3. இருட்டிலிருந் துதித்தது, that which is born from darkness; 4. சேவை

மரம், malay, red wood — Sandoricum indicum; 5. சாயா தேவி, the consort of the Sun.

சாய், தண்டான் கோரை, lotus sedge-grass —Cyperus iris; 2. கோரைக் கிழங்கு, koray root or root of Cyperus—Cyperus pertinui; 3. திரட் கோரை, Cyperus grass with a round stalk.

சாய் கண், சாய்ந்த கண், squint eye.

சாய் கண் குருடு, வாய், கண், மூக்கு, நாக்கு, இவைகள் ஒரு பக்கத்தில் இழுத்துக் கொண்டு, அத்துடன் கண்கள் சிவந்து குருடாகி, எரிச்சல், நீர் வடிதல், ஆகிய குணங்களைக் காட்டுமோர் நோய், blindness of the eyes characterised by contortion of the face on one side, thereby affecting the mouth, eyes, nose, tongue, etc attended with inflammation, burning and watery discharge from the eyes.

சாய் கழுத்து, கோணைக் கழுத்து, wry neck; distorted neck.

சாய்கை வேதி, ஓர் வகைக் கவுன குளிகை. இதனால் நீர் மேல் மிதக்கலாம், நடக்கலாம், ஆகாயத்தில் பறக்கலாம். இது ஒரு காலத்தில் ரிஷப யோகியினிடம் இருந்ததாக சொல்லப் படும், a superior kind of animated mercurial pill having the virtue of making one float or walk on the surface of water or fly in the atmosphere in the region of the sky. It is said that it was once in the possession of one Rishaba Yogi.

சாய்க் கோரை, சந்தனக் கோரை.

சாய்தல், தளர்தல், to be tired, 2. மெலிதல், to be emaciated.

சாய் பார்வை, காக்கைப் பார்வை, oblique look like that of a crow; side look 2 இறப்பு, death.

சாய் பொழுது, அந்திப் பொழுது, evening time; dusk of the evening.

சாய்ப்பு, வெற்றிலை, betel leaf.

சாய் மரம், } see சாய மரம்.
சாய் மேதகம், }

சாய் மேதிதம், குங்குமப் பூ, English saffron flower—Crocus sativus.

சாய்வு, மரணம், death.

சார கத்தி, நீர்முள்ளி, water thistle—Hygrophila spinosa,

சார கந்தகம், சந்தனம், sandal; 2. கந்தகம் sulphur; 3. சாரமும் கந்தகமும் சேர்ந்தது, a mixture of sal ammoniac and sulphur.

சார கந்தம், சந்தனம், sandal.

சாரகம், தேன், honey. 2. இந்துப்பு, rock salt; 3. சிறு குறிஞ்சா, small Kurinja—Indian ipecacuanha; 4. பார்ப்பை அல்லது வன்னி மரம், suma tree — Prosopis spicigera.

சார கருமம், காரமிட்டு புண்ணைத் தீய்த்தல் the measure of applying caustic alkali for the purification of the sore or a long standing ulcer—Potential cauterization.

NOTE.—The ancient physicians of India like the present day doctors, preferred opening the abscess by caustics, to incising them with the lancet. Hence caustics were considered as superior to the lancet because, besides opening the abscess, they purify the patients by removing the derangement of humours. The ashes of the plants were used for the preparation of these caustics.

சார கரும வுப்பு, கார சார வுப்பு. அதாவது கிழங்கு, தண்டு அல்லது இலை, தழை, ஆகிய இவைகளை சமயத்திற்கு தக்கபடி எடுத்து சிறு துண்டுகளாக வெட்டி, பிறகு இதனிறைக்கு, ஆறு பங்கு கொண்ட அளவுக்குத் தண்ணீர் ஊற்றி கொதிக்க வைத்து, பின்பு வடிகட்டி கடைசியாக, அதினின்று உப்பெடுத்து, காரமுள்ள பாகத்தை, முதலாக நீக்கி சுத்திசெய்து எடுத்துக் கொள்ள வேண்டும். இதுவே காடிக் காரம். இது சாதாரணமாய் சதை கறுக்கும் வரை உடம்பில் தேய்க்கலாம். இதை வெளி மூலம், புண் புரை, தழும்பு, சிரங்கிப் புண், பரு, சுழலை முதலானவைகளுக்கும் உபயோகிக்கலாம், the roots, stems or leaves of the plants as the case may be, or as are available, are cut into pieces and boiled in water, 6 times their weight till the solution becomes transparent; and then strained and finally boiled down to a salt—Caustic potash. The part where the caustic to be applied should be cleaned first and then rubbed. It should be applied till the skin becomes black. Caustics are generally applied to external piles sinuses, leprous patches, syphilitic sores, abscesses, warts, tumours etc.

For a list of plants which are burnt in order to get ashes for preparing the said caustics, see under சாம்பர் உப்பு.

சார காரம், வெள்ளைக்காரம், alum.

சாரகார வுப்பு. புளியுப்பு சேர்ந்த சரக்கு, salt derived from the mixture of an alkali and an acid; 2. சீனக்காரம், alum.

சார கிருத்தியம், சார உப்பினுல் சுடல், a treatment by cauterisation with caustic alkali. See சார கருமம்.

சார கீடம், ஓர் பூச்சி, a kind of insect.

சாரக் கட்டி, கடையில் கட்டியாக விற்கப்படும் நவச்சாரக் கட்டி, sal-ammoniac sold in lumps in the bazaars.

சாரக்கட்டு, நவச்சாரத்தை நெருப்பிற்கு ஓடாதபடி கட்டும் முறை. இக்கட்டுமுறை வாதத்திற்கும் வைத்தியத்திற்கும் மிக்க அவசியமானது. இதனுல் அநேக நோய்கள் அறவே ஒழியும். ஆகவே, இதைப் பற்றி பிரமமுனி கருக்கிடை, அகஸ்தியர் நாலு காண்டம், கொங்கணவர் வாத காவியம், போகர் 7000, புலிப்பாணி பல திரட்டு இந் நூற்களில் தெளிவாக எழுதி யுள்ளார். சாரத்தைக் கட்டி விட்டால் கோடிவித்தையாடலாம். சாரத்தைக் கட்டி விட்டால் கோபுரத்தைக் கட்டலாம் என்பது பழமொழி, ஆனுல் கட்டுவதுதான் அசாத்தியம், the secret process of consolidating sal-ammoniac thus preventing it to pass off into vapour in the heating process. The solid lump so obtained is both useful in Medicine and Alchemy. Medicinally, it is capable of curing radically many diseases. Siddhars have written elaborately about this process in their works viz.—Brahma Muni Karukkidai, Agastyar four parts; Konganavas work on Alchemy, Pulipani extracts. Several miracles can be played when one succeeds in consolidating sal ammoniac; but it is an impossible affair.

NOTE — Although several Siddhars have writtsu elaborately about the consolidation of sal ammoniac etc., in their works mentioned above; they cannot be adopted or even attempted without knowing the drugs or other secret ingredients employed in each case. Moreover, it is said that consolidation of sal ammoniac is the most difficult process when compared with other substances, which pass off into vapour before heat such as, vermilion, orpiment mercury, nitre etc. Although a list of several herbs and other chemicals are given, it will never serve the purpose as most of them mentioned therein still remains unidentified. This requires a great revival and research.

சாரக் கல், தேய்க்கல், a red stone; 2. செம்பாறை, gravel rock; 3. தவிடிக்கல்; a red mineral stone mixed up with iron.

சாரக் காடி, நவாச்சாரம், சேர்ந்த சிலைக்காடி, acetate of ammonia.

சாரக்கி, வட்டத் திருப்பி, gravel root—Cissampelos pareira.

சாரக் கிழங்கு, சிறுகிழங்கு, Chinese yam; small yam—Dioscorea aculeata.

சாரக்கினி, சிறு கீரை, field spinach—Amaranthus campestris.

சாரக்கினி கருமம், கட்டிகளுக்கு உப்பை வைத்து சுடும் சிகிச்சை, a treatment by cauterisation. See சார கிருத்தியம்.

சாரக் குரு, நவச்சாரத்திலின்று தயாரித்த ஓர் குரு மருந்து, a quintessenee prepared from sal-ammoniac—an alchemical process.

NOTE.— This quintessence preparation of sal ammoniac is very useful in Alchemy It is said that this, when added to an alloy of nine metals (நவலோகம்) in fusion in the proportion of 100 : 1, gold of 16 carats (மாற்று) can be obtained; when it is taken internally as a medicine in proper dose, the body is rejuvenated and the man lives up to a long age. It is also capable of improving the vision.

சாரங்கதார சம்மிதை, வைத்தியத்தைப்பற்றி 25 அத்தியாயமாக சாரங்கதாரனுல் எழுதப்பட்ட ஓர் ஆயுள்வேத நூல். இது வைத்தியருக்குள் மிகச் சிறந்ததெனக் கொண்டாடப் படும், an Ayurvedic treatise on medicine; written by Sarangadara (son of Damodara). It consists of 25 chapters and is very popular in the Western India, and is esteemed much amongst the physicians.

சாரங்க தீரம், நாட்டுத் துளசி, holy basil—Ocimum sanctum.

சாரங்க தேசி, பெருமருந்து, Indian birthwort—Aristolochia indica.

சாரங்கம், சாதகப்புள், Indian cuckoo—Cuculus melana; 2. ஓர் பெருங்காக்கை a large crow—Ardea sarunga; 3. கரும்

பூரம், camphor ; 4. குறிஞ்சா, Indian ipecacuanha — Tylophora asthmatica ; 5. சங்கு conch ; 6. வண்டு, bee ; beetle ; 7. மயில், pea-cock; 8. மான், deer ; 9. யானை, elephant ; 10. மேகம் cloud ; 11. சிங்கம், lion ; 12. வானம்பாடி, sky-lark, இரவு, night ; 13. சிறுகுறிஞ்சா, small Kurinja — Periploca sylvestris ; 14. கலைக் கொம்பு, stag's horn.

சாரக்கார், காசிச் சாரம், அதாவது உவர்மண், வெடியுப்பு, நவாச் சாரம் இம் மூன்றையும் சேர்த்து தயாரித்த உப்பு, a salt prepared from a mixture of three salts, viz:—Fuller's earth, Nitre and sal ammoniac.

சார சத்து, அவல், pounded flat rice; flattened rice ; 2. பலத்தைக் கொடுக்கும் வஸ்து, vitalising substances ; that which gives virile power.

சாரச பட்சி, வண்டாழ்வான், a kind of bird controlling the beetles.

சாரச மாசிகம், கருப்புக் கடுக்காய், black gallnut.

சாரசம், வெண்குருகு, white crane—Ardea siberece ; 2. அடுபல பாஷாணம், one of the 32 kinds of native arsenic ; 3. கொக்கு, heron ; 4. தாமரை, lotus—Nelumbium speciosum ; 5. நுரை, froth ; 6. பாலாடை, milk cream ; 8. சீமை நன்னாரி ; jamaica sarsaparilla ; 9. சீனக் கிழங்கு, China root—Smilax officinalis.

சாரச வேர், சீமை நன்னாரி வேர், root of jamaica sarsaparilla—Sarsac radix.

சார சிங்கி, கல்லுப்பு, crystallised sea-salt ; 2. சவ்வீரம், corrosive sublimate.

சார சிப்பி, சிப்பிமுத்து, oyster-pearl.

சார செயநீர், நவாச்சாரத்தைக் கட்டிக் கொண்டு பிறகு, கொங்கணவன் வாதகாவியத்திற் சொல்லியபடி பனியில் வைத்து தயாரித்த செயநீர். இது வாதத்திற்குதவும், a strong pungent liquid obtained by exposing a mixture consisting of consolidated sal-ammoniac and other ingredients, in the nights dew as per process laid down in Konganava's work on Alchemy. It is used for transmutation of metals into gold ; 2. see அண்டச்செயநீர்.

சார சேர், முதியார் கூந்தல், virginian silk—Periploca asclepidas.

சாரச் சத்துரு, முட்டை, egg, as having neutralising virtues, 2. சவ்வீரம், corrosive sublimate ; 3 தமிழ் வைத்தியப்படி நவாச் சாரத்திற்கு சத்துருவான சரக்குகள், inimical drugs of sal-ammoniac, according to Tamil Medicine viz—(a) கல்லுப்பு, sea-salt ; (b) இந்துப்பு, rock salt ; (c) வளையலுப்பு, fel vitriol ; (d) இரும்புக் காந்தம், magnet ; (e) வங்கம், lead ; (f) அண்டத் தோல், fowls egg shell ; (g) காரீயம், black lead, (h) அப்பிரகம், mica ; (i) கிளிஞ்சல், bi-valve shell etc.

சாரச்சம், மூங்கிலரிசி, bamboo seed—Bambusa arundinacea.

சாரச சரக்கு, புளிச் சரக்குகள் அவையாவன : acid preparations viz.— 1. கிலா சத்து, bituemn, 2. நவாச்சாரம், sal.ammoniac 3. அன்னபேதி, green vitriol 4. துருசு, blue vitriol ; 5. கற்பூரம், camphor. ; 6. வெங்காரம், borax etc.

சாரச் சுண்ணம், நவச்சாரத்தை ஆதியாகக் கொண்டு வாத முறைப்படி தயாரிக்கும் ஓர் வகைச் சுண்ண மருந்து, a compound of carbonate prepared by alchamical process, with the aid of sal ammoniac as a chief of ingrediant.

சாரஸ்வத கிருதம், ஆயுக விருத்திக்காக மூலிகைகளைக்கொண்டு தயாரித்த ஓர் ஆயுர்வேத மருந்து. இதனால் ஒடுங்கிய தேகம் உறுதிப்படும், an Ayurvedic medicine prepared with the help of several herbacious drugs and prescribed for invigorating the system already emaciated and rendered weak.

சாரஞ் சுடுதல், சாரச்சாம்பல் சேகரிக்க கள்ளி முதலியவைகளை எரித்தல், burning milk hedge and other plants having alkaline properties for collecting ashes containing ammoniac for making lye.

சாரடா, வெளித் தாமரை, see ஆகாச தாமரை.

சாரடி, see சாறுவேளை ; 2. பொன்வண்ணச் சாலி; an unknown plant ; 3. ஒரிதழ்த் தாமரை, one-petal lotus.

சாரடி கேருடப்பிரியா, பொன் வண்ணச்சாலி, see சாரடி.

சாரடித் தைலம், see சாரணைத் தைலம் ; 2. துளசியாதிதைலம், which see.

சாரடை, see சாரணை.

சாரடைக் கிழங்கு, see சாரணைக் கிழங்கு.

சாரடை யிலை, சாரணையின் இலை. இது அதிக பசி தீபனத்தை யுண்டாக்கும், the leaves of trianthema having the virtue of promoting hunger.

சாரணத்தி, see சத்திசாரணை.

சாரணம், கொடியார் கூந்தல், Seetha's thread —Cuscata reflexa; 2. உலோகங்களை பற்பமாக்கல், the calcination of metals into oxides; 3 ஒரு வஸ்துவின் சாரத்தை மற்றொன்று கவர்ந்து கொள்ளுகை, drawing of the essence by one from another; 4. இரசத்தைக் கட்டி சாரணை தீர்த்தல், the act of animating a consolidated mercurial pill; 5. வாலையி லிடல், the distilling process.

சாரணன், மிருத பாஷாணம், a prepared arsenic.

சாரணி, மஞ்சிட்டி madder of Bengal—Bixa orellana; 2. தாபசி, hermit's tree—Buchanania latifolia; 3. ஓரிதழ் தாமரை, see சாரடி.

சாரணித்தல், இரசக் குளிகைக்கு சாரணை தீர்க்கும் முறை, the process of animating consolidated mercurial pills.

சாரணை, இது சாதாரணமாக மழை காலத்தில் எங்கும் முளைக்கும். எங்கும் பரவிக் காணும். விதைகள் கருப்பு, வேர் கசப்பு, உவட்டத் தக்கது. இச் சூரணத்தை இஞ்சியோடு கலந்து பேதி யாகக் கொடுப்பதுண்டு. இலையும், கொழுந்தும் கீரையாக உபயோகப் படும். இதில் இரண்டு வகை யுண்டு. வெள்ளைச் சாரணை, சிவப்புச் சாரணை. பொதுவாக இது அடியிற் கண்டபடி பல வகைகளாகக் கொள்ளப் படும், one-styled trianthema — Trianthema monogyna. It is a diffuse, prostrate, fleshy plant which is grown everywhere during the rainy season; seeds black; root tastes bitter and somewhat nauseous. The powdered root is given medicinally in combination with ginger as a cathartic. Leaves and tender tops used in food like the spinach. It consists of different kinds as mentioned below:—

1. சத்தி சாரணை, hogweed — Boerhaavia rependa.
2. வெள்ளை சாரணை, white Shauranay —Trianthema decandra.
3. சிவப்பு சாரணை, red Shauranay — Orygia decumbens alias O. trianthemoides. C.f. சத்தி சாரணை.
4. மிளகு சாரணை pungent trianthema.
5. செஞ் சாரணை, same as No. 3.
6. மூக்கரைச் சாரணை, a white creeper —Trianthema monogyna.
7. வட்டச் சாரணை, purslane-leaved trianthema — Trianthema pentandra.
8. அதி சாரணை, another species.
9. சிறு சாரணை, same as No. 2.

சாரவணை, பிடா லவணம், glass gall or fel vitriol; 2. இலகு புடத்தில் தீ யேற்றுதல், the heating process by subjecting any substance to fire, consisting of a pile of cow dung cakes not exceeding a span in height.

சாரவணைக் காதி, பிடா லவணம், see சாரணை; 2. உபரசச் சரக்குகள், the natural or mineral substances enumerated in the Tamil medicine. See உபரசச் சரக்கு.

சாரவணைக் கிழங்கு, சாரணையின் வேர்க்கிழங்கு, the bulbous root of trianthema. See சாரணை.

சாரவணைக் குதவு முப்பு, கெந்தி யுப்பு, an alchemical salt prepared from sulphur and used for animating mercurial pills.

சாரவணை தீர்த்தல், see சாரணை யேற்றல்.

சாரவணைத் தைலம், சாரணையைக் கொண்டு தயாரித்து, வாத ரோகங்களைக் கண்டிப்பதற்காக உபயோகிக்கும் தைலம், a medicated oil prepared with the aid of trianthema and used for rheumatic affections.

சாரவணை மேலேறல், இரசக் குளிகை கொண்டு ககனம் பாய்தல் அதாவது ஆகாயத்தில் பறக்குதல், to fly in the sky with the aid of animated mercurial pills.

NOTE.—This can only be done by Siddhars who are already trained in the Yoga practise to control the breath—which is essential when flying at a certain height.

சாரவணையில் பழக்கம் பண்ணல், ககனம் பாய்வதற்கு சாதனை செய்தல், to practice the art of flying in the air with the help of animated mercurial pills.

சாரவணை யூட்டல், see சாரணை யேற்றல்.

சாரணை யேற்றல், இரசத்தைக் கட்டிய பிறகு அதற்கு உயிர் கொடுத்தல். இம் முறைக்கு கொங்கணவன் வாத காவியத்தைப் பார்க்கவும், the process of animating consolidated mercurial pills. It is briefly described in Konganava works on Alchemy which may be referred.

NOTE.—The process of animating mercurial pills is for the purpose of flying in the region of the sky. Firstly, according to Bogar's work, in order to prepare such animated mercurial pills, it is essential to consolidate mercury so as not to pass off readily into vapour in the heating process.

Secondly, for purposes of animation the crucible selected should be coated inside with the necessary alkaloid paste; and then the consolidated mercury should be inserted in it, and exposed to heat or fire. When mercury is melting, the quintessence already got prepared should be inserted, so that it may be absorbed readily. This process has to be repeated as many times, as are required for the insertions of different kinds of quintessences every time so that the pill may gain the power of rising high in the air.

No books so far, either in Sanskrit or in any other language except in the Tamil Siddha works, could be found treating on this subject Even to-day, when Modern science has advanced to the highest pitch, no nation could boast of knowing such a mysterious art.

சாரணை வகை, கொங்கணவன் வாத காவியத்தில் சொல்லியபடி கட்டிய இரசத்திற்கு பல விதங்களாக சாரணை யேற்றல். அதாவது வாத முறைப்படியும் பௌதீக முறைப் படியும் உயிர் கொடுத்தல். இவ் விதமாகச் செய்வதினால் அடியிற் கண்டபடி பல காரியங்களுக் குபயோகப் படும். அவையாவன, according to Konganava works on Alchemy, the consolidated mercurial pill is animated by both chemical and alchemical processess in different ways for various purposes as mentioned below viz :—

1. இழிந்த உலோகங்களை பொன்னாகச் செய்வதுமன்றி, மாற்றுயர்ந்த தங்கமாகவும் செய்யலாம், it not only transmutes the inferior metals into gold, but also increases the refineness of gold to the highest degree.

2. காய சித்தியாகி, நரை, திரை, மூப்பு, பிணி, சாக் காட்டைக் கடக்கலாம், when it is animated, it not only rejuvenates the system, but also enables one to conquor grey hairs, wrinkles of the skin, old age and death.

3. நூறு தரம் சாரணைத் தீர்ந்தால் ஆகாயத்தில் பறக்கலாம். இதற்குத் தான் கவன குளிகை என்று பெயர், a pill animated 100 times will enable one to fly in the sky and it is known as 'Sky pill'.

4. இரு நூற்றொரு தரம் சாரணை தீர்ந்தால் மேரு முதல் திரியலாம், உலக முழுதும் சுற்றலாம். இதுவே கமனிக் குளிகை, the one animated 201 times, is capable of lifting a man to the highest possible height as Mount Himalayas thus enabling him to travel all round the Universe.

5. ஏழு தரம் சாரணை தீர்ந்தால், நெருப்பு, காற்று, தண்ணீர் இம் மூன்று பூதங்களினால் யாதொரு தீங்குமுண்டாகாது, that which is animated 7 times will make one resist the action of the 3 elements viz.—fire, air, and water.

6. பதினொரு தடவை சாரணை தீர்ந்தால் அஷ்டமா சித்தி யுண்டாகும், by animating the pill 11 times, one would gain the eight supernatural powers.

7. அநேக நூற்றுக் கணக்காக சாரணை தீர்ப்பதினால், குளிகைக்கு வட்ட முண்டாகி, தேகம் க்ஷணத்தில் மறையவும் மறுபடியும் தோன்றவும் செய்யும். இப்படி மாறி மாறி செய்யலாம். இதுவே. சொரூப குளிகை, by doing so hundreds of times, the pill becomes capable of dematerialising and rematerialising the body alternately. This is known as 'Shoruba pill'.

NOTE.—Although the processes and principles are given in the Tamil Siddhar's Works, they are not so very exhaustive in detail so as to enable one to do it practically. No doubt, the results mentioned therein will make him not only astounding but at the same time induce him to

think it to be an impossible affair. It is a great disappointment to find that in Ayurveda, not a word is spoken about this ; nor do we find any corroboration in any branch of Science whethe ancient or modern except in the works of Tamil Siddhars.

சாரணை வேர்ப் பட்டை, சாரணை வேரின் மேற் பட்டை, the outer bark of the root of trianthema.

சாரத, சாரமித்த, concentrated.

சார தந்திரம், சூடு போடும் முறை, the method of cauterization.

சாரதம், பூத மரம், devil's tree — Terminalia belerica.

சார தரு, வாழை மரம், plantain tree—Musa paradisiaca.

சாரதா, மாகாளி, false sarsaparilla ; 2. ஓர் ஆயுள் வேத நூல், an Ayurvedic science ; 3. நீர்த் திப்பிலி, water long-pepper ; 4. ஏழிலைப் பாலை, seven leaved milk plant —Alstonia scholaris.

சாரதா கற்பம், மனோசிலையைக் கொண்டு செய்யும் ஓர் காய கற்பம், a medicine prepared with the aid of red sulphur, for purposes of rejuvenation.

NOTE—The Elixir vitae usually renowned for rejuvenation is in itself a product of alchemy and something to be made in the laboratory ; its pursuit was restricted to the votaries of chemical science.

Now a days, from the similarity in purpose and also in the idea underlying each, the Elixir of life and the fountain of youth are often spoken together, as if they were interchangeable ; and had always been thus associated, but historically they are independant of each other.

சாரதி, ஆடா தோடை, malabar winter cherry—Audhatoda vesica ; 2. துருசு, blue vitriol ; 3. சிறு குமிழ், small Cashmere tree — Gmelina asiatica ; 4. ஓரி தழ்த் தாமரை, one-petal lotus — Ionidium suffruticosum.

சார தித்தல், சத்து இறக்கல், to take essence ; concentrating ; to extract.

சார தீபம், இலுப்பை, honey tree — Bassia longifolia.

சார தீவயம், கருங் காஞ்சொறி, black climbing nettle—Tragia involucrata (cannabina).

சாரத் திரயம், மூன்று வகை யுப்பு, a triad i.e. the three kinds of acid substances viz. natron, salt-petre and borax.

சாரத் திராவகம், நவாச் சாரத்தி னின்று வடிக்கும் திராவகம். இதில் இலிங்கம் பற்பமாகும். an acid prepared according to the Tamil medicine from sal ammoniac. It is capable of calcining vermilion into an oxide.

சாரத்தின் சத்துரு, கோழி முட்டை, fowl's egg ; 2. சவ்வீரம், corrosive sublimate. See சாரச் சத்துரு.

சாரத்தின் பருப்பு, } see சாரப் பருப்பு.
சாரத்தின் வித்து, }

சாரத்தின் வேர், காட்டுமாவின் வேர், root of wild mango tree ; jungle mango — Spondias mangifera.

சாரத்து மரம், கழுதை மான் புள்ளி, an unknown drug capable of binding arsenic ?

சாரத்துரு, சாரவுப்புச் சத்து மிகுதியாகவுள்ள மகாலிங்க மரம், a tree that yields abundant potash, i.e weavers beam—Schrebria swietenoides.

சாரத்தைக் கட்டி, சாரத்தைக் கட்டும் காட்டுத் துளசி, wild basil capable of binding or consolidating sal ammoniac.

சாரத்தைக் கட்டித் தமனிய மாக்கி, நவாச் சாரத்தைக் கட்டி பொன்னாக்கும், வன மிரட்டி அல்லது வனமீட்டி யென்னும் மூலிகை, an unknown wild drug supposed to bind sal ammoniac for purposes of transmuting ordinary metal into gold ?

சாரத்தைக் கட்டித் தவளம் பண்ணி, காட்டுத் துளசி, see சாரத்தைக் கட்டி.

சாரத்தைச் சாகப் பண்ணி, செவ்வலரி அல்லது செம்பக் குடத்தி, oleandar rosebay —Nerium odorum (roseum).

சாரத்தைப் பந்த மாக்கி; புனம் புளி. இது சாரத்தைக் கட்டும், an unknown drug said to bind sal ammoniac ?

சாரத் தைலம், நவாச் சாரத்தைக் கொண்டு தயாரிக்கும் மருந் தெண்ணெய், oil or an ointment cooked with alkaline ingredients ; 2. மூலிகைச் சாறுகளைக் கொண்டு தயாரிக்கும் மருந் தெண்ணெய், a medicated oil prepared with the juices of plants boiled in any oil.

சாரங்கன யோகம், கிருமிரோக நிவர்த்திக்காகக் கொடுக்கும் ஆயுர் வேத மருந்து, an Ayurvedic medicine prescribed for worm diseases.

சார நீர், கொங்கணவன் வாத காவியத்திற் சொல்லியுள்ளபடி நவாசாரத்தைக் கொண்டு தயாரிக்கும் ஓர் நீர், அதாவது கற் சுண்ணும்பை தாளித்து நீர் அல்லது பனி நீரில் கரைத்து வைத்து தெளிவிறுத்து, அத்துடன் சுத்தி செய்த நவச்சாரப் பொடியை போட்டு கடுவெயிலில் வைக்க சாரநீராம். சார நீரில் குடவஞ் தோய்க்க 11 மாற்று, a strong pungent liquid prepared from sal ammoniac, by mixing it with slaked lime exposed to night's dew, as contemplated in Konganava's treatise on Alchemy. This prepared liquid is capable of transmuting brass into gold 11 carats, 2. கார நீர், இது கட்டி, கழலை வீக்கம் இவைகளுக்கு பூசவதற் குதவும், an aqueous solution of ammonium chloride applied locally or externally to incipient abscess, indolent tumours, swelling etc; 3. மனித மூத்திர , man's urine.

சார நீறு, நவாச்சார பற்பம், a calcined powder of sal ammoniac.

சார பந்தினி, பேராமுட்டி, fragrant pavonia —Pavonia odorata.

சார பலா, பலாச, Bengal kino — Butea frondosa.

சார பாதம், கார மருந் திடல், applying acrid remedies or caustic substances.

சார புஷ்டி, மிகுதியாக சாறுள்ளது, containing much sap or essence.

சார பூமி, உப்புக் களம், saline soil.

சார போஷணம், மூலிகைகளைச் சாம்பலாக்கி தண்ணீரிற் கரைத்து தெளிந்த நீரைக் காய்ச்சி பெறித்த உப்பு, salifiable bases existing in some vegetables as proximate principles and they are obtained or extracted by burning plants, dissolving the ash so derived in water and then filtrating and boiling it, when a residue will be formed—Potash. They are also called organic or vegetable alkalies. See சாம்ப ருப்பு.

சாரப் பஞ்ச பூதம், பஞ்சபூதக் கூறுள புளிச் சரக்குகள், the five acid elements. For details see under கார சாரப் பஞ்சபூதம்.

சாரப் பருப்பு, காட்டு மாங்காய் விதை. இது மலைப் பிரதேசங்களில் விளையும் மாம் பழத்தின் விதை. வட இந்தியாவில் காஸ்மீரம், காபூல், துருக்கி, அரெபியா, பெர்ஷியா இவ்விடங்களில் விசேஷம். இவ்வூரில் விளைவது அரிதாயினும், வெளியூரிலிருந்து இரக்குமதியாகிறது 'இந்தப் பருப்பு' உடம்பிற்கு பலத்தை யுண்டாக்குவதினால், யுனானி வைத்தியர்கள் மருந்துகளிலும் லேகியங்களிலும் உபயோகிப்பார்கள். இதை பசும் பாலில் அரைத்து சாப்பிட உடம்பிற்கு வலி வுண்டாகும். அல்வா, மிட்டாய் முதலிய பலகாரம், தின் பண்டங்களிலும் உபயோகிப்பதுண்டு. இது மூத்திரக் கடுப்பு, இரத்தக் கொதிப்பை போக்கும், சுக்கிலம் இறுகும். இது காய கற்பத்துக்கு முதவு மெனக் கருதப்படும். அன்றியும், இரச வேகத்தை தணிக்கும், seed of wild mango—Buchanania latifolia. The seeds are available in hilly countries as Northern India, Cashmere, Kabul, Turkey, Arabia, Persia etc. The kernel from the seed is used in electuaries and prescribed by Vaidyans for strengthening the body. Although it is rare in our country, it is imported and used by Unani doctors in medicine and electuaries. When taken with milk it strengthens the body; and it is used in the preparation of Halwa, sweets, cakes and other eatables. It is also used in cases of discharge of burning urine excessive heat of blood. It strengthens the semen. It is also considered useful as a rejuvenating drug; 2 சீதனப் பருப்பு, piyar.

சாரப் பாரிகம், விளாம் பழம், the riped fruit of wood-apple tree.

சாரப் பூ, இதழிக்கும் பூ, sweet flower probably referring to rose.

சார மண், உழுமண். fuller's earth; 2, சுத்த மண், pure alkaline earth.

சாரமது கட்டி, சதுக மரம், an unknown tree which is supposed to have the virtue of consolidating sal ammoniac?

சார மத்தியம், நாயுருவி, Indian burr—Achyranthes aspera.

சார மற்ற, உலர்ந்த, exsuccous; 2. உருசியற்ற, insipid; vapid; 3. சத்தற்ற, sapless, unsavoury.

சாரமான, சத்துள்ள, alkaline; 2. எரியுந் தன்மையுள்ள, caustic; 3. சாறுள்ள, juicy.

சார மிறக்கல், சத்தை வடித்தல், to extract essence by distillation or other processes; 2. மென்று சத்தை விழுங்கல், to chew and swallow the juice; 3. சாறு பிழிதல், to take extract or press out the juice from plants.

சார முள்ளது, சத் துள்ளது, that which contains sap or essence; 2. சதைப் பற்றுள்ளது, pithy.

சார மூத்திரம், see சார மேகம்.

சார மூலி, சத்துள்ள மூலி, potent drug; 2. சார வுப்புள்ள பச்சிலை, a herbaceous drug containing alkaline salt; 3. சாறுள்ள வுப்பு, any drug plant with much juice.

சார மெடுத்தல், see சார மிறக்கல்; 2. சாறு வடித்தல், to express juice as from plants; 3. பலத்தைக் குறைத்தல், to reduce or remove the strength from anything; 4. சத் தெடுத்தல், to remove the vital part.

சார மேகம், சுண்ணும்பு நீர் போல் மூத்திரம் உப்பாகவே யிறங்கும் ஓர் மேக நோய். இதில் வேளைக்கு நாழுழி இறங்கும். அதை காய்ச்சினால் உப்பு படிந்து நிற்கும். இது ஒருவனை 15 வருடத்திற் கொல்லும் (யூகி. முனி. 800) the urine resembling a solution of lime or other filtered alkaline solution with excess of ammonia—Ammoni-uria. It will be discharged at a time in large quantities. It is suppoaed that this disease will kill a man in 15 year's time. (a disease in whish the urine resembles an alkaline solution filtered through a piece of linen; a morbid state of the urine in which its smell and taste resemble that of potasi.)

சாரமேக வுப்பு, சார மேகத்தினால் வருந்தும் நோயாளிக்களின் மூத்திரத்தின் அடி வண்டலில் காணப்படும் உப்பு, a white powder found in the urinary sediments and calculus — Ammonium urate $(NH_4)C_5H_3$.

NOTE.—This salt is also used in medicine. It forms an external application in cases of skin diseases and used internally in phthisis. It has to be given with great caution. This salt is also found in the excrement of birds and reptiles.

சார மேசன், கருஞ் சீந்தில், a black variety of moon-creeper—Menispermum cardifolium.

சார மேஷன், பெரிய முள்ளங்கி, large country radish.

சார மேலகம், சாரம் அதிகமாக சேர்ந்த வஸ்து, an alkaline substance.

சார மேறல், உடம்பிற் சத்து சேர்தல், to be imbued with vital powers in the system; to get enriched in vitality.

சார மேறாத, உடம்பிற் சத்து இல்லாத, not being enriched with vitality; growing poor or impoverished in the vitality of the system; 2. சத்து இறங்காத, not imbued with essence; unimpregnated.

சாரம், பட்டை, கொடி, வேர், சமூலம் இவைகளைச் சுட்டு, அச் சாம்பலைக் கரைத்து தெளிவிறுத்து கடுமையான வெயிலில் வைத்து எரித்த உப்பு அல்லது புளிச் சத்து, potash or soda obtained from the ashes derived by burning plants as a whole or their barks, creeper, roots etc. In such cases the ashes so derived are dissolved in water and then filtered and evaporated by keeping it in the severe sun; 2. சத்து, essence; 3. இனிப்பு, sweetness; 4. உருசித் தன்மை, palatableness; 5. நவச் சாரம், sal ammoniac—Ammonii chloridum of chemists; 6. சார வுப்பு, alkaline salt; caustic alkali; 7. நாகுடன் வெடி யுப்பு சேர்ந்த ஓர் கடைச் சரக்கு. இது உலோகங்களைப் பற்ற வைக்க உதவும், a mineral drug mixed with nitre sold in the bazaars. It is used by solderers and tinmen. It is a metallic cement—Hydrochlorate of ammonia; 8 கிலா மூகிப் புள், Greek patridge—Perdix rufa; 9. இரசம் அல்லது சாறு, juice; 10. மர வயிரம், the solid part of a tree; core of a tree; 11. உருக்கு, steel; 12. பூரணம், (பரி. பாஷை), the whole; omnipotent; 13. பாலாடை, the cream of milk; 14. கொட்டை முந்திரிகை, cashew-nut tree—Anacardium occidentalis; 15. பாசி, moth; 16. see காசிச் சாரம்; 17. தாழை, scrsw-pine tree; 18. see இலுப்பை, 19. செட்டி, pith; 20. உடமாக் குருவி, bird of paradise; 21. வண்ணான் காரம், washerman's lye; 22. காரச் சாம்பல், mordant; 23. ஓர் வகை மதுபானம், exudation from the flowers of hemp collected in the early

morning and prepared for use as an intoxicating drink; 24. வெண்ணெய், butter; 25. சதையை வேகச் செய்யும் கார உப்பு, any corrosive or acrid or saline substance especially an alkali such as soda or potash; 26. ஓர் வகை கருப் புப்பு, any factitious or medicinal salt commonly black.

It consists of several varieties viz:-

1. எவட்ச் சாரம், வெடி யுப்பு, salt-petre—Nitrate of potash.

2. சத்தி சாரம், an acid salt prepared with other ingredients.

3. சிவ சாரம், an alkaloid secret preparation in Siddha medicine.

4. காசிச் சாரம், a roasted or calcined mixture of three salts—Fuller's earth, nitre and sal ammoniac.

5. ஏகம்பச் சாரம், a prepared salt used in Alchemy.

6. நவட் சாரம், sal ammoniac—Ammonium chloride.

7. தும்பைச் சாரம், a salt prepared with the toombay juice as chief ingredient.

8. கார சாரம், alkali and acid.

9. இலவண கார சாரம் அல்லது சோடா வுப்பு, bicarbonate of soda.

சாரம் வாங்கல், சத்து வாங்கல், to extract essence.

சார யித்தியம், விடத் தேர், sore-eye plant—Acacia cinerea.

சார யோகம், சர்ச்ச சாரம், யவாட்சாரம், பிடாலவணம், நாபி இவைகளைச் சூரணித்து எருக்கம் பாலில் அரைத்து புடமிட்டு அசீரண ரோகத்திற்கு கொடுக்கும் ஆயுர் வேத மருந்து, an Ayurvedic medicinal powder prescribed for indigestion. It is prepared by reducing the mixture of nitre of the bibles, salt petre, glass gall and aconite into a fine powder and then grinding it with the juice of the madar plant and finally roasted in fire.

சார ரசம், சாரச் சத்து, a saline or alkaline flavour.

சாரல மாது, கருஞ் சிந்தில், black moon-creeper. See சார மேசன்.

சாரவம், எள், gingolly seed; 2. மூங்கி லுப்பு, bamboo salt.

சார லவணம், பூநீறும், கறியுப்பும் சமமாக எடுத்து கழுதை மூத்திரத்தில் புதமாய் எரித்திட்ட வுப்பு, any alkaline substance or salt derived by heating a solution of Pooneer (efflorescence salt on the soil of fuller's earth) and common salt taken in equal quantities, in asse's urine.

சாரலி, ஓர் நெல், a kind of paddy; 2. அரத்தை, galangal—Alpinia galangal.

சார வோக்கு, முனியார் கூந்தல், Seeta's thread. See சாரணம.

சாரல், குளிர் காற்று, cold breeze; 2. மலை, mountain; 3. மலைச் சாரல் mountain slopes; 4. மழைச் சாரல், breeze saturated with rain drops.

சார வச்சிரம், வச்சிரக் கல், diamond.

சார வட்டு, நவாச்சார வில்லை, ammonia tablets.

சார வல்லாதிக் குளிகை, உடம்பி னின்று வலியை நீக்கி, வாயு வினாறதும் போக வேண்டியதற்காக உபயோகிக்கும் மருந்து மாத்திரை (அகஸ்தி. வல்லாதி. 600), a carminative or a medicinal pill contemplated in Agastya's works, prescribed for removing the excess of flatulence in the system and assuaging pain.

சார விதை, மடக்குக் கட்டி என்னும் ஓர் வகை மேகக் கட்டி, a pointed venereal abscess with a depression in the centre; 2. சாரப் பருப்பு, mango nut pulp—Saccharum sara.

சார விருட்சம், கருஞ் சோர்தி, an unknown plant?; 2. நதுக் குறிஞ்சி, conehead—Strobilanthus cuspidatus.

சாராங்கம், இருள் விடு செடி, an unknown plant?

சாராஞ்சனம், சாரம் சேர்ந்த மைக் கட்டு, alkaline collyrium.

சாரா நோடல், உடம்பினிற் தங்காமல் விட்டகலல், to get rid of completely from the system as disease; to get throughly cured.

சாராம்சம், சத்து, essence; 2. குடலில் பால் போல் வெண்மையாயும், திரவமாயும், இரத்தமாக மாறக்கூடிய நிலைமையிலுள்ள துமான உணவின் அன்னரசம் (In Physiology), the milk-like fluid which is ready for conversion into blood—Chyle.

சாராயக் காடி, சாராயத்தினின்று பிரித்தெடுத்த காடி, vinegar made of alc—Alegar; 2. மதுசாரம், alcohol.

சாராயக் கேடு, குடியினால் உடம்பிற்கு ஏற்படும் ஈரல், நரம்பை பற்றிய விஷபாகக் கேடுகள், an attack of poisoning by alcoholic drinks, especially affecting the nerve centres and the liver—Alcoholism.

சாராயச் சத்து, சாராயச் சாரம். இங்கிலீஷ் வைத்தியத்தில் இதை பாவனத் திரவம் தயாரிக்க காரண வஸ்துவாய் உபயோகிப்பதுண்டு, alcohol; rectified spirit ($C_4 H_6 O_2$). It is principally employed as a menstruum in the preparation of tinctures.

NOTE.—The different varieties of alcohol or spirit are viz:—

1. Spirit of French wine or brandy—Spiritus vini gallici.
2. Absolute alchol used in chemical analysis.
3. Rectified spirit—Spiritus rectificalus used in tinctures. (sp. grav. 0·838).
4. Proof spirit used as powerful diffusible stimulant (sp. grav. 0·920)
5. Æther prepared from alcohol, a volatile liquid used as an anaesthetic.
6. Spirit of nitrous ether ($C_4H_5O,NO_3$) (sp. grav. 0·845) used medicinally as a stimulant, diaphoretic and antispasmodic. (Indian pharmocopae)

சாராயப் பற்று, சாராயத்தில் நுனி தள்ளிய மிளகாயை ஒரு பாண்டத்தில் விட்டு, காற்று புகாதபடி மூன்று மாதம் ஊறப் போட்டு எடுத்தது. இதை சீலையில் நனைத்துப் நரம்பு வலிக்குப் போட திவ்விய ஔஷதமாகும். a pungent water derived by keeping some chillies, the tips of which are chopped off, soaked in water contained in a closed air-tight vessel. It is used as an external application in cases of nervous affections.

சாராயம், மதுபானம். இதை வெள்வேல், இலுப்பை, பனை, தென்னை, ஈச்சை முதலிய மரங்களின் பட்டையிலிருந்தும், வெல்லம், திராட்சை, அரிசி முதலியவற்றினின்றும், வாலையிலிட்டு நீராகக் காய்ச்சி வடிக்கும் போதை வஸ்து. தென்னிந்திய தேசத்தில், வேலம் பட்டைச் சாராயம் தான் மிகுதி. இதை வைத்தியர்கள் தீப் புண்ணிற்கும், சுளுக்கிற்கும், வாத வலிக்கும், மேற்பூச்சு மருந்தாகவும், உள்ளுக்கு சுறு சுறுப்பிற்காகவும், போதைக்காகவும் உபயோகிப்பார்கள். இதில் அடியிற் கண்டபடி அநேக விதங்களுண்டு, arrack—arracum spirituous tenuior of chemists. In Southern India, it is generally prepaged from the bark of several trees as white acacia, bassia, palmyra, cocoanut, date palm etc. Besides, it can be extracted from jaggery, grapes, rice, etc. It is obtained by the process of distillation. What is called puttay arrack is made in great abundance. Veidyans use this as an external application in cases of burns, sprains, palsy, chronic rheumatism etc. and internally as a stimulant and an intoxicant. The following are the names of the different varieties of arrack:—

1. இலுப்பைச் சாராயம், that which is distilled from fermented juice of flowers of Bassia longifolia—Bassia arrack.
2. வேலம் பட்டைச் சாராயம், arrack distilled from the solution of jaggery mixed with the decoction of the bark of Acacia leucophlaea—Puttay arrack.
3. பத்தாவி சாராயம், Batavia arrack distilled from malted rice—Batavia arrack.
4. தென்னஞ் சாராயம், that which is drawn from the toddy of cocoanut tree—Cocoanut arrack.
5. கொழும்புச் சாராயம், the one distilled from palm juices mostly cocoanut—Colombu arrack.
6. ஈச்சஞ் சாராயம், the one distilled from the toddy of date palm—Phoenix sylvestris—Date palm arrack.
7. வெல்லச் சாராயம், that distilled from the solution of jaggery derived from the juice of various palms or from that of the sugar-cane—Jaggery arrack.
8. பனஞ் சாராயம், the one distilled from toddy of palmyra tree—Borassus filiformis—Palmyra arrack.

9. பட்டை சாராயம், distilled from solution of jaggery and with tho bark of white acacia tree — Acacia leucophlaea. This is the arrack usually sold. See. No. 2.

10. அரிசிச் சாராயம், that which is distilled from the malted rice i.e., grain of oryza sativa — Rice arrack.

11. கூந்தற்பனைச் சாராயம், sago palm arrack—that which is distilled from sago palm—Caryota urens.

NOTE I.—No. 4. is the best; No. 9 comes the next in quality; No. 10 is common in Ganjam; Nos. 3 and 5 are o her superior kinds. Arrack in common destroys all power of self-control; and gives publicity to the innermost thoughts of the intoxicated person and hence the proverb — "சாராயத்தை ஊற்றி புராயத்தைக் கேளு."

NOTE II.—The finest sort of arrack was formerly brought into India from Batavia. Another kind is imported from Colombo. Arrack is made more exciting by the addition of opium, datura and hemp preparations.

சாராயம், சீமை சாராயம். ஐரோப்பாவில் கற்கண்டு, சவ்வரிசி, அரிசி இவைகளினின்று "ஆல்கோஹால்" என்னும் சாராயம் செய்து இந்தியாவுக்கு ஏற்று மதியாகிறது. இது காற்றுப்பட ஆவியாய்ப் போகும். தண்ணீரைவிட ரொம்பவும் இலேசானது. சலத்திற்கு சேராது. மருந்துகளைச் சோதனை செய்ய இது மெத்தவும் உபயோகமானது. இது போதையையும், உடம்பிற்கு உஷ்ணத்தையும் தரக் கூடியது. மயக்கத்தைக் கொடுத்து தூக்கத்தை யுண்டாக்குவதற்கும், மூத்திரத்தை வடிப்பதற்கும் இதை உபயோகப் படுத்தலாம். அன்றியும், இரணம் வெட்டு காயம், இவைகளினின்று வடியும் இரத்தத்தை நிறுத்த மேலுக்கும் போடலாம். வீக்கத்தைக் கரைக்கும்; வியர்வையைத் தடுக்கும். இதைத் தண்ணீரிற் கலந்து பூச இரணம், வெந்நீர்ப் புண், கொப்புளம் இவைகளை ஆற்றும். மேலும் சீதபேதி, அதிசாரம், பாம்பு விஷம் இவைகளுக்கு உள்ளுக்கும் கொடுக்கலாம். ஆகவே, சில விஷங்களை முறிப்பதற்கும், க்ஷயரோகத்திற்கும் இது உபயோகப் படும். இதினின்று 'ஸ்பிரிட்' என்னும் சாராயச் சத்தும் எடுப்பதுண்டு. மேற்கண்ட சத்தை தென்னங் கள்ளு, பனங் கள்ளு, பட்டை சாராயம் இவைகளினின்றும் காய்ச்சி யெடுக்கலாம், Alcohol. In Europe, it is a general term for volatile subtances collected by distillation of fermented juice of rice, sago, canesugar etc., and the intoxicating principal is alcohol. It is a volatile liquid. It is a little lighter than water; but is not turbid when mixed with water. It is used in pharmacy for preparation of tinctures. It is both an intoxicant, stimulant and diuretic; and it also induces sleep. It zrrests the bleeding from wound, injuries and other inflammatory affections; reduces swelling, and arrests perspiration. Diluted with water, it forms an excellent lotion for cleaning wounds, scalds, blisters etc. It serves as a useful remedy in cases of dysentery, diarrhoea and in snake poison as an antidote. It is also prescribed for consumption. Any product containing a more percentage of alcohol is called spirit. Such spirits may also be prepared from the fermented juice of cocoanut toddy, palmyra toddy or from puttah arrack.

NOTE.— The alcohol 'oi commerce is the product of the alcoholic or vinous fermentation.

சாராயம், அரக்கு, shellac.

சாராயிந் தாளி, தாளிப் பனை, talipot tree.

சாராலம், எள், sessamum aeed.

சாராலி, see சாராலம்.

சாரி, அஞ்சன பாஷாணம், a mineral poison.

சாரிகம், நன்னாரி, Indian sarsaparilla; 2. புளி யீர்க்கு, tamarind leaf stalk; 3. மைனா பறவை, the myna bird.

சாரிகை, நாகண வாய்ப் புள், maina bird — Mainate.

சாரிசம், கறி யுப்பு, common salt—Sodium chloride.

சாரி சாதகன், கஸ்தூரி மிருகம், musk deer Mochus moschiferrus of the Himalayas; 2. கஸ்தூரி பூனை, Musk cat; 3. கஸ்தூரி யெலும்பு, bone, smelling like musk.

சாரி சாதம், கஸ்தூரி நாதி, a kind of musk smelling grass; 2. ஓர் மரம், musk smelling tree.

சாரிஷெபிகம், பனை கருக்கினால் ரணங்களைக் கீறுதல், making an incision with the sharp end of palmyra stalk.

சாரிஷயிகா சிகிச்சை, விரணங்களைக் கீறி அதன் மேற் பூச்சு மருந்து தயாரித்துப் பூசும் ஓர்விரண சிகிச்சை, the treating of wounds or ulcers by outward or external applications after incision.

சாரிதங்கன், சிறு கீரை, pig's greens—Amaranthus campestris.

சாரிதம், உடம்பு, the human body ; 2. உப்புச் சத்தை வாலையிலிட்டு வடிக்கல் subjecting the saline essence to distillation; 3. சாரச் சாம்பலின் திரவ மூலமாய் இறுத்தல், straining through a solution of alkaline ashes.

சாரிதா, பனிப் பயறு, a kind of wild pulse of the dholl species—Phaseolus radiatus; it is so called from its being brought to perfection by the dew.

சாரித்தல், கலத்தல், mixing; 2. குழைத்தல், to beat into a confused mass; to mash as for instance, (உ-ம்) "வாய் நீரால் சாரித் தப்பே" to mix with the saliva; 3. உறவாக்கல், to make chemically combine.

சாரிபம், நன்னாரி, Indian sarasparilla — Periploca indica; 2. சிறு நன்னாரி, a small species of sarasparilla — Hemidesmus Indicus (angustifolia); 3. மாகாளி, a kind of root, same as No. 1.

சாரி பாதி, பைத்தியத்தைப் போக்கும் ஓர் மூலிகை, an unidentified plant said to cure madness or insanity ?

சாரி பாதிதம், வெருகன் கிழங்கு, a kind of bulbous root — Arum Macrorhizon, Cf. மெருகன் கிழங்கு.

சாரிபா பர்ணம், வெள்ளை நன்னாரி இலை. இதை யரைத்து பல்லில் அழுத்தி வைக்க புழுக்கள் சாகும், white sarsaparilla — Hemidesmus genus; its leaf when ground and pressed into the gum of the teeth kills the germs in cases of pyorrhoea

சாரி பாவாஞசர், மாகாளி, see சாரிபம்.

சாரி புத்தேக்கி, see சாரி புத்தேன்.

சாரி புத்தேன், எட்டி, nux vomica—Strychnos nux-vomica

சாரி பூதிகம், காஞ்சிரம் அதாவது எட்டி, see சாரிபுத்தேன்.

சாரிபேர், see சாரிபாதி.

சாரிபை, நன்னாரி, sarsaparilla—Periploca indica alias Hemidesmus indicus.

சாரியம், see சாரி புத்தேன்; 2. நன்னாரி, see சாரிபை.

சாரியல், இந்துப்பு, rock-salt; 2. நன்னாரி, fragrant root — Hemidesmus indicus. See சாரிபை.

சாரியா, அகத்திக் கீரை, leaves of sesbane —Sesbania grandiflora.

சாரியா யத்தம், see சாரிபாதி.

சாரி யுத்தே, காஞ்சொறி, climbing nettle— Tragia involucrata.

சாரி யெலும்பு, கறட் டெலும்பு, பாதத்தின் மேற் பக்கத்து எலும்புகளில் ஒன்று. இது பாதத்தையும் காலையும் இணைக்கும், Astragalus; a bone of the foot acting like a liver.

சாரிரத்தை, see சாரிப் புத்தேன்.

சாரி வசந்தம், கழற் கொடி, grey-bonduc— Caesalpinia bonducella.

சாரிவம், பால் வள்ளிச் செடி. இது குணத்தில் நன்னாரியைப் போன்றது. வேலிகளில் பார்க்கலாம், dark-blue creeper—Ichnocarpus frutescens. It is a plant found common in hedges. The root resembles sarsaparilla in quality.

சாரி வாமம், ஆகாயம், the sky.

சாரிஸி, இசங்கு, four-spined monetia— Azima tetracantha.

சாரீர, உடம்பைப் பற்றிய, relating to the body; physical.

சாரீ ரகம், சரீரம், body; 2. அங்காதி பாதம், anatomy; 3. உடம்பின் சம்பந்தமானது, that which relates to the body.

சாரீர சுரம், உடம்பில் தகதகப்பை யுண்டாக்கிப் பிறகு வரும் சுரம், fever preceded by a glowing sensation of the body.

சாரீர சூத்திரம், ஓர் வடமொழி ஆயுள் வேத நூல், an Ayurvedic science written in Sanskrit; 2. மனித உடம்பின் அமைப்பையும் வேறுபாடுகளையும் பற்றி சொல்லும் நூல், the science which deals with the structure and the phenomena of the human body—Physiology.

சாரீரத்தை, எட்டி, see சாரிப் புத்தேன்

சாரீரம், சரீரம், body; 2. இடைக் காடர் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல், a treatise on medicine compiled in Tamil by Idaikkadar, a Siddha; 3. உடம்பின் சம்பந்தமானது, that which relates to the body; 4. ஆன்மா, the soul; 5. குரல், voice; 6. இனிய குரல், sweet voice (in music).

சாரீலம், மலம், excrement; feces.

சாரு, கிள்ளை, parrot.

சாருகம், குருவக் கொல்லு, an unknown creeper probably of the species of giants rattle—Entada scandens; 2. see சவுட் டுப்பு.

சாருகன், கொலை செய்வோன், one who kills; murderer.

சாரு குலம், தண்ணீர்ப் புரசு, an unknown tree, probably a species of palaus—Butea frondosa.

சாரு சகம், கறியுப்பு, common salt.

சாருசம், கல் லுப்பு, crystallised sea-salt.

சா ருசி, சிற் ருமணக்கு, small castor seed—Ricinus communis (Fructibus minoribus of).

சாருணி, மஞ்சிட்டி, butter seed tree—Bixa orellana.

சாரு தாரி, வெள்ளை கரிசலாங் கண்ணி, white-flowered eclipse plant—Eclipta alba.

சாருபம், see சாருசம்.

சாரு பலம், கொடி முந்திரிகை, grape vine—Vitis vinifera.

சாரு மாட்சிகம், முந்திரிகை, cashew nut—Anacardium occidentale.

சாரு லோசனம், மான், deer.

சாருவர்ணி, முடியார் கூந்தல்; கொடியார் கூந்தல், seetha's thread—Cuscata reflexa.

சாருப கரணி, } கருமந்தை, black dhatura
சாருப கன்னி, } —Dhatura fastuosa.

சாருப மண்டலம், சூரிய மண்டலம், orb of the Sun; 2. உடம்பிலோர் தானம். ஆகமப்படி இது வயிறு, இருதயம் இவ் விரண்டையுங் குறிக்கும், (In Agama Philosophy), that region in the human body referring to the stomach and the heart.

சாரூபம், பொன், gold; 2. கல் லுப்பு, see சாருசம்; 3. see சாரூப்பியம்.

சாரூப்பியம், சிவாகம நூலின்படி சத்வ குணமாக விருக்கும் ஓர் பதவி, (In Saiva Philosophy), one of the four states i.e., the third state of bliss or beatitude; identity with the deity in form; assimilation to the deity. C.f. சாயுச்சியம்.

சாரூரகம், see சாருசம்.

சாரூ ரசம், கல் லுப்பு, crystallised sea-salt; salt in lumps or masses. See சாருசம்.

சாரோகதம், விஷத்தை மாற்று மருந்து. இது சாம்பலுப்பி லிருந்து சாரத்தைப் பிரித்துத் தயாரிக்கப் படும், an antidote prepared by extracting the alkaline particles from the ashes of plants.

சாரோக்கிசம், செய்த கண்ணாடி, a manufactured glass.

சாரோச்சம், கட லுப்பு, sea-salt.

சாரோஞ் ஜனம், சாரம் சேர்ந்த அஞ்சனம், an alkaline unguent

சாரோம்பு, சாரத் திரவம், an alkaline fluid.

சாரை, துருசுச் சுண்ணம் என்பதைக் குறிக்கும் ஓர் பரிபாஷைப் பெயர், a secret name referring to a calcium compound prepared from blue vitriol; 2. வெண்சாரை. இதுவும் ஓர் பரிபாஷை. இது வாயுவைக் குறிக்கும், (In Yoga Philosophy), a secret term used figuratively for respiration in Yoga practice; 3. இது மாக்கொட்டையி னுள்ளிருக்கும் பருப்பு, the pulp of the seed of wild mango — Buchanania latifolia; 3. ஓர் பால் மரம், a milky tree—Holigarna ferrugina.

சாரை, சாரைப் பாம்பு. இது நாகத்தோடு பிணையும் ஆண் பாம்பு. ஆகவே, நாகத்தோடு வாழும். கபில நிறம் அல்லது மஞ்சள் நிறம், வயிறு பச்சை அல்லது வெளிர் மஞ்சள் நிறம். இது சாதாரணமாய் சீறும் தன்மையது கடித்தால் அவ்வளவு அபாயமல்ல ஆயினும், இப் பாம்பு 40 வயதிற்கு மேற்பட்ட மனிதனைக் கடித்தால் கண் குருடாகும். இது நீண்ட வுடம்பும், வேக நடையையும் உடையது. மனிதனை வாலால் அடிக்கும் அல்லது பாத முதல் மார்பு வரை சுற்றிக் கொண்டு இடுப்பை ஒடிக்குந் தன்மையையும் உடையது. இதில் அனேக விதமுண்டு, [illegible], rat-snake, whip snake—Ptyas mucosus. It is a male

cobra often found living in union with cobra—Cobra de capells; and so, it is believed to breed with it. It is brownish or yellowish; belly greenish or yellowish white. It is of fierce habits and is always ready to bite, but not dangerous; its bite occasions blindness in persons above the age of forty. It has a long body and creeps fast. It used to strike with its tail and sometimes encircles or winds round a man from his foot to the chest and breaks his hip. The following are the different varieties of this species:—

1. கருஞ் சாரை, black rat snake.
2. மலஞ் சாரை, hill rat snake.
3. பெருஞ் சாரை அல்லது சாரைக் கடா, large rat snake.
4. நெடுஞ் சாரை, long rat snake.
5. வெண் சாரை, white rat snaka.
6. மஞ்சட் சாரை, yellow rat snake.
7. செஞ் சாரை, red rat snake.

NOTE.—When young, this snake is of a delicate green colour unlike the adult. It has a reticulated pattern on the tail. It frequently enters the dwellings of persons in search of mice (சுண்டெலி) rats and young fowls. When irritated it utters a peculia r sound.

சாரைக் கடா, சாரைப் பாம்பு, see சாரை.

சாரைக் கல், கானகக் கல். இது கரும்புள்ளி களுடைய கல். வேகமாய் ஓடும் போது நிறுத்தலாம். இது உபரசச் சரக்குகளில் ஒன்று, a black-spotted stone. It has the peculiar virtue of stopping one while running fast. It is one of the 120 kinds of natural substances contemplated in Tamil Medicine. See உபரசச் சரக்கு.

சாரைக் கொழுப்பு, சாரைப் பாம்பின் கொழுப்பு. இது மருந்திற் குதவும், the fat of the rat snake. It is used in Medicine.

சாரைக் கோளி, மாங்கிஷம், flesh.

சாரை தோஷம், உடம்பிற் சதையில் ஏற்படும் ஓர் நோய், a skin disease.

சாரைப் பருப்பு, see சாரப் பருப்பு.

சாரைப் பாம்பு, see சாரை.

சாரைப் போது, சாரை யினம் rat snake in common—Leptorhytaon jara.

சாரை மேது, பெருங்காயம், asafoetida.

சாரை யுப்பு, கல் லுப்பு, crystallised sea-salt.

சாரை வாலன், எருது, bullock; 2. ஓர் வகைப் புகையிலை, a kind of tobacco.

சாரோசி, நவச்சாரம், sal ammoniae — Hydrochlorate of ammonia.

சாரோ தகம், see சாரை யுப்பு.

சார், ஓர் மரம், a tree; 2. see சாறு; 3. அழகு, beauty.

சார்கேச புஞ்சம், இலவம் பிசின், the gum of silk-cotton tree—Bombax malabaricum.

சார்க் ககம், see சார்க்கரம்.

சார்க் கரம், கற்கண்டு, candied sugar; 2. பாலாடை, milk cream; 3. see சர்க்கரை.

சார்க் களம், ஆதொண்டை, Ceylon caper—Capparis horrida.

சார்க் காரி, தழுதாழை, wind-killer— Cleodendron phlomoides.

சார்தல், அணுகல், approaching; 2. புணர்தல், having sexual intercourse.

சார்த் தூலம். ஓர் பறவை, a bird? 2. புலி, tiger.

சார் பறுத்தல், பற்று அறுத்தல் அதாவது துறவறம் பூண்டல், renouncing the world and entering the life of an ascetic.

சார்பிற் றோற்றம், மரபி லுண்டானது, emanation by natural process as for instance, the offspring from the parents; saplings from the root of a tree etc.

சார்மாண்டல், இருள் விடு செடி, an unidentified tree?

சார்வச்சிர லவணம், சுத்தி செய்யாத சோடா வுப்பு, impure carbonate of soda.

சார்வரி, நரிப் பயிறு, fox gram — Rothia trifoliata.

சார் வலை, see சாறு வேலை.

சார்வாகன், உலக சம்பந்தமான லௌகிக தத்துவங்களில் ஈடு பட்டவர். இவர் இச்

கொள்கையைப் பற்றி சர்வதரிசன சங்கிரகம் என்னும் நூலை இயற்றி யுள்ளார். ஆகவே, இக் கொள்கையைச் சார்ந்தவர்கள் பிரத்தியட்சம் அதாவது நேரில் பார்ப்பது தவிர பிரமாணங்களை ஏற்றுக் கொள்ளார். நான்கு பூதங்களாகிய மண், நீர், நெருப்பு, வாயு இவைகளையும், இவையின்று மனிதனுக்கு ஏற்பட்ட அறிவு முதலியவைகளையும் ஒப்புக் கொள்ளுவார்கள். ஆனால் கடவுள் என்பது ஒன்று உண்டு என்பதைத்தான் ஒப்புக் கொள்ளார். ஆகவே, இவர்கள் பிரத்தியட்சமாய் காணக்கூடிய வஸ்துக்களைத் தவிர, காணக் கூடா வஸ்துக்களையும், யூகிக்கக் கூடிய விஷயங்களையும் ஒப்புக் கொள்ளாத ஓர் வகை நாஸ்திக சம்வாதத்தைச் சேர்ந்த வர்க ளாவார்கள், Sarvakan—the founder of the materialistic school of Philosophy and is the author of the work Sarwa Dharshana Sangraham. They only accept what is before them and reject all the inferences, i.e. Pramanams. They admit only the four elements viz.—earth, water, fire and air and the intelligence derived therefrom. They will not accept only the existence of God. So, they are in a way belong to a class of aethists of a materialistic nature, accepting only the visible things and reject all others.

NOTE.—He can be compared to Pyrrho and Epicurus of Greece; and as such, belongs to a materialist school of Philosophy. They affirm the soul is not different from the body; and that all the phenomena of the world are spontaneously produced without the help of the supposed unseen. They deny the existence of God or any divine being as the first cause.

The earth, the visible sky, the expanse of either, the sun, the moon are said to be self-produced. They never believe Karma or the rewards and punishments after death. Formerly, they were divided into eleven classes—Sowntrauntican, Nigrantha Vathee etc.

சார்வாய், அறுத்து அவித்த பனங்காய், palmyra fruit cut and baked.

சார்வாழி லாசம், பச்சோந்தி, green lizard—Chameleon.

சார்விருட்சம், செருந்தி, golden champauk—Uchna squarrosa.

சார்விழி காசம், கீரிப் பிள்ளை, mungoose.

சால் கருப்பம், கடல்நுரை, see சாலம்.

சாலகம், இளம் பூ வரும்பு, flower bud; 2. சிறு குறிஞ்சா, small Indian ipecacuanha—Gymnema sylvestris; 3. சிலந்திப் பூச்சி வலை, spider's nest.

சாலகி, ஆச்சா, ebony tree — Diospyros ebenaster.

சாலகியம், கூந்தன் குதம்பை, Indian lantana—Lantara indica.

சாலக்கிரந்தபம் அழற்சியா லுண்டாகும் ஓர் வகை சரும நோய், a kind of erysipelas.

சாலக் கிராமம், ஓர் வகை பூசிக்கும் கல். இது இமயமலைக் கருகினுள்ள கந்தகூட பர்வதத்தின் நதிகளில் உற்பத்தியாகும். வைஷ்ணவ சம்பிரதாயப்படி, இதில் அனேக வகைகளுண்டு—இலட்சுமி, நாராயணி, வாமனம், தாமோதரம், நரசிங்கம் முதலியன. மேற்படி மலையின் தீரங்களில் இவை ஏராளமாய்க் கிடைக்கும். இது விஷ்ணு பூசைக் குறித்தானது. சில சடங்குகளுக்கும் உபயோகமாகும். இவைகள் கருப்பாயும், உருண்டையாயும், சில விடங்களில் புழுவரித்ததைப் போல் துளைகள் விழுந்தும் இருக்கும். இத் துளைகளையும், வளைந்த கோடுகளையுங் கருதி தான் விஷ்ணு ரூபத்தை நிர்ணயிக்கப் படும். இக் கல்லை பக்தியோடு பட்டுத் துணியில் சுற்றி பத்திரப் படுத்துவார்கள்.

இது மாதிரியே, மஞ்சள் அல்லது பொன்னிறம் போன்ற அண்ட வடிவமான ஓர் இனக் கல்லு முண்டு. அதில் சிலது சிவ பூசைக்கும் உரியவை. ஆனால் விக்கினேஸ்வர பூசைக்கும் உரித்தானதற்கு கணநாதம் என்று பெயர். இவைகளைப் பூசிப்பதினால் அனேக பாக்கியங்களும், நன்மைகளும் உண்டாகு மென்பது நம்பிக்கை. இவைகள் நேபாளத்தில் அதிகமாகக் கிடைக்கும், a fossil with the impressions of ammonites having mystic virtues. Stones of this species are found in certain rivers of Gandaka Hills near the Himalayas. They are especially connected with Vaishnava doctrine. The principal sorts are—Lakshmi, Narayani, Vaumanan, Damodar, Narasingam etc. Their occurrence in abundance in mountain torrents has been long known. They are used in the worship of Vishnu as well as in the funeral and other ceremonial occasions. They are black and round with one or more perforations.

According to the number of perforations and the nature of spiral curves on

each, the various forms of Vishnu are determined. They are preserved being wrapped up in a clean silk cloth and worshipped occasionally. In the same way, there are certain stones yellow or golden-coloured and oval in shape representing the God Shiva; and the globular cornelian representing the Vigneswara is known as "Gananatha". They are likewise worshipped; and great virtues are attributed to their worship. They are found in great abundance in Nepaul.

NOTE.—They are fossils of extensive genus coiled up by several curves with impression of ammonites. They are akin to eagle-stones of the ancients. They are prized according to their sin-expelling properties or other virtues attributed to them. They are worshipped and reverred by the Vaishnavas as a representation of Vishnu being produced from the semen which flowed out as a river from the sexual connexion of Siva with Vishnu in the form of a female.

சாலக் கிராமம், தமிழ் வைத்தியத்தில் கூறியுள்ள 120 சரக்குகளில் ஓர் உபரசச் சரக்கு. இது ஓர் மீனின் ஓட்டினின்று சமைந்தது. இது பொன்னை செம்பு நிறமாக மாறும்படிச் செய்யும், according to Tamil Medicine, it is one of the 120 kinds of natural substances; it is a fossil shell of an extensive genus of extinct cuttle-fishes, coiled in a plane spiral—Ammonite. It is supposed to convert gold into copper colour.

சால் சாகம், குங்கிலிய மரம், black dammer—Shorea robusta; 2. மரா மரம், seaside Indian oak—Eugenia racemosa.

சால சாரம், பெருங்காயம், asafoetida; 2. ஓர் மரம், an unknown tree?

சாலச் சிறந்தது, மிக்க நல்லது, that which is much superior.

சால சங்கம், காட்டு பேணி அதாவது காட்டு மாடு, wild buffalo—Gavacus gaurus.

சால நிரியாசம், குங்கிலியம், saul dammer—Shorea robusta.

சால பரணி, கடற்பாலை இலை. இதற்கு சுரத்தையும் சலிப்பையும் நிவர்த்திக்கும் குணமுண்டு. இதே குணம் வாய்ந்த மற்ற மூலிகை அல்லது சரக்குகளோடு சேர்த்து கஷாய ரூபமாகக் கொடுக்கப் படும், Indian medicago—Desmodium triflorum alias D. gangeticum. The plant is a febrifuge with anti-catarrhal properties. It is given in the form of a decoction with other plants or ingredients having similar properties.

NOTE.—The plant contains a yellow resin which is soluble in alkalies but precipitated by acids.

சால பாரம், மரா மரம், see சால சாகம்.

சாலப் கிழங்கு, பேதிக் கிழங்கு, Indian jalep or turpeth root—Ipomaea turpethum.

சாலப் செடி, சிவதைச் செடி, jalap plant—Ipomaea turpethum alias I. purga.

சாலப் தூள், சிவதைச் சூரணம், jalap powder.

சாலப் பகம், நாவல், jambo tree — Eugenia jambolina.

சாலப்பு, சிவதை, Ipomae purga. See சாலப் செடி.

சாலப் பூச் செடி, பேதிக் கிழங்கு, purgative root; true jalap — Exogorium alias Ipomaea purga.

சால மரம், குங்கிலிய மரத்தை போன்ற ஓர் மரம், a tree like Indian dammer, Bastard sal—Shorea talura.

சால மரித்திரன், see சாலமலி.

சால மலி, இலவு, silk-cotton tree—Bombax malabaricum; 2. இலவம் பிசின், the gum of silk-cotton tree.

சால மலி பத்திரர், ஏழிலைப் புன்னை, seven-leaved poon—Alstonia scholaris.

சாலமலி னிருச்சி, இலவம் பிசின், gum of silk-cotton tree.

சால மாளிகை, சீனத்தில் இருக்கும் ஓர் கட்டடம். இதில் இறந்தவர்களைக் காண்பிப்பதும் தவிர அவர்களோடு பேசலாம், a magic show-room in China where the dead are not only exhibited but they are also made to converse with the people.

சால மேனி, see சாலக் கிராமம்.

சாலம், கடல் நுரை, sea-froth engendered by submarine fire; 2 நரம்புக் கூட்டம், (*In Anatomy*), plexus of nerves: 3. சிறு கண்ணறை, cells in the body; 4. கருச்சா மரம், ebony tree—Diospyros ebenaster; 5. இளம் பூ அரும்பு, flower-bud;

6. சால வித்தை, legerdemain; 7. மாய வித்தை, magic art ; 8. அகஸ்தியர், புலிப்பாணி முதலிய சித்தர்கள் செய்த சால நூற்கள், treatises on Magic compiled by several Siddhars as Agastya, Pulippani and others ; 9. வெண் கடம்பு, white Indian oak — Eugenia racemosa ; 10. மரப் பொது, tree in common ; 11. சிவதை, true jalap—Ipomaea purga ; 12, குங்கிலியம், Indian dammer —Shorea robusta ; 13. காட்டுக்குந்துரு, false frankincense— Hardwickia binatia ; 14. மா மரம், mango tree — Mangifera indica ; 15. குருதி கடம், (*In Physiology*), blood corpuscles ; 16. செடி, a shrub ; 17. சமுத்திராப பழம், Andaman Indian oak—Barringtonia racemosa ; 18. மாமரம், Ceylon ebony ; 19. வைத்திய நூல், medical science ; 19. வலை போன்ற செந்நிற அறைகள் வாய்ந்த கண்ணின் வெள்விழி, the white part of the eye with a net work of small hard cells of a red colour ; 18. குறளி வித்தை, jugglery ; 19. மை வித்தை, conjuration.

சாலம், உண்மையாகவே, மானிட தேகமானது ஆரம்பத்தில் நாதம் அல்லது சினைப் பையிலிருந்து தான் ஆரம்பிக்கிறது. ஆகவே, இந்த பையில் நாதத்தை யொத்த சிறு கண்ணறைகளைக் காணலாம். இதற்கே சாலம் அல்லது பை என்று பெயர். இப்பைகளில் சிறிய சிறிய கொப்புளங்களையும் காணலாம். இதுதான் பீஜ அணு அதாவது உயிருடம்பின் ஆதி மூலப் பொருளாகும். வாகட ரூபமாய் பார்க்கும் அளவில் இப்பீச அணுவிற்கும் வெண் கருச் சதுக்கும் வித்தியாசமே யிடையாது. இது ஒன்றோ பிரிந்து பலவாகும் தன்மையது. இச் சாலங்களே தசை ரூபமாக மாறி, ஒவ்வொரு அவயங்களிலும் சேரும். இத் தசை ரூபததில் முக்கியமானது இரண்டு, அதாவது தசை மூலம், நரம்பு மூலம். ஒவ்வொரு தசை ரூபமும் ஒரு காலததில் அனேக சாலங்கள் நிறைந்ததாகும். ஆகவே, கருப்பிண்டமும் அது போலவே ஆரம்பத்தில் சாலங்களின் தொகுப்பே யாகும், the body of a man in fact commences as an ovum or egg containing a spheroidal mass of protoplasm in which a large nucleus is imbedded. These protoplasmic body is divided and multiplied just like the nucleus ; and they become seperated one for each nucleus. These cells constitute a tissue and each tissue is variously distributed among the several organs in the embryo, and the chief of them are the muscular and the nervous tissues. So every tissue was once a mass of such cells more or less closely packed together and so, the whole embryonic body to start with was at one time nothing but an aggregate of such embryonal cells.

NOTE 1.—Cells are generally delicate masses of protoplasm each containing a nucleus. It is defined as a small mass of protoplasm with a membraneous envelope forming the structural unit in the tissues of animals and plants. These cells vary in size. being cylinderical. conical cubical, spheroidal, ellipsoidal polygonal spindle-shaped, hemi-spheroidal, ellipsoidal etc; and their location are sometimes far apart, very near or even in contact with one another especially when they are flat. In size some cells are small, while others are large or even larger.

NOTE 2—Cell is one of the minute protoplasmic masses which make up organised tissue, consisting of a circumscribed mass containing a nucleus. So, protoplasm is the only form of matter in which life is manifested.

சாலம்பம், ஓர் மரம், an unknown tree ?

சாலம் பிசினி, குங்கிலிய மரப் பிசின், resin of Indian dammer — Shorea robusta ; 2. குக்குலு அதாவது மைசாட்சி மரத்தின் பிசின், buffalo googal — Balsmodendron roxburghii.

NOTE—குங்கிலியம் is not the same as குக்குலு. However, it is used synonymously by some anthors because of the kindred properties of the resin of both the trees.

சால வித்தை, மந்திர வித்தை, magic art ; 2, கண் கட்டி வித்தை, jugglery.

சால வித்தை செய்தல், மாய வித்தைக் காட்டல் அதாவது குறளி வித்தை, jugglery ; 2. கண் கட்டு வித்தை, an adroit trick performance of magic causing illusion —Legerdamain etc.

NOTE.—Jugglery is attributed to the power of a dwarf demon, which retaining the materials entrusted to it, gives them one by one to the juggler as he wants them.

சால விருட்சம், ஆடா தோடை, Malabar winterchery — Adhatoda vesica; 2 ஆதண்டை, Ceylon caper — Capparis horrida.

சால வேஷ்டை, see சால நிரியாசம்.

சாலா, see சாலா மரம்.

சாலாக்கிய சிகிச்சை, உடம்பின் மேற் பகுதியில் உள்ள தலை, கண், காது, மூக்கு, தொண்டை முதலிய அவயவங்களின் நோய்களைக் குறிப்பிட்டு ஆயுர் வேத முறைப்படி செய்யும் வைத்தியம், an Ayurvedic treatment accorded for diseases of the organs over the clavicular region, such as head, eye, ear, nose, throat etc.

சாலாக்கிய தந்திரம், மார்பின் மேற் பகுதியாகவுள்ள சிரசின் உறுப்புகளாகிய முகம், காது, கண், மூக்கு, வாய், தொண்டை இவைகளின் நோய்களைப் பற்றிக் கூறும் ஆயுர் வேத நூல், an Ayurvedic treatise on the diseases of that portion of the body above the chest such as, the face, eyes, ear, nose, mouth and the throat—Surgery minor.

சாலாங்க பாஷாணம், ஓர் பிறவிப் பாஷாணம், a mineral poison; a kind of native arsenic.

சாலாங்கம், see சாலாங்க பாஷாணம்.

சாலானி, குக்கிலியம் See சாலாம் பிசின்.

சாலா மரம், see சால விருட்சம்.

சாலா மிசிரி, ஓர் செடியின் கிழங்கு. இதை ஓர் கடைச் சரக்காகக் கொள்ளப் படும். இது செங்கடல் வழியாய் எகிப்து தேசத்திலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி யாகும். அன்றியும், பர்ஷியா, ஆப்கனிஸ்தானம் இவ்விடங்களிலும் விளையும். இதை யுனானி வைத்தியர்கள் இலேகிய மருந்தில் மிகுதியாக உபயோகிப்பார்கள். முக்கியமாக தாது விருத்திக்கும் உடம்பை போஷிப்பதற்கும் உபயோகமாகும். இதை உப்பு தண்ணீரில் விட்டு, உப்பின் கரிப்பை மாற்றும், சுத்த ஜலமாக மாறுமென்பது அபிப்பிராயம். இதை கஞ்சியாகக் காய்ச்சி மெலிந்தவர்களுக்குக் கொடுப்பதுண்டு. இதற்குப் போலியே மருந்துக் கடைகளில் போலிச் சரக்கு விற்கப் படும். உருளைக் கிழங்கோடு மற்றும் பல சரக்குகள் சேர்த்து சாலாமிசிரியைப்போல் பார்வைக்கு தோன்றும்படி செய்து போலியாய் விற்பார்கள். ஆகவே, கவனித்து வாங்க வேண்டியது, the bulbous root of Salep—Radix satyrii alias Eulophia herbacea. It is imported into India from Egypt through the Red sea. It is also grown in Persia, Afghanistan etc. It is frequently used by Unani doctors in electuaries; it is a nutritive and an aphrodisiac. Mixed with salt water, it is supposed to remove the saline taste of water. It is useful in preparing *conjee* for convalescents. Substitutes prepared chiefly with potato mixed with other ingredients are sold fraudulently in bazaars; and so, great care and caution is necessary before purchase.

NOTE.—It is known by several names viz. Bamboo root, Egyptian salep, Fox's testicles, Oriental salep, Salep misry whitlow root etc. The chief constituent of salep is a kind of mucilage.

NOTE.—In Malayalam, it is known as (காட்டுத் தேக்கு வாழை) wild teak parasite The bulb radix is used as a vegetable drug and is simply nutritive. Hindus ascribe great virtues as an-aphrodisiac; and the idea is derived from the tubers having a resemblance in shape to the testes.

சாலாம்பம், கருடக் கொடி, Indian birthwort—Aristolochia indica.

சாலா மிருகம், நரி, fox; 2 நாய், dog, 3. மான், deer.

சாலாம் பிசின், see சாலா மிசிரி; 2. குக்கிலியம், dammer resin — Shorea robusta. See சாலம் பிசின்.

சாலா விருகம், குரங்கு, monkey; 2. பூனை, cat.

சாலானு சாரகம், கல் மரம் அதாவது கருஞ் சந்தனம், black sandalwood.

சாலான் பிசின், see சாலாம் பிசின்.

சாலி, கள், toddy: 2. சம்பா நெல் அதாவது பொன் வண்ணச் சாலி, paddy of gold colour: 3. புனுகு சட்டம், civet; 4. மரமடம், see சால சாகம்; 5. சுக்கு நாறி, ginger grass; 6. வேல மரம், babool tree — Acacia genus; 7. செம்மை, West Indian prickly broom — Parkinsonia aculeata.

சாலிகம், சம்பா நெல், champa paddy—Oryza sativa; 2 சஜ்ஜி உப்பு, soda.

சாலிசா, பட்டிலவு மரம், silk-cotton tree — Bombax Malabaricum.

சாலி கோத்திரம், குதிரை, horse.

சாலிகை, நாய் மரம், french honey-suckle — Desmodium genus.

சாலிக் கண்ணி, அவுரி, indigo—Indigofera tinctoria.

சாலி பரணி, பெரு மல்லிகை, large jasmine —Jasminum arborescens (latifolia).

சாலி பிட்டம், சோற்றை நெய் அல்லது நல்லெண்ணெயிற் கலந்து முதலாகக் கொள்ளும் உணவு, the first morsel of food mixed with gingelly oil or ghee taken just before the regular meals.

சாலி மரம், குடைவேல் மரம், arrow thorn—Acacia planiforum.

சாலியப் பாக்கு, see சாயப் பாக்கு.

சாலி யன்னம், பொன் வண்ணச் சாலி என்னும் நெல் வரிசியாற் சமைத்த சோறு, rice from the gold-coloured species of paddy named 'Sauli' boiled and used food

சாலி பாலின் பால், கபில பசுவின் பால், milk of brown cow.

சாலி யோசம், ஓர் வகை முல்லை, a species of jasmine.

சாலி யோதனம், சாலி அதாவது பொற்சாலி யரிசியினால் சமைத்த பொங்கல். See சாலி யன்னம்.

சாலினம், தாமரைத் தாது, filaments of the lotus.

சாலினி, பீர்க்கு, common luffa — Luffa acutangularis; 2. பேய்ப் பீர்க்கு, bitter luffa or wild luffa—Cucurbita acutangulus; 3. வலைக் கண் கட்டி என்னும் ஓர் மேகக் கட்டி, a venereal abscess with sinuses like the meshes of a net.

சாலீகம், சந்தனம், sandalwood—Santalum album.

சாலீனம், தாமரைக் கிழங்கு lotus root.

சாலுகம், சாதிக் காய், nutmeg — Myristica fragrans, 2. தாமரைக் கிழங்கு, see சாலீனம்; 3. வெள்ளாம்பற் கண்டு, tubers of nymphae lotus (water-lily).

சாலு மாலிகம், மாவி லிங்கம், lingam tree.

சாலூகம், see சாலுகம்.

சாலூரம், தவளை, frog; 2. சாதிக்காய் see சாலுகம்.

சாலேகம், சிந்தூரம், red-oxide; 2. பூ வரும்பு, flower bud: 3. சந்தனம், sandal—Santalum

சாலேசரம், வெள்ளெழுத்து அதாவது மனிதர்களுக்கு 45-50 வயதில் கண்ணொளி மழுங்கி பார்வை குறைந்து தோற்றல், error of refraction in men of 45 50 years of age in which the eye-sight, from growing inelasticity of the lens, is consequently diminished. In popular language it is called old sight—Presbyopia; 2. கண் புகைச்சல், short-sight—Amaurosis; 3. திமிர நாசை. imperfect vision.

சாலேயச் சாலம், வெந்தயம், dill seed; fenugreek—Trigonella fenugraeceum.

சாலேயக் குழம்பு, சேர்வை அல்லது கலப்புச் சந்தனம், a perfumed sandal paste.

சாலேயணம், சிறு தேக்கு, small teak—Cleodendron serratum: 2. சின்ன முள்ளங்கி, small radish — Blumea areta. Cf. கவற்று முள்ளங்கி; 3 அரைக் கீரை, garden spinach — Amaranthus gangeticus; 4. வெள்ளை வெங்காயம், white kind of onion.

சாலேயம், சிறு தேக்கு, bushy fire brand teak ' 2; சின்ன முள்ளங்கி, wall radish—Blumea aurita. See சாலேயணம்.

சாலை, வைத்திய சாலை அதாவது வைத்தியத் தொழிலுக் குண்டானபடி நோயாளிகளை சிகிச்சை செய்வதற்கும், அவர்களுக்கு மருந்துகள் தயாரிப்பதற்காகவும், மற்று முண்டான வசதிகளைச் செய்ய வேண்டி பல வாறுக அமைக்கப் பட்ட தனிமையான இடங்கள், அவையாவன, Medical Institute including the Hospital and the several other departments intended for treating the patients and preparing medicine for them and also to meet other requirements viz:—

I. பாகசாலை—இவற்றிலுள்ள பல அறைகளாவன, pharmacy—the several departments constituting this are:—

1. மருந்து சாலை, drugs room.
2. துலைச் சாலை; weighing room.
3. புனித சாலை, cleansing room.
4. உரற் சாலை, pounding room.
5. அரைப்புச் சாலை, grinding room.
6. உலர்த்தும் சாலை, drying room.

7. குமிழ்ப்புச் சாலை, winnowing room.

8. காற்றுலவும் சாலை, ventilation room.

9. காற்றுலவாச் சாலை, air-tight room.

II. சூடேற்றும் சாலை, Heating Department—

1. புடச் சாலை, calcining room.

2. சீலைப் புடச் சாலை, room for luting before the calcination of medicine.

3. முப்புப் புடச் சாலை, secret room for calcining 'Muppu' (the mystic three salts).

4. நெற்புடச் சாலை, the room where prepared medicines are kept buried under heaps of paddy.

5. சூரிய புடச் சாலை, room for exposing drugs and medicines to sun's heat before or after preparation.

6. சந்திர புடச் சாலை, the room for exposing drugs and medicines before the moon-light.

7. எரிப் புடச் சாலை, fire place for calcining medicine.

8. வெள்ளாவிச் சாலை, steaming room.

9. செயநீர்ச் சாலை, room for preparing pungent extracts.

III. உருக்குஞ் சாலை, Melting Department—

1. உலைச் சாலை, smith's furnace room.

2. கூடச் சாலை, hammering room.

3. கரிப்புடச் சாலை, room for melting or smelting with the aid of coal or charcoal.

4. உமிப் புடச் சாலை, room for melting in the crucibles with husk.

5. மயனப் புடச் சாலை, room for blowing probably into a fine powder with the aid of a blast furnace.

IV. வாலை யந்திரச் சாலை, Distilling Department—

1. வடிக்கும் சாலை, filtering room.

2. விளைச்சலிச் சாலை, probably distilling and cooling room.

V. சத்திரச் சாலை, Surgical Department—

1. பணுவரைச் சாலை (கருவிச் சாலை), implements room.

2. சத்திரக் கருவிச் சாலை, surgical instruments room.

3. அறுவைச் சாலை, operation room.

VI. அறச் சாலை, Public Welfare Department—

1. வைத்திய சாலை, அநாதைநோய்க்கு மருந்து கொடுத்துச் சிகிச்சை செய்யும் சாலை, hospital for treating and giving medicine for the patients.

2. பாக சாலை, kitchen room.

3. அறவைச் சோறு, giving food to the patients and for the destitutes.

4. மகப் பெறுவித்தல், attending to maternity.

5. மகவு வளர்த்தல், Children's Welfare Scheme.

6. மகப் பால் வார்த்தல், feeding milk for babies.

7. அறவைப் பிணம் சுடுதல், mortuary for the disposal of unclaimed dead patients and other poor destitutes.

VII. Sacred Service Department—

1. யாகச் சாலை, room for oblation.

2. தவச் சாலை, hermitage, for the performance of religious austerities connected with medicine.

3. வாகனச் சாலை, room for the conveyances.

NOTE 1.—Nos. I and III are chiefly the places intended for carrying on the preliminaries before the regular preparation of medicines; while No. II and IV are places for the preparations of medicine; and V is purely surgery. Nos. VI is is particularly for carrying on the regular Hospital work; and VII is for the general requirements to be met with according to Shastraic principles without which, the whole Medical Practice is considered to be a matter of routine work which will in no way ensure a complete success.

NOTE 2.—The above enumeration will give an idea to the readers as regards the Tamil Medical Science which had flourished during the period of the Tamalian civilisation before the so called migration of Aryans into S. India. It will also show clearly how sacredly this medical practise was handled in this part of the country in those early days. Moreover, it is well known that the Tamil Siddha System comprises not only Medicine, but also includes with it other sciences such as Astrology, Alchemy, Philosophy, Magic etc.

Particular gods superintend or function different parts of the body; and to them prayers are offered up before operations are performed or medicines administered; and so, such of the munificent charity works and religious performances as are described under the headings VI & VII were considered essential for relieving the distressed.

சாலை, கரிசலை, eclipse plant — Eclypta prostata; 2, கோடக சாலை, a plant—Justicia procumbens; 3. ஓர் பூடு, a plant—Acacia planifrons, see சாலி.

சாலைச் சாறு, கரிசாலைச் சாறு, the juice of eclipse plant. See சாலை.

சாலைப் போடா, எருக்கு, madar plant—Caltropis gigantea.

சாலை புஞ்சில், ஓர் வகை வஞ்சில் மரம், a kind of sirissa tree — Albizzia procera. See also கிலு புஞ்சில்.

சாலோகம், பேரமைப்படி நான்கு வித பதவி களுள் முதற்பதவி அதாவது கடவுள் உல கத்தில் அல்லது கடவுள் இருக்கும் இடத்தே இருத்தலாகிய சந்தோஷம், (*In Agama Philosophy*), the first and the lowest stage of bliss. It is a state of obtaining happiness by remaining in the Celestial world or dwelling with the Deity.

NOTE.—According to Saiva Philosophy, சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், are the 4 states of bliss. The first one is obtaining the happiness by remaining *in the place of* God; the second is that of being *near* to God, the third of *bearing the image* of God and the fourth and the last is that of being *identified with* God i.e. being *absorbed* entirely into His essence as flame in flame (சோதியிற் சோதியாய்).

These stages depend upon the power of meditation or Bhakthi which a man developes during his lifetime as for instance, Sri Ramalinga Swami of the present day.

சாலோக்கியம், see சாலோகம்.

சால், மிடா, water-pot; 2. வருஷம், year.

சால் பரணி, பேராமல்லி, long-tubed Arabian jasmine — Jasminum sambuc (heyneana); 2. see சால பரணி.

சால் பாணி, கடற்பாலை இலை, Hedysarum gangeticum, see சால பரணி.

சால்பு, நிறைவு, fulness; 2. குணம், disposition; 3, மேன்மை, excellence.

சால்ம பாகம், ஆயுர் வேத முறைப்படி பசும் பாலில் மருதம் பட்டைச் சூரணத்தைப் போட்டு, தகுந்தபடி வெல்லமும் சேர்த்துக் காய்ச்சி அத்துடன் கடைச் சரக்குகளும் சம எடை கூட்டி பாகுபதம் வரும் வகையில் காய்ச்சி இலேகியமாகக் கொள்ளில் இருதய ரோகம், சயம், வாத ரோகம், விக்கல், சிரோ விகாரங்கள், மேகம் 20-ம் போம், an electuary prepared by boiling the milk in a sufficient quantity, so as to contain powdered murdah bark along with jaggery and powdered bazaar drugs according to Ayurvedic method. It is prescribed for heart disease, consumption, rheumatic affections hiccough, cerebral disorders, urinary complaints (20 kinds) etc.

சால்மலி, சிறிய ஆண் இலவ மரம், small male silk cotton tree—Grewia aspera; 2. முள் ளிலவு, red silk cotton tree—Salmaliya malabarica.

சால்முக்ரா, இது ஒரு பெரிய மரம். இதை தென் இந்தியாவில் காணுவது அரிதாயி னும், இமாலயம், இரங்கூன் முதலிய இடங் களில் உற்பத்தியாகும். இது எப்பொழுதும் பச்சென்றே யிருக்கும். இதன் வாசனை மல் லிகைச் சம்பா அரிசியின் வாசனையைப் போன்றதால் இப் பெயர். இது கொத்துக ளாக விருக்கும்; காய் பெரிது உருண்டையா யிருக்கும். இதன் விதைகள் 1-1½ அங்குல நீளம். இதிலிருந்து எண்ணெய் எடுக்கப் படும், chaulmoogra — Hydrocarpus wightiana alias Gynocardia odorata alias Hydnocarpus odoratus. It is a large evergreen tree, rarely obtainable in S. India, but commonly found in the Himalayas, Rangoon and other places. It is so called from its smell resembling that of jasmine rice (chamba); flowers found in clusters,

fruit large ; and rounded seeds 1-1½ inches long and numerous ; and from the kernel is expressed oil for which this tree is noted.

NOTE 1—According to Ayurveda, this oil is said to be very effective in the treatment of Leprosy. The following is the extract from Technical education (Thacker) :—

"Indian pharmacology has a great future before it ; and the Indian population should welcome the way that has now been shown by the work which is being carried on at the Calcutta School of Trophical Medicine on a magnificent scale, but almost incognito.............. No better example can be given than the discovery and application of ethyl ester of hydnocarpic or chaulmoogri acid as opposed to gynocardic has beed shown in Dr. J. C. Gosh's pamphlet on Choulmoogra oil."

NOTE 2.—It is a great surprise to observe that the famous author Mr. J. C. Gosh of "Indigenous drugs of India was not aware of a distinctive system of Medicine called Siddha Medicine in S. India especially in the Tamil country, although he was at Madras for six years (1912-18) in charge of a large pharmaceutical laboratory of the Government of India. In his publication he talks only of Ayurvedic and Unani drugs and not a word about Siddha system.

NOTE 3—According to Ayurveda and Siddha Medicine there are 18 varieties of leprosy of which some of them are regarded in Western science as only skin diseases as psoryasis, eczema ulcers etc. The active principle of this oil is chaulmoogric acid and this oil should not be confounded with Tuvaraka oil (oil of Hydnocarpus wightiana) contemplated in the work of Susruta which also contains the same active principle (gynocardiac acid). It is said that this Tuvaraka oil not only cures leprosy but also diabetes. It is taken with a decoction of catechu internally for about a month. The use of this oil as errhines for one 'Mandalam' i.e. 45 days is also said to prolong life by rejuvenation.

NOTE 4—This oil has more or less the same property as what is called in Tamil as நீரடி முத்து எண்ணெய் (oil of Hydrocarpus inebriens) ; and so, it is used as a substitute, the dose being half a tea spoonful twice daily. Dr. Ainslie recommends this oil, especially to those parts of India where Chaulmoogra is not procurable.

All these oils if regularly administered can only go to arrest the progress of the diseases; but cannot cure the disease radically like the calcined metallic oxides and chiefly the red oxides of copper prepared under the Siddha system.

(உ-ம்) "சேர்ந்தே பிடித்து
சிதம்பரம் பூமடி"
(சட்டமுனி. 800).

2. தில்லை மரம், tiger's milk spurge — Excoecaria agallocha.

சிதம்பர எலுமிச்சை, பேரெலுமிச்சை, a big variety of lemon—Citrus medica-limonum,

சிதம்பல், பதனழிதல், to become musty.

சிதம்பல் காய், பதமழிந்த காய், rotten fruit.

சிதம்பு, குணமின்மை, destitute of quality.

சிதம்புதல், see சிதம்பல்.

சிதரம், மழைத் துளி, rain drop.

சிதரி, பாடல மரம், trumpet flower tree — Bignonia chelonoides.

சிதர், வண்டு, beetle ; 2. பூந் தாது, pollen of flowers ; 3. தேனீ, honey-bee ; 4. ஓர் சிச்சிலிப் பறவை, a species of king-fisher ; 5. வண்டு, beetle.

சிதர்தல், தெறித்து விழல், to scatter ; 2. சிந்துதல், to suffer to fall ; being poured out.

சிதலம், பதனழிவு, decay ; rottenness ; decomposition.

சிதலிந் தித்தம், கண்டில் வெண்ணெய் மரம், an unidentified tree ?

சிதலை, கறையான், white-ant ; 2. நோய், disease.

சிதல், கறையான், termite ; 2. ஈசல், flying white-ant.

சிதவராகம், உத்தாமணி, hedge cotton — Daemia extensa.

சிதவல், குறைவு பட்டது, that which is decreased ; 2. சீலைத் துணி, piece cloth ; 3 புரையோடு புண், a sore or wound with sinuses ; a running sore.

சித விருட்சம், ஒலிவை மரம், olive tree.

சிதவி லோதிரம், (சிதவில் + உதிரம்), வெள்ளையோடு இரத்தமும் கலந்தது, whites attended with blood—Leucaemia.

சிதளம், கோடகசாலை, a drug — Rungia repens.

சிதளி, பொன்னாங்காணி, sessile plant — Illecebrum sessile.

சிதள், see சிதல் ; 2. மீன் செதில்கள், fish-scales ; 3. புண்ணின் அசடு, the scab of a wound.

சிதறி, பாதிரி மரம், trumpet flower tree, see சிதரி ; 2. மழை, rain ; 3. கடுகு, mustard.

சிதறிப் போதல், நோய் உடம்பை விட்டகலல், leaving or quitting from the body, as disease.

சிதறி யோடல், பித்த நாடி சிதறி யோடுதல், இது ஓர் மரணக் குறி. மூன்று நாளில் மரணம், disturbance of equilibrium in the pulsation indicating bile (humour). This is a symptom of death within three days.

சிதறுதல், சிந்துதல், being scattered ; 2. களைதல், removing.

சிதறை, கறையான் நோய், a skin disease due to the bite of white-ants.

சிதனகம், நீண்ட சுரை, an elongated bottle gourd—Lagenaria vulgaris.

சிதன காமம், சிறு நாகப் பூ, serpent champak—Mesua ferrea.

சிதனம், கோடக சாலை, see சிதளம்.

சிதாகாசம், பேரறிவுற்ற நிலை, intelligence which knows no/bounds ; 2. ஞானாகாசம், (*In Philosophy*), the wide sphere of pure Intelligence ; 3. பூரணம், (*In Adwaita Philosophy*), the all-pervading spirit or God or the intellectual ether ; 4. சூனிய நிலை, according to *Upanishads*, the vacuam in the mind of the abstract worshipper by which all obstructions, to the view of everything in the universe, are removed, when he enjoys perfect felicity.

சிதா காஞ்சி, காட்டு முல்லை, wild jasmine — Jasminum angustifolium

சிதாக் கியா, கிளுவை, common teal—Querquedula crecca.

சிதா சமியம், கருங்கொள், black horse-gram. —Cassia absus.

சிதாடம், பல்லீறு அழற்சியினால் இரத்தம் ஒழுகி, பல்லை விழச் செய்யுமோர் பல் நோய், a disease of the gum from which bloody discharges take place from the gums, which begin to root out and gradually fall off.

சிதா நிம்பு, சர்க்கரை வேம்பு, which see.

சிதா பாங்கம், மயில், pea-cock.

சிதா பாசம், ஆத்துமா. the soul ; 2. சீவன், life.

சிதாபு, பொன்னாங் காணி, sessile — Illecebrum sessile.

சிதா மலா, சர்க்கரை, sugar.

சிதாம் புசம், வெண் டாமரை, white lotus.

சிதாம் பூகம், ஆள்வரிடைத் தட்டி, an unknown plant ?

சிதாம் போசம், see சிதாம் புசம்.

சிதா யதம், பஞ்சாட்சரம், the five mystic letters capable of destroying the mind and its faculties.

சிதாயம், கடலை, Bengal gram — Cicer arietinum.

சிதாரி, } பவள மறுகு, red couch grass.
சிதாரிகம், }

சிதாலதம், கருப் பறுகு, black cynodon grass — Cynodon dactylon ; 2. வெள் ளறுகு, white cynodon grass.

சிதாவிபரி, இடிரக் கிழங்கு, wild yam root— Dracontium polyphyllum.

சிதானகம், கருடக் கொடி, Indian birth-wort — Aristolochia indica.

சிதானந்தம், ஞானானந்தம், spiritual happiness.

சிதானனன், கருடன், brahmini kite— Haliastur indus.

சிதி, வெண்மை, whiteness ; 2. கருப்பு, blackness.

சிதிச்சதம், பூர்வ காலத்து அன்னம். இது பாலைத் தண்ணீரினின்று பிரிக்கக் கூடிய சக்தி வாய்ந்தது, swan of the olden days capable of seperating the milk from water.

சிதிரம், நெருப்பு, fire.

சிதிரி, பாதிரி மரம், see சிதறி.

சிதிலம், தளரல், loosening ; 2. கீல் தளரல், loosening of joints ; 3. புதனழிவு, rotten ness ; 4. நெகிழ்தல், relaxing.

சிதில லவணம், உதாசீன வுப்பு, neutral salt.

சிதிலா வர்த்த வாதம், சீதளம், மந்த வஸ்து வை புசித்தலால் நரம்புகளுக்கு வேதனை கண்டு, சகல கீல்களேயும் தளரச் செய்யும் ஓர் வாத ரோகம், a kind of rheumatism tending to affect the nerves and loosen the joints, due to eating cold and indigestible substances.

சிது மலர், தண்ணீர் மிட்டான், water-root —Asparagus racemosus.

சிதுமலி, பச்சைக் கடுக்காய், raw or fresh gall-nut.

சிதுரம், நேர் வாளம், croton seed — Croton tigilium.

சிதூரகிகம், பச்சைக் குங்குமப் பூ, fresh or green European saffron--Crocus sativus.

சிதூராதி, பேய்ச் சுரை, bitter calabash — Pepo lagenarius.

சிதேகி, கடுக்காய், Indian gallnut — Terminalia chebula ; 2. பச்சைக் கருப் பூரம், crude camphor.

சிதேச கதிரம், வெண் கருங்காலி, egg-fruited ebony—Diospyros oocarpa.

சிதே சத்திரம், see சிதேச கதிரம்.

சிதேசம், கிச்சிலிக் கிழங்கு, orange root — Hedychium coronarium.

சிதே சரம், காட்டு ஓம வல்லி, ajwaun leaf creeper ; country borage — Lavandula carnosa.

சிதேந்திரியம், ஞானேந்திரியம், sensory organs ; 2. ஐம்புல னொடுக்கம், subduing or conquering the five senses to attain trance.

சிதேந்திரியன், ஐம்புலன் வென்றோன் அதாவது யோகி, a sage who has conquered the five senses.

சிதை, சிதைத்தல், destroying ; 2. கொல்லுதல், killing.

சிதைக் கரு, அழி கரு, foetus brought forth in an immature state—Castling.

சிதைத்தல், நசுக்குதல் as பூண்டு, crushing as plants.

சிதை புடுப்பை, எருமா முட்டி, woolly jacket —Eriolena stocksii.

சித், அறிவு, the knowing principle in the Deity. See சைதன்யம்.

சித் தகத்தி, see சிற்றகத்தி ; 2. வெண்செம்பை, white sesbane—Sesbania genus.

சித்தகம், மஞ்சள் மெழுகு, yellow wax.

சித்தகோரதம், வன்மரை, the heart or core of a tree.

சித்த கலிகம், கிருமி சத்துருப் பூடு, a plant destroying the worms in the body.

சித்த கல்ப மகரத்துவசம், சித்தர் காய கற்பத்தை போல், உடம்பை பலப்படுத்தி ஆயுளை விருத்தி செய்வதற்காக தயாரித்த ஓர் ஆயுள்வேத மருந்து, an Ayurvedic prepa-

ration like the one taken in by Siddhas for invigoration of the system and longevity.

NOTE.—Although the term 'Siddha Kalpa' is prefixed to this medicine, it cannot be compared to the Kalpa of Siddhars which is by far superior in its virtues.

சித்த கல்பம், see சித்த கற்பம்.

சித்த கற்பம், சித்தர்கள் சாப்பிடும் காய கற்பம், rejuvenating drug or medicine taken in by Siddhars. See சித்த ருண்ணும் கற்பம்.

சித்த கன்னி, கர்ம சுரந்தை, see சுகந்தினி.

சித்த காசம், பேரறிவு, superior wisdom.

சித்த காய கற்பம், see சித்த கற்பம்.

சித்தக் கலக்கம், see சித்தங் கலங்கல்.

சித்தக் கல், சிலா நாகம், zinc stone perhaps zinc ore, as zinc spar, zinc blende etc. usually combined; 2. குறிஞ் சிக்கல், a red stone used for polishing iron; a fossil; 3. சாற்கல், gall stone.

சித்தங் கலங்கல், உள்ளம் தடுமாறல், இது ஓர் மரணக் குறி, the confusion of mind as a symptom of death.

சித்த சத்து, மனோ சத்து, essentials of mind.

சித்த சரணம், சித்தர்களிடம் அடைக்கலம் புகுதல். இது நால்வகை சரணங்களுள் ஒன்று, surrendering oneself before Siddhars. This is one of the four classes of surrenders.

சித்த சலனம், மனக் குழப்பம், agitation of mind.

சித்த சாகலி, சிறு நாவல், small jambo fruit; ruddy black plum—Eugenia rubicunda.

சித்த சாதனம், வெண் கடுகு, white mustard —Brassica alba.

சித்த சாந்தம், கீரைத் தண்டு, garden greens —Amaranthus blitus.

சித்த சாந்தி, மனத்தை யடக்கல், to control the mind; 2 மன சுத்தி, purification of mind.

சித்த சிகிச்சை, see சிகிச்சை.

சித்த சித்தி, மனோதிடம், firmness of mind; 2. நித்த நைமித்திய கருமங்களை சிவார்ப்பணமாகச் செய்தலால் வரும் பேறு, the benefit derived by consecrating things in the name of Shiva in one's daily oblations; 3. மனத்தை தன் வசமாக்குதல், success in gaining the control of the mind.

சித்த சித்து, புருடத்துவம் அதாவது சித்தும் அசித்தும், things both visible and invisible.

சித்த சிவயோகி, சிவயோகம், சித்தித்தவன், one who has attained success in Siva Yoga.

சித்த சுத்தி, மனத் தூய்மை, purity of mind.

சித்த சுவாதீனம், மனம் வசப் பட்டிருக்கை, the act of acquiring control of the mind.

சித்த சூனியம், மனப் பாழ், void or emptiness of mind.

NOTE.—Vacuam of the mind. This cannot be derived unless no thought is allowed to enter the mind. When the mind becomes vacant, the very moment, one will attain liberation. When persons without training try to make their minds vacant, they are likely to succeed only in covering themselves with *Tamas* which will make mind dull and stupid. For one to do this really, he has to manifest the greatest strength and the highest control. This is known as Asambrachium (அசாம்பிராச்சியம்) which is opposed to சாம்பிராச்சியம் which see.

சித்த ஞானம், கேவல ஞானம் அதாவது திரிகால உணர்ச்சி, an all-round knowledge of the past, present and the future; 2. மனக்களங்க மில்லாமை, absence of all flaws in the mind.

சித் தண்டம், see சிற்றண்டம்; 2. முட்டையோடு, the shell of fowl's egg.

சித்த தேசியம், குதம்பை அதாவது கூத்தன் குதம்பை, Indian lantana — Lantana indica.

சித்தத் தயக்கம், சித்தப் பிரமை, which see.

சித்தத் தியாகம், துறத்தல், renunciation.

சித்த நாதி, முருங்கை, drum-stick tree — Hyperanthera moringa.

சித்தநி, பச்சைப் பாக்கு, fresh areca-nut; areca-nut in a raw state.

சித்த நிவர்த்தி, மனத்தை செயித்தல்; conquering or subduing the mind; 2. உலகப் பற்றை விடல், renouncing all the worldly pleasures. See சித்தத் தியாகம்.

சித்த நூற் றெளிவு, சித்த நூலில் சொல்லிய படி, வெகு ஜாக்கிரதையாகக் குறிக்கப்பட்ட வழலை அல்லது முப்பு, the mystic three salts' expounded with great care and caution as mentioned in Siddhar's science.

சித்தந் தெளிதல், மனமொன்று படல், concentration of mind; 2. மனம் தெளிவடைதல்; clearness of mind, as "சித்தந் தெளிய மருந்தொன் றிருக்குது".

சித்த பத்திரி, கஞ்சா, ganjah leaves used by Siddhars—Cannabis sativa.

சித்த பரமேட்டிகள், see சித்தர்.

சித்த பிராண னேசுவர ரசம், கந்தகம், இரசம், அப்பிரகம், சம இடை கொண்டு, இதனுடன் சர்ச்சிக சாரம், வாற் கோதுமை, சாம்பல், ஐந்து வித உப்பு, திரிபலை, சித்திர மூல வேர், கருஞ் சீரகம், பெருங்காயம், வெருதயம், வாயுவிளங்கம் முதலியவைகளையும் சேர்த் தரைத்துத் திரட்டிய ஆயுள் வேத மாத்திரை. இதனால் கழிச்சல், சுரம், சீதபேதி, பாண்டு, வீக்கம், இருமல் முதலியவைகள் போம், an Ayurvedic pill prepared with the chief ingredients as — sulphur, mercury and mica in equal measures, to which are added, Sarjika salt, fried borax, ashes of barley shorts, the five kinds of salts, the three myrobalans, root of plumbago, black cumin, asafoetida, dill seed, wind-berry etc. It is prescribed for diarrhoea, fever, dysentery, dropsy, swelling, cough etc.

NOTE.—It is very peculiar to note that the prefix '*Siddha*' is used very commonly in Ayurveda; perhaps to vary its signification. In such cases, it leads one to doubt whether it means under the Siddha process or simply meant to refer to its superiority.

சித்த புருஷன், சித்தன், Siddha.

சித்தப் பிரமை, நினைவு தடுமாற்றம், bewilderment; confusion of mind; 2. மயக்கம், stupefaction; 3 மனப் பைத்தியம், delirium, 4. உன்மாத பித்தம், morbid feeling of uneasiness — Malaise; 5. பைத்தியம், lunacy.

சித்தப் பிரமை கொண்ட, பித்து கொண்ட, having a disordered mind—Phrenetic:

சித்தப் பிரமை சன்னி, see சித்த விப்பிரம சன்னி.

சித்தப் பைரவ ரசம், ஜிம்மிக சன்னி பாத சுரத்திற்காகக் கொடுக்கும் ஓர்வித பைரவ ரசம். இது ஓர் ஆயுர்வேத மருந்து. சித்த வைத்திய முறையில் செய்த இவ்விதமான மருந்திற்குள்ள குணம், இதற்கும் உண்டென கருதப்படுகிறது, an Ayurvedic preparation prescribed for a convulsive nervous disease known as chorea. It is supposed to have the virtue of a similar medicine prepared under the process of the Siddha system.

சித்தம குட்டம், உடம்பின் தோல் மெலிந்து, அதனால் புண்ணின் தழும்புகளைப் போல் காணப் படும் ஓர் வகை குட்டம், spontaneous or false cicatrices of the skin resembling scars due to the atrophy of the skin—Maculae atrophicae.

சித்த மணி, பொன்னுங் கண்ணி, sessile — Illecebrum sessile; 2. இரச மணி, consolidated mercurial pill; 3. பத்து வகை ரசச் சத்துக்களில் ஒன்று. இது சாரணை தீர்ந்த குளிகை, one of the ten animated mercurial pills.

சித்தமணிக் குளிகை, நெருப்புக்கு ஓடாமற் கட்டிய இரசக் குளிகை, see சித்தமணி.

சித்த மண்டூரம், ஐந்து வகை மண்டூரங்களில் ஒன்று. இதனால் சோகை, பாண்டு போம், one of the five hydrated oxide of iron contemplated in Ayurvedic science, and prescribed for anemia and dropsy.

சித்த மயக்கம், மனோ மயக்கம், ஓர் வகைப் பைத்தியம், a kind of insanity with agreeable hallucinations—Amenomania.

சித்த மனம், சிற் றாமணக்கு, small casto seed—Ricinus communis.

சித்தமன், பொன்னுங்காணி, see சித்தமணி; 2. ஆமணக்கு, castor plant — Ricinus communis.

சித்த மார்க்கம், சிவ சம்பந்தமாய் சித்தர்களின் வகுப்பார் அனுசரித்து வந்த வழி. இது நாவலன் தீவு அதாவது இந்திய தட்சண பாகத்தி லிருந்து பரவியது, the Siddhars school of thought in respect of the affairs relating to worship of God Shiva. It started from Southern India.

NOTE.—The said Navalan islands is that portion of land including the East Indies, the major portion of which had submerged in the ocean.

**சித்த முகம்**, கிலு கிலுப்பை, rattle-wort —Crotolaria pulcherrima.

**சித்த முகா**, பட்டுப் பருத்தி, silk-cotton tree —Bombax malabarica.

**சித்த முருகி**, மனத் தடுமாற்றத்தை யுண்டாக்கும் பூடு, a plant causing perplexity of mind. C.f. திகைப் பூடு.

**சித்த மோகம்**, செருக்கு, infatuation.

**சித்தம்**, முருங்கை, drum stick tree—Hyperanthera moringa; 2. உப்பு, any salt; 3. உள்ளம், mind; heart as the seat of passions; 4. உட்கரணம் நான்கினில் ஒன்று, one of the four faculties of the mind; volition; 5. உண்மை, truth; 6. உள்ளக் கருத்து, intuition; 7. ஓர் அந்தக் கரணம். இது பிரகிருதியி னின்று தோன்றி விஷயங்களை சிந்திப்பது. இது நாபிப் பிரதேசத்தில் இருக்கும், one of the intellectual faculties having its origin in the navel region. It enables one to think of worldy affairs; 8. இருபத் தெட்டு ஆகமங்களில் ஒன்று, one of the twenty-eight Saiva Agamas; 9. சித்த யோகம், which see; a kind of yoga; 10. நிச்சயம், truth; veracity; 11. முடிக்கப் பட்டது, that which is accomplished.

**சித்தம் செய்தல்**, தயாரித்தல், to prepare; 2. நிர்மாணித்தல், to determine.

**சித்தரசக் குளிகை**, கொங்கணவன் வாத காவியத்திற் சொல்லி யுள்ள பத்து வகை ரசச் சத்துக்களினால் தயாரித்து, சாரணை தீர்ந்த குளிகை. இதை வாயி லடக்கி உமிழ்ந்தாலும் உபரசம், உலோகம் இவைகள் பொன்னும். உமிழ் நீரை உட்கொள்ள காய சித்தியாம், a consolidated mercurial pill animated ten times with ten kinds of quintessenees contemplated in Tamil Alchemical science by Konganava, a Siddha. It is said that, by retaining it in the mouth, the saliva takes the virtue of transmuting metals into gold; but when the saliva is swallowed or taken in, the body becomes rejuvenated.

**சித்தரச மணி**, see சித்தர் குளிகை.

**சித்த ரசம்**, வேண்டிய மூலிகைகள், கடைச் சரக்கு இவைகளுடன், ஆட்டுப் பால், தயிர் இவைகளையு ம் சேர்த்து, பிறகு நெய்யில் காய்ச்சி எடுத்து, மூலம், கிராணி, பாண்டு, கிருச்சிரம், அதிசாரம் இவைகள் நிவர்த்திக்காகக் கொடுக்கும் ஆயுள்வேத மருந்தெண்ணெய், an Ayurvedic medicated oil prepared by heating the herbs and the bazaar drugs required for the purpose, and by adding to them goat's milk and curd and then boiled in ghee. It is prescribed for piles, chronic diarrhoea, dropsy, stricture of urine, diarrhoea etc.

**சித்த ரசம்**, பத்து வகை ரசச் சத்துக்களில் ஒன்று, இதினால் நவலோகம், உபரசங்கள் பொன்னாகும். இதை சித்தர்கள் உபயோகிப்பதால் இப் பெயர். உள்ளுக்கு சாப்பிட உடம்பிற்கு காந்தி யுண்டாம், one of the ten essentials of mercury. It refers to a mercurial preparation which converts the nine metals dipped into it, into gold. It is so called from its use by adepts known as Siddhars. When taken internally, it lends lustre to the body.

NOTE.—This is the preparation contemplated in the Tamil Konganavar's work on Alchemy. This should not be confounded with the one of the same name prepared in Ayurveda and prescribed for piles, dropsy etc. as mentioned above.

**சித்த ரசாயனம்**, ஆயுளை விருத்தி செய்யக்கூடிய ஓர் ஆயுள்வேத மருந்து, an Ayurvedic preparation capable of prolonging life; 2. சித்தர் காய கற்பம், a rejuvenating medicine prepared under Siddha system.

**சித்தரத்தி**, கடுகு, mustard.

**சித்தரத்தை**, see சிற் றரத்தை.

**சித்த ரபிப் பிராயம்**, see சித்தர் நோக்கம்.

**சித்த ராரூடம்**, விஷ வாகடத்தி லொன்று, இது சித்தர்களால் செய்யப் பட்டது, a treatise on poison and its antidotes compiled by Siddhars —Toxicology; 2. பாம்பு விஷ வைத்திய நூல், a treatise on snakes and snake-bites and their antidotes—Ophiology.

**சித்த ருண்ணுங் கற்பம்**, காஞ்சல் மா, see காட்டுமா; 2. சித்தர்கள் நீடூழிகாலம் உயிர் நிலை பெற்றிருக்க வேண்டி சாப்பிடும் கற்ப மருந்து, remedies of high repute taken in by Siddhars for promoting longevity.

**சித்த ருண்ணுங் கற்பத்தி**, நீலஞ் சோதி, root of திருகு கள்ளி, twist spurge—Euphorbia tirukalli. It is so called from its use by Siddhars for strengthening their body.

**சித்த ருண்ணு புகை மூலி**, கஞ்சா, Indian hemp—Cannabis sativa.

**சித்த ருண்ணு மூலி**, சித்தர் உட்கொள்ளும் மூலிகைகள். இவைகள் வாத வைத்திய யோக ஞானத்திற்கு உரிய அபூர்வ குணங்கள் வாய்ந்ததால் இவைகள் உலகத்தாருக்கு தெரிந்தால், தப்பு வழியில் உபயோகித்து, அனேக பாபச் செய்கைகளைச் செய்வதற்கு காரண மாகுமெனக் கருதியே, இவைகளுக்கு சாபமிட்டு ஒருவருக்கும் தெரியாதபடி செய்து விட்டார்கள். இம் மூலிகைகள் எல்லாம் உள்ளனவே, மகான்களுடைய கண்களுக்கு மாத்திரம் புலப் படும். சித்தர்கள் பல காரணங்களைக் கொண்டு தாங்கள் உட்கொள்ளும் மூலிகைகளை அடியிற் கண்டபடி பலவாருக வகுத்துள்ளார்கள், அவையாவன, these are the drugs generally taken in by Siddhars, and as they are endowed with the virtues relating to Alchemy, Medicine, Yoga and Wisdom, they purposely screened them from the eyes of the public who are likely to misuse them for their sinful acts and wicked deeds; and so, made them almost impossible to reach their vision by their curse to these plants. It should be known that they are really in existence and will be visible only to the virtuous few.

As for themselves, Siddhars have classified these drugs into several groups as detailed under, according to their virtues, for reasons best known to themselves viz :—

I. காய சித்திக்காக வேண்டி உண்டு சாதகம் பண்ணும் மூலிகைகள். இவை பதினேழாக சொல்லப் படும், அவையாவன, the seventeen drugs used in practice by Siddhars for purposes of rejuvenation viz :—

1. சுணங்கன் அல்லது நாய்க்குட்டி மரம். இதன் முன்னிலையில் சூதம் நெருப்புக் கசையாது, puppy tree. In the presence of this drug mercury cannot pass off readily into vapour before fire, because the drug has the power of resisting the action of fire (unknown).

2, சோதி விருட்சம் — இதற்கு இரவெரிமரம், சாணஞ் சோதி, நீலஞ் சோதி, என்று பல பெயர்களுண்டு, a luminous tree in the dark nights. It is known by several names, as mentioned above (unknown).

3. சேர்ந்தாடு பாவை, ஒருவருக்கும் இன்னதென்று தெரியாத மரம், an unknown tree.

4. முண்டினி—இது முண்டமாக விருக்கும் மரம். குத்தினுல் பால் வடியும், a tree said to be with headless trunk, and the stem when pierced, is said to yield milky juice (unknown).

5, சாயா விருட்சம், a tree which does not cast its shadow (unknown). See சாயா விருட்சம்.

6, யாக வேதி—இது மகா மூலிகை 23ல் ஒன்று. இது வாதத்திற்கும், வைத்தியத்திற்குங் கூட உதவும், an unknown tree classified also as one of the 23 drugs of all-healing potency. It is not only useful for rejuvenation, but also used in Alchemy (unknown).

7. குறுந்து, (unknown).

8, கற்றாமரை. இது தாமரை யினத்தை சார்ந்ததாயினும் ஒருவரும் கண்டாரில்லை, stone or lotus plant; though it refers to the species of lotus, no one seems to know this (unidentified).

9. கரு நொச்சி — சாதாரணமாய் நீல நொச்சிக்கே கருநொச்சி என்றும் பெயர் வழங்கும். இது நொச்சி இனத்தை சேர்ந்து இருப்பினும், சித்தர் குறித்த கருநொச்சி யல்ல. ஏனெனில் இதற்கு நரை திரை மாற்றும் குண முண்டு, a black species of plant of the Justicia genus; but it should not be confounded with that of the blue colour—Justicia vulgaris which is commonly found. But this black variety is said to be very rarely found. It is said to have the virtue of turning grey hairs into black and of removing the wrinkles of the skin due to old age (unidentified).

10. பொற் சீந்தில் — நமக்கு சாதாரண சீந்தில் தான் தெரியும். ஆனுல் பொற் சீந்தில் என்று பெயர் இருந்தாலும், சித்தர் குறித்தது இன்னதென்று தெரியாது தற்காலம்

வழங்குவது இப் பூண்டல்ல, we are only aware of moon-creeper plant. Botanically, it is known as gold-coloured Moon seed — Tincsphora malabarica; but it is not the one referred to by Siddhars (unidentified).

11. செந்திராய்—சிகப்புத் திராய். இதில் வெள்ளை யினம் தெரியுமே ஒழிய, சிவப் பினம் தெரியாது, red species of chick-weed The common one available is the white variety of Mollugo genus. Nothing is known of this red variety (unidentified).

12. நீலவேலி—கருங்கொடி வேலி. நமக்கு கொடிவேலி தான் தெரியுமே ஒழிய, கருப்பு நிறம் ஒருவரும் கண்டதில்லை, black lead-wort — Plumbago genus. The black variety is not seen by any one (unidentified.

13. வெண் புரசு—வெள்ளைப் புரசு. சாதாரணமாக வழக்கப்பட்ட பெயருள்ள புரசு. சித்தர் குறித்த தல்ல, although it is botanically known as kino tree—Butea frondosa or bastard satin wood—Mundulea suberosa, it does not seem to apply to the one referred to by Siddhars (unidentified).

14. வெள்ளைத் துருசு. மயில் துத்தத்தை வெண்மையாக்ச் செய்யும் சித்தர்களின் ஓர் வாத முறை. இதைப் பால் துத்தம் என கருதப்படாது, (lit) it means white vitriol; it is no doubt a conversion of blue vitriol into a white colour by alchemical process of Siddhars. It should not be confounded with the ordinary white vitriol (zinc sulphate).

15. வெள்ளைத் தூதுவளை. இவ் வினத்தில் வெள்ளைப் பூ காண்பது மிக்க அபூர்வம். சாதாரணமாக நீலப் பூவைத் தான் வழங்குவது, (lit) white flowered prickly night shade—Solanum genus. The common one available and used is blue-flowered—Solanum trilobatum, which is not the one referred to by Siddhars (unidentified).

சித்த ருண்ணு மூலி

16. கருந் தாழை — பொதுவாக தாழை பச்சை அல்லது வெண்ணிறம், கருப்பு நிறம் ஒருவரும் பார்த்ததில்லை, the common fragrant screw pine (pandamus) is usually green or white but never black (unidentified).

17. பெயர் தெரியாது, name not known.

NOTE.—Nos. 1 to 7, 14 and 17 are unknown plants; and the remaining are all unidentified though the name of the plant is common, but the species mentioned above, are not to be seen or traced. Strange to find that none of these drugs is available nor are they to be found mentioned in any of the other systems of Medicine including Ayur Veda and this, in itself shows that the Siddha system of medicine is purely based more on Spiritualism than on Materialism.

II. சித்தர்களால் உண்ணப்பட்ட சித்துகளடங்கிய பத்து மூலிகைகள், அவையாவன, the ten drugs containing in them the virtue of playing miracles when taken in by Siddhars viz:—

1. கரு நெல்லி, (lit) black Indian gooseberry which is mistaken for black honey shrub — Phyllanthus reticulatus.

2. கரு நீலி, (lit) means a black variety of Indian plant which is not available. The common one known is always blue — Indigofera tinctoria.

3. கருங்கொடி வேலி. நீலவேலி.
4. கல் தாமரை.
5. கருந் தாழை.
6. பொற் சிந்தில்.
7. சோதி விருட்சம்.

} the same as mentioned above.

8. பொன் திராய். இதுவே செந்திராய்.
9. முண்டினி.
10. சாயா விருட்சம்.

} the same as mentioned above.

இம் மூலிகைகளினால் லோகங்கள் பழுத்திடும், (சட்ட முனி). ஆராய்ச்சியாளர்கள் இது விஷயத்தில் ஊக்கத்தோடு முயற்சி செய்தால், இதில் சில மூலிகைகளை இன்னதென்று தெரிந்து கொள்ளக் கூடும், the above plants are useful for transmuting metals. Some of these drugs may be

identifiable if only research scholars take pains and show their earnestness and activities in this direction.

NOTE.—No other systems of Medicine have ever made any mention of such kinds of drugs nor seem to be aware of the existence of such drugs, although great virtues and importance are attributed to them. The virtue and the effect of this panacea is well defined in the following stanza :—

சடம் பெற்றார் கற்பமெல்லாம் கொண்ட பின்பு
தாரணியில் அடங்காத வேதை பெற்றார்
திடம் பெற்றார் பத்திமுத்தி மாறா வண்ணம்
சிறப்பாக வயிராக்கிய வரங்கள் பெற்றார்
கடம் பெற்றார் கடவுளடி தன்னைக் கண்டார்
காசினியில் சிவயோக கல்விமானாய்
இடம் பெற்றார் வச்சிரமிட்ட காயமானார்
இயல்பாக வாதசொண்டி திறம்பெற்றாரே.

(கருவூ-வாத-காவி. 700)

ஏழு நூறுபேர்த் தோர் சித்தர் கூடி
இனிமையுடன் எழுபத்தோர் கற்பங்
கொண்டார்
கோழுமில்லை உயர்வுமில்லை தாழ்வுமில்லை
கூர்பகலும் இரவும்இல்லை சடம் பெற்றாரே

(க. வா. கா. 700)

சித்த ரெண் பதின்மர், பதினெட்டு சித்தர்கள், see சித்த வர்க்கம்.

சித்த ரோமசன், உதிர ரோம வேங்கை, Indian dragon's blood — Pterocarpus marsupium.

சித்தர், சித்தத்தில் சிந்தித்தபடியே உடலும் உண்பனவும் அடைந்து, அனுபவிக்கின்றவர்களே சித்தர்கள். இவர்கள், சிவநெறியைப் பூண்டு ஒழுகிய சித்த சமயத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள். மேற்கண்ட சமையதில் சொல்லியுள்ள அனுஷ்டிக்க வேண்டிய கிரியைக் குறித்த விஷயங்களையும், விதிகளையும் விலக்கிவிட்டு, ஆத்ம ஞானம் ஒன்றையே கடைபிடித்தவர்கள். இவர்கள் காரண காரிய வகைகளால் உடம்பைச் சோதித்து, எவ்வெவ் வகைப் பொருள்களால் உடல் வளர்ந்து அழிகின்றதென் பதை ஊக்கத்தாலும், முயற்சியாலும் கண்டறிந்து, உடம்பை பொய்யென்று சொல்லுவதற்கு மாறாக, மெய் யென்ற சொல்லுக்குப் பொருள் கண்டு, சிலப்பதிகாரத்திற் கூறியபடி, அணிமா, மகிமா, லகிமா முதலிய அஷ்டமா சித்திகளை அடைந்தவர்கள். மேலும், தங்களுடைய உடம்பை மாத்திரம் தகுந்தபடி பலப் படுத்திக் கொண்டால், பிறப்பி னின்று நீங்கிவிடலாம் என்று உணர்ந்து, அனேக காலம் உயிருடனிருக்கக் கூடிய நித்திய வாழ்வைப் பெற்ற பெரிய மகான்களாவர். இவர்கள் காய கற்ப வழியாலும், யோக சாதனையாலும், தங்களிடத்தில் அபார சக்தி வாய்ந்தவர்கள். அழியக் கூடிய வுடம்பைக் கொண்டே, ஞான சக்தியால் மோட்ச சாதன வழியைத் தேடக் கூடியவர்கள்.

மேலும், இவர்கள் மூச்சை அடக்கிப் பிடித்து மூலக்கனலாகிய குண்டலி சக்தியை எழுப்பி, மணி மந்திர மருந்துகளின் உதவியால் மாறாத மதியமிர்தமுண்டு; நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு ஆகிய இவைகளை அறியாது நித்திய உடம்பைப் பெற்றவர்கள். உலோகங்களாலும், மந்திர சக்தியாலும், ககன குளிகை கொண்டு அனேக அண்டங்களைச் சுற்றி ஆங்காங் குள்ள அதிசயங்களைக் கண்டு ஆனந்தித்தவர்கள்.

ஆகவே, இவர்கள் அளவற்ற சக்தியுடையவர்கள். தங்களுடைய மாமிச தேகத்தை இலிங்க வடிவமாக மாற்றக் கூடிய சக்தி வாய்ந்தவர்கள். இவர்கள் மகத்தவத்தைப் பற்றி யோக நூல்களில் அனேக திருஷ்டாந்தங்கள் காணலாம். இவர்கள் மனோசக்தியால், மருந்து கொள்ளாமலே உடம்பின் அணுவாதி தத்துவங்களை மாற்றி, பிணி, சாக்காட்டை அகற்ற வல்லவர்கள். அன்றியும், மனோ சங்கற்பத்தினால் ஏற்பட்ட மனோ சக்தியை, நினைத்தபடி நாடி வழியாக செலுத்தாமலே, மின்சார சக்தியைப் போல் உலகத்தில் அண்ட முழுவதிலும், பல திசைகளின் விஷயங்களை உட்கார்ந்திருந்தபடியே தெரிந்து கொள்ளவும், எங்கேனும், யாருடனேனும் சம்பாஷிக்கக் கூடிய வல்லமை பெற்றவர்கள்.

கபிலர், கௌதமர், வசிட்டர், விசுவாமித்திரர், முதல்யோர்க ளெல்லாம் சித்தர்களே. வடமொழியில், இவர்களை இரசாயன சாஸ்திரிகள் என்று தப்பாக சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில், இரசாயன சாஸ்திரிகள் சித்தர்களுக்கு இணை யல்லர். இவர்கள் வாதத்தில் மாத்திரம் ஈடுபட்டவர்களே ஒழிய, ஆத்மா ஞானத்தில் சித்தி யடைந்தவர்களில்லை. ஆனால் வாத முறையிலும் சிறிது ஞானம் அடையலாமென்பதும் சித்தர் நோக்கம். ஆயினும், சித்தர்களோ வாத, வைத்திய, யோக, ஞான வகைகளில் சித்தி பெற்றவர்களென்றும், உடலழியு முன்னதாகவே முத்தி பெறுவதற்கேதுவான சித்திகளைப் பெற வேண்

டியது அவசியம் என்றும், உடலழிந்தால் பிறகு முத்தி சாதனத்திற்கு அநேக பிறவிகளை அடைய வேண்டி வரு மென்பதை யறிந்திருந்தே, யோக சாதனத்தைக் கைப்பிடித்தவர்கள். அவ்வித யோக சாதனத்திற்கு காய கற்ப வகைகள், அஷ்டமா சித்திகளும் முக்கியமானவை யென்றும் கண்டு தெளிந்தவர்கள். இவர்கள் வாத வைத்தியத்தில் ஈடுபட்டும், யோகம் ஞானம் வழியில் தங்கள் அனுபவத்தையும், அவ் வழியில் காணக்கூடிய பலவித இரகசியங்களையும், அற்புதங்களையும், தங்கள் நூற்களில் உலகத்தாருக்குத் தெளிவாக காட்டி யுள்ளார்கள். இவர்களால் தான் உலகம் நடைபெறுகிறதென்பதையும் இவ்விடம் மறக்கற்பாலது.

தற்கால தமிழ் வைத்தியத்திற்கே இவர்கள் காரண கர்த்தர்களாகி, உலகத்தாருக்கு தமிழில் செய்யுள் ரூபமாகத் தெளிவான நடையில் எழுதி பயன் படும்படி அநேக நூற்களைப் பாடி வைத்த மகான்கள். இவர்கள் தொகை 70,000, 80,000, ஏழு லட்சம் என்றும் பலவாறு சொல்லப் படும். இவர்களை மேனாட்டார் முதலிய அநேக வகுப்பார்கள் பலவிதமாக பெயரிட்டு வழங்குவார்கள். இவர்கள் வல்லமையைப் பற்றி அடியிற்கண்ட செய்யுளால் இனிது விளங்கும்:-

காரப்பா சித்தன்கற் பத்தோ டொன்றிக்
கைலாச பாசமதாய்க் கருதி வாழ்வான்
சேரப்பா கற்பமதை யுண்டு தேறி
தேசமான வாசியிற் சென்றிருப்பான் முனே.
தானான தானவனாய் நின்று வாழ்வான்
சதாகோடி நாளுமொரு நாளாய் நிற்பான்
ஊனான காயாதி கற்ப மெல்லாம்
உண்டு கரை யேறியவ னாதியாவான்
வானான அண்ட பகிரண்ட மெல்லாம்
வரைகடந்து திரையகற்றி வந்து சேர்வான்
தேனான மொழியுடையா ளமுது பானம்
தினந் தோறும் கொள்பவனே சித்தனாமே.

(கடைப்பிள்ளை கலைக்கியானம். 120.)

Siddhars are those who lived and maintained their bodies as they desired best. They were mostly of a Tamil Saiva sect which maintained Siva for its God, and rejected everything else in the Saiva system which was inconsistent with the pure Theism. They had investigated that the body, though transient, was the one and only instrument for attaining success in the Spiritual development and growth; and so, worked out to attain the eight supernatural powers, as Anima, Magima, Lagima, etc. *essential for their goal*, as mentioned in Silappathigaram. They further realised that, if the body could only be made *strong* and *perfect*, they could get rid of birth and death and live for ages together. They are the greatest men holding tremendous powers in themselves by way of Yoga practice and rejuvenation. They are capable of enjoying spiritual success in their mortal bodies.

They further attained Spiritual awakening by rousing, with their suppressed breathing, the Kundalini ('Serpent power' as it is termed) lying dormant at the base of the spinal coloumn in the *region of the sacral plexus*; and with the help of remedies of high potencies and virtues, consisting of all kinds of *drugs, minerals, metallic preparations* and poisons, they sought for Elixir of life, thus conquering all infirmities *against grey hairs, wrinkles* of the skin, old age and death. They could fly through the aerial regions with the aid of animated mercurial pills and even visited all the planets and stars and enjoyed the pleasures and wonders found therein.

So, they are men holding tremendous and extraordinary powers, superhuman *in nature*, and can even, in this life, change their bodies (physical) into god-bodies (etheric). There are several *such cases mentioned* by Siddhars in their books; they can change the very material of their bodies and re-arrange the *molecules* in such a fashion that they may have no more sickness or death. They can send mental electricity without the aid of nerve-channels, thus holding communion by remaining in their own places, with any body and anywhere in the Universe.

Kapila, Goutama, Vashista, Viswamitra and others also belong to this *very school of Siddhars*. *In Sanskrit*, they were mistakenly called Rasayanas simply for the reason that Rasayanas *cannot be compared* with Siddhars, as

the former were only Alchemists without much of Spiritual power. Siddhars also are of opinion that the said powers can be gained to a certain extent by mere chemical means. But Siddhars had gained complete success in Alchemy, Medicine and Yoga. Their principle is that ideality and spiritual knowledge can only be attained through Yoga and to reach this, bodily existence is essential; and so, they wanted to gain success before they die. They realised that if the body came to an end, it would take a longer time to reach the goal by being born again and again, and in this way, much time will be lost.

So, they held that the eight supernatural powers and rejuvenation were essential factors for Yoga practice leading to eternal bliss. Moreover, they laboured much in the field of Alchemy and Medicine; and also attained success in Yoga and Philosophy. They clearly showed their knowledge and experience, together with some secrets and miracles involved therein, in their books. It is not to be forgotten here that they are considered to be the guardians of the world and exist for the benefit of the public at large. They are mainly responsible for the Tamil Medicine of the present day and also for many other sciences of public utility. They are mentioned as 70,000 in number or 80,000 by some and even 7 lakhs by others.

They are called by different names in different countries by the Westeners as Masters of Theosophy, Sophists in Greece and Magus by the Rosycrucians.

The Miracles of Siddhars are briefly summarised in the above Tamil stanza.

NOTE 1.—The term 'Siddhar' has derived from the word 'Siddhi' which literally, means accomplished, achieved or perfected success; and so, it refers to one who had attained his end in spiritual goal. It also refers to a seer, saint or semi-divine being supposed to possess supernatural powers of which only eight are enumerated (See அஷ்டமா சித்தி). The word 'Siddha' does not refer to those men who have become free — a sense in which it is often used.

Dawson in his Classical Dictionary of Hindu Mythology mentions them to be 88,000 in number.

Kapila, the great father of Sankhya Philosophy, Gautama and others are all born Siddhars. Therefore they belong to a class of semi-divine beings of great purity and holiness; and are supposed to dwell in the regions of the sky.

They are the masters of heaven and earth who became such, by their free will; and the goal of their living is to become a force of good to the world. Such a man in the West used to be called as '*Magus*' and therefore, the word Magic is a supreme wisdom which, in a way corresponds to *Siddhi*.

Siddhars were a class of popular writers in Tamil in all its branches of knowledge, and many of their works were written in what is called High Tamil. They were further the greatest scientists in ancient times. Their works in Tamil are supposed to be more valuable than many that have been written in Sanskrit; and they are said to be works less shackled by the mythological doctrines of the original Ayurveda.

It should be known here that the principles of Atlantian Magic appear almost the same as those contained in Siddhar's teaching.

For other details see Introduction to this Dictionery in Vol. I.

NOTE 2.—The Siddhars of Southern Indian who are generally invisible, prefer to be aloof from the society, pass their time in solitude in the jungles, and on the mountain tops. They are said to be mostly Tamilians who are familiar with the wonderful properties of rare drugs peculiar to S. India, in their both physiological and psychological aspects. They choose not only to keep their bodies and souls together, but also to prolong their lives to a considerable extent.

They had investigated and studied fully the cause and effect of diseases and all kinds of drugs, mineral and poisons; and thereby came to realise what is beneficial and what was not, to their existence in life. They can even, if they choose, retain their bodies for ages or disintegrate them at their Will; and can also dematerialise or rematerialise their bodies as they liked.

Their knowledge of the inherent nature and the therapeutic and magnetic effects of different drugs, combined with the

practice of regulating their breathing in வாசி யோகம், is supposed to give them longevity and superhuman powers quite beyond our comprehension.

They are extremely long-lived and live for several hundreds and thousands of years if they will, *for the reason that* they are supposed to have their own method of prolonging life to a wonderful extent by regulating their breathing.

They also make use not only of certain special medicinal drugs, but also metallic preparations such as Sulphur, Mercury, arsenic, gold, magnet, mica etc.

They belong to the class of eighteen supernals or demigods inhabiting the middle air and embracing several subdivisions. "நரை திரை பிணி மரணம் இல்லை" என்னும் பழமொழி இவர்களுக்கே பொருந்தும், hence the proverb, "there is no grey hair nor wrinkle and no death" is applicable only to them. This is also said to be the effect of the *panacea* or universal medicine, supposed to be possessed by some alchemists who, from being considered 'immortals', are also termed '*Siddhars*'.

**சித்தர்**, மந்திர வாதி, one curing diseases by hypnotism; 2. வெள்ளி, silver; 3. மனதை வென்றோர், one who has subdued the mind and its faculty; 4. அஷ்ட சித்தி பெற்றவர்கள், those who had attained success in the the eight miraculous powers; 5 ஞான சித்தியடைந்தவர், those who are endowed with spiritual powers; 6. தெய்வ கணத்தைச் சார்ந்தவர்கள் அவர்களாவது நவநாத சித்தர்களுட்பட வித்தியாதரர், கந்திருவர், கருடர் முதலியோரும், devas of the celestial region as—Vidyadaras, Gandharvas, Garudas etc, including the nine Siddhars of the original school of Siddhars; 7. பதினெட்டு மூல வர்க்க சித்தர்கள், the eighteen Siddhars of the original school known as "Moolavarga Siddhars."

**சித்தர் இரகசியம்**, சித்தர்கள் இயற்றிய நூற்களிலுள்ள வாத, வைத்திய, யோக, ஞான வழிகளுக் குண்டான கட்டு முறை, காய கற்பம், ககன குளிகை, அட்டமா சித்தி, இரச வாதம், முத்திப் பேறு முதலிய விஷயங்களைப் பற்றி குரு உபதேசத்தின் மூலியமாய் தெரிந்து கொள்ளக் கூடிய இரகசிய முறைகள், the secret methods which ought to be learnt through the inspiration of a Guru (Spiritual Teacher) on several matters contained in the works on Alchemy, Medicine, Yoga and Philosophy by Siddhars viz—binding of volatile substances, elixir of life, animated mercurial pills, the eight miracles, emancipation etc, 2. ஓர் தமிழ் வைத்திய நூல், a treatise in Tamil on Medicine.

**சித்தர் இரசாயன நூல்**, சரக்கு வைப்பின் பௌதிக இயல்பை விளக்கும் சித்தர்கள் செய்த நூல். இதில் வாத முறை, காய சித்தி முறைகளைப் பற்றிச் சொல்லப்படும். ஆதி வைத்திய முறைப்படி உலகின் வஸ்துக்கள்—தாதுக்கள், பூண்டுகள், உயிர்ப் பிராணிகள் ஆக மூன்று விதங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

இந் நூலை சித்தர்கள் வெகு பயபக்தியோடு தங்களுடைய ஆசிரமங்களில், அதன் பிரயோசனங்களைக் கருதி, பத்திரப் படுத்தி வழங்கி வந்தார்கள். அன்றியும், இந் நூல் (1) நோய்கள் வராமல் தடுத்துக் கொள்ளவும், (2) தாங்கள் இஷ்டம்போல் ஆயுளை விருத்தி செய்துக் கொள்ளவும் (3) தாங்கள் உடம்பை கற்ப மூலியமாய் எப்பொழுதும் நிலைத்திருக்கவும் (4) தங்களுக்கு எவ்விதத்திலும் ஒரு குறையும் வராமல் இருக்கவும், அவர்களுக்கு மிக்க உபயோகமாய் இருந்தது. பிற் காலத்தில், இந் நூற்கள் நோயாளிகளைக் குணப் படுத்தவும், கிழத்தனத்தைப் போக்கி வாலிபத்தை யுண்டாக்குவதற்கும், இரச மருந்துகளைக் குறிக்கவும் உபயோக மாயிற்று.

சித்த முறையில் இரசாயன மருந்துகளுக்காக மூலிகைப் பூண்டுகளை புதிதாக பறிப்பதற்கும், சேர்ப்பதற்கும் ஓர் நூதனமான வழி யொன்று சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது, சில கிரகங்கள் கூடுங் காலத்தில் இரவாயினும் பகலாயினும் சரி, மூலிகைகள், அவைகளுக் குண்டான பூரண குணத்தைக் காட்டும் என்பதுதான். இது விஷயம் வேறு எந்த வைத்திய முறைகளிலும் தற்காலம் அநுசரிப்பதே கிடையாது. இதனால் இரசாயன மருந்துகள் தயாரித்தது, குணமற்று ஒன்றுக்கும் பிரயோசனமில்லாது போகும்.

மேலும், இரசாயன மார்க்கத்தில் வைப்பு முறையில் சித்தர்கள் தங்கள் நூற்களில் மறைவு இல்லாமல் சொல்லி யுள்ள முறையை அறியாது, நம்மவர்கள் தப்பாக அர்த்தங் கொண்டு மிக்க அசட்டையுடன் பாவிக்கிறார்கள். ஆகவே, இச் சித்தர் இரசாயன நூற்களை, மேனாட்டில் (ஐரோப்பாவில்) இடைக் காலங்களில் வழங்கி வந்த இரசாயன நூலையும் கூட்டிப் படிப்பது மிகவும் அவசியமானது.

இதர நூல்களைவிட, இந் நூல்தான் ஆதர வில்லாமற் கைவிடப்பட்டது. ஏனெனில், அனேக அறிவாளர்களும், கல்வி நிபுணர் களும், இந் நூலின் விஷயங்கள் தங்கள் அறிவுக் கெட்டாதபடி அவ்வளவு சிக்கல யிருந்ததினால் தான், அவர்கள் இது விஷய மாக எடுத்துக் கொண்ட முயற்சி பல னில்லாமற் போய் விட்டது. அன்றியும், தற்காலத்தில் வழங்கப்படாத பரிபாஷை யில் சிக்கலான நடையில் எழுதியிருப்பதால், இதை ஆராய்ச்சி செய்வதற்கு மிக்க சிரம மாய் இருந்தது. ஆகவே, சித்தர்கள் முறை யின் போக்கை நமக்கு ஒருவர் தொட்டுக் காட்டாமற் போனாலும், நாமும் ஆழ்ந்த வரையிலும் முயற்சிக்கா விட்டாலும், இந் நூல் விளக்கத்தை தெரிந்து கொள்ளவே முடியாது. வாத முறையிலோ, எல்லா சித்தர்களும் இந் நூலை 18 வகுப்புகளாக பிரித்தும், ஒவ்வொன்றிலும் இத்தனை விதங் களாக தயாரிக்க வேண்டுமென்றும், சொல்லி யிருக்கிறார்கள், அவையாவன, Science of Siddhars describing the chemical nature of substances. According to the ancient Hindu Chemistry, substance is universally divided into three classes—minerals, vegetables and animals.

Siddhars preserved this chemistry as a sacred book in their various Ashrams (hermitage) because of its usefulness to them (1) to keep themselves a proof against diseases (2) to prolong their lives to any period they liked (3) to make their bodies ever existent (4) to keep themselves above wants. Later, it served to indicate the therapeutic use of mercury for curing the patients and restoring youth to the aged.

Under the Siddha system of chemical medicines, there is a unique feature ordained to be observed in gathering and extracting the plants afresh, because their occult properties are at the highest, at a certain time of the day or night, during some planetary conjunctions, which is not at all being observed now by any of the other systems of medicine. So, medicines chemically prepared untimely, will not be effective. It was already pointed out elsewhere that the advanced scientific systematic knowledge in the synthetic chemistry of the ancient Siddha School rather than Indian mystic school, is being much mistaken and very irreverently treated by the subsequent writers; and therefore, it is very essential to read this Siddha Chemistry along with the Chemistry of the Middle Ages in Europe.

If at all any science is neglected, it is this subject. It has no doubt baffled the attempts of many master intellects and erudite scholars owing to the complex nature of the subject. All the more, it was difficult to investigate, because it was couched in hidden languages in all its technical and technological details unspoken just now. So, it is very difficult to understand this chaotic literature unless we are initiated and trained in their trammels and dive deep to the bottom. Even this may be practically impossible sometimes by an initiate unless he is an adept.

But coming to the regular portion of alchemical chemistry all the Siddhars have divided the subject into 18 branches, and the number of preparations under each head were also given by them and they are :—

1. களங்கு (உலோகங்களை அணுக்களாக பிரிப்பது) splitting the metals into atoms)—551 kinds.
2. சிந்தூரம், sulphides or sinduram —1010-kinds.
3. குரு பற்பம், caustic or maior oxides—705 kinds.
4. மெழுகு, viscicular or wax-like unguents—307 kinds.
5. செயநீர், chemical solvent waters —105 kinds.
6. திராவகம், acids—66 kinds.
7. தைலம், medical oils from organic substances—7 kinds.
8. இரசக் குளிகை, consolidated mercurial phalluses—1020
9. நவலோக பற்பம், metallic oxides (from 9 metals)—51 kinds.
10. சத்தினைத் தாதி, destructive agents 9 kinds.

11. உருக்கினத் தாதி, melting agents—(few).

12. வர்ணத்துக் காதி, colouring agents 7 kinds.

13. சுண்ண வகை, alkaline oxides and alkalies (Numerous).

14. கட்டு வகை, binding agents (numberless).

15. சத்துரு மித்துரு சரக்கு, allied inimical minerals (each)-18 kinds.

16. சிந்தூரத்திற் காதி, sulphiding agents—7 kinds.

17. சத்து வகை (உப்பு, உபரசம், பாஷாணம், உலோகம், நவரத்தினம், salts, uparasams, poisons, metals and gems) extracting agents (infinite).

18. மாற்று வகை, **transmuting or converting agents (endless).**

**NOTE 1.—The old chemistry evidently borders upon ancient Alchemy which is an unexploded science. So far safe because mystics save themselves. If we enter into the root of this Chemistry, it may lead one to the hidden portion of the whole science regarding the Philosopher's stone which is the despised stone of the West. It is also the chemistry that was in use during the Middle Ages in the 16th century in Europe. It was then limited to the pursuit of the transmutation of baser metals into gold and the search for the Alcahest and the Panacea.**

**NOTE II —This is the old Western Mysticism, apparently a borrowed knowledge from Siddhar's Science, which is not at all understood by the Western continent at the present day with the exception of few like Dr. Franz Heartman of Europe and Spence Louis, the President of American Rosycrucian Society of U. S. America.**

**Any way, it should be protected necessarily from the purview of the laymen, because the human society would cease to exist by wars, because money entices any to become greedy as for instance the First World War, which crushed the trade. So, this has become the sole secret of a few, always all over the world, who would not freely use the secret unless to the chosen initiates.**

சித்தர் கல்வி, இந்தியாவில் பூர்வ காலத்தில் கல்வி முறையானது, பள்ளிக்கூடத்து கல்வி மாதிரி மாணாக்கர்களுக்கு போதிப்பதல்ல.



ஏனெனில் கல்விமுறை தனிப்பட்ட முறையில் இரகசியமாகவும், பயபக்தியுடனும், குருவும் சீஷனும் ஆக இருபேரும் ஒருவருக்கொருவர் சம்பந்தமாக ஏற்பட்டதாயிருந்தது. வெளியாருக்கு இதில் யாதொரு சம்பந்தமுமில்லாமலும் இருந்தது. பூர்வத்தில் கல்வி போதனையும் எல்லா துறைகளிலும் இவ்விதமாகவே இருந்தது. ஏனெனில் இம்முறைதான் மனோ விருத்திக்கும், ஆசார அபிவிருத்திக்கும் ஏதுவானது,

அன்றியும் கல்வியே, ஒருவனில் மறைந்துள்ள வல்லமைக்கும், மனோநிட்டைக்கும் காரணமாயுள்ளது. ஆகவே, இது தேக சம்பந்தமான அபிவிருத்தியே ஒழிய, தற்காலத்தில் மாணாக்கர்களை பழக்குவதற்குண்டான செயல்கள் ஆகாது. தெய்வ பக்திக்கு மனதிற்கும் ஆத்துமாவிற்கும். யாதொரு தடை ஏற்படாது இருக்கவேண்டும், அப்படியில்லாத படிப்பு வெறுமையையே விளைவிக்கும்.

இது விஷயத்தை எப்படி ஒப்பிடலாமென்றால், தற்காலத்தில் ஆஸ்பத்திரியில் பல நோய்களால் பிடிக்கப்பட்ட நோயாளிகளுக்கு நிவர்த்திக்காக வேண்டி ஒரே விதமான மருந்து கொடுப்பதாகும். அப்படியில்லாமல் தனிப்பட்ட முறையில், நோயாளியின் தேகத்தினுடைய குற்றங்களையும், மனக் கோளாறுகளையும் கவனித்து சிகிச்சை செய்தால் தான் அவன் சுகமடைவான் என்பதை உணர வேண்டும். ஆகவே, இந்த முறைப்படி பள்ளிக்கூடத்துப் படிப்பு உதவாது என்பதுதான் கருத்து; **the Siddha system of education in ancient India was not imparted or organised on the scale of mass education like schools and colleges, but the ideal of education is, to treat it, as a secret and sacred process, for the reason that the process of an individual growth (inner) can only be achieved by a close and constant touch between the teacher and the disciple in their personal relationship from which the whole world was excluded.**

**In ancient times, education, in all its branches of knowledge, was left to be dealt with between the teacher and the disciple, much more in mental and spiritual growth.**

**A man's inner religious life was treated as his supremely individual, in which the collective life of the community should have no part; and so,**

all avenue of influences from external world which might disturb or distract the mind should be closed, so that spiritual life may grow freely in the atmosphere of inner peace.

Moreover, education itself was taken in its original true sense as involving the educing of the latent capacities and potentialities, the personality of the pupil concerned; and was therefore treated as a process of biological development, and not as a mere mechanical process, operating on the basis of collective drill and training, as it is being done at the present day in the system of modern education.

Mechanism is fatal to learning and spirituality where the mind and soul should be left free.

This is like treating the patients differing in their ailments to the same prescriptions, remedies and medicines in a Hospital. If a patient in the other hand, suffering from a particular disease, is given an individual treatment taking into consideration his physical and mental defects, his condition will show much improvement. So mass education stands condemned in the Siddha system.

NOTE.—The process of individual growth (inner) can only be achieved by means of a constant and close relationship between the pupil and the teacher. Even in Medical practice, as in other ways, mutual understanding between the patient and the physician is all the more a necessity, because no substantial progress can be expected thereof.

Paracelsus, the Grecian Philosopher also observed as follows— a physician who knows nothing of the astral man and the innermost centre or the soul, with the external physical body, hence with no spiritual power in himself, can be nothing else but an ignoramus and a quack, even though he might have himself studied all medical books and graduated in all the medical colleges. His boasted science is nothing but an invention to cheat and deceive. It is useless and dangerous to make a practitioner out of a person who is not a physician at heart.

சித்தர் களஞ்சியம், சித்தர்களின் விஷயங்கள் முழுவதையும் அவர்களின் இரகசியச் செய்



களைப் பற்றியும் கூறும் ஓர் தமிழ் நூல் திரட்டு, a full and exhaustive treatise in Tamil revealing all about Siddhars secrets and their activities.

சித்தர் கற்பம், பொதுவாக சித்தர்கள் நீடு காலம் இருப்பதற்காக கொள்ளும் கற்ப மருந்து. இதற்கு காய மருந்து என்றும் பெயர். இது உடம்பை பலப்படுத்தி, அழியாது நித்திய தேகியாய் சாகாமலிருக்கவும், கிழத்தனம், மரணம், பசி, இளைப்பு, தாகம், நித்திரை முதலியவைகளை வென்று விடுதலையாகி, எப்பொழுதுமே யௌவனமாகவே இருந்து காலம் கழித்து, சாயுஜ்ய சித்தி யாக்கி, அநேக ஆயிர வருஷங்கள் உயி ருடன் இருந்து கொண்டு, உடலுடன் அநேக இடத்திலும், உலக முழுவதையும் சுற்றிப் பார்த்து அனுபவிக்க! இடம் கொடுக்கும் தேவாமிர்தத்தைப் போன்ற ஓர் அபூர்வ மருந்து.

இதற்காக வேண்டிய காயகற்ப மூலிகைகள் இன்னதென்றும், தயாரிக்கும் முறைகளும், அதை வைக்க பாத்திரமும், சாப்பிட வேண்டிய காலங்களும், இன்ன விதமாய்த் தான் சாப்பிட வேண்டுமென்ற முறையும், வயதின் அளவுகளும், பத்திய முறையும், அதை சாதிக்கும் பழக்கமும், பத்தியத் தவறுதலால் ஏற்படும் கோளாறுகளும், இவை முதலிய விஷயங்கள், சித்தர்கள் அவரவர்கள் அனுபவித்தபடி கூறியுள்ள (1) அகத்தியர் 100, (2) கந்தர் 100, (3) போகர் 44, (4) சட்டை முனி 21, (5) கொங்கணவர் 16, (6) திருமூலர் 66, (7) கோரக்கர் 90, (8) இராம தேவர் 71, (9) உரோம ரிஷி 500, (10) மச்ச முனி 200, முதலிய நூற்களில், இவ் விவரங்கள் சொல்லி யுள்ளது. மேலும் கற்பம் சாப்பிடுவதினால் ஏற்படும் பலன்களையும் காட்டி யுள்ளது. அடியிற் கண்ட செய்யுள் உதாரணமாகவும் கூறி யுள்ளது:—

> "கற்பத்தை உண்டோர் காயமழியார்
> கற்பத்தினாலே காலனும் அகல்வான்
> கற்பத்தினாலே காமமும் கொல்லுமே
> கற்பத்தினாலே வாசியும் கட்டுமே."

a very rare medicinal preparation taken generally by Siddhars for rejuvenation and for prolonging life. It is also known "ambrosial medicine". It invigorates the system preventing death and decay of the body, thereby saving from disease, death, hunger, thirst, fatigue, sleep etc. It secures for the

user perpetual youth and mastery over the body. It enables one to live for thousands of years on earth and to roam about all over the Universe with vigour through the grace of the Almighty.

In order to serve this purpose, Siddhars have given several details as regards—the name of the drugs, the process of preparing them, the vessels used for preserving them, the method and the season for taking it, the age at which it should be taken, the diet to be followed, the process of bringing it to practice, the error in diet, and its consequences and the diseases emanating from such failure etc. According to their experience in the use of such medicine, several Siddhars have written on this subject in their books viz. (1) Agathiswar 100, (2) Nandiswar 100, (3) Bogar 44, (4) Sattamuni 21, (5) Konganava 16, (6) Tirumoolar 66, (7) Korakkar 90, (8) Rama Devar 71, (9) Rama Rishi 500, (10) Machamuni 200, and so on.

They have also concluded as to the important benefits derived from the use of it, and the above stanza in Tamil is quoted as an example.

This stanza assures that one can avert death, reach Heaven, see the Astral hight and restrain the respiration.

NOTE.—This rare preparation is only intended for persons following the Spiritual path of life and not at all for materialists who, by their ambition for wealth and desire for worldly pleasures, are likely to commit all kinds of sinful and wicked acts, detrimental to the interest and welfares of mankind. Rejuvenation and Longevity are only intended for men looking for the good of the public and for his own salvation in life.

NOTE.—This Kaya Kalpa or the Elixir Vitae is in itself, a product of Alchemy and something to be made secretly in the laboratory; and its pursuit was restricted to the votaries of Chemical science. Moreover, in early days from the similarity in purpose, and also in the idea underlying each, the elixir of life and the fountain of youth always go together, according to the views of Siddhors; but it is only now that they are considered as separate from each other. Efforts of rejuvenation are considered now as one phase of the healing art, and also as one naturally passed from the Alchemists to the Biologists. These Biologists have now taken up the cause and is still working in their laboratory, along those lines of Dr. Browne Sequard who acquired a notoriety by his proposal to use certain glands in the body to vitalise old men. Another modification of this method is to transplant active sex-organs from one animal to another and succeeding in this, it may lead from animal to human beings whose vitality is waning.

சித்தர் காலம், சித்தர்கள் அநேக காலங் களுக்குமுன் இருந்து வாழ்ந்து [illegible] தெரிந்த விஷயம். ஆனால் சில ஆயிர வரு ஷங்கள் [illegible] [illegible] 14 வருடங்கள் [illegible] [illegible].

அன்றியும், சுமார் கி. மு. 750ல் [illegible] [illegible].

[illegible] அதில் 48

பேர் அல்லது 24 பேர் மாணாக்கர் களென்பர், சிலர் அதுவல்ல, 18 பேர்தான் என்றும், தமது இஷ்டம் போல் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு பிற்பாடுதான் சித்த மார்க்கம் சாதிக்க வகை கெட்டொழிந்ததெனக் கூறுகிறது. எவ்வெனில், அகத்தியர் ஆரிய மார்க்கங்களை தமிழ் நாட்டினுட் புகுத்திய காரணத்தினாற்றான், சித்தர்களுடைய அரிய பெரிய சோதனைகளும், ஆயர்கள் கொள்கைகளும், அது முதல் வேரற்று ஒழிந்தது. Siddhars are universally supposed to have lived at a very remote period, and the period of their existence could not be exactly ascertained although it is said to be some thousands of years ago. It is known that originally there was in existence the school of nine Siddhars known as 'Navanatha Siddhars'; and that the School of Moolavarga; Siddhars (18 in number) came to be established after several thousands of years.

Their school ceased to function long long ago. It is said that Rama, the king of Ayodhya who was sent on exile for 14 years, learnt Chemistry and Alchemy from the Siddhars on the borders of Dandhaka forest.

About 750 B.C. the Aryans began penetrating round about the Vindhya Mountains, and the great forest which is on the North bank of Tungabhadra; and their entry is preserved in the tradition regarding Agastya's Advent into the South. It would appear that the Aryan migration to the S. India has been referred to this period. Dandhaka forest marked the Aryan frontier and it is said that the Aryan immigrants came into the Tamil land under the lead of Agastya.

This Agastya who is said to be a disciple of Dhanwantri carried Ayurveda to S. India and founded a new school of medicine after his name. This school is said to have consisted of 48 members, some say 24, others assert only 18, as they liked. According to the legend, it is only after the advent of the so called Agastya, that the Siddha System and the school should have received a death blow as he was responsible for introducing the Aryan culture into the Tamil country. Siddhars period of culture had ceased to exist from this date.

NOTE I.—Siddhar's period was one of intense intellectual activity in all the arts and sciences. In the realm of medicine, it was indeed a golden age. 'New ideas took root and flourished. After introduction of Ayur Veda, there was a growing indifference with the past and a thirst for fresh knowledge. Nevertheless, during the period of transition, old methods consistently persisted. In the 17th century, Sir Thomas Browne still believed the Siddha system of Medicine regarding stars as potent influences in the control of health and diseases. The Galenic pathology of the humours was holding still its own. The soul was believed to be located in the Pineal gland of the human brain. A great scholar, and the author of some medical works fixes the Siddha system of Medicine between 10,000—4,440 B.C.

NOTE 2.—The Agastya whom Rama met near Panchavati, could not have been the first Agastya. Anyway, the said Agastya of the Siddha School is only a myth. It is very doubtful whether this Agastya is identical with the great Rishi in N. India. Though different Agastyas resided in different places, Puranas tell us that all the Agastyas as one Agastya Rishi. He is said to have written numerous treatises on Medicine, Alchemy, Magic etc.; but they are all considered as literary forgeries copied by his followers from the original Siddha works and fathered on the name of Agastya. Amongst the 18 Siddhars known as Moolavarga Siddhars, there is also one by the name of Agastya who is a Vellala; but he is not the one above referred to. It is presumed that the Arya Agastya is responsible for innumerable changes in the Siddhar's Science in his attempt to secure an equal footing to Ayurveda. So many are the stories current that it is very difficult to sift truth from fiction.

சித்தர் குடி விருட்சம், சோதி விருட்சம், a tree luminous in the dark. It is a species of burning bush—Dictamnus supposed to be found in the mountainous regions of Afghanistan. See சோதி விருட்சம்.

சித்தர் குளிகை, காயா குளிகை ஆகாயவழி சித்தர்கள் தமது மார்க்கத்தில் பறப்பதற் காக உடகொண்டிருக்கும் சாயஇல சித்தப்பிரத் குளிகை. இதை சித்தர்கள் அடிப்பிடத்

படி பலவிதமாக தயாரித்து உபயோகித்து வந்தார்கள், the animated mercuri·l pill used for travelling in the aerial regions These pills were prepared and used by the Siddhars in various ways as detailed under :—

I. போகர் நூலின்படி, இக் குளிகை ஆறு விதங்களாகச் சொல்லப் படும். இவைகள் சத்துக்களைக் கொண்டு செய்வது, அவை யாவன, according to Bogar's work these pills consist of 6 kinds and are prepared from the essence of the following substances and are animated as mentioned below :—

1. உபரசம், Uparasas — 120 times.
2. மகாமூலிகை, Medicinal plants — 21 ,,
3. காரசாரம், Alkaloids — 25 ,,
4. பாஷாணம், Poisons (arsenic) etc. — 68 ,,
5. நவலோகம், Metals — 9 ,,
6. நவரத்தினம், Gems (nine) — 9 ,,

இவ்வொன்றைக் கொண்டும் அதன் சக்திக்கு தக்கபடி அநேக ஆயிர மைல்கள் உலாவலாம், each of them will enable one to travel several thousands of miles according to its potent powers.

II. திருமூலர் நூலின்படி, இந்த இரசக் குளிகை சாரணை தீர்ந்ததைக் கருதி எட்டு விதமாகச் சொல்லப் படும், அவையாவன, as per Bogar's work, these animated mercurial pills are classified into 8 kinds according to the number of times they are animated viz.—

1. சொரூபம், soroopam, animated — 51 times.
2. சூட்சமம், sukshumam, animated — 30 ,,
3. கமலினி, kamalini, animated — 21 ,,
4. அட்டமா சித்தி, attama Siddhi, animated — 15 ,,
5. காமினி, kamini Siddhi, animated — 11 ,,
6. யோகினி, yogini, animated — 7 ,,
7. விண்ணேகி, vinnegi, animated — 3 ,,
8. பரிசம், parisam, animated — 1 ,,

III. சட்டமுனி வாத காவிய நூலின் படி, மேற்கண்ட இரசக் குளிகையை சாரணை தீர்க்கும் வகையைக் கருதி 7 விதமாக வரிசைக் கிரமமாய் கூறப் பட்டுள்ளன. அவை யாவன, according to the Sattamuni work on Alchemy, the said mercury pills are classified into 7 kinds according to the number of its animation as mentioned below viz :—

1. சகடு, sagadu, animated. Once
2. கெவுனம், gevunam — 8 times.
3. கேசரி, kesari — 5 ,,
4. அட்டமா சித்தி, attamah Siddhi — 7 ,,
5. கமலினி, kamalini — 9 ,,
6. காமதேனு, kamadenu. 10 ,,
7. சொரூபம், soroopam — 15 ,,

IV. கொங்கணவர் நூலின்படி இரசமணி சாரணை தீர்க்கும் வகையைக் கருதி 12 விதங்களாகவும், மச்சமுனி கையில் கொடும்பேறி குளிகையும், கோரக்கரிடம் போகிக் குளிகையும், ரிஷப யோகிக் கையில் சாய்கை வேதியும் இருந்ததாகவும் சொல்லப் படும், according to the works of Konganava, the said animated mercurial pills consisted of 12 kinds; and it is said that the pill possessed by Machamuni was Kodumbethi, that the one Korakkar had with him was Bogi pill, and that the one possessed by Rishaba Yogi was Saigai Vethi pill.

NOTE.—The said animated mercurial pills according to Siddhars process would, if retained in the throat, not only enable one to travel in the aerial regions, but also neutralise the action of fire, dematerialise the body, lead one to the path of wisdom, throws the Astral light and serve for various other purposes. No books so far, either in Sanskrit or in any other language except in Tamil Siddha works could be found treating on such a subject; and no nation in the whole world except Tamilians, was aware of this wonderful art. This in itself is a sufficient proof that the highest attainments of the Siddhars in spiritual science are marvellous and awe inspring. No one has, up till now, attained the glory of exploring fully to the extensive field of this unknown science.

**சித்தர் கூட்டம்,** பல சித்தர்கள் ஒரு விஷயத்தைப் பற்றி ஒரே இடத்தில் கூடியிருக்கப்பட்ட தொகுதி, the meeting of several Siddhars to form an assembly for some object in view.

**சித்தர் கூனி,** கட்டுக் காடை, a bird of large size of the Coracidae family; Indian roller—Coracias indica.

**சித்தர் கொள்கை,** சித்தர்கள் ஒவ்வொருவரும், தாங்கள் எழுதியுள்ள நூற்களாகிய வாதம், வைத்தியம், யோகம் ஞானம் இவைகளின் விஷயங்களில், தாம் கொண்ட கருத்தின் கோட்பாடுகளை வெளியாகக் கண்டிருக்கிறார்கள். மேற்கண்ட நான்கு வகைகளில், ஒவ்வொன்றிலும், அவர்கள் கருத்தின கோட்பாடுகளை அடியிற் கண்டபடி சுருக்கமாக விவரிக்கப் பட்டுள்ளன, every one of Siddhars has written clearly in their works on four subject, viz —Alchemy, Medicine, Yoga and Philosophy; and they have all mentioned clearly of their syllogism or propositions. These propositions are mentioned below briefly under each head of the four said subjects viz :-

I. வாதம், *Alchemy* (Chemistry)—

1. வாதி முக்கியமாய் தெய்வபக்தி யுள்ளவனாயிருக்க வேண்டும். ஆகவே, வைராக்கியம், தயாளம், தருமம், மேலான மன சுத்தம் ஆகிய இக்குணங்கள் அவசியமானது. an Alchemist should necessarily be a Spiritualist and so, strong will, benevolence, charity and above all, purity of mind is essential.

2. இவனுக்கு பணம் அல்லது பொன் பேரில் இச்சையே இருக்கப்படாது, he should not have avarice or greediness for gold or money.

3. இவன் பிறவியிலேயே சோதிட கிரகங்களின்படி வாதிக்குள்ள சக்தியன், பூர்வ கருமானுசாரப்படி அமைந்தவனாயிருக்க வேண்டும், he should be a born Alchemist, taking birth at a particular constellation of stars, according to his former Karma.

4. எப்படி ஒரு குழந்தை கருப்பத்தில் தரிக்கும்போது, பஞ்ச பூதங்களின் உறவு பிரதானமோ, அதேமாதிரி வாதம் சித்திப்பதற்கு மேற்கண்ட ஐம் பூதங்களின் உறவு கிரமப்படி அமைய வேண்டும். இதில் தவறுதல்கள் ஏற்பட்டால், கருவிலிருக்கும் சிசு எப்படி சிதைந்து போகுமோ, அது போல, வாதம் முறைகளும், முறை பிசகினால் சித்தியாகாது. the principles of five elements on which the product of Alchemy is based, is in every way identical with those comprised in the generation of a child. If any defect, excess or other changes in the five elementary principles of the alchemical process take plac. it is a failure just like the abortion in a child.

II. வைத்தியம், *Medicine* —

1. இயற்கையில் ஏற்பட்ட விதிகளை சரிவர தெரிந்து கொள்ளாமலும், அதற்குண்டான உண்மையறிவை செலுத்தாமலும், செய்யும் வைத்தியமானது எப்பொழுதுமே, கொள்கையும், அபிப்பிராயத்தையும், மனப் போக்கையும் மேற்கொண்டதாக இருக்குமே ஒழிய, உள்ளபடி நோய்களை நிவர்த்திக்கும் குணம் வாய்ந்ததாய் இருக்கவே இருக்காது. a system of medicine without understanding and without a true knowledge of natural laws, will remain for ever a system of theories, mere opinion and of passive observation and inactivity.

2. சித்தர்களின் கொள்கைப்படி, மனிதனுக்கு நோய்கள் ஏற்படுவதெல்லாம் துஷ்ட தேவதை அல்லது கிரகக் கோளாறுகளினாலே ஒழிய வேறல்ல. ஆகவே, இத்தகைய கெட்ட கோளாறுகளை தடுக்க வேண்டி அநேக நூதனமான விதிகளையும், அனுஷ்டானங்களையும், மாந்திரீக, மனோவசியக் கிரியைகளையும் தாங்கள் நூற்களில் காட்டியுள்ளார்கள், according to Siddhars theory, diseases in man are caused by the intervention of evil spirits or planets and so, they offered many curious rules and rites for averting their influences

and effects, through magnetism, magic etc.

3. மனிதன் தன்னுடைய சொந்த சக்தியினுல் ஒன்றும் செய்துவிட முடியாது, ஏனெனில் தனக்கு ஏற்படும் நம்பிக்கையின் ஆதாரத்தினுல் தான் ஒவ்வொரு காரியமும் சித்தியாகும். இது வைத்தியனுக்கு முக்கியமாய் தெரியவேண்டிய விஷயம், man can accomplish nothing through his own power, but everything can be accomplished through man by power of faith. This truly holds good in the case of a physician.

4. வியாதிகள் இயற்கையில் தானுகவே உண்டாகிறது, தானுகவே தான் அவ்வியாதிகளை குணப் படுத்துகின்றது. ஆகவே, வைத்தியர்கள் மனிதனுக்கு சுபாவத்தில் ஏற்படும் குற்றங்கள், என்ன விதமாய் ஏற்பட்டதென்பதை அறிய வேண்டும், it is Nature that causes diseases; and it is again Nature that effects their cures; and therefore, physician should know the process of Nature.

5. வியாதிகளும், மற்ற கெடுதியான துசம்பவங்களும், கிரக தோஷங்களினுலும், பூர்வ கருமானுசாரத்தினுலும் தான் ஏற்படுகிறது என்பதை சித்தர்கள் பூரணமாக தெளிந்துள்ளார்கள், Siddhars fully realise that planetary evil effects (கிரக தோஷம்) and sins of previous birth known as Karma are the causes of diseases and other misfortunes.

6. ஒரு நோயாளிக்கு சிகிச்சை செய்வதற்கு முன்னதாகவே, வைத்தியன் நோயாளியின் சாதகப்படி கிரகநிலைகள் தெரிய வேண்டியது முக்கியம். ஆகவே, தெரிந்த பிறகு தான் வைத்தியம் செய்ய ஆரம்பிக்க வேண்டும், according to a patient's horoscope, the movements and disposition of the planets are of much importance in Medicine; and so, it is most important for a physician to consider the aspect of heavenly bodies before starting the treatment of a patient.

III. *யோகம், Yoga.*—

1. ஒரு யோகியானவன், பரகாயப் பிரவேசம் அதாவது பிறருடைய உடம்பிற்குள் தான் புகுந்துவிடக் கூடும். இறந்த பிரேதத்தில் கூட பிரவேசிக்கலாம் பிறகு இவ்வுடம்போடு எழுந்து இங்கு மங்கும் கூடத் திரியச் செய்யலாம். அன்றியும், புதிதாக மனிதனை சிருட்டிக்கலாம், மனதையும் உண்டாக்கலாம், இதை 'சிருட்டித்த வுடம்பு', 'உண்டாக்கின மனது' என்று கூறப்படும், a Yogi can enter another's body and even the dead body, and make it get up and even move about. He can also manufacture bodies and minds called 'created bodies' and 'created minds'

2 யோகாப்பியாசம் ஒன்றினுல் தான் பிறப் பிறப்பை, வெகு சீக்கிரமாகவும், சுருக்கமாகவும் முடித்துக் கொள்வதற்கு குறுக்கான வழி. இத்தகைய யோகம், ஒரு குரு விளக்கித் தொட்டுக் காட்ட வேண்டும்; அப்படியில்லா விட்டால் உடம்பிற்கு கெடுதி ஏற்பட்டு சௌகரியம் உண்டாகாது, the shortest and the swiftest way to complete the cycle of evolution in man is by Yoga, which cannot be practised without having some one to guide and explain what they mean; lest there will be a break down in physical condition and health.

3. பரிசுத்தமான மனதே, யோக விஷயத்தில், ஒரு குருவாகத் தனக்குள் நின்று காட்டிக் கொடுக்கும். ஏனெனில் தெய்வ பக்தி மேலுக்கு ஓங்க தன்னைத் தானறிவதற் குண்டான அறிவு விளக்கமும் மேம்பட விருத்தியாகும். அப்போது அந்த உயர் நிலை பெற்ற மனதே குருவாக நிற்கும், pure mind itself plays the part of a Guru (spiritual guide), because when the spiritual practice is increased, the power of comprehension is also increased and this, enables the higher mind to act as a guide.

4. பஞ்ச பூதங்களை யோகிதான் ஆளுகைக் குள்ளாக்கலாம். ஆகவே, இயற்கையி லுண்டான பேதங்களையும் மாற்றலாம். சிருஷ்டி வகையில் எவ்விதமான ரூபமும் எடுக்கலாம். தன்னுடைய உடம்பையே போக்கவும் செய்யலாம், மறுபடியும் ஆக்கவும் செய்யலாம், man can have command over the elements; and as such, alter the course of Nature, may assume any form in the creation, dematerialise and rematerialise their bodies.

5. குண்டலினிக் குள்ளே வலிவும், நரம்பு சக்தியும் தகுந்தபடி இல்லாவிடில் இருதயம் துடிக்காது, நுரையீரல் மூச்சு விடாது, உடம்பில் இரத்தோட்டம் உண்டாகாது. மற்ற உறுப்புகளும் தனக்குரிய இயற்கை தொழில்களை முடிக்கவே இயலாது, without the energy or nerve-force stored up in Kundalini (Serpent power), the heart cannot beat, the lungs cannot breath, the blood cannot circulate and the various other organs cannot perform their normal functions.

6. மனிதருக்கு இயல்பிலே தங்களுக்குள் உண்டான காந்த சக்தியினால் உலகத்தாரை தன் வசமாக்கவும், ஒரு தேசத்து வகுப்பினர்களை தன் ஆட்சிக் குள்ளாக்கவும் செய்யலாம். இதற்கு சாதாரணமாக பிராணாயாமத்தினால் உண்டான வலிவே காரணமாகும். உதாரணமாக, ஐரோப்பாவி லிருந்த நேபோலியன், அமெரிக்காவில் எப்ராம் லிங்கன், தற்காலத்திய முசோலினி, இட்லர் இவர்களுக் கெல்லாம் உண்டான காந்த சக்தியே காரணம், the personal Magnetism is the subtle force developed in man, by which people are influenced and the nations are controlled, and it is due to the strength of Pranas as for instance, Nepoleon of Europe, Abraham Lincoln of America, the present day Mussolini, and Hitler were all endowed with this gift.

சித்தர் கொள்கை

IV. ஞானம் (தத்துவ ஞானம்) *wisdom* (Philosophy)—

1. உலக சிருஷ்டியில் மனிதன் ஒருவனுக்கே, எல்லாவித சக்திகளும் உடம்பினுள் மறைந்துள்ளது. இச்சக்தியால் மனிதனை கடவுளின் ஆற்றலுக்கு சமமாகவே சொல்லலாம். ஆனால் மனிதனோ, இப்படிக்குள்ள சக்திகளை கொஞ்சமேனும் கவனியாது தன்னுடைய முயற்சியினால் அதை வசமாக்கிக் கொள்ள வழி தெரியாததே ஒரு பெருங் குற்றமாகும். man is the only being in the creation, with all kinds of latent powers reaching up to the level of God; and his only defect is that he does not care to know that such powers are hidden in him, and he has to make them patent by his perseverance.

2. மனிதனுக்கு இயல்பிலே இருக்கும் பூர்ண சக்தி, மாயையினால் மறைக்கப் பட்டு, சரியான பாதையிற் செல்ல ஒட்டாமல் தடுக்கும். அப்படி தடுக்காதபடி செய்து விட்டால், இயற்கை சக்தியானது தனது பூரண வலிமைக் காட்டும், perfection in man's nature is barred by Maya and prevented from taking its proper course; and when once, this bar is removed, Nature rushes with all its potentialities and powers.

3. நமது உடம்பில் உள்ள உயிர் இருக்கவும், நிலைபெறவும் காரணமாக வுள்ள ஆத்துமாவிற்கு, இது விஷயமாக அனேக ஆதாரங்க ளுண்டு, அவைகளாவன—பஞ்ச பூதங்கள். ஆறாதார நிலைகள், மூன்று நாடிகள், முக்குணங்கள் இவை முதலான 96 தத்துவங்கள், there are in our body several supports to the soul for the existence and sustenance of life and they are—the five elements, the six plexuses, the three Nadies, the three humours etc. constituting in all 96 Tatwas i e. the constituent principles in nature.

NOTE,—This is the Eastern Physiology,

describing the Tatwas from the lowest and the greatest, which is the earth. Both Vedantists and Siddhantists accept the number 96 on the ground that the Vedantists 36, when still more analysed, give rise to 96. The Philosophy underlying these Tatwas is briefly enumerated in the table given in the Introduction of this work Vol. I

**சித்தர் சமாதி,** சித்தர்கள் தங்கள் உடலை ஒடுக்கி இலிங்க வடிவமாகி நிலைபெற்ற இடம். பொதுவாக, சமாதி என்பது மனதை ஒருமைப் படுத்தி தன் வசமாக்கி உலக விவகாரங்களை மறந்து நிற்கும் நிலைமை. இது இரண்டு விதம், அதாவது சவிகற்பம், நிருவிகற்பம். ஒன்றில், சித்தர்கள் தங்கள் இயற்கை சக்திகளை வென்று மேன்மையான எல்லாவித சித்திகளும் அடைவார்கள்; மற்றொன்றிலோ, பரிபூரண பக்தியில்லாமற்படி போத நிலையடைந்து இருப்பார்கள். ஆகவே, சித்தர் சமாதி நிலையில் தன்னைத்தான் அறியும் ஆத்ம சக்தியை அடைவார்கள். அன்றியும், தன் ஆத்மாவை மற்றொருவர் உடலிலும் புகும்படிச் செய்யக் கூடும். அவர்களின் கடைசியான கொள்கையோ, ஆத்ம ஞானத்தை அடைவதாகும். ஆதலின், சித்தர்கள் தங்கள் உருவத்தை இலிங்க வடிவமாக்கி நிலையுற்று இருப்பார்கள். இதுதான் சித்தர் சமாதி. இவ்விதமான சமாதிகள் இந்தியா முழுவதிலும் உண்டு. ஆயினும், தமிழ் நாடாகிய தட்சண பாகத்தில் விசேஷமாய்க் காணலாம். வேறு சில நாடுகளிலும் உண்டு. இச்சமாதிகளின் மேல் கோயில் கட்டி, விந்து நாதக் கூறுகளான இந்த லிங்கத்தையும் ஆவுடையார் என வழங்கும் சத்தி பீடத்தையும் சேர்த்து சிவரூபமாகக் கொண்டு நிலை நிறுத்துவார்கள். ஏனெனில், சாதாரண கோயில்களைவிட இதற்கு உள்ள மகத்துவங்கள் மிகச் சிறந்தது. இவ்விதமான பிரசித்தி பெற்ற கோயில்கள் நால்வரால் பாடப்பெற்றுள்ளன. ஆகவே, சித்தர்கள் ஒவ்வொருவரும் எவ்வெவ்வூரில் சமாதியானார்களோ. அச்சமாதிகளின் மேல் சோழராசனால் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.

அன்றியும். அற்கணியில்லாத எவ்விதமான விஷயங்களையும் மூல சாட்சியங்களால் வேறு வகையில் பரிசீலனை செய்யும் பக்தியாளர்களும், மறைந்து கிடக்கும் பூர்வ வஸ்துக்களை கண்டறியும் ஆராய்ச்சியாளர்களும் தாங்கள் சளைக்காமல் மேற்கொண்ட உழைப்பினால் தான், சரித்திரமே ஏற்படாத ஆதி காலத்து தமிழர்கள் வாழ்க்கை இவ்வளவு சிறப்பு வாய்ந்ததென்று, தெட்டன விளங்கலாயிற்று. இத்தென்னிந்தியா வாகிய தட்சணத்தில் அனேக மகான்களின் பக்தி மார்க்கப் போக்குகள் அடங்கிய விஷயங்கள் அனேகம் வெளிப் படாமல் இன்னும் மறைந்து கிடக்கிறது. மேற்கண்டபடி, சமாதி யடைந்த சித்தர்களின் பெயரும், அவர்களுக்கு சோழராசனால் கட்டப்பட்ட கோயில்களின் ஊர் பெயரும் அடியிற் கண்டுள்ளன.



அலையாலயம், the final place of beatitude, where Siddhars have transformed themselves to a phallus. Generally, Samadhi is that state of complete concentration where the mind becomes superconscious and all external matters and conditions are forgotten. It is divided into 2 kinds Savvigarpam, Niruvigarpam. In the first kind, the Siddhars gets all Siddhis i.e. powers of controlling nature, and in the other, perfect super-consciousness, and it is the state which gives freedom. So, a Siddha in Samadhi enters his own Self: and he can also enter into another's self. The final goal is the union of human soul with the Divine Spirit. So, Siddhars who attained success metamorphosed their bodies into Linga (phallus) form. So, this is known as Siddhar's Samadhi.

Such kind of Samadhies of Siddhars will be found throughout India and especially in the S. India and some parts of other countries. Hindu temples were built on these Samadhies with Sivalingam (Phallus) as the presiding Deity, symbolising Bindu and Natham, (Lingam and Avudayar), to which are significantly attributed all aspects of the temples purposefully designed and erected. These renowned temples were eulogised by the great "Tamil Nalwars". Wherever, these Siddhars have each attained Samadhi, temples were built by the king Chola. The indefatigable labours of Anthropologists and Archeologists have doubtless resulted in marshalling other records than those in writing, which throw fairly good light on the life of Tamilians of pre-historic times. Many chaptere on the spiritual evolution of renowned men as Siddhars, Rishis etc. of S. India still remains as a sealed cover. The following are the details of names of places and the

names Siddhars for whom temples were built by king Chola over their Samadhis (edifices) viz:—

1. திருமூலர், Tirumoolar — சிதம்பரம், Chidambaram.
2. கொங்கணவர், Konganava — திருப்பதி, Tirupathi.
3. போகர், Bogar—பழனி மலை, Palani hills.
4. சட்டைமுனி, Sattamuni —சீர்காழி, Shiyali.
5. மச்சமுனி, Machamuni—திருப்பரங்குன்றம், Tirupparangundram.
6. கருவூரார், Karurar — தஞ்சாவூர், Tanjore.
7. ராமதேவர் அல்லது யாகோபு, Rama Devar alias Yacob — அழகர் மலை, Alagar-Hills.
8. இடைக்காடர், Idaikkadar — திருவண்ணாமலை, Tiruvannamalai.
9. கமலமுனி, Kamala Muni—திருவாரூர், Tiruvalcor.
10. பாம்பாட்டி, Pambatti — திருக்கடையூர், Tirukkadaiyur.
11. புண்ணாக்கீசர், Purnakisar — நாங்குனேரி, Nanganacherry.
12. கோரக்கர், Korakkar — போய்யூர், Poyyur.
13. அழுகண்ணி, Aluganni — நாகப்பட்டணம், Negapatam.
14. சுந்தரானந்தர், Sundarananthar — மதுரை, Madura.
15. குதம்பை, Kudambai — மாயவரம், Mayavaram.
16. கடுவெளி, Kaduveli — காஞ்சீபுரம், Conjeevaram
17. நந்திதேவர், Nandi Devar — காசி, Benares.
18. வால்மீகி, Valmiki — எட்டிக்குடி, Ettukkudir.
19. நாரதர், Narathar — திருவிடைமருதூர், Tiruvidaimaruthoor.
20. பதஞ்சலி, Patanjali— இராமேசுவரம், Ram[illegible].
21. கசிபர், Kasibar — உருத்திரகிரி, Ruthragiri.
22. விஸ்வாமித்திரர், Viswamitra — திருவாடுதுறை, Tiruvaduthurai.
23. காலாங்கி, Kalangi — காஞ்சீபுரம், Conjeevaram.
24. தன்வந்திரி, Dhanwantri—வைத்தீஸ்வரன் கோவில், Vaitheeswaran Koil.
25. கும்பமுனி, Kumba Muni — கும்பகோணம், Kumbakonam.

சித்தர் சிகிச்சை, சித்தர்களுடைய வைத்திய நூல்களில் சொல்லியிருக்கிற முறைப்படி ரோகங்களை குணப்படுத்த வேண்டி செய்யும் பரிகாரம். இந்த விஷயத்தில் சித்தர்கள் கொண்ட நோக்கம் பல விதமானவை. அவர்கள் முறைப்படி, வியாதிகள் இருவகையானவை, அவை உடம்பையும், மனதையும் அடுத்ததாகும். ஆயினும், இரண்டும் தேக அமைப்பைப் பொருத்திருந்தாலும் மனதை விட்டு மற்றொன்று இல்லாமல் இருக்க முடியாது. மேலும், சித்த வைத்தியத்தில் மனிதனின் வெளிப் புறமான உடம்பை மாத்திரமல்ல, உட்புறமான ஆத்ம நிலைமையும் கவனிப்பதாகும். ஆகவே, அசுத்தத்தை விட சித்தமே ஆதாரமாகக் கொண்டது. இவ்வித சிகிச்சை எளிதாக தோன்றினாலும், முக்கியமாக அறிவைப் புகட்ட வேண்டிய விஷயமாகும். இது அநேக ஆயிர வருஷ காலமாகவுள்ள ஆராய்ச்சியைக் கடந்தது.

சித்தர்கள் நோயின் தன்மையைக் கண்டறிவதற்காக நாடிப் பரீட்சையை கண்டு பிடித்து அதை வெகு நுட்பமாக அறிந்ததும் தவிர, குரு மூலமாய் சீஷர்களுக்கும், தகப்பன் மூலமாய் பிள்ளைகளுக்கும் தெரியும்படி வழங்கி வந்தார்கள். வைத்தியம் பார்ப்பதற்கு தொடங்கு முன்னமே, இதை முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும். சில வைத்தியர்கள், ஒரு மனிதன் நோயாளியாயிருந்தாலும் சரி அல்லது சௌக்கியமாய் இருந்தாலும் சரி, ஒரு வாரம் அல்லது சில நாட்களுக்கு முன்னதாகவே, அவன் நாடியின் குறி குணங்களைக் கொண்டு மரணத்தை நிச்சயமாக சொல்லிவிடுவதற்கான அவ்வளவு திறமை வாய்ந்தவர்களாயிருக்கிறார்கள்.

ஆகவே, சித்த வைத்தியத்தில் இந்நாடி சோதனையும், நோயின் சிகிச்சையும், மிக்க புகழ்ந்தக்கதாயுள்ளது. வைத்தியர்களோ சிகிச்சை காலத்தில் மருந்தின் குணத்தை கவனிக்காமலும், [illegible] கொண்ட பின் நோயாளியின் (1) வயது, சரீரபலம், (2)

சுவாசப் போக்கு, (3) தாது விருத்தி ஆகிய பிற் குணங்களை கவனிப்பார்கள்.

மேலும், வைத்தியன் முதலில் ஒரு நோயின் உருபாவிகளை கவனிப்பது. அதனால் ஏற்பட்ட பல நோய்களையும், அவற்றின் மூல காரணங்களையு மாத்திரம் தெரிந்து கொள்ள வேண்டு முயலுவார்கள். ஆகையால், நோயின் வளர்த்தியும் அதன் சிகிச்சை விஷயத்திலும், மேனாட்டு வைத்தியத்தை விட மிக விசாலமான போக்கைப் புகட்டுவதாகும், the treatment given for curing diseases according to the methods laid down in the Medical works of Siddhars. Several are the aspects of Siddha Medical treatment. According to them, disease consists of two classes—physical and mental, which refer to deviation from the normal physiological and psychological condition respectively; and these two have a common constitutional background and so, neither is known to exist without the other. Moreover, the Siddha treatment consists not merely with the *external* body of man but also the *inner man or the soul.* It is based more on spiritual basis than on materialistic one. Though simple, the treatment is comprehensive, and has stood the test of thousands of years.

— It should be known that Siddhars have found out such aids to diagnosis as auscultation and feeling of the pulse. This pulse is being studied with great minuteness; and the secrets involved therein are handed down in strict confidence from father to son or sometimes from Guru to his disciple. Pulse is the most essential preliminary factor in the treatment of diseases and some physicians are so very skilled in detecting the symptoms that he can often accurately foretell even the death of a person whether he be sick or hale and healthy, a week or so before it actually happens.

So, one of the most interesting phases of Siddha medicine is its diagnosis by way pulse and the treatment of diseases. In the treatment of diseases, the physician does not confine his attention to the immediate effect of his medicine on the disease, but notes with equal care its after-effects and its by-effects in the (1) digestive, (2) respiratory and (3) the reproductive systems.

Moreover, he does not take first into consideration about the manifestation of a particular disease, but only the root and causes of all diseases and disorders; and so, wider and grander generalisation is offered in the cause of diseases and their treatment than the Western medical science.

NOTE.—In this treatment, the patient is always first treated before he is treated for the diseases. It is believed that in most cases, the root cause of the disease is the depletion of nerve-force. By curing nerve disorders and regulating nerve metabolism, certain diseases may be prevented from becoming chronic. If the patients' nerve-force is improved, his defective metabolism due to the defective nerves may also be improved. It is believed that the common cause of diseases is the depletion of nerve-force, and that, in order to be physically sound a man must have adequate nerve-force in all his organs. See also சிகிச்சை.

சித்தர் ஞானம், see சித்தர் பெரடி.

சித்தர் ஞானம், அனைத்து ஞானறியும் சித்தர்களின் போதனை, அல்லது ஆத்ம ஞானம். இது சிவனால் அளிக்கப்பட்டது. சாதாரணமாக மனிதன் தன்னையும், ஆத்மாவையு மல்லாமல், தன்னைச் சுற்றியுள்ள மற்ற மனிதர்கள், வஸ்துக்கள் தன்மையையும், எங்கும் நிறைந்த சக்தியையும், சிவேகத்தால் அறிந்து தெளிவடைவதினால் ஏற்பட்ட ஞானம். இதனால் அவர்கள் நோக்கம் என்னவெனில், உயிர் இருக்கும்போதே முக்திக்கு வேண்டிய சாதன வழிகளைத் தேடிட வேண்டியது என்பது தான். இவ்வித நிலையை ஆத்ம ஞானத்தினால்தான் அடையக்கூடுமென்பது அவர்கள் துணிபு. இதற்கு யோகம் முக்கிய ஆதாரமாகும். யோகிகள் அடையும் ஆனந்த மயத்தால் இது கைவல்லிய மாகும், it means the Siddhars philosophy or practical wisdom or the highest stage of spiritual knowledge obtained from Siva. It arose from the study of man and his soul and the self and the human society as well as the nature and matter around him, together with the Universal God. Their aim in this respect is, that salva-

tion should be attained in the life-time of one's own living period with consciousness in himself, and not after death, as it is generally understood; and this is known as 'Ananda Mayam' (ஆனந்த மயம்) state of the Yogi or the inertness in the activity of the Gnani, and 'the Nirvana of the Buddhists'. Freedom of soul is their goal through perfection, and the method is by Yoga.

NOTE.—This ancient wisdom is surrounded with mysteries from time immemorial. The great centre of all sublime teachings is always found in the form of mysteries. The end and nature of all these mysteries is only meant to teach the doctrine of immortality or a life beyond the present state. Siddha gnanam which is the real Philosophy and Science of this world can be unlocked by the key of Bindu and Nataam.

Siddhars hold that the entire universe comes from one source Divine intelligence. This intelligence is unlimited by time or space (காலம் கடந்த ஞானம்); it pervades all things, it it is eternal and cannot be destroyed. They found that truth does not lie in any religion, but it is in the human soul. The God is in the heart of man and so, Reality is in us. A man of wisdom ought to live like a lotus leaf, which grows in water, but is not moistoned by it. It is easy to be active, but hard to be calm which means the control over mind.

NOTE.—This individual conciousness or knowledge of the soul is the spiritual knowledge attained through Yogic power; and when once this is attained, the Siddhars have only a course of empirical existence in which they are mostly unconcerned. They will always have a matured tendency of being helpful to others; and possess a universal sympathy.

சித்தர் தங்கம், வாதத்தினு லுண்டான தங்கம். இதுவே தங்கச் செம்பு, the synthetic gold obtained through Alchemical process. It is a highly concentrated gold of copper colour.

சித்தர் தமிழ், சித்தர்களெல்லாம் அனேகமாய் சைவத் தமிழர்களே என்று இதற்கு முன்னமே கூறப் பட்டிருக்கிறது. அவர்கள் பாடிய வாதம், வைத்தியம், யோகம், ஞானம், சோதியம் முதலான நூற்களெல்லாம் தமிழில் செந் தமிழ் நடையில் தெளிவாகவும், இலக்கணப் பொருத்தமாகவும் செய்யுள் ரூபமாக எழுதியுள்ள விஷயம் அவர்கள் செய்த நூற்களிலேயே இனிது விளங்குகிறது. அவற்றுள் வாதம், யோகம், மாந்திரிகம், ஞானம் ஆகிய இந் நூற்களைப் படித்து அருத்தம் தெரிந்து கொள்ள முடியாத கடினமான முறையில் எழுதப்பட்டிருப்பதாகக் கருதப் படுகிறது. ஆயினும், செய்யுளாயுள்ள வைத்தியம் முதலிய இந் நூற்களையே தனிப்பட்ட முறையில் வாசித்தறிந்தவர்கள் இவைகளை மிகவும் கொண்டாடுகிறார்கள். சோதிடத்தைச் சார்ந்த நாடி நூற்களெல்லாம் மிக்க உயர்வான தமிழ் செய்யுளில் எழுதப் பட்டிருக்கிறது. சித்தர்களால் தமிழில் எழுதிய நூற்களெல்லாம் வட மொழியில் எழுதியுள்ள, அனேக நூற்களைவிட மிகச் சிறந்ததாகும். சித்தர்களின் மரபில் வந்த ஆசாரியர்கள் எழுதிய நூற்களும், இக்காலத்துக் குதவும்படி, சுலபமான முறையில் இலக்கண நடையில், பூர்வ காலத்து தமிழைத் தழுவாமலே எழுதியுள்ளார்கள். ஆகவே, தமிழ் பாஷையின் போக்கையும், அதன் ஒழுங்கையும் நோக்கில், நாம் எப்படி பேசுகிறோமோ, அம்முறையில் தெளிவாயும், சுலபமாயும், அறியும்படி எழுதியிருக்கிற தென்பதற்கு சிறிதேனும் ஐயமில்லை. ஆனால் ஒன்று—சித்தர்களெல்லாம் தங்கள் வாழ் நாளில் 120 வருஷத்திற்கு முன்னே, கடைசியாக போத நிலை அடைந்த பிறகே, இவ்விதமான சுத்த இலக்கண மமைந்த செய்யுட்களை இயற்றினார்களென்று தெரிகிறது. இந் நூற்கள் தெரிந்து கொள்ளக் கூடாத முறையில் மறைவாக எழுதப் பட்டிருக்கிறது என்று பல பேர்கள் கொண்டிருக்கும் கருத்து தவறு. ஏனெனில் பாஷையை பேசக் கூடிய முறைதான், கூறியிருக்கும் பரிபாஷைச் சொற்களே அருத்த விற்பத்தியில் யாதொரு வித்தியாசமும் இல்லாது ஆகவே, தனிப்பட்ட முறையில் படிக்கப் படிக்க நன்றாய் விளங்கும். வார்த்தைகளும் அப்பொழுதும் இப்பொழுதும் ஒன்றே. பாண்டித்தியம் பெற்ற பூர்வ காலத்து சித்தர்கள் எழுதிய தமிழ் நூற்கள் மிகச் சிறப்பும், கல்வித்திறம் வாய்ந்ததும், உயர்வான நடையிலும் எழுதியுள்ளது. ஆகையால் சித்தர் காலத்தில், பாண்டித்தியம் பெற்ற அனேக கவிவாணர்களும் இருந்திருக்க வேண்டுமென கருதப் படுகிறது.

அகத்தியர் மூலியமாய் ஆரிய மக்கள் இத் தென்னாட்டிற்கு வந்த பிறகுதான், இத் தகைய சிறப்பு வாய்ந்த இத் தமிழ் பாஷையும், தமிழ் நூற்களும், 'வடமொழியில் கலக்கப்பட்டு சீர்குலைந்த தென்பதை இவ்

விட்டு மறைக்கற்பாலது, it was already mentioned that majority of Siddhars were Tamilians of the Saiva Sect. Many of their works on Alchemy, Medicine, Yoga, Philosophy, Astrology etc., were all written grammatically and lucidly in what is called high Tamil, and this, we see very clearly from their works. Some of the works, especially those on Alchemy, Yoga and Philosophy are generally considered to have been written tersely in an incomprehensible way. The Kavi or poetry in which the medical and other scientific tracts have been composed is much admired by those who have made it a special study. Some works on Astrology especially what are called Nadies (a branch of Astrology) are found to have been composed in verses in chaste Tamil. Their works in Tamil are supposed to be more valuable than many that have been written in Sanskrit. There are also some works written by the followers of Siddhars in Tamil, which is thoroughly modern and colloquial with grammatical forms and structures not at all familiar to the ancients. So, as regards its language and style, there is no doubt that they were all written in easy, fluent and colloquial spoken language, rhetorically not hard, through in long long verses and metres. But one thing —it is said that they have all been composed in pure grammatical verses only after the Siddhars have attained their final beatitude within the first 120 years of their existence.

The popular notion of imputing that they were all written in obtrusive enigmatic language and fashion is simply incorrect, because people have to remember that their language is too colloquial, and the sense and import of their significantly pregnant word, have been the same and there is no study of words written then or now. A special and an exhaustive study will make it more intelligible. Some ancient scholarly Siddhars have written their works in the best literary and high style also; and this is a proof to show that some poets must have been in existence and flourished during the time of Siddhars. It is not to be forgotten here that it was only after the advent of the so called Agastya into the South India, that the older Tamil literature and language devoid of Sanskrit terms, have become mixed up and had lost its merits.

NOTE.—Tamil poetry like everything else in the universe was the result of slow growth during many centuries, and has had from its birth till to-day an uninterrupted course of evolution. The artificial poetry of Sanskrit subjugated the Tamil mind, and for all time destroyed the beautiful realistic poetry of the early Tamils—but one thing, though the Aryan culture was imported into the Tamil country, still the bulk of the people, especially in the rural country, still continue to live, as if Aryan culture did not exist.

சித்தர் நாடி, சித்தர்களால் செய்யப்பட்ட சோதிட நூற்கள். இவைகள் ஒவ்வொரு மனிதருடைய வாழ்நாளின் நிகழ்ச்சியைப் பற்றி கடியாரத்திற்கு சாவி கொடுத்தது, பின்னால் நடைபெறுவதற்கு தகுதியாக வைத்திருப்பது போல், முன்பதாகவே தயாராக எழுதி வைக்கப் பட்டிருப்பதாகும். வேண்டிய போது அவைகளை எடுத்து, ஒருவனின் வாழ்நாளில் நடக்கக் கூடிய முக்கியமான விஷயங்களை எடுத்துக் கூறுவதாகும். அந்த நூற்களில் கடிகை, லக்கினம் முதலிய விவரங்களோடு, ஒவ்வொருவரும் கேட்கும் சந்தேகங்கள் குறிக்கப் பட்டிருக்கும். இது உண்மையில், ஒவ்வொருவரின் சாதகமே தவிர வேறல்ல. ஆகவே, அனேக வருஷங்களுக்குப் பின்னால் சாதகர் இச் சாதகத்தை வந்து கேட்கக் கூடுமென்ற கருத்துடன் சித்தர்கள் தெய்வ சகாயத்தினால் தங்களுக்கு கிடைத்த உதவியைக் கொண்டு எழுதி முடித்தது. அவ்வப் பொழுது நடக்கவேண்டிய விஷயங்களைக் கிரமமாகவும், முறையாகவும், முன்னதாகவே ஒருத்தர்க்கு எழுதி வைத்ததை நோக்குமிடத்து, மிகவும் மெச்சத் தகுந்ததாகவும் அவ்வளவு தெளிவான நடையை ஒருவரும் சரிவர விவரித்து சொல்லக் கூடாத முறையாகவும் இருக்கிறது. அன்றியும், ஒருவரும் பழுதுகூற முடியாத வகையில், அவ்வளவு நேர்மையாகவும், உண்மையாகவும் எழுதப்பட்டு இருக்கிறது. இதை வாசித்து கேட்டவன் தன் ஆச்சரியத்தையாவது அல்லது ஒன்றுக்கொன்று தவறுதலாகவும், அவ்வது அருத்தம் சொல்வதிலும், ஒருவேளை

பிசகு ஏற்படலாம். அன்றியும், அநேகரின் விஷயங்களில் தாய் தந்தையர்கள் குழந்தை பிறந்த நேரம் சரிவர குறிக்காத காரணத்தினால், தவறுதலின் பேரில் சொல்லப்பட்ட சாதக விஷயங்கள் சாதாரணமாக சரியாகவும், உண்மையாகவும் இருக்கவே இருக்காது. அவ் விஷயங்களில் சோதிடம் சொல்பவரை நிந்திக்கப்படாது.

பூர்வ கருமத்தின்படி, தெய்வ சங்கல்பமாக ஏற்பட்ட நோய்களுக்கு, தெய்வீக முறைப்படித் தான் சிகிச்சை செய்யவேண்டும். ஆகவே, சோதியத்தைப் பார்த்து கரும காண்டத்தின்படி, இன்ன விதமான நோய் எப்படி நிவர்த்தியாகு மென்பதை விவரமாய்த் தெரிந்து கொள்ளலாம். இவ் விதமான விஷயங்கள் கௌதமர், புஜண்டர் முதலானவர்களால் செய்யப்பட்ட நாடி நூற்களில் கண்டறியலாம். the Astrological works compiled by Siddhars. They are the lives of the individuals which had been kept wound like a clock, and the giving out of one's career in life is nothing but the sure and steady unwinding of predestined careers. It clearly indicates life that proceeds on the basis of a day and night consisting of Kadigay and Lagnam. It is really a horoscope written long long ago by Siddhars through divine inspirations for each individual who may go in for consultation several hundreds of years after.

It seems that in some cases, the systematic terse and the methodical manner in which the man's career in life have been predicted, seems a marvel defying attempts at elucidation. It is the most accurate and truthful; and no one can find any flaw in it unless the reader makes mistakes by careless or ignorant selection or sometimes by wrong interpretation.

In many cases, the time of birth of the child is not at all correctly recorded by the parents, very naturally the predictions made under the storm and stress of professional conditions, on an incorrect basis with a rough and ready approximations do not come true. In that case, there is no use of blaming the astrologer concerned and the reader.



The Divine method or path based upon the principle of Karma, is usually employed in Karmic diseases. In such cases, the horoscope should be consulted, and the Karma chapter may explain how this disease can be cured. Such predictions will be found in these Nadis compiled by Gowthama, Bujander etc.

NOTE.—It is said that Duruva Nadi (துருவ நாடி) seems to be the best, as it has a definite and unmistable data for unfolding of predictions. It is unwise from a cultural point of view, to dismiss the Nadi-works as deceipt, humbug or speculation. It should be known, as a matter of fact that the authors of the different Nadis are spiritual men of super-eminent culture and had recorded the future of the individuals concerned as perceived by them through the instrumentality of Yogic intuition. The authors of these Nadis must have had a complete and exhaustive study, and had evidently mastered the entire literature before they ventured to reduce their predictions to writing in Tamil in a lucid style. The manuscripts written in palmyra leaves in Tamil are very luminous and voluminous. These Nadis were kept in the 'Saraswathi Mahal Library' in Tanjore, and subsequently auctioned on account of its voluminousness, having then considered, not worthwhile stocking them.

சித்தர் நாடி, பதினெண் சித்தர்களால் தமிழில் பாடியுள்ள நாடி நூல். இது மனிதர்கள் நோய்வாய்ப்பட்ட காலத்தில், கையில் ஓடும் நாடிகளை விரல்களால் பிடித்து சோதித்து நோயின் நிலைமையையும், மற்றுமுள்ள குறை குணங்களையும் நிர்ணயித்தலாம். ஆகவே, நோய்கள் அணுகாதபடி, அப்போதைக் கப்போதே தகுந்தபடி முயற்சி யெடுத்து தடுப்பதற்கு வேண்டிய அறிவு, வைத்தியர்களுக்கு எப்பொழுதுமே மிக்க அவசியமும் உபயோகமு மானது. வைத்தியர்கள், நோயின குறி குணங்களும், மற்றுமுள்ள அவ்வளவு முக்கிய மில்லாத விஷயங்களை மிகுதியாக கற்றிருந்தாலும், நோயாளிகளின் உடம்பினுள் ளிருக்கும் நோயின் தன்மை அவர்களுக்கு உள்ளபடி தெரியவே தெரியாது. கையில் நாடி பார்த்து நோயின் தன்மையையும், கூறுபாட்டையும், அறிவது தான் பலனைத் தருவதாகும். இவ்விதமாக சோதித்து அறிவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஏனெனில், இதற்கு மிக்க சாமர்த்தியமும், அனுபவமும் இல்லாவிடில் வைத்தியனுக்கு ஒன்றும் பிரயோசனப் படாது.

சித்தர் நாடி

நாடி விஷயமோ தனிப்பட்ட நூல். இது நாடி பரிட்சையில் நிபுணர்களினால் போதிக்கப் படவேண்டும். ஆகவே, குரு மூலியமாய் சிஷன் இரகசியமாய் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம். மிக்க அநுபோக சாலிகள்தான் இதன் இரகசியங்களை விவரமாய் சொல்லக் கூடும். இது காரணம் பற்றியே, பிற்காலத்து தமிழ் நூலாசிரியர்கள் எல்லாம் இது விஷயம் விவரமாய் தங்கள் நூற்களில் எழுதாமல் விட்டு விடுகிறார்கள்.

இதை உபயோகிப்பதும், பழக்கப் படுத்துவதும் சாமானிய காரியமல்ல, மிகவும் கஷ்டமானது. சாதாரண அறிவும், முயற்சியும் உள்ளவர்கள் கற்றுக் கொள்ள முடியாது. மேற் சொல்லியபடி குரு மூலியமாய் தொட்டுக் காட்ட தெரிந்து கொண்டு, கைப் பழக்க முண்டானால், நாடி நடையை வெகு நுட்பமாக தெரிந்து கொள்ளலாம் என்பதற்கு ஐயமே இல்லை,

தேர்ந்த வைத்தியன் கைக்கு, நாடி நடையின் பலவிதமான குறை குணமும், நிலைமையும் தெட்டென விளங்கும். மேலும், உடம்பின் ஆரோக்கிய நிலையும், நோயின் குணமும், வீணையின் கம்பிகள் வாசி[illegible]ன் கை விரலுக்கு இராகம் பேடுகளை எப்படி அறிவிக்குமோ அதே மாதிரி, வைத்தியனுக்கு விரல்கள் நோயின் நாடி நடையை காண்பிக்கும். இக்காலம் நாடிப் போக்குகளின் விக்கல்களையும் அதில் இருக்கும் சந்தேகங்களையும், ஆமோதித்து ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நாடி நடைகளை மூன்று பிரிவுகளையும், ஆள்காட்டி விரல், நடுவிரல், மோதிர விரல்கள் முறையே, வாத, பித்த, சிலேஷ்ம குணங்களைக் காட்டும். ஆகவே, இம்முறையை மேனாட்டுக் கருவியான ஸ்பிக்மோகிராப் (Sygmograpi[illegible] காட்டும். இதை மூன்று விதமான குறிகளுக்கு ஒப்பிடலாம்.

ஆகையால் இவ்விதமாக நாடி பிடித்து பார்ப்பதின் கருத்து என்னவென்றால், உடம்பிலுள்ள மூல வினியாகிய வாத, பித்த, சிலேட்டுமக் கூறுகளையும், வேறுபாடுகளையும், கண்டு பிடிப்பதற்காகவே ஒழிய வேறல்ல. அன்றியும், நாடியானது இருதயத்தின் நிலைமையையும், தோஷங்களையும் குறிப்பதாகும். ஆண் பிள்ளைகளுக்கு வலது கையும், பெண் பிள்ளைகளுக்கு இடது கையும் பிடித்துதான் நாடி பார்க்க வேண்டும். தற்காலத்தில் மேனாட்டு வைத்தியத்தில் மருந்துகளைக் குறிக்க ஏற்பட்ட அடையாளங்கள் எப்படி சீர்கெட்டிருக்கிறதோ, அது மாதிரியே, இதுவும் சிதைந்து விட்டது. பூர்வ காலத்தில், இம் முறை உடம்பிலுள்ள கூர்ம சக்கிரத்தின் நிலையை அநுசரித்ததாகும். இவ்வமைப்பு தற்காலத்திய தேக தத்துவ சாஸ்திரிகளால் கூறப்பட்ட ஒரு துணர்வு நாம்பா யிருக்கலாமென்று ஊகிக்கலாம். நரம்பு விஷய சம்பந்தம் இப்போது கூட அவர்களுக்கு அவ்வளவு அதிகமாய் தெரியாது. ஆகவே, நாடி நடையை ஆண் பெண்கள் விஷயத்தில் இரு விதமாக பரிட்சிக்கும் முறைகளுண்டு.

சில நிபுணர்கள் நாடியைப் பார்த்து நோயின் குணத்தை உள்ளபடி திருத்தமாக சொல்வது மிக்க ஆச்சரியத்தை உண்டாக்கத் தக்கது. ஏனெனில், சோதிடர்களைப் போல் வைத்தியர்களும், நோய் குணப்படும், குணப்படாது என்பதையும், நோயாளி சாவான் என்பதையும், முன்னதாகவே சொல்லி விடக் கூடும். சித்த வைத்திய முறையில் பழக்கப் பட்டவர்களுக்கே, இவ்விதமாக சொல்ல முடியும். ஆகவே, ஆயுர் வேதம் உள்பட, மற்ற முறை வைத்தியங்கள் இதற்கு இணையல்ல. (மெகன்சி நூலைப் பார்க்கவும்).

ஆகையால், எவனொருவன் நாடிப் பரிட்சையிலும், நாடிப் பார்ப்பதிலும் வல்லவனாய், நோய்களின் குறை குணங்களை வெகு நுட்பமாக கண்டறிகிறானோ, அவனே [illegible]ற வைத்தியனாக சொல்[illegible]. நாடி நடையின் வேகத்தையும், அடைக்கும் விதத்தையு மாத்திரம் நோக்கி வைத்தியம் செய்யும் மேனாட்டார், இக் நாடி முறையின் கஷ்டங்களை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இவ்வித நாடிப் பரிட்சையை யாவரும் ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், மேனாட்டார் இது வரையில் தங்களால் முடியாத செயலை, சித்த வைத்தியர்கள் வைத்திய சாஸ்திரத்தை திருத்தமான வழிக்கு கொண்டு வந்து முடித்து விட்டதாக சொல்வது ஒருவாறு சில விஷயங்களில் பொருந்தும், the science of pulse compiled in Tamil by eighteen Siddhars. When a man falls ill, this science is useful, for diagnosing the disease and for determining through pulsation (feeling with the fingers) the nature and other characteristics of the disease. Therefore, some knowledge of pulse is always essential and useful to the physicians, for adopting prophylactic and preventive steps in time. Although physicians learn more about the non-essential or accessory factors or signs of the disease, yet they are

entirely in the dark as to the exact nature of the disease *inside* the body, which alone is really beneficial from a therapeutic point of view. Diagnosis of the disease by means of the pulse is not so easy, and it requires great skill and experience before it can be of any real value to the physician. Nadi (pulsation) itself is a separate science. It is mostly taught by the specialists on the subject, and privately by a Guru to his disciple. Men of great experience alone can explain the various factors in regard to the pulse and this is the reason why this subject of pulse is not at all included in the books of the subsequent writers explicably but quietly omitted.

Its use and practice are so very difficult, that it cannot be learnt by men of average intellect or common experience. With careful tuition from a Guru, as above mentioned, the trained finger can undoubtedly became a most sensitive instrument.

The various character and conditions of the pulse-beat communicate to the fingers of the experienced physician, the sign of health and disease, just in the same way as the wires of a violin does to a musician, the different notes when pressed by his fingers. The difficulty of the method in this art is acknowledged even by the foreign authorities. The three divisions in the pulse are indicated by the three fingers—fore, middle and the ring fingers showing respectively the Vatha, Pitta and Kapha. This may be roughly compared to the three parts of a normal Sphygmographic tracings—the upstroke, the notch or the tidal wave and the downstroke.

So, the object of the palpation or the feeling of pulse for prognosis and diagnosis is to find out the state of the three Doshas and their variations in their natural character. It should be remembered that the pulse is the indication about the state of the heart and other Doshas. The feeling of the pulse in cases of male and female — in male the right hand pulse and in female the left one. This custom has at present degenerated like the signs used as a prefix to all prescriptions of the modern scientist. Originally, the method was based upon the knowledge and position of Koorma Chakra (கூர்ம சக்கரம்) one of the plexuses, probably the sympathetic system of the modern physiologists, who really know even now very little about this system. So, there are two different methods of examining the radial pulse in man and woman.

Some experts in this, give out the exact nature of the disease to an astonishing degree. Not only this, they can even predict like astrologers, as to whether a disease in which a man is going to be afflicted with, is curable or incurable and also predict his death. This is possible only in the Siddha system of medicine, and here, it supersedes all other systems including Ayurveda (See Study of pulse by Mackenzie). A well versed physician is one who is trained in the feeling of pulse or examination of the movements of the pulse only, and the one arriving at the correct, and accurate diagnosis by the pulse. But in the Westerners, they are only guided by the rate and rhythm of the pulse. The difficulty of this pulse method is acknowledged even by the foreign authorities who concluded by remarking. " If this test of pulse is accepted, then in some respects Siddha physicians have brought Medicine nearer an exact science than the West has yet been able to do "

NOTE 1—One of the most interesting phase of Hindu Medicine is its diagnosis and treatment of diseases. It is noteworthy in this connection that long before similar so-called " discoveries " had been made in Europe, the Hindu physician had found out such aids to diagnosis as auscultation and the feeling of pulse, and the latter being studied with great minuteness. Probably, if Europe were better acquainted with the extent of Hindu medical knowledge, the credit for being " the first physician to teach the value of pulse, an honour assigned in the West to Praxagorus of Cos, might be given to a Hindu physician of a much earlier date."

NOTE :— Mantram and Magic is the art of consciously employing invisible occult powers for producing visible effects. It is a psychological use of the thought-force pertaining to man and his environments even as exactly as the elements of electricity. Thus, we have Mantrams known also as Magic in every religious formula. In S. India, it originated from Siddhars. It should not be confounded with Tantrams which constitute a system of ritualistic details.

Ancient Siddhars, of whom Tirumular, Karuvurar, Konganava, Sundaranandha including the supposed Agastya are types of representative exponents who have formulated various unique dogmas in the Mantric science. Mantric science in thus the out of the ancient Revelations vouchsafed to the earliest Dravadian races of Southeren India — not to speake of the Atlantians — through the Divine Dynastics of Siddhars. It is the Siddhar's metaphysics that led the mind of man to an occult knowledge.

**சித்தர் மூலம்,** *சித்திர மூலம்,* leadwort — Plumbago zeylanica.

**சித்தர் மூலி,** see *சித்த ருண்ணு மூலி,* 2. see *சித்தர் மூலம்.*

**சித்தர் வர்க்கம்,** *சித்தர் வகுப்பைச் சேர்ந்த (1) நவநாத சித்தர்கள் (2) மூலவர்க்க சித்தர்கள். அவர்களாவன,* the two Schools of Siddhars viz — (1) Navanatha i. e. nine Siddhars, (2) the eighteen Moolavarga Siddhars viz :—

I. *நவநாத சித்தர். மூலவர்க்க சித்தர்களுக்கு முன்னிருந்த ஒன்பது பேர்கள்,* the nine original school of Siddhars that were before the Moolavarga Siddhars viz :—

1. *சத்திய நாதர்,* Sathya Nathar.
2. *சதோக நாதர்,* Sathoga Nathar.
3. *ஆதி நாதர்,* Authi Nathar.
4. *அநாதி நாதர்,* Anathi Nathar.
5. *வகுளித நாதர்,* Vagulitha Nathar.
6. *மதங்க நாதர்,* Mathanga Nathar.
7. *கடேந்திர நாதர்,* Gadendra Nathar.
8. *மச்சேந்திர நாதர்,* Machendra Nathar
9. *கோரக்க நாதர்,* Korakka Nathar.

II. *மூலவர்க்க சித்தர்கள், இவர்கள் பேரறிவு வாய்ந்த பதினெட்டு சித்தர் வர்க்கத்தை சேர்ந்தவர்கள் அவர்களாவன,* those Siddhars who belong to a school of great knowledge, which consisted of eighteen members known as Moolaverga Siddhars and they are — (1) Nandi (Brahmin) (2) Thirumoolar. (Vellala). (3) Pulasthya (Singhalee) (4) Idaikkadar (Shepherd), (5) Agastya (Vellala) (6) Punnakkisar (a Kanarese Shepherd) (7) Poonakkannar (not known), (8) Bogar (Chinese Potter), (9) Pulikkisar (not known), (10) Karurar (metal worker), (11) Konganava (Konkini shepherd) (12 Azuganni (Barber). (13) Kalangi (Goldsmith), (14) Agappai (Vellala) (15) Terayar (Brahmin). (16) Sattainathar (Singhalee). (17) Pambautti (Jogi) (18) Kuthambai. (not known).

NOTE 1. — Nos I and 15 : are mentioned as Brahmins which could not be true at there was no caste system during the the Siddhars time. It is only after the migrations of the race called Arya is into the South India that the caste systems were introduced. This is quite against the principle of the Dravadian system for the reason that the distinction, high and low, existed only in the profossion such as goldsmith potter metal worker othuvun, chuckler, barber, washerman etc.

NOTE 2.— The original school of Shiddhars founded by God Shiva consitsed only of nine members known as Navanatha Siddhars. It is a peculiarly interesting fact that the members of this school of Siddhars took subsequently the names of Rishis, Reformers, Gurus, Acharyas etc, another Sankara Acharya, a third Gautama, and so on, Even Konganava Siddha supposed to have lived near Goa the first Christian settlement in India is said to have been reverred by the Christians there as a Sad-Guru (ideal teacher) since some of his poems alluded to Christianity. Those who have closely studied the Siddha works will come to know that some of the Siddhars such as, Rmaa Devar or Yaeooc and Roma

Rishi visited Turkey, Arabia, Tibet, China, Ceylon and other places and taught the people there all about Medicine, Magic etc. One of these even refer to Franks. Bogar and Pulppani natives of China came to Southern India about 1600 years ago and joined the Siddhars school and learnt all about Tamil Medicine, Alchemy etc. and subsequantly become authors of several works in Tamil.

NOTE:—3. The school of Siddhars, though consisted of men of different classes and creed as are found in the list, they were mostly of a Tamil sect, which maintained Siva for its God. The school of Siddhars and their works in various branches of knowledge are clear proof of their over high perfection in science.

It is also said that Ancient Siddhars were nearly 64 in number and that they established Mutts in S. India and arranged for hereditary transmission of their wisdom to posterity. Their teachings acquainted the people with true spirit of Religion to attain salvation in place of empty formalism and superstition; because such teachings used to promote rational thinking. It is the school of Siddhars that kept alive the flame of philosophical and mystic learning

see சித்தர் பதினெண்பர்.

சித்தர் வாக்கியம், சித்தர்கள் கட்டுரைகள் the sacred sayings of Siddhars.

சித்தர் விளையாட்டு, சித்தர்கள் புரியும் அட்டமா சித்திகள், the eight imracle or supernatural powers played by Siddhars viz: —

1. ஞானதிருஷ்டி — தூரத்து சங்கதிகளை இருந்தபடியே கண்டறிவது— clairvoyance i. e. telling what is happening at a distance.

2. கவுனமோட ஆகாய மார்க்கத்தில் பரத்தல் — soaring in the sky Aero-flight.

3. பரகாயப் பிரவேசம் அல்லது கூடு விட்டு கூடு பாய்தல் அதாவது தன்னுடைய உயிரை வேறொரு உடம்பில் செலுத்தல் — Metapsychosis i. e, the passing of the soul into another's dead body

4. உய்ப்பதல், இறந்தவர்களை பிழைக்க வைத்தல் — Resuscitation, reviving or restoring life to the dead.

5. நோயாளிகளை குணப் படுத்தல்— Restoration or recovery of health.

6. திடீரென தோன்றல், மறுபடியும் மறைதல்—Apparition or coming to sight i. e. becoming visible and then invisible.

7. பிறர் நினைத்ததை சொல்லுதல் — Thought-reading or telling what one is thinking.

8. அஷ்டமா சித்தியாடல், அதாவது அணுவாதல், பெரிதாதல், பாரம் அல்லது இலேசாகுதல், விரும்பியவற்றை அடைதல், விரும்பியவிடத்திற்கு செல்லல், முத்தொழி லியற்றல், உருமாறுதல், முதலியன — Octomiracle i. e. the eight miraculous powers viz:— becoming an atom and then bulky; becoming light or heavy, acquiring what is desired reaching the desired place, performing the three acts viz.—creating, preserving and destroying. metamorphosis i e., assuming different forms etc.

NOTE:—The Magic I powers of Saints and Siddhars are:— 'Siddhars cure barrenness or sterility in woman and other diseases found incurable, by ordinary means; appear to a person at a distance to save him from an unseen danger; calm storms especially at a distance; change female into male children; convert sincers and infidels to the truefaith turn man's heart by a look, thought or word; compel inanimate objects to act as if they possessed life volition; benefit friends and do troy foes, and exercise dominion over beasts. birds, fishes etc, restore vigour to aged men; raise the dead; put the fiend to fight: summon angels and spirits: cause trees to produce butter and honey; refine sensual to spiritual love, know man's thought and plans: break clains and fetters, doors and walls: live without food, drink or sleep: cause a single pot of water to support a caravan withouts ensible dimi-nution, commute the death of a person by providing a substitute and give learn. ing to fools (Encyclopedia of Religion and Ethics).

சித்தர் வைத்தியம், see சித்த வைத்தியம்.

சித்த லயம், சித்தர்கள் யோகாப்பியாசத்தில் அடைந்த மன வொடுக்கம், the concent

ration of mind derived from the practice of Yoga.

**சித்தவரை**, see சிற்றவரை.

**சித்த வர்க்கம்**, see சித்தர் வர்க்கம்.

**சித்த விகாரம்**, மனத்தின் அலைவு, the waves. of the mind.

NOTE:—All thought-waves must be stopped so that the mind-stuffs may become smooth and tranquil. Mind is all always trying to get back to its natural state of calmness, but it is only the organs that draw it out, but man should restrain it-

**சித்த வித்தியா பூ.** வைத்திய கிரந்தம் செய்த ஓர் முனி, a sage who is the author of a book on Medicine written in Sanskrit, 2. ஆயுர்வேத முறைப்படி இலுப்பை, சனிக்காய், தேவதாரி, சீந்தில், வெட்டிவேர், முசுமுசுக்கை, வில்வவேர், கோரைக் கிழங்கு இவைகள் சேர்த்துத் தயாரித்த கஷாயம், இது அம்மை சுரத்திற்கு கொடுக்கப்படும், a decoction prepared as per process of Arurveda with the following ingredients viz-— honey flower, sani fruit, deodar, moon-creeper, cuscus root, rough bryonia and coray root. It is prescribed for pox-fever.

**சித்த விப்பிரம சன்னி**, உடம்பு மிக கொதித்து, சுரம் காயும் ஓர் வகை சன்னி நோய். இதனால் மதி மயங்கி, உடம்பு முழுவதும் முறிப்பதுபோல், அடிக்கடி எழுந்து விழுவதும், புலம்புவதும், வந்த பேர்களை கட்டித் தழுவுவதுமான குணங்களைக் காட்டும். இது பதினொரு நாளில் தீரும் a form of delirium occuring in febrile and inflammatory diseases of acute character. It is characterised by disorder of the brain and revesls itself in the languages and actions of the patient such as weeping. laughing, tumbling or tossing, wailing. embracing etc.—Delirium tremens. It will be cured in eleven days.

**சித்தவிருத்தி**, மனோ விருத்தி, expansive thought-forms of the mind.

**சித்த வைத்தியம்**, பொதுவாக சித்தர்கள் முறைப்படி உள்ள ஓர் வைத்திய நூல். இது ஓர் புராதனமான நூல், ஆகவே, ஆயுர் வேதமும் அல்லது ஆங்கிலம் மற்ற நூற்களோடு ஒப்பிட முடியாது. ஏனெனில் இவ் வைத்திய நூலில், வாதம், ஞானம், யோகம், மாந்திரீகம், சோதிடம் முதலிய நூற்களும் சேர்ந்துள்ளன. வாசிப்பவர்கள் இந்நூலைத் திறந்து பார்க்கும்போது, மேற்கண்ட நூற்களெல்லாம் வைத்தியத்தோடு கலந்திருப்பதைக் காணலாம் ஆகையால் விசாலமான ஆதாரங்களைக் கொண்டது. இந்நூலின் உள் விஷயங்களை நோக்குமிடத்து இவைகளெல்லாம் மேனாட்டு ஆசியா ஐரோப்பாவின் நாகரீகத்திற்கு நெடுங்காலத்திற்கு முன்னதாகவே ஏற்பட்டதென்று தெளிவாக விளங்கும்.

இதில் போகர், புலிப்பாணி, இராமதேவர் முதலியவர்களைத் தவிர பெரும் பாலும் சித்தர்களெல்லாம் தமிழர்களே யாதலால், இச் சித்தவைத்தியம் தமிழ் நாட்டுக்கே உரியதென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. அதினால்தான் அவர்கள் செய்த நூற்களெல்லாம் தமிழ் செய்யுளில் செய்யப் பட்டிருக்கிறது. மேலும், ஆயுர் வேதம் எப்படி ஆரியர்களின் தெய்வ அனுக்கிரகத்தை குறிக்கிறதோ, அதேமாதிரியே சித்த வைத்தியம், சிவன், பார்வதி இவர்கள் கடாட்சத்தால் ஆக்கப்பட்டதென தெளிவாகிறது. பூர்வீக நாகரீக சரித்திரத்தினால் சித்த வைத்திய முறை அனேக சித்திகளை பெற்றதென்பதை ஒருவரும் மறுக்கவே முடியாது.

சித்தர் முறை, அனேக ஆயிர வருடங்களுக்கு முன்னதாகவே ஏற்பட்டது. எல்லா தந்திரத் தொழில்களிலும், வித்தை நூற்களிலும் சித்தர்கள் மேற்கொண்ட முயற்சிகளும் அறிவின் திறமும் அபாரமானது. அவர் வைத்திய முறையை கையாண்ட காலமோ தங்கத்தைப் போன்ற மிக்க சிறந்தகாலம். சித்த முறையை அனுசரித்த விஷயங்களைப் பற்றிய விசாலமானகேள்விகளுக்கு எளிதில் பதில் கூறிவிட முடியாது. ஆயுர் வேதத்தில் சரகர், சுசுருதர் முன்னோர்கள் ஆகிய இவர்கள் எழுதிவைத்த நூலைப் பார்த்து திரட்டியதே அன்றி வேறல்ல. ஆனால், சித்தர் முறையோ ஆன்ம சக்தி யடைந்த பிறகு விஷயங்களைத் தெளிவாக தெரிந்தபின் அவர்களால் எழுதப்பட்டது. சித்தர்களின் ஞான விளக்கத்தின் அறிவாலும், அனுபவத்தாலும் எழுதிய நூற்களில் உண்மையே அடிப்படையாக உள்ள காரணத்தினால் ஒருவரும் அதை மறுத்துவிட முடியாது. மேலும், ஒருவன் மிக்க சிரத்தையோடு படித்து விஷயங்களை கிரகிக்கவேண்டு மென்று உண்மையாகவே முயற்சித்தா லொழிய, அனேக விஷயங்கள் அவன் புலனுக்கு எட்டாது. ஓர் இரகசியமான வித்தை யெனவேகாணப்படும் ஆகவே

ஒருவரும் இம்முறையைப் பற்றி குறைகூற முடியாது. திராவிடலகங்கம் மலிந்த இந்த தென் இந்திய நாடு, பூர்வத்தில் தமிழ் முதற் சங்கம் இருந்த தென்பாகம் முழுமையும் கடற்கொண்டுவிட்டது. சித்த வைத்தியத்திலும் மேற்கண்ட காரணத்தைப் பெற்ற விஷயங்களும் சிலது உள்ளன. ஆகவே, இதை ஆயுள் வேதத்தின் ஓர் பாகம் என்று சில ஆரிய மக்கள் சொல்வது பொருந்தாது. தமிழ் பாஷை எப்படி வடமொழியைத் தழுவாமல் தனிப்பட்ட முறையோ, அது போன்றே சித்த முறையும், ஆயுள் வேதத்தைச் சேராத தனிப்பட்ட முறை. இந்நூற்களெல்லாம் சித்தர்களால்தான் எழுதப்பட்டதென்பது அவர் செந்தமிழ் நடை செய்யுள்களிலேயே இனிது விளங்கும். ஆகவே, சாதாரண எழுத்தாளர்களால் இவ்விதமாக எழுதிவிட முடியாது. அன்றியும், மற்ற நூற்களில் கண்டறியாத, எப்பொழுதுமே கேட்டறியாத, அநேக இரகசியமான விஷயங்கள் இந்நூற்களிற் காணலாம். சில முக்கியமான விஷயங்கள், சித்த நூற்களை முற்றும் செவ்வையாகப் படித்தவர்கள்தான், சித்தர்கள் பரிபாஷையுற்ற சொல்லியுள்ள முக்கியமான விஷயங்களை அறியக்கூடும். உலகமே பொன்னாசையினால் வெறிகொண்டதுபோல விஷயம் நன்றாய் தெரிந்ததே. ஆகையால சித்தர்கள் தங்கள் வாத முறையில் அநேக விஷயங்களை வெகு தந்திரமாக கூறியுள்ளனர். ஆன்றோர் வாக்கின்படி, பாதி மருத்துவன் வைத்தியன் என்பதினால் வைத்தியன் வாதியின் மகனாயிருக்கவேண்டுமென்பது ஏற்படுகிறது. ஆகவே, இம்முறையில் ஈடுபட்ட வைத்தியன் தன் தொழில் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே வாதத்தில் தேர்ச்சியடைந்தவனாயிருக்கவேண்டும். இவ்வாதத் தொழில் பணம் சேர்ப்பதற்கல்ல, தனக்கு சீவனத்துக்கு எவ்வளவோ அவ்வளவுமட்டும்தான், மற்றும் தன் வைத்தியத் தொழிலுக்கு பிறர் உதவியின்றி எவ்வளவு வேண்டியதோ அதுமட்டும்தான் என உணரவேண்டும். நோயாளி இடமிருந்து பணம் எதிர்பார்க்கப்படாது. எல்லாருமே சித்தியடைந்த வைத்தியர்களாய் இருக்க முடியாது. சில கிரகங்களின் அம்ச காலங்களில் பிறந்திருந் திருந்தால்தான் முடியும். அவன் சாதகப் பிரகாரம் வைத்திய நூலிலும் வாதத்திலும் தேர்ச்சி யுள்ளவனாயிருக்க வேண்டும். சாதாரணமாக கற்கடக ராசியில் பிறந்தவன்தான், பிறவி வைத்தியன் என்று சொல்லப்படுவான். ஆகவே, தேர்ச்சியினால் பெற்ற அறிவினால் அவ்வளவு சித்தி பெற முடியாது நூற்களைக் கல்லாமல், சொற்ப அறிவினால் செய்யும் வைத்தியம் மேற் சொன்னதை விட அவ்வளவு சிலாக்கியமானதல்ல.

சித்த வைத்தியர்களின் குணாதிசயங்கள் முதலியவைகளை விரிவாக இப்பகராதி வால்யூம் 1, முகப்புரையிலத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், சித்த முறை உலக நன்மைக்காக எழுதிய காரணத்தினால், இவ்வைத்தியத்தை வியாபாரமாகவும், அல்லது பணத்திற்காக வேலை செய்யவும் பணம் சேர்க்கவும் கூடாது. அப்படி விதித்த விதிகளை மீறி நடந்தால் சித்தர்கள் சாபம் வந்து சேருமென கருதப்படும். வைத்தியன் பேராசைப் படுவான் என கருதிய அநேக கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சித்த முறையில் கண்ட மனக்கோட்பாடு, நாடும் இவைகளை வைத்தியனை நியாயம், உண்மை ஒழுங்கு ஆகிய இவ்வழிகளில் புகட்டுவதற்காகவே நூற்களில் கண்டிருக்கிறார்கள். ஆகையால் இவைகள் சித்த வைத்தியத்திற்கு ஆதாரம் கொடுக்கும் ஓர் கட்டடத்தின் மூலக் கல்லுகளாகக் கருதப்படும், the Siddha System of medicine. It is a peculiar science; and it cannot be compared with Ayurveda, Allopathy or any other system of Medicine. It is a medical sciences comprising with it, all kinds of sciences as — Alchemy, Philosophy, Yoga Magic, Astrology etc. If any reader opens a book on this system, he will naturally find all the said sciences mixed up along with medicine. So, it is founded on a very broad basis.

The internel evidence of this literature shows that they were all written and composed at a time long before the civilisation of Western Asia and Europe.

It cannot be denied that the Siddha system of medicine is peculiar only to the Tamil country, as all the Siddhars are Tamilians except some as. Bogar. Pulipani, Rama Dever etc. of other countries and so, they all composed their works in Tamil verses. Moreover it is a science clearly attributed to the grace of God Shiva and parvathi, unlike Ayurveda to the Aryan God. That the Siddha system achieved many great

things very early in the history of civilisation is a fact that cannot be denied. Siddhars system was founded many thousands of years ago and the Siddhar's period was one of intense and intellectual activity in all its arts and sciences, in the realm of Medicine it was indeed a golden age. As regards the theories of this system it is very broad question to be answered. The authors of this system, are spiritualists of great culture unlike Charaka and Susruta who only collected or copied from the works of the other writers on Ayurveda. The Siddhars have written from their spiritual knowledge and experience and therefore, the truths of them cannot be denied by any one or criticised. as still informations on many subjects are a mystery to a layman and beyond his comprehension unless one really attempts to get at them after exhaustive study.

The Tamil Siddha Medicine has in it certain features characteristic of Dravadian civilisation of S. India a greater portion of which was submerged in the sea, including of course, the first great Tamil Sangam It cannot be said that it is a part of Ayurveda as rumoured by some Aryans. It should be known that Siddha system is as distinct a science from Ayurveda as of Tamil language is of a Sanskrit one. All the works in this system were written only by Siddhars, as could be learnt from their compositions in verses of high Tamil and so. they cannot be imitated by other ordinary writers, Besides, they contain many mysterious inform ations and quite unheard of things not to be found in other works, Some of the important secrets are couched by code words *(பரிபாஷை)* which could be solved only by those who made a complete and exhaustive study of Siddhar's works. Many points on Alchemy are dealt with so cleverly knowing fully well that the world is mad after it for making gold. Moreover. it is well known from what our elders say that a physician should be the son of an Alchemist. So, a physician, according to this system, should start his profession from Alchemy which he is expected to learn first. not for amassing wealth, but for his bare subsistence and nothing more, and for practising medicine without expecting money in return from his patients.

It is said that all cannot be successful practitioners except those who are born at a particular constellation of stars. Horoscopically, the should be one eligible in the science of Alchemy and Medicfne. It is said that one born is cancer, a constelation of the Zodiac. in a born physician. So. persons of acquired knowledge will never be so very successful. in the art chosen by him much less by those naving prattling knowledge without a scientific study.

The qualification of a Siddha physician, as dealt with by Siddhars, is fully dealt with in the Introduction to Vol. I of this Dictionery Moreever, the Siddhar system intended for the welfare of mankind, cannot be commercialised or bartered for money or for amassing wealth; and any one who contravenes the prescribed rules is supposed to receive the course of Siddhars. Several are the injunctions prescribed against the avarice of such practitioners

In the Siddha syetem; Religions and Philosophy go hand in hand just to direct the practitioners in the path of righteousness, justice and truth which are considered the corner stones of Siddha Medicine.

NOTE :— Great is the contribution which Siddha system have made to the world's thought. It borne out by evidence that will stand any impartial scrutiny, that from earliest times Siddhar's culture was at its zenith when other countries were plunged some thousands of years ago in complete barbarism. It is highly desirable that scholars and scientists of the eminence of Sir. P. C. Ray should enter into the field of Research of our Tamil Literature treating on the

subjects mentioned above, which is now locked up without being made available for the benefit of the present day humanity. It is only then, many of the forgotten truths which remain concealed in our ancient writings of Siddhars, will be exposed for the benefit of the public.

### சித்த வைத்தியத்தின் தற்கால நிலைமை, *the present condition of Siddha system*

இறந்த காலத்தின் நோக்கம் எவ்வளவுக்கு எவ்வளவு தெரிகிறதோ, அவ்வளவிற்கும் எதிர்காலத்திய நோக்கம் விளக்கமாக புலப்படும். ஏனெனில், சென்ற கால நிகழ்ச்சி தான், நிகழ் காலத்தையும், எதிர் காலத்தையின் போக்கையும் அறிவதற்கு திறவுகோலாகும். ஆகையால், வைத்தியத்தின் முன்னேற்றத்திற்கும் தற்காலத்திய வைத்திய பயிற்சிக்கும், ஆதிகாலத்திலிருந்து தொன்று தொட்டு வந்த பூர்வ முறைதான் தகுந்த ஆதாரமாகும். பூர்வகாலத்து சிரோன்மணிகள் செய்த வேலைகளையெல்லாம், தற்காலத்தில் புதிதாக கண்டு பிடித்ததாகச் சொல்லப்பட்ட காரியங்கள் மறைத்து விட்டது என்பது மிக்க பரிதபிக்க வேண்டிய விஷயமாகும். ஏதோ சித்தர்களைப் போன்ற மகான்களுக்கு தற்காலத்தில் ஓர்வித பயபக்தி விசுவாசம் காட்டினாலும், பொதுவாக தற்காலத்து வைத்தியம், அதற்கு வேண்டிய முக்கியமான அம்சங்களை பெறுவதற்கில்லை. இக்காலத்தில் பூர்வத்து வைத்திய சரித்திரங்களை சரிவர போதிப்பதில்லை. முன்னோர்கள் முறையைப் பற்றிய புத்தகங்களும் கிடையாது. ஆனால் பழயகாலத்து சித்த வைத்தியத்தை தற்காலத்து சனங்கள் ஆச்சரியமாகவும், பயன்படாத மறைந்த வஸ்துவாக கருதினார்கள். ஆகவே, தற்காலத்தில் தோன்றியுள்ள இளைஞர் கூட்டங்கள், பண்டைய வைத்தியச் சரித்திரங்களின் உண்மையான கருத்திற்காக மெச்சி, தற்காலத்திய வைத்தியத்திற்கு சமமாகக் கொண்டுவர முயற்சிப்பதை நோக்க மிகவும் உற்சாகத்தை யளிக்கத் தக்கது.

மேலும், ஆன்றோரின் சரித்திரத்தையும், அவர் பயிற்சியையும், அற்பமான பாராயணப் பாடமாகக் கருதப்படாது; நோய் பரிகார முறையிலும், காயகற்ப முறையிலும், அதிக தேர்ச்சி யடைந்தவர்கள் செய்த உபயோக முள்ளதெனக் கொள்ள வேண்டும். எவ்வளவு குறைவாகவும், இரகசியமாகவும் சொல்லி யிருந்தாலும், அது மேம்பட்ட கொள்கையாகவே கருத வேண்டும். ஏனெனில் தற்காலத்திய கஷ்டமான விஷயங்களை,



பூர்வத்தில் கண்டறிந்த தேர்ச்சியைக் கொண்டு அறிந்து கொள்ளும் வகையில், நமக்கு எவ்வகையிலும் உதவி யளிக்க கொஞ்சமேனும் தவராது. எந்த காலத்தில் மேனாட்டு உலக சம்பிரதாயங்கள் கீழ்நாட்டு ஞானமார்க்கத்தில் ஒன்று படுமோ, அப்பொழுதுதான் நமது நாட்டு வைத்தியத்திற்கும், மேனாட்டு வைத்திய முறைக்கும் உள்ள பேதங்கள் மறைந்துபோம். ஆனால், எப்பொழுது இது விஷயம் சம்பவிக்குமோ என்பதுதான் அடுத்த கேள்வி. நமக்குள்ள ஆன்ம சக்தியை விருத்தி செய்யாத வரையிலும் நாம் முழுவதையும் அடைந்து விட்டோமென நினைக்கப் படாது.

சித்தர்கள் தமிழிற் செய்த வைத்திய நூற்களினாலே, தமிழ் வைத்திய முறையே மிக்க விசாலமான ஆதரவு பெறும்படி தாபிக்கப் பட்டிருக்கிறது. இத்தகைய முறை, திராவிடர்களுடைய அறிவினாலேற்பட்ட விஷயங்களில் ஓர் பகுதியெனச் சொல்லப்படும். இத்தமிழ் முறையே, ஆதிகாலம் தொட்டு இந்தியாவின் தட்சண பாகத்தில் ஒவ்வொரு மூலையிலும், இடங்களிலும், தற்காலம் பரவி யிருக்கிறதென்பதை அதிகமாக சொல்ல வேண்டிய அவசியமில்லை. இந்த சித்த முறையானது, ஆயுள்வேதம், யுனானி முறை இவ்விந்தியாவுக்கு கொண்டு வருவதற்கு அனேக ஆயிர வருஷங்களுக்கு முன்னிருந்து பரவியிருந் திருக்கிறது. அனேக ஆயிர தமிழ் வைத்தியர்களும், தங்களுடைய மூதாதையர்களிட மிருந்தே இந்த சித்த முறையைக் கற்று தேர்ச்சியடைந் திருக்கிறார்கள். ஆகவே, இம் முறையை அனேக தலைமுறைகளாக தகப்பனிடம் இருந்து கற்று பிள்ளைகள் கையாண்டு வந்தார்கள். இத்தமிழ் சித்தர் முறை பூர்வ காலத்தில் ஆண்டு வந்த சேரன், சோழன், பாண்டியன் ஆகிய தமிழ் அரசர்கள் ஆதரவு பெற்று மிகவும் சிறப்புப் பெற்றிருந்தது. இப்பொழுதும், கல்விக் களஞ்சியங்களில் அச்சுப் பதிப்புக்கு வெளிவராத எண்ணிறந்த ஏட்டு பிரதிகள் இருந்து வருகிறது. இதுவு மல்லாமல், அனேக திறமை வாய்ந்த வைத்தியர்களும் தங்களுடைய மேன்மை பெற்ற அறிவுத தேர்ச்சியையும், அனுபவத்தையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் இரகசியமாய் வைத்திருந்த விஷயத்தையும் நோக்கில், சித்த வைத்தியம் சீணித்துப் போனதற்கு இவைகளே காரணமாகும்.

மனிதர்கள் தங்கள் ஆரோக்கிய நிலையை காப்பாற்றிக் கொண்டு, வாழ்நாட்களை அபி

விருத்தி செய்வதற்கு ஆதாரமான இந் நூற்கள், முதலாக அம்மையாருக்கு பரம சிவனும், பிறகு அதையே முருகனார், நந்தி, அகஸ்தியர், மற்று முள்ள சித்தர்களாகிய இவர்கட்கு போதிக்கப்பட்டு வந்தன. இவர்கள் எல்லாம் திராவிட பரம்பரையைச் சேர்ந்தவர்களே ஒழிய வேறல்ல. மற்ற வைத்திய முறை கொள்கைகளைப்போ லல்லாமல், இம்முறையின் கொள்கைகள் உண்மையான நெறியிலே ஸ்தாபிக்கப் பட்டதால், இதை ஒருவராலும் மறக்க முடியாது. அனேக ஆயிர வருஷங்களாக நிலை பெற்று வந்தது. ஆகவே, நமது முறையில் பூர்வ கர்ம விஷயங்களைப் பற்றிய கொள்கையைத் தவிர மற்றெவ்விதத்திலும் தற்காலத்திய மேனாட்டு வைத்தியர் குறைகூற முடியாது. ஏனெனில், அவர்கள் பரிசோதனைக்கு எவ்வளவும் சளைக்காது. ஆனால் மேற்சொன்ன பூர்வ கர்ம விஷயங்கள், மேனாட்டு நூற்களுக்கு எட்டவே எட்டாது. ஆயுர்வேதமும், மேனாட்டு வைத்தியமும் தென்னிந்தியாவாகிய தமிழ்நாட்டுக்கு கொண்டு வரப்பட்டாலும், ஊர்களிலும், கிராமங்களிலும் அனேக ஆயிரக் கணக்கான நோயாளிகள், இச்சித்த முறையை கைக்கொண்ட நாட்டு வைத்தியர்களால் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறார்கள். இச்சென்னை இராசதானியில் மட்டுமல்ல, பர்மா, இலங்கை, பினாங், சிங்கப்பூராகிய கடற் பிரதேச நாடுகளிலும், மேற்க்கரை தீவுகளிலும், மடகாஸ்கர், பிலிபைன் தீவுகள் முதலான இடங்களிலும், சித்த வைத்திய முறை மிக்க பிரபல்லியமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

சித்த முறையின் கொள்கையைப் பற்றி பேசப்புகின், இது விசாலமான கேள்விகளுக்கு இடங் கொடுக்கும். இலேசான கேள்விகள், பதில்கள் என்று சுருதி திடீரென சொல்லிவிட முடியாது. சித்தர்களின் நோக்கத்தின்படி இச்சித்த முறை இவ்வுலகத்து விஷயங்களையும் சார்ந்ததாகும். ஆகவே, 'அண்டமும், பிண்டம் ஒன்றே' என்னும் கருத்து இதனுள் அடங்கி யுள்ளது. இவ் விஷயம் மேனாட்டாரின் பூர்வீக இரகசிய கொள்கைக்கும், இந்திய சித்த முறைக்கும் சமத்துவமானது. மேலும், சித்த முறைப்படி அண்டபிண்ட கோட்பாடுகளினால் வைத்தியத்திற்கும், சோதிடத்திற்கும் சம்பந்தம் ஏற்படுகிறது. ஆகையினால், ஒவ்வொரு வைத்தியனுக்கும் சோதிடத்தில் சொற்ப அறிவு இருக்க வேண்டியதென்பது மிக்க அவசியமான விஷயம். இவ்வறிவு இல்லா விட்டால்



வைத்தியம் செய்வது அவ்வளவு உபயோகமான முறையில் இராது, as a matter of fact, it is well known that the longer one looks back, the further he can look forward, because the past alone can supply the key to the present and the future. It is therefore only natural to regard the evolution and progress of medicine from the earliest times as an essential background to modern medical education.

Unfortunately however, the rapid advances in the supposed new discoveries have tended to eclipse the work of the ancient pioneers. Though due reverence and regard is still accorded to the memory of such great figures as Siddhars, the present day medicine in general has not received that recognition which the importance of the subject would appear to demand. There is at present no systematic teaching of the ancients medical history, nor could be found any publication of the method of the ancients. But on the other hand, the early medical practice of Siddhars have been regarded as merely quaint, now obsolete and of little value to the modern world. It will be encouraging to note, if only the younger generation at least exhibit a growing appreciation of the true purport of ancient history in medicine and of its bearing upon the present day medical science.

The history and culture of the ancients should not be regarded as simply a chaplet biography, but rather a great useful work showing the progress made by them especially in the art of healing, Rejuvenation etc. However imperfectly and secretly told, it is a noble theme which would only go to stimulate interest in the achievement of the past and which will not fail to help us in any way to solve the difficult problems of the present day. If in any day, the Materialism of the West merge into the Spiritualisim of the East, then the distinction between Indian Medicine and Western system

will disappear; and whether it will come to pass is the next question. We should never think of becoming perfect so long as we shall not culti vate the culture of spiritualism in us.

The Tamil system is very largely based on the Tamil works of Siddhars, which are some of the choicest products of Dravadian intellect. It is needless to state that it is this Tamil system that prevails to this day in every nook and corner of S. India from a very remote period and even several thousands of years prior to the import of Ayurveda and Unani into S. India. Thousands of Tamil physicians inherit their knowledge from their forefathers who were proficient in the Siddha system. So, the knowledge of the works is handed down from father to son for generations together. In ancient times, the Tamil system of medicine flourished during the time of the Tamil Rajas as Chera, Chola and Pandyan. There were numerous manuscripts which remained unpublished in libraries; and this, together with the fact that good practitioners kept their deep knowledge and experience as secrets, are greatly responsible for the decay of this system.

This science of preserving ones health and of prolonging his life is said to have descended from God Shiva to Ammaiyar, thence to Muruganar, Nanthi, Agastyar and other Siddhars, who are all of the Dravidian stock. The theories in this system are based on axiomatic truths; and as such, survived the test of several hundreds of centuries without being rejected, unlike those in the case of other systems; and so, our theories would never fail to stand the test of modern scientific criticism except the theory of Karma which is far away from the reach of the Western science.

It cannot be denied that in spite of the advent of Ayurvedic and Allopathy system in S. Indies, thousands of patients in towns and villages are being treated by native doctors in this system. Not only in this Presidency, but also in Burma, Ceylon, Straits Settlements, East Indies, Madagascar, Phillipines etc, this Siddha system is even now very popular.

As regards theories of the Siddha system, this is a very broad question to be answered abruptly as pithy questions and answeres. From the Siddha point of view, this is a cosmic affair, covering the Macracosm and Microcosm which is also equivalent to the old point of view of both the old Western and Mystic System and the India Siddha system. Moreover, Siddhars theory of Macrocosm and Microcosm establishes the relation of Astrology to medicine; and every physician ought to have a rudimentary knowledge in this branch without which, medicine could not be usefully practised.

NOTE.—A real science is that which should be a store-house, of incontrovertible universal knowledge, which holds good at all times—the past, present and the future. The facts well-ascertained in our ancient books of some thousands of years ago have never been disputed or in any way criticized and so, cannot lose their ground being nothing short of truths, and nothing but absolute and universal truths.

வைத்திய முறை, *the system of medicine*

மனிதரின் நோய்க்காக வேண்டி சித்தர் முறையில் வைப்புசரக்கு நூல் உதவியைக் கொண்டு தயாரிக்கும் மருந்துகளும், முறைகளும், அவையாவன, the following are the medicine and medical preparations, according to Siddha system, viz :—

1. இரசம் அல்லது சாறு,—இலைச் சாறு, பழச்சாறு முதலியன juice leaves or fruit juice.

2. பாகு, syrup—வெல்லபாகு, அல்லது சீனிப்பாகு முதலிய, jaggery or sugar syrups.

3. சத்து, extraets—அப்பிரக சத்து, mica essence.

4. எண்ணெய், Oil—சாதிக்கா யெண்ணெய் முதலியன, gallnut etc.

5. தைலம், medicated oil—சந்தனாதி தைலம், medicated sandal wood oil.

6. நெய், ghee—கும்மட்டிக்காய் நெய், medicated ghee of colocynth.

7. குழம்பு, semi-solid extracts—கும்மட்டிக்காய் குழம்பு, extracts of colocynth.

8. சூரணம், medicinal powder—சீந்திற் சூரணம், powder of moon-creeper.

9. திராவகம் அல்லது வாலை நீர், தீநீர். acid or distilled liquid; கெந்தகத் திராவகம் sulphuric acid, ஓமத் திராவகம், distilled omum water.

10. நீறு அல்லது பற்பம், metallic oxide—வெள்ளி பற்பம், calcined silver oxide

11. செந்தூரம், sulphides—இரச செந்தூரம், mercuric sulphide.

12. காரமருந்து அல்லது சுண்ணம், caustic or major oxides,—காடிகாரம், silver caustic, முத்துச் சுண்ணம், oxide of pearl.

13. மாத்திரை, medicated pill—கோரோசனை மாத்திரை, bezoar pill.

14. மெழுகு, wax.like unguent.

15. உப்பு, salt,—கெந்தக உப்பு, sulphur salt.

16. பதங்கம்—sublimation.

NOTE —No 9 to 12 also refer to achemical preparations under the same name, but they are not much useful in medicine except No. 11. This system has 32 divisions of medical preparations; and all their names are in the works of Siddhal iterature. In Allopathic Medicine, some of the preparatoins from this system are taken for their use by separating the active principles; and new names were given and included in their Pharmacopoea, calling them scientific. Where there are fresh drugs available, there is no necessity for the extraction of active principles. Fresh drugs are always the best remedies, as the active principles may not give the full effects, but on the other hand, they may at times, have bad after-effects.

சித்த வைத்தியம்

## I வாதம்—வைத்தியம், Alchemy and Medicine

சித்த வைத்தியம், நான்கு விஷயங்களை உடையது. அதாவது, வாதம், வைத்தியம், யோகம், ஞானமென்று இதற்கு முன்னமே காட்டியுள்ளது. பூர்வீக இந்தியாவின் தென்னாட்டில், இந்த நூற்பயிற்சியில், முதல் இரண்டு விஷயங்கள் மற்ற இரண்டிற்கும் ஆதாரமாகவுள்ளது. தென் இந்திய நூலாசிரியர்களெல்லாம் ஒருவர் மாதிரியே வாதத்தை வைத்தியத்துடன் ஒன்றுபடுத்திக் கூறியுள்ளார்கள். ஏனெனில், தாங்கள் கொண்ட கருத்தின்படி, கடைசியாக மோட்ச சாதனம் அடைய வேண்டும் என்பதே. மேற்சொன்ன வாதம், வைத்தியம் இரண்டிற்கும் ஏம வைத்தியமென்றும், மற்ற யோகம், ஞானம் என்ற இரண்டிற்கும் பிரம்ம வைத்தியம் என்றும் பெயர். தன்னைக் காத்துக் கொள்ளவும், ஒருவனைக் காப்பாற்றவும், வாதம், அவசியமானதால், கடைசியாக அவன் கொண்ட கருத்தை பூர்த்தி செய்ய உதவியாயிருக்கும்படி இவ்வாதத்தை ஏற்படுத்தப் பட்டது. ஆனால் வைத்தியமோ, நோய்களை தருந்தபடி நிவர்த்திக்கவும், தடுக்கவும், வேண்டிய காலமட்டும் தன் உடம்பை நிலைக்க செய்வதற்கும், வசதியாகவிருக்கும்படி ஏற்படுத்தப் பட்டது. சித்தர்கள் இவ்விஷயத்தை தங்கள் முதல் வேலையாகக் கொண்டு, நோய் தங்களைத் தாக்காமலிருக்கவும், மரணத்திற்கு அஞ்சாமலிருக்கவும் ஏற்படுத்திக் கொண்டார்கள். அடுத்தபடி அவர்கள் கிழத்தனம் அடையாமலிருக்க வேண்டி உலோக வகைகள் கலந்த வைப்புச் சரக்குகளாகிய பற்பம், செந்தூரம், சுண்ண மருந்துகளைச் சாப்பிட்டு காயத்தை பலப்படுத்தியும், ஆன்மாவை ஒருமைப் படுத்திக்கொண்டார்கள். ஏனெனில், சதா யோக சாதனையால, தங்கள் ஆயுளை விருத்தி செய்துக் கொண்டு, மனித சிருஷ்டியையும், உலகப் போக்கையும் செவ்வையாக தெரிந்து கொண்டு பிறகு, தன்னைத்தான் அறிந்தவுடன் மோட்ச சாதனையில் சித்தி பெறுவதற்கு ஈடுபடுவார்கள். ஆகவே, இவ்வகுப்பு சித்தர்களுடைய நூற்கள் முழுமையும், அவர்கள் சித்தி யடைந்த பிறகுதான், யூகத்தினால் கண்டறிந்த கருத்துகளை, அவர்கள் வகுப்பின் பாஷையில் எழுதலாயிற்று. ஆகையால், இவ்வித சித்தர்களுடைய வாத வைத்தியமானது, மேனாட்டு கிரேக்கர்களுடைய நான்கு விதமான ஞானபோதனை சாதனைகளுக்கும், ஆறு விதமான இந்திய ஞான சபைகளுக்கும், தற்காலத்தில் ஆதார

முன்னதாககருதப்படுகிறது, it was already pointed out that this Siddha system of medicine consists of four subjects viz Alchemy, Medicine, Yoga and Philosophy. In the ancient S. India, in this knowledge of the science, the first two branches have been made a necessary handmaid of the latter two. All the South Indian authors have all, in unison, subjected Alchemy to be so blended and interwoven together with medicine, as it was to attain a certain end and aim of their final goal i.e., salvation. The first two classes Alchemy and Medician are called Hema Vydiam, and the other two, Yoga and Philosophy are called Brahma Vydiam.

Alchemy was necessary in the course itself to maintain and sustain, and to maintain oneself; and it has been devised and perfected to help with such things as a basic knowledge to their ultimate end: whereas Medicine has been devised and manufactured for effectual cures and further preventives to sustain the human frame as long as they wanted. Siddhars, as a first step effected this and made themselves a proof against diseases and did not afraid of death. Secondly, they fortified their physique against the ravages of old age by the extra proof of strong chemico-metallurgical medicines (as calcined oxides, red-oxides and carbonates) and thus knitted and unified the soul and matter together and thereby extended their long lease of life to study man, creation and the universe, stage by stage, and also to attain their final stage of beautitude of self-realisation by their simultaneously practising Yoga.

So, the whole literature of this school of Siddhars, has been written, after their aim has been achieved from that mental plane, in the language of that particular school. So, this chemico-Philosophical literature of the Siddha school is said to be the mystic fountain head of all the later day six Indian Schools and four Grecian schools of Philosophy.

சித்த வைத்தியம்

*வாத கர்க்கம், the process of alchemy*

வாதத்தை மாத்திரம் தனிப்பட்ட முறையில் பேசப்புகின், மேற்கண்ட நான்கு வகுப்பான சித்த நூற்களில், இவ்வாத முறை, மற்ற மூன்று முறைகளான வைத்தியம், யோகம், ஞானம் இவைகளுக்கு மூல காரணமாகவுள்ளதால் முதன்மையாக வைக்கப்பட்டிருக்கிறது. இது தெய்வத் தன்மை பொருந்திய நூலென்றும், சிறப்புற்ற தொழிலென்றும் கருதப்படுவதால், பய பக்தியுடன் பாராட்டவேண்டும். இந்நூலைக்கொண்டு வஸ்துக்களையும், அவைகளின் தன்மையைப் பிரிக்கவும், மறுபடியும் ஒன்று சேர்க்கவும், அதுவுமல்லாமல் இழிந்த உலோகங்களைத் தங்கமாக மாற்றவும், வைத்தியம், காய கற்பம், யோகம் முதலிய சித்திகளுக்கு வழியும் காண்பிக்கும்படியும் செய்யலாம். ஆகையால், வாதமானது, தாது, தாவர, ஜீவ வர்க்கங்களின் உதவியைக் கொண்டு, இரும்பு, செம்பு, முதலியவைகளை அநேக வழியில் பொன்னாக மாற்றக் கூடிய விதங்களை விவரமாகச் சொல்லும் வைப்புச் சரக்கு முறையின் ஓர் பாகமாகக் கருதப்படும். சித்தர் நூலின்படி இவ்வாத முறை ஆன்ம சக்தியை மூலமாகக் கொண்டது. ஆகவே, மனிதருக்கு இயல்பிலே பமைந்த ஞான அறிவுக்கு இதை பொன்னிழைக்கும் உரை கல்லாகக் கருதப்படும். ஒருவன் முதலில், சில ரேகங்களின் அமைப்புக்கு தக்கவாறு பிறந்து, பிறவியிலேயே வாதியாயிருக்க வேண்டும், now coming to the regular subject of Alchemy, we find that, among the four classes as above mentioned, this subject occupies the first place, as it forms the origin for the other three kinds—Medicine, and Yoga Philosophy. It is regarded as a Divine and Sacred Science and Art and could be approached with reverence and piety. It is a science by which things may be decomposed and recomposed; and their essential nature changed, thus leading not only to transmutation, but it also opens the way for medicine, rejuvenation and Yoga. So, Vada or Alchemy is that portion of chemistry which deals and treats of transforming in clear lucid fashion in all its varied branches of changing baser metals as iron, copper etc, into gold with the aid of mineral, vegetable and animal substances. According to Tamil Siddhars Science, alchemy is the grand touchstone

of natural wisdom ; and it is purely of a spiritual origin. So, the man should be a born alchemist, taking birth at a particular constellation of stars.

A. பொன் செய்வதற்கு அநேக விதங்களுண்டு. அவையாவன, several are the alchemical operations in the preparing of gold, viz :—

1. சிடிகை வேதை, — transmuting within the snapping of fingers i.e., almost instantaneously,
2. மாற்றுயர்வு வேதை,—the one by converting inferior gold into a refined gold.
3. கட்டு வேதை,—the one effecting through fixation of metals.
4. தூம்பிர வேதை,—the one effected by fumigation.
5. மாரண வேதை, — the one by killing metals like mercury.
6. குருவேதை conversion — through quintessence of salts like the mystic three salts.
7. குளிகை வேதை,—the one performed with the aid of animated mercurial pills.
8. பரிசன வேதை,—conversion by by mere soul-force i.e. by mere touch (like Midas touch).
9. தொந்த வேதை,—the one effected by chemical methods from ores.
10. பச்சை வெட்டு வேதை,—the process without fixation.
11. களங்கு வேதை,—another process by splitting atoms of metals and so on.

B. பொன் செய்வதற்கு கீழ்க் கண்டபடி அநேக முறைகளுண்டு அவையாவன, the following are the several processes adopted for transmutation of gold viz:—

1. புடமிடுகை,—calcination.
2. பதங்கம், sublimation.
3. வாலையிடல், distillation.



4. கரைத்தல் dissolution.
5. உருக்கல், fusion or melting.
6. பிரித்தல், separation or analysis.
7. உறவாக்கல், conjunction or combination.
8. உறையச் செய்தல், congeslation.
9. ஊட்டங் கொடுத்தல், cibation.
10. புளிக்க வைத்தல், fermentation.
11. மாற்றுயர்வு, exaltation or refining.
12. கட்டுதல், fixation.
13. சுத்தி செய்தல், purification or cleaning.
14. வடித்தல், filtration.
15. நீற்றல், அல்லது கொளுத்தல், calcination or incineration.
16. சாரணை ஏற்றல் அல்லது உயிர் கொடுத்தல், animation or vivification.
17. நீராக்கல், liquifaction.
18. வைப்பு, manufacturing, or preparing.
19. பிரித் தெடுத்தல், அல்லது விலக்கல் extraction or separation.
20. பற்ப மாக்கல், turning to an oxide.
21. செந்தூரித்தல், turning to a red oxide.
22. சுண்ண மாக்கல், turning to a carbonate and so on.

C. வாதத்திற்காக உபயோகிக்கும் வஸ்துக்கள், அவை யாவன, the substances used in Alchemy are :—

1. இரசம், mercury.
2. நிமிளை, bismuth.
3. காந்தம், magnet.
4. செம்பு, copper.
5. உப்பு, salt.
6. உலோகம், iron or metal
8. நாகம், zinc.
9. வங்கம், lead.
10. பொன், gold.
11. வீரம், corrosive sublimate.
12. கல்லுப்பு, consoltidated salt.

13. மிருதார சிங்கி, litharge.
14. குளவி மெழுகு, bees wax.
15. பாஷாணம், poisons, arsenic.
16. கந்தகம், sulphur.
17. மணி, gem.
18. வெள்ளி, silver-
19. அப்பிரகம், mica.
20. வெடி யுப்பு, nitre.

For other details see Introduction to Vol- I of this Dictionary.

NOTE —The word Chemistry is closely associated with that of Alchemy. In the Siddha system, Chemistry has been found developed into a Science, auxiliary to Medicine and Alchemy. Siddhar's presentation of Chemistry is masterly so far it has gone, but unfortunately it is fragmentary. No treatises on the subject of chemistry could be found elsewhere dealing so exhaustively as found in Siddha works

In a book on Chemistry in Modern life from the pen of the renowned Swedish Chemist named Svante Auguste, the author has done ample justice to the claims of S. India as the land in which the beginnings of Chemistry as a Science, can first be traced to the Tamil Siddhars in the history of human civilisation.

Even Dr. P-C Ray. when addressing at the Madras Medical College on 2-12-26 on Ancient Hindu chemistry remarked thus.—

"The Science of Chemistry in India has been associated with the system of Medicine Apart from Ayurvedic system associated with the Hindus and the Unani system associated with Islamic culture, there was a specific system of medicine characteristic of the South called the Siddha; and so, it would be a very interesting question for students of research, as in this system, could be discovered vestiges of chemical science"

## II பஞ்சபூத தத்துவம், *the doctrine of five elements*

சித்தர் நூல் முறைப்படி உலகத்தி லுள்ள சடப் பொருள்களைக் கெல்லாம் பஞ்ச பூதமே அதாவது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்பவை ஆதாரமாக வுள்ளது. சடமிறந்தால் அல்லது அழிந்தால், மேற்



கண்ட ஐம்பூதங்களும் வெவ்வேருகப் பிரிந்துபோம். ஆகவே, மனித வுடம்பும் மேற்கண்ட ஐம்பூதங்களினுல் ஆக்கப்பட்டவையாதலால், மனிதன் இறந்தவுடன் அவனின்று பிரிந்து விடும். மனித வுடம்பு எப்படி ஐம்பூதங்களால் ஆக்கப்பட்டவையென்றுல்.—

1. மண்—எலும்பு, சதை, நரம்பு, தோல், மயிர்.
2. தண்ணீர்—பித்தம், இரத்தம், விந்து, கபம் அல்லது கழிவு, வியர்வை.
3. நெருப்பு—பசி, தாகம். தூக்கம், அழகு, சோம்பல்.
4. காற்று—சுருக்கம், விரிவு, அசைவு.
5. ஆகாசம்—வயிறு, இருதயம், கழுத்து, தலை இவைகளி லுள்ள இடைவெளிகள்.

ஆகவே, மேற்கண்டபடி உலக வஸ்துக்களெல்லாம், தோன்றலும், ஜீவித்தலும், அசைவதும், வளர்வதும், கடைசியாக அழிவதும், பழையபடி பஞ்சபூதங்களாக மாறுகிறது என்பது இதனுல் விளங்குகிறது. ஆகையால், உலகத்தில் முத்தொழில் அதாவது சிருட்டி, காப்பு, சங்காரம் இவைகளுக்கு ஐம்பூதமே காரணமாக வுள்ளது.

மேலும், இவ்வைம்பூதத் தொழில்களை கவனிக்கப் புகின், முதலாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில், இப்பூதங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து சிவ அணுக்களாகின்றது. இச்சிவாணுக்களி லிருந்து உடம்புக்குரிய வஸ்துக்கள் எல்லாம் ஏற்படுகிறது. இரண்டாவது, இச்சிவாணுக்களே தங்களுக் குள்ள தொழிலியற்றும் சக்தியால் உடம்பிற்கும், மனதிற்கும் வேண்டிய அம்சங்களை கொடுக்க ஏதுவாகிறது. ஆகவே, உடம்பின் சிருஷ்டிக் காதாரமான தொழில்களே வாதமென்றும், பாதுகாப்புக்கு வேண்டியதே பித்தமென்றும், அழிவுக்கு ஏதுவான தொழிலே கபமென்றும் கூறப்படும். மனதிற்கு பொருத்தமான உடம்பில், மேற்கண்ட சிவாணுக்களின் தொக்கத்திலுல் ஏற்பட்ட முக்குணம் என்ற சாத்துவம், ராஜசம், தாமசம் ஆகிய, இவைகளால் தொழில் நடத்தப்படும். ஆகவே, மேற்கண்ட இருவித தொழில்களுக்கும் சம்பந்தமுண்டு. இவ்விதமாக ஆத்துமா, மனது, உடம்பு

ஆக இம்மூன்றும் சேர்ந்தது புருஷம் என்ற சொல்லைப் பகிர்வது. மனதையும், உடம்பையும் தொழிற்படுத்தவும், பிறவினை தூண்டவும் செய்யும். உடம்பி லெழும் சக்திகளே ஆன்மா காரணமாக விருந்தாலும், ஆன்மா மாத்திரம் ஒரு பற்றுமன்றி ஒன்றுக்கும் அசையாமல் சுதேச்சையாய் நிற்கும்.

உடம்பையும், மனதையும் சேர்க்குங்கால் செல்லுகள் தொழிலின் மூலை பகுதியே சம்பி விருந்து எழும்பி, உடம்பைப் பூரணமிக்கு கொண்டுவரும். ஆன்மாவினால் உருப்பட்ட இத்தேகமானது, ஒருயந்திரத்திற்கு எப்படி மண்ணெண்ணெய் அல்லது மின்சக்தி தொழில் விபத்துவதற்காக அவசியமோ, அதுபோல் நமது தேகம் உயிர்வாழ்வதற்கு பிரதானமாகும். ஆகவே, அளவிலும், குணத்திலும் ஒழுங்கு பரிந்தீக் கொள்ளும் உணவு தான் பெரிகைப் பிரிவினையும், மாறுபாட்டையும் அடைந்து, பிறகு அன்னக் குழம்பு அன்னது அன்னரசமாகி இரத்தத்தைச் சேரும். அதன் பிறகு, அதிலின்று உடம்பில் சதை, கொழுப்பு, எலும்பு, கடைசியாக பசையாகவும், வித்தாகவு மாறும். இவ்விதமாக அடுக்கடுக்காய் அமைந்திருக்கப்பட்ட தொழில்கள் தான் இனி மேற்சொல்லப்போகும் முப்பிணியாக வாதபித்த சிலேட்டுமங்களுக்கு காரணமாகும்.

அடியிற் கண்டபடி மனித வுடம்பில் பஞ்ச பூதங்கள் தங்கி நிற்கும் இடங்களாவன—.

1.2. பிருதிவி, அப்பு ஆக இரண்டும், உடம்பின் சதையில் பற்றிய உஷ்ணத்தை பரவச் செய்வதற்கு காரணமாக நின்று உடம்பை வளர்க்கச் செய்யும்.

3. தேயு அல்லது நெருப்பு.—உடம்பின் உஷ்ணம் எழும்புவதற்கு காரணமாகும். இவ் வுஷ்ணமே உணவை இரசமாக மாற்றி செல்லுகளை ஏற்படுத்தும்.

4.5. வாயு ஆகாசம் ஆகிய இரண்டும் மூளையிலும், நரம்பு பாகங்களிலும் தங்கி நிற்கும், according to Siddhar's science, they are the original bases of all the corporeal things *which, when die out* or destroyed resolve themselves again into elements. The human body is composed of five elements viz,—Earth, Water. Fire, Vayu and Akasa or ether. This is

சித்த வைத்தியம்

in fact just what takes place in the case of dead bodies.

The following instances will show the transformed conditions of the five elements in the human body :—

1. Earth—Bones, flesh, nerves, skin and hair.
2. Water—bile, blood, semen, secretion and sweat.
3. Fire—hunger, thirst, sleep, beauty and indolence.
4. Air—contraction, expansion and motion.
5. Sky (ether)—interspaces of the stomach, heart and the head.

All earthly things live, move, grow and die to be resolved themselves again into five elements after death. They are the fundamental principles of creation, preservation and destruction in the universe. On examining their functions, it should be known first, that these elements first combine with one another to form cells (செல்லுகள்)—the requisite materials or organism for the animal body; and secondly, they discharge the functional forces called cellular activities, which are in themselves, the guiding principles of mind and the body (1) The creative activity in the physical body is known as Vatha (2) the protective one as Pitta (3) the destructive one is Kapha (phlegm).

In the mental body, these activities are being guided by the three qualities viz Satwa, Rajas, and Tamas, which are, after all, the relative forms of the above said activities. It is only the matter and force which are brought into union by Nature (பிரகிருதி); and they manifest themselves into a Purusha composed of soul, mind and body.

The soul though form the basis for the generative forces to act and react on mind and body and to produce mental and physical activities, yet it remains independent, undisturbed and absolute.

சித்த வைத்தியம்

Now coming to body and mind, their ultra-microscopic activities are brought on by the nerve-centres which make up the human body proper. So, the body manifested from the absolute (soul) depends for its functional existence on the food we take just like petrol or coal for a machinery. It is only that the well-measured and judiciously regulated supply of food that causes progressive chemical changes to produce chyme or chyle (Rasa) to blood, then flesh, then fat and bones, and lastly marrow and semen. It is this progressive change and action that lead to the three humours described below viz. Vatha, bile, phelgm.

The following are the centres of the five elements in the human body :—

1 and 2—Akasa and Air centred in the brain and the nerves.

3.—Fire necessary for producing animal heat which is necessary for converting food to Rasas which are the means of cellular tissues and maintenance.

4 and 5—Water and Earth centred all over the tissues for regulating the above said heat for the development and growth and maintenance of the human body composed of flesh and bone.

NOTE.—Every element will be found mixed up with the other five elements; and one element cannot be viewed dissociated from the other elements. When there is one element present, there are the other elements also present. The elements are themselves divided into two halves viz. physical and subtle, and the latter is again divided into two equal parts. The process of combination of each of these parts with the others by way of permutation and combination is known by Siddhars as five-fold combinations 'Panchigaranam' (பஞ்சீகரணம்) principle underlying these combinations. He who knows this, will thoroughly understand the qualities of elements separately and in combination; and thus bring to pass wonderful and astonishing results or miracles in the world as Siddhars do, as for instance—a Sadhu before us may suddenly disappear, the secret of foretelling may also come in, expelling of evil spirits, gaining of desired ends, one metal may be changed into another etc. In the West, this secret power is known as the perfection of the "Kabala".

In Medical science, only three physical elements viz—air (Vayu), fire (bile) and water (phlegm) are selected; and they form the fundamental principles known as Muppini on which the constitution of human beings has been based. These three humours form the connecting link between Microcosm of man and Macrocosm of world.

### III. சித்த வைத்திய முறைப்படி திரிதோஷக் கொள்கை, *tridosha theory in Siddha system.*

இக் கொள்கையானது, வியாதிகளின் காரணங்கள், நிவர்த்தியாகும் தன்மை, குறிகள் ஆகிய இவைகளைக் குறிக்கும். இதனால், பொதுவாக சிகிச்சை முறைகளை தெரிந்து கொள்வதற்கு ஏதுவாகும். இம் முப்பிணிகளும் முறை தப்பில் நோய்க்கு காரணமாகும் இது மனிதனுடைய உடம்பில் வாத பித்த சிலேட்டுமத் தொழில்களைக் குறிக்கும். இவ் வார்த்தைகளின் அர்த்தமும், செயற்கையும், இன்னதென்று சாதாரண மனிதர்களுக்கு புலப்படாது. அதற்கு மனிதனைக் குறித்து பூர்வீக நூலிற் கண்ட விஷயங்களைப் பற்றிய அறிவும், கல்வியும், அவனின் ஆத்மா, உயிர் வசீகரம், தெய்வீகம், விஷயங்களில் ஈடுபட்டிருக்கிற தன்மையும், ஆகிய இவை முதலானதும் தெரிய வேண்டும். இம் முப்பிணியைத்தான் ஆயுள் வேதத்தில் திரிதோஷம் என்று கூறப்படும். இதை சித்த வைத்திய முறையில் தத்துவங்கள் என்று கூறப்படும். அதாவது தொழிலையும், தொழிலியற்றும் தன்மையையும் குறிக்கும். சாதாரணமாக தேகத் தத்துவங்கள் 64. இக் கருவி காரணங்கள் அந்தக் கரணங்களையும், ஆத்தும போதத்தையும் அல்லது இரண்டையும் குறிக்கும்.

இம்மூன்று தத்துவங்களின் தொழில்கள் மாறுபடுவதே தோஷங்கள். இவைகளையே ஆயுள்வேதத்தில் திரிதோஷமெனப்படுவது. நமக்குத் தெரிந்தவரையில் ஆயுள் வேதத்திலாவது, வேறு வடமொழி வைத்திய நூற்களிலாவது, இத் தத்துவங்கள்தான் உடம்பின் உஷ்ணத்திற்கும், அது பாவிப்பதற்கும், காரணம் என்பதை விளக்கமாக எழுதவில்லை.

NOTE.—It is said to be chiefly due to the derangement of the three humours mostly, Vata, characterised by inflammation, dilation and obstruction or blocking of the lymphatic vessels. According to the nature of the constitution, the disease take its seat in different centres of the body; but generally, the legs and the external genitals (labia) and breasts in females and scrotum in males. It is seen as an endemic disease in most tropical regions near the sea-coast. Sometimes, the leg and the feet become so much swollen that walking becomes difficult, and frequently enormous tumours of the scrotum have to be carried with great difficulty and disgust. It is believed that it is caused by drinking the impure water which long remained stagnant without an outlet in the pond, and in which the dried leaves of overhanging trees are allowed to soak thus breeding mosquitoes over the surface of the water in the pond.

The injury to the lymphaties is due to the small worm (filaria). During some attacks, the fever may be very high, and the skin of the limb red and inflamed. It is chronic and almost incurable.

சிலிபாலி, கப்பொட்டி, an unknown plant with a milky juice.

**சிலிமுகம்,** சார கண்ட பாஷாணம், a mineral poison.

**சிலிம்பி,** கருஞ்சிலந்தி, a kind of pear tree Ochna wightiana.

**சிலி யாக்கை,** முடக் கொத்தான், palsy curer —Cordiospermum halicacabum.

**சிலி யாவண,** முடக் கற்றான், see சிலியாக்கை.

**சிலிரிடல்,** சில்லிட்டுப் போதல், அதாவது குளிர்ச்சி யாதல், becoming cold or chill; 2. பயத்தினால் சில்லிடல், becoming chill through fear.

**சிலிர்த்தல்,** அச்சத்தால் மயிர்க்குச் செறிதல், அதாவது மயிர் சிலிர்த்தல், bristling of the hair occasioned by cold or fear—Horripilation; 2. தளிர்த்தல், sprouting.

**சிலிர்ப்பு,** see சிலிர்த்தல்.

**சிலீ பதம்,** see சிலிபதம்.

**சிலீபத ரோகம்,** see சிலி பதம்.

**சிலீ முகம்,** முலைக் கண், orifice of nipple; 2. வண்டு, beetle; 3. செந் நாயுருவி, a red species of achyranthus genus of high repute; 4. see சாகாண்ட பாஷாணம்; 5. தேனீ, honey bee.

**சிலீரெனல்,** குளிரின் உணர்ச்சி sensation of cold.

**சிலுக்கி,** வல்லாரை, indian penny wort—Hydrocotyle asiatica.

**சிலுக்கு,** வெட்டிய துண்டு, sliced piece; 2. see சிலுப்பு; 3. இரும்பு மோதிரம் iron ring.

**சிலுக்கு வெட்டு,** சிறுகாயம், simple wound or injury.

**சிலு சிலுத்தல்,** குளிரால் விறைத்தல், to be stiff with cold; 2. மயிர்க்குச் செறிதல், bristling.

**சிலு சிலுப்பான்,** ஓர் அம்மை, see சிச்சிலிர்ப்பான்.

**சிலு சிலுப்பு,** குளிரால் உடம்பிற் காணும் உணர்ச்சி, a sensation of chillness; 2. சுரம், பல்வலி, பல் லசைவு இவற்றால் ஏற்படும் உணர்ச்சி, chillness felt in fever and tooth complaints.

**சிலு சிலெனல்,** குளிரால் ஏற்படும் நடுக்கத்தின் குறிப்பு, a condition of shivering from cold.

**சிலுத்தல்,** அதிகமாய் வெந்து விரிதல் to be over boiled; 2. see சிலிர்த்தல்; 3. குளிராலும், தண்ணீரில் அதிகமாயக் கிடப்பதாலும் தோலின் மேல் பாகம் தளிர்த்தல், peculiar prominences of papillae on the surface of the body induced by cold or by lying immersed long under water; goose-skin.

**சிலுப்பு,** நடுக்கம், shiver; tremor, 2. see சிலுப்புதல்.

**சிலுப்புதல்,** தயிர் கடைதல், churning.

**சிலுப்பை,** see சிலுப்பை மரம்.

**சிலுப்பை மரம்,** ஓர் மரம், a tree—Phaseolus mungo; 2. கருக்குவா, deccany olive wood—Cleodendron glaucum.

**சிலும்பான்,** சிறு சிறும்பான், which see.

**சிலும்பி,** கஞ்சா குடுக்கை, gunjah smoking pipe.

**சிலும்பு,** மீன் முதுகில் உள்ள பாகம், the spinal portion of the dorsal in the fish, களிம்பு, rust in copper; verdigris.

**சிலும்புதல்,** மயிர் சிலிர்த்தல், hairs on end.

**சிலேகம்,** பழு பாகல், buffalo carolah—Momordica hispida.

**சிலேகிகம்,** செம் முருக்கை, red Indian laburnum—Cassia marginata.

**சிலேகிதம்,** செந்தூரம், red powder, red oxide; 2. அக்கிர காரம், pellitory root.

**சிலேடகம்,** see சிலேகிகம்.

**சிலேட்டம்பக நாசனி,** see சக்கிர வர்த்தி.

**சிலேட்டும அசீரணம்,** வாந்தி, பிரமை சோம்பு உடம்பு மரத்தல் முதலிய குணங்கள் கூடிய சோம்பு, indigestion through excess of phlegm attended by vomiting, agitation of mind, numbness of body etc.

**சிலேட்டும அதிசாரம்,** see சிலேட்டும மாசோசாரம்.

**சிலேட்டும அபஸ்மாரம்,** சதா சொள்ளு வடிதல், தேகம், கண், முகம் வெளுத்தல், மறதி, வெறிச் சேஷ்டை முதலிய குணங்களை யுண்டாக்கி புத்தியைத் தெளிவை நீக்கும் ஓர் வகை காக்கை வலி, a kind of epileptic fits attended with symptoms such as—constant flow of saliva, paleness or serious impairment of intellec-

NOTE.—In Siddhars science, it is suggested that young persons are liable to attacks of this disease by long suppression of sexual passion. In women, it may be also due to cessation of the monthly flow (menses). So, it should be distinguished from hysteria caused by the total loss of consciousness, etc.

சிலேட்டும அபிசியாந்தம், see சிலேட்டும வபிசியாக்கம்.

சிலேட்டும அரி, see, இருவேலி, 2. புனிக்காலி, a species of pavetta; 3. வசம்பீட்டி, an unknown plant.

சிலேட்டும அரோசகம், உணவில் வெறுப்பு disgust for food.

சிலேட்டும ஆவிருத வாதம், இரத்தோட்டம் தடைபடுவதினால் சிலேட்டுமம் வாயுவுடன் கூடி, உடம்பில் சீதளம், கனத்தல், கார வஸ்துவில் இச்சை, உடம்பில் எறும்பு ஊருவதைப் போல் காணல் முதலிய குணங்களைக் காட்டும், a nervous affection in a phlegmatic patient due to obstruction in circulation arising from the concerted action of wind and phlegm. It is marked by chillness and cold, heaviness of body, uncommon desire to eat pungent substances, a peculiar ant-moving sensation on the surface of the body etc.

சிலேட்டும உபதம்சம், ஆண்குறி தடித்து வீங்கி தினவு உண்டாதல், swelling and itching sensation of the penis.

சிலேட்டும உன்மாத ரோகம், கபக் கோளாறின் மேலீட்டினால் தூக்கமின்மை, பெண்மேலிச்சை, யாரையும் பயமுறுத்தல், கண்ட பண்டங்களில் இச்சை முதலிய குணங்களையுண்டாக்கும் ஓர் பைத்திய நோய், a kind of insanity due to the derangement of the three humours in a patient of phlegmatic tendency; and it is characterised by sleeplessness, desire for women i,e sexual desire, longing to eat things seen by him and other mischievous tendencies as—frightening persons etc, see also உன்மாத ரோகம்.

NOTE.—It is a disorder of the mental faculties due to the deranged humours transversing the upper part of the body by affecting the up-coursing nerves. In the treatments, attempt should be made to restore the serenity of the mind.

சிலேட்டும கணம், சிலேட்டும குற்றத்தினால் குழந்தைகட்கு உடம்பில் நீர் சேர்ந்து உடம்பிளைக்கும் ஓர் வகை கண நோய், atrophy marked by the phlegmatic humour of in children, resulting in the collection of morbid fluid in the system; 2. கபத்தினால் குழந்தைகட்குக் காணும் ஓர் கண நோய், a congenital disease of a phlegmatic origin, affecting the eyes in children.

சிலேட்டும கண்டகம், ஓர் நாக்கு நோய். இதனால் நாவெல்லாம் இலவு முட்களைப் போல் தடித்து வெளுத்தும், நெருங்கியும், வலியையுண்டாக்கி கொப்புளங்களையும் எழுப்பும், a disease in which the tongue is rendered thick, white and heavy; and is overgrown with vegetation of slender fleshy papillae like thorns of a cotton tree.

சிலேட்டுமகம், உடம்பில் எலும்பின் பொருத்துகளில் தங்கி அவைகளை பிரியாத படி செய்யும் கபம், phlegm located in all the joints of the human body preventing them from seperation.

சிலேட்டும கர்ண சூலை, தாடை, கழுத்து பிடரி கனத்து, வீங்கி வலித்து, காதினின்று வெண்மையாய் சலம் வடியும் ஓர் காது நோய், இது சிலேட்டும பண்டங்களை புசித்தலினால் ஏற்படும் நோயாதலினால் இப்பெயர், a disease of the ear marked by swelling of the jaw, neck and nape followed by pain and discharge from the ear. It is so called because it is caued by irregular diet i,e taking unsuitable food giving rise to phlegmatic tendencies—Otitis.

NOTE.—It is the inflammation of the external metus or ear attended with shooting pain, increased by cold movement or by eating phlegmatic substances. It is distinguished from the severe pain casuing neuralgic ear ache.

சிலேட்டும கழலை, சிலேட்டுமக் கூற்றினால் ஏற்பட்ட கழலை. இது வர வர பருத்து, கடினமாகி, தொட்டால் கெல்லென்றிருக்கும். அன்றியும், சிறிது வலியும், அடங்காத் தினவும் ஏற்படும், பழுத்து சீழ் கொள்ளாது. அதனால் வாயில் சிறிது திறப்பும், உள்ளுக்கில் கபம் தட்டியது போல் பிசுபிசுப்புமாகத் தோன்றும், a tumour arising from phlegmatic causes; Phlegm-born tumour, In this, the swelling assumes a large

shape and becomes hard, firm and cold to the touch. It is marked by slight pain and an irresistable inclination to scratch the part. Suppuration is rare, tardy and sweet taste is felt in the mouth, and the palate seems as if smeared with a sort of sticky mucous; 2. சிலேட்டுமம் நிறைந்த கழலை, a common vascular or organised sarcoma, including all those tumours which appear to be composed of the gelatinous part of the blood.

சிலேட்டும கள கண்டகம், ஓர் வகை தொண்டை வெழுச்சி. இது கழுத்திற்கும் தாடைக்கும் மத்தியில் புடைகளை எழுப்பி, நமைச்சலும் வாயினிப்பையு முண்டாக்கும், simple goitre marked by overgrowth (hypertrophy) of flesh between the jaw and the neck, attended with itching sensation and sweet taste.

சிலேட்டும காசம், உடம்பில் சிலேட்டுமக்கூறு அதிகப் படுவதினால், உடம்பு பாரித்து அடிக்கடி இருமல், சீதளம், மூக்கர்த்தண்டின் அடியில் கனத்தல். அத்துடன் வாய் பிசுபிசுப்பு, அயர்ச்சி, தலைவலி, உணவில் வெறுப்பு, கனத்த கோழை முதலிய குணங்களை யுண்டாக்கு மோர் காச நோய், a type of Asthma due to excess of phlegm in the system. It is characterised by heaviness of body, frequent cough, cold, polypus of the nose along with other marked features such as, viscous condition of the mouth, physical lassitude, headache, aversion to food, thick mucous expectoration etc., 2. ஓர் கண்ணோய். இதனால கண்ணை நன்றாய் விழிக்க வொட்டாது, ஓயாமல் கண்மணியிலிருந்து வெண்ணிற நீர் வடிந்து, தேன் கொட்டியது போல் கண்ணிலும், நெற்றியிலும் வலி அதிகப் பட்டு வேதனையை உண்டாக்கும். இது கண் பார்வைக்குள் வெளுப்பை உண்டாக்கி சூரியன், விளக்கைப் பார்த்தால் பல மாதிரி காணப்படும். an eye disease attended with constant or frequent discharge of white fluid from the pupil, thereby rendering the opening of the eyes difficult, and acute pain in the eyes and forehead. 3. சிலேட்டுமத்தினால் கண்ணின் கருமணியின் மேல் வெண் கொப்புளங்கள் கண்டு, நீர் வடிந்து பார்வை மங்கும், opacity of the eyes due to a vesicular growth over the area of the pupil, attended with discharge of white watery fluid from the pupil arising from phlegmatic causes.

சிலேட்டும காச ரோகம், மார்பு, தலை நோய், குண்டிக்காய் வலி, உடம்பு பாரிப்பு, நெஞ்சில் அருவருப்பு, மூக்கில் சதா நீர் வடிதல், அரோசகம், உடம்பு மினுமினுப்பு, வெண் கோழை, வாந்தி இவைகளை யுண்டாக்கும் ஓர் வகை காச நோய், a kind of bronchial asthma attended with the following symptoms viz—chest pain, headache, pain in the kidneys, heaviness of body sense of constriction in the bronchi from reflex irritation, free and constant watery discharge from the nose, aversion to food, glossy surface of the skin, white mucous discharge from the mouth with a tendency to vomiting etc—Catarrhal asthma, see also சிலேட்டும காசம்; 2. கண் பார்வைக்குள் வெண்ணிறத்தை யுண்டாக்கி, சூரியனையும், தீபத்தையும் பார்க்கில் அனேக உருவங்களாகப் புலப்படும், a disease of vision marked by white coating, in which one object appears as two or more objects when seen before lamp light or the sunlight—Polyopia.

சிலேட்டும காமாலை, முகம் வியர்த்து, உடல் நடுங்கி, வெளுத்து, வீங்கி, இருமல், விக்கலுடன் மேல் மூச்சும், இளைப்பும் காணும் ஓர் காமாலை, jaundice of phlegmatic origin. It is marked by perspiration on face, tremor, paleness and swelling of body, hiccough, fatigue etc.—Catarrhal jaundice.

சிலேட்டுமக் காய்ச்சல், சிலேட்டுமக் கோளாறினால் ஏற்படும் சுரம். இது சாதாரணமாக பெரியவர்களை விட குழந்தைகளை மிகுதியாகத் தாக்கும், a phlegmatic fever more common in children than in adults.

சிலேட்டுமக் கிரகணி, see சிலேட்டுமக் கிராணி.

சிலேட்டுமக் கிரந்தி, சிலேட்டு மாதிக்கத்தினுலுண்டாகும் கிரந்தி நோய். இதில் தோலைப் பற்றிய கோளங்களுக்கு கோளாறுண்டாகி அதனால் உடம்பின் சதை, கொழுப்பு முதலியவைகள் கெடுதியடைந்து, திரண்டு வரும் ஓர் கடினமான கட்டி. இது பழுத்தால் இதினின்று சீழ் ஒழுகப் பெறும். a variety of encysted tumours which present a cyst filled with different

matters as fibrous tissues, fat-like matter etc. It is supposed to occur from obstruction of the excretory ducts of the sebaceous glands.

சிலேட்டுமக் கிராணி, மாமிசக் கிராணி. அதாவது சீதளத்துடன் கூடிய ஓர் கழிச்சல். இது சிலேட்டுமத்தால் பிறக்கும். a chronic diarrhoea due to the derangement of phlegm (humour) in the system; 2. மிதமீறி சாப்பிட்டு பகலில் நித்திரை கொள்வதினால் பக்குவாசயத்தின் உறுப்புகள் பலவீனப்பட்டு, அதனால் சிலேட்டுமக் கோளாறுக ளுண்டாகி ஏற்படும் கழிச்சலுடன் சீதபேதி, dysenteric diarrhoea caused by vitiated phlegm arising from the weakening of the digestive power due to day sleep, especially after excessive eating.

NOTE.— In this type, the phlegm is excited by heavy food which takes a longer time to digest, and by day sleep just after dinner. Sweet taste, weakness, nausea, vomiting, sweet eructations, apathy for food and sexual intercourse, loose mucous evacuations are the prominent symptoms.

சிலேட்டுமக் கிரிச்சரம், அடி வயிற்றிலும், ஆண் குறியிலும் வீக்க முண்டாகி, பிசினைப் போல் வழு வழுத்த கட்டுப் பட்ட மூத்திரம் அதிகஷ்டத்தோடு இறங்கும் ஓர் நோய், stricture of urine attended with swelling in the abdomen and the penis followed by a discharge of viscous urine which remained suppressed.

சிலேட்டுமக் கிருமி, ஆமாசய ஸ்தானத்தில் கபத்தினால் பிறந்து கூட்டமாய் காலில்லாமலும், வட்டமாக சுற்றிய நூலைப் போன்ற ஓர் வகைக் கிருமி. இது பார்வைக்கு சாதாரணமாகத் தோற்றுமலும், அணு மாத்திரமாகி, தருப்பைப் பூ வாசனையைப் பெற்று, குடலில் சுறறிக் கொண்டு மார்பு மட்டும் ஏறி அதிக வேதனையை யுண்டாக்கும், thread-worms generally existing in the intestines. They form in clusters and have no legs. In shape, they resemble a coiled thread, sometimes invisible owing to their microscopic nature and have a peculiar smell of a flower. They stick to the intestines and invade up to the thoracic region causing great inconvenience; 2. சய ரோகத்தில் காணப்படும் புழுக்கள், bacteria found in consumption

சிலேட்டுமக் குணம், முக்குணத்தில் ஒன்று, இது உடம்பிற்கு மிக்க பிரதானமானது. உடம்பு வறட்சி யடையாமல் ஈரம் ஏற்படுத்திக் கொண்டே யிருக்கும். அன்றியும், மூட்டெலும்புகளுக்கு நயநயப்பும், வழவழப்பும் புண்களுக்கு ஆற்றும் தன்மையும், உடம்பில் தசை யுண்டாக்கி பருமனையும், பலத்தையும், நல் லுணர்ச்சியையும், அவயவங்களுக்கு உறுதியையும் கொடுக்கும். மேலும், மனிதர்களுக்கு தாட்சணியம், அமைதி, பொறுமை, மனத் திருப்தி இக்குணங்களையுண்டாக்கும், one of the three humours in the system viz phlegm. It forms a very essential element in the constitution of the human body. It supplies the body with moisture and prevents it from becoming dry; lubricates the inferior joints and adds to its gloss; contributes greatly to the formation of healhly granules in the sores; increases the size of the body; brings about fresh tissues and a pleasant sensation to the system; furnishes strength and increases firmness to the limbs. It also imparts several characteristics as, forgiveness, mildness, patience, contentment etc.,

சிலேட்டுமக் குரற் கம்மல் ரோகம், குளிர்ந்த காற்று படுவதினால் தொண்டையில் கபம் சேர்ந்து. அதனால் குரல் வளையை இறுக்கிப் பிடித்தது போல் குரற் கம்மி, கீச்சுக் குரல், தொனி மறிப்பு முதலிய குணங்க ளுண்டாகும் ஓர்வகை தொண்டை நோய், hoarseness of the throat arising from congestion and excessive secretion of mucous, and is due to exposure to cold and damp air; and the symptoms are—constriction of larynx, shrill voice or sometimes no voice—Laryngitis.

NOTE.—This is due to the inflammation of the windpipe, but inflammation of the throat (tonsititis) may also sometimes arise from cold. Generally, hoarseness is usually pronouneed in the morning, passing off as the day advances, and again inoreasing at night.

சிலேட்டுமக் குன்மம், சிலேட்டுமத்தால் பிறந்த ஓர் வகைக் குன்ம நோய். இதனால் நாக்கு வழு வழுத்து, வாந்தி, விக்கல், கொட்டாவி, இருமல், வயிறு இரைச்சல், மலம் இறுகல், அன்ன வெறுப்பு, இளைப்பு முதலிய குணங்களைக் காட்டும், a form of dyspepsia originated from the derangement of phlegmatic humour in the system.

It is marked by the following symptoms viz—viscous or shining tongue vomiting, hiccough, cough, rumbling of the stomach, constipation, aversion to food, fatigue and all other specific indications of kapha (humour); 2. கபத்தினால் ஏற்படும் செரியாமை. இதனால் குளிர்சுரம், அரோசகம், மார்பு துடித்தல் இருமல், உடம்பு வெளுப்பு, மூக்கினால் நீர் வடிதல் உண்டாகும், dyspepsia due to excess of phlegmatic humour, It is attended with cold and fever, nausea, palpitation of the heart, cough, anemia, caturrh of the nose etc—Catarrhal dyspepsia.

சிலேட்டுமக் கூறு, சிலேட்டுமத் தன்மை, phlegmatic humour or tendency; 2. கபத்திற் குண்டான இயற்கை அம்சமும், விகாரத் தன்மை முதலிய பிரிவுகள். இது மீறினால் உடல் கனத்து, அன்னம் செல்லாது, விக்கல், சத்தி குன்மம், இருமல், இளைப்பு, சளி முதலிய குணங்கள் ஏற்படும், the inherent principles, and the functionery changes of phlegm. Excess of this humour in the system may lead to aversion to food, dyspeptic trouble, cough, hard breathing, expectoration etc,

NOTE.—Kapha is the negative heat or the cooling principle which provents the excessive effcots of the bodily heat by means of its humidity, and keeps in tact the different compouent moleoules. It supports the body with the supply of power of endurance, the development of organs, strength and coolness. It regulates the material composition of the body, determining its mass, the balance of the process of waste and the process of assimilation.

சிலேட்டுமக் கேறு, காட்டுக் கருணை, wild elephant yam.

சிலேட்டுமக் கோபம், சிலேட்டு மாதிக்கம், excess of phlegmatic humour in the system; excited condition of phlegm.

சிலேட்டுமக் கோளம், நாக்கு அடிப் புறத்தில் இரண்டு பக்கத்தி லுள்ள உமிழ்நீர் கோளங்கள், the smallest of the salivary glands, placed beneath the tongue on either side of sublingual gland.

சிலேட்டுமங் கட்டல், தொண்டை அல்லது நெஞ்சில் சாதாரணமாகக் கோழை கட்டல், formation or accumulation of phlegm in the lungs; 2. ஓர் மரணக் குறி, a symptom of death, as obstruction of respiration due to the collection of phlegm in the throat.

சிலேட்டுமங் கட்டி யிழுத்தல், சாதாரணமாக காசத்தினால் பீடிக்கப் பட்டவர்களுக்குச் சிலேட்டு மாதிக்கத்தினால் மூச்சு விட முடியாது திணறிக் காணும் இழுப்பு, an attack of asthma attended with difficulty of breathing of a spasmodic character, occurring in paroxysms: 2. சாகுங் காலத்தில் தொண்டையில் கோழை கட்டி, அதனால் மூச்சு விட முடியாமல் துன்புறுதலாம் நிலைமை, agony of death due to obstruction of respiration caused by increase of phlegm in the chest. See சிலேட்டுமங் கட்டல்.

சிலேட்டும சமனி, கோரைக் கிழங்கு, coray root—Cyperus pertenuis.

சிலேட்டும சமான ஆவிருத வாதம், சிலேட்டுமத்தை சமான வாயு ஆவரணமாகச் சூழும் போது சீதளம், மந்தாக்கினி முதலிய குணங்களை யுண்டாக்கும் இதேமாதிரி பிராணன், உதானன், வியானன், அபானன் என்னும் வாயுக்கள் சிலேட்டுமத்தை சூழும்போது அவைகளுக்குத் தக்கபடி குணங்கள் பேதப்படும், the functional changes brought about when the vital air Samana, responsible for digestion, covers the phlegmatic humour of the system viz-cold aud chillness, impaired digestion etc. In the same way, several are the changes that occur when the vital airs-Prana, Uthanal (which is promoting digestion), Viyana and Apana cover the same humour, according to their principles.

NOTE.—Samana, Vuthana, Apana are the ones of the ten vital airs called Dasa vayu, forming the mainstay of life operating in the different parts of the body.

சிலேட்டும சயம், see சிலேட்டும சய ரோகம்.

சிலேட்டும சயரோகம், இதனால் தலை கனத்து உடம்பு பாரித்து, அரோசகம், வாந்தி இருமல், வாயிற் சலம் ஊறல், பீனிசம் இரைப்பு, இளைப்பு, கோழை முதலிய குணங்களை யுண்டாக்கும். உடம்பில் கப மேலீட்டினால் காணும் ஓர் வகை சயரோகம் a kind of phthisis or consumption due to excess of phlegmatic humour in the

system. It is characterised by the following symptoms viz—heaviness of head and the body, nausea, cough, insalivation, cattarrh of the nose, breathing with wheezing, expectoration, general wasting of the body etc.

NOTE.—It is an almost incurable disease generally ending in death. It is also known as pulmonary tuberculosis. It is generally found prevalent among the civilised societies in the town, leading an easy-going life, especially girls.

சிலேட்டும சரீரம், சிலேட்டுமம் அதாவது கபத்தின் கூறு அதிகப் பட்ட வுடம்பு. இதனால் 20 வகை நோய்களும் உண்டாவதன்றி, அத்தகைய மனிதனுடைய குணாதிசயங்களும் வேறு பட்டு ஏற்படும் நோய்களாவன:- உணவில் வெறுப்பு, வெண் மலம், வெண் மூத்திரம், களகண்டம், சோம்பல், நாளத் தாபம், அதி தூக்கம், வெண்ணிறக்கண், கால் கை சில்லிடல், குருக்கள் எழும்பல் மார் கனதி, அசீரணம், திமிர், உடம்பு பாரிப்பு, மந்தம், வாய் நீரூறல், பலவீனம் சளி கக்கல், வாயினிப்பு, கொழுப்பு முதலியனவாம். குணாதிசயமாவன:—சாத்விகம், தயா குணம், நன்றி யுடைமை, சிநேகித வாஞ்சை, நூல் நம்பிக்கை, தருமம், தயாளம் உண்மை முதலியன, body or constitution attended with phlegmatic humour i.e. predominence of kapha in the system. This condition of the system brings about twenty complaints and different kinds of temperaments in a man viz :—

The complaints are .— (1) Aversion to food (2) white stools (3) white-coloured urine, (4) goitre, (5) drowsiness, (6) inflammation of veins, (7) excess of sleep, (8) whiteness of the eyes, (9) coldness of limbs or chillness of the extremeties, (10) rash, (11) heavines of the chest, (12) indigestion, (13) numbness, (14) heaviness of body, (15) dullness, (16) insalivation, (17) weakness, (18) expectoration, (19) sweet taste in the mouth, (20) exsess of fat.

The tempraments are— Mildness in thought, word and deed and other amiable qualities, forgiving nature, gratefulness, friendliness, inflinching faith to the dictates of the ancient science (shastras,) charity, liberality, truthfulness etc.,

சிலேட்டும சரும கீலம், முகத்தில் முளைகள் எழும்பி வழுவழுத்து, வெளுத்து, ஊசியாற் குத்துவது போல் குத்தலை யுண்டாக்கும். சிகிச்சை செய்யாவிடில் அபான வாயுவை அடைத்து மல பந்தத்தையும், வயிறு பருத்தலையு முண்டாக்கும், pimples or pustules on the face with a whitish appearance and glossy surface and followed by pin-prick pain. If these are not treated, they may lead to gas in the intestines and distension of the bowels thus resulting in constipation.

சிலேட்டும சலமிழிவு, கபாதிக்கத்தால் பிறக்கும் 4 வகை மூத்திர நோய். இதில் மூத்திரம் தாழைமலர், எலுமிச்சை, சாணம், உதிரம் இவைகளைப் போல் வாசனை யுள்ளது, குடித்திப்பு, a urinary disease consisting of four kinds, each of which attended with abnormal discharge of urine. In this, the urine is sweet to the taste and smells like screw pine flower, lemon, cowdung and blood. The disease is attributed to the deranged phlegm.

சிலேட்டும சவ்வு. சளி சவ்வு, இது உடம்பினுட் பகுதியில் உள்ள அறைகளை கவர்ந்து கொண்டிருக்கும், the mucous membrane lining all the cavities of the body.

சிலேட்டும சன்னி, நெஞ்சில் கபங் கட்டி வியர்த்து, தோன்றுவதெல்லாம் மனதிற் தோன்றி, தண்ணீர் வெறுத்து, புத்தியை மயக்கும் ஓர் வகை சன்னி, a type of delirium in which the accumulation of phlegm in the chest and perspiration form the predominent symptoms. It gives rise to disorder of the brain occasioned by extravagant thought, dislike for water, perplexity of mind etc.,

சிலேட்டும சிக்வா கண்ட ரோகம், நாக்கில் முள்ளைப்போல் தடித்து வெளுத்து நெரம்புகளை எழுப்பும் ஓர் நோய், a disease of the tongue thickened with papillae and is so changed as to give the mucous membrane an appearance of whitish colour.

சிலேட்டும சிம்மக காசம், சிலேட்டுமத் தன்மைய ஓர் வகை காசநோய், phlegmatic asthma.

சிலேட்டும சிராவம், கண்ணில் வலி ஏற்படாமலே அதினின்று வெண்மையாயும், கடினமாயும், சீதம் போலும் சீழ்வடிந்து, பீளை தள்ளிக் கொண்டிருக்கு மோர் கண்ணோய், an eye disease in which the secretion of slimy, white and thick muco-purulent discharge is marked by absence of pain. See கபச் சிராவம்.

சிலேட்டும சிர்க்கா ரோகம், பெண்களுக்கு அல்குல் வழியாக மஞ்சள் நிறமாய் நாற்றத்துடன் வெளிப்படும் இரத்தமும் சீழ் கலந்த ஒழுக்கு. இதனால் பசியீனம், மல பந்தம், முதுகுவலி, சூதக சன்னிக் குறி முதலிய குணங்களைக் காட்டும், the increased secretion from the female private parts called whites. The discharge is due to the phlegmatic humour of the system ; and is of a white and faint yellow colour. By this disease, the appetite is impaired, and the bowvels constipated ; there is often pain in the back followed by hysterical symptoms.

சிலேட்டும சிலேட்டுமம், see சிலேட்டுமத்தில சிலேட்டுமம்.

சிலேட்டும சுரம், கபாதிக்கத்தினு லுண்டான சுரம். இதனால் கை கால் கனத்து, சிரசில் நீர் கொண்டு, தலை வலித்து, உடம் பிளைத்து, விட்டு விட்டுக் காயும். அன்றியும், நெஞ்சுவலி, நடுக்கம், தலையில் வியர்வை, அரோசிகம், சதை சிலிர்ப்பு, அதிக தூக்கம், வயிற்றில் எரிச்சல், வாயில் இனிப்பு, இருமலுடன் கோழை, வாந்தி, சோர்வு முதலிய குணங்களைக் காட்டும், phlegm-born fever, which is characterised by heaviness of limbs, headache through cold in the head, and emaciation. It is intermittent and is marked by chest pain, shivering, nausea, marked appearance of goose-flesh, excessive sleep, waterbrash, sweet taste in the mouth, cough with expectoration, vomiting, lassitude and other peculiar symptoms.

சிலேட்டும சூலை, கபாதிக்கத்தினால் அடிவயிற்றில் நோவு, வியர்வை, அரோசகம், கை கால் கனதி முதலிய குணங்களை யுண்டாக்கும் ஓர் வகை சூலை நோய், a kind of colic attended with agonising pain in the abdomen, perspiration, nausea, heaviness in the limbs etc., It is said to be due to the deranged phlegm in the system; 2. மேக சம்பந்தத்தினா லுண்டாகும் சூலைப் பிடிப்பு, a chronic gout.

சிலேட்டும சோகை, கபத்தினால் ஏற்படும் சோகை, phlegmatic anemia.

சிலேட்டும தரம், ஐபசீரிமை, synovial tissue

சிலேட்டும தலைவலி, see சிலேஷ்மத் தலை வலி.

சிலேட்டும தாது, உடம்பில் பித்த தாது சம்பந்தமான பலவிதமான ரசாயன மாறுபாடுகளினால் உஷ்ணம் உண்டாகிற பொழுது, மேற்கண்ட உடம்பின் சூடு (animal heat) அதிகமாய்ப் போகாமல் தடுப்பதற்கு சக்தி வாய்ந்து உள்ளது தான் சிலேட்டும தாதுவாகும். இந்த உஷ்ணத்தை ஒழுங்கு படுத்தி, உஷ்ணத்தினால் சவ்வின் அறைகள் தேயுறுவதை அதிகமாக செல்ல விடாமல் குறைப்பதும் இச்சிலேட்டும தாதுவேயாகும். இது மார்பில் விசேஷமாய்த் தங்கியுள்ளது. சிலேட்டுமம் என்றால் தழுவுதல் என்று அர்த்தமாகும். ஆகவே, சிலேஷ்மம் என்னும் பிராண சக்தியானது சவ்வு அறைகளை அணைத்துத் தழுவி, அணுவாதி தத்துவங்களுக்கு வலிமையையும் கொடுத்து காப்பாற்றுவதும், உடம்பில் சுருக்குழிகளிலும், நிணநீர்க் குழிகளிலும் ஓர் வழுவழுப்பான எண்ணெய்ப் பசையைக் கொடுக்கவும் இது உதவும். இதற்கு சேல்களின் உட்புறத்திற்கு வழுவழுப்பு கொடுப்பதற்கும். உடம்பிற்கு பசை கொடுத்தற்கும், பருமணல் போன்ற சதை வளர்ச்சிக்கு உதவுதலும், உடம்பின் பருமனை வளர்த்தலுக்கும், புதிய சவ்வுகள் கட்டலும், உடம்பிற்கு இனிமையான உணர்ச்சியைக் கொடுப்பதற்கும், பலத்தை விர்த்தி செய்வதற்கும், கைகால்களுக்கு உறுதியை கொடுத்தலுக்கும் ஆகிய எண்வகைதான காரியங்களுக்கு உதவும், kapha humour combined chemically with Pitta (bilo) gives rise to heat in the body ; and so, Pittam is the positive heat of the body and Kapha is the negative heat or the cooling principle which presents the excessive effect of the bodily heat by means of its humidity, thus protecting the cellular tissues from wasting away. So, this Sleshma of the life-energy regulates the heat or the body by taking its seat in the

heart and prevailing the whole system, keeps intact the cellular membranes with their different component mob. cules. It lubricates the womb cavities and the lymphatic cells with a mobile fluid. It also serves synovial fluids to the joints for giving smoothness, and lends strength and supports the body with viscus fluid for its development thus promoting the bulk of the body, and also builds the cellular membranes. Moreover it helps the five senses of the body, and also adds strength to the limbs. So, the manifested Kapha operates on the human system in eight different ways.

NOTE.—Moreover, it supports the body with the power of endurance and balances the process of assimilation. It fills the cellular spaces of the body; and holds them together in a kind of cooling cohesion. The Gunas (properties) attributed to the manifested Kapha are whiteness, coldness, oiliness, heaviness, firmness and smoothness.

சிலேட்டும தந்த மூல ரோகம், பித்தம் பல்லில் பிரவேசித்து, அதன் வேரிலுள்ள இரத்தத்தை சீழாக மாறச் செய்து, எரிச்சலையுண்டாக்கும் ஓர் பல் நோய் a dental disease in which the bile prevails in the gums at the root of the teeth causing pus with burning sensation.

சிலேட்டும தாகம், கபக் கோளாறினால் நெஞ்சில் குத்தல், வாயினிப்பு, வயிற் றுப்பலும், தலையும் உடம்பும் மறத்தல், வாந்தி, அரோசகம், சோம்பல், அசீரணம் முதலிய குறிகள் ஏற்படும், intense thirst as a result of excited condition of phlegm in the system. It may lead to the following bad symptoms viz;—pin-prick pain in the chest, sweetness of taste, flatulency, numbness, vomiting, nausea, indolence and indigestion.

சிலேட்டும திமிரம், கபா திக்கத்தினால் கருவிழியை வெளுப்பாக மாற்றி, பார்வையையும் வெளுப்பாகத் தோற்றுவிக்கும். மேலும், ஒரு வஸ்து பல வஸ்துக்களாய்க் காணப்படும் நோய், an affection in the black of the eye (iris) from phlegmatic causes, by which the iris is rendered white giving a whitish appearance to the sight.

சிலேட்டும திரமான், கபத்தை கண்டிக்கக் கூடிய மூலி, medicine promoting the discharge of mucous or other matters from the trachea-Expectorant; 2. செவ்வியம், black pepper root.

சிலேட்டும துட்ட விரணம், நரம்புகளில் சிலை யோடி வெளுத்து, கெட்டி பட்டு குத்தலும், வலியுடன் பிசினைப் போல் சீழ் வடியும் ஓர் விரண நோய், an open sore or lesion affecting the nerves and causing sinuses, attended with boring pain and purulent discharge.

சிலேட்டும தேகக் குறி, நாடி துர்ப்பலம், உடல் வியர்வை, சன்மார்க்கத்தில் இச்சை, காம விச்சைக் குறைவு, முதலிய குணங்கள் ஏற்படும் கப உடம்பு. இவர்களுக்கு கண் வழியாய் ஜீவன் பிரியும், the temperament of a man of phlegmatic humour, will exhibit symptoms such as—weak blood vessels, perspiration, spiritual desire, a low ebb of sexual passion, etc., In men of such types, the soul on their death, will leave the body through the eyes.

NOTE.—It is not to be forgotten here that a man's character and his temperament are moulded according to the constellation of stars at the time of his birth. So, astrology which comes in here is found to determine also the mode of his death, and how the soul escapes the nine openings of the body. According to medical Astrology, every zodiacal sign, and every planet has its own elementary qualities; and has even special powers over some part or parts of the body to create corresponding humours with diseases, remedies mode of death etc.

சிலேட்டுமத் தடிப்பு, கபம் அதிகரித்தல் excess of phlegm; 2. கபம் உறைதல், solidity or thickness of phlegm.

சிலேட்டுமத் தானம், உடம்பில் கண்ட முதல் சிரசுவரை யுள்ள பாகம், the region of phlegm extending from the neck to the head.

சிலேட்டுமத்தில் சிலேட்டுமம், ஒரு மாத்திரை யாய்நடக்கும் சிலேட்டுமத்தோடு, வேறொரு மாத்திரையாய் நடக்கும் சிலேட்டுமம் சேர்ந்தால் ஆத்துமா வெளிப்பட்டு தேகம் இறந்து போம், when the force or degree in a particular pulse-wave is found to exhibit altogether a different degree or force by the radial artery, the soul will leave the body and instantaneous death is the immediate result. See மாத்திரை விழி வட்டமிட்டு உயிர் பிரியும் நாடி.

NOTE.—According to Siddhar's system of medicine, a unit-force taken for practical purposes in the beating of pulse, so as to distinguish the Vatha from the other two humours, represent the pulse-forces as 1, ½ and ¼. If these proportions are found to vary hopelessly, then death is the result.

சிலேட்டுமத்துக் காதி, கபத்தை யறுக்கும் மருந்து, see சிலேட்டுமத் திறமான்; 2. திப்பிலி, long-pepper—Piper longum. For a list of drugs classified as expectorants, see 2 கபஹராகாரி on page 881 and கோழையறுப்பான் on page 887 of vol I.

சிலேட்டுமத்தைப் பக்குவம் பண்ணி, வெள்ளறுகு, that which developes phlegm i.e. white doob grass—Enicostema littorale.

சிலேட்டும நடை, தொண்டையில் கபங் கட்டியிழுத்தல், rattling in the throat due to the deposit of phlegm.

சிலேட்டும நாசம், இருள் மருது, black murdah, see கரு மருது.

சிலேட்டும நாசனி, மாமரம், common saul 2. மருவகம், southern wood.

சிலேட்டும நாசி, திப்பிலி, long-pepper—Piper longum.

சிலேட்டுமநாசினி, see ஜவிரலி, 2. see சிலேட்டுமத்துக்காதி; 3. கார்போகவரிசி, seeds of hazel-leaved psoralea–Psoralea corilifolia. It is so called from its curing phlegm.

சிலேட்டும நாடி, கபத்தைக் குறிக்கும் தாழ்ந்த அல்லது மெல்லிய நாடி, இது மணிக் கட்டு மேலே ஓர் அங்குலத்தில் ஆரையெலும்பின் பேரில் ஓடும் நாடி. இதை மூன்று விரலால் அழுத்த மோதிர விரலுக் கடியில் துடிக்கும் நாடி. இதற்கு மாத்திரை கால், a slow beat pulse indicating phlegmatic humour of the system. The movement of this pulse is shown by the radial artery situated an inch above the left wrist. It is felt at the ring-finger generally by pressing with the three fingers. The force or degree of it is considered to be a quarter (¼).

சிலேட்டும நாடி விரணம், நரம்பி லுண்டாகும் கட்டியானது, தடித்து கெட்டி பட்டு, மினுமினுத்து பழுத்து உடைந்தால் சதா சீழ் ஒழுகிக் கொண்டும், இராக் காலத்தில் மிக மிஞ்சி ஒழுகும் விரண நோய், an ulcer or an abscess found in the nervous region and marked by a shining surface and hardened swelling with a constant discharge of pus and its profuse flow in the night.

சிலேட்டும நோய், see சிலேட்டும வியாதி.

சிலேட்டும பலம், புளி வஞ்சி, an unknown drug ?

சிலேட்டும பாசம், கரு மருது, see சிலேட்டும நாசம்.

சிலேட்டும பாண்டு, சிலேட்டுமம் மாதிக்கத்தினால் கண், உடம்பு, முகம், நகம், மல மூத்திரம் முதலியவைகள் வெளுப்பாகவும், நரம் பெழுச்சியும் காணும் ஓர் வகைப் பாண்டு நோய், a form of dropsy due to the aggravated condition of phlegm in the system, It is marked by paleness of the eyes, the body, face, nail, feces, urine etc. along with prominent and raised appearance of the veins.

சிலேட்டும பாத வன்மீக ரோகம், யானைக் காலின் மீதுண்டாகும் புற்று. tumours or tubercles of various sizes found grown like ant-hill in the elephantiasis of the leg.

சிலேட்டும பித்த சமனி, கருவேல், black babool—Acacia arabica.

சிலேட்டும பித்த சலமிழிவு, ஓர் மூத்திரநோய். இது மூன்று வகைப்படும். இதில் மூத்திரம் வெண்மையாயும், சண்பகப் பூ வாசமாயும், சில சமயம் நாற்றமாயும், ருசி நாகப்பழத்தைப் போல் துவர்ப்பாயு மிருக்கும், a form of diabetes due to the concerted action of phlegm and bile in the system. It consists of three kinds in which it is characterised by the passing of large quantities of pale and light coloured urine having an odour of champaka flower, and sometimes with a fetid smell and an astringent taste like that of a jamoon fruit.

NOTE.—In this form of the disease, large quantities of urine is passed but without sugar. It is very prevalent among rich classes of people who lead indolent lives and consume rich meals. It also appears to be hereditory in some families.

சிலேட்டும பித்த சுரம், கபமும், பித்தமும், கோளாறடைவதா லேற்படும் காய்ச்சல், fever arising from the deranged phlegm and bile in the system.

**சிலேட்டும பித்த சூலை**, சிலேட்டும சூலையிற் காணும் குணங்களோடு, தேகக் காங்கை, மயக்கம், பலவீனம் முதலிய குறிகளும் உண்டாகும் பித்த சூலை, colic attended with all the characteristic symptoms described under சிலேட்டும சூலை together with bodily heat, giddiness, weakness etc. due to the conjunction of bile.

**சிலேட்டும பித்த தொந்தம்**, வாத நாடியினின்று பிரியும் சிலேட்டும நாடியும், பித்த நாடியும் ஒன்று சேருவது. இதனால் உண்பது கசப்பாகும்; நாக்கே கசக்கும் இனிக்கும். பேச்சு தடுமாறும், கபங் கட்டி குரல் வேறுபடும், கண்ணிற் பீளை காணும், bile (pittam) and phlegm as transformations of the same energy—Vatha, which often combine each other; and the symptom exhibited are—the food taken will be found bitter in taste or sometime bitter and sweet, and there will be also faltering in speech, and the altered voice from accumulation of phlegm and muco-purulent discharge from the eyes.

**சிலேட்டும பித்தாங் கதரசம்**, உடம்பின் பித்தாதிக்கத்திற்கும், கபாதிக்கத்திற்கும் கொடுக்கும் ஆயுள் வேத மருந்து. an Ayurvedic preparation prescribed for excess of bile and phlegm in the system.

**சிலேட்டும பிரமேகம்**, கோசத்தில் கடுத்து நொந்து, வெண்ணிறமான மூத்திரம் இறங்கும். இது பெண் போகத்தினுற் பிறக்கும். இதில் மூத்திரம் பல வர்ணங்களாக இருக்கும். சில சமயம், கரும்பின் சாறு அல்லது மாவு கரைத்தது போலும், பன்னீர், தயிர், பால், சர்க்கரைப் பாகு, தேன் இவைகளைப் போலும் கடுத் திறங்கும். அன்றியும், நெய்ப்பசை மிதக்கும். இதைக் காய்ச்சி, சீலையி லூட்டி வத்தியாக எரிக்கலாம். இது சிலேட்டுமாதிக்கத்தினுல் பிறக்கும். அசாத்திய மெனக் கொள்ளப் படும், a disease of the urinary organs marked by pain in the organ of penis with irritation and discharge of white-coloured urine. Sometimes, the urine may appear in varied colours resembling sugar, cane juice, solution of flour, rose-water, curd, milk syrup, honey etc. It may be boiled and soaked in thread and made to burn like a wick. This type is caused by an exuberance of the deranged phlegm and is said to be incurable.

**சிலேட்டும பீலிகம்**, கப சம்பந்தமான மண்ணீரல் நோய், a disease of the spleen with the characteristics of phlegmatic humour in the system.

**சிலேட்டும பீனசம்**, நாசி மாறி மாறி யடைத்து முத்து போல் நீர் வடிந்து, நாற்ற முண்டாகி, சிராய்ப் போல் சளி, நாசியில் குத்தல், வலி, கண்களில் பீளை சாறுதல், கண் வீக்கம், தலை பாரம், முகம் ஊதல், தொண்டை, உதடு, உண்ணாக்கு இவ்விடங்களில் கரகரப்பு முதலிய குணங்களைக் காட்டும் பீனச நோய். இது கபாதிக்கத்தினு லுண்டாகும், catarrh of the nose originating from the derangement of phlegm in the system. It is characterised by alternative obstruction of both the nostrils, constant running of the nose attended with hardened mucous discharge in flakes, and pinprick pain in the nose. It is also marked by swelling of the eyes, heaviness of the head, flabbiness of the face, tickling sensation in the region of the throat, lips, and the palate.

**சிலேட்டும மசூரிகை**, இதுவே அசகரோகம். இதனால் உடம்பு முழுதும் கருணைக் கிழங்கு முளைகள் போல் தடித்த கொப்புளங்களை யுண்டாக்கும் ஓர் வகை அம்மை நோய்; a kind of small-pox in which the eruptims assume the shape of the yam root sprout at the beginning and then becomes pustules.

**சிலேட்டும மத ரோகம்**, சிலேட்டுமாதிக்கத்தினு லுண்டாகும் ஓர் வகை மத நோய். இம் மதங் கொண்டதலால், கண் மூடி தியானம் செய்பவர் போலிருத்தல், ஒன்றற் கொன்று சம்பந்த மில்லாமல் விரைவாய் வார்த்தை யாடல், உடம்பு வெளுத்தல், காம வெறி, விந்து ஒழுக்கு முதலிய குணங்க ளேற்படும், a kind of infatuation or sexual passion found in a person (male or female) to be too extravagant and obstinate to be controlled, due to the phlegmatic tendency of the system. Persons affected with such amative passion will be found with eyes closed contemplating on something, talking incoherent words; and in them found also other symptoms such as anemia amativeness, seminal discharge etc.

NOTE.—Unmarried women may find it more difficult than men to control their passions especially when they are found lascivious and in the usual course succumb to them. Unless effectively controlled, the constitution may break down by the baleful and fearful effects. In Siddhars sexual science, there are many ways for resisting it and for curing the will by medicines, baths, diets, magic etc.

சிலேட்டும மலக்கிருமி, கபாதிக்கத்தினால் இரைப்பையில் உற்பத்தியாகி, உள்ளில் சஞ்சரிக்கும் ஏழு வகைக் கிருமிகள். இவைகள் கால்களில்லாமல் வட்டமாக சுற்றிய நூலைப் போலும், சிலது பார்வைக்கு தோன்றாதும், மற்றவை பல மாதிரியாகவும் இருக்கும். இதனால் அசீரணம், வாந்தி, சுரம் உண்டாகும். the seven varieties of worms of phlegmatic origin arising in the stomach and infesting the human intestines; and they are of varied types--some without legs, round, or coiled like thread, microscopic etc., while the rest are of varied kinds. The existence of the said varieties in the intestines may give rise to indigestion, vomiting and fever of several kinds. The above mentioned varieties are viz.—

1. பெரும் பூநாகக் கிருமி, a large genus of earth-worm.
2. நீர்ப் பாம்புக் கிருமி, a species of the worm resembling a water-snake.
3. நெல் முனைக் கிருமி, one as sharp pointed as the tip of paddy grain.—Oxyuris incognito.
4. சின்ன நீளக் கிருமி, one of the long and thin species of intestinal parasites,—Oxyuris.
5. அணுக் கிருமி, atomic maggots.
6. வெண் கிருமி, a species of white worm of the intestine.
7. செங் கிருமி, a species of the nematoid worm of the Ascarides family.

சிலேட்டும மலம், கபத்தை யுண்டாக்கும் வஸ்துக்கள், substances generating phlegm.

சிலேட்டும மாந்தம், உடம்பில் கப மேலீட்டினால் ஏற்பட்டு, உண்ட உணவு செரியாமை, பசி யின்மை, அருவருப்பு, அன்னத்து வேஷம் முதலிய குணங்களைக் காட்டும் ஓர் வகை மாந்த நோய், indigestion due to excess of phlegmatic humour in the system. It is marked by loss of appetite, aversion to food, nausea etc.

சிலேட்டும மார்பு நோய், மார்பை கெட்டியாயிருக்கிப் பிடித்தது போலவும், பாருங் கல்லை வைத்தது போலும் கண்டு, அதுடன் இருமல், மந்தாக்கினி, கோழைப் பெருக்கு, சோம்பல், அரோசகம், சுரம் முதலிய தீக்குணங்கள் ஏற்படும், pain in the chest arising from the phlegmatic humour in the system. It is characterised by a feeling of lightness of the body and pressure in the chest; and also marked by the following symptoms viz:—cough, loss of appetite, excessive secretion of phlegm, indolence nausea, fever etc.

சிலேட்டும முக ப்ரகம், அடிக்கடி வாந்தியையும், பேதியையும் உண்டாக்கும் ஓர் வகை வாயு நோய், diarrhoea arising from flatulency due to the windy nature of the constitution. It is marked by abnormal frequency of vomiting and purging.

சிலேட்டும முளை மூலம், உடம்பில் கபம் கோளாறடைந்து, அதனால் முளையோடு உண்டாகும் வெளி மூல நோய். இம் முளை கடினமாயும், வட்டமாயும், பளபளப்பாயும், பார்வைக்கு பசுவின் முலைக் காம்பைப் போலிருக்கும். இதினின்று எவ்விதமான ஒழுக்கும் ஏற்படாது. இதனால் அசீரணம், சுரம், நடுக்கல், தலை பாரம், இருமல், வாந்தி, தொப்புள் வலி முதலிய குணங்கள் உண்டாகும், external piles due to the deranged phlegm in the body. This enlarged vein or vascular tumour is usually hard, round and glossy and it resembles the teat of a cow. There is no exudation or any sort of secretion from it. It is followed by symptoms such as—indigestion, fever with shivering and heaviness of head, cough, fatigue, vomiting, pain at the epigastrium etc.,

NOTE;— There will be pain in the pubic region, sphincter and the rectum. Asthma, coughing and nausea are also sometimes present. Besides, amongst other symptoms are — Salivary secretion, fetid discharge from the rectum, high-coloured urine disgust for food, weak digestion, pale-colour, loss of virile power etc.,

சிலேட்டும மூர்ச்சை, சிலேட்டுமத்தினா லுண்டாகும் ஒரு மூர்ச்சை நோய். இதனால் மார்பு அதிர்ச்சி, வாய் நீரொழுக்கு, உடம்பு கனதி முதலிய குணங்கள் கண்டு, நெடு நேரம் கழித்துத் தெளியும் fainting occurring in the excited condition of phlegmatic

humour; and the symptoms usually accompanied are—shock affecting the chest, insalivation, heaviness of the body etc. The person may, in such cases, regain consciousness after a long interval —Syncope.

NOTE.—This condition may also be caused from numerous other causes, but chiefly from diseases of the heart. The body in such cases, should at once be placed in a recumbent posture, cold water dashed on the face and the patient removed to an airy place. The feeling of langour subsequently will be relieved by rest

சிலேட்டும மூலக் கிராணி, கபக் கோளாறினால் இரத்தபேதியும், வெண்மலமும் கழிந்து காற்று பறியும் ஓர் மூலக் கிராணி, dysenteric diarrhoea premonitory to piles or hemorrhoids due to the deranged phlegmatic humour. It is marked by bleeding at stools, flatulency etc., see சிலேட்டும மூலம்.

சிலேட்டும மூலம், இதுவே கபத்தினால் உடம்புக்கு ஏற்பட்ட உள் மூல ரோகம். இது உடம்பிற்கு வேலை செய்யாமலும், அல்லது தேகப் பயிற்சி யில்லாமல் இருக்கும் போது கொழுத்த உணவை அதிகமாக உண்பதாலும், உடம்புக்கு சிரம மில்லாமல் காலம் போக்குவதாலும், பகல் நித்திரை, எப்பொழுதும் உட்கார்ந்த படியே இருத்தல், குளிர்ச்சியான ஊரில் வசிப்பதாலும், குளிர்ந்த காற்றில் இருப்பதாலும் உண்டாகும். இதன் உள் மூல முளை உள்ளாக ஆழ்ந்தும், வெண்மையாகவும், கனமாகவும், அமுக்கும் போது கடினமாகவும், சதா நமைச்சலோடு கூடியதாகவு மிருக்கும். அது வடிவத்தில் பலாக்காய் விதையைப் போல அல்லது பசுவின் மடியின் காம்பு போல விருக்கும், kapha piles which is caused by rich and heavy meal with absence of exertion or exercise, easy going life, day-sleep, sedentary habits in life, living in cold climate, and exposing to cool breeze. The fleshy excrescence in the rectum is deep-rooted, white and thick, hard and yielding to pressure, with constant itching sensation. In shape, it is like a seed of the jack fruit or the teat of a cow.

சிலேட்டுமம், ஐயம் அல்லது கபம். இது அதி சீதள குண[illegible] முதல் சிரசுவரை வியாபித்து, உடம்பை காப்பாற்றிச் சுரவு குணமாய் நெஞ்சில் தங்கி நிற்கும், phlegm (humour) It is combined with cold and moisture extending from the neck to the head and contributing largely towards the preservation of health by taking its seat in the chest (lungs); 2. வித்துவைப் பற்றி நிற்பது, that which contributes to the formation of semen in the body; 3. சந்திர சொரூபம், the spiritual form of moon; 4. சீதள மதி கரித்து என்கோழும் உடம்பில் உஷ்ணத்தை உண்டாக்கி நீரைப் பெருக்குந் தன்மையது, that which is promoting moisture in the system by developing heat and then cooling it; that which has the nature of causing cold owing to excess of heat developed in the body. 4. கபக் கூறு, phlegmatic humour; 5. கோழை, expectoration; sputum, 6. விழிச் சிலேட்டுமம், viscid substance of the eye. See under சித்த வைத்தியம்.

சிலேட்டும் போக்கி, கபம் போக்கி. அதாவது கபத்தை வெளிப்படுத்தும் மருந்து, a medicine which expels phlegm from the chest or lungs — Expectorant; 2. செவ்வியம், black pepper root.

சிலேட்டும் போக்குந் திறமான், see சிலேட்டும நிரமன்.

சிலேட்டும யோனி, வேதனை யில்லாமலே அங்குள்ளும், கருப்பையிலிருந்தும் வெளுத்த பிசுபிசுத்த இரத்தம் ஒழுகப் பெற்ற ரோகம். இதற்கு சாராயத்தை பஞ்சில் நனைத்து யோனியில் போட குணப்படும், a whitish painless, viscid discharge from the vagina ane uterine cavity. It is a symptomatic congestion of these parts—Leucorrhoea. It is also called whites. Cotton soaked in the arrack is inserted into the parts as a cure.

சிலேட்டும ரோக பேதம், ஆயுர் வேதப்படி, சிலேட்டும ரோகங்கள் வகை, அவையாவன, according to Ayur veda, the different forms of phlegmatic diseases are viz:—

1. வாத சிலேட்டும ரோகம், one arising from Vatha with bodily pain and especially limbs, and causing trembling, chest pain and hiccough.
2. பித்த சிலேட்டுமம், one due to bilious causes with giddiness, prespiration, thirst and hard-breathing.
3. இரத்த சிலேட்டுமம், one causing blood-vomiting almost daily, insensibility, giddiness, swooning, swelling of the joints, and parched tongue.

4. க்ஷய சிலேட்டுமம், one giving rise to organic atrophy, fever, phlegm, voice affection, noise in the head and the ears, unconsciousness, sleeplessnees and high-coloured urine.
5. மூர்ச்சை சிலேட்டுமம், one with symptoms of unconsciousness, difficult breathing, fatigue, trembling, pain in the joints etc.
6. கட்க சிலேட்டுமம், one causing emaciation, cough, hard breathing, weakness, chest pain, nausea, atrophy of the neck, slender voice.
7. சுர சிலேட்டுமம், one developing fever, thirst, prespiration, weakness, of limbs, bodily pain etc.
8. மூகை சிலேட்டுமம், one with symptoms of raling about the throat and the chest, abnormal discharge of phlegm, fever and parched tongue with bitter taste.
9. துக்க சிலேட்டுமம், the one through excessive or constant grief and anxiety.
10. தொனி சிலேட்டுமம், the one affecting the throat (larynx) and the voice.
11. கோஷ சிலேட்டுமம்.
12. சுவேத சிலேட்டுமம்.
13. மகா சிலேட்டுமம்.
14. பேன சிலேட்டுமம்.
15. லாலா சிலேட்டுமம்.
16. வமன சிலேட்டுமம்.
17. க்ஷீண சிலேட்டுமம்.
18. சோஷ சிலேட்டுமம்.
19. உத்கார சிலேட்டுமம்.
20. இக்கா சிலேட்டுமம்

சிலேட்டும ரோக வகை 21 தமிழ் சித்த நூற்படி, as per Siddhars science, the 21 kinds are :—

1. வாத சிலேட்டுமம்.
2. பித்த சிலேட்டுமம்.
3. இரத்த சிலேட்டுமம்.
4. சய சிலேட்டுமம்.
5. சுர சிலேட்டுமம்.
6. காச சிலேட்டுமம்.
7. சுவாச சிலேட்டுமம்.
8. தீபன சிலேட்டுமம்.
9. மந்த சிலேட்டுமம்.
10. தொந்த சிலேட்டுமம்.
11. சன்னிபாத சிலேட்டுமம்.
12. அதிசார சிலேட்டுமம்.
13. சல சிலேட்டுமம்.
14. அக்கினி சிலேட்டுமம்.
15. முசல் சிலேட்டுமம்.
16. வெறி சிலேட்டுமம்.
17. விகார சிலேட்டுமம்.
18. விரண சிலேட்டுமம்.
19. தற்கந்த சிலேட்டுமம்.
20. சித்திய சிலேட்டுமம்.
21. பூத சிலேட்டுமம்.

NOTE. 1—Nos. 9—20 of No. I are not defined as also Nos 1—21 of No II for want of space. It is thought unnecessary to repeat them here, as they are all explained under its proper head, which see.

NOTE 2— Sleshma ordinarily means Kapha or phlegm. According to Siddha literature, it chiefly implies the functions of Thermotaxis or heat-regulation, but secondarily, the formation of the various fluids essential for the preservation of the body i.e, mucous, synovia etc., So the derangement of the essential form underlying Kapha gives rise at once to increased or morbid secretions and excretions.

**சிலேட்டும ரோகம்**, see சிலேட்டும வியாதி.

**சிலேட்டும ரோகாரி**, see சிலேட்டும் போக்கி.

**சிலேட்டும லிங்க நாசம்**, விழிகளின் மேல் பல்லி முட்டையைப் போல் வெண் சதையைப் பிறப்பித்து, எப்போதும் நிழலில் திரிவதற்கே விருப்பத்தை யுண்டாக்கும், a disease of the lens in which the pupil looks white, and the circular patch over it, like the lizard egg moves to and fro thereby inducing the patient to remain always in the shade.

**சிலேட்டும வதிகாரி**, பழமுண்ணிப் பாலை, see சிலேட்டும அதிகாரி.

**சிலேட்டும வபிசியாந்தம்**, விழி முழுமையும் தடிப் புண்டாகி தினவெடுத்து வீங்கி கண்ணில் பீளை படியும் ஓர் கண்ணோய், an eye disease affecting the whole eye, attended with heaviness, itching sensation, swelling and discharge of slimy mucous from the affected part—Ophthalmitis.

**சிலேட்டும வரி**, இருவேலி, see சிலேட்டும அரி.

**சிலேட்டும வர்த்தனி**, இலவு மரம், silk-cotton tree—Bombax malabarica.

**சிலேட்டும வலி**, கபத்தின் கோளாறினால் ஏற்படும் உடம்பு வலி, bodily pain due to phlegmatic condition of the body.

சிலேட்டும வலை, மேற்றோலுக்கும் கீழ்த்தோலுக்கும் நடுவில் வர்ண அணுக்களை அடக்கிக் கொண்டிருக்கும் ஓர் பாகம், the layer between the scarf skin and the true skin known as the stratum mucosum, composed of rounded or polygonal pigmented cells—Rete-mucosum. This is the inner most layer of the epidermis.

சிலேட்டும வாதக் கிராணி, உடம்பில் கபக் கோளாறினால் ஏற்படும் கழிச்சல், chronic diarrhoea as a result of the deranged phlegm in the system.

சிலேட்டும வாத சலமிழிவு, இதில் 5 வகையுண்டு. மூத்திரம் அதிகமாயும், மிக நாற்றமாயும், ருசி புளிப்பாயு மிருக்கும். இது அசாத்திய நோய், a form of diabetes consisting 5 kinds, in which the urine discharged is followed with a fetid smell and sour taste; and it is said to be incurable. The disease is said to be due to the concerted action of the humours—Vatha and Kapha of the system, c. f. சிலேட்டும சலமிழிவு.

சிலேட்டும வாத தீரன், சிலேட்டும வாதத்தை தீர்க்கும் சதகுப்பை, drug capable of curing phlegmatic rhumatism as dill-seed—Anethum sowa.

சிலேட்டும வாதத் தொந்தம், சிலேட்டும நாடியில் வாத நாடி சேர்ந் திருக்கப் பெற்ற சம்பந்தம். இதனால் நரம்பெல்லாம வலித்து, பிடரி வலி, கண் சொருகல், வாய் குழறல் உண்டாகும், the act of relative combination of the phlegmatic pulse with the vatha (wind) pulse. By such combination, may arise pain in the nape of the neck, rolling of the eye-ball, and faltering speech

சிலேட்டும வாந்தி, கபத்தோடு கூடிய வாந்தி, இதனால் வழுவழுப்பு, தடிப்பு, கோழையாகவும், நூலைப் போலவும் கபம் வெளிப்படல், சிறிது வீக்கம், சோம்பல் வாய் நீர், அரோசிகம், தூக்க மின்மை, தேகபாரிப்பு வாயினிப்பு, மார் அடித்தல் முதலிய குணங்க ளுண்டாகும், excited phlegm in the body and the symptoms are—vomiting attended with viscous, thick phlegm in the form of a string, little swelling, drowsiness, sweet taste in the mouth, secretions from the mouth (கோழை), disgust for food, sleeplessness, heaviness of the body etc. The vomitted matter will be slimy, thick with phlegmonous secretions, appearing oily and white.

சிலேட்டும விசர்ப்பி, உடம்பு முழுதும் சிவந்து மினு மினுப்பான வீக்கம் கண்டு, கபாதிக்கம் அல்லது கபக் கோளாறினால் உண்டாகும் ஓர் வகை கொப்புளம். இதனால், தினவு, சுரம் எரிச்சல் முதலியவை ஏற்படும், a form of eruption on the surface of the body due to the excited condition of phlegm or the deranged phlegmatic humour. It is marked by inflammation or local redness of the skin with a glossy surface. The eruptions so risen develop into blisters being attended with itching and burning sensation—Erysipelas.

NOTE.—In Allopathy, it is known as St. Anthony's fire; children of phlegmatic tendency are more liable to this disease than adults It generally runs its course in from 10 days to a fortnight after which the skin wri nkles and peels off. See also அக்கினி விசர்ப்பி.

சிலேட்டும விஷ பாகன், வெண் கடம்பு, common cadamba—Anthrocephalus cadamba.

சிலேட்டும விதக்தம், பார்வைக்கு வஸ்துக்கள் வெண்ணிறமாகத் தோற்றுதல், பகல் தவிர இரவில் பார்க்க முடியாமை ஆகிய விக் குணங்களைக் காட்டுமோர் கண்ணோய், an eye disease in which the objects around appear white when looked at, and the patient cannot see in the night, but only in the day; night-blindness—Nyctalopia.

சிலேட்டும வித்திரதிக் கட்டி, கபக் கோளாறினால் தினவு, வலியோடு கூடிய ஓர் வகை வித்திரதிக் கட்டி. இது மெதுவாகப் பழுதுடையும். இதனால் வலி அருசி, கொட்டாவி, உடம்பு பாரிப்பு முதலிய குணங்கள் ஏற்படும், a deep-seated abscess internal or external due to the deranged condition of phlegmatic humour with itching sensation, followed by excruciating pain. The symptoms are-tastelessness, yawning, swelling etc.

சிலேட்டும வியாதி, கபத்தினால் ஏற்பட்ட நோய். மூலத்தில் அக்கினி மிகுதியாகி கபாலத்தைப் பற்றி, அதனால் இரத்தம் வற்றி, தாது கெட்டு, நெஞ்சில் கபம் கட்டி, இருமலையும், இளைப்பையும் உண்டாக்கும், phlegmatic diseases in common due to excess

of heat in the region of the sacral plexus, and its distribution over or comunication with the cerebral system. It is marked by diminution of blood, vitiation of semen, collection of phlegm in the chest, cough, fatigue etc; 2 பொதுவாக காச நோய், a general term for asthma.

சிலேட்டும விரணம், அடங்காத நிலையையும் ஓரங்களில் தடித்தும், பரவியும் காணும் ஓர் விரணம். அன்றியும், கனறியும் ஆழமும் வாய்ந்து, பார்ப்பதற்கு சாம்பல் நிறமும், கடினத் தன்மையும், வலியோடு கூடியதுமா யிருக்கும். இதன் சீழ் வெண்மையாயும் குளிர்ச்சியாயு மிருக்கும், an ulcer or wound which appears to be raised and extended around its margin being followed by an irresistable itching sensation. Moreover it is thick and compact in its depth, grey in colour and slighly painful. The slimy secretion will be found cold and white.

சிலேட்டும வீடு. குறிஞ்சி நிலம் என்ற மலைப் பூமி. சாதாரணமாக மலைப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு சிலேட்டும நோய்கள் வருவது சகஜம். ஆகவே, சிலேட்டுமத்திற்கு உறைவிடம் என்று பெயராயிற்று, mountainous or hilly regions,—the principal seat of phlegmatic tendency. It is so called because the climatic conditions of this region brings on phlegmatic diseases to the inhabitants of those places.

சிலேட்டும வெண் குட்டம், தும்பை மலரைப் போல் வெண்மையாகவும், நெஞ்சம் தடித்து இங்குமங்கும் பரவியும், உடம்பில் வெடிப்பும் வீக்கமும், நமைச்சலும் உண்டாகும். இது மீத் தோலுக்கு அடியிலுள்ள வர்ண அணுக்கள் குறைவினால் உண்டாகும். இரத்த மாமிச மேதோதாதுக்களைப் பற்றும் போது கண்ணில் பல நிறமுண்டாகும், a disease of the skin due to the lack of normal pigmented cells under the epidermis. It is marked by abnormal white patches (as white as the leucas flower) raised and sometimes swelled. When it extends to the marrow of the bones, it may give rise to discolouration of the eyes—Leucoderma.

NOTE.—It may be either congenital or acquired; the former is known as leucoderma, and the latter as vitiligo.

சிலேட்டும வெப்பு, சிலேட்டும் மாறிக்கத்தினால் உடம்பிற் காணும் சூடு, excess of heat in the system due to the derangement of phlegm (humour).

சிலேட்டும வெழுச்சி, கபாதிக்கத்தினால் தித்திப்பு சுவையேற்படும், the aggravated condition of the phlegmatic humour giving rise to sweet taste.

சிலேட்டும வெள்ளை, ஓர் வெள்ளை நோய், இந்நோய்க்கு வெண்காரத்தை பொரித்து பின்பு பொடித்து, ஏழு பங்காக்கி ஏழு பொழுது தண்ணீர் நோய் நீக்கும், leucorrhoea or whites. The recipe prescribed for this is—roasted alum is powdered and the quantity is divided into 7 parts to be taken internally in doses. (of course taken in water), see சிலேட்டும சிர்க்கர ரோகம்.

சிலேட்டும வெள்ளை ரோகம், பெண்களுக்கு இரத்தம் பிண நாற்றத்துடன் வெண்மையாகவும், சிறைப் பேறும் அல்குலின் வழியாயும், கருப்பை வழியாயும் வெளியாகும் ஓர் நோய். இது சிலேட்டுமக் கூறினால் வெள்ளை ஒழுக்குடன் மாதவிடாயும் சேர்ந்து காணும், a whitish, viscid, fetid discharge from the female vagina and the uterus along with the menses due to the phlegmatic humour.

NOTE.—It arises from the congestion of the vagina and the uterine cavity, sometimes assuming a glairy appearance. It is common in women among richer classes, leading a luxurious life without physical exercise, See சிலேட்டும சிர்க்கர ரோகம்.

சிலேட்டுமா சுமரி ரோகம், சிலேட்டும அசுமரி நோய், நீரடைப்பினால் அடிவயிறு கனத்து நோவுண்டாகி, சிலேட்டும மாறிக்கத்தினால் சிவப்பு அல்லது வெண்மையாக மூத்திரம் கஷ்டத்துடன் இறங்குதல், stricture of urine attended with the discharge of white or red-coloured urine with much difficulty due to obstruction in the urethral passage.

சிலேட்டு மாதிசாரம், see சிலேஷ் மாதிசாரம்.

சிலேட்டு மாசிஷம், கபாதிக்கத்தினால் ஆசனவாயிற் காணும் மூலம், an inflamed tumour or hemorrholds at the verge of the anus.

சிலேஷகம், மூட்டுகளை பொருந்த வைத்தல், that which keeps the joints intact.

சிலேஷ்ம இரத்த பித்தம், இருதயத்தி லிருந்து வர்ணம் மாறி வெளிப்பட்டு வந்த இரத்தம் சிலேட்டுமத் தோடு கலந்து வெண்மையாகவும், வழு வழுப்பாயும் இருக்கும் ஓர் வகை இரத்த பித்த நோய், hemorrhage originating from the heart due to the aggravated condition of bile combined

with phlegm. The altered blood will be found whitish in colour and viscus.

சிலேஷ்மக் கபம், உடம்பின் தாதுக்களை ஒன்றுபடுத்தும் தன்மை வாய்ந்த சிலேட்டும வகை ஏழில் ஒன்று, one of the seven kinds of phlegm uniting the different elements of the body.

சிலேஷ்ம சுபாவம், உடம்பில் இரத்தங் குறைந்த காலங்களில், கபமே இரத்தமாக மாறி உடம்பை போஷிக்குந் தன்மையது. அன்றியும், கணு, முட்டி முதலியவைகளை நீட்டவும், முடக்கவும், வறட்சி யடையாமல் பசைபாகவே இருக்கும்படி உபயோகமாகும் தன்மை வாய்ந்தது, the nature of phlegm which is capable of turning itself into blood, when the latter is found insufficient in supply. It lends nutrition to the body; and it not only facilitates the free movement of the limbs and joints, but also lubricates them. See சிலேட்டுமக் கூறு.

சிலேஷ்ம திமிரம், பார்வையைக் கெடுக்கும் ஓர் கண்ணோய், an eye disease affecting the vision—Amaurosis.

சிலேஷ்ம தேகக் கூறு, see சிலேட்டுமக் கூறு.

சிலேஷ்ம தேகம், see சிலேட்டும சரீரம்.

சிலேஷ்மத் தலைவலி, கபத்தின் கோளாறு களினால் ஏற்படும் ஓர் வகைத் தலை வலி. இதில் உண்ணாக்கிலும், தொண்டையிலும், சளி அடைப்பது போல் தோன்றி, குளிரும், தலை பாரமும் கண்டு, தலை திருப்ப முடியாமல் முகமும், கண்ணும் வீங்கி அல்லது அதைத்துக் காணும், a kind of head ache in which the palate and the throat seem to be covered with a coat of sticky mucous, with a feeling of cold and heaviness of head, which cannot be turned about. The face and the eyes look swollen and sometimes flabby. It is due to the derangement of phlegm in the system.

சிலேஷ்ம நாசனி, கார்போக அரிசி, hazel-leaved psoralea—Psoralea corylifolia; 2. கக்கரி, cucumber; 3. மரா மரம், flowering tree—Eugenia racemosa; 4. நறுந்தாளி, fragrant laldanah—Thomaes genus.

சிலேஷ்ம நாரபனி, மருவகம், a fragrant shrub—Ocymum caryophyllatum.

சிலேஷ்ம மலயோனி, மிக்க சீதளமும், வழு வழுப்பும், கமைச்சலு முள்ள பெண் குறி, female genital which is very cold and slimy with local itching sensation.

சிலேஷ்ம மாரணி, பவழ அறுகு, a red species of grass of the Cynodon genus.

சிலேஷ்ம வர்த்தனி, இலவு, silk-cotton tree—Bombax malabaricum.

சிலேஷ்ம வலிகாரி, பழமுண்ணிப் பாலை, a species of பாலை, a tree—Mimusops hexandrus.

சிலேஷ்ம விஷ பாகன், வெண் கடம்பு, white Indian oak—Barringtoina racemosa; 2. கடம்பு, common cadamba tree—Anthocephalus cadamba.

சிலேஷ்ம விஞசினி, ஆதொண்டை, ceylon caper—Capparis horrida.

சிலேஷ்மாதி, நில வேம்பு, ground neem—Justicia paniculata.

சிலேஷ்மாதிக்கம், உடம்பில் அதிகமாய் கபம் காணல். இது அநேக நோய்களுக்குக் காரணமாகும். இதனால் மந்தம், சோம்பல், உடம்பு கனதி, அதி மலம், செரியாமை, பாண்டு, ஊதை, காதொழுக்கு, குருக்கள் எழும்பல், அதி தூக்கம், வாயினிப்பு, தலை பாரம், அதி கொழுப்பு முதலிய குணம் குறிகளைக் காட்டும், excess of phlegm in the body. It gives rise to various diseases. The aggravated kapha (phlegm) causes also dullness of appetite, drowsiness, heaviness of body, increased quantity of stool, indigestion, dropsy, discharge from ear and nose, eruptions in the body, excess of sleep, sweet taste of the mouth, heaviness of the head, excess of fat in the system etc, see சிலேட்டும சரீரம்.

சிலேஷ் மாதிசாரம், சிலேட்டு மாதிசாரத்தினால் உணவு செரியாமல், அதனாற் காணும் அதி சாரக் கழிச்சல், அதாவது வயிற்றுப் போக்கு. இதனால் மலம் இளகி எண்ணெய் கலந்த தாகவும், அதிக வெண்மையாயும், பொறுத்து பொறுத்து வருவதாயும், கை காலும், வயிறும் கனத்து, அதிக நித்திரை, சோம்பல், அரோசிகம், உணவு வெறுப்பு முதலிய குணங்க ளுண்டாகும், diarrhoea caused through indigestion due to the derangement of phlegm (humour) in the system. By this, the feces is rendered loose, oily and white, followed by evacuations at intervals with phlegmatic secretions, heaviness of abdomen, excess of sleep or drowsiness, nausea, aversion to food etc.

சிலேஷ்மாதி மந்தம், கபாதிக்கத்தினால் வெள் விழி யெல்லாம் சுருங்கி, குழி விழுந்து, கருவிழி உயர்ந்து, உப்பி, அதில் தூசு படிந்ததுபோல் காணப் பட்டு, அதினின்று நீரொழுகி மூக்கின் பக்கம் புடைத்து, தினவு காணும் ஓர் கண்ணோய், a disease of the eyes arising from phlegmatic humour, in which the white of the eye is contracted and depressed, while the iris appear prominently raised; and all objects seem to be full of dust—Ophthalmia. It is marked by swelling with slight congestion, and discharges with itching sensation.

சிலேஷ் மோஷ்டம், உதட்டில் வலி வீக்கம் கண்டு, சிறு கொப்புளங்களை எழுப்பும் ஓர் உதட்டு நோய், a disease of the lips, giving rise to small ulcers with pain and swelling.

சிலேஷ் மோதரம், ஓர் வகை மகோதரம். இதனால் வயிறு கனத்து, பருத்து கடினமா யிருக்கும். அன்றியும், வயிறு வீக்கம், இருமல், இளைப்பு, மூச்சுக் கஷ்டம், முதலிய குணங்களும் ஏற்படும், a kind of distended abdomen marked by heaviness and hard swelling, glossiness of the surface, cough, hard-breathing etc.

சிலேதகம், இருதயத் தானத்தி லிருக்கும் சிலேட்டுமத்தின் ஐந்து பகுதிகளில் ஒன்று, one of the five regions of the phlegmatic humour, found in the heart.

சிலேதம், செம் முருங்கை, red indian laburnum—Cassia marginata.

சிலேத்திமம், ஐவிரலி, bryony—Bryonia laciniosa.

சிலேத்துமம், see சிலேட்டுமம்.

சிலேயம், மலையில் விளையும் மூலிகை, தாதுப் பொருள் முதலியன, herbs, minerals etc obtained from a mountain; 2. கல்லைப் போற் கடினமா யுள்ளது, anything as hard as a stone.

சிலேற்பம், நறுவிலி மரம், sebesten tree—Oblique sebesta alias Cordia myxa.

சிலேற்பன நாசி, மருதடரிப் பூடு, an undentified plant probably of the Acacia genus capable of curing phlegmatic diseases; 2. திப்பிலி, long pepper—Piper longum.

சிலேற்பன நாடி, மூவகை நாடியி லொன்று. இதுவே ஐய நாடி. இதை மணிக் கட்டு சமீபம் மோதிர விரலைக் கொண்டு பார்ப்பது, one of the three pulse beats i, e, slow pulse felt at the wrist by the ring finger.

சிலேற்பனம், see சிலேட்டுமம்.

சிலேற்பனம் கட்டல், மரண வாயிலில் தொண் டையிற் காணும் சத்தம், death-rattle affecting the throat

சிலேற்பனை, see சிலேற்பனம்.

சிலேற்பின் பால், தேங்காய்ப் பால், milky juice of cocoanut; cocoanut milk.

சிலை, சிலை யுஞ்சை, sirissa tree—Albizzia odaratissima; 2 சிலை வாகை, stone sirrissa—Albizzia stipulata; 3. கல், stone 4. கருங்கல், granite; 5. பாறை, rock; 6. குது பாஷாணம், a kind of native arsenic; 7. மலை, mountain; 8. மனோசிலை, bisulphide of arsenic — Arsenicum rubrum; 9. புண்புரை, a sore or wound or ulcer; 10. புண்ணின் உட்டுளை, sinus of an ulcer or abscess; 11 உரல், mortar; 12. சிலை வாகை, white cutch—Acacia suma; 13. சிரே, Polyalthia fragrans alias Polaylthia longifolia; 14. மருந்தரை க்கும் கலுவக் கல், a stone mortar for grinding medicine.

சிலைக் கல், செங்கற் கட்டம், overburnt brick: 2. உருகிய கல், molten rock of the volcanic regions; 3. காந்த சிலை black load stone; 4. சுரற் கல் gall stone; 5. சிலா காகக் கல், zinc blend; zinc ore; 6. விக்கிரகக் கல், இது அநேக வகை கற்களில் கலந்து காணும், horn blend used for making images and ornaments for public buildings. It is an important constituent of many igneous rocks such as, synite, diorite etc.,

சிலைக் கல்லிச்சி, கற்பாங் குள்ள நிலங்களில் முளைக்கும் இச்சி, yellow-barked fig found grown in stony soil — Ficus tsiela.

சிலைக் கல்லிச்சி மரம், கல்லிச்சி மரம், stone stricta — Ficus scandens.

NOTE.— There is also another variety of the same name known as மலை இச்சி, mountain tsiela or willow fig — Ficus retusa.

சிலைக் காரம், வெடி காரம், caustic potash; Perhaps, it is so called because the whole plant when incinerated, yields a considerable quantity of potash; 2, செந் நாயுருவி, a red variety of நாயுருவி, Indian burr—Achyranthes aspera.

சிலைக் கால, முடவாட்டுக் கால், இது உபரசச் சரக்கி லொன்று, an unknown stone which is classified as one of the 120 kinds of natural substances in Tamil Siddha medicine.

சிலைக் கால் தாய்மை, சிதாங்க பாஷாணம், a kind of native arsenic.

சிலைக் காறி, அஞ்சன பாஷாணம், one of the 32 kinds of mineral poison.

சிலைக்குள் தீட்டு, கல் மதம், see சிலை பொழுக்கு.

சிலைக் கெந்தி, see சக்கிர வேதி; 2. கெந்தகம் சேர்ந்த கல், sulphur ore such as galena (pbs,), cinnabar (HGS), pyrites ($FE_2S_3$), gypsum $CASO_4$, heavy spar ($BASO_4$) etc., These are the metallic ores containing sulphur in the form of sulphides.

NOTE — The two main types of native sulphur are — (1) The solfataric type found in lava of the volcanic regions; 2. the gypsum type found liberated from gypsum.

சிலைச் சத்து, சிலா சத்து, fossil exudation.

சிலை சுரோணிதம், கல் மதம், bitumen.

சிலைச் சூதம், சிலாஞ்சனக் கல், suphate of antimony.

சிலைச் செம்மண், கற்காவி, red ochre.

சிலைச் சென்னியிற் றிரண்டதாது, மலையினுச்சியி லிருந்து உற்பத்தியான தாது பாஷாணம், a mineral poison formed at the top of the mountain, see சிலாமத பாஷாணம்.

சிலைச் சோணிதம், see சிலைச் சுரோணிதம்.

சிலைத் தண்ணீர், இரணத்தி னின்று வடியும் நீர், a thin and colourless discharge issuing out from wounds etc.

சிலைத் தயிலம், பாறை வெண்ணெய், rock-oil; 2. உதகம், mineral water or liquid on the top of hills; 3. புரைகளின் வழியாக இரத்தம் முதலியவைகளை ஒழுகச் செய்யும் துட்ட விரணங்களுக் கிடும் மருந்துத் தைலம், a medicated oil or ointment used chiefly for putrified sores or ulcers with sinuses; 2. மண் தைலம், bitumen.

NOTE-Petroleum or fluid bitumen, Naptha, Kerosine oil which are finer varieties come under this class. Rock oils are liquids formed by the low decomposition of organic remains, animal or vegetable or both combined.

சிலைத் தாசி, see சாளக் கிராமம்.

சிலைத் தாது, சிலாமத பாஷாணம், a kind of native arsenic.

சிலைத் தீட்டு, see சிலைச் சுரோணிதம்,

சிலைத் தூமம், see சிலைச் சுரோணிதம்.

சிலைத் தைலம் see சிலைத் தயிலம்; 2. மண் தயிலம், earth oil or crude oil. It is a semi-liquid exuding spontaneously from the rocks in volcanic regions; and it collects on the surface of certain lakes. It can be obtained in every bazaar. Tamil veidyans (doctors) use it as an external application in rheumatic complaints, as also in cases of epilepsy, hysteria and palsy. It is useful in all skin diseases, especially of a parasitic origin.

சிலை நஞ்சு, கல் மதம், bitumen.

சிலை நாகம், குடாரிக் கல், ஓர் உபரசச் சரக்கு, a mineral stone—one of the 120 kinds of natural substances classified according to Tamil Siddha system of medicine; 2. ஓர் வகைப் பாஷாணம், a kind of arsenic.

சிலை நார், கல் நார், asbestos.

சிலை நிறக்கல், மாமிசச் சிலை, a black mineral stone supposed to be capable of dissolving meat or flesh and convert it into a liquid.

சிலைநீர்க் கல், see சிலை நிறக்கல்.

சிலைநீர் சொரிதல், புண் புரையி னின்று நீர் வடிதல், a thin watery acrid humour or discharge from sinus of sores, wounds, ulcers etc—Ichor.

சிலைப்பலா, கற்பலா, stone jack—Hymenodictyon obovatum.

சிலைப் பாசி, பாறைகளின் மேற் காணும் புல்லுருவி இனத்தைச் சேர்ந்தது, rock-moss or lichen or order of cryptogenic plant—Lichen rotundatus

சிலைப் புல், மலைப் புல்; mountain grass.

சிலை மண், கருப்பு சித்திர மூலம், black-flowered leadwort—Plumbago zeylanica.

சிலைமா, மாக் கல்லு, steatite or Spanish chalk; soap-stone.

சிலைமான் கல், ஓர் வகை இரத்தினம், இதற்கு சிலைமான் கல் லெனவும் ஒரு பெயர். ஆயினும், இரத்தினத்திற்கும், இதற்கும் பேதம் உண்டு, இது பலவித நிறங்களும், ஒளியும், மங்கலும் கலந்ததாக வுள்ளது. இது சாதாரணமாய் மேகவர்ணக் கற்க ளுள்ள எரிமலைக் குடாரி லுள்

ளும் படிந்து உள்ளது. நமது நாட்டில் நருமதை ஆற்றோரங்களிற் கிடைக்கும். ஆனால், ஜப்பான் தேசத்திலிருந்து வருவது தான் சிகப்பும், வெள்ளை கோடுகளும் வாய்ந்ததும், உயர்தரமுமானது, agate or Solomon stone. It should not be confounded with the Tamil lapidaries or mocha stone, as the former is a variegated form of silica with different colours and with opaque and translucent layer alternating. It is commonly found lining the cavities in basalt and also volcanic rocks. In India, it is obtained on the banks of the river Narbada. Those imported from Japan are much admired, being of a red colour with white veins.

NOTE—Agates are an aggregate fossil consisting of chalcedony, cornelian, jasper. quartz or flint; whereas the Mocha stone is a mere variety of chalcedony.

சிலைமூலக் காரம், சீனக் காரம், alum stone.

சிலை மெழுகு, தலைச் சுருடு வள்ளி, Indian birth-wort—Aristolochia indica.

சிலை யாவி, கல்நார், asbestos, see சிலைவித்து.

சிலை யிரத்தம், see சிலைச் சுரோணிதம்.

சிலை யிராசன், see சிலை ராசன்

சிலையில் திரண்ட தாது, see சிலா மத பாஷாணம்.

சிலை யுடம்பு, அடிக்கடி புண், கட்டி இவைகள் எழும்புதற் குரிய உடம்பின் கூறு, body predisposed to skin diseases, such as eruptions, boil etc.

சிலை யுருக்குக் கல், செங்கல், brick ; 2. உருக்குக் கல், over burnt brick often found in kilns.

சிலை யூஞ்சில், ஓர் ஊஞ்சல், white cutch—Acacia suma ; 2. சிலை யூஞ்சல் albizzia procera ; 3. காட்டுத் துரிஞ்சில், fragrant-acacia—Albizzia odorata.

சிலை யூஞ்சை, see சிலை யூஞ்சில்.

சிலை யெண்ணெய், இரணங்களுக் கிடும் மருந்தெண்ணெய், medicated oil used externally for wounds, see சிலைத் தைலம்

சிலை யொழுக்கு, கல் மதம், bitumen exuding from rocks during summer.

சிலை யோடுதல், புரை யோடுதல், to form sinuses in the flesh to burrow under the skin, as in carbuncle.

சிலையோடு புண், புரை யோடும் புண், a deep-seated sore ; 2, பவுத்திரம், internal fistula.

சிலை யோட்டம், புரை யோடுகை, formation of sinuses in a wound or abscess.

சிலை ரத்தம் see சிலை யொழுக்கு.

சிலை ரவி, see சிலையாவி.

சிலை ராசன், கற்களுள் மேன்மை பொருந்திய வைரம், diamond—a superior stone (lit) king of stones.

சிலை லங்கம், அஞ்சன பாஷாணம், a kind of native arsenic ; 2. வங்கக் கல், lead sulphide—Galena.

சிலை வயிரம், see சிலை ராசன்.

சிலை வாகை, பீலி வாகை, stipulate sirissa (mollis)—Albizzia stipulalata alias A. procera alias A. julibrissin (mollis).

சிலை வாழை, கல் வாழை, stone plantain—Canna indica.

சிலை வித்து, கல் நார், see சிலை யாவி.

சிலோசம், அகில் கட்டை, agilwood ; 2. அகில் மரம், zylaloo—Agallocha.

சிலோச்சியம், மலை, hill, mountain.

சிலோடம், பால், milk ; 2. பலா; jack fruit.

சிலோதரி, யூகிமுனி நூலில் சொல்லிய படி செய்யப் பட்ட எல்லா வித சுரங்களுக்குங் கொடுக்கும் ஓர் மாத்திரை, a medicinal pill prepared, according to the process laid down in Yoogimuni works on medicine, for all kinds of fever.

சிலோதரிக் குளிகை, see சிலோதரி.

சிலோதாரி, see சிலோதரி.

சிலோத்பவம், ஓர் வகைச் சந்தனம், a species of sandalwood ; 2. மலையிற் பிறக்கும் உலோக வகை அல்லது மருந்து மூலிகை, medicine or minerals and herbs found on mountains.

சிலோவாரிப் பூடு, மூக்கத்தாரி, a kind of brinjal—Solanum genus.

சில், மூக்குக் கண்ணாடி, spectacles ; 2. வெண்காரம், borax ; 3. மனோசிலை, bisulphide of arsenic—Arsenicum rubrum, see உசில் 4. கடற்சில், seed of a sea plant ; 5. முழங்காற் சில், knee-cap.

சில்கோஜா, பருப்பு, பாரசீகத்தில் விளையும் பருப்பு, a pulse of Persia.

சில்பத வுணவு, கறி யுப்பு, common salt, 2. குறைவான உணவு, insufficient food.

சில்பி, ஓர் கடல் மீன், a sea-fish—Holacanthus imperator.

சில் மிஷம், see சில் விஷம்.

சில் மூக்கு, see சில்லி மூக்கு.

சில்லகா, பூலாக் கிழங்கு, black honey shrub—Phyllanthus multiflorus.

சில்லகி, தேற்றான், water clearing nut tree—Strychnos potatorum.

சில்லம், தொட்டாற் சுருங்கி, sensitive plant, touch-me-not—Mimosa genus.

சில்லட்டைக் கடி, சிறிய அட்டைக்கடி விஷம், a poisonous leech-bite.

சில்ல பொல்லம், பல துண்டுகளாய் உடைந்தது, that which is broken into several pieces.

சில்லம் எட்டி, nux vomica—Strychnos nux vomica; 2. தேற்று, see சில்லகி; 3. சிறு துண்டுகள், small pieces; 4. திலகை, tiger's milk spurge—Excoecaria crenulata.

சில் லாங்கம், தீவதாட்சி அதாவது முந்திரிப் பழம், cashew fruit — Anacardium occidentale.

சில்லரி, பருக்கைக் கல், gravel stone.

சில்லரை விஷம், see சில் விஷம்.

சில்லறை, கொடிய வியாதிகளி லுண்டாகும் மரணம், death due to malignant or violent attack of diseases.

சில்லாடை, பன்னாடை, இது வடி கட்ட உதவும், a fibrous net-like covering about the base of palmyra and cocoanut leaf-stalks. It is used for filtering liquids.

சில்லாட்டை, see சில்லாடை.

சில்லாந்தசி, see சிறு குமிழ்.

சில்லான், ஓணான், lizard; bloodsucker; ஓர் குருவி, a small bird; 3. கறையான் white-ant.

சில்லி, கண்ணறை, cell; 2. புண் துவாரம், sinus of a wound; 3. ஓட்டாஞ் சில்லி, a piece of broken tile; 4. see சிள் வண்டு; 5. சிறு கீரை, pigs greens—Amaranthus campestris; 6. சவ்வு, membrane; 7. முழங் கால் எலும்பு, knee-cap—Patella.

சில்லி கரண்டி, மருந்து வடிகட்டுவதற்காக துளை விட்ட அகப்பை, a wooden or iron spoon with small holes for filtering; 2. சல்லி யகப்பை, a colander used in cookery.

சில்லிகா தபம், தொண்டையில் சவ்வு ஏற் பட்டுக் காணும் ஓர் வகை அழற்சி, an inflammatory disease of the throat with the formation of a false membrane —Diphtheria.

சில்லி குத்திய வோடு, துவாரங்க ளிட்ட ஓட்டுப் பாளம், a piece of tile with perforated holes.

சில்லிகை, சிள் வண்டு, cricket; 2. சூரிய கிரணம், sun's rays.

சில்லிக் காது, தொளை யிட்ட காது, bored lobe of the ear.

சில்லி சாகம், சிறு கீரை, see சில்லி.

சில் லிடல், உடம்பு சில் லென்று குளிர்ச்சி யடைதல், body becoming cold and chill as a symptom of a disease; 2. அதி வியர்வையால் திடீரென உடம்பு சில்லென்று போதல், being overwhelmed with coldness or shivering as in cases of fever, cholera, apoplexy etc due to excess of perspiration; 3. ஓட்டுத் துண்டை வைத்து மூடல், (உ-ம்) சில்லிட்டு சீலை மண் செய்தல், to cover the lid of a vessel with a broken tile piece, before it is luted or otherwise prepared for purposes of calcination.

சில் லிடுதல், see சில் லிடல்.

சில்லிட்டு சீலை செய்தல், மருந்திட்ட பாண் டத்தை ஓடு வைத்து மூடிய பின் சீலை மண் செய்தல், to lute a vessel containing medicine by covering the lid with a piece of tile. See சில் லிடல்.

சில்லிட்டுப் போதல், உடம்பு முழுமையும் திடீரென குளிர்ச்சி யடைந்து விடல். இது ஒரு மரணக் குறி, losing the ordinary warmth of the body which becomes suddenly chill, as a sign of death.

சில்லிதம், தேற்றான், see சில்லகி.

சில்லி பூத்தல், கண் கூசல், to be dazzled, as eyes.

சில்லிப் பலம், இலேமேற் காய், bridal couch plant—Hymenodictyon obovatum.

சில்லி மூக்கு, இரத்தம் வடியும் மூக்கு, a bleeding nose; 2. மூக்கில் இரத்தம் வரும் நோய், epistaxis; 3. மூக்கு நுனி, tip of the nose.

சில்லிமூக் குடைதல், மூக்கில் இரத்தம் வரு தல், bleeding from the nose.

சில்லி யகப்பை, துவார மிட்ட அகப்பை. இது சமயலில் உதவும், a colander used in cookery; 2. சல்லடைக் கண்களைப் போல் சிறு சிறு கண்களை யுடைய கரண்டி. இது வடி கட்ட வுதவும், a ladle with sieve-like holes used for straining.

சில்லி யடை, சல்லடை, sieve.

சில்லி யடைத்தல், see சில் லிடல்.

சில்லி யெடுத்தல், முடமாக்கல், to break the leg by taking off the knee-cap, said by person in fury.

சில்லி ரத்த பாகம், விம்மிப் பொசியும் இரத்தம், profuse bleeding.

சில்லி ரத்தம், உறைந்த இரத்தம், coagulated blood; 2. வடியும் இரத்தம், oozing blood.

சில்லு, இரிக்கி, west Indian filbert–Entada scandens; 2. புதிய ஓடு, broken piece of a new pot; 3. முழங்காற் சில், knee-cap; 4. சக்கரம், disc.

சில்லு கருப்பட்டி, பில்லை பில்லையாக வார்த்த வெல்லம், jaggery moulded out in round pieces.

சில்லு செய்தல், see சில்லு போடல்.

சில்லுண்டி, சிற்றுண்டி, tiffin, luncheon.

சில் லுண்டி, சிறு குழந்தை, infant.

சில்லு போடல், ஓடிட்டு சில்லை மண் செய்தல், see சில்லிடல்.

சில் லுப்பு, கல்லுப்பு, crystallised salt.

சில்லு மூடல், see சில்லிடல்.

சில்லுமூடி சீலை செய்தல், see சில்லிட்டு சிலை செய்தல்.

சில்லூறு, ஓர் பூச்சி, a kind of insect?

சில் லெலும்பு, முழங்காற் சில் எலும்பு, knee-cap bone.

சில் லெனல், ரோகியின் உடம்பு திடீரென குளிர்ச்சி யடைதல், body suddenly becoming chill as in patients; 2. கை கால் சில்லிடல். இது ஓர் மரணக் குறி, chilliness of the extremeties as a symptom of death, as in cholera, see சில்லிடல்.

சில்லை, சிறு கிலுப்பை, rattle wort—Crotalaria pulcherrima; 2. பிரண்டை, adamant creeper; 3. நீர்ப் பறவை, an acquatic bird; 4 ஓர் வகைச் சிவல், a kind of partridge.

சில் வண்டு, சுவர்க் கோழி a species of cricket, strictly speaking, it is a betle (Cicada) found in சில tree.

சில்வ ரோகம், நகக் கண்களி லுண்டாகும் வீக்கம். இதற்கு பல பெயர் விரற் சுற்று, நகச் சுற்று, இது நகத்தின் வேரைக் கெடுத்து அந்த நகம் விழுவதற்கு முன்னமே மற்றொரு நகத்தை புதிப்பிக்கும். அதுதான் உப நகம்; உகிர்ச் சுற்று, whitlow. It is a swelling of the nail-bed. It is known by several names—felon, panaris etc. It is marked by necrosis confined to the structures and the periosteum and new formation of nail in its place—Paronychia.

சில் வாய், கடை வாய், corners of the mouth.

சில் வாரி, செவ் வலரி, red oleander—Nerium odorum (roseum).

சில் விஷக்கடி, அற்ப விஷமுடைய வண்டு முதலிய பிராணிகளினால் ஏற்பட்ட கடி, bite of poisonous animals or insects of a mild nature or ones of a slight venom.

சில் விஷம், அற்ப விஷம், non virulent poison; slight venom; 2. அற்ப விஷப் பிராணி, animal or insect of a slight venom; 3. வண்டு கடியால் ஏற்பட்ட விஷம், poisonous bite of a beetle.

சிவகம், சாதிக்காய், nutmeg—Myristica fragrans; 2. காய்ச் சீரகம், wild cumin—Vernonia anthelmintica; 3. சீரகம், cumin seed—Cuminum cyminum; 4. பேரிலாழம், the bile of a cobra; 5. இலந்தை, Indian plum—Zizyphus jujube.

சிவகயம், பன்னீர் மரம், dew flower—Guettarda speciosa.

சிவ கரந்தை சுரக் கரந்தை, இது தஞ்சாவூர், திருவாரூர், விஜயபுரத்திலும், சாதாரணமாய் வயல்களிலும் முளையும். இதை சாதாரணமாக சுரம், சரும ரோகங்களுக் குபயோகிப்பதுண்டு, அன்றியும், விந்து நஷ்டம், வாதாதி தொந்தம், அக்கினி மந்தம் இவைகளை நீக்கி உடம்பிற்கு சடராக்கினியையும், அழகையும் உண்டாக்கும், sweet basil; fever toolsy or ceylon toolsy—Sphoeranthus zeylanica alias S. amaranthoides. It is found grown in rice-fields and used in fever and cutaneous diseases. Moreover it is prescribed in cases of loss of semen, digestive troubles, rheumatic affections thus promoting hunger and bodily lustre or beauty.

சிவ கரந்தைச் சத்து, சிவகரந்தைப் பூண்டை உலர்த்தி எரித்து சாம்பலாக்கி, தண்ணீரில் போட்டுக் கரைத்து, மூன்று நாள் அடிக்கடி குழப்பி வைத்து, பிறகு எடுத்து தெளி வடித்து, அதை குழம்பு பதமாகக் காய்ச்சி, இறுகும் பதத்தில் இறக்கி ஆறிய பின், இருக்கும் உப்பே சிவ கரந்தைச் சத்தாம். இச் சத்து இரத்த சம்பந்தமான ரோய் களுக் குபயோகப்படும், extract or essence of sweet basil, obtained by burning the plant and reducing it into ashes. It is then mixed with water and made into a solution by keeping it stirred up frequently for three days. The thick solution is then boiled up, till it is hardened and then taken out and dried. It is a salt used in cases of blood diseases.

NOTE—This plant should not be confounded with (கொட்டைக் கரந்தை) Indian globe-thistle—Sphoeranthus indicus, which is often used as a substitute. It is a great mistake for, they entirely differ in their properties. This salt also forms an essential ingredient in the preparation of several medicines.

சிவ கழியான், செம் பருத்தி, red cotton—Gossypium arboreum.

சிவ கன்னி, கல்லுப்பு, sea-salt.

சிவகாசம், பன்னீர், see சிவ கயம்.

சிவ காமப்பால், எருக்கம் பால், madar milk.

சிவகாமி, கௌரி பாஷாணம், a prepared arsenic.

சிவகாமிகம், சிவகரந்தை, which see.

சிவ கிராந்தி, see சிவ கரந்தை.

சிவதுகு லாடன வித்தை, 15, 20 வருடத்திய அல்லது அதற்கு மேற் கொண்ட இருமல். அல்லது சுவாச நோய்களுக்கு, புகையிட்டுத் தீர்க்கும் ஓர் முறை, a method of treatment by fumigation, for pulmonary diseases of and over 15-20 years standing.

சிவ குளிகை, குழந்தைகளின் தோஷ நோய்களுக்காகவும், கிரகக் கோளாறுக்கும், அகஸ்தியர் முறைப்படி கொடுக்கும் ஓர் மாத்திரை, a pill prescribed by Agastya for morbific diathesis and other diseases due to planetary influences.

சிவ கூர்ச்சம், பஞ்ச கவியம், அதாவது பசுவின் பால், தயிர், கோமயம், சாணி, வெண்ணெய், a mixture of the five products from the cow, viz—milk, curd, urine, dung, and butter.

சிவக்கக் காய்ச்சல், சிவந்த பதமாய்க் காய்ச்சுதல், to boil moderately to a pink colour; 2. பழுக்கக் காய்ச்சல், heating to a red-hot condition; 3. சிவக்கும் படி காய்ச்சுதல், to boil down as milk etc, so as to make it appear reddish in colour; 4. பதமாகக் காய்ச்சல், to heat to a moderate degree.

சிவக்கக் காய்ந்தது, பழுப் போன்றது, anything heated to a red-hot condition.

சிவக் கருந்தி, ஓர் மூலி a plant, see சிவ கரந்தை.

சிவக்க வறுத்தல், காய், வற்றல் முதலிய பண்டங்களை நெருப்புக் காட்டி வறுத்தல், frying fruit, dried fruits or other substance- ... ess.

சிவங்கம், விளாம் பட்டை, the bark of wood apple tree; 2. வெள்ளி லோத்திரம், the bark of wood-apple or lodhra tree.

சிவங்கி, see சிறுத்தை; 2. ஓர் மரம், an unknown tree?

சிவ சஞ்சீவி, கஸ்தூரி, musk; 2. சவாது, zebet; 3. புனுகு, civet.

சிவ சத்தி, துருசு, blue vitriol; 2. கடுக்காய், Indian gallnut 3. சூதம், mercury; 4. புலி, tiger; 5. சாதிலிங்கம், vermilion 6. சிவத்தி னின்று பிரியாத சத்தி, the Sakthi (universal Energy) merged in God Siva.

சிவசத்தி சொரூபம், துரிசு see சிவ சத்தி.

சிவசத்தி பதிர்ந்தான், தாமரை, lotus flower.

சிவசத்தி பற்பம், சாதி லிங்கம், vermilion.

சிவசத்தி யாசனம், புலி யாசனம், tiger's skin used by yogis for sitting during contemplation.

சிவ சத்தி வல்லி, கார்த்திகைக் கிழங்கு, November flower plant—Methonica superba.

சிவ சத்துவம், சிவத்தின் ஆற்றல், faculties of Siva.

சிவ சந்தன புட்பம், கிராம்பு, clove—Oleum caryophyllum.

சிவ சாதனம், உருத்திராட்சம், bracelet tree—Eleocarpus ganitrus.

சிவ சாதாக்கியம், சிவ தத்துவம் ஐந்தினுள் ஒன்று, one of the five faculties of Siva.

சிவ சாரம், ஓர் வகை யுப்பு. இதற்கு மாறானது சத்தியுப்பு, a secret salt or which is an alkaloid preparation opposed to, சத்தி சாரம், which see; 2. கருப் பிண்டத்தி லிருந்து தயாரிக்கும் ஓர் உப்பு, a salt extracted by a secret process from the foetus.

சிவ சாலம், அகஸ்தியர் செய்ததாகச் சொல்லப் பட்ட ஓர் மாந்திரீக நூல், a treatise or magic supposed to have been compiled by sage Agastya.

சிவ சிகிதம், சாதிக்காய், nutmeg—Myristica fragrans.

சிவ சித்தன், சூதம், mercury.

சிவசிவ போவம், பேரிலாமும், cashew nut tree—Anacardium occidentale. See சிவகம்.

சிவசிவா மரம், சவுக்கு, casuarina tree.

சிவ சொத்து, see சிவன் சொத்து.

சிவச்சி, சாதிக்காய், see சிவ சிகிதம்.

சிவச் சுண்ணம், முப்புச் சுண்ணம், the mystic three salts used in Alchemy.

சிவதகி, வெள்ளரி, cucumber—Cucumis sativus.

சிவ தகை, எழுத்தாணிப் பச்சிலை, style plant—Launea medicaulis.

சிவ தங்கை, see சிவதலை.

சிவதடி, see சிவதலி, ; 2, வெள்ளி, silver.

சிவ தத்துவம், விந்து, semen; 2. தத்துவம் ஐந்தினுள் ஒன்று, one of the 5 essential nature of Shiva; 2. சிவத்தின் ஐந்து தத்துவங்கள், அவையாவன-சுத்தவித்தை ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம், (*In Agama Philosophy*) the five degrees of development or attainment in the spiritual power derived from Shiva, as mentioned above.

சிவ தரு, see சிவதாரம்.

சிவதாகம், முருங்கை, drumstick tree—Pterocarpus moringa.

சிவதாகிதம், மாசிக்காய், nut gall oak—Quercus infectoria.

சிவதாசு, திருநாமப் பாலை, poon tree—Alstonia schoiaris, see சிராணவிருகவம்.

சிவ தாது, இரசம், mercury; 2. ஓர் கல், a stone.

சிவ தாரம், தேவதாரம், deodar—Erythroxylon monogynum.

சிவ தாரி, ஓர் வகை தேவதாரி, red cedar—Eleocarpus genus; 2. சிவாதாரி, cocaine plant—Eleocarpus coca.

சிவ தாரிகம், பாலை, milk tree—Dichopsis elliptica.

சிவ தும்பை, சிறு தும்பை, small leucas—Dyospyros glutinosa.

சிவ துரியம், மேலான அறிவுள்ள துரிய நிலை. (*In Agama Philosophy*) the highest degree in which the yogi attains entire quiescence.

சிவ துளசி, வெண் துளசி, white basil—Basilicum alba. See கருஞ்சாக் கோரை. It is opposed to விஷ்ணு துளசி, holy basil—Ocimum sanctum.

சிவதூசி, பாற் குறண்டி, milk coranday—Lepidagathis pungens.

சிவதை, பகன்றை, இதற்கு மலம் போக்கி யென்றும் பெயர். இவ்வேர் கடையில் சிறு துண்டுகளாக விற்கப்படும். 2-4, அங்குல நீளம், விரற் கனம், சிறிது வாசனையாயும், கிரு கிருப் புள்ளதாயு மிருக்கும், சாம்பல் வர்ணம் அல்லது கபில நிறம். இதன் சத்து, வேரில் அல்லது மேற் தோலில் இருக்கும். ஆகவே, வேரின் பட்டைதான் உபயோகப் படும், பேதியாகுங் குணமுண்டு, இது நுடுவே சாரவும், நுனியில் அவார முள்ளது, இரு பக்கங்களிலும் பிசின் படிந் திருக்கும், உட்புறம் வெண்மையா யிருக்கும். இதை சூரணித்து கல்லுப்புடன் கலந்து கொடுக்க பேதியாகும். இதைப் பாலில் போட்டு எரித்து, நிழலில் உலர்த்தி சூரணித்து, கடுக்காய் இரண்டு பங்கு சேர்த்துக் கொள்ள, ஆமம் கழன்று போம். அன்றியும், பைத்திய மேலிட்டு வெறி கொண்டு அபாயத்தை விளைவிக்கும் நோயாளிக்கு, வெறியின் வீரத்தை சமாசப்படுத்தி ஒருவாறு தெளிவை யுண்டாக்கும். இது இரு வகைப்படும் அவையாவன—1. வெள்ளைச் சிவதை, 2. கருஞ் சிவதை, இதில் கருப்பு சிவதை, எலிகடி விஷம், பித்தத்தினால் சேர்ந்த குன்மம் இவைகளைப் போக்கும். இதை கடுக்காயோடு சேர்த்துக் கொள்ள பாண்டு வகை அல்லது மகோதரம் போம். Indian jalap; turpeth root—Thomaea turpethum. It is a cathartic and a laxative. It is sold in bazaars. The turbith of commerce consists of the root and stem of the plant cut in short lengths, usually 2—4 inches, about fingers breadth; it has little or no smell, acrid taste, dull grey or brown colour. The principle (turpethin) lies in root and root-bark which are used medicinally as a purgative. It is light and porus in the centre; the ends coated with exuded resin; inside appears white. It is powdered and used with rock-salt as a purgative. Boiled with milk and then dried and pulverised, it is used with gall nut, twice in quantity for elimination of mucous from bowels. Moreover, it affords great relief to dangerous lunatics, as it moderates virulency of the disease. It consists of two kinds viz—white and black. The black variety is found useful in cases of rat-bite poison and dypepsia from bilions causes. Indian jalap with chebulic myrobalan is useful in dropsy.

NOTE—It is a good remedy against worms, a remover of phlegm, swellings of the limbs and diseases of the skin.

சிவதை சர்க்கரை, சிந்திற் சருக்கரை, which see.

சிவதை சுத்தி, சிவதையை பசும் பாலில் அவித்து எடுத்து உலர்த்தல், purification of jalap by boiling it in milk and then drying.

சிவதை லேகியம், சிவதையை ஆதியாகக் கொண்டு மற்ற கடைச் சரக்குகளோடு சேர்த்துத் தயாரிக்கும் இலேகியம். இது மல பந்தத்தைப் போக்கி அடிக்கடி மல சுத்தியாகும். குன்மத்தைப் போக்கும், an electuary prepared with jalap as a chief ingredient along with other bazaar drugs. It removes constipation by helping a free motion of bowels, and cures dyspepsia.

சிவதை வேர், மலம் போக்கி வேர். இதை சீமை சிவதைக்குப் பதிலாக உபயோகிக்கலாம், turbith root, see சிவதை. It is a substitute of British jalap and rhubarb.

சிவதை வேர்ச் சூரணம், பகன்றைச் சூரணம், Indian jalap powder.

சிவதோதிகம், திருநீற்றுப் பச்சை, holy ashes leaf—Ocimum basilicum.

சிவத்த மண், செம்மண், red mud; 2. காவி மண், red ochre.

சிவத்த முள்ளங்கி, see சிவப்பு முள்ளங்கி; 2. காசினி விதை, chicory seed—Chicoria endivia.

சிவத்தம், செம் முருங்கை, red Indian laburnum—Cassia marginata.

சிவத்தல், கோபித்தல், to be angry; 2. கண் சிவத்தல், reddening. as eyes by anger: 3. சிவப்பாகுதல், reddening.

சிவத் தாசி, செம் பருத்தி, Bengal cotton—Gossypium arboreum; 2. செம் பரத்தை, chinese rose-mallow—Hibiscus rosa-sinensis.

சிவத் தாசிகம், see சிவத்தாசி.

சிவத் தாட்டி, see சிவத்தாசி.

சிவத் தானம், வெற்றிலை, betel leaf.

சிவத்தி, சாதிலிங்கம், vermilion.

சிவத் திராவகம், கட்டு வகைத் திராவகம், an acid used for consolidating purposes. It is opposed to சத்தித் திராவகம், which see.

சிவத் திருமி, தான்றி மரம், devil's abode—Terminalia belerica.

சிவத்திருமம், see சிவத் துருமம்.

சிவத் துருமம், வில்வ மரம், bael tree—Crataeva religiosa (nurvala).

சிவந்திக் கருப்பூரம், இரச கற்பூரம், see சிவந்தி கற்பூரம்.

சிவநாதி யுப்பு, பூரணுதி யுப்பு, a prepared salt.

சிவநாபி வல்லி, நாபிக் கொடி, poison creeper—Rawwolfia serpentina. See சவுக்கைப் பொரி.

சிவநிம்பம், see சிவனார் வேம்பு.

சிவநீலி, நரையைப் போக்கு விக்கு மோர் மூலி, an unknown drug capable of turning grey hairs into black.

சிவ நீறு, முப்பு; இது குருவருளால் கிடைக்கும் குருநாதன் ஒளி மறைந்து, ஒளி தோன்றும் நிலையில் காட்டி தந்து நீறு அளிப்பார். இது தான் முப்புக்கு சமானம். இச்சிவ நீற்றை உண்டு அணிபவர்க்கு நரை, திரை, மூப்புப் பிணி, சாக்காடு கிடையாது, a substance (ash) generally obtained by the grace of a spiritual guru (teacher), when god Siva himself will appear with divine splendour and bestow it upon him. This is otherwise known as 'Muppu' which when taken i n t e r n a l l y and smeared over the surface of the body, is said to be completely freed from grey hairs, wrinkles of the skin of the body, old age, and death.

NOTE:—This substance (ash) obtained through the grace of God Shiva should not be confounded with that 'Muppu' obtained through true medical preparation, see முப்பு.

சிவந்த அரிதாரம், மனோசிலை, impure bisulphuret of arsenic—Arsenicum rubrum.

சிவந்த இலைக் கள்ளி, இது சதுரகிரியில் மணல் வாரி ஓடை என்ற வாய்க்காலின், கரையில் உள்ளது. இலை சிவப்பு; மின்னல் போல் பிரகாசிக்கும், காம்பு சாம்பல் நிறம். இதன் பாலை குன்றிமணி அளவு எடுத்து சர்க்கரையில் சேர்த்து 3 நாள் புசித்து மறு 3 நாள் பத்தியமாக இருந்து, பகலில் மோர் சாதம், இரவில் பால் சாதம் உண்டு வர தேகசித்தியாகும், a red variety of leaf spurge tree—Euphorbia nereifolia. It will be found grown on the banks of sandy canal in the Sathuragiri Hills. Its leaves are red, transparent, the leaf stalk is of grey colour. A grain of the milk exuding from the tree, when mixed with sugar and

taken internally for three days and followed diet for three days subsequently by taking rice with butter milk during the day, and with milk during the night, is said to rejuvenate the system.

சிவந்த கஞ்சா, ஓர் வகை சிவப்பு கஞ்சா, a red variety of ganjah—Cannabis sativus.

சிவந்த கண், செங்கண், blood-shot eyes.

சிவந்த கதிர் திறத்தி, சேந்தாடுபாலை. இது ஓர் கற்பமூலிகை, தற்காலம் இன்னதென்று விளங்கவில்லை, a rejuvenating drug unidentified at present.

சிவந்த கரிசாலை, பொற்றலை கையாந்தகரை, Ceylon verbesina—Wedelia calendulacia.

சிவந்த கன்னிப் பால், சிவப்புப் பெண்ணின் முலைப்பால். இது மருந்திற்குச் சிறந்ததெனக் கருதப்படும், the breast milk of a woman of red complexion, and it is considered an important medium in the use of medicine.

NOTE.—The breast milk of a dark woman is absolutely prohibited for medicinal use, as it is likely to bring on several other diseases; whereas, the breat milk of a fair women is considered a remedy in medicine.

சிவந்த குளிகை, சிந்தூரக் குளிகை, pills prepared out of red-oxides of metals.

சிவந்த கையான், see சிவந்த கரிசாலை.

சிவந்த கோழிக்காரம், சிவப்பு கோழியின் மலம், the dung of a red fowl.

சிவந்த சதுர்முகி, செப்பு சதுரக்கள்ளி, a red variety of square spurge—Euphorbia antiquorum.

சிவந்த சந்தம், செஞ்சந்தனம், red sandal—Petrocarpus santalinus.

சிவந்த சோறு, காந்திய சோறு, over-burnt rice in cooking.

சிவந்த நாயுருவி, செந் நாயுருவி, a red variety of Indian burr—Achyranthes aspera.

சிவந்த திறத்தி, சேந்தாடு பாலை, an unidentified plant?

சிவந்த திறவல்லி, செவ்வலரி, red oleander—Nerium odorum (roseum).

சிவந்த நீர், see செந்நீர்.

சிவந்த நீர்ப்பட்டம், see சக்கிரவர்த்தி.

சிவந்த பத்திரி, சாதி பத்திரி, nutmeg—Myristica fragrance alias M. officinalis.

சிவந்த பாலி, செப்பு சதுரக்கள்ளி, see சிவந்த சதுர்முகி.

சிவந்த பெண்பால், see சிவந்த கன்னிப்பால்.

சிவந்த போஸ்தகாய் விதை, சிவப்பு கசகசா செடியின் விதை, red poppy seed—Papaver somniferum, see சிவப்பு கசகசா.

சிவந்த மலர், செம்பு, copper; 2. சிவப்புப் பூ, red flower.

சிவந்த மலர் பருத்தி, செம்பருத்தி, Bengal cotton; spence cotton — Gossypium arboreum.

சிவந்த மல்லி, பொன்னிற மல்லிகை, அல்லது செப்பு மல்லிகை. இது மகா மூலிகை 28ல் ஒன்று, Golden jasmine; Nepaul jasmine—Jasminum humile. It is one of the 28 important drugs of high repute contemplated in Tamil Siddha Medicine.

சிவந்த முத்து, சிறிது சிவப்பு நிறமுத்து, pear of a pink colour.

சிவந்த லோகமண், செம்பு மணல், copper ore.

சிவந்த வரிதாரம், see சிவப் பரிதாரம்.

சிவந்த வல்லி, செவ்வலரி, see சிவந்த திறவல்லி.

சிவந்த வாலரிசி, சிவந்த வால் நெல்லின் அரிசி. இது குட்டத்தைப் போக்கும், a species of red paddy considered to be a good diet for leprosy; 2. செவ்வாதுளை, a red variety of spindle tree—Celastrus paniculata.

சிவந்த வேலை, செம்பரத்தை, chinese rose mallow—Hibiscus Rosa-sinensis.

சிவந்தாடு, செம்மறியாடு, a brown woolly sheep—Ovies aries.

சிவந்தி, சீந்திற்கொடி, moon-creeper—Tenispora cordifolia; 2. சாமந்தி, see சிவந்திருமி; 3. Indian ape flower—Mimusops hexaandra; 4. செவ்வந்தி, red chamomile—Chrysanthemum indicum; 5. கொடிப் பாலை, green wax flower—Dregea volubilis; 6. கடுக்காய், gallnut—Terminalia chebula.

**சிவந்திகம்,** *நரி நாவல் அல்லது சிறு நாவல்,* ruddy black plum—Eugenia rubicanda.

**சிவந்திக் கடுக்காய்,** *காட்டில் முளைக்கும் செங்கடுக்காய். இது மிகசிவப்பும், தங்கச்சாயலு முடையது, வாதமூல ரோகங்களை விலக்கும்,* a wild red golden-coloured gallnut—Terminalia chebula. It is red or golden coloured and is a cure against rheumatism and hemorrhoids.

**சிவந்திக் கற்பூரம்,** *இரசகற்பூரம்,* bichloride of mercury — Hydrargyri sub-chloridum of chemists.

**சிவந்திடு லோகமண்,** *செம்பு மணல்,* copper ore; 2. *பூங்காவி,* red ochre.

**சிவந்திதம்,** *கொடிப்பாலை,* green wax flower —Dregea volubilis alias Asclepias volubilis.

**சிவ பீசம்,** *பாதரசம்,* mercury; 2. *வெள்ளைக் குங்கிலியம்,* white dammar — Vateria indica.

**சிவ போகம்,** *பேரிலாமும்,* see *நாகப்பித்து;* 2. *ஆன்மாவின் ஆனந்த அனுபவநிலை,* spiritual condition in which the soul experiences bliss.

**சிவ போதம்,** *பூநீறு,* fuller's earth.

**சிவ போளம்,** *வெள்ளை போளம்,* white mryhh —Balsmodendron myrrha.

**சிவப் பகத்தி,** *செவ் வகத்தி,* west indian sesban—Sesbania grandiflora (Coccinea).

**சிவப்பகாதிதம்,** *குன்றிமணி,* , crab's eye—Abrus precatorius.

**சிவப்பகில்,** *சிவப்பு அகில் கட்டை,* agallocha —Acrocarpus fraxinifolius.

**சிவப் படுக்கலரி,** *குங்கும லரி,* double red oleander—Nerium odorum (flore-plen-rubra).

**சிவப்பணு,** *சிகப்பு குருகடம்,* red corpuscles.

**சிவப்பந்தி மல்லிகை,** *செவ் வந்திமந்தாரை,* evening twilight flower—Mirabilis jalappa.

**சிவப் பப்பிரகம்,** *சிகப்பு அப்பிரகம்,* a red variety of mica.

**சிவப்பம்மான் பச்சரிசி,** *சிகப்பு அம்மான் பச்சரிசி. இதனால் வெள்ளி பற்பமாகும். அன்தியும், வாதபிரமேகம் போம். சுக்கிலதாது விருத்தியாம்,* a red variety of raw rice-plant—Euphorbia rosea. It is used for calcining silver, secretion of semen and in urinary disease. See, *சிறு சித்திர பாலாடை.*

**சிவப் பம்மை,** *உடம்பில் சிவந்தகொப்புளங்கள் எழும்பி தழும்புகள் உண்டாகி, சுரம் காயும் ஓர் அம்மை நோய்,* a kind of variola attended with red eruptions or rash and fever—Scarlet fever.

**சிவப் பரக்கு,** *செவ் வரக்கு,* wax red or red sealing wax; 2. *செம்பரக்கு,* lac dye or cake lac.

**சிவப்பரசிகா,** *செவ் வாம்பல்,* red indian water lily—Nymphaea rubra.

**சிவப் பரிசி,** see *காரரிசி;* 2. *மட்டையரிசி,* red rice of an inferior kind of paddy; 3, *பத்தியத்திற்கு உதவும் கருங்குருவை யரிசி.* black paddy, the red rice of which is used in diet.

**சிவப் பரிதகிக்காய்,** *செங்கடுக்காய்,* see *சிவந்திக் கடுக்காய்.*

